# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
ஸ்ரீகலாவின்
உறையாதோ உயிர்க்காதல் கணங்கள்...!
URAIYATHO
UYIRKKATHAL KANANGAL


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

# ஸ்ரீகலாவின் “உறையாதோ உயிர்க்காதல் கணங்கள்...!!!”

## Contents


கணம் : 1

கணம் : 2

கணம் : 3

கணம் : 4

கணம் : 5

கணம் : 6

கணம் : 7

கணம் : 8

கணம் : 9

கணம் : 10

கணம் : 11

கணம் : 12

கணம் : 13

கணம் : 14

கணம் : 15

கணம் : 16

கணம் : 17

கணம் : 18

கணம் : 19

கணம் : 20

கணம் : 21

கணம் : 22

PDF தமிழ்.com
WWW.PDFTAMIL.COM

சிறிய கோவில் போலிருந்த வீட்டின் பூஜையறையில் கண்மூடி, கைக்கூப்பி பயபக்தியுடன் நின்று இருந்தாள் வருணிதா... மனதில் சூழ்ந்து இருந்த கலக்க மேகத்திற்கு ஒரு நல்ல முடிவைத் தரச் சொல்லி கடவுளிடம் இறைஞ்சி வேண்டி கொண்டு இருந்தாள் அவள்...

'பெருமாளே...! அப்பா கிட்ட நான் பேச போற விசயத்தை வெற்றிகரமா முடிச்சு வைக்கிறது உன் கையில் தான் இருக்கு... எப்படியாவது என் சார்பா அப்பா மனசை நீயே மாத்தி எனக்கு சாதகமான பதிலை வாங்கி கொடு பெருமாளே...!'

மனமுருக வேண்டி கொண்டவள் அங்கிருந்த குங்குமத்தை எடுத்து நெற்றியில் சிறு தீற்றலாய் தீற்றிக் கொண்டாள்... மீண்டும் ஒரு முறை கடவுளை ஏக்கத்துடன் பார்த்துவிட்டு தனது விண்ணப்பத்தை அவரிடம் அளித்து விட்டு தந்தை தேடி சென்றாள்...

காலை உணவு அருந்தி கொண்டே அலைப்பேசியில் பேசி கொண்டு இருந்த தந்தை திருவேங்கடத்தின் அருகில் போய் அமைதியாய் நின்றாள்...

"அந்த டெல்லிக்கு போற சரக்கு எல்லாம் ஏத்தியாச்சா...? என்னது இன்னும் இல்லையா...? உடனே வேணும்ன்னு சொன்னானே... நானும் சரின்னு வாக்கு கொடுத்திட்டேனே..." என்று ஒரு நொடி யோசித்தவர் பின்பு,

"கேரளாவுக்கு அனுப்ப வேண்டியதை அங்கே அனுப்பிவிடு... கேரளாக்காரங்க கிட்ட ஒரு ரெண்டு நாள் டைம் கேளு... தொழில்ல வாக்கு சுத்தம், நேர்மை இருக்கணும் தங்கராஜ்... எல்லாத்தையும் நானே பார்க்கிறதா இருந்தா நீங்க எதுக்கு உதவியாளரா இருக்கீங்க...?"

தனது உதவியாளர் தங்கராஜிடம் கண்டிப்புடன் பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்தார் திருவேங்கடம்...

PDF தமிழ் .com

திருநெல்வேலியில் இருந்து கொண்டே இந்தியாவின் எல்லா பகுதிகளுக்கும் தனது தயாரிப்புகளை அனுப்பி அவர் வியாபாரம் செய்கிறார்... இப்போது இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் அவரது உற்பத்தியை ஏற்றுமதி செய்கிறார்...

ஊறுகாய் முதல் கோதுமை மாவு வரை அவரது உற்பத்தியில் எல்லா உணவு பொருட்களும் அடக்கம்... அவரது பொருட்களின் தரம் மேலும் மேலும் வாடிக்கையாளர்களை பெற்று தந்து தொழிலை பெரிதாக விஸ்தரிக்க செய்தது...

அப்படிப்பட்ட பெரிய மனிதரான தந்தையிடம் பேச இன்று வருணிதாவின் கை கால் எல்லாம் நடுங்கி ஆரம்பித்தது... திடீரென்று குளிர் ஜுரம் வந்தது போல் உடல் எல்லாம் தூக்கி போடுவது போல் இருந்தது அவளுக்கு...

அப்படி ஒன்றும் தந்தையை கண்டு பயந்து நடுங்குபவள் அவள் கிடையாது... அவரது தோளில் சலுகையாய் சாய்ந்து கொண்டு ஊர்க்கதைகள் பேசுவது என்றால் அவளுக்கு அலாதி விருப்பம்... அந்தளவுக்கு அதிகப்படியாய் செல்லம் கொஞ்சுபவள் தான் அவள்...

அவளது தந்தையும் அவளுக்கு அளவுக்கு அதிகமாகவே செல்லம் கொடுத்தார்... வீட்டின் மூத்தமகவு என்பதால் அவளுக்கு மட்டும் இந்த விசேட சலுகை...

"வயசு பொண்ணை கொஞ்சமாவது கண்டிச்சு வளர்க்கணும்ங்க..." அவரது மனைவி, வருணிதாவின் அன்னை பத்மாவதி வருத்தப்பட்டால் கூட அதை எல்லாம் திருவேங்கடம் காதில் வாங்கிக் கொள்ள மாட்டார்...

அப்படிப்பட்ட தந்தையிடம் அவள் பயந்து நடுங்குகிறாள் என்றால் அவள் அவரிடம் பேச நினைக்கும் விசயத்தின் வீரியம் அந்தளவுக்கு பெரியது...

"வருணி... சாப்பிட உட்காரும்மா... இன்னைக்கு சைட்க்கு போற வேலை இருக்கா...?" திருவேங்கடம் கேட்டதும்,

"ஆமாப்பா... போகணும்..." என்றவள் தந்தை அருகில் இருந்த நாற்காலியில் அமர...

பத்மாவதி அவளுக்கு ஒரு தட்டை வைத்து அதில் தோசையும், தக்காளி சட்னியும் பரிமாறியபடி, "சென்னையில் தான் வேலை பார்க்கிறன்னா இங்கே வந்தும் அப்படி என்னடி வெட்டி முறிக்கிற...? பேசாம வீட்டில் இருந்து ரெஸ்ட் எடு..." பொறுப்புள்ள அம்மாவாய் மகளை அக்கறையுடன் கடிந்தார்...

வருணிதா ஒரு கட்டிட பொறியாளர்... படிப்பை முடிந்ததும் தந்தையின் நெருங்கிய நண்பரும், உறவினருமான கிரிதரனின் பிரபல கட்டுமான நிறுவனத்தில் கடந்த இரண்டு வருடங்களாக வேலை பார்க்கிறாள்...

பெங்களூரை தலைமை இடமாக கொண்டு செயல்படும் இந்த நிறுவனம் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் தனது காலை வலுவாக ஊன்றி நற்பெயரை எடுத்து இருக்கிறது... அதன் சென்னை பிரிவில் தான் வருணிதா வேலை பார்க்கிறாள்...

இப்போது அவளது சொந்த ஊரான திருநெல்வேலியில் வணிக வளாகம் கட்டுவதன் விசயமாக நிறுவனம் சார்பாக வந்து இருக்கிறாள்... மகள் வீட்டிற்கு வந்து நிம்மதியாக இருக்காமல் வேலை, வேலை என்று ஓடுவது பத்மாவுக்கு கோபமும், வருத்தமுமாக இருந்தது...

"பேசாம வேலையை விடுடின்னு சொன்னா கேட்கிறியா...? நம்ம தொழிலை பார்த்துக்கிட்டாலே போதும்... நீ எதுக்கு அடுத்தவங்க கிட்ட கையேந்தி நிற்கணும்...?" சிடுசிடுத்த அன்னையிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள் அவள்...

அவளால் அன்னையின் வாயை அடக்க முடியாது என்று அவளுக்கு நன்கு தெரியும்...

"பத்து... என்ன பேச்சு பேசுற... அவ என்ன யாரோ ஒருந்தர் கிட்டேயா வேலை பார்க்கிறா...? நம்ம கிரி கிட்ட... அதுவும்

PDF தமிழ் .com

வேலையை கத்துக்க தானே அங்கே போயிருக்கா..." என்றவர் மனைவியிடம் கண்ணால் சமிஞ்கை காட்ட பத்மாவதி வாயை மூடி கொண்டார்...

இதை எல்லாம் கவனத்தில் கொள்ளாத வருணிதா சாப்பாட்டில் கவனத்தை செலுத்துவது போல் இருந்தாலும் அவளது கவனம் அதில் இல்லை என்பது அவளது கைகள் தோசையை பிட்டு பிட்டு வைத்ததில் தெளிவாக தெரிந்தது...

"வருணி... என்ன யோசனை... தட்டை பார்த்து ஒழுங்கா சாப்பிடு..." அன்னை அதட்டவும் வேண்டா வெறுப்பாய் தண்ணீரை குடித்து ஒரு தோசையை கஷ்டப்பட்டு விழுங்கினாள்...

உணவு உண்டதும் அலுவலகம் கிளம்பிய தந்தையின் முன் வந்து நின்றவள் எச்சில் கூட்டி பயத்தை விழுங்கியபடி, "அப்பா... உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்..." என்றவளின் பார்வை சுற்றும் முற்றும் பார்த்தது...

நல்லவேளையாக வேலை செய்பவர்கள் யாரும் அந்த இடத்தில் இல்லை என்றதும் நிம்மதி பெருமூச்சு விட்டாள் அவள்...

"அம்மா... சுகன்யா, கிருஷ் எங்கே...?"

அவள் கேட்டதும் பத்மா, "என்னடி ஆச்சு உனக்கு... இந்நேரம் சுகன்யா காலேஜூக்கும், கிருஷ் ஸ்கூலுக்கும் போய் இருப்பாங்கன்னு உனக்கு தெரியாது..."

பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கும் தங்கை சுகன்யாவும், பள்ளியில் பன்னிரெண்டாவது படிக்கும் தம்பி கிருஷ்ணாவும் காலை ஒன்பதரை மணிக்கு வீட்டில் இருப்பார்களா என்று எண்ணம் கூட இல்லாமல் அசட்டுத்தனமாய் கேள்வி கேட்ட தன் மடமையை எண்ணி நாக்கை கடித்து கொண்டாள் அவள்...

மகளின் தடுமாற்றம் திருவேங்கடத்தை யோசிக்க வைத்தது... எதிலும் நேர்கொண்ட பார்வையாய், எந்தவித

தடுமாற்றம் இல்லாமல் இருக்கும் மகள் மனதில் அப்படி என்ன குழப்பம் இருக்கிறது என்று யோசித்தவராய்,

"வருணி... ரூமுக்கு வா..." என்றழைத்தபடி முன்னால் நடக்க...

பின்னால் வருணிதா அமைதியாய் செல்ல, மகளின் இந்த நடத்தை பத்மாவிற்கு சந்தேக விதையை மனதில் தூவ அவரும் அவர்களுடன் சென்றார்...

அறைக்குள் நுழைந்ததும் மனைவியை அறைக் கதவை தாழிட சொன்ன திருவேங்கடம் மகள் புறம் திரும்பி,

"என்ன விசயம் சொல்லும்மா...?" தந்தையின் கனிவில் அவளுக்கு கண்கள் கரித்தது...

தான் விசயத்தை கூறியதும் தந்தையின் கனிவு அவரிடத்தில் இருக்குமா என்ற சஞ்சலம் அவள் மனதை வாட்டி அவளை உயிரோடு வதைத்தது...

"அப்பா... நான்..." பயத்தில் திக்கியது அவளுக்கு...

"சொல்லும்மா..." வார்த்தையில் கனிவு இருந்தாலும் அவரது பார்வை கூர்மையாய் அளவிட்டது மகளை...

எந்த நாளும் இல்லாத திருநாளாய் மகளுக்கு என்னவானது என்ற குழப்பத்துடன் பத்மா மகளை பார்த்து கொண்டு நின்று இருந்தார்...

"நான் ஒருத்தரை காதலிக்கிறேன்ப்பா..." தைரியத்தை வரவழைத்து கொண்டு சொல்லியவள் தந்தையின் கோபத்தை எதிர் கொள்ளும் சக்தி இல்லாமல் அச்சத்தில் கண்களை இறுக மூடி கொண்டு நின்று இருந்தாள்...

'ஒன்... ட்டூ... த்ரீ...' அவளது மனம் வேகமாய் எண்களை எண்ணியது...

என்னே ஆச்சிரியம் அவள் நினைத்தது போல் அடி எதுவும் விழவில்லை அவளுக்கு... மெதுவே கண்களை அவள்

PDF தமிழ் .com

திறக்க, அப்போது அவளது அன்னையின் உரத்த குரல் அவளது காதில் விழுந்தது...

"விடுங்க என்னை... எவ்வளவு தைரியம் இருந்தா நம்ம கிட்டேயே வந்து காதலிப்பேன்னு சொல்லுவா...? இவளை எல்லாம் காலை முறிச்சு வீட்டோட போடணும்... அப்படி போட்டாத்தான் கழுதைக்கு புத்தி வரும்..."

தவறு செய்துவிட்டு அதை தைரியமாக நெஞ்சை நிமிர்த்தி கொண்டு சொல்லும் மகளை அடிக்க ஓங்கிய தனது கையை பிடித்து தடுத்த கணவனை மீறி எதுவும் செய்ய முடியாமல் ஆற்றாமையில் மனம் கொந்தளித்தார் பத்மா...

"விடு பத்து... என்னன்னு பேசி பார்க்கலாம்... நீ கொஞ்ச நேரம் அமைதியா இரு..." திருவேங்கடம் மனைவியை அமைதிப்படுத்தினார்...

தந்தையின் பேச்சில் வருணிதாவின் கண்கள் பனித்தது... இந்தளவிற்கு பாசம் வைத்த தகப்பனுக்கு தான் துரோகம் செய்துவிட்டோமோ என்று அவளது மனம் முதன்முறையாய் குற்றவுணர்வில் தவித்தது... காதலித்த போது தோன்றாத குற்றவுணர்ச்சி இப்போது எழுந்து அவளை கூனிக்குறுக செய்தது...

"அப்பா... சாரிப்பா..." நா தழுதழுத்த மகளை அருகில் அழைத்த திருவேங்கடம் அவளை அங்கிருந்த கட்டிலில் அமர வைத்து அருகில் அமர்ந்தவர் நிதானமாய்,

"நீ யாரை காதலிக்கிற...? அவர் என்ன பண்றாரு...?" அமைதியாய் கேட்ட தந்தையை ஆச்சிரியத்துடன் பார்த்தவள் தன்னவனை பற்றி சொல்ல வாயெடுத்தாள்...

"முதல்ல என்ன ஜாதின்னு கேளுங்க...?" வெறுப்புடன் முகத்தை சுளித்தபடி சொன்ன அன்னையை கண்டு அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"அம்மா..." தவிப்பாய் அவரை அழைத்தவள்...

"அவர் என்ன ஜாதின்னு எல்லாம் எனக்கு தெரியாது..." முனங்கலாய் சொன்ன மகளை எரித்துவிடுவது போல் பார்த்த பத்மா,

"சுத்தம்... விளங்கிடும்... இதுவே தெரியலை... அப்புறம் எப்படி அவன் நல்லவனா, கெட்டவனான்னு நீ பார்த்து இருப்ப...?" கேலியாய் வினவிய மனைவியை பார்த்து,

"அமைதியா இரு பத்து..." என்று குரலை உயர்த்தியா திருவேங்கடம்,

"அதான் தெளிவா காதலிக்கிறேன்னு சொல்றாளே... அப்புறம் எதுக்கு தேவையில்லாம சாதியை பத்தி ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு..." என்று மனைவியிடம் சொன்னவர் மகளிடம்,

"நீ மேலே சொல்லும்மா..."

"அவர் பெயர் தேவானந்த்... எங்க கம்பெனியில் தான் சீஃப் என்ஜினியரா வொர்க் பண்றார்... நான் அவர் கிட்டத்தான் வேலை கத்துக்கிட்டு இருக்கேன்..."

"வேலை கத்துக்க போனா வேலையை மட்டும் கத்துக்கணும்... இப்படி காதலை கத்துக்கிட்டு வந்து நிக்கக் கூடாது..." எரிச்சல் பட்ட அன்னையை இயலாமையுடன் பார்த்தாள் வருணிதா...

மனதின் சம்மதம் கேட்டு கொண்டு வருவது காதல் இல்லையே... எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராமல் இதயங்கள் ஒன்றுடன் ஒன்று கலக்கும் கணத்தை அறிந்தவர் இப்பூவுலகில் எவரும் உண்டோ...

தேவானந்த் அவளது மனதில் எப்போது நுழைந்தான் என்று யோசித்து பார்த்தாள்... எப்போது நுழைந்தான் என்று அவளுக்கே தெரியவில்லை... காற்றை விட வேகமாய் நுழைந்து அவளது கன்னி மனதை சூறாவளியாய் சுழற்றி அடித்து அதை அவன் வசப்படுத்தி கொண்டான்...

PDF தமிழ் .com

அவனது நினைவில் அவளது முகம் பூவாய் மலர்ந்து விகசித்தது...

திருவேங்கடம் மகளின் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாக கவனித்து கொண்டு இருந்தார்...

காதலிப்பதாய் மகள் சொன்னதும் ஏனோ அவருக்கு கோபம் வரவில்லை... ஆனால் மனதிற்குள் பெரிய ஏமாற்றமாக இருந்தது... இத்தனை நாள் மகளை பற்றி அவர் மனதில் எழுப்பி இருந்த கனவு கோட்டை நொடியில் இடிந்து விழுந்து விட்டது...

மகள் மீதான நம்பிக்கை இரும்பு கோட்டை போல் உறுதியானது என்று எண்ணி அவர் இருமாந்து இருக்க, அது வெறும் மண் கோட்டை என்று அவரது அன்பு மகள் அதை நொடியில் சுக்குநூறாய் உடைத்துவிட்டாள்...

இந்த காலத்து பிள்ளைகளிடம் கோபப்பட்டால் காரியம் ஆவதில்லை என்பதை அவர் உணர்ந்தே இருந்தார்... மகளின் காதலுக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்து, அதனால் அவள் வீட்டை ஓடிவிட்டால் அந்த மாதிரி அசம்பாவிதங்களை தடுக்கத்தான் அவர் அமைதியாய் பேசியது...

ஆனாலும் அவளின் காதலை ஏற்று கொள்ள முடியாமல் அவர் மனதில் நெருஞ்சிமுள் ஒன்று சுருக் சுருக்கென்று தைத்து அவருக்கு வலிக்கச் செய்தது...

அவர் ஆண் அல்லவா... அதனால் மனைவி போல் அவரால் உணர்வுகளை வெளிப்படையாய் காட்ட முடியவில்லை... அது அவரது இயல்பன்று...

தொழில் புரிபவர்களுக்கு கோபம் மிகப் பெரிய எதிரி... சட்டென்று கோபப்பட்டு காரியத்தை கெடுத்து கொள்ளக் கூடாது... எந்த சூழ்நிலையையும் நிதானமாய் கையாள தெரிந்து இருக்க வேண்டும்... அப்படி இருந்தால் தான் வெற்றிக்கனியை எளிதில் பறிக்க முடியும்... அதை தான் மகளது விசயத்திலும் அவர் செயல்படுத்தினார்...

திருவேங்கடம் மகள் புறம் திரும்பி, "இங்கே பார் வருணி... உன் கல்யாண விசயம்ங்கிறது நான் சம்பந்தப்பட்டது மட்டும் இல்லை... இது நம்ம குடும்பம் சம்பந்தப்பட்டதும் கூட... உன்னோட பெரியப்பா, சித்தப்பா, அத்தை எல்லோரும் இதுக்கு சம்மதம் சொல்லணும்..." என்று சொல்லி நிறுத்தியவர் ஒரு பெருமூச்சை விட்டபடி,

"அதுக்கு அப்புறம் தான் நான் சரின்னு சொல்ல முடியும்... அதை எல்லாம் விட பையனை பத்தின தகவல்கள் திருப்தியா இருக்கணும்... இவ்வளவும் சரி வந்தா தான் உன்னோட காதல் கல்யாணத்தில் முடியும்... இல்லை நீ..." அவளை அவர் பார்த்த பார்வையில் அவளுக்கு உள்ளுக்குள் நடுக்கம் ஏற்பட்டது...

"இல்லைப்பா... அவரை உங்க எல்லோருக்கும் ரொம்ப பிடிக்கும்..." என்றாள் அவசரமாக...

"அதை தான்ம்மா நானும் பெருமாள் கிட்ட வேண்டிக்கிறேன்..." என்றார் புன்சிரிப்புடன்...

"இதில் நீங்க தப்பா எதுவும் செஞ்சிட மாட்டீங்களே..." தன் காதல் கை கூடுமோ, கூடாதோ என்ற பயத்தில், தவிப்பில் வருணிதா தந்தையிடம் வாயை விட்டு விட்டாள்...

தன் உள்ளத்தை வார்த்தையால் கொல்லாமல் கொன்ற மகளை அதே புன்சிரிப்பு மாறாமல் பார்த்த திருவேங்கடம், "உன் அப்பாவோட நேர்மையை பத்தி தெரிஞ்சு இருந்தும்ம் நீ இப்படி பேசுறது எனக்கு ஆச்சிரியமா இருக்கும்மா..." அவர் என்னத்தான் மறைக்க முயன்றும் அவரது வார்த்தையில் அவரது மனதின் வலி அப்பட்டமாய் தெரிந்தது...

"அப்பாவையே சந்தேகப்படுற அளவுக்கு நீ வளர்ந்திட்டியா...?" என்று பத்மா கோபத்தோடு மகளின் கன்னத்தில் ஒரு அறை விட்டார்...

திருவேங்கடம் தடுக்க நினைப்பதற்குள் அடித்துவிட்டார் பத்மா...

PDF தமிழ் .com

"பத்து... என்னம்மா இது...? சின்ன பொண்ணை போய்..." வருணிதா மேல் விழுந்த அடியை தன் மீது விழுந்த அடியாய் எண்ணி திருவேங்கடம் துடிதுடித்து போனவராய் மகளை அணைத்து கொண்டார்...

"சின்ன பொண்ணா இவ... சின்னப் பொண்ணு செய்ற காரியமா இவ செஞ்சிருக்கா..." பத்மாவுக்கு இன்னமும் கோபம் அடங்கவில்லை...

மகளின் காதலால் ஊரில் கணவரது அந்தஸ்து என்னவாவது... அவர்களுக்கு என்று இருக்கும் குடும்ப கௌரவம், மரியாதை என்னவாகும்... வருணிதா காதல் அவளுடன் பிறந்த சுகன்யாவை மட்டும் அல்லாது அவர்களது குடும்பத்தில் அவளுக்கு அடுத்து இருக்கும் மற்ற பெண் பிள்ளைகளையும் அல்லவா சேர்ந்து பாதிக்கும்...

அதை விட திருவேங்கடம் மகளுக்காக எப்பேர்பட்ட வாழ்க்கையை தேர்ந்து எடுத்து இருக்கிறார்... அதை எல்லாம் உணராமல், கோபுரத்தில் வாழ நினைக்காமல் குப்பை மேட்டில் புரள நினைக்கும் மகளை கண்டு அவருக்கு அருவருப்பாய் இருந்தது...

இதற்கு மேல் வருணிதா இங்கு இருந்தால் வீண் பிரச்சினைகளும், மனஸ்தாபமும் தான் எழும் என்று எண்ணிய திருவேங்கடம் மகளிடம்,

"நீ வேலைக்கு போம்மா... நான் எல்லார் கிட்டேயும் பேசி ஒரு நல்ல முடிவா சொல்றேன்..." என்று சமாதானமாக பேசி மகளை அனுப்ப நினைத்தார்...

"இப்போ இவ வேலைக்கு போறது ஒண்ணு தான் குறைச்சல்..." மேற்கொண்டு பேச வாயை திறந்த பத்மா கணவரது முறைப்பில் வாயை மூடி கொண்டார்...

தந்தை சொன்னதும் கட்டிலில் இருந்து எழுந்த வருணிதா அன்னையிடம் வந்து, "அம்மா... என்னை மன்னிச்சிடுங்க..."

"மன்னிக்கும்படியான காரியத்தையா நீ பண்ணியிருக்க..." என்றார் பத்மா வெடுக்கென்று...

அதில் அவளது முகம் வாடி போனது...

"வருணி... நீ போ..." தந்தை உத்தரவாய் சொன்னதும் வருணிதா ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியேறினாள்...

மகள் சென்று விட்டதை அறிந்து பத்மா கண்கள் கலங்க கணவரிடம், "அவ தான் சின்ன பொண்ணுன்னா... அதுக்காக நீங்களும் அவ கூட சேர்ந்துட்டு பேசுறது நல்லா இல்லைங்க... நாலு அடி அடிச்சாவது நல்லது எது, கெட்டது எதுன்னு அவளுக்கு புரிய வைக்கணும்ங்க..."

"என் பொண்ணை போய் நான் அடிக்கிறதாவது... ச்சே... ச்சே..." முகத்தை சுழித்தார் திருவேங்கடம்...

"உங்களுக்கு கோபமே வரலையா...?" என்ற மனைவியை ஆதங்கத்துடன் பார்த்தவர்,

"ம்ப்ச்... கோபம் எல்லாம் இல்லை பத்து... ஆனா மனசுக்கு ரொம்ப ஏமாற்றமா இருக்கு..." தனது நெஞ்சை நீவி விட்டு கொண்டே சொன்ன கணவரின் நிலை பத்மாவுக்கு பரிதாபமாய் இருந்தது...

"பாவி... உங்க நல்ல மனசை புரிஞ்சிக்காம காதல் அது இதுன்னு வந்து நிற்கிறாளே... அவளுக்கு எப்பேர்பட்ட வாழ்க்கையை கொடுக்க நினைச்சீங்க... கிரி அண்ணா பையன் முரளிதரனை இவ கல்யாணம் பண்ணா அந்த கம்பெனிக்கு இவ தான் முதலாளி... அதை விட்டுட்டு போயும் போயும் அங்கே வேலை செய்ற வேலைக்காரனை போய் காதலிக்கிறாளே... இவ கூறுகெட்ட புத்தியை என்ன சொல்ல...?" ஆற்றாமை தாளவில்லை பத்மாவுக்கு...

பேரும், புகழும், அழகும் கொண்ட முரளிக்கு ஈடாகும் மாப்பிள்ளை உலகத்தில் இல்லை என்பது பத்மாவின் எண்ணம்...

PDF தமிழ்.com

"நாம நினைச்சா போதுமா பத்து... பிள்ளைங்களும் அதை நினைக்கணும்ல... நாம முடிச்சு போட்டா ஆச்சா... நமக்கு மேல இருக்கிற பெருமாள் வேற ஒண்ணை அல்லவா நினைக்கிறார்... முரளி மாதிரி பையன் மருமகனா வரலையேங்கிற கவலை எனக்கும் இருக்கத் தான் செய்றது... அதுக்கு கவலைப்பட்டு என்ன செய்ய...? எல்லாம் விதிப்படி நடக்கும்..." விரக்தியாய் சொன்ன கணவரை கண்டு இரக்கம் சுரந்தது பத்மாவிற்கு...

"அவளை அடிச்சு வலுக்கட்டாயமா மணவறையில் உட்கார வைக்காம... நீங்க இப்படி பேசறது சரியில்லைங்க..."

"அந்த பையனை பத்தி பேசறப்போ வருணி முகத்தில் தெரிந்த சந்தோசத்தை நீ பார்த்த தானே... அந்த சந்தோசத்தை கெடுக்க என்னால் எப்படி முடியும் பத்து... நான் என்ன சினிமாவில் வரும் வில்லன் தகப்பனா... அவ சந்தோசத்தை கொன்னுட்டு என் சந்தோசத்தை கொண்டாடுறதுக்கு... நான் என் பொண்ணோட சந்தோசத்துக்காக பாடு படும் சாதாரண தகப்பன்டி..."

அவர் சொன்ன பாவனையில் பத்மாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"என்னமோ போங்க... நீங்களும் உங்க வியாக்கியானமும்... அப்புறம் ஒண்ணு... முரளி ஏன் கைவிட்டு போறதா நினைக்கிறீங்க... நம்ம சுகன்யாவுக்கு அவனை பார்க்கலாம்..."

மனைவியின் யோசனை நல்லதாக தோன்றினாலும், "இல்லைடி பத்து... கிரி கிட்ட வருணி பத்தி தான் பேசினேன்... இப்போ போய் சுகன்யாவை பத்தி சொன்னா..."

"நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம்... அண்ணாவே உங்க கிட்ட கேட்பார்... எனக்கு அவர் மேல் நம்பிக்கை இருக்கு... அப்படி அவர் கேட்கலைன்னாலும் வருணி கல்யாணம் முடிஞ்சதும் நாம அவர் காதுல போட்டு வைக்கலாம்..."

"அப்போ வருணிக்கு அவ காதலிச்ச பையனையே கல்யாணம் பண்ணி வச்சிரலாம்ன்னு சொல்லு..." என்ற கணவனை தீர்க்கமாய் பார்த்த பத்மா,

"ஏதாவது ஒரு காரணம் கிடைச்சு அவளோட காதல் முறிஞ்சு போனா சந்தோசப்படுற முதல் ஆள் நானாக தான் இருப்பேன்..." என்று உறுதியோடு கூறிய பத்மா அறையை விட்டு வெளியேறினார்...

தனது உடன்பிறந்தவர்களிடம் மகளது காதல் விசயத்தை எப்படி சொல்வது என்று யோசிக்க ஆரம்பித்தார் திருவேங்கடம்...

கட்டிட வேலை நடக்கும் இடத்திற்கு வந்த வருணிதாவிற்கு அங்கு வேலையாட்களுடன் தானும் ஒரு வேலையாளாய் இறங்கி களப்பணியை மேற்கொண்டு இருந்த தேவானந்த்தை கண்டதும் அத்தனை நேரம் இருந்த மனக்கிலேசம் மறைந்து மனதில் நிம்மதி வந்தது...

'இனி எந்தப் பிரச்சினை என்றாலும் என் தேவ் பார்த்து கொள்வான்...' என்று மனம் அமைதியுற அவனை தொந்திரவு செய்யாமல் அங்கு ஓரமாய் இருந்த சிறிய அலுவலக அறைக்குள் சென்று அமர்ந்தாள்...

வேலையில் மனம் ஓடாமல் அவளது கண்கள் ஜன்னல் வழியே தெரிந்த தன்னவனை தான் விடாமல் மொய்த்தது...

ஒரு காலத்தில் சிவந்த நிறமாய் அவன் இருந்து இருக்க வேண்டும்... இப்போது வெயிலில் அலைந்து திரிந்து வேலை செய்வதால் மாநிறமாய் அது நிறம் மங்கி காணப்பட்டது... அந்த மாநிறத்திலும் நல்ல உயரமாய், கம்பீரமாய் இருந்த அவனது அழகு அவளை வெகுவாய் கவர்ந்து இழுத்தது...

நெற்றியில் புரண்ட முடி காற்றில் அலைப்பாய அதை லாவகமாய் கோதியபடி அவன் வேலை செய்த பாங்கு அவளது மனதில் அழியா சித்திரமாய் ஆழப் பதிந்தது...

PDF தமிழ் .com

இரண்டு வருடங்களாக அவள் அவனுடன் வேலை பார்த்து வருகிறாள்... ஆனால் ஒவ்வொரு முறையும் அவனை பார்க்கும் போதும் அவளது உள்ளத்திலும், உடலிலும் ஒருவித சிலிர்ப்பு எழும்... ஒவ்வொரு பொழுதும் அவனை காணும் போதும் ஒவ்வொரு விதமாய் புதிதாய் அவளது கண்ணுக்கு தெரிந்து அவன் அவளை மயக்கச் செய்தான்... அந்த மயக்கத்தில் இருந்து அவளும் மீள முற்படவில்லை...

அவள் அவனை பார்த்து கொண்டு இருப்பதை உணர்ந்தவனாய் தேவானந்த் ஏதோ மனதை உந்த திரும்பி பார்த்தவன் வருணிதா தன்னை வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டு இருப்பதை கண்டு அவனது மனதில் சாரலடித்தது...

மனதில் எழுந்த உல்லாசத்துடன் மெல்லியதாய் சீழ்க்கை ஒலி எழுப்பியபடி யாருக்கும் தெரியாமல் அவளை பார்த்து கண்ணடித்தான் அவளது உள்ளங்கவர் கள்வன்... அவனது செயலில் வெட்கமுற்றவள் கண்களை தாழ்த்தி கொண்டாள்...

அவளது வெட்கம் உணர்ந்தவனால் அதற்கு மேல் அங்கு இருக்க முடியவில்லை... உடனே கை கால்களை கழுவி தன்னை சுத்தப்படுத்தி கொண்டவன் அவளை நோக்கி விரைந்து வந்தான்...

அறைக்குள் யாருமில்லை என்பதை ஊர்ஜிதம் செய்தவனாய் அவள் முன் இருந்த மேஜை மீது சாய்ந்து நின்றவன்,

"என்ன பேபி... பார்வை எல்லாம் பலமாயிருக்கு... அப்போ உன் அப்பா கிட்ட பேசிய நம் விசயம் பழம்ன்னு சொல்லு..." சிரித்தபடி அவன் கேட்க...

அவன் கேட்டதும் தான் வீட்டில் நடந்த விசயங்கள் அவளது நியாபகத்தில் வந்தது...

கண்கள் கலங்க, முகம் வேதனையில் கசங்க அவனை நிமிர்ந்து பார்த்தவளின் தோற்றத்தில் அவனது மனம்

வேதனையுற்றது...

"ச்சு... என்ன பேபி இது...?" அவளது கண்ணீரை துடைத்து விட்டவன் அவளது கையை பற்றி எழுப்பினான்...

'எங்கே...?' என்பது போல் பார்த்தவளை கண்டு, "உன் முகத்தை பார்த்தாலே தெரியுது... விசயம் பழம் இல்லைன்னு... அதை பத்தி பேசத்தான் கூப்பிடறேன்..." என்றவன் அவளை அழைத்து கொண்டு வெளியில் வந்தான்...

"ஏறு..." அங்கு இருக்கும் வரை அவன் உபயோகப்படுத்த என்று நிறுவனம் கொடுத்து இருந்த இரு சக்கர மோட்டார் வாகனத்தை கிளப்பியபடி அவன் கூற...

அவளோ அவனுடன் செல்ல மிகவும் யோசித்தாள்... இது சென்னை அல்ல... இது அவள் பிறந்து வளர்ந்த ஊர்...

அவளது மனதை படித்தவனாய், "நான் தான் உன் கணவன்ங்கிறதில் எந்த மாற்றமும் இல்லைன்னா என் கூட வண்டியில் ஏறு..." முகம் இறுக கூறியவனின் வார்த்தையில் மனம் பதற, அடுத்த நொடி அவனின் பின்பக்கமாய் ஏறியவள் அவனது மனதை குளிர்விக்கும் விதமாய் அவனது இடுப்பில் கையை போட்டு அணைத்தபடி அமர்ந்து கொண்டாள்...

அவளது அந்த செயலில் அவனது மனம் லேசானது... மனதில் எழுந்த உற்சாகத்துடன் அவன் வாகனத்தை கிளப்பினான்...

ஊரை விட்டு சற்று தள்ளி தாமிரபரணி ஆறு சலசலத்து ஓடிய அந்த வயல் பரப்பு பக்கமாய் வண்டியை நிறுத்திவிட்டு இருவரும் இறங்கினர்...

இந்த ஊருக்கு வந்ததில் இருந்து அவர்கள் தனியே சந்திக்க அவன் கண்டுப்பிடித்த இடம் தான் இது... அங்கு இருந்த அரச மரத்தடி பிள்ளையாரை கும்பிட்டு விட்டு இருவரும் ஆற்றின் படித்துறையில் வந்து அமர்ந்தார்கள்...

PDF தமிழ் .com

அவன் அமர்ந்திருந்த படிக்கு கீழே ஒரு படி தள்ளி அவனது காலடி பகுதியில் அமர்ந்தவளை கண்டு அவன் மனதில் ஏதோ ஒரு உணர்வு எழுந்து சுகமாய் தாக்கியது...

"பேபி... இங்கே பக்கத்தில் வந்து உட்காரு... ஆணும் பெண்ணும் சரிசமம்ன்னு சொல்ற இந்த காலத்தில் போய் நீ இப்படி நடந்துக்கிறது ஆச்சிரியமாய் இருக்கு..." அவளது கையை பிடித்து அருகில் இழுக்க...

அவன் இழுப்பிற்கு அசையாமல், "நான் அப்படித்தான்..." என்றவள் அடுத்த நொடி மனப்பாரம் தாங்காமல் அவனது மடியில் முகம் புதைத்தாள்...

"ஹேய் பேபி..." அவளது செயலில் மகிழ்ந்து போய் அவன் சரசமாய் கேட்கும் போது அவளது முதுகு குலுங்குவதில் இருந்து அவள் அழுவதை உணர்ந்தவனாய் பதறி போய்,

"ஹேய்... இங்கே பாரு... இப்போ எதுக்கு நீ அழுகிற...?" என்றவன் அவளது முகத்தை நிமிர்த்தி அவளது கண்ணீரை துடைத்துவிட்டான்...

அவனது ஆறுதலில் அவள் வீட்டில் நடந்ததை எல்லாம் அவனிடம் கூறி அழுதாள்...

"எங்க வீட்டில் எல்லோரும் சம்மதிப்பாங்களான்னு எனக்கு தெரியலை... எனக்கு ரொம்ப பயமாயிருக்கு தேவ்..." அவனது கைகளை பிடித்து கொண்டு கேட்டவளின் கண்களில் தெரிந்த பயத்தில் அவனது மனம் மென்மையுற்றது...

தன்னுடனான இந்த திருமணத்தை அவளது மனம் எந்தளவுக்கு விரும்புகிறது என்பதை உணர்ந்தவனுக்கு மனம் இறக்கை கட்டி பறப்பது போல் சந்தோசமாய் இருந்தது...

தனது இரு கைகளில் அவளது முகத்தை தாங்கியவன் பருகி விடுவது போல் அவளை இமைக்காது பார்த்தான்... அவனது பார்வையில் தனது கவலை மறந்த பாவையவள் நாணமுற்று தனது விழிகளை தாழ்த்தி கொள்ள, அவளது

அந்த செயலில் ஆணாய் கர்வம் கொண்டது அவனது மனம்...

எதை கண்டு அவளிடத்தில் காதல் கொண்டான் என்று இதுவரை அவனுக்கு தெரியவில்லை...

முதன்முறையாய் அவளை பார்த்த நியாபகம் இப்போதும் அழியாமல் அவனது நெஞ்சில் மின்னியது...

சுடிதார் அணிந்து தோளின் இரு பக்கமும் ஊக்கு போட்டு ஷாலை குத்தி கொண்டு, நீண்ட தலைமுடியை இறுக பின்னி சடை போட்டு அடக்க ஒடுக்கமாய் வேலைக்கு வந்தவளை கண்டு அவன் மனதில் பெரியதாய் சஞ்சலம் வந்து விடவில்லை...

'சரியான பட்டிக்காடு...' என்று நினைத்து தான் அவளின் நினைப்பை உதறித் தள்ளினான்...

தோசையை கூட கரண்டியில் பிட்டு சாப்பிடும் சென்னை நாகரீகத்தில் பிறந்து வளர்ந்தவனுக்கு, திருநெல்வேலி சீமையில் பிறந்து அங்கேயே படித்து முடித்தவளை கண்டு அப்படித்தான் எண்ண தோன்றியது...

ஆனால் நாளாக நாளாக எந்த பெண்ணிடமும் இல்லாத ஒன்று அவளிடத்தில் இருப்பதை அவன் கண்டான்...

ஒரு சில பெண்களை போல் அவள் ஆண்களிடம் அசடு வழிந்து பேசி கொண்டு நின்றது இல்லை... யாராக இருந்தாலும் ஒரு பார்வையில் தள்ளி நிறுத்திவிடுவாள்...

அதே போல் அவள் உடுத்தும் உடையில் இருந்து, பார்க்கும் பார்வை வரை எல்லாவற்றிலும் ஒருவித நேர்மை, கண்ணியம் இருக்கும்...

இது எல்லாத்தையும் விட அவளிடம் பெரிதாய் அவனை ஈர்த்த விசயம் தாய்மை... ஆம் தாய்மையே தான்... அதுவும் திருமணமாகாத ஒரு பெண்ணுக்குள் இருந்த தாய்மையை முதன்முறையாய் அவளிடத்தில் கண்டான் அவன்...

PDF தமிழ் .com

ஒரு முறை வேலை பார்க்கும் இடத்தில் சித்தாள் வேலை செய்யும் பெண்ணின் கைக்குழந்தை ஒன்று விடாமல் அழுதது... அதற்கு பசியும் இல்லை... ஏனெனில் அதன் அன்னை அப்போது தான் பால் கொடுத்து இருந்தாள்...

உடல்நலம் குன்றிய குழந்தை தாயின் அருகாமையை எண்ணி ஏங்கி அழுதது... உழைக்கும் தாய்க்கு மகவுடன் இருக்க காலம், நேரம் ஏது... தவித்த தாயை வருணிதா தான் ஆறுதல்படுத்தினாள்...

"நீங்க வர்ற வரைக்கும் நான் பார்த்துக்கிறேன்... இப்போ எனக்கு வேலை ஏதும் இல்லை..." என்றவள் குழந்தையை தூக்கி தனது தோளில் போட்டு தட்டி கொடுத்தபடி மெதுவே நடக்க ஆரம்பித்தாள்...

இதை கண்டவன் மனம் அவளது பால் அடித்து செல்லப்பட்டது... அவனுக்கு தெரியும் அவளுக்கு வேறொரு கட்டுமான இடத்தில் வேலை இருக்கிறது என்று...

"ஏன் பொய் சொன்னீங்க மிஸ். வருணிதா...?" திடுமென ஒலித்த அவனது குரலில் திடுக்கிட்டு திரும்பி பார்த்தவள் அவனை கண்டதும் சிநேக பாவனையுடன் சிரித்தாள்...

"இவளோட நிம்மதிக்காக..." தனது தோளில் தூங்கி கொண்டு இருந்த குழந்தையை காட்டி சொன்னவள்,

"வேலை எப்போ தான் இல்லை சார்... ஆனால் இந்த குழந்தை பாவம்..." என்றவளின் மனிதநேயம் அன்று அவனை அடியோடு வீழ்த்தி அவனை அவளது காலடியில் விழ வைத்து, காதலிலும் விழ வைத்தது...

அழுக்கான குழந்தையையும் அன்பாய் அணைத்து பிடித்து இருந்த அவளை கண்டு அவன் மனம் நெகிழ்ந்து போனான்...

அதன் பின் அவன் தான் ஒரு நல்ல நாளில் தன் காதலை அவளிடத்தில் சொன்னான்... முதலில் மிரண்டு ஓடியவளை தனது காதலால் தன் புறம் திரும்பி பார்க்க வைத்து,

அவளையும் காதலிக்க செய்து தனது நேசத்தால் அவள் மனதையும் வெற்றியும் கொண்டான் அவன்...

அத்தகைய தேவதை பெண்ணை யாரோ மறுப்பதற்காக விட்டு கொடுக்க அவனால் முடியுமா...! அந்தளவுக்கு அவன் என்ன கையாலாகாதவனா...!!!

"நான் இருக்கும் போது நீ ஏன் பயப்படுற பேபி...? நம்மை பிரிக்க யாராலும் முடியாது..." என்றவன் அவளை தன்னோடு இறுக அணைத்து கொண்டான் அந்த காற்றுக்கு கூட அவளை விட்டு கொடுக்க விருப்பம் இல்லாதவனாய்...

உறையும்...

PDF தமிழ் .com

தேவனாந்தின் இறுகிய அணைப்பில் தன்னை மறந்து ஒன்றினாலும் வருணிதாவின் மனதில் இருந்த சஞ்சலம் முற்றிலும் அகலவில்லை...

"தேவ்... நம்மை பிரிச்சிருவாங்களா...?" என்றவளை தன் அணைப்பில் இருந்து விலக்கி அவளது முகத்தை கூர்ந்து பார்த்தான் அவன்...

கண்களில் ஆசையும், நிராசையும் போட்டி போட ஏக்கத்துடன் கேட்டவளை கண்டு அவனுக்கு என்ன சொல்லி தேற்றுவது என்று தெரியவில்லை...

"இப்போவே என் கூட வா... உன் கழுத்தில் தாலி கட்டி என் மனைவியாக்கிட்ட பிறகு இரண்டு வீட்டிலும் போய் சொல்லிக்கலாம்... அவங்க ஏத்துக்கிட்டா சந்தோசம், இல்லை ஏத்துக்க மறுத்தா நம்ம சந்தோசம் முக்கியம்ன்னு நாம நம்ம வாழ்க்கையை வாழ வேண்டியது தான்..." உறுதியான குரலில் கூறியவனின் வீரத்தில் அவளது மனம் அவனிடத்தில் மயங்கியது...

"என் தேவ்..." கிறங்கிய குரலில் கூறியவள் அவனது இடுப்பை கட்டி கொண்டு அவனது மடியில் தலை சாய்ந்தாள்...

அவளது செயலில் மனம் நெகிழ்ந்தவன் அவளது தலையை வருடியபடி, "வது பேபி..." என்றழைக்க...

அவளோ அவனது அருகாமையை கண்மூடி ரசித்தவளாய், "ம்..." என்றாள்...

"இங்கே பாரு... நான் உன்னை எந்தளவுக்கு காதலிக்கிறேன்னு உனக்கு நல்லாவே தெரியும்... நான் செத்தா கூட உன்னையும் கொன்னு என் கூட அழைச்சிட்டு போகணும்ன்னு நினைக்கிற அளவுக்கு உன் மேல் காதல் வெறி கொண்ட ஆள் நான்... அப்படிப்பட்டவன் நம்ம வீட்டில் சம்மதிக்க மாட்டாங்கங்கிற ஒரே காரணத்துக்காக உன்னை கைவிட்டு எல்லாம் போக மாட்டேன்... நீ எனக்கு வேணும்

பேபி... என் வாழ்க்கை முழுவதும் மட்டுமல்ல என் வாழ்க்கை முடிஞ்சதுக்கு அப்புறமும் கூட... எனக்கு வேண்டியது என் வது பேபி மட்டும்..." என்றவன் பின் சிறு சிரிப்புடன்,

"பேபி... இந்த நவீன பிரித்விராஜனின் மேலயும் கொஞ்சம் நம்பிக்கை வைம்மா... குதிரையில் இல்லைன்னாலும் காரில் வந்து உன்னை தூக்கிட்டு போயிருவேன்..."

அவனது வார்த்தையில் மனம் மகிழ்ந்தவள் அவனது மடியில் இருந்து எழாமல் திரும்பி பார்த்து அவனை இமைக்காது பார்த்தவள் அடுத்த நொடி அவனது கழுத்தில் கரம் கோர்த்து அவனது முகத்தை தனது முகம் நோக்கி இழுத்தவள் விழிகளில் உயிர்நேசம் வழிய அவனை நோக்கியவள்,

"தேவ்... ஐ லவ் யூ..." என்றவளின் காதலில் சிக்குண்ட தேவாவின் மனம், 'என் பேபியின் காதல் ஒன்று போதும்...' என்று எண்ணியது...

"என்ன வெளியில் இருக்கோம்ங்கிற தைரியமா...? இதே இது நீ மட்டும் நாம தனியா இருக்கும் போது இது மாதிரி செஞ்சு இருந்தேன்னு வை... அப்போ தெரியும் ஐயாவோட வீரம்..." என்று சொன்னவனின் விழிகள் தான் சொன்னதை செய்ய முடியவில்லையே என்ற தாபத்தை வெளிப்படையாய் அவளிடம் காட்டியது...

அவர்களது காதல் ஒன்றும் சைவக் காதல் கிடையாது... அவ்வப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் போது எல்லாம் இதழ்கள் பரிமாறி கொள்ளும் அசைவக் காதல் தான்...

அவளுக்கு வம்படியாய் முத்திரை கொடுப்பவன் அதே போல் அவளிடம் இருந்து வலுக்கட்டாயமாய் முத்திரையை வாங்கி கொண்டு செல்வான்... கேட்டால்,

"கடன் அன்பை முறிக்கும்..." என்று அதற்கு வேறு வேதாந்தம் பேசுவான்...

அவனது கரங்கள் செய்யும் மாயாஜாலமும், அவனது இதழ் முத்தமும் இப்போது நியாபகத்தில் வந்து அவளது உடலை

PDF தமிழ் .com

சூடேற்றியது... அதில் அவளது கன்னங்கள் இரண்டும் சிவந்தது...

அதை ரசனையுடன் பார்த்தவனின் விரல்கள் அவளது முகவடிவை அளந்தது...

"ஒண்ணே ஒண்ணு... ப்ளீஸ் பேபி..." அவனது கெஞ்சல் எதுக்காக என்று அறிந்தவளாய்,

"ம்ஹூம்... முடியாது..." என்று அவசரமாய் அவள் எழ முயல... அவனது கரங்களோ அவளை எழ விடாமல் இறுக்கி பிடித்து கொண்டது...

"எங்கே தப்பிக்க பார்க்கிற...?" என்றவன் வெற்றிக் களிப்புடன் அவளது இதழ் நோக்கி குனியும் போது அவளது அலைப்பேசி அழைத்தது...

"ப்ச்..." சலிப்புடன் அவளை விடுவித்தான் அவன்...

"தேவ்... அப்பா தான் பேசுறாங்க..." என்றவள் பயபக்தியுடன் அலைப்பேசியை உயிர்ப்பித்து காதில் வைத்தாள்...

"ம்... சரிப்பா... சரிப்பா..." என்று பேசிவிட்டு வைத்தவள் முகம் கலவரத்தை தத்தெடுத்தது...

"என்னடா..." அவளது தோளில் ஆதரவாய் கையை வைத்து கேட்டவனின் கரம் மீது தலை சாய்ந்தவள்,

"எங்க வீட்டில் எல்லோரும் உங்களை பார்க்கணும்ன்னு சொல்றாங்களாம்..." அவளது வார்த்தையில் முகம் மலர்ந்தவன்,

"அடேங்கப்பா... மாமனார் பயங்கர ஸ்பீடு தான்..." என்று அவளின் தகப்பனை மெச்சியவன்,

"போகலாமே... இதுக்கு நீ ஏன் இப்படி பயப்படுற...?"

"பெரியப்பா பிரச்சினை இல்லை... அவர் நம் காதலை புரிஞ்சிப்பார்... ஆனா சித்தப்பா, அத்தையை நினைச்சா தான் பயமா இருக்கு..."

அவளின் கையை பிடித்து ஆதரவாய் வருடி கொடுத்தவன், "எல்லாரையும் சமாளிக்கத்தான் வேணும் வது பேபி... உன்னை காதலிக்கணும்ன்னு முடிவு பண்ணினப்பவே இது எல்லாத்தையும் யோசித்து பார்த்து தான் உன்னை காதலிச்சேன்... எத்தனை தடை வந்தாலும் என் வது பேபியை கைவிட கூடாதுன்னு மனதில் உறுதிமொழி எடுத்த பிறகு தான் உன் கிட்ட காதலை சொன்னேன்... இந்த உறுதி ஒரு ஆண் மகனுக்கு இல்லைன்னா அவன் காதலிக்கவே தகுதி இல்லாதவன்... அப்படி இல்லாதவங்க காதல் தான் பெயிலியர் ஆகுது... அது போல் நம் காதல் தோல்வியடைய நான் விட மாட்டேன்..."

எதையும் நிதானமாய் தெளிவாய் யோசித்து செயல்படும் தன்னவனின் குணம் இன்றும் அவளை பெரிதாய் ஈர்த்தது...

"உங்களை இப்போ தான் ரொம்ப ரொம்ப பிடிக்குது தேவ்... உங்க காதல் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்..." மனமார கூறியவளிடம்,

"உன்னை போல் ஒருத்தி கிடைச்சதுக்கு நான் தான் கொடுத்து வச்சிருக்கணும்..." என்று கூறியவன்,

"உங்கப்பாவை பார்க்க போகும் எண்ணம் இருக்கா இல்லையா...?"

அவன் சொன்னதும் அவள் எழ, அவனும் உடன் எழுந்து அவளோடு இணைந்து நடந்தான்...

"தேவ்... உங்க வீட்டில் சொல்லிட்டீங்களா...?" அதில் அவனது நடை ஒரு நொடி தயங்கி நின்றது... பின் தன்னை சமாளித்தவனாய்,

"ம்... சொல்லிட்டேன்... அவங்களுக்கு சம்மதம் தான்..."

அவன் சொன்னதும் அவளது முகம் பூவாய் மலர்ந்தது...

"உங்க பேரண்ட்ஸ் சோ ஸ்வீட் தேவ்..." அவனது பெற்றோரை அவள் பாராட்ட, அதில் அவனது முகம் இருள்

PDF தமிழ் .com

அடைந்தது... ஆனால் அதை அவளுக்கு காட்டாமல் சாமார்த்தியமாக மறைத்து கொண்டான்...

அவளது வீடு நோக்கி பயணிக்கும் போதும் அவனுக்கு தனது குடும்பத்தை பற்றிய சிந்தனையே... ஒருவழியாய் அவன் சிந்தித்து முடிக்கும் போது அவளது வீடு வந்துவிட்டது...

மாளிகை போல் இருந்த அவளது வீட்டை கண்டு அவன் பிரமித்தான்...

வருணிதா என்ற தனிமனுசியின் விருப்பு வெறுப்பு, அவளது மனம் எல்லாம் அவனுக்கு அத்துப்படி... ஆனால் அவளது பின்புலம் இத்தகைய பணபலம் கொண்டதாக இருக்கும் என்று அவன் நினைத்து பார்க்கவில்லை...

இத்தகையை பணக்காரியான அவனது காதலி அத்தனை எளிதாக, இருக்கும் இடம் தெரியாமல், ஆர்ப்பாட்டம் ஏதும் இல்லாமல், தெளிந்த நீரோடையாய் அமைதியாய் இருப்பது அவனுக்கு பெருத்த ஆச்சிரியத்தை அளித்தது...

முதல்முறையாய் தன்னவளை சந்தோசமாக வைத்து கொள்ள முடியுமா என்று அவன் மனதில் சிறு பயம் எழுந்தது...

"தேவ்..." அவளது குரலில் கலைந்தவன் என்னவென்று அவளை பார்க்க...

"ரொம்ப பயமாயிருக்கு தேவ்..." என்றவள் அவனது கையோடு தனது கையை கோர்த்து கொண்டு தனது உள்ளத்தின் நடுக்கத்தை குறைக்க முயன்றாள்...

அவளது சொந்த வீட்டிற்குள் செல்ல கலங்கி தவித்து தனது ஆதரவை நாடும் வருணிதாவை கண்டு அவனின் அந்த சிறு பயமும் அவனை விட்டு விலகி ஓடியது...

'இவள் என் காதலி... இவளை என்னை தவிர வேறு யாரால் நன்றாக பார்த்து கொள்ள முடியும்... நான் தான் அவளுக்கு எல்லாமும்...' என்று நினைத்தவன் அவளது கையை

அழுத்தமாய் பற்றி அவளது அச்சத்தை துடைத்து, தனது அச்சத்தையும் துடைத்து எறிந்தான்...

அதில் தைரியம் வர பெற்றவளாய் அவனை பார்த்து சிரித்தவளின் நிம்மதியில் அவனது மனம் உயிர்த்தது...

தைரியமாக, கம்பீரமாக அவளது கையை பற்றியபடி அவளது வீட்டிற்கு சென்றான்...

வெளிவாயிலுக்கும் வீட்டிற்கும் இடையே சுமார் இரண்டு கிலோமீட்டர் இடைவெளி இருக்கும்... அந்த இடைவெளி முழுவதும் புல்வெளியிலும், செடிகளும், மரங்களும் நிறைந்து அழகான தோட்டமாக அமைந்து காண்போர் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்தது...

"நீ இத்தனை வசதியானவள்ன்னு சொல்லவே இல்லையே பேபி..." அவனது வாய் மெதுவே கேட்டது...

"நான் காதலித்தது உங்களை தான்... நீங்க காதலித்தது என்னை தான்... இதற்கு இடையில் என் வசதியோ இல்லை உங்க வசதியோ எங்கே இருந்து வந்தது..." அவளது வார்த்தையில் அவனது மனம் நிம்மதியுற்றது...

தன்னை போல் தான் அவளும் என்ற நினைவு அப்போது தான் அவனுக்கும் உறைத்தது... அவளுக்கும் அவனது குடும்ப பின்னணி எதுவும் தெரியாது...

"நானும் என் குடும்பத்தை பத்தி எதுவும் சொன்னது இல்லை... சாரிம்மா..." என்றான் மன்னிப்பு கேட்கும் விதமாக...

"ஏன் சொல்லலைன்னு சொல்றீங்க... அப்பா, அம்மா, தங்கை எல்லோரை பத்தியும் தான் சொல்லி இருக்கீங்களே..."

"நான் அதை சொல்லலை..."

"எதுவும் சொல்ல வேண்டாம் தேவ்... உங்களை பிடிக்கிற மாதிரி உங்க குடும்பத்தையும் எனக்கு பிடிக்கும்..."

PDF தமிழ் .com

அவளின் வார்த்தையில் அவன் மீது வைத்திருந்த நேசத்தில் அவனது கண்கள் சிறிது கலங்கியது...

'அது என்னடா காதல், கருமாந்திரம் எல்லாம்... நம்ம குடும்பத்துக்கு இந்த காதல் எல்லாம் சரிப்பட்டு வராது... உனக்கு அடுத்து உன் தங்கச்சி இருக்கா... நீ செய்ற காரியம் அவளோட வாழ்க்கையை தான் பாதிக்கும்... இது எல்லாம் எனக்கு சுத்தமா பிடிக்கலை... ஒரு ஆம்பிளையை மயக்கி காதல்ங்கிற பேர்ல கைக்குள் போட்டுக்கிறவளை எல்லாம் என் மருமகள்ன்னு என்னால் சொல்ல முடியாது... வீட்டுக்கு அடங்கிய பொண்ணு காதலிப்பாளா... அவ சரியான ஓடுகாலியா இருப்பாடா... எவன் கிடைப்பான்னு அலையற பொண்ணு தான்டா காதலிக்கும்... இப்படிப்பட்ட கேடு கெட்ட பொண்ணையா நீ விரும்புற... ச்சீ... த்தூ...'

அவனது காதல் விவகாரம் தெரிந்ததும் காறி உமிழ்ந்த அவனது அன்னையின் வார்த்தைகள் அவனது காதோரம் இன்னமும் ஒலித்து கொண்டு இருந்தது...

'இவ்வளவு அருமையான பெண்ணை போய் அப்படி பேசிட்டீங்களேம்மா...' மனதுக்குள் மருகினான்...

ஆனால் அன்றே அன்னையிடம் திட்டவட்டமாய் சொல்லிவிட்டான்...

"நீங்க சம்மதிச்சா... உங்க ஆசிர்வாதத்தோட கல்யாணம் நடக்கும்... இல்லை..." என்றவன் நிறுத்தி, "அதை என் வாயால் சொல்ல வச்சிராதீங்க..." என்றான் மிரட்டல் தொனியில்...

அவனது மிரட்டலில் அவனது அன்னை அதிர்ந்து போய் பார்த்தது அவனுக்கு இன்னமும் நியாபகத்தில் இருந்தது...

"அவளோட வீட்டில் சம்மதிச்சதும் அவ வீட்டுக்கு பொண்ணு கேட்டு போகணும்... ரெடியா இருங்க..." என்றவன் அதன் பின் தனது காதலை பற்றி எதுவும் பேசவில்லை...

"தேவ்... நீங்க வேற ட்ரெஸ் போட்டு வந்திருக்கலாமோ... இந்த ப்ளூ சர்ட் உங்களுக்கு சூட்டாகுதா...?" என்ற

வருணிதாவின் பார்வை அவனை அலசி ஆராய்ந்தது...

"ம்... பரவாயில்லை... நல்லாத்தான் இருக்கீங்க..." என்று அவனை மெச்சியவள் அவனது பேண்ட்டில் இருந்த மண்ணை தனது கைக்குட்டையால் துடைத்துவிட்டாள்...

அதை கண்டு அவன் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"எந்த ட்ரெஸ் போட்டாலும் இருக்கிற மூஞ்சி தான் இருக்க போகுது... மாமனார், மாமியாருக்கு பிடிக்கலைன்னா என்ன... அவங்க பெத்த பொண்ணு தான் ஏற்கெனவே இந்த மூஞ்சியை பார்த்து மயங்கிட்டாளே... அது போதும் எனக்கு..."

அவனது பேச்சில் இருந்த உண்மை புரிந்தவளாய் புன்னகைத்தவள் பதில் பேசாமல் இணைந்து நடந்தாள்...

வீட்டு வரவேற்பறையில் அவளது வீட்டு உறுப்பினர் அனைவரும் குழுமி இருந்தனர்... அவர்களை கண்டதும் விலகி செல்ல முயன்றவளை தேவானந்த் அழைத்தான்...

"வது இங்கேயே இரு..." என்றான் கட்டளை குரலில்...

அந்த நேரத்திலும் அவனது தைரியம் கண்டு மனம் குளிர்ந்தாலும் தந்தையை பார்த்தவள் மனதுக்குள் நடுங்கத் தான் செய்தாள்...

திருவேங்கடம் ஒன்றும் பேசாது வெற்றுப் பார்வையுடன் அமர்ந்து இருந்தார்... பத்மா மகளை முறைத்து பார்த்து கொண்டு இருந்தார்...

இறுதியில் காதலனை மீறி செல்ல விருப்பம் இல்லாமல் அவள் அவனுடன் தேங்கி நின்றாள்... அதில் அவன் மனம் நிறைய சந்தோசத்துடன் அவளது கையை பிடித்து கொண்டான்...

இதை எல்லாம் அவளது பெரியப்பா பார்த்து கொண்டு தான் இருந்தார்... இந்த காதல் கண்டிக்கும் கட்டத்தை எல்லாம் தாண்டி விட்டது என்பதை அக்கணம் உணர்ந்தார் அவர்...

அதிலும் இருவரும் விடலை பருவத்தில் இருப்பவர்கள் அல்ல... அவர் யோசனையாய் தம்பியை பார்த்தார்... திருவேங்கடம் அவரை பார்த்து,

"நீங்களே பேசுங்கண்ணா..." என்று அமைதியாகிவிட்டார்...

பெரியப்பா அவனை பார்த்து, "உட்காருப்பா..." என்று அவனை அமர சொல்ல... அவனும் அவரது வயதுக்கு மரியாதை கொடுத்தவனாய் அவர் சொல் கேட்டு நாற்காலியில் அமர்ந்தான்...

"சொல்லுப்பா... உன் பேர் என்ன...? சொந்த ஊரு, குடும்பம் பத்தி சொல்லு..."

"என் பேரு தேவானந்த்... சென்னை தான் சொந்த ஊர்... அப்பா பேரு சிவநேசன் ரிடையர்டு கவர்மென்ட் எம்ப்ளாயி, அம்மா பார்வதி இல்லத்தரசி... ஒரே தங்கை சுஜானா டென்த் படிக்கிறா... நான் வது கூட வேலை பார்க்கிறேன்..." என்று தன்னை பற்றி சிறியதாய் அறிமுகப்படுத்தி கொண்டான் தேவானந்த்...

"அப்போ பெருசா வசதி ஒண்ணும் கிடையாதுன்னு சொல்லு... உன் வருமானத்தை நம்பி தான் உன் ஒட்டுமொத்த குடும்பமும் இருக்கு... ம்..." யோசனையாய் தாடையை தடவினார் அந்த பெரியவர்...

"வதுவை கண் கலங்காம பார்த்துக்க அளவுக்கு என்னோட வருமானம் இருக்கு..." என்றான் அடக்கப்பட்ட கோபத்தில் பட்டென்று... அவரின் வார்த்தை அவனது தன்மானத்தை உசுப்பிவிட்டது...

வருணிதா அவனது கோபம் கண்டு பயந்து போனவளாய் அவனை பார்த்தாள்... அந்நேரம் அவளை ஏறிட்டு பார்த்தவன் என்ன நினைத்தானோ தனது கோபத்தை கட்டுப்படுத்தி கொண்டான்...

"ஆனா நாங்க உன்னை விட நல்ல பையனா அவளுக்கு பார்த்து வச்சிருந்தோமே..." பெரியப்பாவின் பேச்சில் வருணிதா திகைத்து போய் பார்த்தாள்...

"என்ன பார்க்கிற வருணி... கிரியோட பையன் முரளியை தான் உன் அப்பா உனக்கு பார்த்து வச்சிருந்தான்..." பெரியப்பா சபையில் விசயத்தை போட்டு உடைத்துவிட்டார்...

திருவேங்கடத்திற்கு அவரது இந்த பேச்சு பிடிக்கவில்லை... இடையில் குறுக்கிட்டால் மரியாதையாக இருக்காது என்பதற்காக அமைதி காத்தார்...

கண நேரத்தில் தங்களின் செல்வ நிலையை தேவானந்த்க்கு எடுத்து காட்டிய பெரியப்பா, அவன் அதுக்கு தகுதியானவன் இல்லை என்பதை அவனுக்கு உணர்த்தியும் விட்டார்...

அவர் சொன்னதில் அவன் கூட சற்று மிரண்டு விட்டான்...

கிரியின் உயரம் அவனுக்கு நன்கு தெரியும்... அவர் வீட்டுக்கு மருமகளாக வருணிதா போக இருந்தாளா... அவனையும் அறியாது மனதில் குற்றவுணர்ச்சி குறுகுறுத்தது...

"பெரியப்பா... இப்போ எதுக்கு இந்த பேச்சு... நீங்க பேசுறது எனக்கு கொஞ்சமும் பிடிக்கலை... அருவருப்பா இருக்கு... நான் இவரை தான் காதலிக்கிறேன்..." மெல்லிய குரலில் என்றாலும் உறுதியாய் கூறியவளை கண்டு அவளது சித்தப்பா அடிக்க பாய்ந்துவிட்டார்...

"அண்ணாவையே எதிர்த்து பேசுறியா... அந்தளவுக்கு காதல் மயக்கம் உன்னை ஆட்டுவிக்குதோ... நாங்க மாப்பிள்ளை பார்த்தது உனக்கு அருவருப்பா இருக்கா... அப்போ நீ செஞ்சுக்கிட்டு வந்திருக்கிறதுக்கு என்ன பேரு..." என்று அவளை திட்டியபடி அடிக்க வந்தவரை நொடியில் தடுத்துவிட்டான் தேவானந்த்...

"வதுவை அடிக்கிற வேலை எல்லாம் வச்சுக்காதீங்க... நீங்க பேசுறது அருவருப்பா இல்லாம எப்படி இருக்கும்... உங்க பொண்டாட்டியை வேறு ஒருத்தன் கூட இணைச்சு பேசினா அருவருப்பு இல்லாம இருக்குமா...? அது மாதிரி தான்

வதுவுக்கும் இருக்கும்... ஊருக்கு தான் நாங்க தாலி காட்டாததால காதலர்களா தெரியறோம்... ஆனா மனசால வாழ்ற எங்களுக்கு காதல் வந்த கணத்தில் கல்யாணம் ஆகிருச்சு... வது என்னோட மனைவி... அவளை வேறு யார் கூடவும் இணைச்சு வச்சு நீங்க பேசுறதை நான் அனுமதிக்க மாட்டேன்... நீங்க சம்மதிச்சாலும் சம்மதிக்காவிட்டாலும் எங்க கல்யாணம் நடக்கும்..."

அவனது உறுதியான ஆணித்தரமான பேச்சில் அனைவரும் வாயடைத்து போயினர்...

சிறிது நேரம் அவர்களுக்குள் சலசலப்பு ஏற்பட்டது... தேவானந்த் திமிராய் பேசியது தவறு என்று கூறி அவளது சித்தப்பாவும், அத்தையும் வாதாடினர்... திட்டினர்... அவர்கள் பேசியது அனைத்தும் காதில் விழுந்தாலும் அவன் எதையும் முகத்தில் காட்டி கொள்ளாமல் அமர்ந்து இருந்தான்...

"இதுக்கு மேல பேச ஒண்ணும் இல்லை வேங்கடம்... நல்ல நாள் பார்த்து கல்யாணத்தை முடிச்சு கொடுத்து இருக்கிற கொஞ்ச நஞ்ச கௌரவத்தை காப்பாத்திக்க பாரு..." பெரியப்பா எழுந்துவிட்டார்...

வருணிதாவின் வீட்டில் அவளது காதலை ஏற்று கொள்ளவில்லை என்பது எல்லோரின் முகத்தில் இருந்த இறுக்கத்தில் நன்கு தெரிந்தது... பெரியப்பா அங்கு இருந்து வெளியேறவும் அனைவரும் அவரை பின்தொடர்ந்து வெளியேறிவிட்டனர்...

தனித்து விடப்பட்டனர் வருணிதாவின் பெற்றோர் மற்றும் அவனும், அவளும்...

"தப்பா நினைக்க வேண்டாம்... பெரியவர்களுக்கு இந்த காதல் எல்லாம் ஏத்துக்க கஷ்டமா இருக்கும்... அதான் அப்படி பேசிட்டாங்க..." தன்மையுடன் பேசிய திருவேங்கடத்தை தேவானந்திற்கு மிகவும் பிடித்து போனது...

திருவேங்கடம் அவனிடத்தில் தன்மையுடன் பேசுவதற்கும் ஒரு காரணம் இருந்தது...

தேவானந்த்தை பற்றி அவர் கிரியிடம் விசாரித்தார்... வருணிதாவின் காதல் தெரிந்து ஆச்சிரியப்பட்ட கிரி மேலே ஒன்றும் சொல்லவில்லை... அவளது காதலை வாழ்த்திவிட்டு,

"தேவா ரொம்ப நல்ல பையன்... முன்னேற துடிக்கிற துடிப்பான இளைஞன்... அவனுக்குன்னு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கு... அதை எல்லாம் விட க்ளீன் ஹேபிட் உள்ள அக்மார்க் நல்ல பையன்... அவனை நம்பி உன் பொண்ணை கொடுக்கலாம்..." என்று அவனுக்கு அவர் அளித்த நற்சான்று திருவேங்கடத்தை சற்று யோசிக்க வைத்தது...

பத்மா இன்னமும் முகத்தை இறுக்கமாய் வைத்து கொண்டு தான் இருந்தார்...

'மாமனார் ஓகே... மாமியார் தான் டெரரா இருக்காங்க...' அவன் மனதில் நினைத்து கொண்டான்...

"உங்க அப்பா, அம்மா கிட்ட கலந்து பேசிட்டு ஒரு நல்ல நாள்ல வந்து பொண்ணு பார்த்துட்டு போங்க... இது சும்மா ஒரு சம்பிரதாயத்துக்கு தான்... நாலு பேர் நாலு விதமாய் பேசிற கூடாது பாருங்க... அதான்... அன்னைக்கே கல்யாணத்தை பேசி முடிவு பண்ணிடலாம்..." திருவேங்கடத்தின் வார்த்தையில் நிம்மதியுற்றவனாய்,

"சரிங்க சார்..." என்றபடி அவன் இருக்கையில் இருந்து எழ...

"சார் இல்லை மாப்பிள்ளை... மாமான்னு சொல்லுங்க..." என்று சிரித்தார் திருவேங்கடம்...

"அடுத்தவங்க கிட்ட வேலை பார்க்கிற வேலைக்கார புத்தி இன்னும் அவரை விட்டு போகலை போலிருக்குது..." கேலியாய் சொன்ன பத்மாவின் வார்த்தையில் அவனது முகம் சுண்டி போனது...

கை முஷ்டிகளை இறுக்கி தனது கோபத்தையும், வருத்தத்தையும் அடக்கி கொண்டான் தன்னவளுக்காக...

அவனது மனநிலை புரிந்தவளாய் வருணிதா அவனது கையை பற்றி சத்தம் வராமல், 'சாரி...' என்று தனது உதடுகளை அசைத்தாள்... அதில் அவனது வருத்தமும், கோபமும் சற்று குறைந்தது...

"பத்து..." திருவேங்கடம் மனைவியை அடக்கியவர்,

"ஆயிரம் தான் இருந்தாலும் அவர் நம்ம வீட்டு மூத்த மாப்பிள்ளை... அதுக்கு உண்டான மதிப்பை நீ கொடுத்தே ஆகணும்..." மனைவியிடம் வலியுறுத்த...

அதில் மனம் சுணங்கினாலும் பத்மா வெளிக்காட்டி கொள்ளாமல், "மன்னிச்சிக்கோங்க மாப்பிள்ளை..." என்று பட்டும் படாமலும் மன்னிப்பு கேட்டு விட்டு உள்ளே சென்றுவிட்டார்...

திருவேங்கடத்திடம் விடைப்பெற்று வெளியில் வந்தவன் வருணிதாவிடம், "கூடிய சீக்கிரம் அம்மா, அப்பாவை கூட்டிட்டு வர்றேன் வது..."

அவனது வார்த்தையில் நிம்மதி அடைந்தவளாய், "அம்மா... ஏதோ கோபத்தில் பேசிட்டாங்க... எனக்காக பொறுத்துக்கோங்க..."

அவளது வார்த்தையில் சிரித்தவன், "அம்மான்னா பேசத்தான் செய்வாங்க..." என்றவன் அவளது கையை பற்றி அதில் இதழ் பதித்து,

"உனக்காக எதையும் பொறுத்துக்குவேன் பேபி..." என்றான் காதலாக...

"இது போதும் தேவ்..." என்று மனநிம்மதி அடைந்தவள்,

"இது மாதிரி நம் காதலுக்கு பல சோதனைகள் வரும் தேவ்... எத்தனை சோதனைகள் வந்தாலும் நம்ம காதல் ஜெயிக்கிறதுக்காக நீங்க அதை எல்லாம் பொறுத்துக்கணும்... ப்ளீஸ்... எனக்காக இதை

செய்வீங்களா...? எந்த சூழ்நிலையிலும் என்னை கைவிட்டுர முடிவு மட்டும் எடுத்துட கூடாது... அப்படி ஒரு நிலை வந்தா நான் செத்துருவேன் தேவ்... எனக்கு உங்களை தவிர வேறு யாரும் கிடையாது.."

அவளின் கலங்கிய விழிகளை பார்த்தவனுக்கு அவளது காதலுக்காக எதையும் பொறுத்துக் கொள்ளலாம் என்றே அந்த கணம் தோன்றியது...

"நிச்சயம் பேபி... நம்ம காதல் வெற்றி அடையறதுக்காக நான் எதையும் பொறுத்துக்குவேன்..." அவனின் வார்த்தையில் நிம்மதி அடைந்தவள்,

"நானும் தான் தேவ்... உங்களுக்காக எதையும் பொறுத்து கொள்வேன்..." அவளும் அவனுக்கு வாக்குறுதி அளித்தாள்...

அந்த வாக்குறுதி எல்லாம் மனதில் காதல் இருக்கும் வரை தான் செல்லும் என்பதை அந்த இரு முட்டாள்களும் உணரவில்லை...

காதலில் வெற்றி என்பது கல்யாணம் பண்ணிக் கொள்வதில் மட்டும் தானா... கல்யாணம் பண்ணி கொண்டால் காதல் வெற்றி பெற்றதாய் ஆகிவிடுமா...

ஆனால் அந்த கல்யாண வாழ்க்கையை வெற்றிகரமாக கொண்டு செல்வதில் தான் உண்மையான வாழ்க்கை அடங்கி இருக்கிறது என்பதை இருவருமே அறியவில்லை...

வாழ்க்கை என்பது உணர்ச்சிவசத்தில் எடுக்கும் முடிவு அல்ல என்பதை உணர்த்த வாழ்க்கை அவர்களுக்கு பலவித சோதனைகளை வைத்து காத்திருந்தது...

உறையும்...

காலை ஐந்து மணிக்கு தனது வீட்டின் முன் ஆட்டோவை நிறுத்த சொல்லி இறங்கிய தேவானந்த் அதற்கு பணத்தை கொடுத்துவிட்டு முன்வாசலில் இருந்த இரும்பு கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்...

தோட்டத்தில் பூப்பறித்து கொண்டு இருந்த சிவநேசன் கதவின் 'க்றீச்' என்ற சத்தத்தில், 'யார் வந்திருக்கிறார்கள்...?' என்று எட்டி பார்க்க, அங்கே மகனை கண்டதும் அவரது முகம் மலர்ந்தது...

"தேவா... வாப்பா..." என்று சந்தோசமாய் அவனை வரவேற்றவர் அவனது கையில் இருந்த பையை வாங்கி கொள்ள முற்பட...

"இருக்கட்டும்ப்பா..." என்றவன் அதை அவர் கையில் கொடுக்காமல் தானே எடுத்து கொண்டு நடந்தான்...

"போன காரியம் நல்லபடியா முடிஞ்சதாப்பா...?"

அவர் கேட்கும் கேள்வி தொழில் நிமித்தமானது என்று அவனுக்கு புரிந்தாலும், "எல்லாம் நல்லபடியா முடிஞ்சதுப்பா..." என்றான் இரு பொருள்பட, அவனது தனிப்பட்ட வாழ்க்கையும் சேர்த்து...

"சந்தோசம்ப்பா..." என்றவர் அவனுடன் இணைந்து நடந்தார்...

"அம்மா எங்கேப்பா...?" வீட்டினுள் நுழைந்ததும் தாயை காணாமல் அவன் கேட்க...

"கிச்சன்ல தான் இருப்பா..." என்றபடி அவர் மனைவியை அழைக்க போக...

"நீங்க இருங்க... நானே போய் பார்க்கிறேன்..." என்றவன் சமையலறை நோக்கி செல்ல... சிவநேசன் பூப்பறிக்க சென்றார்...

சமையலறையில் பால் காய்ச்சி கொண்டு இருந்த அன்னை பார்வதியை நோக்கி மெல்ல பூனை போல் நடந்து வந்தவன் பின்னால் இருந்து அவரது கண்களை பொத்தினான்...

அவனது கை ஸ்பரிசத்தில் அவனை உணர்ந்து விட்டார் அந்த அன்னை...

"தேவா..." முகம் மலர அவனை திரும்பி பார்த்தவர் அவனது கன்னம் வருடி,

"எப்படிப்பா இருக்க...? வேலை ரொம்ப அதிகமா...? கறுத்து போயிட்ட... கொஞ்சம் மெலிஞ்ச மாதிரி இருக்கியேப்பா..." வாத்சல்யத்துடன் கேட்ட அன்னையை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது...

அவனது வாழ்க்கையில் வந்த பெண்கள் மூவருமே அவனுக்கு கிடைத்த நல்வரம் தான்... அவனது அன்னை, தங்கை மற்றும் அவனது காதலியான மனைவியாக போகும் வருணிதா மூவருமே அவனுக்கு கிடைத்த பொக்கிசங்கள் தான்... மூவருக்குமே அவனது நலன் பேணுவது மட்டும் தான் முக்கியம்...

"அம்மா... நான் அப்படியே தான்ம்மா இருக்கேன்... உங்க கண்ணுக்கு தான் ஒரு கண்ணாடி போடணும்..." என்று மகன் அன்னையை கிண்டலடிக்க...

"எனக்கு கண்ணாடி போடணுமா... போடா... இங்கே பாரு கன்னத்தில் டொக்கு விழுந்து இருக்கு..." அவனது கன்னக்குழியில் கை வைத்து கேலி செய்து சிரித்தவரை கண்டு,

"அம்மா... அப்போ உங்க பையனுக்கு வயசாகிருச்சுன்னு சொல்லுறீங்களா... நீங்களே இப்படி சொன்னா என்னை யார்ம்மா கல்யாணம் பண்ணிக்குவாங்க...?" செல்லமாய் சிணுங்கியவனின் வார்த்தையில் அத்தனை நேரம் பார்வதி முகத்தில் இருந்த இணக்கம் மறைந்து கடுமை பரவியது...

"அதான் அந்த மேனாமினுக்கி இருக்கிறாளே... அப்புறம் உனக்கு என்ன கவலை...?" என்றார் முகத்தை

வெடுவெடுவென வைத்து கொண்டு...

அவரது பேச்சில் அவனது முகமும் அத்தனை நேரம் இருந்த மகிழ்ச்சியை தொலைத்து இறுகி போனது...

"அவளை ஒரு வார்த்தை சொல்லிர கூடாதே... உடனே முகத்தை உம்முன்னு தூக்கி வச்சிருவியே..." என்று அவனை கடிந்தவர்,

"இந்தா சூடா காபியை குடி..." என்று அவனது கையில் காபி கோப்பையை திணித்தவர் கணவருக்கு காபி கொடுக்க சென்றார்...

அவன் கையில் காபியுடன் வரவேற்பறையில் வந்தமர்ந்தான்...

கணவன் கையில் காபி கொடுத்துவிட்டு அவர் கொடுத்த மலர்களை மாலையாக தொடுக்க ஆரம்பித்தார் பார்வதி...

அன்னனையின் செயலை பார்த்து கொண்டு இருந்தவன் மனதில் இறுக்கம் மறைந்து கனிவு பிறந்தது...

காலையில் தலைக்குளித்து, மஞ்சள் முகத்தில் குங்குமம் துலங்க புன்னகை மாறா முகத்துடன் அந்த வயதிலும் அழகாய் இருந்தார் பார்வதி... அவர் நல்ல அன்பான மனைவி, அம்மா, பொறுப்புள்ள குடும்பத் தலைவி... ஆனால் இந்த காதல் என்ற வார்த்தையை மட்டும் அளவுக்கு அதிகமாய் வெறுக்கும் ஒரு சராசரி பெண்மணி...

அவரை சொல்லியும் குற்றம் இல்லை...அவர் வளர்ந்த சூழ்நிலை அப்படி... மிகவும் கட்டுப்பட்டியான ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் அவர்... கல்லூரி வரை சென்று படித்து இருந்த போதும் திருமணத்திற்கு முன் கணவரை நேரில் பார்த்தது கூட கிடையாது... இவ்வளவு ஏன் சிவநேசனின் புகைப்படத்தை கூட அவர் வீட்டில் அவரிடம் காட்டவில்லை... பெற்றோர் கை நீட்டிய சிவநேசனுக்கு வாழ்க்கைப்பட்டு வந்தவர் இன்று வரை மனநிறைவுடன் நிம்மதியுடன் வாழ்கிறார் என்றால் அது அவரது குணத்தால் தான்...

புகுந்த வீட்டில் அனைவரையும் அனுசரித்து நடந்து சிவநேசன் மனதில் இடம் பிடிக்க அவர் செய்த தியாகங்கள் எண்ணிக்கையில் அடங்காது... கூட்டு குடும்பத்தில் ஊழன்று கொண்டு இருந்தவர் மகள் பிறந்த பின்பே தனிக்குடித்தனம் வந்தார்... கூட்டு குடும்பத்தில் இருந்த வரை எல்லா பொறுப்புகளையும் ஏற்று கொண்டதில் கையில் பெரியதாய் சேமிப்பு என்று அவர்களிடத்தில் இருந்தது இல்லை...

தனிக்குடித்தனம் வந்த பின் கணவனின் வருமானத்தில் சிக்கனமாய் குடித்தனம் செய்து சேமித்து அதில் இப்போது குடியிருக்கும் வீட்டிற்கான நிலத்தை வாங்கியது அவரது மிகப் பெரிய வாழ்நாள் சாதனை... பிறகு வங்கி கடன் வாங்கி வீட்டை கட்டி முடிப்பதற்குள் விழி பிதுங்கத்தான் செய்தது...

சில சமயம் சிவநேசன் என்ன செய்வது என்று அறியாது திகைத்து போய் விழிக்கும் போது பார்வதி தான் தைரியம் கூறி அவரை தேற்றுவார்... சிவநேசன் அன்பான மனிதர், சற்று வெகுளி... அவரால் எந்தவொரு பிரச்சினையையும் சமாளிக்க தெரியாது... அதனால் தான் அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து தனக்கு வேண்டிய நிம்மதியான பாதுகாப்பான வாழ்க்கைக்கு வழிவகுத்து கொண்டார் அவர்...

சற்று சிரமப்பட்டு வீட்டை கட்டி முடித்து அதன் கடனை அடைத்து பின் பிள்ளைகள் படிப்பு, பெண்ணின் திருமணம் என்று எல்லாவற்றிற்கும் தனித்தனியாய் சேமிக்கத் தொடங்கி அதில் வெற்றியும் பெற்றார் பார்வதி...

தேவானந்த் வேலைக்கு சென்ற இந்த எட்டு ஆண்டுகளாக தான் பொருளாதார நிலை சற்று மேம்பட்டு இருக்கிறது... ஆனால் அதையும் சிக்கனமாக சேர்த்து வைத்து மாடியில் இரு வீட்டை கட்டி அதையும் வாடகைக்கு விட்டு இப்போது அதில் இருந்தும் வாடகை மாதந்தோறும் வந்து கொண்டு இருக்கிறது...

அது தேவானந்த் சொந்த தொழில் தொடங்குவதற்கான சேமிப்பாய் வங்கி கணக்கில் ஏறுகிறது... ஏனெனில் கடன் வாங்கி கையை சுட்டு கொள்ளப் பயப்படும் சராசரி இளைஞன் தேவானந்த்... அதனால் அவனுக்கு வேண்டியதை அந்த அன்னை சேமித்து வருகிறார்...

மொத்தத்தில் பார்வதியின் மூளையில் குடும்பம் வறுமையில் வாடாமல் செம்மையுடன் சென்று கொண்டு இருக்கிறது என்றால் மிகையில்லை...

சென்ற மாதம் தேவானந்திற்கு முப்பது வயதானதும் பார்வதி திடுமென திருமணப் பேச்சை எடுத்தார்... அதில் அவன் திடுக்கிட்டு போனான்... அவன் தான் கடந்த ஓராண்டாக வருணிதாவை காதலித்து வருகிறானே... இது தான் நல்ல சமயம் என்று எண்ணி அவன் தன் காதலை அன்னையிடம் கூற அதில் அதிர்ச்சி அடைந்த அன்னை பேசியது தான் அந்த வார்த்தைகள்...

அன்பே உருவான அன்னையின் வார்த்தையில் அவன் திகைத்து போய்விட்டான்... அதுவும் வருணிதாவை பேசியது சற்று அளவுக்கு அதிகமாகவே அவனுக்கு தோன்றியது... இருந்தாலும் அன்னையை எதிர்த்து பேச மனம் இல்லாமல் அவருக்கு தன் காதலை புரிய வைக்க முயல, அவரோ அதை புரிந்து கொள்ளாமல் வருணிதாவை தேவையில்லாமல் பேச அதில் அவனுக்கும் கோபம் வந்துவிட்டது...

அதனால் தான் அவனும் அவரை சற்று எடுத்து எறிந்து பேசிவிட்டான்... அன்று அதிர்ந்து போய் நின்ற அன்னையின் முகம் இன்றும் அவனது நினைவில் நின்றது... இப்போது வருணிதாவை பெண் கேட்க போக வேண்டும் என்றால் அன்னை எப்படி எடுத்து கொள்வாரோ என்று அவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது... அன்னையை யோசனையாக பார்த்து கொண்டு இருந்தான்...

தூக்க கலக்கத்தில் எழுந்து அங்கு வந்த சுஜானா சகோதரனை கண்டு சந்தோசத்துடன், "அண்ணா..."

என்றபடி ஓடி வந்து அவன் அருகில் அமர்ந்தவள்,

"எனக்கு அல்வா வாங்கிட்டு வந்திருக்கீங்களாண்ணா..." ஆர்வத்துடன் கேட்டவளிடம்,

"நீ ஒண்ணு கேட்டு நான் அதை மறப்பேன்னா சுஜி..." என்று சிரித்தபடி பையில் இருந்த அல்வாவை எடுத்து அவளிடம் நீட்டினான்...

தன்னை விட பதினைந்து வயது இளையவளான தங்கை என்றால் அவனுக்கு உயிர்... அவள் என்ன கேட்டாலும் வாங்கி கொடுக்காமல் இருந்தது இல்லை... செய்யாமல் இருந்தது இல்லை...

"ஸ்வீட் அண்ணா..." என்று அவனது கன்னத்தில் முத்தமிட்டவள் ஆவலாய் அதை பிரிக்க பார்வதியின் குரல் அவளை அதட்டியது...

"முதல்ல பிரெஸ் பண்ணிட்டு காபி குடிச்சிட்டு போய் படி சுஜி... அல்வாவை பிறகு சாப்பிடலாம்..." கண்டிப்புடன் கூற...

"போங்கம்மா..." காலை தரையில் உதைத்து கொண்டு சிணுங்கினாலும் சுஜானா அன்னையின் வார்த்தைக்கு பணிந்து உள்ளே சென்றாள்...

தங்கை பள்ளிக்கு சென்றுவிட தேவானந்த் சாப்பிட அமர்ந்தான்... பெற்றோரிடம் எப்படி விசயத்தை சொல்வது என்று அவனுக்கு யோசனையாக இருந்தது...

மகனின் கவனம் உணவில் இல்லை என்பதை அந்த தாயுள்ளம் கண்டு கொண்டது... ஆனாலும் ஒன்றும் பேசவில்லை... அமைதியாய் கணவருக்கும், மகனுக்கும் பரிமாறினார்...

உண்டு விட்டு எழுந்தவன் கையை கழுவி விட்டு தனது அறைக்குள் நுழைந்தவன் ஏதோ யோசனையில் அங்கு இருந்த கதவின் நிலையின் மீது 'நங்'கென்று மோதி கொண்டான்...

வலி தாங்காது, "ஷ்... அம்மா..." என்று கத்தியவனை நோக்கி விரைந்து வந்தனர் அவனது பெற்றோர்...

"தேவா... பார்த்து போக கூடாதாப்பா..." இருவரும் ஒரே குரலில் கூறியவர்கள் அவனை அமர வைத்து அவனது நெற்றியை ஆராய்ந்தனர்...

"நல்லா வீங்கிருச்சே... கொஞ்சம் இரு ஐஸ் கட்டி எடுத்துட்டு வர்றேன்..." என்றபடி உள்ளே சென்ற பார்வதி அதை எடுத்து கொண்டு வந்து அவனது நெற்றியில் புடைத்து இருந்த இடத்தில் ஒத்தடம் கொடுக்க வீக்கம் சற்று குறைந்தது...

"இப்ப பரவாயில்லைம்மா..." என்றவன் எழ போக...

"கொஞ்ச நேரம் இரு தேவா..." அதட்டிய பார்வதி ஒத்தடம் கொடுப்பதை நிறுத்தவில்லை...

அவருக்கு திருப்தியானதும் அதை நிறுத்தியவர் மகனிடம், "என்ன விசயம் உன் மனசை அரிக்குது தேவா... ஒரு நாளும் நீ இப்படி இருக்க மாட்டியே..." என்றார் கவலையாக...

"அது வந்தும்மா..." எப்படி சொல்வது என்று யோசித்தான்... இப்போது இதை சொல்லி இருக்கும் இணக்க நிலையை கெடுத்து கொள்ள வேண்டுமா என்று இருந்தது அவனுக்கு... ஆனால் அதை அவனால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை...

"வது வீட்டில் பெண் கேட்டு வர சொல்லி இருக்காங்க..."

வது யார் என்று அபத்தமாக வினவவில்லை பார்வதி...

"அவளோட பெத்தவங்களை நீ எப்போ போய் பார்த்த...?" கூர்மையுடன் மகனை பார்த்தார் அவர்...

"அவ ஊர் திருநெல்வேலி தான்ம்மா..."

"ஓ..." என்றவர் அமைதியாகிவிட்டார்...

"அவங்க கிட்ட போய் பேசினேன்... உங்களை நல்ல நாள் பார்த்து நம்மளை பொண்ணு பார்க்க வர சொன்னாங்க..."

"அப்போ அவ தான் உன் மனைவின்னு நீ முடிவு பண்ணிட்ட..." அழுத்தமாய் கேட்ட தாய்க்கு,

"ஆமாம்மா..." என்றான் அதை விட அழுத்தமாய்...

"பாரு... அவன் தான் தீர்மானமா சொல்றானே... சரின்னு சம்மதிச்சுட்டு போக வேண்டியது தானே..." மனைவிக்கும் மகனுக்கும் இடையில் உள்ள மனஸ்தாபத்தை தீர்க்க எண்ணினார் சிவநேசன்...

"இவன் சொன்னதுக்கு எல்லாம் நாம தலையாட்டினா நம்ம சொந்த பந்தம் எல்லாம் நம்ம முகத்தில் காறி துப்பும்... நமக்கு இருக்கிற மானம், மரியாதை காத்தில் பறக்கும்... இது எல்லாம் நமக்கு தேவை தானா...?" பார்வதி படபடக்க...

"நாம கஷ்டப்பட்டப்போ எந்த சொந்த பந்தம் வந்து எட்டி பார்த்தது... சொந்தங்களை நினைச்சு கவலைப்படுற நீ கொஞ்சமாவது நம்ம பையனோட சந்தோசத்தையும் நினைச்சு பாரு... அவன் ஒண்ணும் சின்ன பையன் இல்லை... நம்ம குடும்பத்துக்கு ஏத்த மாதிரி நல்ல பொருத்தமான பெண்ணை தான் அவன் தேர்ந்து எடுத்து இருப்பான்..."

சிவநேசன் மனைவிக்கு நிதர்சனத்தை எடுத்து கூறினார்... மகனின் காதல் விவகாரம் தெரிந்ததில் இருந்து அவர் மனைவி மனதை அறிவுரை கூறி கரைத்து கொண்டு தான் இருந்தார்...

"அவ எனக்கு பொருத்தமானவள் தான்ப்பா... ஆனா நான் தான் அவளுக்கு பொருத்தம் இல்லை..." வேண்டுமென்றே தேவானந்த் அந்த வார்த்தைகளை கூறினான்...

"உனக்கு என்னடா குறைச்சல்... ராஜா மாதிரி இருக்க... உன்னை கட்டிக்க அவளுக்கு கசக்குதாக்கும்..." பார்வதி மகனை தாங்கி பேச...

அதை கண்டு தேவானந்த் முகத்தில் புன்னகை அரும்பியது... அவன் நினைக்கும் பாதையில் பேச்சு திரும்பியதில் மனதில் சந்தோசப்பட்டு கொண்டான்...

"என்னம்மா இப்படி சொல்லிட்டீங்க... அவ அப்பா யாருன்னு தெரிஞ்சா நீங்க இப்படி பேச மாட்டீங்க... நீங்க யூஸ் பண்ற ஊறுகாய், எண்ணெய், மசாலா பொடி எல்லாம் அவங்களோடது தான்..."

மகன் சொன்னதை கேட்டு பார்வதியின் முகத்தில் ஈயாடவில்லை... கண நேரத்தில் தன்னை சமாளித்து கொண்டவர்,

"இருந்தா இருந்துட்டு போகட்டுமே... அவங்க பொண்ணும் தானே உன்னை காதலிக்குது... அப்போ உன்னோட லெவல் என்னன்னு அவங்களுக்கும் தெரிஞ்சி இருக்கணுமே... இங்கே பாரு தேவா... பணம் என்னடா பணம்... குணம் தான்டா முக்கியம்... ஊர் முழுக்க சல்லடை போட்டு சலிச்சாலும் உன்னை போல் ஒருத்தனை அவங்க கைக் காட்ட முடியுமா... அவங்க பொண்ணுக்கு உன்னை விட நல்ல மாப்பிள்ளையை பார்த்துடுவாங்களாக்கும்... உன்னை கட்டிக்க அந்த பொண்ணு மட்டும் இல்லை, அவளோட அப்பா, அம்மாவும் கொடுத்து வச்சிருக்கணும் உன்னை போல் ஒரு மருமகன் கிடைக்கிறதுக்கு..."

அன்னையின் நீளப் பேச்சை அமைதியாய் கேட்டவன் பின் நமட்டு சிரிப்புடன் அவரை நோக்கி, "அப்போ நான் வதுவை கல்யாணம் பண்ண உங்களுக்கு சம்மதம் தானே..."

அவனது சாமார்த்தியமான கேள்வியில் வாயடைத்து போனார் பார்வதி... சிவநேசன் மகனை மெச்சுதலாய் பார்த்தார்...

பின் மெல்ல சிரித்தபடி மகனின் முன்னுச்சி முடியை கலைத்துவிட்ட பார்வதி, "போக்கிரி... உன் தொழில் சாமர்த்தியத்தை வீட்டில் காட்டுறியாக்கும்..." என்று செல்லமாக வைதவர் கையில் தலை குனிந்து வாகாய் முடியை கொடுத்தவன்,

"எல்லாம் எங்கே இருந்து வந்தது...? உங்க கிட்ட இருந்து தான்..." என்றான் அன்னையை பார்த்து பாராட்டுதலாக...

"இருந்தாலும்... நம்ம குடும்பத்துக்கு இந்த லவ் எல்லாம்..." அவர் தயங்கத்தான் செய்தார்...

"எல்லாம் சரி வரும் பாரு... இப்போ தேவாவோட சந்தோசத்தை மட்டும் யோசி... நாமளே அவன் கல்யாணத்தை முன்னே இருந்து நடத்தி கொடுத்துட்டா யாரும் பேசுறதுக்கு வாய்ப்பு இல்லாம போகும்... இதே இது அவன் நம்மை எதிர்த்துட்டு கல்யாணம் பண்ணிட்டு வந்ததுக்கு அப்புறம் ஊர் வாயை அடைக்க நம்மால் முடியாது..."

சுமார் ஒரு மணி நேரம் சிவநேசன் பேசி பேசி மனைவியை கரைத்தார்... இரு மனதாய் மகனின் காதலை ஏற்று கொண்டார் அந்த தாய்...

"அம்மா... நீங்க எதுக்கு இவ்வளவு கவலைப்படுறீங்கன்னு எனக்கு புரியுது... சுஜிக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைச்சு கொடுக்கிறது என்னோட பொறுப்பு... ஒரு பொறுப்பான அண்ணனான அவளை நான் பார்த்துப்பேன்ம்மா..."

அவன் கொடுத்த வாக்குறுதியில் சற்று மனம் தெளிந்தார் பார்வதி... இரு மக்களின் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும் என்பது தானே அவரின் ஆசை, விருப்பம்... அதை தவிர வேறு பேராசை எதுவும் அவருக்கு கிடையாது...

அதிலும் கொஞ்ச நாளாய் மகனின் யோசனை கொண்ட கவலை முகம் அவருக்கு வருத்தத்தை கொடுத்தது... மகனின் மகிழ்ச்சிக்காக அவனது காதலுக்கு பச்சை கொடி காட்டினார் அவர்...

ஒரு நல்ல நாளில் சிவநேசன், பார்வதி தங்களின் உடன்பிறந்தவர்களோடு வருணிதாவை பெண் பார்க்க சென்றனர்... ஏன், எதற்கு, எப்படி இப்படி என்று கேள்வி கேட்ட உடன்பிறந்தவர்களை சமாளித்து அழைத்து போவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது பார்வதிக்கு...

அங்கு வருணிதாவின் வீட்டில் அவளது அனைத்து உறவினர்களும் வந்து இருந்தனர்...

முதலில் தேவானந்த்தின் நிலையை சற்று மட்டமாக எடை போட்டு இருந்த பத்மா கூட அவனது பெற்றோர், உறவினர்களை கண்டு தனது முடிவை மாற்றி கொண்டார்...

எல்லோரும் படித்து இருந்ததால் நாகரீகமாக இருந்தனர்... இவர்கள் அளவுக்கு வசதி இல்லை என்றாலும் ஓரளவுக்கு வசதியாய் இருக்கத்தான் செய்தனர்...

அதிலும் பார்வதியின் நாகரீகமான தோற்றம், நறுவிசான நடத்தை எல்லாம் பத்மாவுக்கு சற்று திருப்தி கொடுத்தது...

"உன் வீட்டு ஆளுங்க எப்படி இருப்பாங்களோன்னு பயந்துட்டே இருந்தேன்... பரவாயில்லை இங்கிதம் தெரிஞ்சவங்களா, நாகரீகமாக தான் இருக்காங்க..." என்றவர் மகளின் பதிலை எதிர்பார்க்காதவராய் வெளியில் சென்றுவிட்டார்...

இத்தனை நாள் முகம் கொடுத்து பேசாத அன்னை பேசியதில் சந்தோசப்பட்டு போனாள் வருணிதா...

"அக்கா... இதில் இருந்து ஒரு விசயம் நல்லா புரியுது..." என்ற கிருஷ்ணாவை புரியாமல் அவள் பார்க்க...

"இனிமேல் காதலிக்கும் போது காதலிக்கிறவங்க எப்படி இருக்காங்கன்னு பார்க்கிறதை விட அவங்க அப்பா, அம்மா எப்படி இருக்காங்கன்னு பார்த்துட்டு தான் காதலிக்கணும் போலிருக்கு..."

சிரிக்காமல் அவன் கொடுத்த விளக்கத்தில் அவளுக்கு சிரிப்பு வந்தது...

"அப்போ நீ லவ் மேரேஜ் தான் பண்ண போறியா...?" என்று சந்தேகமாய் கேட்ட சுகன்யாவை பார்த்து,

"இதில் உனக்கு சந்தேகம் வேறா சுகன்... நான் நிச்சயம் லவ் மேரேஜ் தான் பண்ணிக்குவேன்..." என்றான் கிருஷ்ணா

அமர்த்தலாக...

"இரு இரு... அம்மா கிட்ட சொல்றேன்..." சுகன்யா அவனை மிரட்ட...

"ஐயோ... ஆளை விடு..." என்று தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவன் அங்கிருந்து ஓட... சகோதரிகள் இருவரும் கலகலத்து சிரித்தனர்...

வருணிதாவின் இதழ்களில் உதட்டுச்சாயத்தை பூசியபடி சுகன்யா, "அக்கா... உன் ஆளு ஹீரோ போல் அசத்தலா இருக்கார்... எல்லா கேர்ள்சும் அவரை தான் சைட் அடிச்சுக்கிட்டு இருக்காங்க..."

தங்கை சொன்னதும் மனதில் மெல்லியதாய் பொறாமை எழ, "யாருடி அப்படி சைட் அடிக்கிறது...?" கோபமாய் கேட்டாள் வருணிதா...

"அடேங்கப்பா... அவரை சைட் அடிக்கறாங்கன்னு சொன்னதும் உனக்கு என்னம்மா கோபம் வருது... எல்லாம் நம்ம வீட்டு சொந்தக்கார பொண்ணுங்க தான்... மச்சினிச்சியில் இருந்து தங்கச்சி முறை உள்ளவங்க வரைக்கும் எல்லாம் ஜொள்ளு விடுதுங்க... இங்கே பாரு... உனக்கு அலங்காரம் பண்ணி விடக் கூட யாரும் வர மாட்டேன்னு சொல்லிட்டு ஹாலில் இருந்துட்டு மாமாவை சைட் அடிச்சிக்கிட்டு இருக்காங்க..."

"ஏய்... அந்த லிஸ்ட்டில் நீயுமாடி இருக்க..." சந்தேகமாய் வருணிதா தங்கையை பார்க்க...

அதற்கு பதில் சொல்லாமல் சுகன்யா அக்காவின் அழகை ரசித்து பார்ப்பது போல் தள்ளி நின்று அவளை பார்த்தவள், "நான் அப்படிப்பட்ட பொண்ணு கிடையாதுன்னு உனக்கு தெரியாதாக்கா..." என்றவளை நிம்மதியுடன் அவள் பார்க்க...

"ஆனா அவர் சிரிக்கும் போது கன்னத்தில் விழும் கன்னக்குழியை நான் பார்க்கவே இல்லைக்கா... அவரோட

கச்சிதமான மீசை அழகை நான் ரசிக்கவே இல்லைக்கா..." என்று சொல்லிக் கொண்டு போனவளை நோக்கி,

"ஏய்... கொழுப்பாடி உனக்கு..." என்று வருணிதா அவளை அடிக்க வர,

"மீ எஸ்கேப்..." என்றபடி அவள் அறையை விட்டு வெளியில் ஓடிவிட்டாள்...

சிறிது நேரத்தில் ஒரு சின்னப் பெண்ணுடன் உள்ளே வந்தாள் சுகன்யா...

"இவங்க யார்ன்னு உனக்கு தெரியுதா வருணி...?" சுகன்யா கேட்டதும் முழித்தாள் வருணிதா...

அந்த பெண் அவளை சிநேக பாவத்துடன் பார்த்து சிரித்தாள்...

பதிலுக்கு அவளை கண்டு சிரித்தவள், "யார்ன்னு தெரியலையே...?" என்றவளின் கையை அன்பாய் பற்றிய அந்த பெண்,

"அண்ணி... நானே சொல்றேன்..." அவளது 'அண்ணி' என்ற விளிப்பில் அவள் யார் என்று புரிந்துவிட வருணிதா உற்சாகத்துடன்,

"சுஜானா..." என்க...

"எஸ் அண்ணி... யூ ஆர் கரெக்ட்..." என்று சிரித்த நாத்தனாரை மிகவும் பிடித்து போனது வருணிதாவுக்கு...

சுஜானாவும் மிகவும் பழகியவள் போல் வருணிதா, சுகன்யாவுடன் ஒட்டி கொண்டாள்...

"வருணி... உன்னை கூப்பிடறாங்க..." என்று கிருஷ்ணா அழைத்ததும் வருணிதா வரவேற்பறைக்கு வந்தாள்...

வருணிதாவின் அடக்கமான அழகான தோற்றம் பார்வதியை வெகுவாய் கவர்ந்தது... அதிலும் அவளது

மென்மையான பேச்சு அவளின் மென்மை மனதை அவருக்கு எடுத்து உரைத்தது...

ஆத்திரத்தில் அறிவிழந்து தான் பேசிய வார்த்தைக்கு மிகவும் மனம் வருந்தினார் அவர்... மகனின் தேர்வு சோடை போகவில்லை என்பதை அக்கணம் உணர்ந்தார்... தேவானந்த்தை பார்த்து திருப்தியுடன் புன்னகைத்தார் அவர்...

அன்னையின் முகத்தில் நிலவிய புன்னகையில் அவனது மனம் நிம்மதி அடைந்தது... அதுவரை திருட்டுத்தனமாய் தன்னவளை பார்த்து கொண்டு இருந்தவன் இப்போது நேரிடையாய் அவளை பார்த்து ரசித்தான் உரிமை கொண்டவனாய்...

அவனது பார்வையில் லஜ்ஜையுற்ற வருணிதா தலையை கவிழ்ந்து கொண்டாள்...

அடுத்து வருணிதா வீட்டு பெரியவர்கள் இருவரையும் அமர வைத்து நலுங்கு செய்ய விருப்பப்பட இருவரையும் இணைந்து நாற்காலியில் அமர வைத்தனர்...

அமரும் போது தேவானந்த்தின் தோள் அவளது தோளோடு உரச அவளின் உணர்வுகள் பற்றி எரிய ஆரம்பித்தது... அலையாய் எழுந்த உணர்வுகளை தாங்கி கொள்ள முடியாமல் உதட்டை கடித்து உணர்வுகளை அடக்க முயன்றாள்...

அவள் அருகில் அமர்ந்து அவளை திரும்பி பார்த்தவன் அவளது உணர்வுகளை உணர்ந்து கொண்டவன் மனதில் எழுந்த உல்லாசத்துடன் மேலும் அவளது தேகத்தோடு தேகம் உரசி அவளை சீண்டி விளையாடினான்...

"தேவ்... ப்ளீஸ்..." அவள் கெஞ்சலாய் அவனை பார்க்க அதில் சற்று அமைதியானான்...

நடக்கும் நிகழ்வுகளை நம்ப முடியாமல் ஒருவித மகிழ்ச்சியான மனநிலையில் அவன் இருந்தான்...

உறவினர்கள் இருவரின் ஜோடி பொருத்தத்தை பற்றி புகழ்ந்து பேசியது பத்மாவிற்கு பெருமையாய், சந்தோசமாய் இருந்தது...

திருவேங்கடம் இரு வைர மோதிரங்களை கொடுத்து இருவரையும் மாற்றி கொள்ள சொன்னார்...

அதை கண்டதும் பார்வதியின் மனம் சற்று சுணங்கியது... பெண் பார்க்கும் படலம் என்பதால் பூ, பழம், இனிப்பு வகைகள் மட்டுமே அவர் வாங்கி வந்து இருந்தார்... நகை எதுவும் வாங்கவில்லை...

சபையில் மகனின் கௌரவத்தை காக்க வேண்டி ஒரு நொடி கூட தாமதிக்காமல் தன் கழுத்தில் இருந்த வைர அட்டிகையை கழற்றி மகனின் கையில் கொடுத்து மருமகளின் கழுத்தில் அணிவிக்க சொன்னார்...

"அம்மா... இது..." தயங்கிய மகனை பார்த்து,

"முதல்ல மருமகள் கழுத்துல போட்டு விடு தேவா..." என்று அவர் அவனை அதட்ட... அவரது பேச்சை மறுக்க முடியாமல் அவன் வருணிதா கழுத்தில் வைர அட்டிகையை அணிவித்தான்...

அவன் தயங்கியதிலும் ஒரு அர்த்தம் இருந்தது... இது வழி வழியாய் பார்வதியின் அன்னை வீட்டில் பெண் பிள்ளைக்கு சீராய் கொடுப்பது... பார்வதி தனது பிறந்த வீட்டு சீராக இந்த வைர நகையை சுஜானாவிற்காக எடுத்து வைத்து இருந்தார்...

எத்தனையோ கஷ்டங்கள் வந்த போதும் அதை விற்க நினைத்தது இல்லை... அப்படிப்பட்ட பரம்பரை நகையை வருணிதாவிற்கு அவர் கொடுக்கவும் அவனுக்கு என்னவோ போலாகிவிட்டது... தனது வருங்கால மனைவிக்கு அதை கொடுத்தது அவனுக்கு சந்தோசம் தான் என்றாலும் அந்த நகையின் பின்னே இருக்கும் தாயின் சென்டிமென்ட் அறிந்ததால் அவனுக்கு வருத்தமாக இருந்தது... தங்கைக்கு இது போல் ஒரு வைர நகையை

வாங்கி கொடுக்க வேண்டும் என்று அந்த கணம் அவன் முடிவு எடுத்தான்…

பத்மா ஒரு பார்வையில் அது நல்ல ஜாதி வைரம் என்பதை கண்டு கொண்டார்… வியப்பாய் பார்வதியை பார்த்தவர் பார்வையில் சிறிது மரியாதை வந்தது… இதுவரை அவர் மனதில் இருந்த சிறு மனத்தாங்கலும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி மறைந்தது…

அதை தேவானந்த் கண்டு கொண்டான்… அதில் மனம் மகிழ்ந்து போனவனால் அன்னையின் சமயோஜித புத்தியை மனதிற்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை…

அந்த இடத்தில் பணத்தின் அருமையை அவன் உணராவிட்டாலும் அவனது அன்னை நன்கு உணர்ந்து இருந்தார்…

உறையும்…

## WU

வருணிதாவை தேவானந்த் வீட்டினர் பெண் பார்த்துவிட்டு சென்ற பின் அடுத்த மாதத்தில் ஒரு நல்ல நாளில் திருமணத்திற்கான முகூர்த்தநாள் குறிக்கப்பட்டது...

திருமணம் நடத்தும் பொறுப்பை தேவானந்த் வீட்டினர் ஏற்று கொண்டனர்...

அந்த ஒரு மாதமும் வருணிதாவை வேலைக்கு போக வேண்டாம் என்று பத்மா தடுத்துவிட்டார்... அதனால் அவள் தேவானந்த்துடன் அலைப்பேசியில் காதலை வளர்த்தாள்... அர்த்தமற்ற பேச்சுக்களும், சிரிப்புகளும் அவர்களுடைய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி வண்ணமயமாக்கியது...

திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன் பார்வதி மகனிடம், "தேவா... இன்னைக்கு போய் நாம கார் புக் பண்ணிட்டு வந்துடலாம்..." என்ற அன்னையை அதிசயமாக பார்த்தான் அவன்...

அவர்கள் நிலைக்கு கார் ஒன்றும் பெரிய விசயம் இல்லை தான்... ஆனால் அதை இத்தனை நாள் மறுத்து வந்த அன்னை இப்போது இப்படி பேசுவது கண்டு அவனுக்கு பெருத்த ஆச்சரியமாக இருந்தது...

"அம்மா... நீங்களா இப்படி சொல்றது...?"

"அதுக்கில்லை தேவா... மருமக பெரிய இடத்து பொண்ணு... எங்கேயும் கார்ல போய் வந்து பழக்கப்பட்டவ... அவளை பஸ்ல கூட்டிட்டு போய் சங்கடப்படுத்த முடியுமா... அப்படி வெளியில் அவளை கூட்டிட்டு போகணும்னா கால் டாக்ஸி புக் பண்ணணும்... அதுக்கு எப்படியும் ஒரு தொகை கொடுக்க வேண்டி வரும்... அது போக நீயும் உன் மாமனார் வீட்டுக்கு அடிக்கடி போகணும்... அப்படியே அவங்க சொந்த பந்தங்கள் வீட்டு விசேசத்துக்கு போக வேண்டிய சூழ்நிலை ஏற்படும்..." என்றவர் மகனை கனிவோடு பார்த்து,

"அந்த மாதிரி நேரத்தில் உன் கௌரவம் காப்பாத்தப்படணும் தேவா... பணத்தை சேர்த்து வைக்கணும் தான்... இல்லைன்னு சொல்லலை... அதே போல் நாலு பேர் மெச்சுர மாதிரி வாழ்றதுக்கும் பணத்தை செலவளிக்கிறதும் அவசியம் தான்..."

"ஆனா... அம்மா... கல்யாணத்துக்கு சுஜிக்கு ஒரு வைர நெக்லஸ் வாங்கலாம்ன்னு இருந்தேன்..." என்று தயங்கிய மகனை பார்த்து சிரித்தவர்,

"டேய்... அவ இப்ப தான் டென்த் படிக்கிறா... அவ காலேஜ் போய் படிச்சு முடிச்சு வேலைக்கு போனதுக்கு அப்புறம் தான் கல்யாணம்... அதுக்குள்ள நீ நினைச்சதை வாங்கிரலாம்..." அவர் மகனை சமாதானம் செய்தார்...

"தேவா... உங்க அம்மா மனசு மாறுவதுக்கு முன்னாடி காரை போய் புக் பண்ணிடலாம்..." சிரித்து கொண்டே கூறிய சிவநேசன் வேண்டுமென்றே மகனை அவசரப்படுத்தினார்...

அன்றே போய் எல்லோர் மனதுக்கும் பிடித்த மாதிரி அவர்களது வசதிக்கேற்ப ஒரு காரை வாங்கினர்...

அதன் பின் பார்வதி திருமணத்திற்காக செய்த ஒவ்வொரு விசயமும் பெண் வீட்டில் மகனின் மரியாதையை முன்னிறுத்தியே இருந்தது... அவரது ஒற்றை மகனை மற்றவர் யாரும் இளக்காரமாய் பார்த்துவிட கூடாதே என்று சின்ன சின்ன விசயத்திலும் கவனத்துடன் நடந்து கொண்டார்... ஏனெனில் அன்று வருணிதாவின் உறவினர்களின் ஏளனமான பார்வையை அவர் மறக்கவில்லை...

அதே போல் பத்மாவும் மகளுக்கு தேவையானவற்றை தேவைக்கு அதிகமாய் வாங்கினார்... வருணிதா கூட சலித்து கொண்டாள்...

"அம்மா... எதுக்கு இவ்வளவு நகைகள், பாத்திரங்கள் சீர் எல்லாம்... தேவ் இதை எல்லாம் என் கிட்ட எதிர்பார்க்க

மாட்டார்..."

"மாப்பிள்ளை எதிர்பார்க்க மாட்டாருன்னு எனக்கும் தெரியும்... ஆனா அவங்க வீட்டு ஆளுங்க எதிர்பார்ப்பாங்க... நம்ம தரத்துக்கு நாம சீர் செஞ்சா தான் நமக்கும் கௌரவம்..." என்றவரை பார்த்து,

"உங்களை மாதிரி ஆளுங்களால தான் வரதட்சணை இன்னும் நம்ம நாட்டை விட்டு போகாம இருக்கு..." என்று கோபம் கொண்டாள் அவள்...

"அப்படியே இருந்துட்டு போகட்டும்... இதுக்கே நீ இப்படி சொன்னா எப்படி... இதே இது நீ நம்ம சாதி சனத்தில் கல்யாணம் பண்ணி இருந்தேன்னு வையி... இதை விட அதிகமா சீர் செஞ்சு இருப்போம்... இது எல்லாம் நம்ம சமூகத்தில் கால காலமாய் நடக்கிற விசயம்..."

போகிற போக்கில் பத்மா சுருக்கென்று மகளை வார்த்தையால் குத்தி காண்பித்து விட்டார்... அதை வேண்டும் என்று அவரும் சொல்லவில்லை... பேச்சோடு பேச்சாக சரளமாக வந்துவிட்டது...

ஆனால் அந்த வார்த்தைகள் வருணிதாவின் மனதில் ஆழமாய் பதிந்தது...

'ஏன் என் தேவ்க்கு என்ன குறைச்சல்...? அவருக்குன்னா மட்டும் சீர் குறைய செய்வாங்களாமா... இதே இது இவங்க பார்க்கிற மாப்பிள்ளைக்கு அள்ளி அள்ளி கொடுப்பாங்களாக்கும்... நாளைக்கு சுகனோட மாப்பிள்ளைக்கு நீங்க நினைச்ச மாதிரி சீர் செய்யுங்களேன் யார் வேண்டாம்ன்னா... என் தேவ் அதை விட நிறைய சம்பாதிச்சு என்னை நல்லா வச்சிக்குவாரு...' மனதில் கோபமாய் நினைத்தவள் வெளியில் ஒன்றும் காட்டி கொள்ளாது அமைதியாய் இருந்துவிட்டாள்...

அழகு தேவதையாய் தன்னருகில் அமர்ந்து இருந்த காதலியின் கழுத்தில் மங்கல நாணை பூட்டி மனைவியாக்கி கொண்ட தேவானந்த் உள்ளத்தில் ஏற்பட்ட

நிம்மதி, நிறைவை சொல்ல வார்த்தைகள் கிடையாது... அதே போன்ற ஒரு மனநிலையில் தான் அவளும் இருந்தாள்... இருவர் மனதிலும் மட்டற்ற மகிழ்ச்சி நிரம்ப அந்த கணத்தை ரசித்து உள்வாங்கி கொண்டனர்...

இருவரது பெற்றோரும் மணமக்களை புன்னகை முகத்துடன் ஆசிர்வதித்த போதும் அந்த பெற்றோர் மனதில் ஒருவித வெறுமை, ஏமாற்றம், கசப்பு எழுவதை தவிர்க்க முடியவில்லை... ஆனாலும் தங்கள் மக்களுக்காக அதை மறைத்து கொண்டு வெளியில் போலியாய் சிரித்து வைத்தனர்...

வெள்ளை நிற ஆடையில் ஒரு சிறிய கரும்புள்ளி பட்டது போல், இந்த காதல் பெற்றோர் மனதில் உயர்வாய் நினைத்து இருந்த பிள்ளைகளின் மேல் இருந்த நம்பிக்கையில் சிறிது இறக்கத்தை உண்டாக்கியது... இது இயற்கையும் கூட...

காதலில் இரு மனங்கள் மட்டுமே இணைகிறது... ஆனால் காதல் திருமணத்தில் இரு வேறுப்பட்ட கலாச்சார பின்னணி கொண்ட இரு குடும்பங்கள் இணைகிறது...

திருமண மண்டபத்தில் இருவீட்டார் உறவினர்களும் கூடி இருந்த போதும் வருணிதாவின் உறவினர்கள் இருந்த இடத்தை விட்டு அசையாமல் யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்து இருந்தனர்... அங்கு ஓடியாடி வேலை செய்தது எல்லாம் தேவானந்த் வீட்டினர் தான்...

இதை எல்லாம் பார்வதி கவனித்து கொண்டு தான் இருந்தார்... ஆனாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாமல் இன்முகத்துடன் அனைவரையும் உபசரித்து கொண்டு இருந்தார்... அவர் நினைத்து இருந்தால் மாப்பிள்ளையின் அம்மா என்ற செருக்கில் வருணிதாவின் வீட்டினரின் கண்ணில் விரலை விட்டு ஆட்டி இருக்கலாம்... ஆனால் அதை எல்லாம் செய்ய அவர் பிரியப்படவில்லை... அதனால் பாதிக்கப்பட போவது தன் மகனின் நிம்மதி என்பதால் அமைதி காத்தார்...

திருமணத்திற்கு கிரிதரன் மனைவியுடன் வந்து மணமக்களை மனமார ஆசிர்வதித்தார்... முரளிதரன் துபாயில் ஒரு கட்டுமான வேலையில் பிசியாக இருப்பதால் வர முடியவில்லை என்று தெரிவித்தார்... நண்பன் நேரில் வந்ததே போதுமானதாய் இருந்தது திருவேங்கடத்திற்கு...

"இது உன் ரெண்டாவது பொண்ணு சுகன்யா தானே..." மணவறையில் நின்று இருந்த அவரது சின்ன மகளை பார்த்து கேட்ட கிரிதரனிடம்,

"ஆமாம் கிரி..." சந்தோசமாய் சொன்னார் அவர்...

கிரிதரன் தன் மனைவியை அர்த்தத்துடன் பார்க்க, அதை புரிந்தார் போன்று அவரும் ஆமோதித்து புன்னகை செய்தார்... அதை கண்ட திருவேங்கடத்திற்கு மனதில் சந்தோசமாய் இருந்தது... ஒரு மகளின் திருமணம் வருத்தமுற செய்தாலும் இன்னொரு மகளின் திருமணம் மகிழ்வை கொடுக்கும் என்று உறுதியாய் எண்ணினார்...

மணமக்கள் இருவரும் மணமகனின் வீட்டிற்கு சென்றனர்... அவர்களோடு வருணிதாவின் பெற்றோர், உடன்பிறந்தோரை தவிர மற்ற உறவினர்கள் யாரும் வரவில்லை... அவ்வளவு நேரம் கனவுலகத்தில் சஞ்சரித்து கொண்டு இருந்த வருணிதா அப்போது தான் அதை கவனித்தாள்... உடனே மனமும், முகமும் வருத்தத்தில் சோர்வுற்றது...

காரில் வரும் போது அவளது முகச்சுணக்கத்தை கண்டு கொண்ட தேவானந்த் மனைவியிடம், "என்ன பேபி... ஒரு மாதிரியா இருக்க...? உடம்பு ஏதும் சரியில்லையா....?" அவள் புறம் சரிந்து அவளது காதோரமாய் கிசுகிசுத்தவனின் குரலில் அவளது அத்தனை நேர மனச்சங்கடமும் சொல்லாமல் கொள்ளாமல் பறந்து ஓடியது...

அவனது மீசை முடி அவளது காதோரம் உராய்ந்ததில் புது மணப்பெண்ணாய் கிறங்கி தவித்தாள்...

'ஒண்ணும் இல்லை...' என்பது போல் தலையசைத்தவளின் கையை பற்றியவன்,

"ஒண்ணுமே இல்லையா... நான் என்ன என்னவோ நினைச்சேனே..." என்று கண்சிமிட்டி சிரித்தவனின் சிரிப்பில் மயங்கியவள் மனதில் அந்த கணம் அவனது காதல் மட்டுமே நிற்க மற்ற விசயங்கள் பின்னுக்கு தள்ளப்பட்டது...

ஆரத்தி சுற்றி மணமக்கள் வீட்டினுள் அழைத்து செல்லப்பட்டனர்...

எளிமையாய் தேவைக்கேற்ற பொருட்களுடன் வெகு சுத்தமாக, நாகரீகமாக, நவீனமாக இருந்த தேவானந்த்தின் வீடு வருணிதாவிற்கு ரொம்ப பிடித்துவிட்டது...

பூஜையறையில் விளக்கேற்றிவிட்டு வந்தவளை உறவினர் பெண்கள் சூழ்ந்து கொண்டு பேச ஆரம்பித்தனர்...

தேவானந்த் ஆண் உறவினர்களுடன் அமர்ந்து பேசி கொண்டு இருந்தான்... ஆனால் அவ்வப்போது அவனது கண்கள் தன்னவளை ஆர்வத்துடன் விழுங்கி விடுவது போல் பார்த்து வைத்தது...

அங்கு மதிய விருந்து முடிந்ததும் திருவேங்கடம் சிவநேசனிடம், "வருணியையும் மாப்பிள்ளையையும் எங்க வீட்டுக்கு அழைச்சிட்டு போறோம்..."

சென்னையில் திருமணம் என்று முடிவான உடனேயே திருவேங்கடம் அங்கு ஒரு வீட்டை வாங்கி போட்டு விட்டார்... திருமணம் முடிந்து நடக்கும் சடங்குக்காக அங்கிருந்து திருநெல்வேலி வருவது சாத்தியம் இல்லை என்று நினைத்து தான் அவர் அந்த வீட்டை வாங்கினார்... இனி மேல் மகளை பார்ப்பதற்கு அடிக்கடி சென்னை செல்ல வர வேண்டி இருக்கும் என்ற யோசனையும் கூட சேர்ந்து கொண்டது...

"தாராளமா..." என்ற சிவநேசன் மனைவியை அழைத்தார்...

அங்கிருந்த உறவினர்களிடம் சொல்லி கொண்டு மணமக்கள் அவளது வீட்டிற்கு கிளம்பினர்... உறவினர்களும் அவர்களை தங்களது வீட்டிற்கு விருந்துக்கு வருமாறு அழைத்தனர்...

ஒருவழியாய் எல்லோரிடமும் விடைப்பெற்று கொண்டு வருணிதாவின் வீட்டிற்கு வரும் போது மாலையாகி இருந்தது... வருணிதாவின் பெரியம்மா தான் ஆரத்தி சுற்றி வரவேற்றார்... அவரது முகத்தில் மருந்துக்கு கூட சிரிப்பில்லை... முகத்தை அந்தளவுக்கு இறுக்கமாய் வைத்து இருந்தார்...

வருணிதா சங்கடத்துடன் கணவனை பார்த்தாள்... அவன் எப்போதும் போல் சிரித்த முகத்துடன் நின்று இருந்தான்... அதில் அவள் நிம்மதி அடைந்தாள்...

இரவு மணமக்களை அவர்களது அறையில் விட்டு விட்டு அவனது பெற்றோர் தங்களது வீட்டிற்கு சென்றனர்...

பூட்டிய அறையில் மலர்களின் நறுமணம் மனதை மயக்க ஏற்கெனவே ஒருவர் இடத்தில் ஒருவர் மயங்கி இருந்த நெஞ்சங்கள் இரண்டும் இன்னமும் மயங்கி உருகியது...

பெண்ணவள் மயங்கி தயங்கி வெட்கம் கொண்டு விலகி நிற்க அவனின் கரங்கள் அதற்கு மேல் தாங்க முடியாததாய்,

"பேபி..." என்று தாபத்துடன் அணைத்தது...

அவனின் தாபம் உணர்ந்த அவன் மனைவி அவனின் காதலுக்காக நாணத்தை துறந்து அவனோடு ஒன்றினாள்...

விடியாத இரவாய் அன்றைய இரவு அமைய வேண்டும் என்று இருவருமே விரும்பினர்... அந்தளவிற்கு இருவரின் தேடலும் விடிய விடிய முற்றுப் பெறாமல் விடிந்த பின்னும் மீண்டும் புதிதாய் தொடங்கியது... இல்வாழ்க்கையின் இனிமையை ஒவ்வொரு ஒவ்வொரு துளியாய் ரசித்து ருசித்தனர்...

குளித்து விட்டு அறையை விட்டு வெளியில் வந்த வருணிதாவின் முகம் கணவனின் காதலை எண்ணி செந்தாமரையாய் சிவந்து இருந்தது... முகம் எல்லாம் பூரிக்க உதட்டில் நிறைந்த புன்னகையுடன் அவள் மாடிப்படியில் இருந்து இறங்கி வந்தாள்...

அப்போது தந்தையும் பெரியதந்தையும் பேசுவது கேட்டு அவளது கால்கள் அப்படியே நின்றுவிட்டது...

"எப்படி விமர்சையா நடந்து இருக்க வேண்டிய கல்யாணம் இது... இப்படி ஏதோ ஒரு மூலையில் அட்ரஸ் தெரியாத மண்டபத்தில் ஏழை வீட்டு கல்யாணம் போல் நடந்து முடிந்ததை நினைச்சா மனசு எரியுது வேங்கடம்..." பெரியப்பாவின் வெறுப்பான குரலில் அவளுக்கு எரிச்சல் வந்தது...

அப்படி ஒன்றும் தேவானந்த்தின் வீட்டினர் சாதாரணமாய் இந்த திருமணத்தை நடத்திவிடவில்லை... நல்ல ஆடம்பரமாய் தான் நடத்தினர்... என்ன ஒன்று அவளது பெரியப்பா மக்களின் பிரமாண்டமான திருமணத்தோடு ஒப்பிடும் போது இது சற்று எளிமையான திருமணம் அவ்வளவு தான்... அதற்காக அவர் கேவலமாக பேசும் அளவுக்கு மோசமாகவும் இந்த திருமணம் நடந்துவிடவில்லை...

"என்ன செய்றதுண்ணா... அவளுக்கு பிடிச்சிருக்கு... நாம என்ன செய்ய முடியும்...?" என்று பெருமூச்சுவிட்டார் திருவேங்கடம்...

மகளின் காதல் திருமணத்திற்கு சம்மதித்த போதும் அவரது மனதில் இருந்த ஏமாற்றத்தை அவரால் தவிர்க்க இயலவில்லை...

தந்தையின் விட்டேற்றியான வார்த்தைகள் அவளது மனதை கொன்றது... கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நின்றது...

"இதுக்கு நாமளே இந்த கல்யாணத்தை நடத்தி இருக்கலாம்ண்ணா..." திருவேங்கடம் தனது சகோதரனிடம் கூறினார்...

"எதுக்கு நடத்தணும் வேங்கடம்...? நம்ம பேச்சை கேட்காம அவ காதலிப்பா... அதுக்கு ஒரு வார்த்தை நாம எதிர்த்து பேசாம கல்யாணம் பண்ணி வைக்கணுமா...? என்ன நினைச்சிக்கிட்டு இருக்கா உன் மகள்... இதில் இந்த கல்யாணத்தை வேறு நடத்தி வச்சு கெட்ட பெயர் வாங்கணுமாக்கும்... இந்த மாதிரி அவ போக்குல விட்டாத்தான் அவளா கல்யாணம் பண்ணிக்கிட்டா... மறுத்தா ஓடி போய் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னா... அதான் அவளோட காதலுக்கு சரின்னு சொன்னோம்ன்னு இப்போ ஊர்ல போய் ஏதோ ஒரு கதை சொல்லி சமாளிக்கலாம்... இல்லைன்னா நம்ம மானம் கப்பலேறும்..." என்று அவளை திட்டிய பெரியப்பா,

"வேங்கடம்... அதான் கல்யாணம் பண்ணி கொடுத்தாச்சு இல்ல... இனியாவது உன் மகளை கொஞ்சம் தள்ளி தூர நிறுத்து... அது தான் உனக்கு நல்லது... அப்போ தான் சுகன்யாவுக்கு நல்ல சம்பந்தம் வரும்..." அறிவுரை கூறினார் அவர்...

"நீங்க சொல்றது சரி தான் அண்ணா... ஆனா என்ன இருந்தாலும் வருணி என் மகள் இல்லையா...? அவளை எப்படியும் போன்னு விட என்னால முடியலை... கடைசிவரைக்கும் அவளுக்கு தகப்பனா நான் இருந்து தான் ஆகணும் அண்ணா... சுகன்யாவுக்குன்னு பிறந்தவன் அவளை தேடி வருவான்... இனியா அவன் பிறக்க போறான்..."

இப்போது தந்தை பேசியது அவளுக்கு சற்று இதமாக இருந்தது... ஆனாலும் பட்ட காயம் காயம் தான்... உணர்ந்த வலி வலி தான்...

"என்னமோ போ... நாங்க ஊருக்கு கிளம்பறோம்... நீ உன் மகளை அவ புகுந்த வீட்டில் விட்டுட்டு சீக்கிரமா ஊர் வந்து சேரு..." என்று பெரியப்பா எழுந்து கொண்டார்...

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் வருணிதா தனது அறைக்கு வந்தாள்... அதற்குள் எழுந்து குளித்து முடித்து கண்ணாடி பார்த்து தலை சீவி கொண்டு இருந்தான் தேவானந்த்... அவளின் வரவை உணர்ந்தவன் மனதில் உல்லாசம் எழ,

"பேபி..." என்று உற்சாகமாய் அழைத்தபடி அவளருகில் வந்தவன் அவளது முகவாட்டத்தை கண்டதும் கேள்விக்குறியாய் அவளை பார்த்தான்...

பின் அவளை கட்டிலில் அமர்த்தி அவளது முகத்தை நிமிர்த்தி அவளது கண்ணோடு கண் கலந்தவன், "என்னம்மா..." என்றான் கனிவாக...

அவனது கனிவில் அவளுக்கு கண்கள் கரித்தது...

"தேவ்..." உதடுகள் துடித்தது மனதின் பாரத்தை சொல்லி அழ...

ஆனால் அவளது மனப்பாரம் அவனது மனப்பாரத்தை அல்லவா அதிகரித்துவிடும்... அவனது நிம்மதியை குலைக்க அவளது காதல் மனம் விரும்பவில்லை...

"பேபி... அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி எல்லோரையும் விட்டு பிரியறது மனசுக்கு கஷ்டமா இருக்கா..." அவள் பதில் பேசாததால் அவனாய் ஊகித்து கேட்க...

அதற்கு அவசரமாய் தலையாட்டியவள் அவனது இடுப்பில் கை கோர்த்து அவனது வயிற்றில் முகம் புதைத்து கொண்டாள்...

பணத்தை கண்டு மனதை எடை போடும் மனிதர்களை கண்டு அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது... அவளையும் அறியாது அவளது கண்களில் கண்ணீர் வழிந்து அவனது சட்டையை நனைத்தது...

அதை உணர்ந்தவனாய், "ச்சு... என்ன பேபி... இதுக்கு போய் நீ இப்படி கண் கலங்கலாமா...? நினைச்ச நேரம் அவங்களை போய் நாம பார்த்துட்டு வரலாம்... என்ன

ஓகேவா..." என்றவன் அவளது முகத்தை நிமிர்த்தி கண்களை துடைத்துவிட்டு,

"எங்கே சிரி பார்க்கலாம்..." என்று புன்னகை புரிந்தவனை புதிதாய் பார்ப்பது போல் பார்த்தாள் அவள்...

அவனது அழகும், கம்பீரமும், புன்னகை முகமும் காண காண தெவிட்டவில்லை அவளுக்கு... இத்தகையை அழகு, குணமுள்ள இவனை விடவா அழகும், குணமும் உள்ளவனை அவளுக்கு மணமகனாக பார்த்துவிட போகிறார்கள்...? என்ற கேள்வி எழுந்து உறவுகளின் உதாசீனத்தை தூசு போல் உதறச் செய்தது...

இது எல்லாத்தையும் விட தேவானந்த்தை விடவா வேறு ஒருவன் அவளை உயிருக்கு உயிராய் காதலித்து விட முடியும் என்ற எண்ணம் மனதில் எழுந்ததும், அவனது காதலில் அவளது காதல் மனம் ஃபீனிக்ஸ் பறவையாய் உயிர்த்தெழுந்தது...

மனதில் அவன் மேலிருந்த காதல் பல்கி பெருக அவனை பார்த்து மயக்கும் புன்னகை சிந்தியவளின் பார்வை மோகப் பார்வையாய் மாறியது... அவளது கரங்கள் அவனது கழுத்தை சுற்றி வளைத்து அவனது முகத்தை தனது முகத்தின் அருகில் கொண்டு வந்தது... காந்தமாய் ஈர்க்கும் அவனது விழியோடு விழி கலந்தவள் அவனை இமைக்காது பார்த்தாள்...

அவளது பார்வையில் அவன் ஒரு நொடி பேச்சிழந்தான்... காதலித்த தருணங்களில் எத்தனையோ தடவை அவள் அவனை இப்படி கண்ணிமைக்காது பார்த்து இருக்கிறாள் தான்... ஆனால் அப்போது எல்லாம் இல்லாத அளவுக்கு காதல், ஒரு உரிமை உணர்வு, மயக்கம், மோகம் எல்லாம் கலந்த கலவையாக அவளது இந்த பார்வை இருந்தது...

"என்னடி பொண்டாட்டி இந்த பார்வை பார்க்கிற...?" என்றவனது பார்வையும் கணவனது பார்வையாய் மாறி தன் மனையாளின் பார்வைக்கு கொஞ்சமும் சளைக்காது பார்த்தது...

"பொண்டாட்டி பார்வைக்கு அர்த்தம் கூட தெரியாத புருசன் உலகத்தில் நீங்க ஒருத்தர் தான்..." அவளது உரிமை பேச்சில், சரசமான வார்த்தையில் கிறங்கி போனவன்,

"ஹேய் பேபி... என்ன இந்த போடு போடுற..." என்றபடி அவள் மீது சரிந்து அவளது பார்வைக்கான அர்த்தத்தை தான் புரிந்து கொண்டதற்கு அடையாளமாய் அதை செயல்முறை விளக்கமாய் சொல்லி கொடுக்க ஆரம்பித்தான் நல்ல கணவனாய்...

"உங்களை விடவா..." அவனது கரத்தின் வேகத்தினை கண்மூடி அனுபவித்தபடி சொன்னவளை கண்டு அவன் மேலும் உற்சாகமாகி அவளோடு ஒன்றினான்...

காலை உணவுக்கு அவர்கள் இருவரும் கீழே இறங்கி வந்த போது உறவினர்கள் கிளம்பி கொண்டு இருந்தனர்... அவளது பெற்றோரிடமும், அவளிடம் விடைப்பெற்றவர்கள் தேவானந்த்தை ஒரு பொருட்டாய் நினைக்கவும் இல்லை... மதிக்கவும் இல்லை...

அவள் அவசரமாய் கணவனை திரும்பி பார்த்தாள்... அவனோ எதுவும் நடவாதவன் போல் தனது மைத்துனனிடம் பேசி சிரித்து கொண்டு இருந்தான்... கணவனின் பெருந்தன்மையான குணம் கண்டு அவளுக்கு மீண்டும் கண்கள் கலங்கியது... ஆனாலும் அதையும் மீறி அவள் மனதில் 'இவன் என் கணவன்' என்ற எண்ணம் கர்வமாய் எழுந்து நின்றது...

புது மணமக்களை விருந்திற்கு அழைக்க வேண்டும் என்ற நாகரீகம் கூட தெரியாதவர்களாய் அவர்கள் கிளம்பி சென்றனர்...

அவர்கள் சென்றதும் நேரே தன் அன்னையை தனிமையில் சந்தித்தவள் உறவினர்களின் உதாசீனத்தை அவரிடம் கூறி கோபப்பட்டாள்...

"ஏன்ம்மா இப்படி பண்றாங்க...? அப்படி எந்தவிதத்தில் தேவ் குறைஞ்சு போயிட்டார்... பணம் மட்டும் தானாம்மா உலகம்...

இங்கே மனசுக்கு இடம் கிடையாதா..." என்று படபடத்த மகளை ஆழ்ந்து பார்த்த பத்மா,

"உன் மனசு எனக்கு புரியுது வருணி... ஆனா நான் ஒண்ணு சொல்வேன்... நீ தப்பா நினைக்க கூடாது..." என்று பீடிகையுடன் ஆரம்பித்தவர்,

"வாழ்க்கையில் பணம் முக்கியம் இல்லை தான்... மனசு மட்டும் தான் முக்கியம்... ஆனா அந்த மனசு உனக்கு மட்டும் இல்லை வருணி... உன்னை இருபத்து மூணு வருசம் வளர்த்து ஆளாக்கிய எங்களுக்கும் இருக்கும்ன்னு நீ ஏன் நினைச்சு பார்க்கலை...?"

அன்னையின் வார்த்தையில் வாயடைத்து போனாள் அவள்...

"நம்ம சாதி சனத்தில் எந்தளவுக்கு பேரோட, புகழோட கௌரவமா உங்கப்பா வாழ்றாருன்னு உனக்கே தெரியும்... அந்த கௌரவத்தை காப்பாத்த நீ ஏன் முன் வரலை...? உனக்கு உன்னை பெத்தவங்க மனசு முக்கியம் இல்லை... உனக்கு உன் மனசு தான் முக்கியம்... அந்தளவுக்கு நீ சுயநலமா யோசிக்கும் போது நாங்க மட்டும் ஏண்டி சுயநலமா யோசிக்க கூடாது... பெத்த மனசு பித்து, பிள்ளை மனசு கல்லுங்கிற மாதிரி நாங்க நடந்துக்கணுமா...?" தனது மனதின் ஆதங்கத்தை கொட்டியவர் பின் மனதை தேற்றி கொண்டு,

"இங்கே பாரு... இது எல்லாம் நான் எதிர்பார்த்தது தான்... அவ்வளவு சீக்கிரம் பெரியவங்க தங்களோட கொள்கைகளை விட்டு கொடுத்திட மாட்டாங்க... நீ தான் பொறுமையா இருக்கணும்... நானும் உன் அப்பாவும் அது போல் நடந்துக்கிறோமா... இல்லைல்ல... அப்புறம் எதுக்கு கோபப்படுற...? நாங்க மாப்பிள்ளையை மரியாதை குறைவா நடத்தினா நீ என்னன்னு கேள்வி கேளு... அதை விட்டுட்டு மத்தவங்க நடந்ததுக்கு எல்லாம் கேள்வி கேட்டு கோபப்படாதே..." என்று தனது மனதை தெளிவாய் மகளுக்கு எடுத்து உரைத்தவர் மறுவீட்டு சீர் எடுத்து வைக்க சென்றுவிட்டார்...

அன்னையின் வார்த்தை சாட்டையடியில் விக்கித்து போய் நின்றாள் வருணிதா…

உறையும்…

காலையில் எழுந்த தேவானந்த்திற்கு மனது மிகவும் சந்தோசமாக இருந்தது... அதற்கு காரணம் அவனது காதல் மனைவி என்கிற உண்மை மனதுக்கு புரிய அவன் உதட்டில் மந்தகாச புன்னகை வந்தமர்ந்தது...

திருமணமான இந்த இருபது நாட்களில் அவனது மனைவி அவனது ஒவ்வொரு கணத்தையும் வண்ணமயமாக்கி கொண்டு இருக்கிறாள் என்றால் அது மிகையில்லை... அந்தளவுக்கு அவனுள் அவள் ஆழமாய் இறங்கி இருந்தாள்... காதலித்த போது அவள் மீது அவனுக்கு நேசம் இருந்தது தான் இல்லை என்று சொல்லிவிட முடியாது... ஆனால் திருமணத்திற்கு பின் அந்த நேசம் பல்கி பெருகியது போல் ஒரு தோற்றம் அவனுள்...

இந்த சந்தோசமான தருணத்தில் மனைவி மடியில் உயிர் பிரிய நேர்ந்தால் கூட மகிழ்ச்சியாய் உயிர் துறப்பான்... அத்தகைய உச்சபட்ச மகிழ்ச்சியை திருமண வாழ்க்கை தந்து இருந்தது அவனுக்கு...

தனது இத்தனை மகிழ்ச்சிக்கும் காரணமான மனைவியை காண வேண்டும் என்ற ஆவல் எழ குளியலறை சென்று தன்னை சுத்தப்படுத்தி கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்... பெற்றோர் இருவரும் பூஜையறையில் பூஜையில் லயித்து இருந்தனர்... தங்கை இருந்த அறைக் கதவு சாத்தியிருந்தது...

'பரீட்சைக்கு படித்து கொண்டு இருப்பாளாக்கும்...' என்று நினைத்தபடி மனைவி இருக்கும் இடத்திற்கு விரைந்தான்...

அவன் நினைத்தது போல் சமையலறையில் தான் வருணிதா இருந்தாள்...

காலையில் தலைக்கு குளித்து ஈர துண்டை தலையில் கட்டியபடி, பருத்தி சேலையில் வெகு இயல்பாய் பாந்தமாய் சமையல் செய்து கொண்டு இருந்தவளை காண காண தெவிட்டவில்லை அவனுக்கு...

சத்தம் செய்யாமல் அவள் பின்புறம் வந்து நின்றவன் பின்னால் இருந்து அவளை அணைத்து அவளது பின்னங்கழுத்தில் முகம் புதைத்தான்...

அவனது செய்கையில் பதறி விலகிய அவனது தர்மபத்தினி, "ஐயோ என்ன இது தேவ்...? யாராவது வந்திர போறாங்க..." என்றபடி சமையலறை வாயிலை பார்த்தாள் அவசரமாய்...

"வது பேபி... நீ என்ன சோப் போடுறன்னு தெரிஞ்சிக்கத் தான் பக்கத்தில் வந்தேன்... சாண்டல் சோப்பா, இல்லை லக்ஸ் சோப்பா...?" என்று கேட்டவனை போலி கோபத்துடன் முறைத்தவளை தனது இரு கையால் வளைத்தவன்,

"அதை நான் இன்னும் கண்டு பிடிக்கலை... இரு கண்டுபிடிச்சு சொல்றேன்..." என்றவன் மீண்டும் தனது பணியை செவ்வனே தொடர்ந்தான்...

"தேவ்... வீட்டில் சுஜி இருக்கும் போது இப்படி நடந்துக்கிறது தப்பு... ப்ளீஸ்... புரிஞ்சிக்கோங்க..." தங்கையை சொன்னதும் அவளை விட்டவன்,

"சுஜி பேர் சொன்னதால தப்பிச்ச..." என்றவன் அங்கிருந்த மேடையில் ஏறி அமர்ந்தான் சமர்த்தாய்...

அவனுக்கு காபி கலந்து கொடுத்துவிட்டு காய் நறுக்கி கொண்டு இருந்தவளை அவனது கண்கள் ஆதுரத்துடன் பார்த்தது...

அவளது கையை மெல்ல வருடியபடி, "வேலை செய்ய உனக்கு ஒண்ணும் கஷ்டமா இல்லையே...?" என்று கேட்டவனின் வார்த்தையில் மட்டுமல்ல முகத்திலும் அத்தனை வருத்தம் இருந்தது...

"நம்ம வீட்டு வேலையை செய்ய ஏன் கஷ்டமா இருக்கு...?" பதிலுக்கு அவனை கேள்வி கேட்டவள், "என்னுடைய சமையலை சாப்பிட இத்தனை சோதனை எலிகள் மாட்டி இருக்கும் போது எனக்கு என்ன கவலை... கவலைப்பட வேண்டியது என் சமையலை சகிச்சிட்டு சாப்பிடற நீங்க

எல்லோரும் தான்..." என்று முத்துப்பல் தெரிய சிரித்தவளை அவன் இமைக்காது பார்த்தான்...

அவனுக்கு தெரியும் அவளது வீட்டில் அவள் ஒரு இளவரசி என்று... எந்த ஒரு வேலையும் செய்து பழக்கம் இல்லாதவள் என்பதை ஆரம்பத்தில் அவனது வீட்டில் அவள் வேலை செய்யும் போது அவள் திணறிய திணறலை கண்டே அவன் உணர்ந்து கொண்டான்...

அன்னையிடம் அவன் எவ்வளவோ வாதாடி பார்த்தான்... ஆனால் பார்வதியோ அவன் பேச்சை கேட்க மறுத்துவிட்டார்...

"அதான் வீட்டை சுத்தம் பண்ண, பாத்திரம் கழுவ, துணி துவைக்க ஆள் இருக்குதே தேவா... சமையல் வேலை, மத்த வேலைகளை வீட்டு ஆளுங்க தான் செய்யணும்ப்பா..."

அவர் சொன்னது போல் வீட்டு வேலைக்கு ஆள் இருந்தாலும் வேலைக்காரி ஒரு பொழுது மட்டுமே வருவாள்... மற்ற நேரங்களில் வருணிதா தான் செய்ய வேண்டி வரும்... பார்வதியும் உடன் வேலை செய்வார் தான்... இல்லை என்று சொல்லிவிட முடியாது...

ஆனாலும் அலுவலகத்திலும் வேலை செய்து, வீட்டிலும் வேலை செய்து அதிகப்படி வேலையால் இரவு வருணிதா அறைக்கு வரும் போது மிகவும் சோர்ந்து போய்விடுவாள்...

ஆனால் அந்த சோர்வையும் மீறி கணவனது கண்களில் தெரியும் ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பில் மறுபேச்சு பேசாமல் அவனது கரங்களில் அடங்கி விடுவாள்...

காலையில் எழும் போது அவனது புத்தியில் உறைக்கும் அவளது வேலைப்பளு, இரவில் அவனது நினைவில் சற்றும் இருக்காது... இருக்காது என்பதை விட புத்தம் புது மனைவியை அருகில் வைத்து கொண்டு பிரம்மச்சரியம் காக்க அவனுக்கு மனம் வரவில்லை... அறிவை மனம் வென்றது அங்கே...

"காபி எப்படி இருந்தது...?" அவன் காபி குடித்து முடித்ததும் கோப்பையை வாங்கியவள் கண்கள் மின்ன ஆவலுடன் கேட்க...

அவனுக்காக அவனுடைய காதலுக்காக எல்லாவற்றையும் அனுசரித்து போகும் மனைவியை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது... மனதில் எழுந்த காதலுடன் அவளது கையை பிடித்து இழுத்து தன் முன் நிறுத்தியவன் அவளது முன்னுச்சியில் இதழ் பதித்து,

"உன்னை போல் தித்திப்பாய் இருந்தது பேபி..." அவனது கிசுகிசுப்பான குரலில் அவளது மனதில் மட்டுமல்ல தேகம் முழுவதும் மகிழ்ச்சியில் சிலிர்த்தது...

"உண்மையாவா...?" கண்கள் விரிய கேட்டவளை பார்த்தவனுக்கு சிரிப்பு வந்தது...

திருமணமான நாள் முதலாய் அவள் கேட்கும் அதே கேள்வி... அவனும் எப்போதும் சொல்லும் பதிலை சொன்னான் இப்போதும்...

"உண்மையா..." சமையல் மேடையில் இருந்து இறங்கி அவளது நெற்றியில் விளையாட்டாய் முட்டியபடி சொல்லியவன்,

"நீ நகரு... நான் காய் வெட்டி தர்றேன்..." என்றவன் அவளிடம் இருந்து கத்தியை வாங்கி லாவகமாய் கேரட்டின் தோலை சீவ ஆரம்பித்தான்...

அவனது செய்கையை ஆர்வமாய் பார்த்தபடி நின்றவளை கண்டு கண்சிமிட்டியவன், "மாமாவை பார்த்து ரசித்தது போதும்... முதல்ல சமையலை முடி... இன்னைக்கு சீக்கிரம் வேலைக்கு போகணும்..." என்றவனை கண்டு முகம் சிவந்தவள் அடுப்பில் இருப்பதை கிண்டும் பாவனையில் தலையை குனிந்து கொண்டாள்...

தேவானந்த் அவளுக்கு சிறிய சிறிய உதவிகளை செய்துவிட்டு குளிக்க சென்று விட, சமையலை முடித்துவிட்டு பாத்திரங்களை எல்லாம் கழுவ

போடுவதற்காக எடுத்து வைக்க ஆரம்பித்தவள் கண்ணில் கணவன் குடித்த காபி கோப்பை பட்டது...

'உண்மையில் நான் போடற காபி அவ்வளவு டேஸ்ட்டா இருக்கா...?' எப்போதும் எழும் சந்தேகம் இன்றும் எழ அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்ய நினைத்தவள் கோப்பையில் மீதம் இருந்த ஒரு சொட்டு காபி துளியை தனது வாயில் சரித்தாள்...

டிகாசன் அதிகமாய், சர்க்கரை குறைவாய் வாயில் வைக்க முடியாதபடி கசந்தது அவள் போட்ட காபி...

'ஐயோ... இது என்ன இப்படி கசக்குது... நல்லவேளை எனக்கு காபி குடிக்கிற பழக்கம் இல்லை... இல்லை நான் போடுற காபி எனக்கே விசமா போயிருக்கும்...' என்று எண்ணியவளின் மனதை கணவனின் சகிப்புத்தன்மையின் பின்னால் இருந்த காதல் வெகுவாய் இனிக்க செய்தது காபியின் கசப்பையும் மீறி...

மனதில் மகிழ்ச்சியோடு காதலும் கலந்து கட்டி ஆனந்தத் தாண்டவமாட கணவனை காண அறைக்கு ஓடினாள்... அங்கு அவனோ அலுவலகத்துக்கு கிளம்பி கொண்டு இருந்தான்...

"தேவ்..." என்றபடி அவன் முன்னால் வந்து நின்றவளை கண்டு,

"தேவ்க்கு என்ன வச்சிருக்க பேபி..." இமை சிமிட்டியவனை கண்டு ஒன்றும் பேசாது இறுக அணைத்து கொண்டாள் அவள்...

அவளது அந்த செயலில் வியப்புடன் கூடிய மகிழ்வு அவன் மனதில் முகிழ, அவனது கரங்களும் அவளை அணைத்து அடுத்த கட்டத்திற்கு அச்சாரம் போட்டது...

"ப்ளீஸ் தேவ்... வேற எதுவும் வேண்டாம்..." என்றவள் அவனது நெஞ்சில் சுகமாய் சாய்ந்து கண்மூடி அவனது அருகாமையை ரசித்து அனுபவித்தாள்...

காமம் இல்லா அணைப்பும் சில நேரங்களில் அழகு தான்... அது மௌனமாய் ரசிக்கக் கூடிய நிகழ்வு மட்டுமல்ல மனதுக்கு பிடித்தமானதும் கூட... அவள் சொன்னது போல் அந்த நேரத்தை அவனும் ரசித்தான்...

பின் அவளே அவனை விட்டு விலகியவள், "நீங்க போய் சாப்பிடுங்க... நான் ஐஞ்சு நிமிசத்தில் கிளம்பி வர்றேன்..." என்றவள் கணவனின் கண்ணில் தோன்றிய ஆசையை நிராசையாக்காது அவனது உயரத்திற்கு எம்பி அவனது கன்னத்தில் அழுத்தமாய் இதழ் பதித்து விலகினாள்...

அதில் மனம் கிறங்கியவன், "இப்போ நேரமாச்சுன்னு உன்னை விடறேன்..." என்று அவன் சொன்ன விதத்தில் அவளுள்ளும் ஒருவித மயக்கம் தோன்றியது...

காதல் தான் எத்தகைய சக்தி கொண்டது... எங்கோ பிறந்து வளர்ந்த இருவரை காதலிக்க வைத்து திருமண பந்தத்தில் இணைய வைத்து இருக்கிறது...

அவளது கண்ணில் தெரிந்த மயக்கத்தில் ஆழ்ந்து போக நினைத்தவனுக்கு கடமை நினைவுக்கு வர, "சீக்கிரம் கிளம்பி வா..." என்றபடி அறையை விட்டு வெளியேறினான்...

அவன் சென்றதை பார்த்தபடி ஒரு நிமிடம் நின்றவளுக்கு மனம் நிறைவாய் இருந்தது...

வரவேற்பறையில் கையில் பேனா மற்றும் நோட்டு புத்தகத்துடன் அமர்ந்து சீரியசாய் எதையோ எழுதி கொண்டு இருந்த அன்னையின் அருகில் வந்து அமர்ந்தான் தேவானந்த்...

அவனின் வரவை உணர்ந்து திரும்பி பார்த்த பார்வதி, "சாப்பிட்டியா தேவா...?"

"இன்னும் இல்லைம்மா... நீங்க என்ன சீரியசா எதையோ எழுதிக்கிட்டு இருக்கீங்க...?"

"கல்யாண செலவுகளை தான் எழுதிக்கிட்டு இருக்கேன்..." என்றவர் பின் கவலை தோய்ந்த முகத்துடன்,

"தேவா... சேவிங்ஸ்ல இருந்த பணத்தில் அளவுக்கதிகமா எடுத்து செலவு பண்ணிட்டோம்... இதை எப்படி திரும்ப வைக்கிறதுன்னு தான் தெரியலை... உன் கிட்ட பணம் ஏதும் இருக்காப்பா..."

அவர் மகனிடம் கேட்டு கொண்டு இருக்கும் போதே வருணிதா அங்கே வந்தாள்... மாமியாரின் வார்த்தைகள் அவளது காதிலும் விழுந்தது... அவரது கவலை அவளையும் கவலை கொள்ளச் செய்தது...

இதற்கு கணவன் என்ன சொல்ல போகிறான் என்று அவனை பார்த்தாள்... அவள் பார்ப்பதற்கும் ஒரு காரணம் இருந்தது... அவன் தேனிலவுக்கு என்று ஒரு தொகையை ஒதுக்கி வைத்து இருந்தான்...

"அம்மா... அது வந்து..." என்று இழுத்த மகனை கூர்மையாய் பார்த்த பார்வதி,

"என்ன தேவா...?"

"ஹனிமூனுக்காக கொஞ்சம் பணம் ஒதுக்கி வச்சிருக்கேன்... அது மட்டும் தான் என் கையில் இருக்கு..."

"ஓ..." என்றவர் மேலே பேசவில்லை... அதற்கு மேல் மகனிடம் கேட்பது இங்கிதம் இல்லை என்று அமைதியாகி விட்டார்...

ஆனால் வருணிதா கணவனிடம் கண்ணால் ஜாடை செய்தாள் அந்த பணத்தை மாமியாரிடம் கொடுக்க சொல்லி...

மனைவி புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வதை கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது... ஒன்றும் பேசாமல் எழுந்து உணவு மேசையை நோக்கி நடந்தான்... அவனின் பின்னேயே சென்ற வருணிதா,

"இப்போ எதுக்கு ஹனிமூன் எல்லாம்... ஆபிசில் நமக்கு வேலை தான் தலைக்கு மேலே இருக்கே தேவ்... இப்போ அந்த பணத்தை எடுத்து கொடுங்க... பிறகு போகும் போது பார்த்துக்கலாம்..." மிக எளிதாக சொன்ன மனைவியை முறைத்து பார்த்தான் அவன்...

"புதுசா கல்யாணமான பொண்ணு மாதிரியா பேசுற நீ... என்னமோ வாழ்ந்து அனுபவிச்ச நூத்து கிழவி மாதிரி இது என்ன பேச்சு வது...? நம்ம ஹனிமூனை பத்தி நான் நிறைய கனவு வச்சிருக்கேன் பேபி... இங்கே தான் சுஜி இருக்கா, அம்மா, அப்பா இருக்காங்கன்னு விலகி விலகி போற... நமக்கே நமக்கான நேரம் எப்போடா கிடைக்கும்ன்னு நான் ஆவலா எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்... நீ என்னடான்னா... ம்ப்ச்... போ வது..." என்று சின்னப் பிள்ளை போல் படபடத்தவனை கண்டு அவளுக்கு கோபம் எழவில்லை... மாறாக சிரிப்பு வந்தது...

அக்கம் பக்கம் பார்த்து யாரும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டவள் மெல்ல அவனது தோளை ஆதரவாய் பற்றி,

"நமக்கே நமக்கான நேரம் இல்லைன்னு யார் சொன்னது...? நைட் பத்து மணிக்கு மேல நமக்கே நமக்கான நேரம் தானே... அதை யாரும் களவாட போறாங்களாம்...?" அவள் கண்சிமிட்டி புருவம் தூக்கி வினவியதில் அவனது மனக்கசப்பு அவனை விட்டு விலகி ஓடியது...

"இருந்தாலும் ஹனிமூன்..." அவன் தயங்க...

"மெதுவா போகலாம் தேவ்..."

"எப்போ குழந்தை எல்லாம் பிறந்த பிறகா...?" சட்டென்று எழுந்த கோபத்தில் சுள்ளென்று...

"அப்பப்பா காலையில் என்ன ஒரு காரம்..." என்றவள் அவனது முகத்தை கையில் தாங்கி, "என் தேவ் கூட இருக்கிற ஒவ்வொரு நொடியும் எனக்கு ஹனிமூன் தான்... ஏன்னா என்னோட ஹனி என் தேவ் தான்..." என்றவளின்

கண்ணில், வார்த்தையில் வழிந்த காதலில் கட்டுண்டவனுக்கு மேலே பேச முடியாது போனது...

உணவு முடித்து வந்தவன் அன்னையிடம், "அம்மா... நான் ஹனிமூனுக்கு வச்சிருந்த பணத்தை கொடுக்கிறேன்... அது உங்களுக்கு போதுமான்னு எனக்கு தெரியலை..."

"அது எதுக்கு தேவா... நீ வருணியை கூட்டிட்டு ஹனிமூன் போயிட்டு வாப்பா..." சங்கடப்பட்டு கொண்டே சொன்னார் பார்வதி...

இளையவர்களின் சந்தோசத்தை கெடுத்துவிட்டோமோ என்று குற்றவுணர்வு அவரை குறுகுறுக்க செய்தது...

"எங்கே... அவள் தான் ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட்டாளே... அந்த பணத்தை உங்க கிட்ட கொடுக்க சொல்லி... மேடம் சொன்னதை நான் மறுத்து பேச முடியுமா..." மனைவியை பார்த்தபடி அன்னையிடம் கேலியாய் சொன்னான் அவன்...

அவன் சொன்ன வார்த்தையில் பார்வதியின் மனம் அடிப்பட்டு போனது... மருமகளின் பரந்த மனது கண்டு அவருக்கு சற்று நிம்மதி, சந்தோசமாக இருந்தாலும், மகன் அவள் சம்மதம் சொன்ன பிறகு பணம் தருவதற்கு ஒப்பு கொண்டது அவரது தன்மானத்திற்கு பெருத்த அடியாக இருந்தது... மகனின் செயல், பேச்சு அவருக்கு பிடிக்கவில்லை என்பதை அவரது இருண்ட முகம் காட்டி கொடுத்தது...

ஆனால் மனைவியை பார்வையால் பருகி கொண்டு இருந்த தேவானந்த்தோ அதை சரியாக கவனிக்கவில்லை... கணவனது பார்வையை காதலாய் தாங்கி நின்ற வருணிதாவும் அதை கவனிக்கவில்லை....

"சரிம்மா... நாங்க கிளம்பறோம்..." என்றவன் மனைவியை அழைத்து கொண்டு இருசக்கர வாகனத்தில் பறந்துவிட்டான்...

எல்லாவற்றையும் அமைதியாய் பார்த்து கொண்டு இருந்த சிவநேசன் மனைவி அருகில் வந்து அமர்ந்தார்...

"நீ பண்ணறது தப்பு... அதை விட தப்பு இப்போ நீ நினைக்கிறது..." என்றார் மனைவியை பார்த்து...

"நான் என்ன தப்பு பண்ணினேன்... கஷ்டத்தை சொன்னேனே ஒழிய... நான் தேவா கிட்ட பணம் கேட்கலையே... அதுவும் அவன் ஆசை ஆசையாய் ஹனிமூனுக்குன்னு வச்சியிருக்கிற பணத்தை போய் நான் கேட்பேனா..." என்று அவசரமாய் மறுத்து கூறியவரை கண்டு சிவநேசனுக்கு மனதுக்குள் சற்று ஆறுதலாக இருந்தது...

தான் நினைத்தது போல் மனைவி ஒன்றும் கெட்ட மாமியாராய் நடந்து கொள்ளவில்லை என்று...

"அப்புறம் எதுக்கு முகம் ஒரு மாதிரியா இருக்கு...?"

கணவனுக்கு பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்தார் பார்வதி...

"பாரு... இங்கே பார்..." மனைவியின் முகத்தை நிமிர்த்தியவர், "என்ன விசயம் சொல்லு பாரு... உனக்காக நான் இருக்கேன்..."

கணவனின் வார்த்தையில் அவரது முகத்தில் இருந்த இருள் விலகியது...

"அது வந்து... தேவா நான் கேட்டதும் கொடுக்காம, வருணி சொன்னதும் கொடுத்தது மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு... நான் யாருக்காக இதை எல்லாம் சேர்க்கிறேன்... அவனுக்கும், சுஜிக்கும் தானே... அதை ஏன் அவன் புரிஞ்சிக்கலை...? அவ சொன்னதும் புரிஞ்சிக்கிறவன் நான் சொன்னப்போ ஏன் புரிஞ்சிக்காம போனான்... அதான் மனசுக்கு வருத்தமா இருக்கு..."

"உனக்கு மருமக மேல பொறாமையா இருக்கா...? இல்லை கோபம் வருதா...?"

"ச்சேச்சே... வருணியை நான் குறை சொல்லலை... அவளை மாதிரி அனுசரிச்சு போற குணம் இந்த காலத்தில் எந்த

பெண்ணுக்கு வரும்... நம்ம பையன் தான்..." என்று இழுத்த மனைவியை பார்த்து கனிவுடன்,

"இது தான் என் பாரு... ஒவ்வொரு விசயத்திலும் நல்லது மட்டும் தேடி கண்டுபிடிக்க பார்... அது தான் உன்னோட ஸ்பெசாலிட்டி... அதை என்னைக்கும் நீ விட்டுர கூடாது பாரு..." கணவர் தன்னை பாராட்டி பேசியதில் முகம் மலர்ந்து விட்டது அவருக்கு...

அதை கண்ட சிவநேசனுக்கும் சந்தோசமாய் இருந்தது...

"இங்கே பார் பாரு... தேவாவே இந்த பணத்தை தர்றேன்னு சொன்னாலும் நீ இதை வாங்கி இருக்க கூடாது..." என்றவர் மனைவியின் கையை பிடித்து,

"என்னோட தனிப்பட்ட சேவிங்ஸில் கொஞ்சம் பணம் இருக்கு... அதை எடுத்து இதில் போட்டு சமாளிக்கலாம்..."

கணவர் சொன்னதும் சரியென்று தலையாட்டிய பார்வதிக்கு அப்போது தான் அந்த சந்தேகம் வந்தது...

"உங்களுக்கு ஏது தனி அக்கவுண்ட்...?" சந்தேகமாய் பார்த்தார் அவர்...

"ஐயோ பாரு... அப்படி பார்க்காதேடி... நீ அப்பப்போ கைச்செலவுக்கு தரும் பணத்தை சேர்த்து வச்சிருந்தேன்..." என்று அலறிய கணவரை கண்டு பார்வதிக்கு பெருமையாய் இருந்தது...

தன்னுடைய ஆசைகளை தியாகம் செய்து குடும்பத்துக்காக உழைத்த, இன்னமும் உழைக்க நினைக்கும் கணவரை கண்டு அவரது மனம் நெகிழ்ந்தது... குடும்பத்தில் பெண்கள் மட்டும் தியாகிகள் அல்ல அநேக இல்லங்களில் ஆண்களும் தியாகிகளாக இருக்கத்தான் செய்கிறார்கள்...

பெண் தியாகியாய் இருக்கும் வீட்டில் ஆண் நிம்மதியாய் இருப்பான்... ஆண் தியாகியாய் இருக்கும் வீட்டில் பெண் சந்தோசமாய் இருப்பாள்...

சில நேரங்களில் பணம் இல்லாவிட்டாலும் புரிதலுடன் கூடிய தாம்பத்தியம் வாழ்க்கையை இனிமையானதாக மாற்றிவிடும்...

பார்வதி மகனை தேனிலவுக்கு போவதற்கு அனுமதிக்க அதில் மகிழ்ச்சி அடைந்த தேவானந்த் மனைவியிடம் அதை சொல்ல அவளோ வேண்டாம் என்று மறுத்தாள்...

"இனி தான் நமக்கு கடமைகள் அதிகம் இருக்கு தேவ்... சுஜி கல்யாணம், நம்ம குழந்தைகள் வளர்ப்பு, படிப்பு இப்படி நிறைய விசயங்கள் இருக்கு... அதனால தேவையில்லாம அனாவசியமா செலவு பண்ண வேண்டாம்..." கண்டிப்புடன் கூறியவளை அவன் முறைக்க...

அதை கண்டு கொள்ளாது அவனது முன்னுச்சி முடியை கலைத்து விட்டவள், "இது எல்லாத்தையும் விட என் புருசனை கன்ஸ்ட்ரக்சன் முதலாளி ஆக்கணும்... அது தான் என் கனவு, குறிக்கோள் எல்லாம்... அதுவரை சிக்கனம், சிக்கனம், சிக்கனம் மட்டும் தான்..."

தாய் வீட்டு சொந்தங்கள் மத்தியில் கணவனை பெரியாளாக ஆக்கி தலைநிமிரச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவளது மனதில் வைராக்கியமாய் இருந்தது... மதியாத சொந்தங்கள் மத்தியில் மதிக்கும் படி அவனது வளர்ச்சி இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்... இது எல்லாம் ஒரு நாளில் நடந்துவிடாதே... சிறு துளி பெரும் வெள்ளம் என்பது போல் அதற்கு சேமிப்பு அவசியம் என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள்...

அன்னையை போல் தனது முன்னேற்றத்தை மட்டும் யோசிக்கும் மனைவியின் பேச்சில் அவனது கோபம் வடிய அவளை கையில் அள்ளி கொண்டவன்,

"அப்ப முதலாளியோட பொண்டாட்டி யாரு பேபி...?" அவளது காதில் முணுமுணுத்தவனை கண்டு அவளது மனம் பரவசமாக,

"நிச்சயம் முதலாளி இல்லை..." என்றவளை அவன் முறைக்க...

"போதும் போதும் முறைச்சது என் முறைப்புருசா... நான் எப்பவுமே உங்களுக்கு மனைவி, உங்க குழந்தைக்கு அம்மா மட்டும் தான்..." என்று சொன்னவள் நாணத்தில் முகம் சிவக்க முகத்தை மூடி கொள்ள...

"மனைவி ஓகே... அம்மா ஆகிறது எப்போ...?" கையை அவளது முகத்தில் இருந்து விலக்கியபடி ரகசியமாய் கேட்டவனை கண்டு நமட்டு சிரிப்பு சிரித்தவள்,

"நீங்க இப்படியே பேசிட்டு இருந்தா அது இந்த ஜென்மத்தில் இல்லை..."

"ஆஹா... வது பேபி... அப்படி போட்டு தாக்கு..." என்றவன் அவளிடம் தனது அன்பு தாக்குதலை தொடங்கினான்...

அவனது அன்பில் முதலில் மூச்சு முட்டி பின் கிறங்கி தவித்தவள் பின் அவனுடன் ஒன்றினாள் மனதார...

அடுத்து வந்த நாட்கள் மகிழ்ச்சியாய் சென்றது... சுஜானாவை வருணிதாவிற்கு மிகவும் பிடித்து போனது... அந்த சின்ன பெண்ணை தன் மகள் போல் கவனித்து பார்த்து கொண்டாள்... அதை கண்டு பார்வதிக்கு மனம் சற்று நிம்மதியானது...

அன்று தேவானந்த், வருணிதா இருவருக்கும் சம்பளதினம்... இருவரும் வீட்டிற்கு வரும் வரை பார்வதிக்கு மனம் உலைச்சலாகவே இருந்தது...

இருவரும் வந்ததும் ஒன்றும் பேசாது காபி கலந்து கொடுத்தார்... அதில் எல்லாம் அவர் நல்ல மாமியார் தான்... மருமகளை எந்நேரமும் வேலை செய்ய சொல்லி முதுகு ஒடிக்கும் வில்லி மாமியார் அவரில்லை... அவளின் அலுவலக வேலை நேரத்தை அனுசரித்து மருமகளை எதிர்பார்க்காமல் அவர் வீட்டு வேலை சிலதை செய்து முடித்து விடுவார்...

ஒருவித எதிர்பார்ப்புடன் மகனையும், மருமகளையும் பார்த்தார்...

காபி குடித்து முடித்து எழுந்த வருணிதா ஒன்றும் பேசாது அறைக்குள் சென்றுவிட்டாள்... தேவானந்த்தும் அவளை பின் தொடர்ந்து சென்றுவிட்டான்...

பார்வதிக்கு முகம் தொங்கி போனது இருவரின் செய்கையில்... பேசாமல் தனது அறைக்கு சென்றுவிட்டார்....

அடுத்த பத்து நிமிடத்தில் அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்க அதில் நிமிர்ந்தவர் அங்கே முகம் கழுவி, தலை சீவி பளிச்சென்று இருந்த மருமகளை கண்டதும் திகைத்தார்...

"அத்தே... ஒரு நிமிசம் வாங்களேன்..." அவள் அழைக்க மனம் கனத்து போயிருந்தாலும் அவளது அழைப்பை தட்ட முடியாமல் அவளுடன் சென்றார்...

வருணிதா மாமியாரை பூஜையறைக்கு அழைத்து சென்று சம்பளக் கவரை அவரிடம் நீட்டியவள் அவரது காலில் விழுந்து பணிந்தாள்... மனைவியை தொடர்ந்து தேவானந்த்தும் அதே போல் சம்பளத்தை தாயிடம் கொடுத்துவிட்டு அவரின் காலில் விழுந்தான்...

முன்பு எல்லாம் அவன் இது போல் செய்தது இல்லை... சம்பளம் வாங்கினால் அப்படியே கொண்டு வந்து கையில் கொடுத்துவிட்டு போய்விடுவான்... இந்த சம்பிரதாயம் எல்லாம் அவனுக்கு தெரியாது என்பதை விட பழக்கப்படுத்தி கொள்ளவில்லை...

அவன் எதார்த்தவாதி... இந்த மாதிரி சிறு சிறு விசயங்களை தெரிந்து வைத்து கொள்வதில்லை... ஆனால் அவள் அப்படி இல்லை... சின்ன சின்ன விசயங்களிலும் அக்கறை காட்டி எல்லோரின் அன்பையும், மனதையும் அள்ளி செல்வாள்...

அந்நேரம் பார்வதிக்குள் ஏதோ ஒன்று உருகியது... கண்கள் பனித்தது... மனதில் இருந்த கசடு எல்லாம் அவரின்

கண்ணீர் துளியில் வெளியேறியது... வெள்ளை மனம் படைத்த மருமகளை தான் தவறாக எண்ணியதை நினைத்து மனதில் குமைந்து போனார்...

மற்ற பெண்களை போல் தன் மருமகள் இல்லை என்று அப்போது அவர் புரிந்து கொண்டார்... அவள் காண கிடைக்காத பொக்கிசம் என்பதை அக்கணம் உணர்ந்து கொண்டார்...

அவளின் இந்த செயல் மாமியாரை மட்டுமல்ல கணவனின் மனதையும் நெகிழச் செய்தது...

விட்டு கொடுத்து போவதிலும், குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து போவதிலும் தான் வாழ்க்கையின் சந்தோசம் அடங்கி இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்...

"எப்படி பேபி இப்படி...?" தனிமையில் தேவானந்த் மனைவியை கொஞ்சி கேட்ட போது,

"உங்களுக்காக உங்க சந்தோசத்துக்காக..." என்றவளை புரியாமல் அவன் பார்க்க...

"உங்கம்மாவை நான் சந்தோசமா பார்த்துக்கிட்டா நீங்க சந்தோசமா இருப்பீங்க... நீங்க சந்தோசமா இருந்தா என்னை சந்தோசமா வச்சிக்குவீங்க... மொத்தத்தில் இதில் என்னோட சுயநலமும் அடங்கி இருக்கு..." என்றவளை கிறக்கமாய் பார்த்தவன்,

"அவ்வளவு தானே இப்ப உன்னை சந்தோசமா வச்சிக்கிறதை விட எனக்கு வேறு என்ன வேலை..." என்றவன் அதற்கான பணியில் இறங்கினான் என்றுமில்லாத வேகமாய்...

"தேவ்... நான் சொல்றது சத்தியமான உண்மை... என்னோட மொத்த சந்தோசமும் நீங்க தான்..." என்றவளுக்கு தெரியவில்லை அவளின் சந்தோசத்திற்கு காரணமானவனே அவளின் சந்தோசத்தை குலைக்க போகிறான் என்று...

அதற்கு அச்சாரமாய் அமைந்தது திருவேங்கடத்தின் சென்னை பயணம்...

உறையும்...

அன்று வருணிதாவின் பெற்றோர் மகளை பார்ப்பதற்கு வருவதாக இருந்தார்கள்... திருமணத்திற்கு பிறகு வெகுநாட்கள் கழித்து பெற்றோரை பார்க்க போகும் மகிழ்ச்சியில் இருந்தாள் வருணிதா... அதை அவளது முகம் அப்பட்டமாய் காட்டியது...

"என்ன பேபி முகம் பிரகாசமா இருக்கு...? அம்மா, அப்பாவை பார்க்க போற சந்தோசமா...? உன்னை பேபின்னு சொல்றதுல தப்பே இல்லை என் செல்ல பேபி..." விளையாட்டாய் மனைவியின் கன்னத்தை பிடித்து இழுத்தபடி தேவானந்த் அவளை கிண்டல் செய்தான்...

"என்ன இருந்தாலும் அம்மா, அப்பான்னா ஸ்பெசல் இல்லையா...?" அவள் பதில் சொல்லவும்...

"அப்போ நான்..." ஒற்றை புருவத்தை தூக்கியபடி கேட்டவனின் முகத்தை திடுக்கிட்டு பார்த்தவள் அவனது முகத்தில் உறைந்த குறும்பு புன்னகையில் நிம்மதி அடைந்து...

"நீங்க என்னோட உயிர்..." என்றவளை அவன் அணைத்து கொண்டான்...

"தேவ்... இன்னைக்கு ஒரு நாள் லீவு எடுக்க கூடாதா...?" செல்லமாய் சிணுங்கியவளை மேலும் அணைத்தவன்,

"இன்னைக்கு முக்கியமான வேலை இருக்குடா... அதான் நீ லீவு எடுத்து இருக்கியே... நீ உங்கப்பா, அம்மா கூட என்ஜாய் பண்ணு... இடையில் நான் எதுக்கு தொந்திரவா..." என்றவனை அவள் முறைத்தாள்...

"நீங்க எனக்கு தொந்திரவா...?"

"இல்லையா பின்னே... நான் உன் கூட இருந்தா நீ எப்பவும் என் பக்கத்திலேயே இருக்கணும்ன்னு நினைப்பேன்... நீ உன் பேரண்ட்ஸ் கூட ஃப்ரீயா இருக்க முடியாது... அதான் சொல்றேன்..."

அவன் சொன்னதை நம்பவில்லை என்பதை அவளின் சிரிப்பு காட்டி கொடுத்து விட்டது... அவன் ஒன்றும் அவளுக்கும் அவளது பெற்றோருக்கும் இடைஞ்சலாக இருக்க போவது இல்லை... ஆனால் அவன் அவர்களுக்கு மகளுடன் பேசுவதற்கு தனிமை கொடுக்க வேண்டி வேலைக்கு செல்கிறான் என்பதை புரிந்து கொண்டதாய் இருந்தது அவளது சிரிப்பு...

"சோ ஸ்வீட் என்னோட தேவ்..." அவனது கன்னத்தில் முத்தமிட்டவளிடம் நமட்டு சிரிப்புடன் தேவானந்த் தன் இதழை காண்பிக்கும் போது வெளியில் இருந்து பார்வதியின் குரல் கேட்டது...

"வருணி... உன்னோட அப்பா, அம்மா வந்து இருக்காங்க..."

அதை கேட்டதும் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல் கணவனின் பிடியில் இருந்து வேகமாய் விலகி வெளியில் ஓடினாள் வருணிதா... அவளின் ஆர்வம், ஆவல் கண்டு தேவானந்த்தின் முகத்தில் புன்னகை வந்தது...

பெற்றோர் மீதான அவளது பாசம் கண்டு தனக்கும் அவளை போல் ஒரு பெண் குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் அவனுள் எழுந்தது... ஆணான தன்னை விட பெண்ணான அவள் பெற்றோரிடம் கொண்டு இருந்த அன்பு அவனை பெரிதும் கவர்ந்தது... அப்போது முடிவு செய்தான் தங்களுக்கு முதல் குழந்தை பெண் குழந்தை தான் வேண்டும் என்று...

தானும் அறையை விட்டு வெளியில் வந்தவன் மாமனார், மாமியாரை வரவேற்று மரியாதை நிமித்தம் ஒரு பத்து நிமிடம் பேசி இருந்துவிட்டு தனது வேலைக்கு சென்றுவிட்டான்...

அவன் சென்றதும் தான் திருவேங்கடத்திற்கு சற்று நிம்மதியாக இருந்தது... தான் வந்த விசயத்தை எப்படி மருமகன் முன்னிலையில் மகளிடம் சொல்வது என்று யோசித்து கொண்டு இருந்தார்...

அப்படி இல்லை என்றால் மகளை தனியே அவர்களது வீட்டிற்கு அழைத்து செல்ல வேண்டும்... மருமகன் இருக்கும் போது மகளை மட்டும் வீட்டிற்கு அழைத்து சென்றால் நன்றாக இருக்காது... என்ன செய்வது என்று பலவாறாக யோசித்தவருக்கு மருமகன் வேலைக்கு சென்றது கண்டு கவலை அகன்றது...

மகள் பொறுப்பாய் புகுந்த வீட்டில் இருப்பதை கண்ட பத்மாவிற்கு நிம்மதியாக இருந்தது... கூடவே சந்தோசமாகவும் இருந்தது... இனி மகள் வாழ்க்கையில் பிழைத்து கொள்வாள் என்ற எண்ணம் வலுவாய் தோன்றியது... அதிலும் பார்வதி வருணிதாவிடம் அன்பாய் நடத்து கொண்ட விதம் அவரது மனக்கவலையை முற்றிலும் அகற்றிவிட்டது...

மதிய உணவை முடித்து கொண்டு மகளை தங்களுடன் அழைத்து செல்ல அவர்கள் கேட்ட போது பார்வதி இன்முகமாய் அதற்கு சம்மதித்தார்... வருணிதாவும் உற்சாகமாய் பெற்றோருடன் கிளம்பினாள்... கிளம்பும் போது கணவனிடம் சொல்லவும் மறக்கவில்லை...

"ம்ப்ச்... தேவ் நீங்களும் வரலாம் இல்லையா...?" என்று கவலையும் சலிப்புமாக கேட்டவளை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது...

"என்னை பத்தி நினைக்கிறதை விட்டுட்டு நீ போய் என்ஜாய் பண்ணிட்டு வா..." என்றான் சமாதானமாக...

"ம்... சரி..." என்றவள், "சாப்பிட்டீங்களா...?"

"ம்... நீ உங்க அப்பா, அம்மாவுக்காக ஸ்பெசலா செஞ்ச பிரியாணியை இப்போ தான் சாப்பிட்டு முடிச்சேன்..." என்றான் கேலியாய்...

"தேவ்... அது நான் உங்களுக்காக ஸ்பெசலா செஞ்சது... நான் ஒண்ணும் அவங்களுக்காக செய்யலை..." சிணுங்கிய மனைவியின் வார்த்தையில் உல்லாசம் கொண்டவனாய்,

"அது எனக்கும் தெரியும் பேபி... சும்மா சீண்டி பார்த்தேன்..." என்றவன் மனைவியை சீண்டியதற்கு பிராயச்சித்தமாய் அலைப்பேசி வழியே தனது பரிசுகளை அனுப்ப, முகம் சிவக்க அதை பெற்று கொண்டவள் அதை விட அதிகமாய் அவனுக்கு திருப்பி கொடுத்துவிட்டு அலைப்பேசியை அணைத்த போது அவளது மனது என்றும் இல்லாத அளவுக்கு சந்தோசமாய் இருந்தது...

கடற்கரையோரம் இருந்த அவர்களது வீட்டிற்கு வரும் வரை திருவேங்கடம் ஒன்றும் பேசாது வந்தார்... அம்மாவும், மகளும் தான் ஊர் கதை, உலக கதை என்று வளவளத்து கொண்டு வந்தார்கள்... இத்தனை நாள் பிரிவு தாய், மகள் மனதில் அன்பை நீரூற்றாய் பெருகச் செய்து இருந்தது...

வீட்டிற்கு வந்ததும் திருவேங்கடம் மகளிடம் பேச வேண்டும் என்று சொல்ல...

"பேசுங்கப்பா..." என்றாள் அவள் ஆச்சிரியமாக...

"நான் உன்னை சிவில் என்ஜினீயரிங் படிக்க சொன்னது எதுக்கு தெரியுமா...?" பீடிகையுடன் கேட்ட தந்தையை புரியாமல் பார்த்தாள் அவள்...

பொறியியலில் கணினி பிரிவு எடுக்க விரும்பியவளை வேண்டாம் என்று தடுத்து இந்த பாடத்தை எடுக்க சொல்லி தந்தை வற்புறுத்தியது இப்போது அவளது நியாபகத்தில் வந்தது... அப்போது ஏன், எதுக்கு என்று எதிர்வாதம் பண்ண தோன்றாமல் அவர் சொன்னதை மறுபேச்சு பேசாமல் செய்தாள்...

"தெரியாது..." என்றாள் உதட்டை பிதுக்கி...

"அப்போவே நீ கிரி வீட்டுக்கு மருமகளா போகணும்ன்னு நான் ஆசைப்பட்டேன்..." என்ற தந்தையை திகைப்புடன் பார்த்தாள் அவள்...

"அதனால தான் உன்னை சிவில் எடுத்து படிக்க சொன்னேன்... அப்போ தான் முரளியோட நீயும் சேர்ந்து

கம்பெனியை நிர்வகிக்க தோதாய் இருக்கும்ன்னு நானும் கிரியும் நினைச்சோம்..."

"அப்பா... இப்போ எதுக்குப்பா இந்த பேச்சு... இப்போ நான் தேவ்வோட வொய்ப்... இந்த பேச்சு எனக்கு சங்கடமா இருக்கு..." என்றாள் அவள்... அந்த பேச்சு தனக்கு ரசிக்கவில்லை என்பதை அவளது முகச்சுளிப்பு சொல்லாமல் சொல்லியது...

மகளின் மனம் புரிந்தவராய் திருவேங்கடம், "சரி அதை விடு..." என்றவர், "அப்பவே கிரியோட கம்பெனியில் நாற்பது சதவீத ஷேர்சை நான் உன் பேருக்கு வாங்கி இருந்தேன்... அவனும் வருங்கால மருமகள் தானேன்னு அதுக்கு சம்மதிச்சான்... இப்பவும் அந்த ஷேர்ஸ் அப்படியே தான் இருக்கு... இன்னும் இரண்டு நாளில் முரளி துபாயில் இருந்து இங்கே வர்றான்... அவன் வந்ததும் கம்பெனி பொறுப்பை கிரி மகன் கிட்ட கொடுக்க போறானாம்... நீ அவங்க மருமகளா போகலைன்னாலும் நாங்க அப்போ எடுத்த முடிவில் இப்பவும் மாற்றம் இல்லைன்னு கிரி சொன்னான்..."

தந்தை பேசியதில் முன்னது புரிந்தாலும் பின்னர் பேசியது எதுவும் அவளுக்கு சுத்தமாய் புரியவில்லை...

"முரளியோட நீயும் கம்பெனி பொறுப்பை ஏத்துக்க சொல்லி கிரி சொல்றான்... நீங்க இரண்டு பேரும் சேர்ந்து பிசினசை நடத்த சொல்றான்... வாழ்க்கையில் ஒண்ணு சேரலைன்னா என்ன... நாம நினைச்சதை ஏன் மாத்தணும்..? தொழிலை ஒண்ணா சேர்ந்து நடத்தட்டும்... எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லைன்னு கிரி சொல்றான்... இதுக்கு முரளியும் ஓகே சொல்லிட்டானாம்... நீ என்ன சொல்ற வருணி...?"

தந்தை சொன்னதை கேட்டு அவள் நம்ப முடியாமல் விழிவிரிய அமர்ந்து இருந்தாள்... அவளுக்கு கிடைத்த இந்த வாய்ப்பை தனது கணவனுக்கு கிடைத்த வாய்ப்பாக எண்ணி பற்றி கொள்ள நினைத்தாள்... அவள் வேறு அவன் வேறு இல்லையே...

"அப்பா... எனக்கு தொழிலை பத்தி ஒண்ணும் தெரியாது... நான் வெறும் கத்துக்குட்டி தான்.... ஆனா தேவ்வுக்கு இது எல்லாம் நல்லா தெரியும்... எட்டு வருச அனுபவம் இருக்கு... அவர் தான் இதுக்கு சரியான ஆள்... நான் வேறு தேவ் வேறு இல்லைப்பா... இரண்டு பேரும் ஒண்ணு தான்... எனக்கு கொடுக்க நினைக்கிறதை அவருக்கு கொடுங்கப்பா..." அவள் பேசி முடிக்கும் முன்,

"கொஞ்சம் வாயை மூடுறியா...?" திருவேங்கடம் கோபமாய் வெடித்தார்...

அவர் கத்தியதில் வருணிதா மட்டுமல்ல பத்மாவும் கூட பயந்து போய்விட்டார்...

"வருணி... நீ தெரிஞ்சு தான் பேசுறியா...? நான் என் மகளோட எதிர்காலத்தை பத்தி பேசுறேன்... நீ என்னடான்னா உன் புருசன் எதிர்காலத்தை நினைச்சு கவலைப்படுற... நான் ஏன் உன்னை தனியா கூட்டிட்டு வந்து இதை சொல்றேன்னு கொஞ்சம் யோசிச்சு பாரு... மாப்பிள்ளை முன்னாடி இது பத்தி பேச முடியாதுன்னு தான்... அப்படி இருக்கும் போது அவருக்கு உன் பங்கை தூக்கி கொடுக்க சொல்ற..."

தந்தை சொன்னதும் அவளது முகத்தில் இகழ்ச்சி புன்னகை ஒன்று வந்தமர்ந்தது...

"ஓ... அப்படி இதை பத்தி தெரிஞ்சா அவர் என்ன என் மேல பொறாமையா பட போறாரு...?"

"அவரு பொறாமை படுறாரோ இல்லையோ அது எனக்கு தெரியாது... நீங்க ரெண்டு பேரும் என்ன தான் புருசன், பொண்சாதியா இருந்தாலும் உங்க ரெண்டு பேருக்கும் வாயும் வயிறும் வேற... அதை நீ புரிஞ்சிக்க... நாளைக்கே அவர் உன்னை விட்டுட்டு போய்ட்டா உனக்குன்னு ஒரு பாதுகாப்பு வேணும்... அதுக்கு தான் நான் இதை ஏற்படுத்தி தர்றேன்... மனுசன் எப்பவும் ஒரே மாதிரி இருக்க மாட்டான்... மனுசப்பய புத்தி குரங்கு மாதிரி... நிலையில்லாமல் தாவிக்கிட்டு இருக்கும்... நாலையும் யோசிச்சு தான் நான்

இந்த முடிவை எடுத்தேன்... எனக்கு நீ மட்டும் தான் முக்கியம் வருணி... என் மகள் நீதான்... உனக்கு பாதுகாப்பு கொடுக்கிறது என்னோட கடமை... உன் புருசன் எனக்கு மருமகன் தான் மகன் இல்லை..."

அவர் பேசியதை கேட்டு பத்மாவே அரண்டு போய்விட்டார்...

"என்னங்க இது என்ன என்னமோ பேசிக்கிட்டு... என்ன இருந்தாலும் அவர் அவளோட புருசன்... நீங்க பேசுறது சரியில்லை..." கணவருக்கு எடுத்து சொன்னார்...

"என்ன சரியில்லை பத்து... எத்தனை காதல் கல்யாணம் கோர்ட்ல போய் முடிஞ்சதை நாம பார்த்து இருக்கோம்... இன்னமும் பார்த்துக்கிட்டு இருக்கோம்... எனக்கு இவளை நினைச்சு ஒரு நாள் கூட நிம்மதியா தூக்கம் இல்லை... இவ வாழ்க்கை இப்படியே சந்தோசமா இருந்தா எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை... ஒருவேளை ஏதாவது ஒண்ணுன்னா...? இப்போ என்ன சொல்லிட்டேன்னு உன் மக இப்படி பேசுறா... என் மகளுக்கு நான் தொழில் அமைச்சு கொடுக்க நினைக்கிறேன்... அது தப்பா...? அதை நான் எதுக்கு மருமகனுக்கு செய்யணும்... அதை செய்ய அவரோட அப்பா, அம்மா இருக்காங்க... வருணி... நான் சொல்றதை நல்லா யோசிச்சு பார்த்து முடிவு எடு... எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு பேசாதே..." என்ற தகப்பனை தீர்க்கமாய் பார்த்தாள் அவள்...

"அம்மாவோட அப்பா அதான் என் தாத்தா இந்த மாதிரி நினைச்சா உங்க முடிவு என்னவா இருந்து இருக்கும்ப்பா..." மகளின் கேள்வியில் திருவேங்கடத்தால் பதில் சொல்ல முடியவில்லை...

"ஏன்னா நீங்க பெரியவங்க பார்த்து வச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க... அதனால நீங்களும், அம்மாவும் ஒண்ணு... இதே இது நான் காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டதால நானும் தேவ்வும் வேறு வேறு... இல்லையா...? என்னைக்காவது ஒரு நாள் அவர் என்னை விட்டு போயிருவாருன்னு நீங்க சந்தேகப்படுறீங்க... அவர் மேல் தான் உங்களுக்கு என்ன ஒரு நல்ல எண்ணம்...

இப்பவும் சொல்றேன்... நானும் அவரும் ஒண்ணு தான்... என்னால அவரை பிரிச்சு பார்க்க முடியாது... ஷேர்ஸ் கொடுக்கிறதா இருந்தா அவர் பேருக்கு மாத்தி கொடுங்க... இல்லைன்னா எனக்கு உங்க ஷேர்சும் வேண்டாம், தொழிலும் வேண்டாம்... எனக்கு என் தேவ் மட்டும் போதும்... என்னை என் தேவ் கிட்ட இருந்து பிரிக்க நினைக்கிற இந்த தொழில், பணம் எதுவும் எனக்கு வேண்டவே வேண்டாம்..." என்றவள் அதற்கு மேல் அங்கு ஒரு நொடி கூட இருக்க விரும்பவில்லை...

காரில் கொண்டு போய் விடுவதாக திருவேங்கடம் சொன்ன போது கூட அதை மறுத்து ஆட்டோவில் வந்துவிட்டாள்... மகளின் கோபம் பத்மாவிற்கு நிம்மதியாக இருந்தது... எந்த நிலையிலும் கணவனை விட்டு கொடுக்க மாட்டேன் என்று பேசிய மகளின் பிடிவாதம் இன்று இவருக்கு நிரம்ப பிடித்து இருந்தது...

திருவேங்கடமோ தன்னை புரிந்து கொள்ளாமல் செல்லும் மகளை கண்டு வேதனை அடைந்தார்... இப்போது இருக்கும் சுயநல உலகம் அவரை மிகவும் பயமுறுத்தியது... அதில் மகளை பாதுகாப்பாய் வாழ வைக்க அவர் எண்ணினார்...

வீட்டிற்கு வந்த மருமகளின் முகம் சரியில்லாததை உணர்ந்த பார்வதி என்ன ஏது என்று கேட்டார்... தலைவலி என்று சமாளித்த வருணிதா நேரே தனது அறைக்கு சென்று புகுந்து கொண்டாள்...

அவரும் மருமகளின் மனநிலையை உணர்ந்து அவளை தொந்திரவு செய்யாமல் இரவு உணவை செய்து முடித்தார்... இரவு உணவு உண்ணவும் அவள் வரவில்லை...

'அவளுக்கு என்னவானதோ...' என்று மனம் பதற மகனின் அறைக்குள் நுழைந்தவர் கண்ணில் கண்களை மூடி முகம் சுளிக்க படுத்து இருந்த வருணிதா தென்பட்டாள்... அவளின் முகச்சுணக்கத்தை கண்டு உண்மையில் தலைவலியில் அவதிபடுகிறாள் என்று எண்ணி அவர் பேசாமல் வந்துவிட்டார்...

அன்று தாமதமாய் வந்த தேவானந்த் அறைக்கு சென்று தன்னை சுத்தப்படுத்தி கொள்ளவதற்காக செல்ல, அவனை பார்வதியின் குரல் தடுத்து நிறுத்தியது...

"தேவா... நாங்க எல்லோரும் சாப்பிட்டாச்சு... வருணி தான் இன்னும் சாப்பிடலை... அவளுக்கு தலைவலி போல படுத்துட்டு இருந்தா... அதான் அவளை நான் தொந்திரவு பண்ணலை... நீயும் அவளும் சேர்ந்து சாப்பிடுங்க..." என்றவர் தங்களது அறைக்கு சென்றுவிட்டார்...

என்னமோ ஏதோ என்று பதறியவனாய் அறைக்குள் நுழைந்த தேவானந்த் சுருண்டு படுத்து இருந்த மனைவியை கண்டதும் அமைதி அடைந்தவனாய் அவள் அருகில் வந்து அமர்ந்தான்...

"வது பேபி..." என்று அழைத்தபடி அவளது நெற்றியை மெதுவே தடவி கொடுத்தான்...

அவனது செயலில் கண்விழித்து பார்த்தவளுக்கு அவனை கண்டதும் விழிகளில் கண்ணீர் பெருகி வழிந்தது...

"ரொம்ப தலைவலிக்குதா பேபி..." என்று கேட்டான் கவலை முகமாக...

நெற்றியை வருடி கொண்டு இருந்த அவனது கையை எடுத்து கன்னத்தோடு வைத்து கொண்டவள் அழுகை மேலும் மேலும் அதிகரித்தது...

தந்தையிடம் கோபமாய் பேசிவிட்டு வந்த பின் சிறிது நேரம் கோபமாய் இருந்தவள் பின் நேரம் செல்ல செல்ல அவளது கோபம் மெல்ல வடிந்து அந்த இடத்தை கழிவிரக்கம் ஆக்கிரமித்து கொண்டது...

'என் தேவ்வை அப்பா எப்படி அப்படி சொல்லலாம்... தேவ் அப்படிப்பட்டவர் கிடையாது...' மனதுக்குள் மருகி கொண்டு இருந்தவள் கணவனை கண்டதும் உடைந்து போனாள்...

"மாமாவும் அத்தையும் ஊருக்கு போயிட்டாங்களா...? அதுக்கு தான் இந்த அழுகையா...?"

அவன் கேட்டதும் இல்லை என்று தலையசைத்தவள் எழுந்தமர்ந்து தந்தை சொன்னது எல்லாம் ஒன்று விடாமல் கூறினாள்... அவனிடம் மறைப்பதற்கு என்று அவளிடம் எந்த விசயமும் கிடையாது... அது அவளுக்குமே பிடிக்காது என்பதால் ஒளிவு மறைவுமின்றி எல்லாவற்றையும் அவனிடம் கூறினாள்...

சொல்லி முடித்ததும் அவனது நெஞ்சில் சாய்ந்தவள், "தேவ்... அப்பா இதை ஒரு வாய்ப்பா உங்களுக்கு ஏன் கொடுக்க கூடாது... நான் கேட்டது எதுவும் தப்பில்லையே...?" அவனை நிமிர்ந்து கேள்வியாய் பார்த்தாள்...

தனக்காக தந்தையிடம் சண்டையிட்டு வந்திருக்கும் அவளது காதல் அவனுள் சுகமாய் இறங்கியது... அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன்,

"தப்பு தான் பேபி..." என்றான் அமைதியாய்...

"தேவ்..." அவள் அதிர்ச்சியாய் அவனை பார்த்தாள்...

"எந்த ஒரு அப்பாவும் தன் பிள்ளைங்களோட எதிர்காலம் நல்லா இருக்கணும்னு தான் நினைப்பாங்க... அதுக்கு நான் கூட விதிவிலக்கு இல்லை... நாளைக்கு நான் நம்ம பொண்ணு பேருக்கு தான் என்னோட சொத்தை கொடுப்பேனே தவிர... நம்ம மருமகன் பேருக்கு மாத்தி கொடுக்க மாட்டேன்... இது எல்லா தகப்பனுக்கும் இருக்கும் ஒருவகையான பாதுகாப்பில்லாத உணர்வு தான்... இப்படி செய்து கொடுத்தா அந்த மருமகன் கைவிட்டாலும் நம்ம இல்லாத காலத்தில் மகள் தனியா இருந்து பிழைத்து கொள்வாள் என்கிற நம்பிக்கை, நிம்மதி தான் இதுக்கு காரணம்... உங்கப்பா செய்ததை தப்புன்னு நான் சொல்ல மாட்டேன்... ஆனா நீ பேசிட்டு வந்தது ரொம்ப தப்புடா... அவர் மனசு என்ன மாதிரி கஷ்டப்பட்டு இருக்கும்..."

திருவேங்கடத்தின் நிலையில் இருந்து அவன் யோசித்தான்... கணவனது பேச்சு அவளுக்கு பெருமையாய்

இருந்தது... ஆனாலும் தந்தை பேசியது கேட்டு அவளுக்கு மனம் தாங்கவில்லை...

"நீங்க என்னை கை விட்டு போயிடுவீங்கன்னு அவர் சொல்றாரு... அதை கேட்டுட்டு நான் சும்மா எப்படி இருக்க முடியும்...?"

"அதுக்காக கோபப்பட்டு பேசிட்டு வந்துடறதா... எப்போதுமே வார்த்தையை பேசுவதுக்கு முன் யோசிச்சிட்டு பேசணும் வது... சிந்திய வார்த்தையை அள்ள முடியாது... நீ பண்ணியது தப்பு தான்... நாளைக்கு அவரை பார்த்து மன்னிப்பு கேட்டுட்டு வா..." என்றான் கண்டிப்பாய்...

அவனது கண்டிப்பில் அவள் சிறிது நேரம் யோசித்தாள்... பின்பு முடிவு எடுத்தவளாய்,

"சரி நாளைக்கு போய் மன்னிப்பு கேட்கிறேன்... ஆனா நீங்க ஏன் நான் சொல்ற மாதிரி யோசிக்க கூடாது... இப்போதைக்கு இந்த ஷேர்சை கடனா வாங்கிக்கலாம்... பிறகு இதுக்கான பணத்தை அப்பாவுக்கு கொடுக்கலாமே தேவ்... நான் சொல்றதையும் கொஞ்சம் யோசிங்க தேவ்..."

அவன் முகவாயை பற்றி அவள் கெஞ்சினாள்... அதில் அவனுக்கு சிரிப்பு வந்தது...

"இது உனக்கான வாய்ப்பு நீ தான் இதை பயன்படுத்திக்கணும்... நான் இல்லை..." என்றான் சிரிப்புடன்...

"இதில் நான் கத்துக்குட்டி... உங்களுக்கு தான் இதில் நல்ல அனுபவம் இருக்கு தேவ்... இந்த வாய்ப்பை நீங்க ஏத்துக்கிட்டா தான் என்ன...?"

அவள் விடாப்பிடியாய் கேட்டதில் அவனது முகம் சட்டென்று இறுகியது...

"வது... வாய்ப்பு என்பது நேர்மையா வரணும்... இப்படி குறுக்கு வழியில் மாமனார் மூலம் வர கூடாது... மாமனார் பணத்தில் இவன் முன்னேறிட்டான்னு என்னை பார்த்து

யாரும் சொல்லக்கூடாது... அது எனக்கு பெருத்த அவமானம்..." என்று இறுகிய குரலில் கூறியவன் சட்டென்று தனது முகபாவத்தை மாற்றி கொண்டு,

"எனக்கான வாய்ப்பு வரும் போது நான் அதை கெட்டியா பிடிச்சிக்குவேன்... நீ என்னை பத்தி கவலைப்படாதே... உன்னோட ஷேர்சை வாங்கிட்டு பிசினசை வெற்றிகரமா நடத்த பாரு... அதுக்கு என்னுடைய வாழ்த்துக்கள் பேபி..." அவளை அணைத்து வாழ்த்தியவன்,

"உனக்கு எந்த சந்தேகம்ன்னாலும் என் கிட்ட கேட்கலாம்... உனக்காக நான் இருக்கேன்... உன்னோட ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னாடி நான் இருப்பேன் பேபி... இது சத்தியமான உண்மை..."
அவனது வார்த்தையில் தெரிந்த தெளிவில், உறுதியில் அவளது மனதிலும் உறுதி, தெளிவு பிறந்தது...

"தேவ்... நீங்க சொல்றதால தான் இதுக்கு நான் சம்மதிக்கிறேன்... இதனால நமக்குள்ள எந்த பிரச்சினையும் வந்துவிட கூடாது..." என்றவளின் கண்களில் அவ்வளவு நேரம் நின்று இருந்த கண்ணீர் கீழே விழவா என்பது போல் எட்டி பார்த்தது...

அதை கண்டவன் தனது இதழால் அவளது விழிநீரை துடைத்து எடுத்தவன், "அந்தஸ்து, பணம் நமக்கு இடையே வராதுன்னு நீ தான் சொல்லி இருக்கியே... அப்புறம் எதுக்கு இதை பத்தி யோசிக்கிற... நமக்குள் எந்த பிரச்சினையும் வராது... நீ என்னுடைய மனைவி, நான் உன் கணவன்ங்கிறதுலேயும் எந்த மாற்றமும் கிடையாது..."

புரிந்தவளாய் தலையாட்டியவள், "உங்களுக்கு அப்பா மேல கோபம் வரலையா தேவ்..."

"ம்... கோபம் வரத்தான் செய்யுது..." என்றவனை திகைப்பாய் அவள் பார்க்க...

"என் பேபியை நான் கைவிட்டு போய்விடுவேனோன்னு பயப்படுறாரு பார்... அதை நினைச்சு கோபம் வரத்தான்

செய்யுது... ஆனா இது கோபப்படும் விசயம் இல்லை... பொறுமையா கையாள வேண்டிய விசயம்... அதாவது என் பொண்டாட்டியை உன் உயிர் மூச்சு இருக்கும் வரை நான் நல்லா வச்சு பார்த்துக்கிட்ட பிறகு என் மாமனாரை பார்த்து நான் கேட்கணும்... நீங்க சந்தேகப்பட்டது மாதிரி நான் கிடையாதுன்னு..."

அவனது வார்த்தையில் மனம் நெகிழ்ந்து போனவளாய், "தேவ்..." என்றபடி அவனை இறுக அணைத்து கொண்டாள்...

சிறிது நேரம் அவளது அணைப்பில் அடங்கியவன் பின், "நீ இன்னும் சாப்பிடலைன்னு அம்மா சொன்னாங்க... நான் குளிச்சிட்டு வந்திர்றேன்... ரெண்டு பேரும் சாப்பிட்டு வந்து இந்த கட்டிப்பிடி வைத்தியத்தை தொடரலாம்..." என்றவனை கண்டு முகம் சிவக்க விலகியவள்,

"நான் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்..." என்று அறையை விட்டு வெளியில் செல்ல... அவனது நகையொலி அவளை துரத்தியது...

மறுநாள் கணவன் சொன்னது போல் தந்தையிடம் மன்னிப்பு கேட்டு அவரின் விருப்பத்திற்கு சரி என்று சொன்னாள்... அதையும் கணவன் சொல்லித்தான் தான் செய்ததாக வேறு பெருமையுடன் கூறினாள்...

தேவானந்த்தின் பெருந்தன்மை குணத்தில் திருவேங்கடம் மனதுக்குள் கூனிக்குறுகி போனார்...

விசயம் கேள்விப்பட்ட தேவானந்த்தின் பெற்றோர் சந்தோசப்பட்டனர்... மருமகள் வாழ்க்கையில் அடுத்த அடி எடுத்து வைப்பது கண்டு அவர்கள் மகிழத்தான் செய்தனர்... அவரவர் வாய்ப்பை அவரவர் பயன்படுத்தி கொள்வதில் தவறில்லை என்றே அவர்கள் நினைத்தனர்...

"தேவா... இதனால உங்க ரெண்டு பேருக்கும் இடையில் ஈகோ பிரச்சினை வராம பார்த்துக்கோங்க..." என்று மட்டும் சிவநேசன் மகனிடம் அறிவுரை கூறினார்...

"அதை நான் பார்த்துக்கிறேன்ப்பா..." என்றான் மகன் அவரின் மனதை குளிர்விக்கும் விதமாய்...

அடுத்து வந்த வாரத்தில் முரளியோடு வருணிதாவும் கட்டுமான நிறுவனத்தின் பொறுப்பை ஏற்று கொண்டாள்... அதை சிறிய அளவில் ஒரு விழாவாக எடுத்து செய்தனர்...

முரளி வருணிதாவிடம் புன்னகை முகமாய் பேசியவன் தேவானந்திடம் முகம் கொடுத்து பேசவில்லை... அவன் தனது நிறுவனத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி என்ற நினைவில் முரளி அவனை தள்ளி நிறுத்தினான்...

அங்கு வந்திருந்தவர்கள் ஒரு சிலரும் அப்படித்தான் நடந்து கொண்டனர்...

ஆனால் கிரியும் திருவேங்கடமும் தேவானந்தை அப்படி தனித்து விடவில்லை... அவனுக்கு கிடைக்க வேண்டிய மரியாதையை பார்த்து பார்த்து செய்தனர்...

திருவேங்கடத்திற்கு மருமகன் மேல் தனிப்பட்ட விரோதம் ஏதும் இல்லையே... மகளின் நன்மையை மட்டும் கருதியவருக்கு மருமகனின் நன்மை பின்னுக்கு தள்ளப்பட்டு விட்டது... இதே இது மற்றவர்கள் முன்னிலையில் மருமகனின் கௌரவத்தை காக்க வேண்டியது தன் கடமை என்று எண்ணி அவனின் மதிப்பு குறையாதபடி பார்த்து கொண்டார்...

இது எதையும் தேவானந் கண்டு கொள்ளவில்லை... அவனது கவனம் முழுவதும் அழகு தேவதையாய் ஜொலித்து கொண்டு இருந்த மனைவியின் கண்களில் தெரிந்த கலக்கத்தில் தான் இருந்தது... அந்த கலக்கம் தனக்கானது என்பதை உணர்ந்தவனாய் கண்களால் அவளுக்கு தைரியமூட்டி கொண்டு இருந்தான்...

கணவனின் பார்வையை உணர்ந்த வருணிதா அடுத்த நொடி அவன் அருகே வந்து அவன் கரம் கோர்த்து நின்று கொண்டாள்... அவனும் ஆறுதலாய் அவளது கரத்தை பற்றி கொண்டான்...

சின்ன சின்ன செயல்கள் மூலம் தனது காதலை அவளுக்கு உணர்த்தி கொண்டு இருந்தான் அவன்...

புன்னகை முகம் மாறாமல் இருந்த கணவனை கண்டு பெருமிதமாக இருந்தது அவளுக்கு...

'என் தேவ்வை போல் எல்லோரும் இருந்துவிட்டால் எந்த பெண்ணும் கவலைப்பட தேவையில்லை...' மனதில் நினைத்தவளின் கண்கள் காதலாய் கணவனை வருடி சென்றது...

அடுத்து வந்த நாட்கள் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் சென்றது... அன்று ஒரு அடுக்கு மாடி குடியிருப்பு கட்டுவதற்கான திட்டம் ஒன்றை தயார் செய்த தேவானந்த் அதை எடுத்து கொண்டு முரளியை பார்க்க சென்றான்...

அங்கு முரளி இல்லை... அப்போது பார்க்க அவன் வெளியில் சென்று இருந்தான்... வருணிதா மட்டுமே இருந்தாள்...

"குட்மார்னிங் மேடம்..." என்றபடி அனுமதி கேட்டு உள்ளே வந்தவனை பார்வையால் முறைத்தாள் அவனது மனைவி...

அவனை உட்கார சொன்னவள் அவன் அமர்ந்ததும், "என்னது மேடமா...?" வேப்பங்காயை உண்டது போல் முகம் சுளித்தாள் அவள்...

"மேடம்... நீங்க தானே கம்பெனி எம்டி...?" சிரித்தபடி கேட்டவனை கண்டு இன்னமும் அதிகமாய் முறைத்தாள் அவள்... பிறகு,

"என்ன விசயமா வந்து இருக்கீங்க மிஸ்டர். தேவானந்த்..." அவளும் அவனை போல் நீட்டி முழக்க... மனதுக்குள் அவளை மெச்சியபடி தனது கையில் இருந்ததை அவளிடம் நீட்டினான்...

அவள் அதை வாங்காமல், "நான் அங்கே வந்து பார்க்கிறேன்..." என்றவள் அவன் அருகில் வந்து அவன் அமர்ந்து இருந்த நாற்காலி மீது ஒயிலாக சாய்ந்தபடி,

"இப்போ காண்பிங்க..." என்றபடி அவன் கையில் வைத்து இருந்த கோப்பை பிரித்தாள்...

சும்மாவே அவளது அருகாமையில் வெந்து தவிப்பவன் இப்போது இவ்வளவு நெருக்கத்தில் நெருங்கி நிற்கவும் அவனது மனம் தடுமாறியது...

"ப்ளீஸ் பேபி... வேலை நேரத்தில் என்ன இது... கொஞ்சம் தள்ளி நில்லு..."

'என்னை மேடம்ன்னா சொன்னீங்க... அதுக்கு இது தான் பனிஷ்மென்ட் தேவ்...' என்று மனதுக்குள் கணவனை கறுவியவள் மேலும் அவனை உரசினாள்...

அவளது எண்ணம் புரிந்தவனாய் அவளை பார்த்து முறைத்தவன், "தள்ளி நில்லுடி ராட்சசி... மனுசன் மனசு புரியாம..." என்றான் உரிமையாக...

"உங்க ஊரில் எம்டியை இப்படியா ராட்சசின்னு சொல்லுவாங்க..." அப்பாவியாய் இமைச்சிமிட்டியவளை கண்டு அவன் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"போதும் பேபி... படுத்தாதே... தெரியாம மேடம்ன்னு சொல்லிட்டேன்... அதுக்கு இத்தனை அக்கப்போரா...? இனி தெரிஞ்சு கூட மேடம்ன்னு சொல்ல மாட்டேன் போதுமா...?" என்றான் இருகரம் கூப்பி...

"அது அந்த பயம் இருக்கணும்..." ஆள்காட்டி விரல் நீட்டி அவனை மிரட்டியவள் தனது இருக்கையில் வந்து அமர்ந்து,

"முரளி வர இன்னும் கொஞ்ச நேரமாகும் தேவ்... அப்புறம் வந்து பாருங்களேன்..." அவள் சொல்லும் போதே முரளி அங்கு வந்தான்...

தேவானந்த்தை அங்கே கண்டதும் அவனது முகத்தில் சுளிப்பு ஏற்பட்டது...

"இது வேலை நேரம் மிஸ்டர். தேவா... வெட்டி அரட்டை அடிப்பதற்கான நேரம் இல்லை..." என்று முரளி முகத்தில் அடித்தார் போல் பேச...

"வெட்டி அரட்டை அடிக்க எனக்கும் நேரமில்லை சார்... இந்த ப்ளானை உங்க கிட்ட காட்டத்தான் வந்தேன்..." தேவானந்த் தன் கையில் இருந்த கோப்பை அவன் முன் நீட்டினான்...

அவனது பேச்சில், நிமிர்வில் முரளியின் முகம் கறுத்தது... தொழிலாளி ஒருவன் முதலாளியை எதிர்த்து பேசுவதா என்ற கடுப்புடன் கோப்பை பிரித்தான்... தேவானந்த்தை வருணிதாவின் கணவனாக கூட அவன் மதிக்கவில்லை...

எல்லாவற்றையும் பார்த்த மறுநொடி அந்த கோப்பை எடுத்து தேவானந்த் மீது விசிறியடித்தான் முரளி... அதை வருணிதாவால் பொறுத்து கொள்ள முடியவில்லை...

"முரளி... என்ன பண்றீங்க...?"

"வருணிதா... நீங்க பேசாம இருங்க... உங்க கணவன், மனைவி உறவை ஆபிசுக்கு வெளியில் வச்சுக்கோங்க... இங்கே ஒரு நல்ல எம்டியா நடந்துக்கோங்க..." முரளி அவளை சத்தம் போட்டான்...

தேவானந்த் கண்ணால் மனைவிக்கு ஆறுதல் கூறி அவளை இருக்கையில் அமர சொன்னான்...

"என்ன ப்ளான் பண்ணி இருக்கீங்க...? நான் என்ன புறாக் கூண்டு கட்டவா உங்க கிட்ட ப்ளான் கேட்டேன்... லக்சுரி ப்ளாட் கட்ட ப்ளான் கேட்டேன்... இந்த மாதிரி நீங்க ப்ளான் போட்டீங்கன்னா ஒரு ப்ளாட் கூட விக்காது..." முரளி கத்த துவங்க...

"சார்... அந்த ஏரியாவில் லக்சுரி ப்ளாட் கட்டினா யாரும் வாங்க மாட்டாங்க... அங்கே இருக்கிற எல்லோரும் மிடில் கிளாஸ் மக்கள்... அவங்க வாங்கிற மாதிரி தான் நான் ப்ளான் போட்டு இருக்கேன்..."

"உன் மிடில் கிளாஸ் மென்ட்டாலிட்டியை நீயே வச்சுக்கோ... எங்க ஹைகிளாஸ்க்கு ஏத்த மாதிரி வேறு ப்ளான் போடு..." என்ற முரளியை பார்த்து கேலி சிரிப்பொன்றை உதிர்த்த தேவானந்த்,

"இந்த ஏரியாவில் மிடில் கிளாஸ் ப்ளான் போட்டா தான் உங்க கல்லா கட்டும்... நீங்க சொல்ற மாதிரி ஹைகிளாஸ் ப்ளான் போட்டா புட்டுக்கும் சார்... இது உங்களுக்கு புரியாது... நான் கிரிதரன் சார் கிட்ட பேசிக்கிறேன்..." என்றவன் தனது கோப்பை எடுத்து கொண்டு வெளியேற போனான்...

தந்தை பெயர் சொன்னதும் முரளி சற்று அடங்கினான்... ஏனெனில் அன்று பொறுப்பு ஏற்கும் போது அவன் தேவானந்த்தை உதாசீனப்படுத்தியது அவனது தந்தைக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை...

"இங்கே பார் முரளி... தேவா நம்ம வருணியோட ஹஸ்பெண்ட்... அது எல்லாம் விட நம்ம கம்பெனியோட சீஃப் என்ஜினீயர்... நல்ல திறமையான பையன்... அவன் கிட்ட உன் ஸ்டேட்டசை காட்டி வெறுப்பை சம்பாதிச்சுக்காதே... அப்புறம் நஷ்டம் தேவாவுக்கு இல்லை... நம்ம கம்பெனிக்கு தான்..." அன்றே தேவானந்த்தின் முக்கியத்துவத்தை அவர் அவனிடம் கூறி இருந்தார்...

"மிஸ்டர்... அந்த ஃபைலை வச்சிட்டு போங்க..." வேண்டா வெறுப்பாய் முரளி சொல்ல...

அதற்கும் புன்னகைத்தபடி, "நீங்க தானே சார் தூக்கி எறிஞ்சீங்க... நான் இல்லையே... என் வேலை ப்ளான் போடுறது மட்டும் தான்... உங்களுக்கு எடுபிடி வேலை பார்க்கிறது இல்லை..." என்று முரளியின் மூக்கை உடைத்த தேவானந்த் அடுத்த நொடி அங்கிருந்து வெளியேறிவிட்டான்...

அதை கண்டு முரளியின் கோபம் அதிகரிக்க கையில் அகப்பட்டதை தூக்கி எறிந்தான்...

கணவன் பேச்சில் வருணிதாவுக்கு திருப்தியுடன் கூடிய புன்னகை எழுந்தாலும் அவன் காயப்பட்டது அவள் மனதை உறுத்த தான் செய்தது... கணவன் மனக்காயத்திற்கு

மருந்து போட எண்ணி அறையை விட்டு வெளியேற போனாள் அவள்...

"வருணிதா... தலைக்கு மேல வேலை இருக்கு... இப்போ எங்கே போறீங்க...?" தேவானந்த் மீதுள்ள எரிச்சலில் முரளி சிடுசிடுத்தான்...

"எனக்கு தலைவலிக்குது... கேன்டீனில் போய் காபி குடிச்சிட்டு வந்திடறேன்..." அவனை திரும்பியும் பாராமல் உரைத்தவள் கணவனை தேடி சென்றாள்...

அவன் அவனது அறையில் தனியே இருந்தான்... கையில் இருந்த காகிதத்தில் ஆழ்ந்து இருந்தவன் அவளது வரவில் நிமிர்ந்தான்...

"வா வது... என்ன விசயம்..." என்றவனின் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவளின் கண்கள் கலங்கி இருந்தது...

அதை கண்டு எழுந்து அவளருகில் வந்தவன் அவளது கண்ணீர் துளிகளை துடைத்து விட்டான்...

"எதுக்கு எடுத்தாலும் இப்படி அழுறது நல்லது இல்லையே பேபி..."

"உங்களுக்கு கோபம் வரலையா...?" என்றவளின் குரல் தேம்பியது அவன் அடைந்த அவமானத்தை எண்ணி...

"இங்கே பார்... கோபம்ங்கிறது மிகப் பெரிய எதிரி... அதிலும் தொழிலில் கோபம்ங்கிறது நம்ம வளர்ச்சிக்கு நல்லது இல்லை..." அவளுக்கு அறிவுரை கூறியவன்,

"அவன் அவ்வளவு கத்தினாலும் கடைசியில் யார் சொன்னது நடந்தது...? நான் சொன்னது தானே... எதிரியை எங்கே அடிக்கணுமோ அங்கே சமயம் பார்த்து அடிக்கணும்... அதை விட்டுட்டு கோபப்பட்டு கத்துறதுல என்ன பயன் இருக்கு... முதலாளி மேடம்... இது எல்லாம் வாழ்க்கையில் நீங்க முக்கியமா கத்துக்க வேண்டிய விசயம்... முதல்ல கோபத்தை கைவிட்டா தான் நாம நினைச்ச உயரத்தை நாம அடைய முடியும்..."

அவளது மூக்கை விளையாட்டாய் ஆட்டியபடி அவன் கூறினாலும் அவளது முகம் தெளியவில்லை... அப்போதைக்கு ஒன்றும் பேசாது தலையசைத்துவிட்டு எழுந்து சென்றுவிட்டாள்...

அன்று இரவு அவன் அறைக்கு வந்ததும் அவனை கட்டி அணைத்து கொண்டு அப்படி ஒரு அழுகை அவள் அழ அதில் அவன் திகைத்து போனான்...

"போதும் தேவ்... அடுத்தவங்க கிட்ட நீங்க கை கட்டி வேலை செய்தது எல்லாம்... உங்களை விட அனுபவம் இல்லாத அவனே கம்பெனியை திறம்பட நடத்தும் போது உங்களால ஒரு கம்பெனியை திறம்பட நடத்த முடியாதா... நாளைக்கே நீங்க ஒரு கம்பெனி ஆரம்பிக்கிறீங்க... எம்டி ஆகுறீங்க... இதுக்கு மேலேயும் நீங்க அவமானப்படுறதை பார்க்கிற சக்தி எனக்கு கிடையாது..." என்று அழுதவளை எப்படி சமாதானப்படுத்துவது என்று அவனுக்கு தெரியவில்லை...

ஆனாலும் அவளை சமாதானப்படுத்த முயன்றான்... ம்ஹூம் அவனின் எந்த சமாதானப் பேச்சையும் அவள் கேட்க தயாராக இல்லை... ஏனெனில் முரளியின் செயலில் அந்தளவுக்கு அவளது மனம் காயப்பட்டு போயிருந்தது...

அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... அவனால் செய்ய முடிந்த ஒன்றே ஒன்று அவளை அணைத்து ஆறுதல்படுத்துவது மட்டுமே...

அவனது ஆறுதலிலும் மனம் ஆறுதல் அடையாமல் இன்னமும் தேம்பி கொண்டு இருந்தவளை கண்டு அவனது மனம் மிகவும் வருத்தமுற்றது...

ஒரு முடிவு எடுத்தவனாய், "பேபி... இங்கே பார்..." என்று அவளது முகத்தை நிமிர்த்தி அவன் அதட்டினான்...

அவனது அணைப்பு நிறுத்தாத கண்ணீரை அவனது அதட்டல் நிறுத்தியது... அவன் போட்ட சத்தத்தில் சிறு குழந்தை போல் மிரண்டவளை கண்டு அவனுக்கு பாவமாய் இருந்தது...

"இங்கே பார்... நீ இப்படி மனசை போட்டு உழப்பிக்கிட்டு இருந்தா உன்னோட ஹெல்த் தான் கெடும்... ஆபிசில் நடந்த பிரச்சினையை அங்கேயே விட்டுட்டு வந்துடணும்... வீடு வரைக்கும் தூக்கி சுமந்துட்டு வர கூடாது... வீட்டு வாசலில் செருப்பை கழட்டும் போதே ஆபிசில் உள்ள பிரச்சினைகளையும் மனசில் இருந்து அங்கேயே கழட்டி வச்சிட்டு வந்துடணும்... இப்படி பெட்ரூம் வரை கொண்டு வந்து அழுது புலம்பிக்கிட்டு இருக்க கூடாது... என்ன ஓகேவா..."

கொஞ்சம் அதட்டலும், கொஞ்சம் கெஞ்சலுமாய் அவன் சொல்ல அதில் பயந்து போய் அவள் மௌனமாய் சரியென்று தலையாட்டினாள்...

"தட்ஸ் குட் பேபி..." என்று அவளை மெச்சியவன் அவளை அள்ளி எடுத்து,

"இப்போ நம்ம வீட்டில் உன் எஜமானன் நான் தானே... இப்போ உன் எஜமானன் சொன்ன பேச்சு கேட்டு நீ சமத்தா நடப்பியாம்... அதுக்கு பரிசா நான்... " அவள் காதில் அவன் ரகசியமாய் முணுமுணுக்க...

அதில் வெட்கி முகம் சிவந்தவள் அதை மறைக்க இடமில்லாமல் அவனது நெஞ்சில் முகம் புதைக்க,

"ஹா... ஹா... என் பேபி... பேபி..." அவளது செயலில் வாய்விட்டு சிரித்தவன் தனது முதலாளித்துவத்தை அவளிடம் காட்ட ஆரம்பித்தான்... அவளும் அவன் சொன்னதை நல்ல பிள்ளையாய் கேட்டு கீழ் படிந்தாள்...

அப்போதைக்கு அவள் அந்த நிகழ்வை மறந்தாலும் அந்த நினைவை அவள் என்றும் மறக்கவில்லை என்பதை அடுத்தடுத்து வந்த நிகழ்வுகள் அவனுக்கு நிரூபித்தது...

உறையும்...

வருணிதா தொழிலில் பொறுப்பேற்று ஒரு மாதமான நிலையில் அந்த மாதத்திற்கான லாபமாக ஒரு பெரும் தொகையை கொண்டு வந்து மாமியாரிடம் கொடுத்து ஆசிர்வாதம் வாங்கியவள்,

"இதை என்ன செய்றதுன்னு நீங்களே சொல்லுங்கத்தே..." தன்னிடம் ஆலோசனை கேட்ட மருமகளை கண்டு அவருக்கு கண்கள் பனித்தது...

"அம்மாடி வருணி... இந்த மாதிரி அதிக பணத்தை கையாள எனக்கு தெரியாது... அது போக இது உன்னுடைய தனிப்பட்ட வருமானம்... இதை என்ன செய்யணும்ன்னு நீ தான் யோசிக்கணும்..." பார்வதி அதை வாங்க மறுத்துவிட்டார்...

அன்று மருமகளின் சம்பளத்தை அவர் எதிர்பார்த்தார் தான்... சின்னவர்கள் பெரியவர்களுக்கு எந்தளவுக்கு மரியாதை கொடுக்கிறார்கள் என்பதை அதில் இருந்து தெரிந்து கொள்ள விரும்பினார்... அதே இது இன்று கை நிறைய பணத்தை மருமகள் கொடுத்த போது அளவுக்கதிகமான பணம் அவருக்கு பயத்தை ஏற்படுத்தியது... அதனால் மறுத்துவிட்டார்...

"நீங்களாவது சொல்லக்கூடாதா..." வருணிதா கணவனை பார்க்க...

"நீயுமாச்சு உன் அத்தையுமாச்சு... எனக்கு தெரியாதுப்பா..." என்று தோளை குலுக்கி புன்னகைத்தவனை கண்டு மாமியாருக்கு தெரியாமல் முறைத்தாள் அவள்...

தனிமையில் கணவனை கண்டதும் பிலுபிலுவென பிடித்து கொண்டாள்...

"தேவ்... நீங்களே இப்படி சொன்னா எப்படி...?" என்று கோபித்து கொண்டு முகத்தை தூக்கி வைத்து கொண்டாள்...

"சரி... இப்போ என்ன செய்யணும்ன்னு சொல்ற...?" என்று கேட்டான் சமாதானமாக...

"இது நம்ம பணம் தேவ்... இதை எப்படி சேவிங்ஸ் பண்றது, எப்படி செலவழிக்கிறதுங்கிறதை நீங்க தான் சொல்லணும்..."

"அது வந்து... நான் எப்படி...?" அவன் சற்று தயங்கினான்...

இந்த தொழில் வருணிதாவின் தந்தை அவளுக்கு என்று ஏற்படுத்தி கொடுத்தது... இதில் அவனுடைய பங்கு என்று எதுவும் இல்லை... அவள் அவனுடைய மனைவியாக இருந்தாலும் அவளின் பணத்தை தொட அவன் மிகவும் யோசித்தான்...

"நீங்க வேற, நான் வேறன்னு பிரிச்சு பார்க்கிறீங்களா...?"

"ச்சேச்சே... அப்படி எல்லாம் இல்லை..." அவசரமாய் மறுத்தான் அவன்...

"அப்போ ஏன் இவ்வளவு யோசிக்கிறீங்க...?"

"இது உங்க அப்பாவுடைய பணம் வது..." மிகுந்த தயக்கத்துடன் சொன்னான் அவன்...

அவனுடைய தயக்கத்துக்கான காரணம் புரிந்ததும் அவள் அமைதியானாள்... தந்தையின் வார்த்தைகள் கேட்டும் இந்தளவுக்கு அமைதியாய் பெருந்தன்மையாய் கணவன் நடந்து கொள்வதே பெரும் அதிசயம்... வேறு ஒருவனாக இருந்து இருந்தால் இந்நேரம் அவளது வாழ்க்கையில் ஒரு பூகம்பமே வெடித்து இருக்கும்...

"ஆனா இவ்வளவு பணத்தை நான் என்ன செய்றது தேவ்..." வாழ்க்கை பாடத்தை இப்போது தான் கற்று கொள்ள ஆரம்பித்து இருந்தவளுக்கு பணத்தை எப்படி, எங்கு முதலீடு செய்வது என்று தெரியவில்லை...

குழந்தை போல் தன்னை நோக்கும் மனைவியை கண்டு அவனுக்குமே பாவமாக இருந்தது...

"என்ன செய்றதுன்னு நான் சொல்லி தர்றேன்... நீ கவலைப்படாதே..." என்றவன் அவளுக்கான வாழ்க்கை வழிகாட்டியாக மாறினான்...

அடுத்து வந்த மாதங்களில் அவள் கொண்டு வந்து கொடுத்த பணத்தை சேமித்து அவள் பெயரில் காலி இடங்களை வாங்கி போட்டான்... கட்டுமான துறையில் அவள் இருப்பதால் பிற்காலத்தில் அது அவளுக்கு பயன்படும் என்று இந்த மாதிரி செய்தான்... ஆனால் எதிலும் தனது பெயரை அவன் சேர்க்கவில்லை... அவளுடைய பெயரில் அனைத்தையும் வாங்கினான்... அதில் தேவானந்த் தெளிவாக இருந்தான்...

கணவன், மனைவி உறவு வேறு... தொழில், வருமானம் வேறு... அவளுக்கு என்று தனிப்பட்ட 'பெர்சனல் ஸ்பேஸ்' இருக்க வேண்டும்... அதில் தான் தலையிட கூடாது என்பதில் உறுதியாய் இருந்தான்... திருவேங்கடம் மகளிடம் சொன்னது போல் கணவன் மனைவியாக இருந்தாலும் வாயும், வயிறும் வேறு வேறு அல்லவா...

இது எதையும் அவள் பொருட்படுத்தவில்லை... கணவன் கையில் பொறுப்பை கொடுப்பவள் அதை என்ன ஏது என்று கூட கேட்க மாட்டாள்... அவளை பொறுத்தவரையில் நல்ல மருமகளாய், மனைவியாய் நடந்து கொண்டாள்... அது மட்டுமே தனக்கு முக்கியம் என்பது போல் இருந்தாள்...

தேவானந்த்தும் வீட்டில் தொழில் பேச கூடாது என்று சொல்லி இருப்பதால் அது அவளுக்கு வசதியாக போனது... தான் செய்ததை கணவன் வலிய சொன்னாலும்,

"ரூமுக்குள்ள நோ பிசினஸ்... ஒன்லி..." அந்தரங்கமாய் பேசி அவள் கண்சிமிட்டும் போது அவனும் தான் சொல்ல வந்ததை மறந்து அவளுடன் ஒன்றிவிடுவான்...

அவர்களது வாழ்க்கைச் சக்கரம் தங்கு தடையின்றி எந்தவித மாற்றமும் இல்லாமல் ஒரே சீராய் சுழன்றது...

அன்று அவர்களுக்கு திருமணம் முடிந்து ஓராண்டு ஆகியிருந்தது...

"ஹேப்பி வெட்டிங் அனிவர்சரி பேபி..." தூங்கி கொண்டு இருந்தவளை முத்தமிட்டு எழுப்பினான் தேவானந்த்...

மெதுவே கண்களை திறந்து அவனை பார்த்தவள், "தேங்க்யூ... சேம் டூ யூ தேவ்..." என்று நன்றி சொல்லி பதிலுக்கு வாழ்த்தியவள், "ஐ லவ் யூ தேவ்..." என்றாள் அவனது காதில் முணுமுணுப்பாய்...

"வார்த்தையால் மட்டும் சொன்னால் போதுமா பேபி..." என்றவனின் கைகள் செய்கையால் அதை அவளுக்கு உணர்த்த துவங்கியது...

"ம்... தேவ்... வேண்டாம்..." வாய் மறுத்த போதும் அவள் அவனுடன் ஒன்றத்தான் செய்தாள்...

குளித்து முடித்து வந்தவள் கடிகாரத்தை பார்க்க அது மணி ஆறை தாண்டி இருந்தது...

"தேவ்... எல்லாம் உங்களால தான்... இப்போ பாருங்க லேட்டாகிருச்சு... அத்தை என்ன சொல்ல போறாங்களோ..." படபடத்தவள் கையில் இருந்த ஈர துண்டை படுத்திருந்த அவன் மீது வீசினாள்...

அதை கையால் லாவகமாய் தடுத்தவன், "அத்தைக்கு எல்லாம் தெரியும்..." கண்சிமிட்டி சிரித்தவனை கண்டு முறைக்க முயன்று தோற்று தானும் சிரித்தவள்,

"ம்... இருங்க... இருங்க... அத்தை கிட்ட போய் சொல்றேன்... உங்க பையன் தான் எந்திரிக்க விடாம பண்ணிட்டாருன்னு..."

"சொல்லு... அம்மா கேட்டா நான் ஆமாம்ன்னு சொல்வேன்..." அலட்சியமாய் சொல்வது போல் சொன்னாலும் அவனது முகத்தில் குறும்பு கூத்தாடியது...

"உங்களை... கொஞ்சம் கூட விவஸ்தை கிடையாது..." அதற்கு மேல் அவனிடம் வாதாடாமல் அறையை விட்டு

வெளியில் வந்தாள்...

சமையலறைக்குள் அவள் நுழையும் போது பார்வதி வேலை பார்த்து கொண்டு இருந்தார்... அவள் வரவை உணர்ந்து திரும்பி பார்த்தவர் அவளுக்கு திருமணநாள் வாழ்த்து கூறிவிட்டு,

"எல்லா வேலையும் நான் முடிச்சிட்டேன்... நீ போய் தேவ் கூட இரு..." என்றார் இளையவர்களின் மனம் அறிந்த பெரியவராய்...

அதில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்துவிட்டது... குனிந்த தலை நிமிராமல் காபியை கலந்து கொண்டு தனது அறைக்கு சென்றாள்...

அவள் அறைக்குள் நுழைந்த போது தேவானந்த் நன்கு உறக்கத்தில் இருந்தான்... காபி கோப்பையை மேசை மீது வைத்தவள் அவன் அருகில் வந்து அமர்ந்தாள்...

உறங்கி கொண்டு இருக்கும் கணவனை ஆசை தீர பார்த்தாள்... இந்த ஓராண்டாக அவளது வாழ்க்கை வண்ணமயமாக, சந்தோசமாக செல்கிறது என்றால் அதற்கு முழுக்காரணமும் அவன் தான்...

சின்ன சின்ன விசயங்களிலும் விட்டு கொடுத்து பக்குவமாய் அவன் நடத்து கொண்டு வாழ்க்கையை வெற்றிகரமாக கடப்பதற்கு அவளுக்கு பெரிதும் உதவி புரிந்தான்...

தலை தீபாவளி, தலை பொங்கல் என்று பிறந்த வீட்டில் இருந்து அவர்களுக்கு அழைப்பு வந்த போது அவள் அங்கே செல்ல மிகவும் தயங்கினாள்... ஆனால் அவன் தான் அவள் மனதை தேற்றி அவளை அழைத்து கொண்டு அங்கு சென்றான்... போன இடத்திலும் அவளது பெற்றோரிடத்தில் பதவிசாய் நடந்து கொண்டு அவளது மனநிம்மதியை நிலைக்கச் செய்தான்... மொத்தத்தில் அவள் மனமறிந்து ஒவ்வொன்றையும் அவன் பார்த்து பார்த்து செய்தான்...

கணவன் மீதான காதல் மனதில் பெருக அவனது முன்னுச்சி முடியை கையால் வருடியவள் அவனது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டாள்...

'கடவுளே... இந்த சந்தோசத்தை என்னைக்கும் நிலைச்சு இருக்க செய்...' ஆண்டவனிடம் வேண்டி கொண்டாள்...

வேண்டியது எல்லாம் நிறைவேறி விட்டால் மனிதனின் கவலைக்கு இடம் இல்லையே...

******************************

"எங்கே போறோம் தேவா...?" பார்வதி மகனை பார்த்து கேட்டார்...

காரை ஓட்டி கொண்டு இருந்தவன், "அது சஸ்பென்ஸ்..." என்றான் புதிர் புன்னகையுடன்...

"உனக்கு ஏதும் தெரியுமாம்மா..." அருகில் அமர்ந்து இருந்த மருமகளை பார்த்து அவர் கேட்க...

"நானும் ஆயிரம் தடவை கேட்டு பார்த்துட்டேன் அத்தை... சொல்ல மாட்டேங்கிறார்..." சலித்து கொண்டவளை முன்புறம் கண்ணாடி வழியாக பார்த்த தேவானந்த் குறும்பாய் கண்சிமிட்டினான்...

'இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை...' சத்தம் வராமல் அவள் வாயசைத்தாள்...

'வேறு எதுல குறைச்சலாம்...' அவளை போலவே அவனும் வாயசைக்க... அதில் நாணமுற்றவள் ஜன்னல் வழியே வெளிப்புறம் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

அவளது வெட்கச்சிவப்பை ரசித்தபடி காரை ஓட்டியவன் மனம் என்றும் இல்லாத அளவுக்கு இன்று உற்சாகமாய் இருந்தது...

"பொறுமையா இரு பாரு..." சிவநேசன் மனைவியிடம் சொன்னாலும் அவருக்கும் மண்டை குடைந்தது...

"அண்ணா... ஸ்டார் ஹோட்டலுக்கு போறோமா..." சுஜானா கேட்க...

'இல்லை' என்று அவன் தலையசைத்து மறுத்தான்...

"ம்... ஷாப்பிங்..." அதற்கும் அவன் மறுக்க...

"சினிமா..." தங்கை கேட்டதும் அவனுக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"சுஜி குட்டி... நீ இன்னும் வளரணும்டா..." என்றான் சிரித்தபடி...

"போண்ணா... நீயுமாச்சு... உன் சஸ்பென்சுமாச்சு..." என்று அவள் முறுக்கி கொண்டாள்...

இறுதியாய் அவன் காரை நிறுத்திய இடத்தை கண்டு நால்வரும் முதலில் திகைத்து பின் முகம் மலர்ந்து அவனை பார்த்தார்கள்... அது ஒரு ஆதரவற்றவர்களுக்கான இல்லம்...

"இங்கே தான் நம்ம வெட்டிங் டே கொண்டாட போறோம்... அதை விட இன்னொரு சஸ்பென்சும் இருக்கு..." என்றவன் உள்ளே அழைத்து சென்றான்...

அங்கு ஒரு கட்டிடம் புதிதாய் கட்டப்பட்டு திறப்பு விழாவிற்காக காத்து இருந்தது...

அதற்குள் அதன் காப்பாளர் அவனை கண்டதும் ஓடி வந்தார்... அவர்களை வரவேற்று பேசி கொண்டு இருந்தவர் பேச்சு வாக்கில்,

"இந்த கட்டிடத்தை கட்டுவதற்கு எந்த சம்பளமும் வாங்காமல் கட்டிடத்துக்கான பணத்தை மட்டும் வாங்கி கொண்டு தம்பி தான் இதை கட்டி கொடுத்தது... அதுவும் மிக குறைந்த செலவில்..." என்று அவனை பற்றி பெருமையாய் கூறினார் அவர்...

"ஐயா... நான் என் வேலையை தான் செய்தேன்... எல்லாத்துக்கும் நம்ம சார் தான் காரணம்..." என்றான்

தன்னடக்கத்துடன்...

அந்த இல்லத்திற்கு உதவி செய்யும் ஒரு தொழிலதிபரை அவன் நன்றியுடன் சுட்டி காட்டினான்... காப்பாளர் மூலம் தான் அவருக்கு அவன் பழக்கமானான்... அவர் மட்டும் அவனை நம்பி இந்த பொறுப்பை ஒப்படைக்காவிட்டால் அவனால் இதை செய்திருக்க முடியாது...

தனக்கு வந்த வாய்ப்பை இறுக பற்றி கொண்டவன் அதை எந்தளவுக்கு நேர்மையாய் செய்து முடிக்க முடியுமோ அந்தளவுக்கு நேர்மையாய் செய்து முடித்தான்... அதற்கான கூலியாய் வந்த அவனது சம்பளத்தை கூட அவன் மறுத்துவிட்டான்... ஏதோ அவனால் இயன்ற உதவி இது...

"தேவ்..." கணவனின் முதல் கட்டுமான வேலையை கண்டு வருணிதா பிரமித்தாள்... கூடவே மனம் நெகிழ்ந்தது...

அவனின் பெற்றோருக்கும் அவனை கண்டு பெருமிதமாக இருந்தது...

அவர்களின் அன்றைய பொழுது அங்கே இனிமையாக கழிந்தது...

அன்று இரவு தனிமையில், "தேவ்... நான் இந்த நாளை என்னைக்கும் மறக்க மாட்டேன்..." நெகிழ்ச்சியுடன் சொன்ன மனைவியை அணைத்து கொண்டவன்,

"மறக்க கூடிய நாளா இது... என் தேவதை எனக்கு கிடைத்த நாள் அல்லவா..."

"ம்ஹூம்... என் தேவன் எனக்கு கிடைத்த நாள்..." மறுத்து கூறியவளிடம்,

"சரி... சரி... இப்படியே பேசிக்கிட்டு இருந்தா எப்படி...? இந்த நாளை கொண்டாட வேண்டாமா...?"

"ம்... ரொம்ப கிராண்ட்டா..." என்றவளை அவனது கரங்கள் ஆசையுடன் வளைத்து கொண்டது...

இந்த நிலையில் முரளி, சுகன்யா திருமணம் நிச்சயிக்கப்பட்டது... சென்னையில் தான் திருமணம் என்று முடிவாகி இருந்தது...
வருணிதா தனது மனஸ்தாபத்தை எல்லாம் மறந்து தங்கையின் திருமணத்திற்காக அலைவதில் பரபரப்பாய் இருந்தாள்... தேவானந்த்தும் மனைவியை என்ன ஏது என்று கேட்கவில்லை... அவளின் போக்கில் அவளை விட்டு விட்டான்...

அதோ இதோ என்று இருந்த திருமணநாளும் வந்தது... நகரத்தில் இருந்த மிகப்பெரிய விளையாட்டு மைதானத்தை திருமணத்திற்காக தேர்ந்து எடுத்து இருந்தார் கிரிதரன்...

"கல்யாணம்ன்னா இந்த மாதிரி செய்யணும் வேங்கடம்... வருணி கல்யாணமும் இது மாதிரி நடந்து இருக்க வேண்டியது... ம்ஹூம்... அவளே தன் தலையில் மண்ணை வாரி போட்டுக்கிட்டா..." பெரியப்பா எப்போதும் போல் திருவேங்கடத்திடம் குற்றப்பத்திரிக்கை வாசித்து கொண்டு இருந்தார்...

அதை கேட்ட வருணிதாவிற்கு சற்று சங்கடமாக இருந்த போதும் முன்பு போல் கோபம் வரவில்லை... அன்று அன்னை சொன்னதை கேட்ட பிறகு அவர்களின் நிலையில் இருந்து யோசித்தவள் தனது கோபத்தை ஒதுக்கி வைத்தாள்...

"தேவ்... எல்லோரும் கிளம்பிட்டீங்களா..." கணவனை அலைப்பேசியில் அழைத்து கேட்டாள் வருணிதா...

மாலை நேர வரவேற்பு நிகழ்ச்சிக்காக அவள் தங்கையோடு திருமண மண்டபத்தில் இருந்தாள்... தங்கைக்கு வேண்டிய நகைகள், புடவைகள் எல்லாவற்றையும் அவளிடம் கொடுத்து பத்திரமாக பார்க்க சொல்லி இருந்தார் பத்மா... அதனால் அவளால் கணவனோடு சேர்ந்து வர முடியவில்லை...

"வந்துக்கிட்டே இருக்கோம் வது... இன்னும் அரை மணி நேரத்தில் வந்துருவோம்..." என்ற கணவனின் பதிலில் நிம்மதியுற்றவளாய் தங்கையின் அலங்காரம் சரியாக இருக்கிறதா என்று பார்வையிட ஆரம்பித்தாள்...

"வருணி... சுகன்யாவை கவனிச்சது போதும்... நீயும் கொஞ்சம் மேக்கப் போட்டுக்கோ... அரசியல்வாதிங்க, நடிகர்ங்கன்னு பெரிய பெரிய ஆளுங்க எல்லாம் வர்றாங்களாம்... பார்க்கிறதுக்கு கொஞ்சம் பளிச்சின்னு இரு... உங்க வீட்டில் இருக்கிற மாதிரி சிம்பிள்ளா இருக்காதே..." போகிற போக்கில் பத்மா சொல்லிவிட்டு போக அதில் வருணிதாவின் முகம் வாடி போனது...

"ஆமா வருணி... அவருக்கு பெரிய பெரிய ஆளுங்களை எல்லாம் தெரியுமாம்... கல்யாணத்தில் எல்லோரையும் அறிமுகப்படுத்தறதா சொன்னாரு..." என்று குதூகலமாய் சொன்ன தங்கையை கண்டு எரிச்சல் வந்தது அவளுக்கு...

'உன் புருசன் பெரியாளுன்னா அது உன்னோடு...' மனதில் கோபம் கொள்ளும் போது சுகன்யாவின் குரல் கலைத்தது...

"வருணி இங்கே வா..." தங்கையின் குரலில் என்ன என்பது போல் அவள் பார்க்க...

"இந்த ரோஸ் உன் புடவைக்கு மேட்சா இருக்கும்..." என்றவள் தான் மணப்பெண் என்பதையும் மறந்து சகோதரியின் தலையில் ரோஜாப்பூவை வைத்து விட... தங்கையின் வெள்ளந்தி மனதில் வருணிதா மனம் வெட்கி போனாள்...

'ச்சே... என்ன நினைத்து கொண்டு இருக்கிறேன்... என் தங்கையை போய்...' மனதில் தன்னை கடிந்து கொண்டவள் தங்கையை அன்போடு அணைத்து கொண்டாள்...

அன்னை சொன்னது போல் நகரத்தின் அத்தனை பெரிய முக்கிய பிரமுகர்களும் அங்கே வருகை தந்திருந்தனர்... அவளுக்குமே அவ்வளவு கூட்டத்தை கண்டு பிரமிப்பாய் இருந்தது...

அவளை போல் தேவானந்த்தின் வீட்டினரும் அந்த பிரமாண்ட திருமண ஏற்பாட்டை கண்டு பிரமித்தனர்...

திருவேங்கடமும், பத்மாவும் அவர்களை வாசலில் வந்து வரவேற்று உள்ளே அழைத்து சென்றனர்... ஆனால் பார்வதி தான் அந்த பணக்கார பகட்டுத்தனத்தை கண்டு பயந்து அங்கு ஓரமாய் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்... அவருடன் சிவநேசனும், சுஜானாவும் அமர்ந்து கொண்டனர்...

"மாப்பிள்ளை... நீங்க மேடைக்கு வாங்க..." திருவேங்கடம் மருமகனை அழைக்க...

"இல்லை மாமா... இருக்கட்டும்..." என்று அவன் மறுத்தான்...

"வருணி... உங்களை தேடினா மாப்பிள்ளை..." மனைவியை சொன்னதும் அவனின் கண்கள் தானாய் அவளை தேடியது...

மேடையில் தங்கையின் அருகில் நின்று இருந்த வருணிதா அவனின் கண்ணில் விழுந்தாள்... அழகு சிலையாய் இருந்த மனைவியின் அழகு அவனை ஈர்க்க அவன் மாமனாருடன் இணைந்து நடந்தான்...

முரளியிடம் சம்பிரதாயத்துக்காக முகமன் கூறிய தேவானந்த்தை முரளி ஒரு பொருட்டாய் கூட மதிக்கவில்லை... அவனை பற்றி தெரியுமாதலால் அதை கண்டு கொள்ளாமல் தேவானந்த் மனைவி அருகில் வந்தான்...

"ஹேய் பேபி... மயக்குறேடி..." என்றான் அவளின் காதில் முணுமுணுப்பாய்...

கணவனது வார்த்தையும், அவனது கண்ணில் வழிந்த நேசமும் அவளை நாணமுற செய்து அவளை மேலும் அழகாக்கியது... அவளது நாணத்தில் தன்னை தொலைத்தவனாய் நின்று இருந்தவன் அவனை கண்டு முகம் சுளித்த வருணிதாவின் உறவினர்களை கவனிக்கவில்லை...

மறுநாள் திருமணத்திற்கு தேவானந்தின் அன்னை வரவில்லை என்று சொல்லிவிட்டார்...

"இல்லை தேவா... அங்கு ஏனோ என் மனசு ஒட்ட மாட்டேங்குதுப்பா... நமக்கு சரிசமமான ஆளுங்க கூட பழகினா போதும்ப்பா..." என்று அவர் மறுத்துவிட்டார்... அதனால் தேவானந்த் மட்டும் கிளம்பி சென்றான்...

வருணிதா அங்கேயே தங்கி இருந்தாள்... மனைவியை பிரிந்து இருந்த இந்த இரு நாளும் அவன் பெரிதும் தவித்து போய் விட்டான்... ஒருவழியாய் இன்று திருமணவிழா முடிய போவதை எண்ணி அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... மணமகன் கூட அந்தளவுக்கு சந்தோசப்பட்டு இருக்க மாட்டான்...

மனைவியை காண எண்ணி ஆவலாக சென்றவனுக்கு அங்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது... யாரையும் வாயிலில் காண முடியவில்லை... எல்லோரும் மணமக்களை சுற்றி மணமேடையில் கூட்டமாய் கூடி இருந்தனர்...

'சரி அங்கே சென்று பார்ப்போமே...' என்று நினைத்தவன் மணமேடையை நோக்கி சென்றான்...

அங்கு சூழ்ந்து இருந்த உறவினர் கூட்டத்தில் நீந்தி மனைவி அருகில் செல்ல அவனால் முடியவில்லை... தங்கையின் நெற்றிச்சுட்டியை சரி செய்தபடி நிமிர்ந்த வருணிதா கணவனை கண்டு கொண்டாள்... அவனை நோக்கி புன்னகைத்தபடி கையாட்டியவள்,

'இங்கே வாங்க...' என்று அழைத்தாள்... அதை கண்டதும் அவனது கண்ணில் மின்னல் வந்தது...

'சூப்பரா இருக்கேடி...' என்று ஆள்காட்டி விரலையும், கட்டை விரலையும் சேர்த்து வைத்து சத்தமில்லாமல் வாயசைத்து சொன்னான்...

பட்டு வேஷ்டி, சட்டையில் அழகாய் இருந்த கணவனை கண்டு அவளும், 'நீங்களும் தான்...' என்று ஜாடை

செய்தாள் கண்ணில் மயக்கத்துடன்...

அதற்குள் எல்லோர் கையிலும் அட்சதை கொடுக்கப்பட்டது... மனைவியை பார்த்து கொண்டே அதை வாங்கியவன் கண்கள் அவளை விட்டு அங்குமிங்கும் எங்கும் நகரவில்லை...

"மினிஸ்டர் வர்றார்... கொஞ்சம் நகருப்பா... இல்லைன்னா அங்கே கீழே போய் நில்லு..." வருணிதாவின் பெரியப்பா வேண்டும் என்றே அவனை மணமேடையில் இருந்து அப்புறப்படுத்த எண்ணினார்...

"மாமா... நான் வருணியோட ஹஸ்பெண்ட்..." ஒருவேளை அவருக்கு தன்னை அடையாளம் தெரியவில்லையோ என்று அவன் கூற...

"ஏன் தெரியாது... நல்லா தெரியும்... அதனால் தான் சொல்றேன்... உன்னை எங்க வீட்டு பொண்ணு காதலிச்ச பாவத்துக்கு கல்யாணம் பண்ணி கொடுத்தாச்சு... அதுக்காக எல்லாம் உன்னை எல்லா இடத்திலும் முன்னிலைப்படுத்திட்டு இருக்க முடியாது... அப்படியே உன்னை எல்லோர் கிட்டேயும் அறிமுகப்படுத்தினாலும் என்னன்னு அறிமுகப்படுத்தறது... எங்க சின்ன மாப்பிள்ளை கிட்ட வேலை செய்ற வேலைக்காரன்னா...” என்று அவனை எடுத்து எறிந்து பேசினார் அவர்.

அவரது ஒவ்வொரு வார்த்தையும் அவனது மனதை கொல்லாமல் கொன்றது... அவன் அதிர்ச்சியுடன் அவரை பார்த்தான்...அவரின் இந்த நேரிடையான தாக்குதலை அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை...

"தகுதி தெரிஞ்சு தானா ஒதுங்க தெரியணும்... எங்களை கேவலப்படுத்துறதுக்குன்னே சிலதுங்க வருது..." என்று முணுமுணுத்தபடி அவர் செல்ல...

அவனோ முகம் கன்றி போய் அவமானமுற்று நின்றிருந்தான்... அவனையும் அறியாது அவனது கண்கள் தன்னவளை தேடியது...

அவளும் அவனை தான் பார்த்து கொண்டு இருந்தாள்... பெரியப்பா கணவனிடம் ஏதோ சொல்ல அதில் அவனது முகம் கறுத்து போனதை கண்டு கொண்டு இருந்தவளுக்கு அங்கே ஒரு நொடி கூட நிற்க முடியவில்லை... கூட்டத்தை தள்ளி விட்டு விட்டு காற்றாய் தன்னவனை நோக்கி விரைந்து செல்ல வேண்டும் என்று அவளது மனம் பரபரத்தது...

ஆனால் போக விடாமல் தங்கையின் திருமண பொறுப்பு இடையில் தடையாய் நின்றது...

கண்கள் கலங்க அவனை பார்த்து யாசித்த மனைவியின் பார்வையில் தனது மனதை தேற்றி கொண்டு அவளை பார்த்து புன்னகைத்தான் அவன்... அதில் ஜீவன் இல்லை என்பதை உணர்ந்தவளின் இதயத்தில் இரத்த கண்ணீர் வடிந்தது...

அதற்குள் 'கெட்டிமேளம்... கெட்டிமேளம்...' என்று சொல்ல எல்லோரும் அட்சதையை மணமக்கள் மீது தூவினர்...

தேவானந்த் மற்றும் வருணிதா இருவரின் கைகளும் அட்சதையை இயந்திரகதியில் தூவியது... ஆனால் அவர்கள் இருவரின் மனமும் பரிதவித்து கொண்டு இருந்தது...

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு..." அவனை தாண்டி செல்லும் போது வேண்டும் என்றே பெரியப்பா குத்தி காட்டி பேசிவிட்டு போக, அதற்கு மேல் அங்கு நிற்க பிடிக்காமல் தேவானந்த் வெளியேறிவிட்டான்...

வருணிதா அவன் பின்னோடு ஓடி வந்தாள்... கணவனை விட கடமை முக்கியமாய் தோன்றவில்லை அவளுக்கு...

"தேவ்..." அவனை தடுத்து நிறுத்தியவள், "பெரியப்பா என்ன சொன்னாரு..." அதற்கு ஒன்றும் பேசாமல் இருந்த கணவனை கண்டு,

"நீங்க சொல்லலைன்னா என்ன...? அவர் என்ன பேசியிருப்பாருன்னு எனக்கு தெரியும்... அவர் என்ன

பேசியிருந்தாலும் அதுக்காக நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன் தேவ்... இப்போ நானும் உங்க கூட வர்றேன்... உங்களுக்கு மரியாதை இல்லாத இடத்தில் நானும் இருக்க மாட்டேன்..." என்றவளின் கையை பிடித்து ஆறுதலாய் தட்டி கொடுத்தவன்,

"ம்ப்ச்... இப்படி பட்டு பட்டுன்னு கோபப்படாதேன்னு சொல்லி இருக்கேன்ல... இது உன்னோட தங்கச்சி கல்யாணம்... இருந்து முடிச்சிட்டு வா... நான் மட்டும் கிளம்பறேன்... மாமா கேட்டா... எனக்கு வேலை இருக்குன்னு சொல்லிரு..." என்றான் சமாதானமாக...

"இந்த அப்பா கூட..." மேலே பேச போனவளின் வாய் மீது கை வைத்து தடுத்தவன்,

"நேத்து வாசல்ல வந்து வரவேற்கத்தானே செஞ்சாங்க... இன்னைக்கு இவ்வளவு பரபரப்பில் அவங்களை நாம எதிர்பார்க்கிறது ரொம்ப தப்பு... நீ இங்கே இருந்துட்டு வா... அதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை..."

அவனின் வார்த்தையில் அவனது முகத்தை ஏறிட்டவளின் கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்தது...

கணவன் தனக்காக தான் அந்த வார்த்தைகளை சொல்கிறான் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்... அவமானத்தில் கன்றி சிவந்த முகமும், கண்ணில் அடிப்பட்ட வலியுடன் நின்று இருந்தவனின் மனவேதனை அவளையும் வேதனைப்படுத்தியது...

திருமணமான இத்தனை நாளில் ஒரு நாள் கூட அவன் இந்த மாதிரி வேதனைப்பட்டு அவள் பார்த்தது கிடையாது...

"தேவ்..." கலக்கத்துடன் அவள் அவனை பார்க்க...

"ஆனா என்னால ஒரு நொடி கூட இங்கே இருக்க முடியாது... நானும் மனுசன் தான்... இப்போ எனக்கு தனிமை தேவைப்படுது... ப்ளீஸ் பேபி..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது விரைந்து விட்டான்...

அவன் செல்வதை வேதனையுடன் பார்த்து கொண்டு நின்று இருந்தாள் அவள்...

நேரே கட்டுமானம் நடக்கும் இடத்திற்கு வந்தான்... ஆட்கள் யாரும் இல்லாமல் அந்த இடமே வெறிச்சோடி இருந்தது... முதலாளிக்கு திருமணம் என்பதால் அனைவரும் அங்கே சென்று இருந்தனர்...

அப்போது தான் அவனது மூளையில் அது உறைத்தது... அவனும் அவர்களில் ஒருவன் தானே... முரளியிடம் கை நீட்டி சம்பளம் வாங்கும் ஒரு சாதாரண வேலைக்காரன் தானே அவனும்...

வருணிதாவின் பெரியப்பா சொன்னதில் என்ன தவறு இருக்கிறது... அவருடைய நிலையில் அவர் பேசியது சரி தான்... ஆனால் அவர் பேசும் நிலையில் இன்னமும் தான் இருப்பது தான் சரியில்லை என்று அவனுக்கு தோன்றியது...

வருணிதா போன்று பெரிய வீட்டு பெண் தன்னை காதலித்து திருமணம் செய்து இத்தனை நாட்களாய் முகம் கோணாமல் சந்தோசமாய் குடும்பம் நடத்துவதே பெரிய விசயம்... ஆனால் இன்று அவளின் கண்ணீருக்கு அவன் அல்லவா காரணமாகி இருக்கிறான்... அவனால் தானே அவளுக்கும் அவளது உறவுகளுக்கு மத்தியில் தலைக்குனிவு...

அவனால் அவன் பிறந்த பிறப்பை வேண்டும் என்றால் மாற்ற முடியாது... ஆனால் அவனின் அந்தஸ்தை மாற்றி கொள்ளலாம் அல்லவா...

மனதில் பல கேள்விகள் எழ யோசித்து கொண்டு இருந்தவனின் கால்கள் அது பாட்டுக்கு நடந்து கொண்டு இருந்தது...

குளிர்ந்த காற்று உடலை தழுவியதும் சுரணை வந்தவன் அப்போது தான் கவனித்தான் தான் எங்கு இருக்கிறோம் என்பதை...

அந்த உயரமான கட்டிடத்தின் மேல் பகுதியில் நின்று கொண்டு இருந்தான் அவன்... அந்த கட்டிடம் போல் தனது நிலையையும் உயர்த்த வேண்டும் என்று எண்ணம் அவன் மனதில் வலுவாய் தோன்ற ஆரம்பித்தது...

இத்தனை நாள் மத்திய வர்க்கத்து இளைஞனாய் எதிர்காலத்தை எண்ணி பயந்து பாதுகாப்பாய் வேலை தேடி கொண்டு சிறுக சிறுக சேமித்து கொண்டு இருந்த தேவானந்த் இன்று பலவாறு யோசித்து தனது முடிவை மாற்றி கொண்டான்...

வாழ்வோ சாவோ ஒரு கை பார்த்துவிடுவது என்று எண்ணியவன் மனதில் தனியே தொழில் தொடங்கும் எண்ணம் விருட்சமாய் வளர்ந்து நின்றது...

இதுவரை நீறு பூத்த நெருப்பாய் மனதில் கனன்று கொண்டு இருந்த லட்சியம் இன்று மனைவிக்காக பெரும் தீயாய் பற்றி எரிய ஆரம்பித்தது...

ஆனால் அந்த பெரும் தீ அவனது வாழ்க்கையை பற்றி எரியச் செய்ய போகிறது என்பதை அவன் அக்கணம் உணரவில்லை...

உறையும்...

எல்லா சடங்குகளும் முடிந்து மணமக்கள் முரளியின் வீட்டிற்கு கிளம்பி கொண்டு இருந்தனர்... வருணிதாவோ தனது வீட்டிற்கு கிளம்பினாள்... கணவனுக்கு மரியாதை இல்லாத அந்த இடத்தில் நிற்க அவளுக்குமே விருப்பம் இல்லை... அவன் அவளை அங்கே இருந்து கடமைகளை முடித்துவிட்டு வர சொன்னது அவனது பெருந்தன்மையாக இருக்கலாம்... ஆனால் அவளுக்கு அந்தளவுக்கு பெருந்தன்மையும் கிடையாது... பரந்த மனப்பான்மையும் கிடையாது...

அன்னையை தனியே அழைத்து தான் வீட்டிற்கு கிளம்புவதாக கூற, பத்மா அப்போது தான் மூத்தமகளின் முகத்தை கூர்ந்து கவனித்தார்... முகத்தில் சிரிப்பை தொலைத்து ஒருவித இறுக்கத்துடன் அவள் இருந்தவிதம் அவருக்கு கவலையை அளித்தது...

'சுகன்யா மாப்பிள்ளை வீட்டுக்கு போற இந்த நேரத்தில் இவள் என்ன பிரச்சினையை இழுத்து வச்சிருக்கான்னு தெரியலையே...' மனதில் நினைத்தவர்,

"என்ன வருணி இப்படி சொல்ற...? நீ புரிஞ்சு தான் பேசுறியா..."

"நல்லா புரிஞ்சதால தான் இப்படி பேசறேன்..." என்றாள் வெடுக்கென்று...

"என்னடி பேசுற... தலையும் புரியாம வாலும் புரியாம... சுகன்யாவை அவளோட வீட்டில் விட்டுட்டு வந்து நாம பேசிக்கலாம்... முதல்ல கிளம்பு..." மகளின் கையை பிடித்து இழுத்து அழைத்தவர் அப்போது தான் நியாபகம் வந்தவராய்,

"வருணி... மாப்பிள்ளை எங்கே...?"

"ம்..." அன்னையை முறைத்தவள், "அதோ இருக்காரே தெரியலையா...?" மேடையில் இருந்த முரளியை சுட்டிக் காட்டினாள் நக்கலாக...

"விளையாடாதே வருணி... நான் உன் புருசனை கேட்டேன்..." கண்டிப்புடன் அழுத்தமாய் வந்தது அவரது வார்த்தை...

"ஓ... இப்பத்தான் உங்களுக்கு அவரோட நியாபகம் வந்ததா...? உங்களுக்கு எல்லாம் பணக்கார மாப்பிள்ளையை தானே கண்ணுக்கு தெரியும்... தேவ்வை மாதிரி ஆளுங்களை எல்லாம் நீங்க ஒரு பொருட்டா கூட மதிக்க மாட்டீங்களே..." கோபமாய் இரைந்த மகளின் வார்த்தையில் பத்மாவிற்கு கலக்கம் உண்டானது...

சின்னமகள் திருமணத்தில் மூத்தமகளின் கோபம் அவருக்கு வருத்தத்தை கொடுத்தது... அவரை பொருத்தவரை இரு மக்களும் சந்தோசமாய் இருந்தால் தான் அவருக்கும் சந்தோசம்...

"ச்சு... என்ன பேசுற வருணி... நாங்க அப்படி நினைப்போமா... உன் காதல் கல்யாணத்தில் எங்களுக்கு கொஞ்சம் வருத்தம் தான் இல்லைன்னு சொல்லிட முடியாது... ஆனா இந்த ஒரு வருசமா மாப்பிள்ளையை நாங்க பார்த்துட்டு வர்றோம்... அவரை மாதிரி ஒரு குணமுள்ளவரை பார்க்க முடியாது... நாங்க பார்த்து இருந்தா கூட இப்படி பார்த்து இருப்போமான்னு தெரியலை... அந்தளவுக்கு அவர் குணம் தங்கம்... இப்போ உன் கல்யாணத்தை பத்தின எந்த வருத்தமும் எங்களுக்கு கிடையாது... அப்பா கூட தொழிலை உனக்கு தனியா வச்சு கொடுத்ததை நினைச்சு இப்போ கூட வருந்துறாரு... மாப்பிள்ளையை நம்பாம இப்படி பண்ணிட்டேனேன்னு என் கிட்ட புலம்பாத நாளில்லை..."

கடந்த ஒரு வருடமாய் அவர் மருமகனிடம் இருந்து வாழ்க்கை பாடத்தை கற்று இருந்தார்...

அன்னையின் வார்த்தையில் அவள் சற்று மலையிறங்கினாள்... ஆனால் ஒன்றும் பேசாது அமைதி காத்தாள்...

"யாராவது ஏதாவது சொன்னாங்களா வருணி...?" மகளின் தலையை ஆதரவாய் வருடியபடி கேட்டார்...

"ம்..." என்று தலையாட்டும் போதே அவளது கண்ணில் இருந்து கண்ணீர் முத்துக்கள் சிந்தி அவளது புடவையில் பட்டு சிதறியது...

"பெரியப்பா தான் அவரை ஏதோ சொல்லிட்டாரு... அது என்னன்னு தெரியலை... தேவ் மனக்கஷ்டத்தோட இங்கிருந்து போயிட்டாரு... அப்ப கூட என்னை இங்கே இருந்து எல்லா சடங்கையும் முடிச்சிட்டு தான் வர சொன்னாரு... யாருமே அவரோட குணத்தை பார்க்க மாட்டேங்கிறாங்க... ஏன்ம்மா எல்லோரும் பணத்தை மட்டுமே பார்த்து மனுசனை எடை போடுறாங்க..." மனம் தாங்க மாட்டாமல் அன்னையின் தோளில் சாய்ந்து அழுதாள் அவள்...

"ஐயோ... கடவுளே..." என்று மனம் பதறி போனார் பத்மா...

"பெரிய மனுசன்னு நினைச்சு பேசாம இருந்தா... இந்த மனுசன் பண்ணியிருக்கிற காரியத்தை பாரேன்... இன்னைக்கு இதுக்கு ரெண்டுல ஒரு முடிவு கட்டுறேன்... எனக்கு என் பொண்ணு, மாப்பிள்ளையை விட யாரும் முக்கியம் இல்லை... அவங்களை மதிக்காதவங்க எங்களுக்கும் வேணாம்..." என்று மகளை ஆறுதல் படுத்தியவர்,

"சரி நீ உன் வீட்டுக்கு கிளம்பு... எந்த ராத்திரி ஆனாலும் நானும் அப்பாவும் உன் வீட்டுக்கு வந்து மாப்பிள்ளை கிட்ட மன்னிப்பு கேட்கிறோம்.... அவரை தப்பா நினைச்சுக்க வேண்டாம்ன்னு சொல்லு வருணி..." மகளின் மனம் அறிந்து கூறினார்...

"எதுக்கும்மா நீங்க மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு... அது எல்லாம் வேண்டாம்... தேவ்வும் அதை விரும்ப மாட்டாரு..."

"அது அவரோட பெருந்தன்மை... இருந்தாலும் நாங்க பெண்ணை பெத்தவங்க வருணி... உன்னோட

கண்ணீருக்கு நாங்க மதிப்பு கொடுத்தே ஆகணும்... உன்னோட சந்தோசத்துக்காக எந்த விலைன்னாலும் கொடுக்க நாங்க தயாரா இருக்கோம்... அது எங்க சுயமரியாதையா இருந்தாலும் கூட..."

அன்னையின் வார்த்தையில் மனம் நெகிழ்ந்து அவரை அணைத்து கொண்டாள் அவள்... படபடவென்று பேசினாலும் பத்மா பலாப்பழம் போன்றவர்... பேசும் போது நறுக்கென்று பேசினாலும் பாசம் காட்டுவதில் அவரை மிஞ்ச ஆள் கிடையாது...

"ரொம்ப தேங்க்ஸ்ம்மா..."

"அம்மாவுக்கு தேங்க்ஸ் சொல்ற அளவுக்கு பெரியவளாகிட்டியோ..." என்று சிரித்தார் பத்மா...

பதிலுக்கு சிரித்தவள், "அப்ப நான் கிளம்பவா...?"

"பார்த்து பத்திரமா போயிட்டு வா..." என்றவர் ஓட்டுநரை அழைத்து அவளை காரில் கொண்டு விட சொன்னார்...

ஏன் என்று கேட்ட திருவேங்கடத்திடம் பிறகு சொல்வதாய் கூறியவர் சின்ன மகளை நோக்கி சென்றார்... திருவேங்கடம் மனதிற்கு ஏதோ ஒன்று சரியில்லை என்றே தோன்றியது... ஆனாலும் திருமண வீடு என்பதால் அமைதியாக இருந்தார்...

வீட்டிற்கு வந்ததும் வருணிதா முதலில் தேடியது தனது கணவனை தான்...

"தேவா... கல்யாணத்துக்கு தானே வந்தான்..." பார்வதி குழப்பமாய் மருமகளை பார்த்தார்...

"ஆமா... ஆனா அவர் உடனே கிளம்பிட்டார்..." என்று சொல்லும் போதே அவளுக்கு கண்கள் கலங்க துவங்கியது...

"அப்போ வேற ஏதாவது வேலையா வெளியில் போயிருப்பான்... நீ சாப்பிட்டியா வருணி...?" என்று பாசமாய்

கேட்டவரிடம் ஆமென்று பொய்யுரைத்தவள் தங்களது அறைக்கு சென்றாள்...

அறைக்குள் நுழைந்ததும் அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த அழுகை எல்லாம் விம்மலாய் வெளிப்பட்டது... கைகள் தாமாக அலைப்பேசியை எடுத்து கணவனுக்கு அழைத்தது...

அலைப்பேசி அழைப்பில் தனது யோசனையை கலைந்த தேவானந்த் அதை எடுத்து பார்த்தான்... அவன் அருமை மனைவி தான் அழைத்தாள்... அவனையும் அறியாது உதட்டில் புன்னகை பூத்தது... அலைப்பேசியை உயிர்ப்பித்து அவன் காதில் வைத்தது தான் தாமதம் அந்தப்புறம் இருந்து அவளின் அழுகை ஒலி தான் முதலில் கேட்டது...

"தேவ் எங்கே இருக்கீங்க...? எனக்கு ரொம்ப பயமா இருக்கு..." மேலே பேச முடியாமல் தேம்பியவளின் நிலையை உணர்ந்தவனாய்,

"வது பேபி..." என்றான் ஒற்றை அழைப்பில் மொத்த காதலையும் தேக்கி...

அவனது குரலில் இருந்த நேசம் அவளை சற்று அமைதிப்படுத்தியது...

"ம்... ம்..."

"என்ன இது... என்னவெல்லாமோ பேசுற...? என்னம்மா ஆச்சு...?"

அவனது அக்கறையில் அவளுக்கு மேலும் அழுகை பொங்கியது... அவனது மனக்குறையை மறைத்து அவளை பற்றி அக்கறையாக விசாரிக்கும் அவனின் காதலை எண்ணி நெஞ்சம் விம்மியது அளவு கடந்த காதலால்...

"நா... நான் இப்பவே உங்களை பார்க்கணும்..." என்று தேம்பியவளின் வார்த்தையில் அவளது மனம் புரிய...

"இதோ இருபது நிமிசத்தில் அங்கே இருப்பேன்... பேபி சமத்தா ரெஸ்ட் எடுப்பீங்களாம்..." அவளிடம் பேசி

கொண்டே கீழே இறங்கியவன் தனது காரை கிளப்பி இருந்தான்...

சரி என்று அலைப்பேசியை துண்டித்தாள் அவள்... அவளது அழுகை அவனை காரை வேகமாய் செலுத்த தூண்டியது...

சொன்னது போல் இருபது நிமிடத்தில் அறைக்குள் நுழைந்தவனை கண்டதும் முகம் மலர்ந்தவள் அவனை இறுக்கி அணைத்து கொண்டு முகம் முழுவதும் முத்தமழை பொழிந்தாள்...

அவளது நேசத்தில் கட்டுண்டு அவன் கண்களை மூடி அவளின் காதலை அமைதியாய் ரசித்து கொண்டு இருந்தான்...

"இப்படி என்னை தனியா தவிக்கவிட்டுட்டு போயிடாதீங்க தேவ்... உங்களுக்கு என்னாச்சோ ஏதாச்சோன்னு பயந்து போயிட்டேன்... உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் உயிரை விட்டுருவேன் தேவ்..." என்று அழுது புலம்பியவளின் காதல் அவன் மனதை சுகமாய் தாலாட்டியது...

"ஏய் லூசு... உன் கிட்ட ஏற்கெனவே சொல்லியிருக்கேன் நான் செத்தா கூட உன்னையும் கொன்னு என்னோட கூட்டிட்டு போவேன்னு... அப்படிப்பட்ட நான் உன்னை எப்படி தனியா தவிக்க விட்டு போவேன்..."

அதில் ஆறுதல் அடைந்தவள் முகம் நிம்மதியை தத்தெடுத்தது... அவளது நிம்மதியில் அவனது மனமும் நிம்மதி அடைந்தது... அவளை கட்டிலில் அமர்த்தி தானும் உடன் அமர்ந்தவன்,

"இப்போ நான் உனக்கு ஒரு குட் நியூஸ் சொல்ல போறேன்..."

அவனது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியில் அவளும் முகம் மலர, "என்ன குட் நியூஸ்... சொல்லுங்க... சொல்லுங்க..." ஆர்வமாய் கேட்டவளின் மூக்கை பிடித்து ஆட்டியவன்,

"என்னோட பேபிக்கு நான் தனியா பிசினஸ் பண்ணணும்ன்னு ஆசையாம்... அந்த ஆசையை நிறைவேத்தலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேன்..." என்றவனை கண்டு ஆச்சிரியத்தில் விழி விரிய பார்த்தாள்...

அவளது அகன்ற விழியில் மூழ்கி தன்னை தொலைத்தான் அவன்...

"கண்ணால் கபளீகரம் செய்றதுன்னு சொல்றாங்களே... அது இது தானா பேபி...?" மையலுடன் கேட்டவன் அவளது விழியை தனது ஆள்காட்டி விரலால் மெல்ல வருடினான்...

அதை உணரும் நிலையில் அவள் இல்லை...

"உண்மையாவா தேவ்..." மகிழ்ச்சியில் அவள் ஆர்ப்பரித்தாள்...

"உன் கிட்ட நான் பொய் சொல்வேனா..." என்றவன் ஆசையுடன் அவள் முகம் நோக்கி குனிந்தான்...

அவனது செய்கையை உணராது கட்டிலில் இருந்து அவள் எழ, அவன் ஏமாற்றத்துடன் அவளை பார்த்தான்...

அவளோ இமைக்கும் நேரத்தில் அவனது கன்னத்தில் தனது இதழை ஒற்றி எடுத்தவள், "ஸ்வீட் தேவ்... நான் இப்பவே இதை அத்தை கிட்ட சொல்ல போறேன்..." என்று கூறிவிட்டு சிட்டாக அறையை விட்டு வெளியேறினாள்...

அவளின் குதூகலம் கண்டு தனக்குள் சிரித்து கொண்டான் அவன்... அவளது சந்தோசத்திற்காக எதையும் செய்ய விழைந்தது அவனது காதல் மனம்...

அவனும் அறையை விட்டு வெளியில் வந்தான்...

"தேவா... வருணி சொல்றது எல்லாம் நிஜம் தானா...?" பார்வதி மலைப்பாய் மகனிடம் கேட்டார்...

"ஆமாம்மா..." என்றபடி அவர் அருகே அமர்ந்தான்...

"நம்மளால முடியமாப்பா... அவசரப்பட்டு எதுவும் முடிவு எடுக்கலையே...?" கவலையாக கேட்டார் சிவநேசன்...

"இல்லைப்பா... ரொம்ப நாளா யோசிக்கிட்டு இருந்தது தான்ப்பா... இன்னைக்கு தான் இறங்கி பார்க்கலாம்ன்னு முடிவு எடுத்தேன்..." என்றவனின் குரல் அவனையும் அறியாது இறுகி போயிருந்தது...

அவனது பெற்றோர் அதை பெரிதாக கண்டு கொள்ளவில்லை... அவர்களுக்கு வித்தியாசமாய் எதுவும் தோன்றவில்லை போலும்...

ஆனால் கணவனின் குரல் மாற்றத்தை உணர்ந்த வருணிதாவுக்கு அப்போது தான் புத்தியில் உறைத்தது காலையில் நடந்த நிகழ்வுகள்... அவள் கலக்கத்துடன் அவனை பார்த்தாள்... மாமனார், மாமியார் முன்னிலையில் எதையும் அவள் கேட்கவில்லை... இரவு கேட்டு கொள்ளலாம் என்று அமைதியாய் இருந்து விட்டாள்...

இரவு உணவு முடிந்து எல்லோரும் உறங்க செல்லும் சமயம் அழைப்பு மணி சத்தம் கேட்டது... சிவநேசன் போய் கதவை திறந்தார்...

"வாங்க சம்பந்தி... வாம்மா தங்கச்சி..." அவரது உற்சாக குரலில் எல்லோரும் வரவேற்பறைக்கு வந்தனர்...

திருவேங்கடமும், பத்மாவும் தான் வந்து இருந்தனர்... பத்மா சொன்னது போல் கணவரை அழைத்து கொண்டு வந்துவிட்டார்... சுகன்யாவை முதலிரவு அறைக்கு அனுப்பியதும் அவர் கணவரிடம் விசயத்தை கூற, திருவேங்கடத்துக்கு அப்போது தான் எல்லாம் புரிந்தது... அவருக்குமே தன்னுடைய சகோதரர் தேவையில்லாமல் பேசியது கண்டு எரிச்சலாக இருந்தது... உடனே மனைவியை அழைத்து கொண்டு மகள் வீட்டிற்கு வந்துவிட்டார்...

சிவநேசனும், பார்வதியும் அவர்களை வரவேற்று சிறிது நேரம் பேசி கொண்டு இருந்தவர்கள் உறங்க

சென்றுவிட்டனர்...

அவர்களின் வருகை தேவானந்த்திற்கு சற்று உறுத்தலாக இருந்தது... மனைவியை கேள்வியாய் பார்த்தான்... அவளோ அவனை காண முடியாமல் தலை குனிந்தாள்... அவளுக்கு தெரியும் பெற்றோர் வந்த விபரம் தெரிந்தால் கணவன் தன்னை திட்டுவான் என்று... விசயத்தை அவர்களிடம் சொன்னதற்கு கோபப்பட்டாலும் படலாம்... அதனால் அவனை பார்ப்பதை தவிர்த்தாள்...

அங்கே கனத்த மௌனம் நிலவியது... திருவேங்கடம் சங்கடமாக மருமகனை பார்த்தார்...

"மாப்பிள்ளை... அண்ணன் ஏதோ தவறா பேசிட்டாரு... அவருக்காக நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்..."

"ஐயோ... நீங்க பெரியவங்க எதுக்கு மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு..." பதறி போய் அவரிடம் சொன்னவன் மனைவியை முறைத்து பார்த்தான்... எங்கே அவள் நிமிர்ந்து பார்த்தால் தானே...

"இல்லை தம்பி... என்ன இருந்தாலும் இவங்க அண்ணன் உங்க கிட்ட அப்படி நடந்து இருக்க கூடாது..." என்ற பத்மாவும் அவனிடம் மன்னிப்பு கேட்டார்..

வருணிதாவின் பெரியப்பா அவனிடம் என்ன பேசினார் என்று தெரியாத போதும் அவளின் பெற்றோர் அவனிடத்தில் மன்னிப்பு கேட்டது அவனுக்கு சிறிது சங்கடமாக இருந்தது...

"விடுங்கத்தை..." பெருந்தன்மையாய் சொல்லியவன் வேறு பேச்சு பேச ஆரம்பித்தான்...

அவன் அந்த பேச்சை விரும்பவில்லை என்பதை அவர்களும் புரிந்து கொண்டு வேறு விசயங்கள் பேசினர்...

அவர்கள் சென்றதும் தேவானந்த் மனைவியை கடிந்து கொண்டான்...

"எதுக்கு தேவையில்லாம பெரியவங்க மனசை கஷ்டப்படுத்துற...?"

"நீங்க மட்டும் மனசு கஷ்டப்படலாமா...? அதான் அம்மா கிட்ட சொன்னேன்..."

"எதுவா இருந்தாலும் நீ சொல்லியிருக்க கூடாது வது..." என்றான் கண்டிப்புடன்...

"நீங்க என்னை தனியா விட்டுட்டு போயிட்டீங்க... எனக்கு அங்கே இருக்கவே பிடிக்கலை... அழுகையா வந்தது... நான் யார் கிட்ட தான் என் மனக்கஷ்டத்தை சொல்லி அழறது...?" சொல்லும் போதே அவளுக்கு கண்ணீர் முட்டி கொண்டு நின்றது...

அவளது கண்ணீரை கண்டதும் கை நீட்டி அவளை வளைத்து பிடித்தவன், "ஆ ஊன்னா இப்படி அழுது மனுசன் மனசை கரைச்சிரு..." என்றவன் அவளை தனது கரங்களில் தூக்கி கொண்டு அறைக்கு சென்றான்...

"தேவ்..."

"சொல்லு..."

"எனக்காகவா இந்த முடிவு எடுத்தீங்க...?"

கட்டிலில் அவளை இறக்கிவிட்டு விட்டு அவளது கண்களை ஆழ்ந்து பார்த்தவன்,

"ம்... உனக்காக தான் உனக்காக மட்டும் தான்... எனக்காக உன் வீட்டு ஆளுங்க கிட்ட நீ தலை குனிஞ்சு நின்னது போதும்... அவங்க முன்னாடி உன்னை தலை நிமிர்ந்து வாழ வைக்கணும் பேபி..." என்றான் தீவிர குரலில்...

"தேவ்..." அவனது வார்த்தையில் நெகிழ்ந்தவள் அவனை அணைத்து கொண்டாள்...

தன்னுடைய சந்தோசத்திற்காக எதையும் செய்ய தயாராக இருக்கும் கணவனை கண்டு அவளது மனம் காதலால் உருகியது...

மறுநாளே திருவேங்கடம் தனது அண்ணனிடம் சத்தம் போட்டார்...

"அண்ணா... நீங்க என்னுடைய மாப்பிள்ளையை பேசியது ரொம்ப தப்பு... நீங்க எனக்கு எவ்வளவு முக்கியமோ... அதை விட அவர் எனக்கு ரொம்ப முக்கியம்... இப்படியே நீங்க பேசிக்கிட்டு இருந்தா நம்ம உறவை பத்தி நான் யோசிக்க வேண்டி வரும்..." என்று பட்டு கத்திரித்தார் போன்று அவர் பேச, அதில் கோபம் கொண்டு அவரது அண்ணன் ஊருக்கு சென்றுவிட்டார்... கூடவே தம்பி, தங்கையையும் அழைத்து கொண்டு...

திருவேங்கடமும், பத்மாவும் அதை பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... மகளின் காதல் முன்னால் தங்களது மானம், உறவுகள் இதை பெரிதாக யோசித்தனர்... இதே இது மகளின் திருமண வாழ்க்கை முன்னால் அது எல்லாம் பெரியதாக அவர்களுக்கு தெரியவில்லை... அவளது மனநிம்மதியே அவர்களுக்கு பெரிதாக தெரிந்தது... மாறுவது மனித இயல்பு தானே...

தனியாக தொழில் தொடங்க வேண்டும் என்று எண்ணினாலும் தேவானந்த் எதிலும் அவசரம் காட்டவில்லை... நிதானமாக தனது ஒவ்வொரு அடியையும் யோசித்து வைத்தான்... அவனுக்கான முதல் வாய்ப்பு இல்லத்திற்கு உதவி செய்யும் தொழிலதிபர் மூலம் வந்தது...

அவரிடம் பணி புரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுக்க வேண்டி அவர் அவனிடம் கேட்டார்... அவனது நேர்மை, தொழில் மீது அவனுக்கு இருந்த சிரத்தை இரண்டும் அவரை பெரிதாக கவர்ந்தது... அதனால் இந்த திட்டத்தை அவனிடம் ஒப்படைக்க எண்ணினார்...

அதை அவனும் சந்தோசமாக ஏற்று கொண்டான்...

இதை கேள்விப்பட்ட முரளி கூட நக்கலாய், "வருணிதா... எதுக்கு உங்க ஹஸ்பெண்ட்க்கு இந்த வேண்டாத வேலை...

இந்த தொழிலில் ஜெயிக்கிறது ரொம்ப கஷ்டம்... இது ஒண்ணும் சின்னப்பிள்ளைங்க கட்டி விளையாடுற மண்வீடு கட்டுறது இல்லை... பேசாம இங்கே வந்து ஒழுங்கா வேலை பார்க்க சொல்லுங்க... சம்பளமாவது மிஞ்சும்..."

அவன் இளக்காரமாய் பேசியதை கேட்ட வருணிதாவிற்கு தாங்க முடியாத ஆத்திரம் வந்தது... ஆனாலும் அவன் தங்கையின் கணவன், அப்பாவின் நண்பரின் மகன் என்பதால் ஆத்திரத்தை அடக்கி கொண்டு,

"மிஸ்டர். முரளி... எதற்கும் முதல் முறைன்னு ஒண்ணு உண்டு உங்களுக்கும் சரி, உங்கப்பாவுக்கும் சரி... அது போல் தான் என் தேவ்வுக்கும்... அவர் நிச்சயம் ஜெயிப்பார்ங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு..."

அவளது பேச்சில் முகம் கறுத்து போனாலும், "அதையும் பார்க்கத்தானே போறேன்..." என்றான் முரளி அலட்சியமாய்... அவள் ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியேறிவிட்டாள்...

இரு வீட்டு பெற்றோர், கிரிதரன், இல்லக் காப்பாளர், தொழிலதிபர் இவர்களை கொண்டு ஒரு சுபநாளில் எளிமையாய் உதயமானது அவனது நிறுவனம்...

'சிவா கன்ஸ்ட்ரக்சன்' என்று தந்தை பெயரில் நிறுவனத்தை ஆரம்பித்தான் அவன்... அதில் சிவநேசன் மனம் நெகிழ்ந்து போனார்... அவரது கண்ணில் ஆனந்தக் கண்ணீர் கோர்த்தது... இதை விட ஒரு மகன் தந்தையை பெருமைப்படுத்தி விட முடியாது... அவனை கஷ்டப்பட்டு பெற்று, வளர்த்து, ஆளாக்கியதற்கு அவரது மகன் பெருமை சேர்த்துவிட்டான்... பார்வதிக்கும் மகனின் செயல் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது...

அன்றே அவன் கட்டுமானத்திற்கான பூமி பூஜையும் போட்டுவிட்டான்...

முதலில் வேலை பார்த்த நிறுவனத்தில் அவனுக்கு கீழே தனியாக ஒரு கட்டுமான குழு இருந்தது... அவர்கள் அனைவரும் அவன் தனி நிறுவனம் ஆரம்பித்ததும் அவனிடம் வந்துவிட்டனர்...

தேவனந்த்தின் தட்டி கொடுத்து புன்னகை முகமாய் வேலை வாங்கும் விதம் அவர்கள் அனைவருக்கும் பிடிக்கும்... அவர்களின் நலத்தை தன்னுடைய நலமாக கருதி அவன் விசாரிப்பான்... அதோடு நில்லாமல் அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்யவும் செய்வான்... இது எல்லாம் அவனிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்களிடையே அவனுக்கு நன்மதிப்பை பெற்று தந்திருந்தது...

அதற்கும் முரளி வருணிதாவிடம் தாம்தூம் என்று குதித்தான்...

"வருணிதா... உங்க ஹஸ்பெண்ட் செய்றது எதுவும் சரியில்லை... அவனுக்கு ஆட்கள் வேணும்ன்னா வேறு எங்கு இருந்தாவது எடுத்துக்க சொல்லுங்க... அதை விட்டுட்டு இங்கே இருந்து கூட்டிட்டு போனா எப்படி...? நாங்க நல்லா ட்ரெயின் பண்ணி வைப்போம்... அவர் நோகாம கூட்டிட்டு போவாரா...? நான் எனக்காக மட்டும் கோபப்படலை... உங்களுக்காகவும் தான் கோபப்படுறேன்... ஏன்னா நீங்களும் இந்த கம்பெனியில் ஒன் ஆஃப் த பார்ட்னர்... அவன் செஞ்ச வேலையால பாதிக்கப்படுறது நம்ம கம்பெனி தான்..."

முரளி பேச பேச அவளுக்கு தலைவலித்தது... முரளி சொல்வதிலும் நியாயம் இருக்கிறது... அதே சமயம் கணவன் மேலேயும் குற்றம் காண முடியவில்லை... அவனாக யாரையும் வருந்தி அழைக்கவில்லை... தானாக வந்தவர்களை தான் அவன் வேலைக்கு எடுத்து கொண்டான்... யார் பக்கம் பேசுவது என்று தெரியாமல் அவள் விழித்தாள்...

வீட்டிற்கு வந்தவள் முகமே சரியில்லை... இரவு வீட்டிற்கு வந்த தேவானந்த் அவளது முகவாட்டத்தை கண்டு

கொண்டு தான் இருந்தான்... எல்லோர் முன்னிலையில் கேட்க மனமில்லாமல் தனிமையை எதிர்பார்த்து காத்திருந்தான்...

உறங்க அறைக்கு வந்தவளிடம், "பேபிம்மா மனசை என்ன விசயம் போட்டு வாட்டுது..." என்றபடி அணைத்தவனின் அணைப்பில் அவளது மனசஞ்சலம் மறைய,

"அது வந்து தேவ்..."

"அதான் வந்தாச்சே... சொல்லு பேபி..." என்றான் சரசமாய்...

முரளி கூறியதை கூறியவள் அவனை கலக்கத்துடன் ஏறிட்டாள்...

"இதில் நான் தப்பு பண்ணி இருப்பேன்னு நீ நினைக்கிறியா...?" கூர்மையாய் அவளை பார்த்தான் அவன்...

அவன் தன்னை தவறாக எண்ணிவிட்டானோ என்று பதறி போனவளாய்,

"ஐயோ இல்லைங்க... இதில் உங்க தப்பு ஏதும் இல்லை..." என்றாள் அவசரமாய்...

அவளது பதிலில் ஒரு பெருமூச்சை விட்டவன்,

"இனி இது மாதிரி பிரச்சினைகள் நிறைய வரும் வது..."

அவன் கூறியதை கேட்டு அவள் திடுக்கிட்டு அவனை பார்த்தாள்...

"உண்மை தான் வது... ஏன்னா நாம ரெண்டு பேரும் ஒரே தொழிலில் இருக்கோம்... இந்த மாதிரி பிரச்சினைகள் அடிக்கடி வர வாய்ப்பு இருக்கு..." என்றவன்,

"ஆனா ஒரே ஒரு விசயத்தை மட்டும் நீ நல்லா நியாபகம் வச்சுக்கோ... நானா வலிய போய் எதையும் செய்ய மாட்டேன்... அதுக்காக வலிய வர்ற சந்தர்ப்பத்தை விட்டுவிடவும் மாட்டேன்..."

அவனது பேச்சில் கலக்கமுற்று அவள் பார்த்தாள்...

"ஏன்னா எனக்குள் ஜெயிக்கணும்ங்கிற வெறி கொழுந்துவிட்டு எரியுது பேபி... நான் ஜெயிச்சு உன்னை சந்தோசமா வச்சுக்கணும்... எனக்காக நீ சிந்துற கண்ணீர் ஆனந்தக் கண்ணீரா மாறணும்... அது மட்டும் தான் இப்ப என் மனசில் ஓடிட்டு இருக்கு... வேற எதுவும் என் மனசில் இல்லை... உனக்காக எதையும் செய்ய நான் தயாரா இருக்கேன்..."

இதை சொல்லும் போது அவனது கண்கள் இரண்டும் பளபளத்தது...

"நிச்சயமா நீங்க ஜெயிப்பீங்க தேவ்..." தனக்காக முன்னேற நினைக்கும் கணவனை அவளும் வார்த்தைகளால் உற்சாகமூட்டினாள்...

அவளது வார்த்தையில் அவன் முகத்தில் சிரிப்பு வந்தது...

"நீ இருக்கும் போது எனக்கு என்ன கவலை..." என்றவன் அவளது முகவடிவை தனது கையால் அளந்தபடி,

"ஒண்ணு மட்டும் நல்லா நியாபகம் வச்சுக்கோ... தொழில்ல நாம எதிர் எதிரா நின்னாலும் வீட்டில் நாம கணவன், மனைவி... அந்த நினைப்பு உனக்கு எப்பவும் இருக்கணும்... தொழிலை வீட்டுக்கு கொண்டு வர்றதை நான் விரும்பலை... இனி முரளி கிட்டேயும் சொல்லிடு... என்ன பிரச்சினைன்னாலும் நேரடியா என் கிட்ட பேச சொல்லு... நான் அவன் கிட்ட பேசிக்கிறேன்... நான் யாருடைய தொழிலையும் கெடுக்கலைன்னு அவன் கிட்ட சொல்றேன்... இதை எல்லாம் நினைச்சு நீ கவலைப்படாதே பேபி... உனக்கு எந்த கஷ்டத்தையும் நான் கொடுக்க விரும்ப மாட்டேன்..."

அவனின் பேச்சில் முகம் மலர்ந்தவள் மகிழ்ச்சியாய் அவனின் நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

அடுத்து வந்த நாட்கள் வேகமாய் சென்றது... இருவரும் அவரவர் வேலையில் பரபரப்பாக இருந்தாலும்

அவர்களுக்கு என்று கிடைத்த இரவின் தனிமையை இனிமையாக பயன்படுத்தி கொண்டனர்... அவளை விட தேவானந்த் அவளை மிகவும் சந்தோசமாக பார்த்து கொண்டான்... அவளின் கண் பார்த்து ஒவ்வொன்றையும் செய்தான்...

தொழிலில் போட்டியாளனாக அவன் முரளியால் உருவகப்படுத்தப் பட்டாலும் வீட்டில் அன்பு கணவனாக தான் அவளிடம் அவன் நடந்து கொண்டான்... அதுவே அவர்களுக்குள் இன்னமும் காதலை அதிகப்படுத்தியது...

அன்று வேலை முடித்து களைத்து போய் வந்த தேவானந்த் தனக்கு முன் வீட்டில் இருந்த மனைவியை கண்டு சந்தோசமானவனாய்,

"ஹேய்... என்ன ஆச்சிரியமா இருக்கு... சீக்கிரம் வந்துட்ட...?" என்று கேட்டபடி அருகில் வந்தவன் அப்போது தான் கவனித்தான் அவளது முகமாற்றத்தை...

"இன்னைக்கும் அந்த முரளி ஏதும் திட்டினானா..." கோபமாய் வினவியவனை உணர்வற்ற பார்வை பார்த்தவள்,

"திட்டலை... சந்தோசப்பட்டு ஸ்வீட் கொடுத்தான்..." என்றாள் மொட்டையாக...

"என்னது ஸ்வீட் கொடுத்தானா...?" திகைப்பாய் மனைவியை பார்த்தான் அவன்...

"ம்... சுகன்யா குழந்தை உண்டாகி இருக்காளாம்..." அவள் சொன்னதும் மகிழ்ச்சியை முகத்தில் அப்பட்டமாய் காட்டியவன்,

"ஓ... அப்போ சந்தோசமான விசயம் தான்... அதுக்கு ஸ்வீட் என்ன, ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல விருந்து வச்சே கொண்டாடலாம்..." என்றவன் உடை மாற்ற போனான்...

"நாம எப்போ விருந்து கொடுக்க போறோம் தேவ்...?" என்றவளின் கேள்வியில் அவன் அசையாது நின்று

விட்டான்…

உறையும்…

மனைவியின் வார்த்தையில் ஒரு நொடி திகைத்து நின்ற தேவானந்த் அடுத்த நொடி புன்னகையுடன் அவள் அருகே வந்தான்...

"நீ மட்டும் அந்த சந்தோசமான நியூசை சொல்லி பாரு... அதை எப்படி கொண்டாடுறதுன்னு நான் சொல்றேன்..." அவனது முகத்தில் அத்தனை சந்தோசம் நிரம்பி இருந்தது...

அதில் ஒரு துளி சந்தோசத்தை கூட வருணிதாவின் முகம் பிரதிபலிக்கவில்லை... எங்கோ வெறித்து கொண்டு இருந்தாள் அவள்... அதை கண்டு அவன் முகம் யோசனையாய் சுருங்கியது...

"என்னடா...?" என்று கேட்டபடி அவளது முகத்தை தன் பக்கம் திருப்பினான் அவன்...

"எனக்கு குழந்தை பிறக்குமா தேவ்...?" அவளது கேள்வியில் அவன் அதிர்ந்துவிட்டான்...

"இது என்ன லூசுத்தனமான கேள்வி பேபி...? நமக்கு குழந்தை பிறக்கும்... பிறக்காதுன்னு யார் சொன்னா...?"

"நமக்கு கல்யாணமாகி ஒன்றரை வருசமாகுது... இன்னும் குழந்தை உண்டாகலையே..." ஏக்கத்துடன் கேட்டவளின் ஏக்கம் அவனையும் தாக்கத்தான் செய்தது...

மழலைச் செல்வம் என்பது வாழ்க்கையின் வரமல்லவா... அதை விரும்பாதவர் பாரினில் உண்டோ...? அவனுக்கும் குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும் தான்... அதற்காக வருணிதாவை போல் அவன் ஏங்கவும் இல்லை... வருந்தவும் இல்லை... வரும் போது வரட்டும் என்று நினைத்தான்... அவளை போல் மனதை வருத்தி கொள்ளவில்லை...

"நமக்கு கல்யாணமாகி ஒன்றரை வருசம் தானே ஆகுது... என்னவோ ஒன்பது வருசமானது மாதிரி ஏன் இப்படி ரியாக்சன் கொடுக்கிற பேபி... கல்யாணமாகி இருபது

வருசம் கழிச்சு கூட குழந்தை பெத்தவங்க இருக்காங்க... இது கடவுளா பார்த்து கொடுக்கிற வரம்... கடவுள் நமக்கு அந்த வரத்தை எப்போ கொடுக்கணும்ன்னு நினைக்கிறானோ அப்போ கொடுப்பான்... அதுக்காக நீ ஏன் கவலைப்படுற பேபி..." சின்னக்குழந்தைக்கு எடுத்து சொல்வது போல் எடுத்து சொல்லி அவளுக்கு புரிய வைத்தவன் அவளது முகத்தை தனது இரு கரத்தில் தாங்கி,

"இங்கே பார் பேபி... அதுவரைக்கும் நாம நம்ம ஃலைப்பை நல்லா என்ஜாய் பண்ணுவோம்..." என்றான் கண்ணைச் சிமிட்டி...

உணர்வற்ற முகத்துடன் அவனது கையை விலக்கி விட்டவள், "நான் மெடிக்கல் செக்கப் பண்ணலாம்ன்னு இருக்கேன்..." என்றாள் மெதுவே...

அதில் திகைத்தவன், "என்ன விளையாடுறியா...? இப்போ அதுக்கு என்ன அவசியம் வந்தது...? இன்னும் ரெண்டு வருசம் போகட்டும்... அதுக்கு அப்புறமும் குழந்தை இல்லைன்னா டாக்டர் கிட்ட போகலாம்..." ஏனோ இந்த விசயத்தில் மனைவியின் கருத்தில் அவனுக்கு உடன்பாடு இல்லை...

"இல்லை எனக்கு போகணும்..." என்றாள் பிடிவாதமாக...

"அதுக்கு நான் விட மாட்டேன்..." அவனும் பிடிவாதமாய் சொன்னான்...

"தேவ்... ப்ளீஸ்... என்னை புரிஞ்சுக்கோங்க..." அவளின் கெஞ்சுதலில், கண்ணீரில் அவன் கொஞ்சம் இறங்கி வந்தான்...

"சரி உன் விருப்பத்துக்கு நானும் சம்மதம் சொல்றேன்னு வச்சுக்கோ... செக்கப்பில் உனக்கோ இல்லை எனக்கோ குறை இருக்குன்னு தெரிய வந்ததுன்னா உன்னோட முடிவு என்ன...?" அவனின் கேள்வியில் அவள் அயர்ந்து போய்விட்டாள்...

"நீங்க வர வேண்டாம்... நான் மட்டும் போறேன்..." என்றாள் அவசரமாய் எங்கே அவன் மறுத்து விடுவானோ என்ற பயத்தில்...

"குழந்தைங்கிறது நம்ம ரெண்டு பேர் சம்பந்தப்பட்டது..." அவன் அவளை தீர்க்கமாய் பார்த்தான்...

"உங்க கிட்ட எந்த குறையும் இருக்காது..."

"அதை டாக்டர் சொல்லட்டும்..." என்றான் அவனும் விடாப்பிடியாய்...

"தேவ்..." மேலே என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தவளை தன்னோடு அணைத்து கொண்டவன்,

"யார் மேல குறை இருந்தாலும் நம்மளால ஒருத்தரை விட்டு இன்னொருத்தர் இருக்க முடியாது... எதுவா இருந்தாலும் கடவுள் மேல் பாரத்தை போட்டுட்டு வாழ பழகு... எது நடக்கணுமோ அது நடக்கும்... அப்படியே குழந்தை இல்லைன்னா கூட காப்பகத்தில் இருந்து ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கலாம்... இந்த சின்ன விசயத்துக்கு போய் நீ கலங்கலாமா சொல்லு..."

அவன் என்ன தான் தேற்றினாலும் அவள் மனம் மருத்துவரிடம் செல்வதிலேயே உழன்றது...

"தேவ்... ஒரே ஒரு தடவை..." என்று கெஞ்சியவளை கண்டு அவனால் மறுத்து பேச முடியவில்லை...

"சரி... ஆனா ஒரு கண்டிசன்... நானும் செக்கப்புக்கு வருவேன்... எதுவா இருந்தாலும் நாம ரெண்டு பேரும் சேர்ந்து தான் போகணும்..."

எங்கே அவன் உடன் வருவதை வேண்டாம் என்று சொன்னால் தன்னையும் போக விட மாட்டான் கணவன் என்று எண்ணிய வருணிதா அவனின் பேச்சுக்கு மறுப்பு சொல்லவில்லை...

மறுநாளே மனைவியை அழைத்து கொண்டு மருத்துவரிடம் பரிசோதனைக்கு சென்றான்...

"இப்போ எதுக்கு அவசரம்..." பார்வதி கூட மகனை தடுத்து பார்த்தார்...

கூட்டு குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவர் என்பதால் அவரிடம் புரிந்துணர்வு அதிகம்...

"அதை உங்க மருமக கிட்ட சொல்லுங்க... எதையும் கேட்க மாட்டேங்கிறா..." தேவானந்த் விட்டேற்றியாய் சொல்ல...

மருமகளின் கலங்கிய முகத்தை கண்டு பார்வதி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை... அவளின் விருப்பத்திற்கு விட்டு விட்டார்...

பூஜையறையில் இருந்து குங்குமத்தை எடுத்து வந்து அவளது நெற்றியில் வைத்தவர், "எல்லாம் நல்லபடியா நடக்கும்... கவலைப்படாதே..." என்று மருமகளுக்கு ஆறுதல் சொல்ல அதில் அவள் முகம் சிறிது மலர்ந்தது...

பிரபல குழந்தைப்பேறு மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்யும் போது வருணிதாவின் மனம் திக்திக் என்று அடித்து கொண்டது... ஆனால் தேவானந்த்தோ எப்போதும் போல் இயல்பாக இருந்தான்...

எல்லாம் முடிந்து வெளியில் வரும் போது வருணிதா, "தேவ்... ரிசல்ட் பாசிட்டிவ்வா வரும் தானே..."

அவளை ஆழ்ந்து பார்த்தவன் பின் பெருமூச்சை இழுத்துவிட்டு, "பாசிட்டிவ்வா தான் வரணும்... வரும்... டோன்ட் வொர்ரி பேபி... இதுக்கு இவ்வளவு தூரம் நீ வருத்தப்பட தேவையில்லை..." என்றான்...

அந்த நேரம் மட்டுமே அவளது மூளையில் அவனது அறிவுரை ஏறியது... அடுத்த கணம் அவளது மனதில் கலவரம் அதிகரித்தது... முடிவு என்னவாக இருக்கும் என்று...

அந்த வார இறுதியில் முடிவு வந்தது... அவள் பயந்தது போலவே அது இருந்தது... ஆம்... தேவானந்த்திடம் எந்த

குறையும் இல்லை என்றும்... அவளுக்கு தான் கரு முட்டை சரியாக வளர்ச்சி அடையாமல் இருக்கிறது என்றும்...

"இன்றைய மருத்துவ முன்னேற்றத்தில் இது எல்லாம் சகஜமான விசயம்... முறையா ட்ரீட்மென்ட் எடுத்துக்கிட்டா இந்த பிரச்சினையை எளிதா சால்வ் பண்ணிடலாம்..." மருத்துவர் அவளுக்கு நம்பிக்கையூட்டினார்... அதிலும் அவளது முகம் தெளியவில்லை...

தேவானந்ததிற்கு தான் என்ன செய்வது என்று தெரியவில்லை... எதற்கடா இந்த மருத்துவ பரிசோதனை செய்தோம் என்று மனம் நொந்து போனான்...

விசயம் கேள்விப்பட்ட பார்வதி கூட மருமகளை சமாதானப்படுத்தினார்...

"என்னோட அக்கா மகளுக்கு இது போல் தான் இருந்தது வருணி... ட்ரீட்மென்ட் எடுத்த பிறகு ரெண்டு குழந்தைகளுக்கு அம்மாவாகிட்டாள்... நீ கவலைப்பட இதில் ஒன்றுமில்லை..."

தன்னை தேற்றிய மாமியாரிடம் ‘சரி, சரி’ என்று தலையாட்டி விட்டு அறைக்குள் வந்ததும் கணவனை கட்டி கொண்டு ஓவென்று அழுதாள் அவள்...

"ஒருவேளை எனக்கு குழந்தையே பிறக்காம போயிட்டா... என்னை விட்டுட்டு வேற கல்யாணம் பண்ணிக்குவீங்களா தேவ்... என்னை வெறுத்துடுவீங்களா தேவ்..."

சிறு குழந்தை போல் அழுது புலம்பியவளை கண்டு அவன் மனம் வேதனையுற, அவளை அள்ளி எடுத்து அணைத்து கொண்டவன் அவள் முகம் முழுவதும் முத்தமிட்டு,

"என்ன பேச்சு பேசுறடி... உன்னை விட்டுட்டு வேறு பெண்ணை நானா... லூசாடி நீ... உன்னை நான் வெறுப்பதா...? என்னை நானே வெறுப்பேனா பேபி... நீ தான் நான்... நான் தான் நீ... எனக்கு குழந்தையே வேண்டாம்... நீ மட்டும் போதும்..." என்றவனின் கண்ணிலும் நீர் தடங்கள்...

அவனது கண்ணீரை உணர்ந்ததும் அவள் தனது புலம்பலை சற்று குறைத்தாள்... ஆனால் கணவனை விட்டு விலகவில்லை... அவனை யாருக்கும் விட்டு கொடுக்க மாட்டேன் என்பது போல் இறுக அணைத்தபடி அமர்ந்து இருந்தாள்... அவனும் அவளை தனது இறுகிய அணைப்பில் வைத்திருந்தான்... அப்படியாவது தனது காதலை அவள் உணர்கிறாளா என்று...

திருவேங்கடம், பத்மாவும் மகளின் மனதை ஆறுதல் கூறி தேற்றினர்... எந்த நிலையிலும் தங்களது மகளை விட்டு கொடுக்காமல் ஆதரவு காட்டும் அவளது புகுந்த வீட்டினர் அவர்களுக்கு தெய்வங்களாக தெரிந்தனர்... மகளின் குறைப்பாடு சரியாக வேண்டும் என்று பத்மா குலதெய்வத்திடம் வேண்டுதல் வைத்தார்...

இரு நாளில் தன் மனதை தேற்றி கொண்ட வருணிதா தனது வேலையை பார்க்கலானாள்... அதுக்கு முக்கிய காரணம் தேவானந்த் தான்... பலவாறு ஆறுதல் வார்த்தை கூறி அவளின் மனதை மாற்றி ஓரளவுக்கு அவளை சரி செய்தான்... ஆனாலும் அவளின் மனதின் மூலையில் முணுமுணுவென்று ஒரு வலி இருந்து கொண்டே தான் இருந்தது...

எந்த பெண்ணும் திருமணத்திற்கு பின் பெரிதும் எதிர்பார்ப்பது தாய்மை தான்... அது உண்டாவதற்கு தனது உடல்நிலை ஒத்துழைக்கவில்லை என்பதை உணர்ந்தவளுக்கு கவலை கரையானாய் மனதை அரித்து அவளை உயிரோடு வதைத்தது... ஆனால் அவள் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை...

அடுத்து வந்த மாதங்களில் அவளை சிகிச்சைக்கு அவன் அழைத்து சென்றான்... மருத்துவமனை, வீடு, அலுவலகம் என்று மாற்றி மாற்றி அலைந்ததில் அவள் மிகவும் சோர்ந்து போனாள்... இதில் முரளி வேறு அவளை படுத்தி எடுத்தான்...

அன்று அப்படித்தான் அலுவலகத்தில் அவள் நுழைந்ததும் முரளி ஆரம்பித்துவிட்டான்...

"அது என்ன உங்க கணவர் நான் போகும் இடம் எல்லாம் பின் தொடர்ந்து வர்றாரு... நான் ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்ட இடம் பார்த்து இருந்தேன்... பின்னாடியே வந்து அவன் வாங்கிட்டான்... இப்போ தொழில் தொடங்கி இருக்கும் அவனுக்கு ஏது அவ்வளவு பணம்... நீங்க ஏதும் அவனுக்கு உதவுறீங்களா...?" அவளை சந்தேகமாய் பார்த்தான் அவன்...

அவளுக்கு இருந்த மனவுளைச்சலில் அவன் சொல்வது கேட்டு எரிச்சல் வந்தது... எப்போதும் போல் அவளால் பதில் பேச முடியவில்லை...

"முரளி ப்ளீஸ்... எதுவா இருந்தாலும் தேவ் கிட்ட பேசிக்கோங்க... எனக்கு எதுவும் தெரியாது..."

"வருணிதா... நான் எதுக்கு அவன் கிட்ட பேசணும்... நீங்களும் இந்த கம்பெனியில் பார்ட்னர் தானே... இந்த கம்பெனி எம்டியா உங்க கணவர் கிட்ட சாரி சாரி... சிவா கன்ஸ்ட்ரெக்சன் எம்டி கிட்ட நீங்க பேசுறீங்களா...?" என்றான் எகத்தாள குரலில்...

என்ன பதில் சொல்வது என்று அவளுக்கு தெரியவில்லை...

"சரி பேசுறேன் போதுமா..." என்றவள் அன்றே கணவனிடம் போய் கேள்வி கேட்டாள்...

"எதுக்கு தேவ் அவன் வழியில் குறுக்கிடுறீங்க..."

"அவன் சொல்றதை நீ நம்பறியா...?"

"நம்பறேன்னா இல்லையாங்கிறது இப்ப பிரச்சினை இல்லை... நீங்க அந்த இடத்தை ஏன் வாங்கினீங்க...? இப்போ அதுக்கான அவசியம் தான் என்ன...?"

அவன் ஒன்றும் பேசவில்லை... அலமாரியை திறந்து ஒரு கோப்பை எடுத்து வந்து அவள் முன் வைத்தான்...

"படிச்சு பாரு உனக்கு புரியும்..."

அவசரமாய் எடுத்து படித்து பார்த்தவள் ஆச்சிரியத்தில் கண்கள் விரிய...

"என் பெயரில் ரிஜிஸ்டர் ஆகியிருக்கு...?"

"உனக்காக தான் வாங்கினேன்... நீ கொடுக்கிற உன் கம்பெனி லாபத்தில் வாங்கியது தான் இது... இந்த இடத்தை அடிமாட்டு விலைக்கு முரளி வாங்க நினைச்சான்... இடத்துக்காரங்க அவனுக்கு கொடுக்க விரும்பலை... நான் நியாயமான ரேட்டுக்கு கேட்டேன்... உடனே கொடுத்துட்டாங்க..."

அந்த கோப்பை கீழே வைத்தவள் அவன் அருகே வந்து அணைத்து கொண்டாள்... அவனது கரங்களும் அவளை தழுவி கொண்டது...

"சாரி தேவ்... முரளி சொன்னதும் ஏதோ ஒரு நினைப்புல..."

அவளது நினைவு எல்லாம் எங்கே இருக்கிறது என்பது அவனுக்கு நன்கு தெரியும்...

"நமக்குள்ள சாரி எல்லாம் வரவே கூடாது பேபி... உன்னை பத்தி எனக்கு தெரியாதா..." என்றவன் அவளை மடியில் படுக்க வைத்து ஆறுதலாய் தட்டி கொடுத்தான்...

அவனது ஆறுதலில் அவளது விழிகள் தாமாய் மூடியது... மன அயர்ச்சியா இல்லை உடல் அயர்ச்சியா ஏதோ ஒன்று அவளை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தியது...

அவளது தலையை வருடி கொடுத்து கொண்டு இருந்தவன் கண்கள் கலங்கியது... கடந்த சில மாதங்களாகவே அவள் அவளாக இல்லை என்பதை அவன் உணர்ந்து கொண்டு தான் இருந்தான்...

அவளுக்கு முறையான சிகிச்சை ஆரம்பித்து ஒரு மாதம் முடிவடைந்த நிலையில் அவளது மாதவிடாய் நாள் இரு நாட்கள் தள்ளி போயிருந்தது... அதை கண்டு அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது...

"தேவ்... இது குழந்தை தானே... நிச்சயமா இது பேபி தானே..." என்று கேட்டவளின் முகத்தில் தெரிந்த ஆர்வத்தில், ஆவலில் அவனால் வேறு எதுவும் கூற முடியவில்லை... அவள் கூற்றை ஆமோதிப்பது போல் வெறுமனே தலையை ஆட்டினான்...

"ஐயம் ஹேப்பி தேவ்..." என்று அவனை கட்டிப்பிடித்து ஆர்ப்பரித்தவளை கண்டு அவனுக்கு பயமாக இருந்தது இந்த மகிழ்ச்சி நிலைக்க வேண்டும் என்று...

இரண்டொரு நாளில் மாதவிடாய் வந்த போது அன்று அவள் அழுத அழுகையை அவனால் என்ன ஆறுதல் சொல்லியும் தேற்ற முடியவில்லை... அழும் அவளை கவலையுடன் பார்த்து கொண்டு இருந்தான் அவன்... அவளுக்காக உலகையே வெல்ல அவன் தயாராக இருந்தாலும் இயற்கையை வெல்ல அவனால் முடியவில்லை... அதற்கு அவன் ஒன்றும் கடவுள் இல்லையே...

அடுத்து வந்த நாட்களில் உம்மென்று இருந்தாள்... அதன் பின் அவளே சரியாகி போனாள்... அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் நாளை அவள் எதிர்பார்த்து காத்திருப்பதும் அந்த எதிர்பார்ப்பு முறியடிக்கப் பட்டதும் ஏமாற்றத்தில் அழுவதும் அவளது வாடிக்கையாகி போனது... இப்போது எல்லாம் அவளது மாதவிடாய் நாள் வந்தால் அவளை விட அவனுக்கு தான் அதிக பதற்றமாய் இருந்தது...

"சாரி தேவ்..." தூக்கத்தில் புலம்பியவளை கண்டு தன்னுணர்வு அடைந்தவன் முகத்தில் புன்னகை வந்தது...

"தூங்கு பேபி..." என்றபடி அவளை தட்டி கொடுத்தான்...

அவளது கள்ளமில்லா முகத்தை பார்த்து கொண்டு இருந்தவனுக்கு அவள் தேவையில்லாமல் தன்னை வருத்தி கொள்கிறாளோ என்றே தோன்றியது...

அவளது இன்றைய வருத்தம் மனதை தாக்க அவன் முரளியை அலைப்பேசியில் அழைத்தான்... அந்த பக்கம் முரளி எடுத்ததும்,

"முரளி... எதுக்கு தேவையில்லாம என் மனைவியை வருத்தப்பட வைக்கிற... இந்த இடம் எதனால் உன் கைவிட்டு போனதுன்னு உனக்கே நல்லா தெரியும்... என் மனைவிங்கிற ஒரே காரணத்துக்காக வதுவை நீ படுத்துறது சரியில்லை... உன் குணம் தெரிஞ்ச அன்னைக்கு உன் கூட தொழில் பண்ண வேணாம்ன்னு அவளை தடுத்து இருப்பேன்... ஆனா நம்ம மாமனார் முகத்துக்காக தான் பேசாம இருக்கேன்..."

"அப்புறம் இன்னொரு முக்கியமான விசயம்... நீ போட்டி போடும் அளவுக்கு நான் ஒண்ணும் பெரியாளு கிடையாது... இப்போ தான் கம்பெனி ஆரம்பிச்சு முதல் ப்ராஜெக்ட்டை ரன் பண்ணிக்கிட்டு இருக்கேன்... என்னை போய் உனக்கு போட்டியா நீ ஏன் நினைக்கிற...? உன் கம்பெனி சௌத் இண்டியால லீடிங் கம்பெனி... இப்ப ஏசியா கன்ட்ரீசில் கால் பதிச்சு முன்னேறிக்கிட்டு இருக்கீங்க... அப்படிப்பட்ட நீ எதுக்கு என்னை மாதிரி சின்னவங்களை போட்டியா நினைக்கிற... முதல்ல தொழில் வேறு... உறவு வேறுங்கிறதை புரிஞ்சிக்கோ... அப்படியே நான் உன் கூட போட்டி போட்டாலும் நீ என் கூட போட்டி போடு... அதை விட்டுட்டு வதுவை சத்தம் போடுற வேலையை வச்சுக்காதே..."

தேவானந்த் மனதில் நினைத்ததை படபடவென பேசியவன் முரளியின் பதிலை எதிர்பாராது அலைப்பேசியை அணைத்தான்... இனி முரளி சற்று அடக்கி வாசிப்பான் என்று நிம்மதி கொண்டவன் அப்படியே அமர்ந்த வாக்கில் தூங்கி போனான்...

"யாருங்க இந்த நேரத்தில்...?" சுகன்யா கணவனை கேட்டாள்...

நிறைமாத கர்ப்பிணியாய் இருக்கும் மனைவியை திரும்பி பார்த்த முரளி கண்களில் கனிவுடன், "கஸ்டமர் சுகன்... நீ

தூங்கு..." என்க...

"ஓ..." என்றவள் நிம்மதியாய் நித்திரையில் ஆழ்ந்தாள்... அவளை அணைத்து கொண்டு அவனும் படுத்துவிட்டான்...

முரளி வீடு வரை தொழில் பிரச்சினையை கொண்டு வந்தது கிடையாது... அதிலும் மனைவியிடம் அவளது சகோதரி, சகோதரி கணவன் பற்றி எந்த விசயத்தையும் அவன் சொன்னது கிடையாது... அதை எல்லாம் சொன்னால் வீட்டில் நிம்மதி இருக்காது என்பது அவனுக்கு நன்கு தெரியும்...

வருணிதா தான் தேவையில்லாமல் எல்லாவற்றையும் யோசித்து தன்னையும் குழப்பி கணவனையும் குழப்பி கொண்டு இருந்தாள்... ஆனால் தேவானந்த் இதில் தெளிவாக இருந்ததால் எந்த பிரச்சினையும் வராமல் வாழ்க்கை நிம்மதியாய் சென்று கொண்டு இருந்தது...

இந்நிலையில் சுகன்யாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது... வருணிதாவின் வீட்டில் இருந்து எல்லோரும் பார்க்க சென்றனர்... அங்கு சுகன்யாவின் மாமியார் வருணிதாவை பார்த்து,

"நீ எப்போம்மா குட் நியூஸ் சொல்ல போற...?" என்று கேட்க...

பட்டு போல் மென்மையாய் இருந்த மழலையின் அழகில் மனதை பறி கொடுத்தவளாய் குழந்தையை கொஞ்சி கொண்டு இருந்த வருணிதா திடுக்கிட்டு போய் நிமிர்ந்தாள்...

குழந்தையை கொஞ்சும் மனைவியை ரசித்து கொண்டு இருந்த தேவானந்தும் திகைத்து போனான் அவரது கேள்வியில்...

பத்மாவும், பார்வதியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

'வது இருக்கும் மனநிலை தெரியாமல் இவங்க வேற...' அவனுக்கு அலுப்பாக இருந்தது...

"இன்னும் கொஞ்ச நாளைக்கு குழந்தை வேண்டாம்ன்னு பிளான் பண்ணி இருக்கோம்..." அவன் தான் நிலைமையை அழகாக சமாளித்தான்...

"அதுவும் சரி தான்... இப்போ எல்லாம் யாரு கல்யாணம் பண்ணின உடனே குழந்தை பெத்துக்கிறாங்க... ஆனாலும் ரொம்ப நாள் தள்ளி போடாதீங்க..." பெரியவராய் அவர் அறிவுரை கூற அதை சின்ன சிரிப்புடன் ஆமோதித்து ஏற்று கொண்டான்...

வீட்டிற்கு வந்ததும் அவன் நினைத்தது போல் அவனது மனைவி கண்ணீர் வடிக்க ஆரம்பித்தாள்...

'கண்ணுல எப்பவும் டேம்மை கட்டி வச்சிருப்பாளோ...' அவனுக்குமே சலிப்பாக இருந்தது...

'ச்சே... தேவா உனக்கு என்னாச்சு... உன் பேபி அவளோட கவலையை உன் கிட்ட சொல்லாம வேறு யார் கிட்ட சொல்லுவா... முதல்ல அவளை ஆறுதல்படுத்து...' அவனது மனம் அவனை சத்தம் போட தனது தவறு புரிந்து அவள் அருகே வந்தவன் எப்போதும் போல் கட்டிப்பிடி வைத்தியம் செய்து அவளது கவலையை போக்கினான்... அந்த நொடி அவளும் அழுகை குறைந்து அமைதி அடைந்தாள்...

இப்படி நாட்கள் அழுகையும், சோகமுமாய் வேகமாய் ஓடியது...

அன்று அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வரும் போதே சந்தோசமாய் வந்தாள் வருணிதா... வெகுநாட்களுக்கு பின் பழைய வருணிதாவை கண்ட தேவானந்த்துக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது...

"என்ன பேபி ரொம்ப சந்தோசமா இருக்கிற மாதிரி இருக்கு... என்ன விசயம்...?"

"ஆமாம் தேவ்... நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன்..." என்று தனது மகிழ்ச்சியை அவனுக்கு பறைசாற்றியவள் அதற்கான காரணத்தை கூற ஆரம்பித்தாள்...

"முரளி சிங்கப்பூர் போயிருக்கிறது உங்களுக்கு தெரியும் தானே..."

அவனுக்கும் அது தெரியும்... மனைவிக்கு பிரசவ காலம் என்பதால் எங்கும் செல்லாமல் அவள் கூட இருந்த முரளி இப்போது பிரசவம் முடிந்ததும் வெளிநாடு சென்று இருந்தான்... நிறுவன பொறுப்பு முழுவதையும் வருணிதாவிடம் தான் கொடுத்து இருந்தான்...

"ம்... அது தெரிந்த விசயம் தானே பேபி..."

"இதில் தெரியாத விசயம் ஒண்ணு இருக்கு..." என்று கண்ணை உருட்டி புதிர் போட்டவள், "முரளி என்னை கவர்மென்ட் டெண்டருக்கு கொட்டேசன் ரெடி பண்ணச் சொல்லியிருக்காரு..."

அவளது சந்தோசத்திற்கான காரணம் அவனுக்கு பிடிபட்டு போனது... இதுநாள் வரை பொம்மை போல் வைத்து இருந்த வருணிதாவை இன்று தான் அவளை நம்பி ஒரு பொறுப்பை அவளது கையில் ஒப்படைத்து இருக்கிறான் முரளி... முதன்முறையாய் அவளை தன்னிச்சையாய் செயல்பட விட்டிருக்கிறான்... இது அவளுக்கு கிடைத்து இருக்கும் முதல் வாய்ப்பு...

"வாழ்த்துக்கள் பேபி..." என்று அவளை வாழ்த்தியவனை கண்டு,

"வாழ்த்தறதோடு மட்டும் இல்லாம நீங்க தான் எனக்கு ஹெல்ப் பண்ணணும் தேவ்..." அவனது கழுத்தை கட்டி கொண்டு அவள் கொஞ்ச...

"ம்... என் பேபி சொல்லி நான் கேட்காம இருக்க முடியுமா... அதே மாதிரி பேபியும் எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணணுமே..." என்று அவள் கன்னத்தோடு கன்னம் உரசியவனின் கைகள் அவளிடம் தனக்கு என்ன உதவி வேண்டும் என்பதை அவளுக்கு உணர்த்தியது...

பல மாதங்கள் கழித்து முழுமனதுடன் கணவனோடு ஒன்றினாள் அவள்... அவளின் தாராள ஒத்துழைப்பை

கண்டு அவன் மது உண்ட வண்டாய் அவளை மீண்டும் மீண்டும் நாடினான்...

மறுநாளே தேவானந்த் அரசாங்க ஒப்பந்தத்திற்காக கொட்டேசனை எப்படி தயார் செய்வது என்று அவளுக்கு விலாவரியாக விளக்கி கூறியவன் அவளுக்கு பதிலாய் தானே அதை தயாரித்து கொடுத்தான்...

கச்சிதமாய் தயாரித்து இருந்த கொட்டேசனை அவள் முரளியிடம் காட்டி ஒப்புதல் வாங்க முயன்ற போது, அவனும் அதை வெகுவாய் பாராட்டினான்... அதை அவள் தான் தயார் செய்ததாய் அவன் நினைத்து கொண்டான்...

அவளும் மறந்தும் கணவன் பெயரை அவனிடம் சொல்லவில்லை... சொன்னால் அதற்கும் தாம்தூம் என்று முரளி கோபத்தில் குதிப்பான் என்று அவளுக்கு தெரியும்... அதனால் அதை மறைத்துவிட்டாள்...

அடுத்து வந்த நாட்கள் அதன் போக்கில் நிம்மதியாய் சென்றது...

அன்று காலையில் எழுந்ததில் இருந்து உடல் ஏதோ படுத்தி எடுத்தது வருணிதாவிற்கு... என்னவென்று தெரியவில்லை... கால்கள் எல்லாம் பிடிப்பு இல்லாமல் எங்கோ பறப்பது போல் இருந்தது... போதாக்குறைக்கு தலை வேறு பம்பரமாய் சுற்றியது...

"பேபி... இன்னைக்கு வேணும்ன்னா லீவு போட்டு ரெஸ்ட் எடுத்துக்கோயேன்..." தேவானந்த் கவலையாக மனைவியை பார்த்தான்...

"இல்லை தேவ்... இன்னைக்கு கட்டாயம் போயாகணும்... அந்த டெண்டருக்கான ரிசல்ட் இன்னைக்கு தான் வருது..." என்றவள் சமாளித்து கொண்டு கிளம்ப தயாரானாள்...

"சரி பேபி... அப்போ நான் கிளம்பறேன்... எனக்கு முக்கியமான வேலை இருக்கு..." என்று அவன் அவளிடம் விடைப்பெற்று அலுவலகத்திற்கு கிளம்பி சென்றான்...

அவன் சென்றதும் பல் துலக்க குளியலறை சென்றவளுக்கு உமட்டி கொண்டு வந்தது... தண்ணீர் அடித்து முகத்தையும் வாயையும் கழுவி கொண்டு வந்தவளுக்கு அப்போது தான் மூளையில் மணியடித்தது...

இந்த மாதம் வழக்கமாய் வரும் மாதவிடாய் பத்து நாட்கள் தள்ளி போயிருந்தது நியாபகத்தில் வந்தது... தொழிலில் மும்முரமாய் இருந்ததால் அவள் இதை சரிவர கவனிக்கவில்லை...

உடல்நிலையை மறந்தவளாய் உற்சாகமான மனநிலையுடன் வேகமாய் அலமாரியை திறந்தவள் கர்ப்பத்தை பரிசோதிக்கும் கருவியை எடுத்து கொண்டு மீண்டும் குளியலறைக்கு சென்றாள்...

பரிசோதனை செய்து பார்த்ததில் அவள் நினைத்தது போல் அவள் கர்ப்பமாக இருந்தாள்... மனதில் மகிழ்ச்சி கரை புரள அதை தாங்க முடியாமல் குளியலறை சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டாள்...

அவளது கண்ணில் இருந்து கரகரவென கண்ணீர் வழிந்தோடியது... அதற்கு நேர்மாறாய் அவளது உதடுகள் புன்னகையை தத்தெடுத்து இருந்தது...

"தேவ்... நீங்க அப்பாவாகிட்டீங்க..." என்றாள் சத்தமாய்... பின் தான் இருக்கும் இடம் நினைவு வர வெட்கத்தில் இரு கைகளால் முகத்தை மூடி கொண்டாள்...

பின்பு மெல்ல குளியலறையை விட்டு வெளியில் வந்தவள் மனதில் கணவனின் நியாபகமே... இந்த விசயம் கேள்விப்பட்டதும் அவன் எந்தளவுக்கு சந்தோசப்படுவான் என்பதை கற்பனையில் நினைத்து பார்த்தவளுக்கு பூரிப்பும், வெட்கமும் ஒருங்கே எழுந்தது...

இப்போதே கணவனை அழைத்து விசயத்தை சொல்ல சந்தோசத்தில் அவளது மனம் பரபரத்தது...

ஆனால் அலைப்பேசியில் சொல்வதை விட நேரில் அவனை பார்த்து அவனது கையை எடுத்து தனது

வயிற்றில் வைத்து இந்த விசயத்தை சொல்ல வேண்டும் என்று அவளுக்கு ஆசையாக இருந்தது...

அதை கேட்டதும் அவனது கண்கள் ஆச்சிரியத்திலும், மகிழ்ச்சியிலும் விரிய, அவளை பார்த்து 'பேபி' என்றழைத்தபடி அவன் ஆசையோடு தனது வயிற்றில் முத்தமிடுவதை கற்பனை செய்து பார்த்தவளுக்கு இப்போதே அவன் அவளை முத்தமிட்டது போல் அத்தனை பரவசமாக இருந்தது... அவனது மீசை முடியின் குறுகுறுப்பை அவளது வயிறு உணர்ந்தது போல் தேகம் எல்லாம் சிலிர்த்தது...

"தேவ்..." அந்த நினைவை மனக்கண்ணில் நினைத்தபடி அடிவயிற்றில் கை வைத்து கண்களை மூடி கிறக்கத்துடன் நின்றிருந்தாள் அவள்...

கடிகாரத்தின் மணி ஓசையில் தன்னுணர்வு அடைந்தவள் முதலில் தான் எங்கு இருக்கிறோம் என்று தெரியாமல் விழித்து, பின் அசட்டு சிரிப்புடன் பின்னந்தலையில் தட்டி கொண்டவள்,

'ச்சீ... இது என்ன சின்ன பெண் போல்...' என்று தன்னை கடிந்து கொண்டவள் அலுவலகத்திற்கு கிளம்பலானாள்...

வீட்டில் மாமனார், மாமியார் யாரிடமும் விசயத்தை சொல்ல தோன்றவில்லை... முதலில் கணவனிடம் சொல்லிய பின்னரே மற்றவர்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தபடி அலுவலகத்திற்கு சென்றுவிட்டாள்...

அங்கே அலுவலகத்தில் அவளுக்கு பெருத்த ஏமாற்றம் காத்திருந்தது...

ஆம்... அந்த அரசாங்க ஒப்பந்தம் முரளியின் நிறுவனத்திற்கு கிடைக்கவில்லை... தேவானந்த்தின் சிவா கன்ஸ்ட்ரக்சனுக்கு கிடைத்து இருந்தது அதுவும் ஒற்றை ரூபாய் வித்தியாசத்தில்...

உறையும்...

வருணிதா தான் கேட்ட செய்தியை நம்ப முடியாமல் திக்பிரம்மை பிடித்தார் போன்று செயலிழந்து போய் அமர்ந்து இருந்தாள்...

'இது எப்படி சத்தியம்...? இப்படியும் நடக்க கூடுமா...? தேவ்வா இப்படி ஒரு காரியம் செய்தது...? தேவ் எனக்கு உதவுவது போல் உதவி விட்டு பின் வழியே அந்த டெண்டரை கைப்பற்றி கொண்டாரா... ச்சேச்சே... இல்லை இல்லை என் தேவ் அப்படிப்பட்டவர் இல்லை... அவர் அப்படிப்பட்டவர் இல்லை என்றால் அவரது கன்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு இந்த டெண்டர் எப்படி கிடைத்தது...? அவருக்கு தெரியாமல் இது நடக்க வாய்ப்பில்லையே...'

விடை தெரியா கேள்விகள் மனதில் முளைக்க கணவனது இந்த செயலை ஜீரணிக்க முடியாமல் தவித்தது அந்த காதல் கொண்ட பேதை மனம்...

எல்லா விதத்திலும் யோசித்து பார்த்தும் கணவன் குற்றவாளி இல்லை என்பதற்கு ஒரு ஆதாரம் கூட அவளுக்கு கிடைக்கவில்லை... கணவன் இந்த ஒப்பந்தத்தில் பங்கேற்காமல் அவனுக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்க சாத்தியமில்லை...

தான் முதன்முறையாய் பொறுப்பு எடுத்து இருக்கும் இந்த வாய்ப்பு தனக்கு எந்தளவுக்கு முக்கியம் என்பது அவனுக்கு நன்றாக தெரியும்... அவள் இந்த வாய்ப்பை எந்தளவுக்கு எதிர்பார்த்தாள் என்பதும் அவனுக்கும் தெரியும்... அப்படி எல்லாம் தெரிந்து இருந்தும் எப்படி அவனால் அவளின் முதுகில் குத்த முடிந்தது...

"ஏன் தேவ் இப்படி செஞ்சீங்க...? நீங்க ஒரு வார்த்தை 'இந்த டெண்டர் எனக்கு முக்கியம்'ன்னு சொல்லியிருந்தா நான் இதில் இருந்து விலகி இருப்பேனே... உங்களை விடவா எனக்கு இந்த வாய்ப்பு முக்கியம்...? இப்படி நீங்க என்னை உயிரோடு கொன்னு இருக்க வேண்டாம்..." என்று வாய்விட்டு புலம்பியவள் மனக்கண்ணில்,

அன்று இந்த ஒப்பந்தம் தான் தாயாரிக்க போவதாய் கூறிய போது அவன் மனம் மகிழ்ந்து அவளை வாழ்த்தியது, அவனோடு அன்று முழுமனதுடன் அவள் கூடிய கூடல், மறுநாள் அவளுடன் இணைந்து அவன் ஆர்வமுடன் அதற்கான வேலைகள் செய்தது எல்லாம் தோன்றி அவளது கண்ணில் கண்ணீரை வரவழைத்தது...

அது எல்லாம் பொய்யில்லையே... ஆனால் நடந்த நிகழ்வோ அது அனைத்தையும் தவிடு பொடியாக்கி அவன் மீதான நம்பிக்கையை தகர்க்க செய்தது...

காதல் கொண்ட மனம் கணவனை நம்ப சொல்லியது... ஆனால் நடந்த நிகழ்வோ அவனுக்கு எதிராய் அமைந்து அவனை நம்ப மறுத்தது... காதலுக்கும், கடமைக்கும் இடையில் அவள் போராடினாள்...

அந்நேரம் பார்த்து அவளது அழைப்பேசி அழைத்தது... முரளி தான் அழைத்தான்... இன்று அவனிடம் அவள் திட்டு வாங்கி கட்டுவது உறுதி... ஏதோ அவனுக்கு மிகப் பெரிய துரோகம் தான் செய்துவிட்டதாய் அவளது உள்ளம் நடுங்கியது...

அவள் வாழ்நாளில் யாருக்கும் இது போல் ஒரு கெடுதல் செய்ததும் இல்லை... நினைத்ததும் இல்லை... அவளையும் அறியாமல் அவள் முரளிக்கு கெடுதல் செய்துவிட்டாள்...

கணவன் சொன்னது போல் குடும்பம் வேறு, தொழில் வேறு என்று பிரித்து இருந்திருக்க வேண்டுமோ... அதை செய்யாதது அவளது தவறு தான்... மனம் குற்றவுணர்ச்சியில் குறுகுறுத்து குன்றியது... கைகள் நடுங்க அழைப்பேசியை எடுத்து உயிர்ப்பித்தாள்...

எடுத்தவுடனேயே அவன் கோபத்தில் படபடத்தான்...

"இதுக்கு தான் வருணிதா நான் உங்க கிட்ட சொல்லிக்கிட்டே இருந்தது... இப்போ என்னாச்சுன்னு பார்த்தீங்களா...? கடைசியில் உங்க கணவனுக்கே இந்த டெண்டர் போயிருச்சு... இது எப்படி நடந்ததுன்னு

சொல்லுங்க...? நாம கொட்டேசனில் கொடுத்த அமௌவுண்ட் அவனுக்கு எப்படி தெரியும்...? நீங்க ஏதும் அவன் கிட்ட சொன்னீங்களா... இல்லை காதல் மயக்கத்தில் மெய் மறந்து அவன் கிட்ட உளறிட்டீங்களா...?"

அவன் பேச பேச அவள் அவமானத்தில் உடல் கூனிக்குறுகி போனாள்...

"சொல்லுங்க வருணிதா... வாயை மூடிக்கிட்டு இருந்தா எப்படி...? இதுக்கு ஒரு என்கொயரி வச்சேன் வச்சுக்கோங்க உங்க சீட் காலி... என் அப்பாவோட நண்பர் மகள்ங்கிற காரணத்தை விட என் மனைவியோட அக்காங்கிறதால தான் நானும் அமைதியா இருக்கேன்... இல்லை நடக்கிறதே வேற..." அவனது குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது...

மனைவி மேல் முரளி வைத்து இருக்கும் அன்பை கண்டு அவளுக்கு கண்கள் கரித்தது... தனது கணவன் எந்த இடத்தில் தன் மீதுள்ள அன்பில் சறுக்கினான் என்று யோசித்தவளுக்கு கண்ணீர் தான் வந்தது...

"அது வந்து முரளி..." எப்படி சொல்வது என்று தெரியாமல் பயத்தில் எச்சிலை கூட்டி விழுங்கினாள்... அவளே பேசட்டும் என்று அவன் சற்று அமைதி காத்தான்...

"இந்த டெண்டரை ரெடி பண்ணி கொடுத்ததே தேவ் தான்..." உண்மையை சொல்லிவிட்டாள் அவளது மனசாட்சிக்கு பயந்து...

"என்னது..." அவளது வார்த்தையில் முரளி முற்றிலும் அதிர்ந்துவிட்டான்... இப்படியும் ஒரு முட்டாள் பெண் இருப்பாளா என்று அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது...

"வருணிதா... நீங்க என்ன லூசா...? என்ன தான் கணவன், மனைவியா இருந்தாலும் நீங்க ரெண்டு பேரும் ஒரே பீல்டில் இருக்கிறவங்க... ஒவ்வொருத்தருக்கும் அவங்க அவங்களுக்குன்னு பெர்சனலா சீக்ரெட்ஸ் இருக்கும்... இதை போய் அவர் கிட்ட சொல்லி உதவி கேட்டு

இருக்கீங்களே உங்களை என்ன சொல்றது...?" என்று தலையில் கையை வைத்தான் அவன்...

"கடைசியில் என்னாச்சு பார்த்தீங்களா...? உங்களுக்கு உதவுவது போல் உதவிட்டு உங்க காலை வாரிவிட்டுட்டாரு உங்க ஹஸ்பெண்ட்..."

அவன் பேச பேச அவளுக்கு அப்படியே பூமியில் புதையுண்டு போக மாட்டோமா என்று அவமானமாக இருந்தது... காதல் கொண்ட மனம் முரளி தன் கணவனை எடுத்தெறிந்து பேசுவதை கண்டு துடித்தது... அதே சமயம் கணவனால் முரளிக்கு ஏற்பட்ட துரோகத்தை நினைத்து இரத்தக்கண்ணீர் வடித்தது... இரண்டு வகையான மனநிலையை அனுபவித்தது அவளது உள்ளம்... இரண்டுமே அவளை அளவுக்கு அதிகமாய் வேதனைப்படுத்தியது என்னவோ உண்மை...

அவளை திட்டிவிட்டு அவளின் பதிலை எதிர்பாராமல் அலைப்பேசியை அணைத்துவிட்டான் முரளி...

காலையில் இருந்து ஒன்றும் சாப்பிடாதது வேறு அவளுக்கு தலைச்சுற்றுவது போல் இருந்தது... நடந்த விசயமோ அவளை மேலும் கிறுகிறுக்க வைத்தது... கைகளால் தலையை தாங்கி கொண்டு அமர்ந்தவளுக்கு நடந்து முடிந்த விசயத்தை இன்னமும் நம்ப முடியவில்லை... ஆனாலும் அந்த ஒப்பந்தம் கைவிட்டு போன செய்தி நிஜம்... அது அவளது கணவனது துரோகத்தை அப்பட்டமாய் அவளது முகத்தில் அடித்தார் போன்று பறைச்சாற்றியது...

அடுத்த பத்து நிமிடத்தில் மீண்டும் முரளி அவளுக்கு அழைத்தான்... இப்போது என்னவாக இருக்க கூடுமோ என்று மனம் நடுங்க அலைப்பேசியை எடுத்தாள் அவள்...

"இப்போ தான் எல்லாத்தையும் விசாரிச்சேன்... நமக்கு முன்னாடியே உங்க ஹஸ்பெண்ட் அந்த டெண்டருக்கு கொட்டேசன் அனுப்பி இருந்து இருக்காரு... அதை உங்க கிட்ட மறைச்சு வேணும்ன்னே அவர் போட்ட தொகையை விட ஒரு ரூபாய் அதிகம் போட்டு நம்ம கொட்டேசனை

தயாரிச்சிருக்காரு... இது ஒரு திட்டமிட்ட ஏமாற்று வேலை வருணிதா... நீங்க உங்க கணவன் கிட்ட நல்லா ஏமாந்துட்டீங்க... நீங்க ஏமாந்ததோட மட்டும் இல்லாம என்னையும், என்னோட கம்பெனியையும் சேர்த்து அசிங்கப்பட வச்சிட்டீங்க... இப்போ முளைச்ச உங்க புருசன் கம்பெனி கிட்ட நான் ஒத்தை ரூபாயில் தோற்றதை கேள்விப்பட்டா இந்த ஊர் உலகம் என் முகத்தில் காறி துப்பும்... உங்களை பார்ட்னரா சேர்த்ததுக்கு நீங்க நல்ல கைம்மாறு செஞ்சிட்டீங்க வருணிதா..." என்றவன்,

"எனக்கு நல்லது ஏதாவது பண்ணணும்ன்னு ஐடியா உங்களுக்கு இருந்தா நீங்க இந்த கம்பெனியை விட்டு விலகி போயிருங்க... இந்த அசிங்கத்தை நானும் என் குடும்பத்தில் யார் கிட்டேயும் சொல்ல போறது இல்லை... நீங்களும் சொல்ல வேண்டாம்... நீங்க உங்க கணவன் கம்பெனிக்கு விசுவாசமா இருங்க... எனக்கு உங்க உதவி தேவையில்லை..."

முகத்தில் அடித்தார் போன்று சொல்லிவிட்டு அவன் அலைப்பேசியை வைத்துவிட்டான்...

முரளி சொன்னதை கேட்டு அவளது மனம் குமுறியது கணவனது துரோகத்தை நினைத்து... திட்டமிட்டு கணவன் தன்னை ஏமாற்றி விட்டதாய் அவளது உள்ளம் கோபம் கொண்டது... ஆத்திரமும், இயலாமையும் சேர்ந்து அவளது மனதை ஆட்டுவித்தது...

எல்லா ஆதாரங்களும் தேவானந்த்திற்கு எதிராய் அமைய அவள் அவனை குற்றவாளியாக எண்ணிவிட்டாள்... இவ்வளவு நாள் காதல் இருந்த இடத்தை சந்தேகம் ஆக்கிரமித்தது... இத்தனை நாள் அவன் மீது அவளுக்கு இருந்த நம்பிக்கை இந்த ஒற்றை ரூபாயால் ஆட்டம் கண்டது...

அதன் பின் அவள் ஒரு நொடி கூட தாமதிக்காமல் மளமளவென்று முரளிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினாள்... இதற்கு தார்மீக பொறுப்பேற்று அவள் நிறுவன பொறுப்பை விட்டு விலகுவதாகவும்,

நிறுவனத்தில் தனது பெயரில் உள்ள பங்குகளை தந்தையின் பெயருக்கு மாற்ற தான் மனமுவந்து சம்மதிப்பதாகவும் அதில் எழுதியவள், அதற்கான சட்டரீதியான தீர்வை விரைவில் அனுப்பி வைப்பதாகவும் சேர்த்து கூறி அனுப்பிய பின்பே அவளுக்கு சற்று நிம்மதியாக இருந்தது...

அதற்கு மேல் அலுவலகத்தில் இருக்க பிடிக்காமல் வீட்டிற்கு கிளம்பிவிட்டாள் அவள்... மனம் முழவதும் அடக்கப்பட்ட கோபத்தில் தீக்கங்குகளாய் கனன்று கொண்டு இருந்தது...

வீட்டிற்கு சென்றவள் யாரிடமும் பேச பிடிக்காமல் அறைக்குள் சென்று முடங்கி போனாள்...

இது ஏதும் அறியாத தேவானந்த்தோ தனது வேலையில் ஆழ்ந்து இருந்தான்... கட்டுமான வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டு இருந்தவன் தவறுகளை சுட்டிக் காட்டி அதை சரி செய்ய சொல்லும் போது அவனது அலைப்பேசி அழைத்தது...

அழைப்பது யார் என்று தெரிந்ததும் அவனது முகத்தில் விரிந்த புன்னகை தோன்றியது... அவசரமாய் அலைப்பேசியை எடுத்து பேசியவன் முகம் அதை வைக்கும் போது அந்த புன்னகையை தொலைத்து இருந்தது...

முகத்தில் கவலை ரேகைகள் தோன்றி அவனை கவலைக்குள்ளாக்கியது... நடந்து முடிந்த விசயம் அவனின் மகிழ்ச்சியை தொலைத்து அவனை நடைப்பிணமாக மாற்றி இருந்தது... நியாயத்திற்கு அரசாங்க ஒப்பந்தம் கிடைத்தற்கு அவன் சந்தோசம் தான் பட வேண்டும்... ஆனால் மகிழும் மனநிலையில் அவன் இல்லை...

அவனது மனக்கண்ணில் அன்று முகம் நிறைய சந்தோசத்துடன் சின்னப்பிள்ளை போன்று உற்சாகத்துடன் குதூகலித்த மனையாட்டியின் காதல் முகம் தோன்றி அவனை உயிரோடு இம்சித்தது...

"வது பேபி... ஐயம் சாரிடா..." என்றான் மனதார...

இந்த விசயத்தில் அவனது தவறு ஏதும் இல்லை... இதை சொன்னால் அவள் ஏற்று கொள்வாளா... இல்லை நம்பத்தான் செய்வாளா...?

'இல்லை என் பேபி என்னை நம்புவாள்... என் மேல் அவளுக்கு காதல் அதிகம்... நான் அவளுக்கு துரோகம் செய்ய மாட்டேன்னு அவளுக்கு நல்லா தெரியும்...' மனைவி தன் மீது வைத்திருக்கும் எல்லையில்லா காதல் மீது அவனுக்கு அதீத நம்பிக்கை இருந்தது...

அந்த காதல் கொடுத்த நம்பிக்கையில் அவனது மன வேதனை அகல மனைவிக்கு அலைப்பேசியில் அழைத்தான்... அவள் எடுக்கவில்லை என்றதுமே அவனுக்கு ஏதோ ஒன்று சரியில்லை என்று தோன்றியது... அந்நேரம் அவனது அன்னை அழைத்து அவனிடம் விசயத்தை கூறினார்...

"தேவா... வருணி திடீர்ன்னு வீட்டுக்கு வந்து இருக்கா... ஏதும் வேணுமான்னு கேட்டா ஒண்ணும் வேணாம்ன்னு சொல்லிட்டு ரூமுக்கு போயிட்டா... முகத்தை பார்த்தா அழுத மாதிரி இருக்கு... உங்களுக்குள்ள ஏதாவது பிரச்சினையாப்பா...?"

"அப்படி எல்லாம் எதுவும் இல்லைம்மா... நான் வந்து பேசிக்கிறேன்..." என்றவன் அடுத்து ஒரு நொடி கூட தாமதிக்காமல் வீட்டிற்கு கிளம்பினான்...

போகும் வழி எல்லாம் மனைவியை பற்றிய சிந்தனை தான்... நிச்சயம் அவள் தன் மேல் கோபமாய் இருப்பாள் என்று தெரியும்... எப்படியாவது தன்னிலை விளக்கம் கூறி இதில் தன் தவறு ஏதுமில்லை என்பதை அவளுக்கு உணர்த்திவிட வேண்டும் என்று நினைத்த பின் தான் அவனால் சற்று அமைதியாய் இருக்க முடிந்தது...

வீட்டிற்கு வந்தவன் எதிர்பட்ட அன்னையிடம் கூட ஒன்றும் பேசாமல் மனைவியை காண அறைக்குள் ஓடினான்...

அவன் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்த சத்தத்தில் முழங்காலில் முகம் புதைத்து இருந்த வருணிதா நிமிர்ந்து பார்த்தாள்...

அழுது அழுது முகம் எல்லாம் வீங்கி, கண்கள் சிவந்து போயிருந்த மனைவியை கண்டு அவனது உள்ளம் துடித்தது... அவளது இந்த நிலைக்கு தான் அல்லவா காரணம் என்ற குற்றவுணர்வு அவன் மனதை வாள் கொண்டு அறுக்க அவள் அருகில் வந்தான்...

"பேபி..." தன்னிலை விளக்கம் கூற வாயை திறந்தவனை கையமர்த்தி தடுத்தவள் அவனை பார்த்த பார்வையில் அவன் உள்ளுக்குள் செத்து போனான்...

அவளது விழிகள் என்றுமே காதலுடன் தான் அவனை பார்த்து இருக்கிறது... ஆனால் இன்றோ அவளது விழிகள் அவனை கோபமாய் சுட்டெரித்தது... அவளுக்கு மட்டும் நெற்றிக்கண் இருந்து இருந்தால் அவனை உயிரோடு எரித்து பஸ்மாக்கி இருப்பாள்...

அதில் திகைத்து போய் அவன் அப்படியே நின்றுவிட்டான்...

"தேவ்... நீங்க இப்படி பண்ணுவீங்கன்னு நான் கனவுல கூட நினைச்சு பார்க்கலை..." அவளது வார்த்தைகளில் அவன் அதிர்ந்து போய் நின்றான்...

அவளின் வார்த்தைகள், அவள் அவனை நம்பவில்லை என்பதை அவனுக்கு சொல்லாமல் சொல்லியது... அவனுள் ஏதோ ஒன்று பட்டென்று உடைந்தது...

"அன்னைக்கு நீங்க சொன்னப்போ கூட நான் அதை பெரிசா நினைக்கலை... ஆனா இப்போ அதை எல்லாம் நினைச்சு பார்க்கும் போது எனக்கு எல்லாம் புரியுது... அன்னைக்கு நீங்க சொன்னீங்களே வலிய வர்ற சந்தர்ப்பத்தை விடமாட்டேன்னு... அதே மாதிரி இந்த கேனையும் உங்களுக்கு வலிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்து இருக்கேன் அப்படித்தானே..."

அவனை பார்த்து அவள் கேட்கும் போதே அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

அவளது கோபம் எல்லாம் வடிந்து அந்த இடத்தை ஏமாற்றப்பட்ட காதலின் வலி நிறைத்து மனதை ஆக்கிரமிக்க அவளுக்கு அழுகை பொங்கியது...

"நான் சந்தோசமா இருக்கிறதுக்காக நீங்க ஜெயிக்கணும்ன்னு சொன்னீங்க... ஆனா என் சந்தோசத்தை கொன்னு தான் நீங்க ஜெயிக்க போறீங்கன்னு ஏன் நீங்க என் கிட்ட சொல்லலை...?" கேள்வியை அவனிடம் கேட்டவள் தனக்குள் கதறி அழுதாள்...

அவள் அழுவதை காண பொறுக்காமல், "ப்ளீஸ் பேபி... நான் சொல்றதை கொஞ்சம் பொறுமையா கேளு..." என்றான் தன் பக்க நியாயத்தை எடுத்து சொல்லும் பொருட்டு...

"இதுக்கு மேல என்னத்தை பொறுமையா இருக்கிறது...? நீங்க செஞ்ச காரியத்துக்கு என்னன்னு விளக்கம் சொல்ல போறீங்க...? சின்னப்பிள்ளை கூட உங்க விளக்கத்தை நம்பாது... அந்தளவுக்கு அழகா பிளான் பண்ணி என்னை ஏமாத்தி இருக்கீங்க... உங்களுக்கு இந்த டெண்டர் வேணும்ன்னு சொல்லியிருந்தா நானே இதில் இருந்து விலகி இருந்திருப்பேனே... அதை விட்டுட்டு எனக்காக எல்லாத்தையும் செய்ற மாதிரி செஞ்சு கடைசியில்..." முகத்தை அருவருப்பாய் சுளித்தவள்,

"என்னை நம்ப வச்சு கழுத்தறுத்துட்டீங்க தேவ்... நீங்க ஒரு நம்பிக்கை துரோகி..."

முதலில் அவள் சொன்ன வார்த்தையில் அவனது தன்மானம் சீண்டப்பட்டது என்றால் இரண்டாவதாய் அவள் சொன்ன வார்த்தையில் அவனது மனம் சொல்லொண்ணா வலியை அடைந்தது... மனதின் வலி முன் அவனது தன்மானம் சீண்டப்பட்டது கூட அவனுக்கு பெரியதாய் தெரியவில்லை...

அன்று அவன் பேசிய வார்த்தைகள் அனைத்தையும் மனப்பாடமாய் இன்று ஒப்புவிக்கும் மனைவிக்கு, 'உனக்கு எந்த கஷ்டத்தையும் நான் கொடுக்க விரும்ப மாட்டேன்' என்று அன்று அவன் சொன்ன வார்த்தைகள் ஏன் நினைவுக்கு வரவில்லை...

அதை நினைத்து அவன் மனதில் விரக்தி எழுந்தது... வேதனையுடன் கண்களை மூடியவனின் மனம் மனைவியின் வார்த்தையில் உழன்று கொண்டு இருந்தது...

தடால் என்ற சத்தத்தில் தனது நினைவு கலைந்தவன் என்னவென்று பார்க்க அவனது மனைவி தான் கட்டிலில் மயங்கி விழுந்து கிடந்தாள்...

காலையில் இருந்த உடல் சோர்வோடு மனச்சோர்வும் சேர்ந்து கொள்ள அவளை ஆழ்ந்த மயக்கத்தில் ஆழ்த்தியது...

பதற்றத்துடன் அருகில் இருந்த கண்ணாடி குவளையில் இருந்து தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் அடித்தவன்,

"பேபி..." என்றான் பதட்டத்துடன்... ஆனால் அவளின் மயக்கம் தெளியவில்லை...

அதை கண்டு மனம் பதைபதைக்க பயந்து போனவனாய் மனைவியை கையில் ஏந்தியவன் பெற்றோரை அழைத்து கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தான்...

அங்கு அவளை பரிசோதித்த மருத்துவர் அவள் குழந்தை உண்டாகி இருக்கும் மகிழ்ச்சியான செய்தியை கூறினார்... அத்தோடு வருணிதாவின் உடல் மிகவும் பலகீனமாக இருப்பதால் அவளை மிகவும் ஜாக்கிரதையாக பார்த்து கொள்ளுமாறு கூறினார்...

மனைவி கர்ப்பம் தரித்து இருப்பதை கேட்டு தேவானந்த்திற்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது... அந்த வானத்தை வசப்படுத்திய மகிழ்ச்சி அவனுள் எழுந்த போதும் அதை அனுபவிக்க விடாமல் அவர்களுக்கு இடையில் இந்த பிரச்சினை பூதாகரமாய் நின்றது...

ஆனால் குழந்தையின் வருகை தங்களது பிரச்சினையை சரி செய்துவிடும் என்றே அவன் நம்பினான்...

மயக்கம் தெளிந்த மனைவியின் அருகில் அமர்ந்தவன் அவளது தலையை கோதி, "பேபி... எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா... நீ எத்தனை நாள் எதிர்பார்த்துக்கிட்டு இருந்தது... இப்போ நிறைவேறி இருக்கு... உனக்கு சந்தோசமா பேபி...?" என்று கேட்டவனின் கையை வெடுக்கென்று உதறிவிட்டவளை அவன் திகைப்புடன் பார்த்தான்...

இந்த மகிழ்ச்சியான விசயம் கேள்விப்பட்டும் அவள் தன்னை உதறி தள்ளுகிறாள் என்றால் அவளது மனம் தனது செயலால் எந்தளவுக்கு காயப்பட்டு இருக்கிறது என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

அவனுக்கு தெரியும் இப்போது அவனை விட அவள் தான் அதிக துயரத்தில் இருப்பாள் என்று... அவன் மீதான அவளின் காதல் அவனுக்கு நன்கு தெரியும்... அந்த காதல் கொடுத்த நம்பிக்கையில் மீண்டும் அவன் தன்னை நியாயப்படுத்த முயன்றான்...

"பேபி... நான் அப்படி பண்ணுவேனான்னு நீ ஒரு முறை கூடவா யோசிக்கலை... உன் தேவ் உனக்கு துரோகம் பண்ணுவேனா..."

அவனது குரலில் இருந்த காதலில், ஏக்கத்தில் அத்தனை நேரம் அவள் போட்டு வைத்து இருந்த இரும்புத்திரை கிழிய அவள் உடைந்து போய் அவனை கட்டி கொண்டு அழுதாள்...

"குழந்தை உண்டாகி இருக்கிற விசயம் கேள்விப்பட்டதும் எத்தனை ஆசையா உங்க கிட்ட சொல்லணும்ன்னு இருந்தேன் தெரியுமா... ஆனா அது அத்தனையும் உங்களால பாழாகி போயிருச்சு... நீங்க ஏன் இப்படி செஞ்சீங்க தேவ்...? நீங்களா இப்படின்னு இன்னமும் என்னால நம்ப முடியலை... தொழில்ல ஜெயிக்கிறதுக்காக கட்டிய மனைவிக்கு துரோகம் பண்ண உங்களால எப்படி முடிந்தது... உங்களுக்காக உயிரையும் கொடுக்க நான்

தயாரா இருக்கும் போது உங்களுக்காக கேவலம் இந்த டெண்டரை விட்டு கொடுக்க மாட்டேன்னா... ஏன் இப்படி செஞ்சீங்க தேவ்... என் காதலை, என் மனசை ஏன் இப்படி உயிரோடு கொல்லுறீங்க...?"

அவள் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் அவனை தான் உயிரோடு கொல்கிறது என்பதை அறியாதவளாய் அவள் பேசிக் கொண்டே போனாள்...

அவனது உடலும், மனமும் இறுகி போனது உணர்வுகள் இன்றி... அவன் உணர்வை தான் அவள் உயிரோடு குத்தி கொன்றுவிட்டாளே...

அவளிடம் இருந்து விலகியவன் அவளது கண்களை நேருக்கு நேர் சந்தித்து, "அப்போ நீ என்னை நம்பலை... இதை நான் தான் செஞ்சிருப்பேன்னு நினைக்கிற..."

அவனது வார்த்தையில் அவளது கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது...

"நான் நம்பறேன் தேவ்..." அதில் அவனது முகம் மலர்ந்தது...

"ஆனா ஒரே ஒரு சாட்சி உங்களுக்கு சாதகமா நீங்க கொண்டு வாங்க... அப்போ நான் நம்பறேன்... ஆனா எல்லாமே உங்களுக்கு எதிரா தானே இருக்கு... இப்போ நான் என்னன்னு நினைக்கிறது..."

கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய் என்ற கூற்றை தனது மனையாள் மறந்துவிட்டாளோ என்று எண்ணியவனுக்கு விரக்தி தான் ஏற்பட்டது...

அவனை நிரபராதி என்று நிரூபிக்க இப்போது அவனால் முடியாது... காலம் தான் அதை தீர்மானிக்க வேண்டும்... அதுவரை அவள் பார்வையில் அவன் குற்றவாளி தான்...

"முடியாது தேவ்... அது உங்களால முடியாது... ஏன்னா தப்பு செஞ்சது நீங்க...? இன்னமும் அதை ஏன் நீங்க மூடி மறைக்கிறீங்கன்னு தான் எனக்கு தெரியலை..."

அதற்கு அவன் ஒன்றும் பேசவில்லை... இப்போதைக்கு தன்னிலை விளக்கம் கொடுக்க அவனால் முடியாது என்பது ஒரு பக்கம் என்றால், அவளது உடல்நிலை மறுபக்கம் நின்று அவனை வாட்டி வதைத்து அவனின் வாயை மூட செய்திருந்தது... தேவையில்லாத வாக்குவாதத்தை தவிர்க்க அவன் நினைத்தான்...

"நீங்க செய்த துரோகத்தை என் உயிர் இருக்கும் வரை என்னால் மறக்க முடியாது..." முகத்தை மூடி கொண்டு அழும் மனைவியை செய்வதறியாது பார்த்தான் அவன்...

காதலில் நம்பிக்கை அவசியம்... சந்தேகம் அநாவசியம்... அவன் மேல் நம்பிக்கை இல்லாமல் சந்தேகம் கொண்டு பேசும் அவளிடம் மேற்கொண்டு வாதாட மனமின்றி ஒன்றும் பேசாது அவன் எழுந்து வெளியில் வந்தான்...

விசயம் கேள்விப்பட்ட இரு வீட்டு பெற்றோரும் மகிழ்ந்து போயினர்... மறுநாளே வருணிதாவின் பெற்றோர் அவளை பார்க்க வருவதாய் கூறினர்...

வீட்டிற்கு அழைத்து வரப்பட்ட வருணிதாவிடம் அதற்கு மேல் அவன் நெருங்கவும் இல்லை... பேச முயற்சிக்கவும் இல்லை... இருவரிடையேயும் கனத்த மௌனம் நிலவியது... யார் பேசினாலும் காயப்பட போவது அவர்கள் நேசம் வைத்தவர்கள் தான் என்பதாலோ என்னமோ இருவருமே பேச பயந்தனர்...

'என்னை நம்பாமல் போனாளே...' என்று அவன் மனம் குமுறினான்...

'எப்படி இவனால் எனக்கு துரோகம் இழைக்க முடிந்தது...' என்று அவள் மனம் மருகினாள்...

நம்பிக்கைக்கும், துரோகத்திற்கும் இடையில் அவர்களின் காதல் அந்தரத்தில் ஊசலாடி கொண்டு இருந்தது... இருவருக்குமே தூங்கா இரவாகி போனது அன்றிரவு...

மறுநாள் வருணிதாவின் பெற்றோர் அவளை பார்க்க வந்த போது அவள் அவர்களோடு ஊருக்கு செல்ல

விரும்பினாள்... அவளின் உடல்நிலையை முன்னிட்டு எல்லோரும் மறுத்தனர்... ஆனால் அவள் கிளம்புவதில் பிடிவாதமாய் இருக்க அவளின் மனநிலைக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைதியாகினர்...

அவன் தான் அவளின் இந்த திடீர் முடிவு கேட்டு அதிர்ந்து போனான்... ஆனால் அவளோ,

"உங்களோட ஒரே அறையில் இருப்பது மூச்சு முட்டுவது போல் இருக்கு... உங்களை பார்க்கும் போது எல்லாம் நீங்க எனக்கு செஞ்ச துரோகம் தான் நியாபகத்துக்கு வருது... அந்த துரோகம் நியாபகத்தில் வரும் போது எல்லாம் எனக்கு உங்க மேல அளவில்லாத வெறுப்பு வருது..." என்றவள் மேலே சொல்ல முடியாமல் தேம்பினாள்...

அதிலேயே அவள் தன் மீது வைத்திருக்கும் காதல் அவனுக்கு புரிந்து போனது... அளவில்லா நேசம் வைப்பதும் தவறு தான் போலும்... அவளின் அழுகை கண்டு அவனுக்கு அத்தனை வேதனையாக இருந்தது... அவளை துன்புறுத்துவதற்காகவா அவன் எத்தனையோ இடர் தாண்டி அவள் கரம் பிடித்தான்... எத்தனையோ அவமானங்களை தாங்கி கொண்டு அமைதியாய் நின்றான்...

அழும் மனைவியை கண்டு அவனுக்கும் கண்கள் கரித்தது... ஆழ்ந்த மூச்செடுத்து கண்ணீரை உள்ளிழுத்து கொண்டு அமைதியாய் நின்றான் தனது உணர்வுகளை அவளுக்கு காட்டாமல்...

"என் மனசில் உங்க மேல இருக்கிற காதல் உயிரோடு இருக்கணும்ன்னா நான் உங்களை பார்க்காம இருக்கிறது தான் நல்லது... அந்த காதல் தான் என் வயித்தில் வளர்ற நம்ம குழந்தையை உங்க கிட்ட பாசமா வச்சிருக்கும்... இல்லைன்னா உங்க மேலுள்ள என்னோட வெறுப்பு அதோட மனசிலேயும் வெறுப்பை உண்டாக்கிரும்... பிரச்சினை உங்களுக்கும் எனக்கும் தான்... இதில் நம்ம குழந்தை பாதிக்கப்படுறதை நான் விரும்பலை... இந்த குழந்தைக்கு நீங்க தான் அப்பா... அந்த அன்பு உங்க கிட்ட

இருந்து அதுக்கு கிடைச்சா மட்டும் போதாது... அது கிட்ட இருந்தும் உங்களுக்கும் கிடைக்கணும்... என்னால அது உங்களை வெறுத்திட கூடாது... அதுக்கு நாம விலகி இருக்கிறது தான் நல்லது..."

அவள் பேச பேச சிலையாய் நின்று இருந்தவனால் மேலே ஒன்றும் பேச முடியவில்லை...

"நான் ஊருக்கு கிளம்பவா...?"

அத்தனை தூரம் பேசிவிட்டு அவனிடம் அனுமதி வேண்டி நிற்பவளை கண்டு அவனுக்கு விசித்திரமாய் இருந்தது... அவளின் காதலே அவனுக்கு புரியாத புதிராய் விசித்திரமாய் தான் இருந்தது...

"உனக்கு விருப்பமானதை நீ செய்..." என்றான் அவளின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து...

அவனின் வார்த்தையில் கண்கள் கலங்க அவனை பார்த்தாள்...

எத்தனை காதல் வைத்திருந்தாள் அவன் மீது... எங்கு தவறு நேர்ந்தது நொடியில் அந்த காதல் கோட்டை சரிவதற்கு...

"என் விருப்பம் என்னன்னு உங்களுக்கு தெரியாதா தேவ்... உங்க காலடியில் உயிர் விடுறது தான் என் விருப்பம்... ஆனா அந்த விருப்பத்தை கூட..." மேலே சொல்ல முடியாமல் தேம்பியவள் அறையை விட்டு செல்ல எத்தனிக்க, அவன் எட்டி வந்து அவளை இழுத்து பிடித்து அவளை தன்னுடன் இறுக அணைத்து இருந்தான்...

"நீ போக வேண்டாம் பேபி... உன்னை விட்டு நான் எப்படி இருப்பேன்..."

அவள் அத்தனை தூரம் அவன் மீது நம்பிக்கை இல்லாமல் பேசிய போதும் அவன் மீதான அவளின் காதலின் மேல் நம்பிக்கை வைத்து உயிரை கையில் பிடித்து கொண்டு கடைசிமுறையாய் அவன் கேட்டான்...

அவனின் நெஞ்சில் முகம் புதைத்து அழுது கொண்டு இருந்தவளோ பேசும் மனநிலையில் இல்லை...

சிறிது நேரம் கழித்து தானாய் அவனிடம் இருந்து விலகியவள் ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியில் வந்தாள்... அதிலேயே அவளது மனம் புரிந்து போனது அவனுக்கு...

மாமனார், மாமியார், சுஜானா எல்லோரிடமும் விடைப்பெற்று தனது பெற்றோருடன் காரில் ஏறியவள் அவனை திரும்பி பார்த்தாள்...

இருவரது பார்வையும் ஒன்றை ஒன்று கவ்வி நின்றது... அந்த பார்வை உணர்த்திய காதல் இருவரின் கண்களையும் கலங்க செய்தது...

இருவரின் அதிகப்படியான நேசமே இந்த மாதிரியான ஒரு செயலை செய்ய வைத்துவிட்டது என்பதை இருவருமே உணர்ந்து இருந்தனர்...

அவன் தன் மீது வைத்திருந்த அதீத காதல் தான் அவனை தடம் மாறி போக செய்துவிட்டதாய் அவள் எண்ணினாள்...

அவள் தன் மீது வைத்திருந்த அதீத காதல் தான் அவளை தன்னிடம் இருந்து விலகி இருக்க செய்திருப்பதாய் அவன் எண்ணினான்...

ஒருவரின் காதலை மற்றவர் நன்கு புரிந்து வைத்து இருந்தனர்... அந்தளவுக்கு இருவருக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இருந்தது...

ஆனால் அதையும் மீறி 'கணவன் தனக்கு துரோகம் இழைத்து விட்டானே' என்று அவளும், 'கடைசிவரை என் மேல், என் காதல் மேல் அவள் நம்பிக்கை வைக்கவில்லையே' என்று அவனும் மனதிற்குள் குமுறி சொல்லொண்ணா வேதனையில் உழன்றனர்...

நேசம் கொண்ட இரு நெஞ்சங்களும் காதல் என்ற புள்ளியில் இணைந்து தவித்தது தங்களது

இணைகளுக்காக…

உறையும்…

அன்று இரவு வீட்டிற்கு வரும் போதே மிகுந்த களைப்புடன் உள்ளே நுழைந்தான் தேவானந்த்... மனைவியின் பிரிவு அவன் மனதை மிகவும் வாட்டியது... அவள் இல்லாத வீட்டிற்கு வரவே அவனுக்கு பிடிக்கவில்லை... இத்தனை வருடங்கள் அவன் வாழ்ந்த வீடு கூட அவள் இல்லாத ஒரே காரணத்தால் அவனுக்கு அந்நியமாய் தோன்றியது... அவள் அருகில் இல்லாத தனிமை அவன் மனதுக்குள் ஒருவித வெறுமையை உண்டாக்கியது...

சாப்பிட அமர்ந்த மகனுக்கு பரிமாறியபடி அவனது முகத்தை அளவிட்டார் பார்வதி... கடந்த ஏழு மாதங்களாக முகத்தில் சிரிப்பை தொலைத்து, ஏதோ பேருக்கு உண்டதாய் கொறித்துவிட்டு, வாழும் ஆசை அறவே இல்லாதது போல் மனம் வெறுத்த நிலையில் இருக்கும் மகனை கண்டு அவர் கவலை கொண்டார்...

மகனுக்கும், மருமகளுக்கும் இடையில் என்ன பிரச்சினை என்று அவருக்கு தெரியவில்லை... அவனும் வாயை திறக்க மாட்டேங்கிறான்... அவளும் மௌனத்தை பதிலாக கொடுக்கிறாள்... இருவர் மனதிலும் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியவில்லை...

ஆனால் இந்த பிரிவினால் இருவரும் சந்தோசமாய் இல்லை அது மட்டும் நிச்சயம்... இவன் கல்லாய் இறுகி போய் இருந்தான் என்றால், அவள் கண்ணீரும் கம்பலையுமாய் அசோகவனத்து சீதையாய் சோகத்தில் தன்னை மூழ்கடித்து கொண்டு இருந்தாள்...

அதை பத்மா அவரிடத்தில் கூறி வேதனைப்பட்ட போது அவரால் வேதனை மட்டுமே கொள்ள முடிந்தது... அவர்களின் துயர் துடைக்க முடியவில்லை...

மற்ற மாமியார் போல் மருமகளை குறை கூறவும் அவரால் இயலவில்லை... மகன் எந்தளவுக்கு நல்லவனோ அதை விட மருமகள் ஒரு படி மேலே அவருக்கு... அந்தளவுக்கு

அவள் மிகவும் நல்லவள்... அவள் குணத்தை ஒரு குறை கூற முடியாது...

அதே போல் தான் கணவனும், மனைவியும்... அத்தனை அந்நியோன்யம், அத்தனை அன்பு, காதல் இருவருக்கும் இடையில்... எப்படி நிகழ்ந்தது இந்த பிரிவு...? அவருக்கு இது அதிசயமாக இருந்தது...

'என் பிள்ளைகள் சந்தோசமா இருப்பது பொறுக்காமல் யார் கண்ணு வச்சாங்களோ தெரியலை... இப்படி ரெண்டு பேரும் மனக்கஷ்டப்பட்டு வேதனைப்படுறாங்களே...' தாயாய் தனது இரு மக்களுக்காக தவித்தது அவரது உள்ளம்...

"தேவா..." அன்னையின் அழைப்பில் நிமிர்ந்து அவரை பார்த்தான் அவன்...

"வருணிக்கு கொடுத்த ட்யூ டேட்டுக்கு இன்னும் மூணு நாள் தான் இருக்கு... நீ எப்போ அவளை பார்க்க போற...? தலைப்பிரசவம்ங்கிறது பெண்ணுக்கு மறுஜென்மம் மாதிரிப்பா... இந்த மாதிரி சமயத்தில் தான் நீ அவ கூட இருக்கணும்... உங்க ரெண்டு பேருக்கிடையில் எந்த மனஸ்தாபம் இருந்தாலும் சரி... இப்போ அதை காட்டும் நேரமில்லை... நீ அவ கூட இருந்தா அவளுக்கு தெம்பா, ஆறுதலா இருக்கும் தேவா..."

அன்னை சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் தெரியாதவனல்ல அவன்... ஆனால் அவனை பார்த்தாலே அவன் மனைவி ஒன்று அழுது கரைகிறாள்... இல்லை மயக்கம் போட்டு விழுகிறாள்... இப்படிப்பட்ட மனைவியை வைத்து கொண்டு அவன் என்ன தான் செய்வது...

"பார்க்கலாம்மா..." எந்தவித உணர்வையும் வெளிக்காட்டாமல் சொன்னவன் கையை கழுவி விட்டு சென்றுவிட்டான்... அவனை கண்டு அவருக்கு வேதனையாய் இருந்தது...

அப்போது அங்கு வந்த சிவநேசன் மனைவியின் தோளில் கை வைத்து, "எல்லாம் சரியாகும் பாரு..."

"காதலிச்சு கல்யாணம் பண்ணியும் அவன் சந்தோசமா இல்லையேங்க... கல்யாணம் பண்ணும் போது இவங்களுக்கு இடையே இருந்த காதல் இப்போ எங்கே போச்சு...?"

"அதிக காதல் இருந்தா கூட சில சமயம் இது மாதிரி நடக்க வாய்ப்பு இருக்குது பாரு..." என்ற கணவரை ஆச்சிரியமாக பார்த்தார் அவர்...

"என்ன சொல்றீங்க...?"

"காலம் வரும் போது உனக்கு அது புரியும்... அது வரைக்கும் நீ கவலைப்படாம இரு..." கணவனின் வார்த்தையில் மனதை தேற்றியவர் உறங்க சென்றார்...

பெற்றோர் பேசிய வார்த்தைகள் அனைத்தும் தேவானந்த்தின் காதில் விழத்தான் செய்தது... அதற்கு மேல் வரவேற்பறையில் இருக்க முடியாமல் தனது அறைக்கு வந்தான்... அறைக்குள் நுழைந்ததுமே மனைவி இல்லாத வெறுமை முகத்தில் அடித்தது...

எப்போது அவன் அறைக்குள் நுழைந்தாலும் 'தேவ்' என்று கழுத்தை கட்டி கொண்டு தொங்கும் காதல் மனைவியின் அருகாமைக்கு அவனது மனம் ஏங்கியது...

கட்டிலை பார்க்கும் போது அவளுடன் தனித்து இருந்த காதல் இரவுகள் நினைவில் வந்து அவனை பெரிதும் இம்சித்தது...

ஒருநாள் ஒரு பொழுது கூட சண்டை என்று போட்டது கிடையாது... ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு இடையில் காதல் பெருகி கொண்டே போயிற்றே தவிர அது சிறிதும் குறையவில்லை...

ஆனால் திடீரென்று யாரோ மந்திரக்கோலை சுழற்றியது போல் நொடியில் அத்தனை காதலும் எப்படி மாயமாய்

காணாமல் போனது...

படுக்கையில் படுத்தவனுக்கு தூக்கம் வரவில்லை...

அவனுக்கு தெரியும் அவனுக்கே அவளின் பிரிவு இத்தனை துன்பத்தை கொடுக்கிறது என்றால் அவளுக்கு அதை விட அதிக துயரத்தை அது கொடுக்கும் என்று...

அவனில்லாமல் அவளால் ஒரு நொடி கூட வாழ முடியாது என்பதும் அவனுக்கு தெரியும்... இப்போது கூட அவனின் நினைவுகளை சுவாசமாய் கொண்டு தான் அவள் உயிர் வாழ்ந்து கொண்டு இருப்பாள் என்பதும் அவனுக்கு தெரியும்...

அவளின் அந்த இனிமையான நினைவுகளை அழிக்க மனம் வராமல் தான் அவன் அவளை விட்டு பிரிந்து இருக்கிறான் என்பது அவர்கள் இருவருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்...

இப்போதும் அவனின் நினைவில் தூங்காமல் கண் கலங்கி கொண்டு தான் அவள் இருப்பாள் என்பதை உணர்ந்தவன் படுக்கையில் இருந்து எழுந்து ஜன்னல் அருகில் வந்தான்...

வானில் வெண்ணிலவு பிரகாசமாய் ஒளிர்ந்தது...

'நிலவே... நீயாவது என் துன்பத்தை அவளிடம் சொல்வாயா...? என் மனதில் உள்ள காதலை அவளிடம் எடுத்து சொல்வாயா...? நான் எந்த தவறும் செய்யவில்லை என்பதை அவளுக்கு புரிய வைப்பாயா...?' ஏதேதோ நினைவில் உழன்றபடி மனம் கனக்க நின்று இருந்தான் அவன்...

அவன் மனம் கடந்து சென்ற மாதங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளை நினைத்து பார்த்தது...

அவன் மனைவியும் அவனை போல் அவளது அறையில் ஜன்னல் வழியே நிலவை தான் வெறித்து கொண்டு இருந்தாள்... கை நிறைய கண்ணாடி வளையல்கள் அடுக்கி இருக்க, வயிறு நன்றாக மேடிட்டு தாய்மையின் இயற்கை

எழிலுடன் அழகாக அவள் இருந்த போதும் அவளது கண்ணில் ஜீவன் இல்லை... அவளது ஜீவன் தான் சென்னையில் இருக்கிறதே...

கணவன் எத்தனையோ முறை அழைத்தும் அவளால் அவனுடன் செல்ல முடியவில்லை... அவனை காணும் போது எல்லாம் அவளால் மூச்சு கூட விட முடியாதபடி மனதுக்குள் ஏதோ பாரம் ஒன்று கனமாய் அழுத்தி அவளை உயிருடன் கொன்றது...

இருக்கு ஆனா இல்லை என்பது போல் ஒரு மனம் அவனை நம்ப சொல்லியது, மறுமனம் அவனை நம்ப மறுத்தது... அவன் நல்ல கணவன் தான் அதில் எந்த சந்தேகமும் இல்லை... ஆனால் தொழில் என்று வந்த போது தொழிலதிபனாய் கணவன் தன்னை கைவிட்டு விட்டான் என்று அவள் மனம் குமைந்து போனாள்...

கணவனின் செயலை வெறுத்தவளுக்கு அவனை வெறுக்க முடியவில்லை... அவளது உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் அவனுக்காக துடித்தது... அவனின் அணைப்பிற்காக ஏங்கியது... அதுவும் இந்த மாதிரி நேரத்தில் அவனின் அருகாமையை அவளது மனம் பெரிதும் எதிர்பார்த்தது...

குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் அவனிடம் சொல்லி அதை கேட்டு அவன் முகம் மலர்வதை காண ஆசை கொண்டது அவளது காதல் மனம்...

'ஏன் என் வாழ்க்கையில் மட்டும் இப்படி நடந்தது...? தேவ் ஏன் இப்படி செய்தார்...?' மனதுக்குள் மருகியவளின் மனம் அவனின் நினைவுகளில் தன்னை தொலைத்தது...

அன்று அவனை விட்டு பிரிந்து ஒரு வாரமாகி இருந்த நிலையில் இப்படித்தான் இரவு வேளையில் தூக்கம் வராமல் ஜன்னல் வழியே நிலவை வெறித்து கொண்டு இருந்தாள்... அன்றைய நாள் அவர்களுக்கு மிகவும் முக்கியமான நாள்...

அந்த நாள் இப்படி துயர நாளாக அமைந்துவிட்டதே என்று எண்ணி அவள் வருந்தும் போதே அவளை பின்னால் இருந்து இரு கரம் அணைத்தது... அவள் கத்துவதற்கு வாய் திறக்கும் முன் அவள் காதுக்கருகில்,

"ஹேப்பி வெட்டிங்டே மை டியர் பொண்டாட்டி..." கணவனது மயக்கும் குரலை கேட்டவளுக்கு மயக்கம் வராத குறை தான்...

திகைத்து போய் விழி விரிய அவனை திரும்பி பார்த்தாள்... அவனோ அவளை புன்சிரிப்புடன் பார்த்தான்...

"என்ன பேபி அப்படி பார்க்கிற...?" செல்லமாய் அவள் தலையில் முட்டி விளையாடினான்...

‘இது நிஜமா, கனவா...?’ என்று தெரியாமல் விழித்தவளை கண்டு,

"நிஜம் தான் பேபி..." என்றவன் அவளது முகத்தை கையில் ஏந்தி முகம் முழுவதும் முத்தமிட்டான்... அவனது முத்தத்தில் அவனது ஸ்பரிசத்தை உணர்ந்தவளுக்கு மெய் சிலிர்த்தது...

இன்று அவர்களின் இரண்டாம் ஆண்டு திருமணநாள்... கணவனோடு கொண்டாட முடியாத தன் நிலையை நினைத்து அவள் வருந்தும் போதே அவளது எண்ணம் உணர்ந்தார் போன்று அவன் வருகை தந்தது அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது...

"தேவ்..." கண்களை மூடி கிறங்கியபடி கூறியவள் அவனது முத்தத்தை ரசித்தாள்...

"பேபி... என்னை மன்னிச்சிட்டியா...?" அவனது வார்த்தையில் மயங்கி இருந்த அவளது மனம் மெல்ல விழிப்புற்றது...

"ஐயம் சாரி பேபி..." என்றபடி அவனது ஒவ்வொரு மன்னிப்பிற்கும் ஒரு முத்தம் கொடுத்து அவளிடம் மன்னிப்பை யாசித்தான்...

'கடவுளே... என்ன அவஸ்தை இது... என் தேவ் என் கிட்ட மன்னிப்பு கேட்பதா... இதை கேட்க தான் நான் உயிரோடு இருக்கிறேனா...' அவளது மனம் வேதனையில் அரற்றியது... அதுவும் அவனுக்காக...

அதற்குள் தேவானந்த் அவளை கையில் அள்ளி கொண்டு கட்டிலில் படுக்க வைத்தவன் அவள் முகம் நோக்கி குனிந்தான்...

இந்த ஒரு வார பிரிவு அவளையும் வாட்டி வதைத்ததோ என்னமோ அவளும் மனமுவந்து அவனது கழுத்தில் கரம் கோர்த்து அவனை தன்னுடன் சேர்த்து இழுத்தாள்... அவளது செயலில் மனம் மகிழ்ந்து போன தேவானந்த்தும் அவளை தன் வசப்படுத்த முயன்று அதில் கொஞ்சம் கொஞ்சமாய் வெற்றியும் கண்டான்...

ஒரு கட்டத்தில் என்ன முயன்றும் அவளால் அவனுடன் முழுமனதுடன் ஒன்ற முடியவில்லை... இவ்வளவு அன்பையும், காதலையும் கணவன் எப்படி பொய்யாக்கினான் என்ற கழிவிரக்கத்தில் அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

அவளது அழைப்பை ஏற்று அவளிடம் நெருங்கியவன் அவளது கண்ணீரை கண்டதும் அவளை விட்டு விலகினான்...

"வது பேபி..." தவிப்புடன் அழைத்தவனின் கரங்கள் அவளது கண்ணீரை துடைத்தது...

"தேவ்..." தேம்பியவாறு எழுந்து அமர்ந்தவளை கண்டு அவன் வேதனை அடைந்தான்...

ஏன் இவ்வளவு துயரப்படுகிறாள் என்று... அவள் துயரப்பட வைக்கும் எந்த செயலையும் அவன் செய்யவில்லை என்பதை அவளுக்கு எப்படி புரிய வைப்பது என்று அவனுக்கு தெரியவில்லை...

"இங்கே பார் வது... இது நானாய் செய்யவில்லை... அதுவும் நான் உனக்கு எதிரா எதுவும் செய்வேனா... கொஞ்சம்

யோசிச்சு பாருடா..." என்றான் சிறு பிள்ளைக்கு உணர்த்துவது போல்...

"நீங்க சொல்றதை எல்லாம் நான் நம்பறேன்... ஆனா இந்த டெண்டரில் உங்க சம்மதம் இல்லாமல் யாரும் எதுவும் செய்து இருக்க முடியாது... அதற்கான கையெழுத்தை நீங்க போடாம வேறு யார் போட்டாங்களாம்... பொய் சொல்வதாக இருந்தாலும் பொருந்த சொல்லணும் தேவ்..."

அவளின் பேச்சில் அவன் வாயடைத்து போனான்... அவனது கைகள் தாமாக அவளிடம் இருந்து விலகியது... ஒன்றும் கூறாது அவளை பார்த்தான்...

இதற்கும் அவனிடம் பதில் இருக்கத்தான் செய்தது... ஆனால் இப்போது அவளிடம் இதை கூறினால் அவளின் பார்வையில் அவன் கேலிக்குரிய பொருளாகி விடுவான்... அதை கூட அவளுக்காக அவன் தாங்கி கொள்வான் தான்... ஆனால் அதையும் அவள் நம்பாது போனால் அவனுக்கு இருக்கும் ஒரு வழியும் அடைப்பட்டு போய்விடும்... அதை அவளாய் உணர்ந்து புரிந்து அவனிடம் வர வேண்டும்... அதனால் அவன் அமைதி காத்தான்...

சந்தர்ப்பம் சூழ்நிலை இப்படி அவனுக்கு எதிராய் அமைந்து அவனது வாழ்வில் பெரும் சூறாவளியை கிளப்பும் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

"எப்படி தேவ் என் மேல் இவ்வளவு காதலை வச்சிட்டு எனக்கு துரோகம் பண்ண உங்களால முடிஞ்சது... அதுக்கு நீங்க இந்தளவுக்கு காதலை என் மேல் வைக்காம இருந்து இருக்கலாம்... இப்படி ஒரேடியா என் கழுத்தை அறுத்திருக்க வேண்டாம்... என்னால முடியலை தேவ்... உங்க மேலுள்ள காதலுக்கும், வெறுப்புக்கும் இடையில் நான் மாட்டிக்கிட்டு அவஸ்தைப்படுறேன்... உங்க மேலுள்ள காதல் உங்களை ஏத்துக்க சொல்லுது... ஆனா உங்க மேலுள்ள வெறுப்பு இத்தனை காதலும் பொய், வேசம், நடிப்புன்னு அடிச்சு சொல்லுது... நான் என்ன பண்ணட்டும் தேவ்... வாழ்வா சாவாங்கிற மாதிரியான ஒரு போராட்டத்தை எனக்குள் நான் போராடிக்கிட்டு இருக்கேன்..."

அவனது சட்டைக் காலரை பிடித்து கொண்டு கதறியவள் மனப்பாரம் தாங்காமல் அப்படியே மயங்கி சரிந்தாள்... அதை கண்டு அவன் இன்னும் பயந்து போனான்... அவனின் காதலை விட அவளின் உடல்நிலை அவனுக்கு முக்கியமாய் தோன்றியது...

தண்ணீரை தெளித்து அவளின் மயக்கத்தை தெளிவித்தவன் அவளை விட்டு விலகி செல்ல முடிவு எடுத்தான்... அதை அவளிடம் சொல்லவும் செய்தான்...

"தூக்கு தண்டனை கைதிக்கு கூட கடைசிமுறையாய் ஒரு வாய்ப்பு கொடுப்பாங்க... ஆனா நீ எனக்கு அதை கூட கொடுக்க மறுக்கிற... இதுக்கு மேல் நானும் என் தரப்பு நியாயத்தை பேச போறது இல்லை... நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டு என்பதை நீ ரொம்ப தாமதமா புரிஞ்சிக்க போற..." என்றவன் ஒரு பெருமூச்சை இழுத்து விட்டு தனது உணர்வுகளை அடக்கி கொண்டு,

"இனி உன்னை எந்த விதத்திலும் நான் தொந்திரவு பண்ண மாட்டேன்... நான் போறேன்..." என்றவன் அவளது முகத்தை கூட நிமிர்ந்து பார்க்காமல் அவளது அறையை விட்டு வெளியேறினான்...

அந்த அர்த்த ராத்திரி வேளையில் கிளம்பிய மருமகனை கண்டு பத்மா கலக்கத்துடன் பார்த்தார்... அவரின் கலக்கம் கண்டோ என்னமோ அவன் அவரை பார்த்து ஆறுதலாய் புன்னகைத்து,

"எனக்கு அவசர வேலை ஒண்ணு வந்திருச்சு... அதான் கிளம்பறேன்..." என்றான் மனைவியை விட்டு கொடுக்காமல்...

அது பத்மாவிற்கு புரியாமல் இல்லை...

"ஏதோ சின்ன பொண்ணு தெரியாம..." என்றவரை இடைமறித்தவன்,

"என்னத்தை இது... என் மனைவி பத்தி எனக்கு தெரியாதா... எனக்கு அவள் மேல் எந்த கோபமும்

இல்லை..." என்றவன் அதற்கு மேல் ஒரு நொடி கூட அங்கு தாமதிக்கவில்லை...

பேருந்தில் செல்லும் போது கூட அவள் கூறிய வார்த்தைகளே அவனை மீண்டும் மீண்டும் வதைத்து கொன்றது...

அவளுக்கோ ஆசையுடன் தன்னை அணைத்த கணவன் ஏமாற்றத்துடன் கிளம்பி சென்றதை நினைத்து நினைத்து கண்ணீர் வந்தது...

இருவருக்குமே தங்கள் மீதே சொல்லொண்ணா வெறுப்பு எழுந்தது... அதே போல் இருவருமே மற்றவர்களுக்காக வருந்தினர்...

அதன் பின் மனைவியை பார்க்க அவன் சிறிதும் முயற்சிக்கவில்லை... அவளும் அவனை அழைத்து பேசவில்லை... ஆனால் அவனது பெற்றோர், தங்கையிடம் அலைப்பேசியில் பேசினாள்... அது போல் அவனும் அவளது பெற்றோரிடம் பேசினான்... அவளின் உடல்நலம் பற்றி விசாரிப்பான்... ஆனால் மறந்தும் அவளிடம் பேசவில்லை...

இருவர் மனதில் நேசம் இருந்தும் அந்த நேசமே அவர்களுக்கு இடையில் பெரும் தடுப்பு சுவராய் எழுந்து தாண்ட முடியாத தடையாய் நின்றது...

அடுத்து வளைகாப்பு வந்த போது உறவினர் மத்தியில் விட்டு கொடுக்காமல் பெற்றோருடன் வந்து தேவானந்த் கலந்து கொண்டான்...

தாய்மை பூரிப்பில் அழகாய் இருந்தவளை காண காண தெவிட்டவில்லை அவனுக்கு... ஆனால் அவளை நேரிடையாய் பார்த்து ரசிக்க முடியாமல் அவளது வார்த்தைகள் அவன் முன் வந்து நின்று அவனை வதைத்தது... அதனால் மனைவியை பார்த்தும் பார்க்காதது போல் பார்த்து ரசித்தான்...

அவனை நலுங்கு வைக்க கூப்பிட்ட போது வந்தவன் அப்போது தான் அவளின் கண்களை நேருக்கு நேர்

சந்தித்தான்... ஒரு நொடி என்றாலும் அவளது கலங்கிய விழி அவனுக்கு பல கதைகள் கூற அதில் அவன் உள்ளுக்குள் நொறுங்கி போனான்...

அவளது மன ஏக்கத்தை போக்க முடியாமல் யாரோ ஒருவன் போல் கையை கட்டி கொண்டு நிற்கும் தன் நிலையை அறவே வெறுத்தான் அவன்... அதன் பின் அவனால் முழுமனதாய் ஒன்ற முடியாமல் பட்டும் படாமல் நலுங்கு செய்துவிட்டு ஒதுங்கிவிட்டான்...

அவனின் ஒதுக்கம் கண்டு அவளது மனம் துடித்தது... அவன் இல்லாத போது அவனை தேடி தவித்த மனம் அவன் அருகில் வந்தால் விலகி ஓடுவது ஏன் என்று புரியாமல் அவளும் தவித்தாள்... விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையில் மாட்டி கொண்டு முழித்தாள் அவள்...

அன்றே உறவினர்கள் சிலர் அவர்கள் காது பட இவர்கள் பிரிந்து இருப்பதை பற்றி பேசினார்கள்... அதை காது கொடுத்து கேட்க முடியாமல் இரு வீட்டு பெற்றோரும் அவர்களிடம் பேசினர்...

"வது முடிவு தான் என் முடிவு..." என்றதோடு அவன் முடித்து கொண்டான்...

அவளோ வாயை திறக்காமல் அமைதியாக இருந்தாள்... அவனுக்கு தெரியும் அவள் வாயை திறக்க மாட்டாள் என்று... எல்லோர் முன்னிலையில் தன்னை விட்டு கொடுக்க அவள் முன்வர மாட்டாள் என்பதை அறிந்தவனுக்கு அவள் மேல் காதல் தான் அதிகரித்ததே தவிர... வெறுப்பு வரவில்லை... கோபம் வரவில்லை...

அதற்கு மேல் யாரும் அவர்களை கேள்வி கேட்கவில்லை... யாரிடம் தவறு என்று விசாரணையும் செய்யவில்லை... அவரவர் போக்கில் அவர்களை விட்டு விட்டு விட்டனர்...

திருவேங்கடத்திற்கு மட்டும் சிறிது சந்தேகம் இருந்தது... திடீரென்று மகள் தனது பங்கு அனைத்தையும் அவரது பெயரில் எழுதி கொடுத்தது அவருக்கு பெருத்த

சந்தேகத்தை அளித்தது... தொழில் ரீதியாய் இருவருக்கும் இடையில் பிரச்சினை எழுந்திருக்க கூடுமோ என்று...

இருவரிடமும் விசாரித்து பார்த்தார் இருவரும் மௌனம் தான் சாதித்தனரே தவிர... ஒரு வார்த்தை கூட பேசவில்லை... வேறுவழியின்றி சின்ன மருமகனை போய் பார்த்தார்...

அவர்கள் இருவருமே வாய் திறக்காத போது வலிய வாயை விட்டு மாட்டி கொள்ள முரளி என்ன முட்டாளா... அவனும் எதுவும் சொல்லவில்லை...

வளைகாப்பு முடிந்து தேவானந்த் ஊருக்கு கிளம்பும் போது முரளி அவனிடம் வந்தான்... அவனும் அவன் மனைவியும் விசேசத்திற்காக அங்கு வருகை தந்து இருந்தனர்...

"சாரி தேவா... இது எல்லாம் என்னால் தான்... நான் வேணா வருணி கிட்ட போய் பேசவா..." குற்றவுணர்ச்சியில் பேசியவனை அமைதியாய் பார்த்தான் தேவானந்த்...

அன்று இதே முரளி அவனை ஏகவசனத்தில் கோபமாய் பேசியது இப்போது அவனது நியாபகத்தில் வந்தது... சமயமும், சந்தர்ப்பமும் தான் ஒரு மனிதனை எப்படி எல்லாம் ஆட்டுவிக்கிறது... அதை நினைத்தவனுக்கு புன்னகை தோன்றியது...

"வேண்டாம் முரளி... அவளா இதை உணரும் போது உணரட்டும்... யாரும் எனக்காக பேச வேண்டாம்..."

"யாருமே சொல்லாம எப்படி அவங்களுக்கு புரியும் தேவா...? ஒண்ணு நீங்க சொல்லணும்... இல்லை என்னையவாவது சொல்ல விடணும்..." என்றவனை பார்த்து புரியாத புதிராய் சிரித்தவன்,

"அது தேவையில்லை..." என்றான்...

"நான் கூட உங்க நல்ல மனசை புரிஞ்சிக்காம தப்பா நினைச்சிட்டேன் தேவா... ஐயம் சாரி..." என்றவனை பார்த்து,

"ஹலோ பிரதர்... அப்படி எல்லாம் என்னை தப்பா நினைக்காதீங்க... என்னைக்காவது ஒரு நாள் உங்க அளவுக்கு நான் முன்னேறுவேன்... அப்போ உங்களுக்கு எதிரியே நான் தான்..." என்றவனை அதிர்ச்சியாய் முரளி பார்க்க...

"ஏன்னா அப்போ என் வது உங்க கம்பெனியில் வேலை செய்ய மாட்டாள் இல்ல... இப்போ கூட நான் செஞ்சது எல்லாம் என் வதுக்காக தான்... அவளுக்கு கெட்ட பெயர் வந்துட கூடாதுன்னு தான்... என்னைக்காவது ஒரு நாள் உங்களை ஜெயிக்க எனக்கு வாய்ப்பு வரும்... அப்போ கட்டாயம் இந்த தேவா ஜெயிப்பான்... உங்களை முந்திக்கிட்டு போவான்... அப்போ உங்களால என் வதுவை குற்றம் சொல்ல முடியாது..." என்று கம்பீரமாக கூறியவன் முரளியின் அதிர்ந்த முகத்தை திருப்தியுடன் பார்த்தவாறு தன் நடையை கட்டினான்...

'முட்டாள்... பெரிய இவன் மாதிரி பேச வந்துட்டான்... எங்க காதலை பத்தி இவனுக்கு என்ன தெரியும்... இப்போ நாங்க பிரிஞ்சி இருக்கிறது கூட அதிக காதலால் தான் என்பது இவனுக்கு எப்படி புரிய வைக்கிறது... இவன் சொல்லித்தான் என் பேபிக்கு என்னை பத்தி தெரியணுமா...? இவனை விட என்னை பத்தி நல்லா புரிஞ்சு வச்சிருக்கிறவ அவ தான்... அவளை விட வேறு யாரால் என்னை நல்லா புரிஞ்சிக்க முடியும்... இப்போ ஏதோ சின்ன கருத்து வேறுபாடு அதான் இப்படி இருக்கா... நிச்சயம் ஒருநாள் என்னை புரிஞ்சிக்கிட்டு என் கிட்ட வருவா...' என்று நம்பிக்கையுடன் நினைத்தான்...

அவன் நினைத்தும் இரு மாதங்கள் முடிந்துவிட்ட நிலையில் அந்த நம்பிக்கை மட்டும் அந்தரத்தில் தொங்கி கொண்டு அவர்களுக்காக காத்திருந்தது...

இருவரும் மற்றவர்களின் நினைவுகளில் உயிர் வாழ்ந்தனர்...

அன்று காலையில் எழும் போதே வருணிதாவின் வயிற்றில் சிறு வலி தோன்றி அவளை வெலவெலக்க வைத்தது...

"அம்மா..." என்று அந்த சின்ன வலிக்கே அவள் அலறிவிட்டாள்...

அதை கேட்டு பத்மா ஓடி வந்தார்... உடனே மகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்... காரில் மருத்துவமனைக்கு செல்லும் வழி எல்லாம் அவளுக்கு கணவனது நியாபகமே... அன்னையின் தோளில் சாய்ந்து இருந்தவளுக்கு அவனின் தோளில் சாய மனம் விரும்பியது...

அவள் சொன்ன வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து இன்று வரை அவன் அவளிடம் பேசவில்லை... அவனால் எப்படி இப்படி இருக்க முடிகிறது என்று அதற்கும் அவளது உள்ளம் மருகியது... தானும் அதை தான் செய்ததை மறந்தவளாய்... தான் சொல்லித்தான் அவன் விலகி இருப்பதை உணராதவளாய்...

அவள் காரில் இருந்து இறங்கும் வேளையில் அவள் முன் வலிய கரம் ஒன்று நீண்டது... பரிச்சயமான அந்த கரத்தை கண்டதும் அவள் வலியை மறந்து விழிகள் மின்ன நிமிர்ந்து பார்த்தாள்...

"தேவ்..." அவளது உதடுகள் மெதுவே முணுமுணுத்தது... கண்கள் இரண்டும் கலங்கி சிவந்தது... திடீரென்று அங்கு கணவனை கண்ட மனமோ சந்தோசத்தில் துள்ளியபடி அவனது உருவத்தை ஆழமாய் தன்னுள் புதைத்து வைத்து கொண்டது...

அன்னை கூறிய மறுநாளே தேவானந்த் மனது கேட்காமல் திருநெல்வேலிக்கு வந்துவிட்டான்... அவன் அங்கு வந்தது அவளது பெற்றோருக்கு மட்டும் தெரியும்... அவளுக்கு தெரியாது...

"நீ முதல்ல போ தேவா... நாங்க குழந்தையை பார்க்க பிறகு வர்றோம்..." பார்வதியும் மருமகளுக்காக மகனை அனுப்பி வைத்தார்...

வலியில் பல்லை கடித்து கொண்டு நின்று இருந்த மனைவியின் நிலையை பார்த்து கொண்டு இருந்த தேவானந்த்துக்கு இதயம் இரண்டாய் பிளப்பது போல் வலித்தது... இந்த மாதிரி நேரத்தில் அவளை எப்படி எல்லாம் மடி தாங்க வேண்டும் என்று அவன் நினைத்து இருந்தான்... அதை எல்லாம் அவள் கானல் நீராய் ஆக்கிவிட்டாளே...

"பேபி..." என்றவன் அவளை தன் நெஞ்சில் தாங்குவதற்காக அவள் அருகில் வந்தான்...

அவனை கண்டதும் எந்தளவுக்கு சந்தோசப்பட்டாளோ அந்தளவுக்கு அவனின் தொடுகையில் அவளையும் அறியாமல் ஒதுங்கினாள்... அவளின் ஒதுக்கம் கண்டு அவன் திகைத்து நின்றான்...

"மாப்பிள்ளை... முதல்ல வருணியை உள்ளே கூட்டிட்டு போகலாம்..." என்ற பத்மாவின் வார்த்தையில் தன்னை மீட்டு கொண்டவன் அவளின் ஒதுக்கத்தை கண்டு கொள்ளாமல் அவள் கண்ணில் வழியும் காதலை பற்றுகோளாக கொண்டு அவளை தன் நெஞ்சோடு அணைத்து நடத்தி சென்றான்...

கணவனது செய்கையில் அவளுக்கு கண்கள் கரித்தது... அவனின் தோள் சாய அவளது ஒரு மனம் துடித்தது... ஆனால் இன்னொரு மனமோ வேண்டாம் என்று அவளை விலக்கியது... இருதலைக் கொள்ளி எறும்பாய் அவள் தவித்து போனாள்...

மருத்துவமனையில் அவள் அனுமதிக்கப்பட சிறிது நேரத்திலேயே அவளுக்கு அடுத்தடுத்து வலிகள் வர ஆரம்பித்தது... அத்தனை வலிகளையும் பல்லை கடித்து பொறுத்து கொண்டவள் ஒரு முறை கூட கணவனின் அருகாமையை நாடவில்லை...

அவளின் உதாசீனத்தை கண்டு கொள்ளாமல் அருகில் வந்தவனை கண்களில் கண்ணீருடன் இறைஞ்சலாய் பார்த்தவள்,

"ப்ளீஸ் தேவ்... என்னை விட்டு தள்ளி போயிருங்க... உங்க அருகாமை என்னை பலகீனமாக்குது..."

அவளின் வார்த்தையில் அதிர்ந்து போனவன் அதன் பின் அவளை நெருங்கவில்லை... கண்ணில் வலியுடன் அவளை பார்த்தபடி சற்றுத் தள்ளி நின்று இருந்தான்... அவள் அனுபவிக்கும் ஒவ்வொரு வலிக்கும் அதை விட அதிக வலியை அவன் அனுபவித்தான் மனதால்...

பெண் உடலில் வலியை தாங்கி தனது வாரிசை பிரசவிக்கிறாள் என்றால், அதற்கு கொஞ்சமும் குறையாது தன் மனதில் அதை விட அதிக வலியை தாங்கி ஒரு ஆண் தனது வாரிசை பிரசவிக்கிறான்... அவளாவது குழந்தைக்காக அழுகிறாள்... ஆனால் ஆணோ மனைவி மற்றும் பிள்ளை என்கிற இரு குழந்தைகளுக்காக மனதிற்குள் ஊமையாய் அழுகிறான்...

வெகுநேரம் வலி எடுத்தும் அவளுக்கு கர்ப்பவாய் திறக்கவில்லை என்றதும் அவளுக்கு அறுவைசிகிச்சை செய்து தான் குழந்தையை வெளியில் எடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறிவிட்டார்...

அதற்கான விண்ணப்பத்தில் கணவன் என்ற முறையில் அவன் கையெழுத்து போடும் போது அதில் எழுதி இருந்த வார்த்தைகளை படித்து அவனது கண்கள் இரண்டும் கலங்கி போனது... கையெழுத்து போட முடியாமல் கண்ணீர் அவனது கண்களை மறைத்தது...

'கடவுளே... என் வாழ்க்கையில் இன்னும் எத்தனை சோதனைகளை வைத்து இருக்கிறாய்...?' என்று அவன் மனம் ஊமையாய் அரற்றியது...

திருவேங்கடம் மருமகனின் நிலை உணர்ந்து ஆறுதலாய் அவனின் தோளில் கை வைத்தவர்,

"இந்த காலத்தில் ஆபரேசன் என்பது ரொம்ப சாதாரணம் மாப்பிள்ளை..." என்று தேற்ற...

ஒருவழியாய் அவனும் மனதை தேற்றி கொண்டு கையெழுத்து போட்டு கொடுத்தான்…

இறுதியாய் அவளை அறுவை சிகிச்சைக்கு அழைத்து செல்லும் முன் அவளின் கையை பிடித்து இறுக்கமாய் அழுத்தியவன் பின் ஒன்றும் பேசாது அவளின் கையை விடுவித்தான்…

அவனது கை அழுத்தம் அவளுள் ஆயிரம் யானை பலத்தை கொடுத்தது… இருவரது கண்களும் ஆயிரம் கதையை பேசியது… இரண்டுமே தங்கள் இணையின் தூய்மையான காதலுக்காக ஏங்கி தவித்தது என்றால் மிகையாகாது…

அடுத்த அரை மணி நேரத்தில் அவர்களின் பெண்ணரசி வீல்லென்ற அழுகை சத்தத்துடன் மருத்துவமனையை கிடுகிடுக்க செய்தபடி மண்ணுலகிற்கு விஜயம் செய்தாள்…

ரோஜா மொட்டு போல் மென்மையாய் அழகாய் இருந்த அவர்களது பெண்மகவு உருவத்தில் அன்னையை உரித்து வைத்திருந்தாள்…

மகளை கையில் வாங்கியவன் கண்ணில் ஆனந்த நீர்த்துளிகள்… அதுவும் தனது மனைவியை போல் இருந்த மகளை பார்த்து மகிழ்ச்சி அடைந்தவன் அவளை நெஞ்சோடு அணைத்து கொண்டான்… மனம் சொல்லொண்ணா உணர்வில் நெகிழ்ந்து போயிருந்தது…

தான் ஆணாய் பிறந்ததற்கான அர்த்தம் அன்று தான் பூரணத்துவம் அடைந்தது போல் அவன் உணர்ந்தான்… மகனாய், சகோதரனாய், கணவனாய் இருந்த போது எல்லாம் அடையாத ஏதோ ஒரு உவகை தந்தை என்ற ஒற்றை சொல்லில் எழுந்து அவன் மனதை சுகமாய் வருடி சென்றது…

அறைக்கு வந்த மனைவியிடம் மகளை காட்டி அவன் சந்தோசமாய் பேசினான்… ஏனோ மகளின் வரவு அவளின் மனக்கசப்பையும் சிறிது அகற்றி இருந்தது போலும்

கணவனின் சந்தோசத்தை தானும் பகிர்ந்து கொண்டாள்... அவனோடு புன்னகை முகத்துடன் உரையாடினாள்...

எல்லாம் அவர்களது மகளுக்கு பெயர் வைக்கும் விழா வரை நன்றாக தான் சென்று கொண்டு இருந்தது...

இடையில் அவனின் பெற்றோர் வந்து தங்களது பேத்தியை பார்த்துவிட்டு போயினர்...

சரியாக ஒரு மாதம் கழித்து சின்னவளுக்கு பெயர் வைக்கும் வைபவத்தை வைத்தனர்...

'தேவ வர்ஷினி' என்று இருவரின் பெயரையும் இணைத்து மகளுக்கு பெயர் வைத்தனர்... ஏற்கெனவே முன்கூட்டி இந்த பெயரை தான் தங்களது பெண் குழந்தைக்கு தேர்ந்து எடுத்து இருந்தனர்... அதனால் எந்தவித விவாதமும் இன்றி எளிதாய் மகளுக்கு பெயர் வைத்துவிட்டனர்...

அன்றும் உறவுகள் மத்தியில் இவர்களின் வாழ்க்கையை பற்றி சலசலப்பு எழுந்தது...

"என்ன மாப்பிள்ளை... அம்மாவையும், பிள்ளையும் இங்கேயே தங்க வச்சு வீட்டோட மாப்பிள்ளையா வந்து சொத்துக்களை அமுக்கலாம்ன்னு திட்டமா... அது எல்லாம் இங்கே நடக்காது மாப்பிள்ளை... ஏன்னா எங்க வீட்டிலும் ஆம்பிளை பிள்ளை இருக்கிறான்... எப்போ உங்க பொண்டாட்டி, பிள்ளையை கூட்டிட்டு போறீங்க...? ஒரு நாளு ரெண்டு நாளுன்னா பரவாயில்லை... இது என்ன மாசக்கணக்குல பொண்டாட்டியை அம்மா வீட்டில் விட்டு வச்சிருக்கீங்க... ஒருவேளை எங்க வீட்டு பிள்ளைகளுக்கு சாப்பாடு போட முடியாதபடி உங்களுக்கு அத்தனை வருமானம் இல்லையோ..."

சபையின் நடுவில் அவனை கூப்பிட்டு ஒரு பெரியவர் கிண்டலடித்த போது அவனுக்கு மிகுந்த அவமானமாய் போய்விட்டது...

இதற்கு எல்லாம் காரணமாய் இருந்த மனைவியிடம் இரண்டில் ஒன்று கேட்டு விட வேண்டும் என்று அவனது

மனம் கோபத்தில் துடித்தது...

ஆனாலும் மகளின் விழா நல்லபடியாக முடிய வேண்டி அவன் அமைதி காத்தான்...

எல்லோரும் சென்றதும் மனைவியை தேடி வந்தான்... உறங்கி கொண்டு இருந்த மகளின் பாதங்களை வருடியபடி அமர்ந்து இருந்த மனைவியை கண்டதும் அவனின் அத்தனை நேர வருத்தம் காணாமல் போனது...

"வது..." அவன் அழைத்ததில் அவள் நிமிர்ந்து பார்த்தாள்...

"என்ன முடிவு எடுத்து இருக்க...? இத்தனை நாள் குழந்தைக்காக தான் பொறுமையா இருந்தேன்... இனியும் உங்கம்மா வீட்டில் உன்னை விட்டு வச்சா இந்த ஊரும் உலகமும் என்னை தான் தப்பா பேசும்... இன்னைக்கே நாம சென்னைக்கு கிளம்பலாம்... அதுக்கான ஏற்பாட்டை நான் செய்யவா..."

ஆசையும், ஆர்வமுமாய் கேட்ட கணவனை கண்டு மறுப்பாய் அவள் தலையசைத்தாள்...

அதை கண்டதும் அத்தனை நேரம் அடக்கி இருந்த ஆத்திரம் அவனுள் மீண்டும் எழுந்தது... இன்று அவன் பட்ட அவமானத்தின் வலி அவளின் மறுப்பில் இன்னமும் அதிகமாய் வலித்தது...

"வது... என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு... இத்தனை நாள் உன்னோட விருப்பத்துக்கு விட்டாச்சு... இனியும் உன்னோட விருப்பத்துக்கு என்னால விட முடியாது... நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என்னோடு வந்து தான் ஆகணும்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் அறையை விட்டு வெளியேற போனான்...

"ப்ளீஸ் தேவ்... என்னால உங்களோட வாழ மட்டும் முடியாது... அப்படி வாழ்ந்தா தினமும் உங்களை சந்தேகப்பட்டு சந்தேகப்பட்டு நான் உங்க மேல வச்சியிருக்கிற காதலை நானே கேள்விக்குறி

ஆக்கிருவேன்... அந்த சந்தேகம் தொடர்ந்தா உங்க மேல நான் வச்சியிருக்கிற காதல் என்னைக்காவது ஒரு நாள் குறைஞ்சு போய் கடைசியில் அது ஒண்ணும் இல்லாமல் போயிரும்... அப்படி ஒண்ணும் இல்லாமல் போன அன்னைக்கு என்னோட உயிரும் சேர்ந்து போயிரும்... என்னோட உயிர் தான் உங்களுக்கு தேவைன்னா நான் உங்களோட வர்றேன்...

அவளின் பேச்சில் அதிர்ந்து போய் அவள் அருகில் விரைவாய் வந்தவன் அவளை இறுக அணைத்து கொண்டான்... அவளின் வார்த்தை தாக்கத்தில் அவனின் உடல் நடுங்கியது...

"என்ன பேச்சு பேசுற பேபி..." அவனின் குரலும் சேர்ந்து நடுங்கியது...

அவனது அணைப்பில் வாகாய் அடங்கியவள் அழுகையில் குலுங்கினாள்...

"உண்மை தான் தேவ்... இப்போ என்னை உயிரோட வச்சியிருக்கிறது அன்னைக்கு என்னை காதலிச்ச என் தேவ்வோட காதல் தான்... ஆனா இப்போ இருக்கிற தேவ் என் காதலை கொன்னவரு... எனக்கு நம்பிக்கை துரோகம் செஞ்சவரு... இப்படிப்பட்ட உங்களோட நான் எப்படி வாழ முடியும்...? உங்க மேலுள்ள காதலை கொன்னுட்டு என்னை உங்களோட வாழ சொல்றீங்களா... அதுக்கு நீங்க என்னை உயிரோட கொன்னு போட்டுருங்க..."

அவளது வார்த்தையில் அவனது கைகள் தானாய் தளர்ந்து அணைப்பை விலக்கியது... அவளின் வார்த்தை அவனின் மனதில் நெருப்பாய் கனன்று அவனை சுட்டு எரித்தது...

அவன் அவளை கூர்மையாய் பார்த்தான்...

"இது தான் உன் முடிவா...?" அவனின் கேள்விக்கு அமைதி காத்தவளை கண்டு அவன் மனம் கோபம் கொண்டது...

இத்தனை நாளாய் அவளுக்காக எத்தனையோ அவமானங்களை தாங்கி நின்றான்... ஆனால் அதற்கு

பின்னால் அவளின் காதல் இருந்தது... அவனுக்காக அவள் இருக்கிறாள் என்ற நம்பிக்கை இருந்தது...

ஆனால் இன்று அவனது நம்பிக்கை முற்றிலும் அழிந்து போனது... இனி ஒரு போதும் அவள் தன்னை நம்ப போவது இல்லை என்றே அவன் நினைத்தான்... மனதளவில் அவள் தன்னை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டதை அவன் உணர்ந்தான்...

சொல்லி புரிய வைப்பது காதல் இல்லை... சொல்லாமல் ஒருவரின் பார்வையில், செயலில் மற்றவர் புரிந்து கொள்ள வேண்டும்... அவனின் செயலில், பார்வையில் நிறைந்து வழிந்த நேசத்தை கூட அவளால் உணர முடியவில்லை என்றால் அது அவன் செய்த பாவம் அல்லாது வேறு என்ன...?

காதலில் நம்பிக்கை மிகவும் அவசியம்... அந்த நம்பிக்கையை அவன் மேல் வைக்க மறுப்பவளுக்காக இனியும் அவன் கெஞ்சி கொண்டு இருப்பதில் அர்த்தம் இல்லை...

"இதுக்கு மேல் என் காதலை உனக்கு புரிய வைக்க என்னால் முடியாது... உன் பார்வையில் நான் தப்பு செய்தவனாகவே இருந்துட்டு போறேன்... ஆனா ஒண்ணு மட்டும் சொல்கிறேன்... இனி நீயா தான் என்னைத் தேடி வரணும்... நானா உன்னை தேடி ஒரு நாளும் வர மாட்டேன்... அப்படி நீயா வந்தா எப்போதும் என் வீட்டு கதவு உனக்காக திறந்து இருக்கும்... உன்னோட தேவ்வும் மனம் நிறைந்த காதலுடன் உனக்காக காத்திட்டு இருப்பான்..." என்றவன் அவளை திரும்பியும் பாராது கட்டிலில் உறங்கி கொண்டு இருந்த மகளின் அருகில் வந்தான்... மெல்ல மகளின் தலையை வருடி கொடுத்தவன்,

"அம்மு... அப்பா உன்னை விட்டுட்டு போறேன்டா... இனி உன்னை எப்போ பார்ப்பேனோ தெரியலை... இந்த அப்பாவை மறந்துடாதே அம்மு... நீயாவது இந்த அப்பாவை புரிஞ்சிக்குவியா...? அப்படி நீ புரிஞ்சிக்கிட்டா எனக்காக

உங்கம்மா கிட்ட பேசு..." என்றவன் குனிந்து மகளின் பாதத்தில் முத்தமிட்டு விட்டு நிமிர்ந்தான்...

கலங்கிய விழிகளுடன் தன்னை பார்த்து கொண்டு இருந்த மனைவியை அணைத்து ஆறுதல்படுத்த அந்த நேரத்திலும் அவனது மனம் துடித்தது... ஆனால் அந்த நேசத்தை கூட அர்த்தமில்லாது செய்துவிட்டாளே அவன் மனைவி...

அன்பை புரிந்து கொள்ளாதவர்கள் மீது மீண்டும் மீண்டும் அன்பை செலுத்துவதில் எந்த பயனும் இல்லை... எந்த பிரயோஜனமும் இல்லை... அவர்களாய் அந்த அன்பை உணராத வரை அந்த அன்பிற்கும் மதிப்பில்லை...

மனைவியை அணைத்து ஆறுதல் கூற துடித்த கரங்களை பேண்ட் பாக்கெட்டில் நுழைத்து கட்டுப்படுத்தியபடி வினாடி நேரத்துக்கும் குறைவான நேரத்தில் தீர்க்கமான பார்வை ஒன்றை அவள் மீது செலுத்தியவன் அடுத்த நொடி அங்கிருந்து வேகமாய் வெளியேறிவிட்டான்...

அந்த ஒற்றை பார்வையில் உருக்குலைந்து போய் அவள் கட்டிலில் அமர்ந்துவிட்டாள்... அவனது பார்வையின் பொருள் என்ன... அவளுக்கு விளங்கவில்லை...

நேர்மையாய், குற்றமற்றவனாய் இருப்பவனின் பார்வை அப்படித்தான் இருக்கும் என்பது அப்போது அவளுக்கு தெரியவில்லை...

உறையும்...

அந்த பெரிய வரவேற்பறையில் பார்வதியும், அவரது ஏழு வயது பேத்தி தேவ வர்ஷினியும் அமர்ந்து இருந்தனர்... அவர்கள் இருவரின் கண்களும் எதிரில் இருந்த கணினி திரையை கண்ணிமைக்காமல் பார்த்து கொண்டு இருந்தது...

"வர்ஷூ குட்டி... பத்மா பாட்டிக்கு ஏதாவது வேலை இருக்கும்டா... நாம பிறகு பேசலாம் என்ன...?" பேத்திக்கு புரியும்படி பார்வதி கூறினார்...

ஏனெனில் மதிய உறக்கத்தை தொலைத்து விட்டு பேத்திக்காக அவர் அமர்ந்து இருந்தார்...

"பாட்டி... இன்னைக்கு நான் உங்க ரெண்டு பேரு கூடவும் கட்டாயம் பேசியே ஆகணும்..." பிடிவாதம் பிடித்தாள் அவள்...

பேத்தியின் பேச்சை மீற முடியாமல் அவர் கடனே என்று அமர்ந்து இருந்தார்...

பின்னே தினந்தோறும் அலைப்பேசியில் பத்மாவிடம் பேசும் அவரை போய் ஸ்கைப்பில் பேச சொல்லி வற்புறுத்தினால் எப்படி இருக்கும்...

'தினமும் நாங்க ஃபோனில் பேசாத எந்த விசயத்தை இவள் இதில் பேச சொல்கிறாள்...?' புரியாமல் பேத்தியை பரிதாபமாக பார்த்தார் அவர்...

"இந்த பத்மா பாட்டிக்கு வர வர பொறுப்புங்கிறதே இல்லை..." கோபமாய் அலைப்பேசியை எடுத்து தனது தாய்வழிப் பாட்டியை அழைத்தாள் வர்ஷினி...

"பத்து பாட்டி..." அவள் அலறிய அலறலில் அந்த பக்கம் அலைப்பேசியை உயிர்ப்பித்த பத்மா பயந்து போய்விட்டார்...

"வர்ஷூ குட்டி... எதுக்குடா இந்த கோபம்...?"

"பாட்டி... உங்களை நான் என்ன சொன்னேன்...?"

பேத்தி என்ன சொன்னாள் என்று தெரியாமல் விழித்தார் பத்மா...

"என்ன கண்ணு சொன்ன...?"

அவ்வளவு தான் வர்ஷினி கோபத்தில் கத்த துவங்கினாள்...

"பாரு பாட்டி கூட பேசணும்... ஸ்கைப்பில் வாங்கன்னு நேத்தே சொன்னேன்னா இல்லையா..."

அப்போது தான் அவருக்கு அது நியாபகத்தில் வந்தது... அசட்டு சிரிப்பு ஒன்றை உதிர்த்தவர்,

"பாட்டிக்கு வயசாகுதுல... அதான் கொஞ்சம் ஞாபகமறதி வர்ஷூ..."

"முதல்ல ஸ்கைப்பில் வாங்க..." கோபத்துடன் சின்னவள் அலைப்பேசியை அணைத்துவிட்டு மீண்டும் ஸ்கைப்பில் பத்மாவை அழைத்தாள்...

இந்த முறை உடனே அவர் ஸ்கைப்பில் தோன்றினார்...

"மதினி நல்லா இருக்கீங்களா...? அண்ணா, மருமகன் எல்லாம் எப்படி இருக்காங்க...? சுஜானா படிப்பு எப்படி போகுது...?" பத்மா தனது சம்பந்தியிடம் நலம் விசாரித்தார்...

முதலில் எல்லாம் பெண் கொடுத்த வீடு என்று சற்று அளவோடு தான் பார்வதியிடம் பேசுவார் பத்மா... ஆனால் பேத்தி பிறந்த பிறகு பேத்தியிடம் பேசும் போது எல்லாம் அவரிடம் பேசி பேசி இப்போது பார்வதி, பத்மா இடையே நல்ல புரிதலுடன் கூடிய நட்பு இழையோடியது...

"நான் நல்லா இருக்கேன் அண்ணி... அங்கே எல்லாரும் நல்லா இருக்காங்களா..." பார்வதியும் நலம் விசாரிக்க...

"ப்ளீஸ்... நீங்க ரெண்டு பேரும் பேசுறதை கொஞ்சம் ஸ்டாப் பண்றீங்களா..." என்று இடையிட்டு கத்தினாள் வர்ஷினி...

அதில் பெரியவர்கள் இருவரும் திகைத்து போய் பேத்தியை பார்த்தனர்...

"நீங்க, நான் எல்லோரும் நல்லா தான் இருக்கோம்... ஆனா என்னோட அப்பா, அம்மா நல்லா இல்லையே... அதை பத்தி நீங்க யாராவது யோசிச்சு பார்த்தீங்களா...?" கடைசி வாக்கியம் சொல்லும் போதே சின்னவளின் குரல் தேம்பியது...

அதை கண்டு பெரியவர்கள் கண்களிலும் நீர் திரண்டது... அவர்களுக்கு தங்களது மக்களை சேர்த்து வைக்க ஆசையில்லாமல் இல்லை... ஆனால் இருவரும் அதை பற்றி பேசினாலே மௌனம் சாதிக்கும் போது அவர்களும் என்ன செய்வார்கள்... இதோ அவர்கள் பிரிந்து எட்டு வருடங்கள் ஓடிவிட்டது...

கடந்த ஏழு வருடங்களாக வருணிதா தனது தந்தையின் உற்பத்தி பொருட்களை சென்னையில் இருந்தவாறு தான் அதை பல ஊர்களுக்கு, நாடுகளுக்கு சந்தைப்படுத்தும் வேலையை செய்து வருகிறாள்... இத்தனை வருடங்களாக ஒரே ஊரில் இருந்தும் கணவனை காண அவள் முயன்றது இல்லை... அவனும் அவளை பார்க்க முயற்சித்தது இல்லை...

சின்ன விழியசைவில், செயலில் கூட தங்களது மனதை அடுத்தவருக்கு காட்டி விடக்கூடாது என்பதற்காகவே ஒருவரை ஒருவர் நேருக்கு நேராய் சந்திப்பதை தவிர்த்து வந்தனர்... இருவர் மனதில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது... அந்தளவுக்கு இருவருமே ஒருவித இறுக்கத்துடன் வளைய வந்தனர்...

ஆனால் சனிக்கிழமை இரவு மட்டும் மகளை கணவனிடம் அனுப்பிவிடுவாள் அவள்... மறுநாள் ஞாயிறு முழுவதும் அவள் தன் தந்தையுடன் இருந்து விட்டு அன்று இரவு திரும்ப தன் தாயிடம் வந்துவிடுவாள்... இது இன்று நேற்று நடக்கும் விசயமல்ல... வர்ஷினி மூன்று மாத கைக்குழந்தையாக இருந்ததில் இருந்து இது நடக்கிறது... பேத்தியை அழைத்து வரும் இந்த வேலையை சிவநேசன்

மனமுவந்து ஏற்று கொண்டார்... அதுவும் மருமகள் கேட்டு கொண்டதன் பேரில்...

கைக்குழந்தையாக இருந்த பேத்தியை மருமகள் இல்லாமல் தங்களோடு வைத்து கொள்ள பார்வதி கூட சிறிது சங்கடப்பட்டார்...

"தாய்ப்பால் குடிக்கிற பிள்ளையை போய் எப்படிம்மா...?" மருமகளிடம் அவர் கேட்கவும் செய்தார்...

அவளோ எங்கோ பார்த்து கொண்டு, "வாரத்தில் ஒரு நாள் பவுடர் பால் குடிச்சா ஒண்ணும் ஆகாது அத்தை..." என்றவளிடம் அவர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை...

வருணிதா ஏன் இதெல்லாம் செய்கிறாள் என்று புரிய வேண்டியவனுக்கு நன்றாக புரிந்தது... அன்று தான் கூறிய வார்த்தைகள் அவள் மனதை பாதித்து இருக்கிறது என்று... தன்னையும், குழந்தையும் இணைக்கவே அவள் இவ்வாறு செய்கிறாள் என்பதும் அவனுக்கு புரிந்தது...

அன்றில் இருந்து இன்று வரை அவளது அன்பில் எந்த குறையும் இல்லை... ஆனால் அவளாய் வராமல் அவனாய் அவளிடத்தில் சென்று கெஞ்ச அவனது மனம் இடம் கொடுக்கவில்லை...

மகளின் வேகமான வளர்ச்சியை பார்க்கும் போது எல்லாம் அவனது மனம் கனத்து தான் போனது... இருவரும் சேர்ந்து குழந்தையை வளர்க்காமல் இப்படி தனித்தனியாய் வளர்ப்பதால் மகளின் மனம் எந்தளவுக்கு பாதிக்கப்படும் என்பதை அவன் உணராமல் இல்லை... ஆனால் அதற்காக அவனால் எதுவும் செய்ய முடியாத நிலை...

ஆனால் அவர்களின் மகளோ பெற்றோருக்கு ஏற்றார் போன்று நல்ல புரிந்துணர்வு கொண்ட அருமையான குழந்தை... வர்ஷினியும் தந்தையின் அருகாமை உணர்ந்தோ என்னமோ தேவானந்த் அருகில் இருக்கும் போது அன்னையை தேட மாட்டாள்... சிறு வயதில் இருந்து இருவரையும் பார்த்து வளர்ந்ததினாலோ என்னவோ

இருவரையும் புரிந்து நடந்து கொள்வாள்... அந்தளவுக்கு புத்திசாலி குழந்தை...

அப்படிப்பட்டவள் இன்று வேதனை கொள்கிறாள் என்றால் விசயம் பெரிதாக இருக்குமோ என்று பெரியவர்களுக்கு கவலையாக இருந்தது...

"நாங்க என்னடா பண்றது... உங்க அப்பா, அம்மா தான் வாயை திறக்க மாட்டேங்கிறாங்களே..." பெரியவர்கள் இருவரும் ஒருமித்த குரலில் தங்களின் ஆதங்கத்தை கூறினர்...

"ஆனா அவங்க ரெண்டு பேரும் ஒருத்தர் மேல ஒருத்தர் எவ்வளவு பாசம் வச்சிருக்காங்க தெரியுமா...? அன்னைக்கு அப்பாவுக்கு சைட்ல அடிப்பட்டப்போ அன்னைக்கு நைட் எல்லாம் அம்மா அழுதுக்கிட்டே இருந்தாங்க... அதே மாதிரி தான் இரண்டு நாளைக்கு முன்னாடி அம்மாவுக்கு காய்ச்சல் வந்தப்போ அப்பா நைட் எல்லாம் ஃபோன் பண்ணி என் கிட்ட விசாரிச்சிக்கிட்டே இருந்தார்... அம்மாவை பத்திரமா பார்த்துக்க சொன்னாரு..."

இருவரின் காதலும், அன்பும் அவர்களுக்கும் தெரியுமாதலால் ஒன்றும் பேசாமல் இருந்தனர்... அவர்களின் மனம் மட்டும் வேதனையில் உழன்று கொண்டு இருந்தது...

"ஆனா நேத்து நைட் அப்பா தூங்கவே இல்லை... நான் தூங்கிட்டேன்னு நினைச்சு அவர் அம்மா ஃபோட்டோவை பார்த்துட்டு இருந்தாரு... அப்போ அவர் முகம் ரொம்ப கவலையா இருந்தது..." என்றவளின் முகமும் கவலையை பிரதிபலித்தது...

இந்த சின்ன வயதில் தந்தையின் உணர்வுகளை எப்படி நுட்பமாக கவனித்து பார்த்து இருக்கிறாள் என்று இரு பாட்டிகளின் மனதும் நெகிழ்ந்து போனது பேத்தியை நினைத்து...

"எனக்கு எங்கப்பா, அம்மா சந்தோசமா இருக்கணும்... அதுக்கு நீங்க என்ன பண்ண போறீங்க...?"

பேத்தியின் கேள்வியில் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

"அப்போ உங்களால ஒண்ணும் பண்ண முடியாதா...?" அதற்கும் அமைதியாய் இருந்த பாட்டி இருவரையும் பார்த்த சின்னவள்,

"அப்போ நான் ஒரு ஐடியா சொல்றேன்... நீங்க ரெண்டு பேரும் கேட்பீங்களா...?" பூடகமாய் பேசிய பேத்தி மீது இருவருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததால் சத்தியம் செய்யாத குறையாக சம்மதம் தெரிவித்தனர்...

"முந்தா நேத்து நான் துளசிம்மா கூட டிவில ஒரு சீரியல் பார்த்துட்டு இருந்தேனா..." ராகம் இழுத்தாள் சின்னவள்...

துளசி வருணிதா வீட்டில் வேலை செய்பவர்... அவரது கணவர் சந்திரன் ஓட்டுநராக அங்கே தான் வேலை செய்கிறார்... ஒரே மகளை திருமணம் செய்து கொடுத்ததால் இருவரும் நிம்மதியாக வாழ்கின்றனர்... இருவரையும் பத்மா தான் தங்களது ஊரில் இருந்து மகளுக்காக இங்கு வேலைக்கு அனுப்பி இருந்தார்...

"இந்த துளசியை வேலை பார்க்க அனுப்பி வச்சா டிவியா பார்க்கிறா...? இன்னைக்கு ஃபோன் போட்டு திட்டினா தான் அவ சரி வருவா..." பத்மா முணுமுணுத்தார்...

"ச்சூ பாட்டி... நான் சொல்றதை ஒழுங்கா கேளுங்க..." பேத்தி அவரை விரல் நீட்டி எச்சரிக்க...

"சரி வர்ஷூ... நீ சொல்லுடா..." என்றார் பத்மா பயபக்தியுடன்...

"அதுல என்னோட அப்பா, அம்மா மாதிரி ஒரு ஜோடி பிரிஞ்சு இருந்தாங்களா..." என்றவள் முழுக்கதையையும் கூறி முடிக்க...

"அட மதினி... நமக்கு கூட இந்த யோசனை வரலை பாருங்களேன்... ஆனா இந்த வர்ஷூ குட்டிக்கு பாருங்க எப்படி எல்லாம் மூளை வேலை செய்யுதுன்னு..." பத்மா பேத்தியை பற்றி சிலாகிக்க...

"ஆமா அண்ணி... நானும் இதை எல்லாம் யோசிக்கவே இல்லையே..." என்று அதை ஆமோதித்த பார்வதியும் பேத்தியை உச்சி முகர்ந்து முத்தமிட்டார்...

அதன் விளைவு அன்று மாலையே பெரியவர்கள் இருவரும் தங்களது இளைய மக்களிடம் பேசினர்...

சுஜானா ஒரு தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி கொண்டே தனது மேல்படிப்பை படித்து கொண்டு இருந்தாள்... வயது இருபத்தினான்கு ஆகிறது...

"அம்மா... நான் போய் கொஞ்ச நேரம் தூங்கறேன்... இன்னைக்கு நைட் திரும்பவும் ஹாஸ்பிட்டல் போகணும்..." மாலையில் வீட்டிற்கு வரும் போதே சோர்வுடன் தான் வந்தாள்...

"சரி சுஜி... இந்த டிபனை சாப்பிட்டுட்டு போய் படும்மா..." என்ற பார்வதி மகளின் முன் வடைகள் நிரம்பிய தட்டை நீட்டினார்...

"அம்மா... உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது... நான் ஆயில் ஐயிட்டம் எல்லாம் சாப்பிட மாட்டேன்னு..." என்றவள் அந்த வடையை தொட்டு கூட பார்க்கவில்லை...

ஒரு தம்பளர் பாலை மட்டும் குடித்தாள்... அந்தளவுக்கு உடல் ஆரோக்கியத்திற்கு அவள் முக்கியத்துவம் கொடுப்பாள்...

அவளது அறைக்கு செல்ல எழுந்தவளை பார்வதியின் குரல் தடுத்தது...

"சுஜி... உன் கிட்ட ஒரு முக்கியமான விசயம் பேசணும்..." புதிர் போட்ட அன்னையை புதிராய் பார்த்த சுஜானா,

"சொல்லுங்க..." என்றபடி மீண்டும் அமர்ந்தாள்...

"அது வந்து உன் கிட்ட எப்படி சொல்றது..." தயக்கத்துடன் அவர் நிறுத்தினார்...

'பாட்டி இதில் மட்டும் நீங்க சொதப்பினீங்க... அப்புறம் எனக்கு எவ்வளவு கோபம் வரும்ன்னு எனக்கே தெரியாது...' ஆள்காட்டி விரலை ஆட்டியபடி பல்லை கடித்து கொண்டு பேசிய பேத்தியின் முகம் மனக்கண்ணில் தோன்றி அவரை கலவரப்படுத்த... அடுத்த நொடி அவரும், பத்மாவும் யோசித்து வைத்திருந்ததை அப்படியே அவர் கூறினார்...

அதை கேட்டதும் அதிர்ந்து போய் இருக்கையில் இருந்து துள்ளி எழுந்தாள் சுஜானா...

"வாட்... நீங்க என்ன விளையாடுறீங்களா...? போயும் போயும் அந்த தடிமாட்டை போய் நான் கல்யாணம் பண்ணிக்கணுமா...? அதுவும் காதலிச்சு வேறயா...? என்ன கொடுமை சுஜி உனக்கு...?" தலையில் கை வைத்தாள் அவள்...

"ஏன்...? கிருஷ்க்கு என்ன குறைச்சல்...? பார்க்க நல்லா அமுல் பேபி மாதிரி அழகா தானே இருக்கான்..." பார்வதி புரியாமல் பார்த்தார் மகளை...

கிருஷ்ணா வருணிதாவோடு சேர்ந்து சென்னையில் இருந்தபடி தொழிலை கவனித்து கொள்கிறான்... நல்ல மரியாதை தெரிந்த பையன்... குணமும் நல்ல மாதிரி... வசதி, வாய்ப்புக்கும் குறைவு இல்லை... இதை விட வேறு என்ன வேண்டுமாம் இவளுக்கு...? மகளின் மனநிலை அவருக்கு புரியவில்லை...

"அம்மா... அது தான் குறையே... இந்த காலத்துல யார்ம்மா அவனை மாதிரி குண்டா இருக்கா...? வெளியில் போய் பாருங்க... அவனவன் சிக்ஸ் பேக் வச்சிக்கிட்டு எப்படி ஸ்மார்ட்டா இருக்கான்னு... போயும் போயும் வயித்தில் ஸ்கூல் பேக் கட்டி வச்சியிருக்கிறவனை போய் எனக்கு ஜோடி சேர்க்க பார்க்கறீங்களே..."

"ஏண்டி... நீ அவனை பார்த்து பல வருசம் இருக்கும்... அப்போ இருந்த மாதிரியா இப்பவும் இருப்பான்... இப்போ ஆள் அடையாளம் தெரியாதபடி மாறிட்டான் சுஜி..."

அன்னையின் பிடிவாதம் அவளுக்கு அதிசயமாய் இருந்தது...

"உங்களுக்கு என்னாச்சும்மா...? நீங்க இப்படி எல்லாம் பேச மாட்டீங்களே... அதுவும் அண்ணா லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டதால என்னை நம்ம இனத்தில் கல்யாணம் பண்ணி கொடுக்கணும்னு சொன்னவங்க நீங்க... அதை விட நான் காலேஜ் போறதுக்கு முன்னாடி என் கிட்ட யாரையும் லவ் பண்ணக்கூடாதுன்னு சத்தியம் வேறு வாங்கினீங்க... நீங்களே இப்படி பேசுறதை பார்த்தா எனக்கு ரொம்ப ஆச்சிரியமா இருக்கு..."

மகளின் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை தான்... அன்று மகனின் காதலை அறிந்து 'தூ' என்று காறி உமிழ்ந்தவர் தான் அவர்... அந்தளவுக்கு காதலை அருவருப்பாய் நினைத்தவர் தான்... அதுவும் பெண் பிள்ளை காதலிப்பது இமாலயத் தவறு என்று கேவலமாய் நினைத்தவரும் அவர் தான்...

ஆனால் இன்று மகனும், மருமகளும் படும் வேதனை கண்டு அவரால் தனது மனதை மாற்றி கொள்ளாமல் இருக்க முடியவில்லை... அதை விட பேத்தியின் மனவேதனை முன் அவரது வைராக்கியம் தவிடு பொடியாகி போனது...

"எல்லாம் நம்ம தேவா, வருணிக்காக தான் சுஜி... அவங்க ரெண்டு பேரும் சேரணும்னா நீங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கணும்... அதுவும் காதலித்து..."

"அம்மா..." என்று அலறினாள் மகள்...

"என்னால இதெல்லாம் பண்ண முடியாது... ம்ஹூம் நான் மாட்டேன்..." தலையை இடமும் வலமுமாய் மறுப்பாய் ஆட்டினாள் அவள்...

"அப்போ இந்த ஜென்மத்தில் உன் அண்ணன் அவன் பொண்டாட்டி கூட சேர மாட்டான்... உன் அண்ணன் மேல உனக்கு பாசம் இருக்கா இல்லையா..."

சுஜானாவுக்கு அண்ணனை விட அண்ணியை மிகவும் பிடிக்கும்... கடந்த சில வருடங்களாக அண்ணி இல்லாமல் வீடு வீடாக இல்லை என்பதை அவள் உணர்ந்து தான் இருந்தாள்... அண்ணன் முகத்தில் சிரிப்பு தொலைந்ததையும் பார்த்து கொண்டு தான் இருக்கிறாள்...

ஆனால் அதற்காக அந்த 'கிருஷ்'சை திருமணம் செய்து கொள்ள முடியுமா...?

அவளது மனக்கண்ணில் கடைசியாய் வர்ஷினி பெயர் வைக்கும் போது அவள் பார்த்த பத்தொன்பது வயது கிருஷ்ணா தான் நியாபகத்தில் வந்தான்... அதன் பின் அவள் அவனை பார்க்கவில்லை... அவளும் தனது படிப்பில் மூழ்கி போனாள்...

இப்போது அவனின் உருவத்தை கற்பனையில் நினைத்து பார்த்தவளுக்கு அவனை திருமணம் செய்து கொள்ளும் அளவுக்கு அவனிடத்தில் பெரிதாய் ஈர்ப்பு வரவில்லை... அப்படி அவளை ஈர்க்கும்படி அவனிடத்தில் ஒன்று கூட இல்லையே...

அண்ணனின் வாழ்க்கையா...? தன்னுடைய வாழ்க்கையா...? என்று மனம் ஒற்றையா இரட்டையா போட்டது... மனம் என்ன தான் தடுமாறினாலும் அவளால் தன்னுடைய வாழ்க்கை தான் முக்கியம் என்று எடுத்தெறிந்து விட்டு போக முடியவில்லை...

சுயநலம் இல்லாத இந்த மாதிரி அன்பு தானே இன்று பல குடும்பங்களை ஒற்றுமையாய், மகிழ்ச்சியாய் வாழ வைக்கிறது...

அதற்குள் பார்வதியின் குரல் அவளை இடைமறித்தது...

"இங்கே பார் சுஜி... நான் பார்த்து இருக்கும் பையனுக்கு கழுத்தை நீட்ட தயார்ன்னு நீ சொன்ன தானே... அப்போ

உனக்காக நான் பார்த்திருக்கும் பையன் இந்த கிருஷ்ணா தான்... அதனால எதிர்பேச்சு பேசாம கல்யாணத்துக்கு தயாராகு..." கண்டிக்கும் குரலில் உறுதியாய் கூறியவரை கண்டு அவளுக்கு சிரிப்பு வந்தது...

'என் அண்ணன் வாழ்க்கையில் எனக்கு அக்கறை இல்லையா என்ன... பெருசா உங்களுக்கு மட்டும் தான் அக்கறை இருக்கிற மாதிரி அலட்டிக்காதீங்க...' மனதுக்குள் முணுமுணுத்தவள்,

"அம்மா... பெத்த பெண்ணை பாழுங்கிணத்தில் தள்ளி விடுறதுங்கிறது இது தானா...? ஆனாலும் உங்களுக்கு இந்த ஓரவஞ்சனை ஆகாது... அண்ணனுக்கு மட்டும் அழகான பொண்டாட்டி... ஆனா எனக்கு மட்டும் ரோடு ரோலர் மாதிரி புருசனா... ம்... சுஜி நீ கொடுத்து வச்சது அவ்வளவு தான்... உனக்கு இந்த ஜென்மத்தில் அந்த கிருஷ் தான் புருசன்னு கடவுள் எழுதி வச்சிட்டாரு போல..."

அங்கலாய்ப்பது போல் தனது சம்மதத்தை அன்னையிடம் தெரிவித்து விட்டாள் அவள்...

அதை கேட்டதும் மகிழ்ந்து போனார் பார்வதி... உடனே பத்மாவை அழைத்து விசயத்தை கூறிவிட்டார்...

"அண்ணி... பார்த்தீங்களா என் மருமகளை... சொன்னவுடனே சமத்தா சம்மதிச்சுட்டா... ஆனா எங்க வீட்டு வானரம் இன்னும் ஆளை காணோம்... வந்ததும் தான் கேட்கணும்..." பத்மா மறுபக்கம் புலம்பியது இங்கே சுஜானாவின் காதில் விழுந்தது...

அதை கேட்டதும் அவளுக்கு சிரிப்பு வந்தது... தனது அறைக்கு வந்து விழுந்து விழுந்து சிரித்தாள்...

'டேய் கிருஷ்... நீ வானரமா...? ம்... நீ வானரமா இருந்தாலும் குண்டு வானரமா தான் இருப்ப...' மனக்கண்ணில் அவனை நினைத்து பழிப்பு காட்டினாள் அவள்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் கிருஷ்ணா தனது அன்னையின் முன் அமர்ந்து இருந்தான்... வியாபார

விசயமாக அவன் திருநெல்வேலிக்கு வந்து இருந்தான்... இன்றிரவே மீண்டும் சென்னை கிளம்புகிறான்...

"அம்மா... சூப்பர் டேஸ்ட்ம்மா..." என்றபடி அவனின் வாய் உருளைக்கிழங்கு போண்டாவை மொக்கி கொண்டு இருந்தது...

அவன் உண்பதை கவலையுடன் பார்த்து கொண்டு இருந்தார் பத்மா...

'இவன் எப்போ சாப்பிட்டு முடிச்சு, நான் எப்போ பேசுறது...' அவருக்கு ஆயாசமாக இருந்தது...

"அம்மா... இன்னும் ரெண்டு போண்டா கொடுங்க..." என்று அவன் தட்டை நீட்ட, அதை வெடுக்கென்று பிடுங்கியவாறு,

"நீ சாப்பிட்டது போதும்... நான் உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..." என்று வெடுவெடுத்தார் பத்மா...

"நீங்க பேசுறதுக்கும் நான் சாப்பிடறதுக்கும் என்ன சம்பந்தம்...?" அவன் கோபத்தில் எகிறினான்...

அவனுக்கு போண்டா கிடைக்காதோ என்கிற கவலை... அவருக்கு மகனுக்கு பொண்டாட்டி கிடைக்காதோ என்கிற கவலை... கிடைக்கும் போது வளைத்து பிடித்து போட்டால் தானே உண்டு... அவரவர் கவலை அவரவருக்கு...

"வருணி வாழ்க்கை பத்தி உனக்கு கொஞ்சமாவது அக்கறை இருக்கா இல்லையா...?"

அக்கா பெயரை சொன்னதும் அவன் அப்படியே அடங்கினான்...

"இருக்கும்மா... இல்லாம தான் எனக்கு பிடிக்காத சென்னையில் போய் அவளோட இருக்கேனா..."

அவன் சொல்வதும் உண்மை தான்... வருணிதா சென்னை செல்வது முடிவானதும் அவளுடனேயே கிருஷ்ணாவையும் சேர்த்து அனுப்பி வைத்துவிட்டார் திருவேங்கடம்...

அவனின் படிப்பை கூட சென்னையில் இருக்கும் கல்லூரிக்கு மாற்றி விட்டார்...

அவன் பெற்றோரை விட்டு, நண்பர்களை பிரிந்து, பிறந்த மண்ணை பிரிந்து அதை எல்லாம் விட மண் மணம் மாறாத திருநெல்வேலி ஃபிகர்களை விட்டு பிரிந்த கவலையில் அங்கு சென்ற பின் அவன் பாதி இளைத்து போனான்... ஏனோ அன்றில் இருந்து இன்று வரை அவனுக்கு சென்னை பொண்ணுங்க செட்டாக மாட்டேங்குது... அது அவன் செய்த பாவமோ... யார் செய்த செய்வினையோ... அந்தளவுக்கு சென்னையில் அவன் வாழ்க்கை வெறுப்புடன், ஃபிகர் இல்லாமல் இல்லை இல்லை அது கிடைக்காமல் வறட்சியாய் கழிந்தது...

"அவ மேல உனக்கு அன்பு இருக்குல்ல... அப்படின்னா நான் சொல்றதை கேளு..." என்று அவர் விசயத்தை கூற...

"ஐயோ... அந்த காய்ஞ்ச கருவாட்டையா கட்டிக்க சொல்றீங்க... நான் மாட்டேன்... முடியவே முடியாது... கொத்தவரங்கா மாதிரி இருந்துட்டு அது விடுற பீட்டரும், அலட்டலும்... ம்ஹூம் எனக்கு அவ ஒத்து வர மாட்டா..." என்று அவன் அலறினான்...

"டேய்... உனக்கு என்ன ஹாலிவுட் நடிகையாடா கேட்குது... ஒழுங்கு மரியாதையா நான் சொல்றதை கேளு..."

"அம்மா... எனக்கு ஹாலிவுட் நடிகை எல்லாம் வேணாம்மா... எனக்கு நம்ம ஊரு பக்கம் இருக்கிற தமிழ் கலாச்சாரம் தெரிஞ்ச நல்ல தமிழ் பொண்ணா பாரும்மா... ஸ்டைல்ன்னு சொல்லிட்டு உடம்பை வத்திக்குச்சி மாதிரி வச்சிக்கிட்டு சீரோ சைஸ் இடுப்பை காட்டி அலட்டல் காண்பிக்கிற அந்த மாதிரி அப்பாடக்கர் பொண்ணு எல்லாம் எனக்கு வேண்டாம்... பொண்ணுன்னா புசுபுசுன்னு நல்ல பொமேரியன் நாய்க்குட்டி மாதிரி இருக்க வேண்டாமா... ஓமக்குச்சி மாதிரி இருந்தா எப்படிம்மா..." முகத்தை சுளித்தான் அவன்...

"அப்போ நீ நமீதாவையோ இல்லை ஷகீலாவையோ தான் கட்டணும்... இல்லை இப்பவே சரின்னு சொல்லு நம்ம வீட்டு பொமேரியன் நாயை உனக்கு கட்டி வைக்கிறேன்..." சொல்லும் போதே அவருக்கு சிரிப்பு பொத்து கொண்டு வந்தது...

அதில் கடுப்பான மகன், "அம்மா... எனக்கு கல்யாணம் பண்ணி வைங்கன்னு நான் சொன்னேன்னா... இல்லை உங்களை கேட்டேனா... இப்போ எனக்கு கல்யாணம் வேணாம்... இருப்பத்தியாறு வயசுல இப்படி வலிய போய் சூசைட் பண்ணிக்க சொன்னா எப்படி... அதுக்கு எல்லாம் ஒரு முப்பது வயசு ஆகட்டும்..."

"அதுக்குள்ள உங்கக்காவுக்கு வயசாகிருமேடா கிருஷ்..."

அதை கேட்டதும் அமைதியாக இருந்தான் அவன்...

"டேய் நான் சொல்றதை கேளுடா... நீங்க காதலிக்கிறதா சொல்லித்தான் அவங்க ரெண்டு பேரையும் ஒண்ணு சேர்க்கணும்..." என்றவரை புரியாமல் அவன் பார்த்தான்...

"நீங்க ரெண்டு பேரும் காதலிக்கிறதா உங்க மாமா கிட்ட போய் சொல்லு..."

"அவரும் மறு வார்த்தை பேசாம கல்யாணத்துக்கு சம்மதிக்க போறாரு... ஐயா மாதிரி பர்சனாலிட்டி உள்ள ஆளு உலகத்தில் எங்கே தேடினாலும் அவரோட தங்கச்சிக்கு கிடைப்பானா என்ன... இதுக்கு ஏன்ம்மா இம்புட்டு பில்டப்பு..."

"டேய் அங்கே தான்டா கதையோட ட்விஸ்ட்டே இருக்கு..." என்ற அன்னையை ஒரு மாதிரியாக பார்த்தவன்,

"ஏம்மா நீங்க எல்லாம் கதையில் ட்விஸ்ட் பத்தி பேசினா நாடு தாங்குமா...?"

"அது எல்லாம் தாங்கும்... தாங்கும்... நீ மேட்டருக்கு வா..." என்ற அன்னையை ஆவென்று பார்த்தான் அவன்...

"அங்கே நீ பேச போற விசயத்தில் தான் உங்கக்கா வாழ்க்கை அடங்கி இருக்கு... அவர் கிட்ட நீ சொல்லணும் 'உங்க தங்கச்சிய நான் கல்யாணம் பண்றதா இருந்தா நீங்க எங்க அக்கா கூட சேர்ந்து வாழணும்... இல்லைன்னு நீங்க மறுத்தா காலம் பூரா நாங்க ரெண்டு பேரும் இப்படியே கல்யாணம் பண்ணாம ஒருத்தர் நினைவில் ஒருத்தர் வாழ்ந்திருவோம்'ன்னு அடிச்சு பேசணும்... அதுக்கு பிறகு பாரு வேறு வழியில்லாம மாப்பிள்ளை வருணியை கூட்டிட்டு போயிருவாரு... இல்லை விசயம் கேள்விப்பட்டா வருணியே மாப்பிள்ளை கூட வாழ போனாலும் போவாள்..." சிறுபிள்ளை போல் குதூகலித்த அன்னையை அதிசயமாய் பார்த்தான் அவன்...

அன்று சகோதரியின் காதலை கேட்டு மனமுடைந்த அன்னையா இன்று அவளின் வாழ்க்கைக்காக அதே காதலுக்கு பச்சைக் கொடி காண்பிக்கிறார்... அன்று சாதி வேறுபாட்டை நினைத்து மனம் குமுறியவர் இன்று மகளின் வாழ்க்கைக்காக வேற்று சாதி பெண்ணை மருமகளாக்க துடிக்கிறார் என்று அவனுக்கு வியப்பாய் இருந்தது அவரின் மனமாற்றம் கண்டு...

அவரது குடும்ப வாரிசுகளை அந்த மருமகள் தான் பெற்று தர வேண்டி இருக்கும் என்று தெரிந்தும் அன்னை இந்த முடிவு எடுத்து இருக்கிறார் என்றால் அவரின் மனம் எந்தளவுக்கு மகளை நினைத்து வேதனை கொள்கிறது என்பதை உணர்ந்தவனின் மனமும் வேதனை கொண்டது சகோதரியின் வாழ்க்கையை நினைத்து...

"நீங்களே அந்த கொத்தவரங்கா தான் உங்க மருமகள்ன்னு முடிவு பண்ணிட்ட பிறகு நான் சொல்ல என்ன இருக்கு... நீங்க யாரை பார்த்து கை நீட்டினாலும் கண்ணை மூடிட்டு தாலி கட்ட நான் ரெடி..." என்று அவன் சம்மதித்தான் மனதார...

"டேய்... கண்ணை மூடிட்டு அய்யர் கழுத்துல தாலி கட்டிர போற... பாவம் என் மருமக..." என்ற அன்னையை கண்டு

அவ்வளவு நேரம் இருந்த பரிதாபம் மறைய கொலைவெறியுடன் அவரை பார்த்தான் அவன்...

"அம்மா... உங்களை..." என்று பல்லை கடித்தவனை கண்டு,

"சரி சரி விடு கிருஷ்... அரசியல்ல இது எல்லாம் சாதாரணம்..." என்றார் பத்மா சாதாரணமாக...

"எப்படிம்மா உங்களுக்கு இப்படி எல்லாம் தோணுது..."

இது பாராட்டா...? இல்லை கிண்டலா... அவர் ஆராய்ச்சியாய் மகனை பார்த்தார்... பின் எதுவாக இருந்தால் நமக்கென்ன என்பது போல தோளை அசால்ட்டாக குலுக்கியவர்,

"எல்லாம் வர்ஷூ குட்டி தான்டா சொன்னா..." பெருமையாக சொன்னவரை கேவலமாய் பார்த்தான் மகன்...

"அதானே பார்த்தேன்... என்னடா நம்ம அம்மாவா இந்தளவுக்கு யோசிக்கிறாங்கன்னு...? எல்லாம் வர்ஷூ குட்டி வேலை தானா..." பல்லை கடித்தான் அக்கா மகளை நினைத்து...

ஆனாலும் தாயின் சொல்லுக்கு சம்மதமாய் தலையை ஆட்டிவிட்டே சென்னைக்கு கிளம்பினான்...

இரவோடு இரவாக இரு வீட்டு ஆண்களிடம் இந்த விசயத்தை கூறி ஒப்புதல் வாங்கப்பட்டது... பிரிந்து தவிக்கும் இருவரின் காதலுக்காக அவர்களும் சந்தோசத்துடன் சம்மதித்தனர்...

மறுநாளே கிருஷ்ணாவும் சுஜானாவும் வேண்டா வெறுப்பாய் ஒரு உணவு விடுதியில் சந்தித்தனர் இரு அன்னையரின் வற்புறுத்தலின் பேரில்... அவர்களுக்கு துணையாய் நம் குட்டிப்பெண் வர்ஷினி உடன் இருந்தாள்...

நேசிக்காத இரு மனங்களும் நேசிக்கும் இரு மனங்களுக்காக தங்களது வாழ்க்கையை பணயம் வைக்க மனமுவந்து முன்வந்தது...

உறையும்...

"மாமா..." சுற்றும் முற்றும் கண்களை சுழற்றியபடி அந்த நட்சத்திர விடுதியை வேடிக்கை பார்த்து கொண்டு இருந்த கிருஷ்ணா அக்கா மகளின் அழைப்பில் அவளை பார்த்து 'என்ன' என்பது போல் புருவங்களை உயர்த்தினான்...

"உங்களுக்கு அத்தையை பிடிக்குமா...?" ஆர்வமாய் கேட்ட சின்னவளை பார்த்து அவனுக்கு பாவமாக இருந்தது...

'ம்ஹூம்... யாருக்கு தெரியும்... உன் அத்தையை நான் பார்த்து பல வருசமாச்சு... அவ எப்படி இருப்பான்னு என்னால் ஒரு கெஸ் கூட பண்ண முடியலை... ஆமாம்... அவ எப்படி இருந்தா என்ன... என் தலைவிதியை அவ கூட சேர்த்து வச்சு என் வாழ்க்கையில் இப்படி கும்மி அடிச்சிட்டியே என்னருமை அக்கா மகளே...' மனதுக்குள் புலம்பினாலும் அதை சின்னவளிடம் காட்டி கொள்ளவில்லை...

"எனக்கு என் வர்ஷூ குட்டியை தான் ரொம்ப பிடிக்கும்... நீ வளர்ந்து பெருசா ஆனதும் நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்... எதுக்கு செல்லம் வீணா உன் அத்தை கூட என்னை கோர்த்து விடுற..." அவளை அணைத்து கொண்டு அவன் கேலி பேச...

"மாமா..." இது அவன் எப்போது இப்படி சொன்னாலும் அவள் இப்படித்தான் சிணுங்குவாள்...

"சரி விடு வர்ஷூ... மாமனை கட்டிக்க உனக்கு கொடுத்து வைக்கலை... நீ கொடுத்து வச்சது அவ்வளவு தான்..." என்றவன்,

"வர்ஷூ... உன் அத்தை வர என்ன இவ்வளவு லேட்டாகுது... மேக்கப் போட்டுட்டு வர இம்புட்டு நேரமா...?"

"மாமா... அத்தை மேக்கப் எல்லாம் போட மாட்டாங்க... அவங்களுக்கு ஹாஸ்பிட்டல்ல ஏதாவது எமர்ஜென்சி கேஸ் வந்து இருக்கும்..." அத்தைக்கு பரிந்து பேசினாள் வர்ஷினி...

"க்கும்... மொத்த ஹாஸ்பிட்டலையும் உன் அத்தை தான் தோள்ல வச்சு தாங்குறாளாக்கும்..." அவன் நொடித்து கொள்ளும் போதே வர்ஷினி உற்சாகமாய் கத்தினாள்...

"அதோ அத்தை வந்துட்டாங்க..." சொல்லி கொண்டே சின்னவள் சுஜானாவை நோக்கி ஓடினாள்...

சின்னவளின் உற்சாகத்தில் மனதில் எழுந்த சலிப்புடன் கிருஷ்ணா சுஜானா வரும் திசையை நோக்கி திரும்பினான்... ஏழு வருடங்களுக்கு பிறகு இப்போது தான் அவன் அவளை பார்க்கிறான்... அப்போது இருந்த சுஜானாவுக்கும் இப்போது இருக்கும் சுஜானாவுக்கும் ஆறு இல்லை அறுபது வித்தியாசம் இருந்தது...

வெண்ணிற குர்தியில் இளம் நீல நிறத்தில் சின்ன சின்ன பூக்கள் தெறித்து இருக்க அதில் அதே வண்ணக்கற்கள் பதிக்கப்பட்டு, இளம் நீல வண்ணத்தில் லெகின்சும், துப்பட்டாவும் அணிந்து மிதமான ஒப்பனையில் மலர்ந்த புன்னகையுடன் பார்த்தவுடன் பளிச்சென்று மனதில் ஒட்டி கொள்ளும் அழகான தோற்றத்துடன் அவள் இருந்தாள்...

அவளை கண்டதும் அவனது மனதில் ஏதோ ஒரு உணர்வு எழத் தான் செய்தது... அவள் தனக்கானவள் என்ற எண்ணம் கொடுத்த உரிமையோ என்னவோ ஏதோ ஒன்று அவளை இன்னும் கூர்ந்து கவனிக்க சொல்லியது...

ஆனாலும் மனதில் சிறு குறை ஒன்று எழாமல் இல்லை... அவன் நினைத்தது போல் அவள் பூசினார் போன்ற உடல்வாகுடன் இல்லை... சற்று மெலிவாக தான் இருந்தாள்...

'இது என்ன இப்படி சீக்கு வந்த கோழி மாதிரி இருக்கா...?' என்று அவனால் மனதில் நினைக்காமல் இருக்க முடியவில்லை... மற்றபடி அவளிடத்தில் அவனுக்கு பெரிதாய் குறை காண முடியவில்லை...

"சாரி... ஒரு எமர்ஜென்சி கேஸ் வந்திருச்சு... அதான் லேட்..." என்று புன்னகைத்தபடி மன்னிப்பு கேட்டவளை கண்டு

மன்னிக்காமல் இருக்க முடியுமா நம்ம ஹீரோவுக்கு... அப்படி மன்னிக்காமல் இருந்தால் அவன் பிஞ்சு மனசு தான் தாங்குமா என்ன...

"பரவாயில்லை... உட்காரு..." என்று அவன் நாற்காலியை சுட்டிக் காட்டியபடி பதிலுக்கு புன்னகைத்தான்...

அந்த நேரத்திலும் அவனது மனசாட்சி, 'இதே மாதிரி உங்க ஃபர்ஸ்ட் நைட் அன்னைக்கும் எமர்ஜென்சி கேஸ்ன்னு போயிட்டா உன் நிலைமை என்னாகும் கிருஷ்... கல்யாணம் பண்ணியும் நீ பிரம்மச்சாரி தானா...' என்று அவனை பார்த்து கவுண்டர் கொடுத்தது...

'உன் கடமை உணர்ச்சிக்கு அளவே இல்லையா... முதல்ல நீ அடங்கு...' என்று அதை கஷ்டப்பட்டு அடக்கி, வாயை கட்டி பரண் மீது தூக்கி போட்டான்...

அதற்குள் சுஜானா வர்ஷினியை இருவருக்கும் இடையில் அமர வைத்தவள் தானும் அமர்ந்தாள்... அவளின் அந்த பரிவான செயல் அவனுக்கு மிகவும் பிடித்து இருந்தது... அது அவனது அக்கா மகள் மட்டுமல்ல அவளது அண்ணன் மகளும் தான் என்பதை ஏனோ அந்த கணம் மறந்து போனான்...

அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் இருவரும் விழித்தனர்... கிருஷ்ணா தான் மெனு கார்ட்டை எடுத்து அவள் புறம் நீட்டினான்...

"தேங்க்ஸ்..." என்றபடி வாங்கியவள் அதை புரட்ட துவங்கினாள்...

அதை கண்டு மனதில் சந்தோசப்பட்ட கிருஷ்ணா தன் கையில் இருந்த இன்னொரு மெனு கார்ட்டை அவசரமாக புரட்டினான்... அவன் வயிற்றுப் பசி அவனுக்கு...

சுஜானா வர்ஷினிக்கும் தனக்கும் வேண்டியதை குறித்து கொண்டு கிருஷ்ணாவை பார்க்க அவனோ மெனு கார்ட்டில் கண்களை பதித்து இருந்தான்...

அப்போது தான் அவனை ஆழ்ந்து கவனித்தாள் அவள்...

நல்ல உயரமாய், உயரத்துக்கு ஏற்ற அளவான உடலுடன் ஆணுக்குரிய கம்பீரத்துடன் அழகாக தான் இருந்தான் அவன்... குறை என்று குறிப்பிட்டு எதுவும் சொல்ல முடியாது... அன்று பார்த்த கிருஷ்ணாவுக்கும் இன்று பார்ப்பவனுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருந்தது...

'ம்... ஏதோ பார்க்கிற மாதிரி தான் இருக்கான்...' என்று அவளது மனம் வேகமாய் அவனை கணக்கிட்டது...

"ஆர்டர் கொடுக்கலாமா...?" ஒருவழியாய் அவன் மெனு கார்ட்டில் இருந்து தன் கண்களை விலக்கி இருவரையும் பார்த்தான்...

பெரியவள் எந்தவித உணர்ச்சியும் காட்டி கொள்ளாது பார்த்தாள் என்றால், சின்னவள் மாமனை முறைத்து பார்த்தாள்...

'வர்ஷூ குட்டி முறைக்கிறதை பார்த்தா ரொம்ப நேரமா மெனு கார்டு கூட குடும்பம் நடத்திட்டு இருந்து இருக்கேன் போலிருக்கே... இப்போ பேசாம சைலன்சை மெயின்டையின் பண்ணு கிருஷ்... இல்லை வர்ஷூ உன்னை நார் நாராய் கிழிக்கிறது பத்தாதுன்னு அவ அத்தையையும் தன் கூட கூட்டு சேர்த்துடுவா...' நினைத்தவன் மறந்தும் அவர்கள் புறம் திரும்பவில்லை...

அங்கு இருந்த பேரரை கிருஷ்ணா கண்ணசைவில் அழைக்க அவர் பவ்யத்துடன் அங்கு வந்து நின்றார்...

"லேடிஸ் ஃபர்ஸ்ட்..." என்றபடி இப்போது தைரியமாக அவர்களை திரும்பி பார்த்தான் அவன்...

அடுத்தவர் முன் அசிங்கப்படுத்த மாட்டாள் அக்காள் மகள் என்கிற தைரியம் தான்...

வர்ஷினி தனக்கு பிடித்ததை சொல்ல, சுஜானாவும் தனக்கு வேண்டியதை கூறினாள்... அவள் கூறியது எல்லாமே

'லைட் புட்' என்பார்களே அது போல் எளிதில் ஜீரணமாக கூடிய எளிமையான உணவு வகைகள்...

'ஐய்யோ என்ன கொடுமைடா இது... ஸ்டார் ஹோட்டல் வந்தும் இந்த பொண்ணு கழனி தண்ணியும், இலையும் தழையும் திங்குதே... இதுக்கு பேசாம இது மாட்டு தொழுவத்துல போய் சாப்பிட்டு இருக்கலாம்...' கிருஷ்ணாவால் அப்படி நினைக்காமல் இருக்க முடியவில்லை...

பின்னே வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமல் உண்டு வளர்ந்தவனல்லவா அவன்...

இப்போது பேரர் அவனை நோக்கி திரும்பினார்... அவன் அந்த உணவு விடுதியில் இருந்த முக்கால்வாசி உணவை ஆர்டர் கொடுக்க அதை கண்டு சுஜானா விழிகள் இரண்டும் தெறித்து விடுவது போல் அவனை அதிர்ச்சியாய் பார்த்தாள்... சின்னவளோ இது வழக்கமான ஒன்று தான் என்ற ரீதியில் அலைப்பேசியில் விளையாடி கொண்டு இருந்தாள்...

"நீங்க ஆர்டர் கொடுத்தது எல்லாம் ஆயில், கொலஸ்ட்ரால் அதிகமுள்ள அயிட்டம்... நைட் நேரம் இது ரொம்ப ஹெவி... இது உங்க ஹெல்த்தை பாதிக்கும்..." சுஜானா மருத்துவராய் மாறி அவனுக்கு அறிவுரை வழங்க...

'போச்சுடா... டாக்டரம்மா ட்யூசன் எடுக்க ஆரம்பிச்சுட்டாங்க... டேய் கிருஷ்... இதுக்கு தான் டாக்டர் பொண்ணை கல்யாணம் பண்ண நினைக்க கூடாது... இப்பப் பாரு மனசுக்கு பிடிச்சதை சாப்பிடறதுக்கு கூட 144 போடுறதை...' மனதுக்குள் புலம்பினான் அவன்...

"அப்புறம் இது எல்லாம் உங்க ஹார்ட்டை தான் பாதிக்கும்..."

'விட்டா இங்கேயே இப்பவே எனக்கு ஹார்ட் அட்டாக் வர வச்சிடுவா போலிருக்கே...' மனதிற்குள் முணுமுணுத்தவன் மேலே பேசி கொண்டு போனவளை கைமறித்து தடுத்தான்...

பின் வேடிக்கை பார்த்து கொண்டு இருந்த பேரரை அனுப்பி விட்டு அவளை முறைத்து பார்த்தவன்,

"இப்படி எல்லாம் சாப்பிடலைன்னா உன்னை மாதிரி புல் தடுக்கி பயில்வானா தான் நான் இருக்கணும்... நான் ஓங்கி ஒரு அடி அடிச்சா நீ தாங்க மாட்ட... அப்படிப்பட்ட ஹெல்த்தை வச்சுக்கிட்டு நீ என் ஹெல்த்தை பத்தி பேசுறியா... என் ஹெல்த்தை பார்த்துக்க எனக்கு தெரியும்... நீ வாயை மூடு..." அவளது பேச்சில் அவனுக்கு அத்தனை கோபம் வந்தது...

"என்னது அடிப்பீங்களா... அப்போ அடிக்கிறதுக்கு தான் என்னை கல்யாணம் பண்ண நினைக்கிறீங்களா..." எதையோ எதனுடனோ முடிச்சு போட்டு பதிலுக்கு அவளும் எகிறினாள்...

வர்ஷினி அலைப்பேசியில் விளையாடுவதை நிறுத்தி விட்டு இருவரையும் பயத்துடன் பார்த்தாள்... அதை கிருஷ்ணா கவனித்துவிட்டான்...

'ச்சே இவளை பக்கத்தில் வைச்சிக்கிட்டு இப்படி கோபப்பட்டு விட்டேனே... உனக்கு கொஞ்சம் கூட பொறுமை இல்லைடா கிருஷ்... அந்த பொண்ணு என்ன பேசினாலும் இந்த காதில் வாங்கி அந்த காதில் விட்டுட்டு போக வேண்டியது தானே... இப்ப பாரு வர்ஷு குட்டி பயந்துட்டா...' தன் மீதே அவனுக்கு கோபம் வந்தது...

சட்டென்று சூழ்நிலையை மாற்ற வேண்டி அவன் சுஜானாவை பார்த்து, "அடிக்கிற கை தான் அணைக்கும்... அது உனக்கு தெரியாதா சுஜி..." ஆழ்ந்த குரலில் கூறியவன் அவளை பார்த்து கண்ணை வேறு சிமிட்டினான்...

அவன் கண்சிமிட்டலில் அவள் கண் சிமிட்ட மறந்தாள்... அவனை ஆவென்று பார்த்தாள்...

"என்ன டாக்டரம்மா... நான் சொல்றது சரி தானே..."

ஒற்றை புருவத்தை தூக்கியபடி புன்னகைத்தவனை கண்டு அவளது கோபம் பறந்தோட ஏதோ ஒரு உணர்வு இதயத்தை

ஆக்கிரமிக்க குப்பென்று வியர்த்தது அவளுக்கு... மனம் படபடவென அடித்து கொண்டது...

'இது என்ன புது உணர்வு...?' என்று மனதிற்குள் புதுமையாக தோன்றினாலும் தன் மனதை ஆராய முயற்சிக்காமல் தலையை குனிந்து கொண்டு கை விரலை ஆராய்ந்து தன்னை அமைதிப்படுத்தி கொள்ள முயன்றாள்...

அவளின் செயலை விசித்திரமாய் பார்த்த கிருஷ்ணா தோளை குலுக்கி கொண்டான்... பின் வர்ஷினியை பார்த்து கட்டை விரலை தூக்கி காண்பித்து சிரிக்க, வர்ஷினியும் கலக்கம் மறைந்து தானும் கட்டை விரலை தூக்கி காண்பித்து கலகலவென சிரித்தாள்...

அக்கா மகளின் சிரிப்பை வாஞ்சையுடன் பார்த்தான் அவன்... அவளின் மகிழ்ச்சிக்காக எதையும் செய்ய தயாராக இருந்தான் அந்த தாய்மாமன்... அது தனக்கு பிடிக்காத திருமணமாக இருந்தாலும் கூட....

அதற்குள் உணவு வர அங்கு பேச்சுக்கு இடம் இல்லாமல் போனது... பேசும் ஒரே நபர் கிருஷ்ணா தான்... அவனும் உணவோடு மல்லு கட்டி கொண்டு இருந்ததால் அங்கு கண்ணாடி தட்டில் கரண்டி உரசும் மெல்லிய சத்தம் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை...

உணவு உண்டு முடிந்ததும் ஐஸ்க்ரீம் வந்தது... அதை எடுத்து கொண்டு எழுந்த வர்ஷினி,

"நான் அங்கே ஃபிஷ் பார்க்க போறேன்..." என்று கூறிவிட்டு பதிலை எதிர்பாராது ஓடிவிட்டாள்...

அந்த விடுதியின் மூலையில் அழகாக குளம் போல் நீரை தேக்கி அதில் வண்ண மீன்களை நீந்த விட்டு இருந்தனர்... அவளை போல் ஏராளமான சிறார்கள் அங்கு வேடிக்கை பார்த்து கொண்டு இருந்தனர்...

கிருஷ்ணா, சுஜானா இருவரும் தங்கள் வீட்டு வாரிசை பார்த்து கொண்டு இருந்தனர்... அவளின் இங்கிதமான

நடத்தையை அவர்களால் மனதுக்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை...

"அப்படியே குணத்தில் மாமா தான்...", "அப்படியே உருவத்தில் அண்ணி தான்..."

அவளை பார்த்தபடி இருவரும் ஒரே நேரத்தில் சொன்னார்கள்... இருவரின் குரலும் ஒரே நேரத்தில் ஒலித்ததை கண்டு வியப்புடன் இருவரும் ஒரே நேரத்தில் திரும்பி பார்த்தனர்... அதிலேயே இருவரின் மனமும் ஒரே சிந்தனையில் செல்வதை உணர்ந்தனர் இருவரும்...

ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தபடி என்ன பேசுவது என்று தெரியாமல் தயங்கியபடி இருவரும் அமைதி காத்தார்கள்... அவள் பேச போவதில்லை என்பதை உணர்ந்து கிருஷ்ணாவே பேச்சை ஆரம்பித்தான்...

"நம்ம கல்யாணத்தை பத்தி என்ன நினைக்கிற...?"

"நினைக்க என்ன இருக்கு...? நான் வர்ஷூக்காக தான் பார்க்கிறேன்... இதில் என் விருப்பு, வெறுப்புன்னு தனியா எதுவும் இல்லை..." தன் மனதை அழகாய் அவனுக்கு உணர்த்திவிட்டாள் அவள்...

அதை கேட்டு அவனும் பெருமூச்சு விட்டான்...

"நானும் அது போல் தான்..." என்றவன்,

"அப்போ மாமா கிட்டேயும், அக்கா கிட்டேயும் பேசிரலாமா...?" அவனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று அவளுக்கு தெரியவில்லை...

ஒரு பக்கம் மனம் பாரமாய் இருப்பது போல் தோன்றினாலும், மறு பக்கம் மனம் லேசாய் இருப்பது போல் தோன்றியது... வித்தியாசமான மனநிலையை அவள் அனுபவித்து கொண்டு இருந்தாள்...

"ஏன் சுஜி... என்னை கல்யாணம் பண்றது என்ன அவ்வளவு கஷ்டமாவா இருக்கு..." கிசுகிசுப்பாய் முணுமுணுத்த அவனது குரலில் நிமிர்ந்து அவனை பார்த்தாள் அவள்...

மாயக்கண்ணனின் புன்னகையுடன் இருந்தவனை கண்டு அவளையும் அறியாமல், "ம்..." என்று தலையசைத்தாள்...

"என்னது...?" அதில் அவன் அதிர்ந்து போனான்...

"அப்படி ஒண்ணும் கஷ்டப்பட்டு நீ எனக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டாம்..." அவன் அடக்கப்பட்ட கோபத்தில் வார்த்தையை கடித்து துப்ப...

அவனின் வார்த்தையின் அர்த்தம் புரியாது முதலில் திகைத்தவள் பின் மெல்ல புரிந்ததும் அவனை சமாதானப்படுத்தும் விதமாய் தன் கையை எடுத்து அவன் கை மீது வைத்தவள்,

"அண்ணா, அண்ணி கிட்ட பேசுங்கன்னு சொன்னேன்..." என்றவள் சிரித்தபடி எழுந்து வர்ஷினியை தேடி சென்றாள்...

அவள் கை தொட்டதில் அவன் மின்சாரம் தாக்கியது போல் அப்படியே அசையாது இருந்தான்... அப்படியே பூவொன்று வருடியது போன்று அத்தனை இதமாய் இருந்தது அவனுக்கு... அவள் தொட்ட தனது கையை இமைக்காது பார்த்து கொண்டு இருந்தான் அவன்...

"மாமா போகலாமா..." வர்ஷனியின் குரலில் தன் நினைவு கலைந்தவன் பில்லை செலுத்தி விட்டு எழுந்தான்...

வர்ஷினி நடுவில் வர அவளது இரு பக்கமும் அவர்கள் இருவரும் அவளது கையை பிடித்தபடி வெளியில் வந்தனர்...

ஏனோ இருவரது மனமும் நிறைந்து இருந்தது... இங்கு வரும் போது இருந்த கலக்கம் இப்போது அவர்கள் மனதில் இல்லை...

அதே நேரம் தொழில் ரீதியாய் ஒருவரை சந்திக்க அங்கு வந்திருந்த தேவானந்த் அது முடிந்து கிளம்பும் போது அவர்கள் மூவரையும் பார்த்துவிட்டான்...

'கிருஷும், சுஜியும் எப்படி ஒண்ணா...?' யோசனையாய் அவர்களை பார்த்தான் அவன்...

'ஒருவேளை வர்ஷூக்காக வந்து இருப்பாங்களோ... இருந்தாலும் இது புதுசா இருக்கே...' என்று குழம்பினாலும் அவர்களை அழைத்து பேசவில்லை... அவர்களை அழைத்து தர்மசங்கடமான சூழ்நிலையை உருவாக்க அவன் விரும்பவில்லை... தனது காரை நோக்கி விரைந்தான் அவன்...

காரிலேறி அதை கிளப்பியவனின் விழிகள் தானாய் பக்கத்து இருக்கையை பார்த்தது... அது எப்போதுமே அவனது மனைவிக்காக ஒதுக்கப்பட்ட இருக்கை... ஏன் அந்த காரும் கூட அவளுக்கு பிடித்த மாதிரி தான் வாங்கி இருந்தான்... அவன் தனியாக செல்லும் போது மட்டும் தான் இதில் வருவான்... மற்றபடி இந்த காரை அநாவசியமாய் வெளியில் எடுத்தது இல்லை...

மனைவியை நினைத்ததும் அவனையும் அறியாது மனதில் ஒருவித விரக்தி எழுந்தது... வீட்டிற்கு செல்ல மனம் வராமல் நேரே கடற்கரைக்கு காரை விட்டான்...

கடற்கரை வந்ததும் காரை நிறுத்திவிட்டு இறங்கியவன் அங்கு இருந்த மணலில் சென்று அமர்ந்து பௌர்ணமி நிலவின் ஒளியில் அழகாய் மின்னி மிளிர்ந்த கடலை வெறித்து கொண்டு இருந்தான்... ஒரு காலத்தில் இதை எல்லாம் ரசித்தவன் தான் அவன்... ஆனால் இப்போது அந்த ரசனை எல்லாம் எங்கே போனது என்று அவனுக்கே தெரியவில்லை...

அவனது ரசனை மட்டுமா அவனை விட்டு போனது... அவனது சந்தோசம், நிம்மதி எல்லாம் தான் அவனை விட்டு போய்விட்டது...

'வேறு எங்கு போனது...? எல்லாம் அவள் கூடவே சென்றுவிட்டது...' எங்கு சுற்றினாலும் அவனது மனம் கடைசியில் மனைவியிடமே வந்து நின்றது...

மன நிம்மதிக்காக மனதை வருடும் இசையை கேட்டால் கூட 'இது அவளுக்கு பிடிக்குமே' என்று அவளை தான் நினைக்க தோன்றியது...

இப்படி எல்லாவற்றிலும் அவனில் அவள் தான் நீக்கமற நிறைந்து இருந்தாள்...

அவளை பிரிந்த இந்த ஏழு வருடங்களில் அவனின் தொழில் அசுர வளர்ச்சி அடைந்து இருக்கிறது... அந்தளவுக்கு அவனுக்கான வாய்ப்புக்கள் அவனை தேடி வந்து குவிந்தது... இப்போதும் குவிந்து கொண்டு தான் இருக்கிறது... அது அவனது அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்...

எல்லோரும் அதை மகள் பிறந்த அதிர்ஷ்டம் என்றார்கள்... அது உண்மை தான் என்றாலும் கூட அவனது மனம் மனைவியின் நினைவுகள் தான் தனது முன்னேற்றத்திற்கு காரணம் என்று உறுதியாய் எண்ணியது... அவனுக்கான அவளுடைய பிரார்த்தனைகள், வேண்டுதல்கள் தான் அவனை இந்தளவிற்கு முன்னேற்றி இருக்கிறது என்பதில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை...

அவள் எங்கு இருந்தாலும் அவளின் மனம் தன் நலத்தை தான் நினைத்து கொண்டு இருக்கும் என்று அவனுக்கு தெரியும்...

அரண்மனை போன்று பெரிய வீடு, வெளிநாட்டு கார் என்று அவனது வாழ்க்கை அடியோடு மாறி போனாலும் அவனின் மனம் மட்டும் மாறவே இல்லை... அதே காதல் கணவன் தேவானந்த் தான் இன்னமும் இருந்தான்...

தொழிலில் வெற்றியை கைவசம் வைத்திருந்தவனுக்கு, வாழ்க்கையில் வெற்றியை கைவசம் வைத்திருக்க தெரியாமல் போனது அந்தோ பரிதாபம்...

வசதி வாய்ப்பு இத்தனை இருந்தும் மனைவி அருகில் இல்லாத துன்பத்தை அவன் மட்டுமே அறிவான்... அதிலும்

அவனது மகள் படும் துயர் கண்டு அவனது இதயம் இரத்தக்கண்ணீர் வடித்தது...

எதையும் புரிந்து கொள்ள மறுக்கும் மனைவி மீது இப்போது எல்லாம் அவனுக்கு கோபம் தான் வந்தது...

இத்தனை ஆண்டாய் கடந்து சென்ற மணித்துளிகளில் அவன் தாபம் கலந்த தேடல்களும், ஆறுதலாய் அவளது தோள் சாய துடித்த மனதின் துடிப்புகளும் அர்த்தமற்றதாய் காற்றில் கரைந்த கற்பூரமாய் காணாமல் போனதை எண்ணி இப்போதும் அவனது உள்ளம் குமுறியது...

தாயாய், தாரமாய், தோழியாய் அவனது ஒவ்வொரு நொடிக்கும் அவளின் அருகாமை அவனுக்கு தேவைப்பட்டது... அப்போது எல்லாம் அவளில்லாத வெறுமை அவன் மனதை தாங்க முடியாத வெம்மையில் ஆழ்த்தியது...

அவனது மறுக்கப்பட்ட அன்பும், அடக்கப்பட்ட கோபமும் ஒருநாள் இல்லை ஒருநாள் எரிமலையென வெடித்து வெறுப்பாய் அவள் மீது சிதறிவிடுமோ என்று அவன் பயந்தான்...

அவனையும் அறியாமல் காதல் மனைவியின் மனதை தான் காயப்படுத்தி விடுவோமோ என்று அச்சம் கொண்டான்...

இப்போது எல்லாம் அவனது மனம் மென்மையை மறந்து கொஞ்சம் கொஞ்சமாய் வன்மையாய் மாறி கொண்டு இருப்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

வாழ்க்கை அவனுக்கு என்ன வைத்து காத்திருக்கிறது என்பதை அறிய முடியாமல் கலக்கத்துடன் அவன் அமர்ந்து இருந்தான்...

'கடவுளே... எந்த சூழ்நிலையிலும் என் வது பேபியை நான் காயப்படுத்தி விட கூடாது... அதற்கான பொறுமையை மட்டும் எனக்கு கொடு...' அந்த நிலையிலும் அவன் அவளை தான் கஷ்டப்படுத்தி விட கூடாதே என்று தான் நினைத்தான்...

மறுநாளே தேவானந்த் அன்னையிடம் தங்கையின் திருமண பேச்சை ஆரம்பித்தான்... நேற்று சுஜானாவை கிருஷ்ணாவுடன் பார்த்ததில் இருந்து அவனது மனதிற்கு சிறிது சஞ்சலமாக இருந்தது... அதனால் தான் அன்னையிடம் பேச வந்தான்...

"அம்மா... நம்ம சுஜிக்கு வரன் பார்க்கலாமா...? உங்களுக்கு பிடிச்ச மாதிரி இடம் ஏதும் இருந்தா சொல்லுங்க... நான் பேசி முடிக்கிறேன்..."

மகனின் பேச்சில் பார்வதி வாயை பிளந்தார்... இது தான் பழம் நழுவி பாலில் விழுவது என்பதா... மகனின் பேச்சு அவருக்கு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

அவர் மகளின் திருமணத்தை பற்ற பேசும் போது எல்லாம், 'அவள் சின்ன பொண்ணும்மா... படிப்பு முடிஞ்சதும் பார்க்கலாம்... இல்லை இருபத்தஞ்சு வயசாகட்டும்...' என்று அவர் வாயை அடைத்த மகன் தானே இன்று தங்கையின் திருமண பேச்சை எடுத்தால் அது அதிசயம் தானே...

"நானே சொல்லணும்ன்னு இருந்தேன் தேவா... நீயே கேட்டது எனக்கு ரொம்ப சந்தோசம்... அப்படி எல்லாம் எனக்கு எந்த எண்ணமும் இல்லை... நீயே நம்ம இனமா பார்த்து பேசி முடி..."

அவன் தந்தையை பார்க்க...

"அம்மா சொல்றது சரி தான் தேவா... நீயே உன் தங்கச்சிக்கு மாப்பிள்ளை பாரு... இனி அவள் உன் பொறுப்பு..."

அவரின் பதிலில் அவனது முகம் மலர்ந்தது...

"சரிப்பா..." அவன் சொல்லும் போதே சுஜானா அங்கு வந்து நின்றாள்...

பார்வதி மகளை பார்த்து 'பேசு... பேசு...' என்று கண் ஜாடை காட்டினார்...

"அண்ணா... உங்க கிட்ட ஒரு விசயம் சொல்லணும்..." அதில் அவனது பார்வை கூர்மை அடைந்தது...

"சொல்லு சுஜி..."

"நா... நான்..." பயத்தில் வியர்த்தது அவளுக்கு... தொண்டை வறண்டு போனது...

'இவளை பார்த்தா டாக்டர் மாதிரியா இருக்கு... இப்படி பேச பயப்படுறாளே... என்ன பொண்ணோ...' மனதில் மகளை வசைப்பாடினார் பார்வதி...

"நீ..." அவனின் பார்வை இன்னமும் கூர்மையானது...

"நானும் அண்ணியின் தம்பி கிருஷும் ஒருத்தரை ஒருத்தர் லவ் பண்றோம்..." ஒருவழியாய் விசயத்தை போட்டு உடைத்தவள் 'அப்பாடி' என்று பெருமூச்சு விடும் முன் அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விழுந்தது...

அதில் நிலைக்குலைந்து போனவள் தன்னை சமாளித்து கொண்டு தன்னை அடித்தவர் யாரென்று பார்க்க அது தன் அன்னை என்றதும் அவளுக்கு உலகமே தலைகீழாய் சுழன்றது...

'பிளான் எல்லாம் பக்காவா போட்டு கொடுத்துட்டு இப்போ அம்மா இந்த அடி அடிக்கிறாங்களே...' அவள் அதிர்ந்து போய் நின்றாள்...

"அம்மா... என்ன இது...? எதுக்கு சின்ன பொண்ணை போய் இப்படி அடிக்கிறீங்க... அவ காதலிக்கிறேன்னு சொன்னது தப்பா...?" பாதுகாப்பாய் தங்கையை தன்னருகே இழுத்து அணைத்து கொண்ட தேவானந்த் அன்னையை கடிந்து கொண்டான்...

தானும் அதற்காக தான் அவசரமாய் மணமகன் பார்த்ததை அவன் மறந்து போனான் செல்ல தங்கை அடிவாங்கியதில்...

"ஆமாண்டா நான் அடிச்சது தப்பு தான்... ஏற்கெனவே காதலிச்சு கல்யாணம் பண்ணின நீ வாழற சந்தோசமான வாழ்க்கையை தான் நானும் பார்க்கிறேனே... இதில் என்

பொண்ணையும் அந்த நாசமா போன காதலில் தள்ளி அவள் வாழ்க்கையையும் நாசமாக்க சொல்றியா...?"

தாயின் அதிரடி பேச்சில் அவன் பேச்சிழந்து போய் நின்றான்...

'அவர் கூறுவதும் உண்மை தானே... பெற்றோரை எதிர்த்து நின்று காதலித்து கல்யாணம் பண்ணிய நான் வாழ்க்கையில் வெற்றி பெற்றேனா... இல்லையே...' மனம் மருகியவனின் கோபம் எல்லாம் மனைவி மீது தான் சென்றது...

'எல்லாம் அவளால் தான்... இந்த மாதிரி பிரிந்து வாழ்வதற்காகவா இரு வீட்டாரையும் எதிர்த்து போராடி கல்யாணம் பண்ணி கொண்டது... இப்படி வருட கணக்கில் பிரிந்து வாழ்ந்தால் அம்மா எப்படி காதலை பத்தி நல்லவிதமாக நினைப்பாங்க... உண்மையில் காதல் துயரத்தை தான் கொடுக்கிறது...' என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை... இருந்தாலும் தங்கைக்காக சமாளித்து கொண்டு,

"அம்மா... காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க எல்லோரும் எங்களை மாதிரி பிரிஞ்சு இருக்கிறது இல்லைம்மா... சுஜி மனசுக்கு பிடிச்சவனை கல்யாணம் பண்ணி வைக்கிறது தான்ம்மா அவளுக்கு நல்லது..."

"எனக்கும் எல்லாம் தெரியும்... எத்தனை காதல் கல்யாணம் கோர்ட்டில் டிவோர்ஸ்க்காக காத்திருக்கிறதுன்னு... தேவா இது என் பொண்ணோட வாழ்க்கை... உன் வாழ்க்கை இல்லை... இதில் நீ தலையிடாதே"

அன்னையின் பேச்சில் அவனது மனம் அடிப்பட்டு போனது... முகம் கறுக்க தலை குனிந்து நின்றான் அவன்...

அதை கண்டு சிவநேசன் மனைவியை முறைத்து பார்த்தார்...

'ரொம்ப பேசிட்டேனோ... இப்போ இவன் என்ன சொல்ல போறானோ தெரியலையே...' பார்வதி மனதுக்குள்

கலக்கமுற்றாலும் வெளியில் அதை காட்டி கொள்ளாமல்,

"சரி உன் தங்கச்சி காதலுக்கு நான் சம்மதிக்கிறேன்..." அவர் சொன்னதும் அவனின் முகம் மலர்ந்தது...

"இப்போ தான்ம்மா சந்தோசமா இருக்கு... என் வாழ்க்கையும் சுஜி வாழ்க்கையும் போட்டு குழப்பிக்காதீங்க... எனக்கு தெரிஞ்சு கிருஷ் நல்ல பையன் தான்..." தேவானந்த் அன்னையின் கையை பிடித்து கொண்டு சந்தோசப்பட்டான்...

"ரொம்ப சந்தோசப்பட்டுக்காதே தேவா... நீ உன் வாழ்க்கையை சரி பண்ணிட்டு உன் தங்கை காதலுக்கு சப்போர்ட் பண்ணி பேசு..." கண்டிப்புடன் அழுத்தமாய் கூறினார் பார்வதி...

சுஜானா அன்னையின் பேச்சு சாமர்த்தியத்தை கண்டு வாயை பிளந்தாள்...

"அம்மா..." அவன் அதிர்ந்தான்...

"ஆமாம் தேவா... முதல்ல நீ உன் பொண்டாட்டியை வச்சு சந்தோசமா குடும்பம் நடத்து... அதுக்கு அப்புறம் சுஜியோட காதலை பத்தி நான் யோசிக்கிறேன்..." உறுதியாய் கூறியவரை கண்டு அவனுள்ளும் உறுதி பிறந்தது...

தங்கையின் வாழ்க்கைக்காக அவனும் அந்த முடிவை எடுத்தான்... இல்லை அது அவனது ஆழ்மனதின் ஆசையோ என்னவோ...

"அம்மா... உங்க மருமக இங்கே வருவாள்... என்னோட குடும்பம் நடத்துவாள்... அதை பார்த்த பிறகாவது நீங்க சுஜியோட காதலுக்கு பச்சை கொடி காண்பிப்பீங்களா..."

அவனது பேச்சு பார்வதியின் மனதை அசர வைத்த போதும் வெளியில் அசராமல்,

"பார்க்கலாம்... பார்க்கலாம்..." என்றபடி முகத்தை திருப்பி கொண்டார்... ஆனால் அவரது முகத்தில் அத்தனை மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது...

அவன் ஒன்றும் பேசாது வெளியில் சென்றுவிட்டான்...

அவன் சென்றதும் வாய் கொள்ளா சிரிப்புடன் கணவரையும், மகளையும் பார்த்தவர், "எப்படி என் நடிப்பு...?" என்றார்...

"சூப்பர்..." என்றார் சிவநேசன் மெச்சுதலாய்...

"போம்மா... எனக்கு கன்னம் வலிக்குது..." சுஜானா கன்னத்தை பிடித்து கொண்டு முகத்தை சுளிக்க...

"சாரிடி சுஜி... எனக்கு வேற வழி தெரியலை... நான் எதிர்த்தா தான் உன் அண்ணன் உனக்கு சப்போர்ட் பண்ணுவான்... நான் உனக்கு சப்போர்ட் பண்ணினேன்னு வை... அது அவனுக்கு அநாவசியமா சந்தேகத்தை தான் ஏற்படுத்தும்..." என்றவர் மகளின் கன்னத்தை பாசத்துடன் வருடி கொடுத்தார்...

அன்னையின் பேச்சில் இருந்த உண்மை தெரிந்து சுஜானாவும் அமைதியாக இருந்தாள்...

"ஆனாலும் அம்மா சும்மா சொல்லக் கூடாது... ஆனானப்பட்ட அண்ணனையே கலக்கிட்டீங்களே..." என்று தாயை பாராட்டியவள்,

"அம்மா... எனக்கு ஒரு டவுட்..." என்ற மகளை பார்வதி கேள்வியாய் பார்க்க...

"அந்த கிருஷ் பேச வேண்டிய டயலாக் எல்லாம் நீங்களே பேசிட்டீங்களே... அது ஏன்...?"

"நீ வேற சுஜி... நான் எதையோ பேச போய் எதையோ பேசி வச்சேன்... எங்கே அவன் இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்காம போயிருவானோன்னு பயந்து தான் அந்த பிட்டை போட்டேன்... எப்படியோ நாரதர் கலகம் நன்மையில் முடிந்தது..."

"இப்பவாவது நீங்க ஒத்துக்கிட்டீங்களே..."

"என்னடி ஒத்துக்கிட்டேன்..." புரியாமல் மகளை பார்த்தார் அவர்...

"அதான்... நாரதர்ன்னு..." என்று சொல்லியபடி அவள் சிரிக்க...

"உன்னை..." என்று பார்வதி மகளை அடிக்க கைய ஓங்க, அதை கண்டு போலியாய் பயந்தபடி அவள் எழுந்து ஓட, தன் வயதையும் பொருட்படுத்தாது மகளின் பின்னே ஓடினார் பார்வதி...

வெகு நாட்களுக்கு பின் வீட்டில் மகிழ்ச்சி திரும்பி இருந்ததை உணர்ந்து சிவநேசன் கண்கள் பனித்தது...

'எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும்...' என்று அவரின் மனம் கடவுளை வேண்டி கொண்டது...

அங்கு கிருஷ்ணா அக்கா வருணிதாவிடம் தனது காதலை பற்றி சொல்லி கொண்டு இருந்தான்...

அதை கேட்டு அவள் திகைத்து போய் அவனை பார்த்தாள்...

"நீ தான்க்கா எப்படியாவது மாமா கிட்ட பேசி எங்க கல்யாணத்தை நடத்தி வைக்கணும்... நீ சொன்னா அவர் நிச்சயம் சம்மதிப்பாருக்கா... அவர் சம்மதிச்சா மாமாவும், அத்தையும் ஓகே சொல்லிடுவாங்க... என் காதல் உன் கையில், உன் முடிவில் தான்க்கா இருக்கு... ப்ளீஸ்க்கா எனக்காக மாமா கிட்ட போய் பேசு..."

தான் முற்றுப்புள்ளி வைத்த காதலுக்கு தம்பி தொடரும் போடுவதை உணர்ந்து அவள் அதிர்ந்து போய் அமர்ந்து இருந்தாள்...

உறையும்...

"கிருஷ் என்னடா சொல்ற...?" அதிர்ச்சியில் சிறிது நேரம் மூளை மரத்து இருந்த வருணிதா பின் தன்னை சமாளித்து கொண்டு அவனை பார்த்து அதே அதிர்ச்சியுடன் கேட்டாள்...

"ம்ப்ச்... என்னக்கா நீ... திரும்பியும் முதல்ல இருந்தா..." சலிப்பாய் சொன்னாலும் கிருஷ்ணா மீண்டும் தன் காதல் கதையை சகோதரியிடத்தில் சொல்ல தயங்கவில்லை...

"இது தான்க்கா நடந்தது... நீ தான் மாமா கிட்ட போய் பேசணும்..."

"நானா...? நான் எப்படிடா... அவர் கிட்ட..." தம்பியிடம் எப்படி எடுத்துரைப்பது என்று தெரியாமல் அவள் திணறினாள்...

"நீ தானே அவரோட வொய்ப்... அப்போ நீ தான் எனக்காக பேசணும்..." அவன் அழுத்தமாய் கூறினான்...

அவனின் வார்த்தையில் அவளது மனமும், தேகமும் ஒரு கணம் சிலிர்த்து அடங்கியது... எல்லாம் அந்த ஒரு கணம் தான் அடுத்த கணம் தன்னை கட்டுப்படுத்தி கொண்டவள்,

"அந்த உறவு முடிந்து போய் எட்டு வருசங்களாகிருச்சு கிருஷ்... என்னால் அவரிடம் போய் பேச முடியாது..." அவள் தீர்மானமாய் மறுத்தாள் தம்பியின் வார்த்தைகளை...

"அப்போ என் காதல்..."

"அதை நீ தான் யோசிக்கணும்... இது எல்லாம் நீ சுஜியை காதலிக்கிறதுக்கு முன்னாடி யோசிச்சு இருக்கணும்... இப்ப யோசிச்சு எந்த பிரயோஜனமும் இல்லை..." என்றவள்,

"ஆமாம்... நீ எப்போ சுஜியை பார்த்த...? எப்போ இருந்து அவளை லவ் பண்ண ஆரம்பிச்ச...? உனக்கு அவளை மாதிரி பொண்ணுங்க எல்லாம் செட்டாகாதே... நீ எப்படிடா அவளை லவ் பண்ணுன...? எனக்கு என்னமோ உன் லவ் மேல டவுட்டா இருக்கு..." சந்தேகமாய் பார்த்த அக்காளை கண்டு அவன் அரண்டு போனான்...

மிகச் சரியாக தன் மனதை கணித்தவளை வியப்புடன் பார்த்தவன் இதற்கு மேல் அவளை பேச விட்டால் தனது காதலின் முழு ஜாதகத்தையும் ஆராயும் அபாயம் இருப்பதால் அவன் பேச்சை மாற்றினான்...

"அக்கா... நீ பேசுறது டூ மச்... அவளை சும்மா டைம் பாஸ்க்கு லவ் பண்றவன்னா இருந்தா இப்போ அவளை கல்யாணம் பண்ண உன் உதவி கேட்டு நிப்பேனா... என்னக்கா நீ சும்மா சந்தேகப்பட்டுக்கிட்டு... நீ என் காதலுக்கு உதவி செஞ்சே ஆகணும்..."

அவனின் வார்த்தையில் அவளது முகம் இறுகியது...

"அது மட்டும் என்னால் முடியாது கிருஷ்..."

பிடிவாதம் பிடித்தவளை கண்டு அவனுக்கு எரிச்சல் தான் வந்தது...

"அக்கா... ஆனாலும் உனக்கு இத்தனை அழுத்தம் ஆகாது... மாமா கிட்ட போய் பேசி பார்க்கிறதுனால அப்படி என்ன நீ குறைஞ்சு போயிருவ...? உன் பிடிவாதத்துக்கு ஒரு அளவே இல்லையா... இந்த பிடிவாதத்தால் தான் நீ நல்ல வாழ்க்கையை இழந்துட்டு இப்படி தனிமரமா நிற்கிற..."

அவன் அப்படி கூறும் போது அவளது கண்ணில் அடிப்பட்ட வலி ஒன்று தோன்றி மறைந்தது...

"என்ன அப்படி பார்க்கிற...? மாமா மாதிரி ஒரு ஆணை இந்த உலகத்தில் பார்க்க முடியாது... இவ்வளவு ஏன் நான் என்னையும் சேர்த்து தான் சொல்றேன்... என் பொண்டாட்டி உன்னை மாதிரி இருந்து இருந்தா நான் நாலு அடி போட்டு என் கூட கூட்டிட்டு போய் வாழ்ந்து இருப்பேன்... ஆனா மாமா பாவம்... நீயா வருவன்னு அவர் காத்திட்டு இருக்காரு... ஆனா நீ இன்னும் பிடிவாதம் பிடிச்சிக்கிட்டு தனியா இருக்க... உன்னை சொல்லி தப்பில்லை... உனக்கு இந்தளவுக்கு செல்லம் கொடுக்கிறாரே அவரை சொல்லணும்... ஏன்க்கா நீ இப்படி இருக்கிற...?" அவளை

பார்த்து கேட்டவனுக்கு அவள் பதில் பேசாமல் அமைதி காக்க...

"புருசன், புள்ளையை பத்தி யோசிக்காத நீ என்னை பத்தி யோசிப்பேன்னு நினைச்சு நான் கேட்டது என்னோட தப்பு தான்..."

அதற்கும் பதில் பேசாது அழுத்தமாய் அமர்ந்து இருந்தவளை கண்டு அவனுக்கு கோபம் வந்துவிட்டது...

"இங்கே பாருக்கா... உனக்கு தான் இப்படி அழுத்தமா இருக்கத் தெரியும்ன்னு நினைக்காதே... எனக்கும் இருக்கத் தெரியும்... இதில் பாதிக்கப்படுறது நான் மட்டுமல்ல... உன் அருமை நாத்தனாரும் தான்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் சென்றுவிட்டான்...

அவன் சென்ற பின்னும் வெகுநேரம் அப்படியே அமர்ந்து இருந்தாள் அவள்... அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... வெகுவாய் யோசித்து தனது அன்னைக்கு அழைத்தாள்...

முதலில் பொதுவான விசயங்களை பற்றி பேசியவள் பின் கிருஷ்ணாவின் காதலை பற்றி அன்னையிடம் கூறினாள்...

பத்மாவிற்கு இப்போது தான் கிருஷ்ணா அங்கு நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் கூறி இருந்தான்... அதனால் அவர் தனது நடிப்பை பக்கவாக தொடர்ந்தார் மகளிடம்...

"என்னது கிருஷ் காதலிக்கிறானா...? அதுவும் உன் நாத்தனாரையா...?" போலியான அதிர்ச்சியை தனது குரலில் காட்டியவர் உதடுகளில் புன்னகை நிறைந்து இருந்தது...

வருணிதாவிற்கு தாயின் அதிர்ச்சி புரிந்து கொள்ள முடிந்தது... தன்னுடைய காதலுக்கு அன்னை எந்தளவிற்கு எதிர்ப்பு தெரிவித்தார் என்பது அவளுக்கு தான் தெரியுமே...

"இது எல்லாம் நம்ம குடும்பத்துக்கு சரிப்பட்டு வராது வருணி... முதல்ல அவனை மூட்டை முடிச்சை கட்டிட்டு ஊர்

பக்கம் வந்து சேர சொல்லு... நான் இங்கே நம்ம இனத்தில் நல்ல பொண்ணா பார்க்கிறேன்... தொழில் பண்ண அனுப்பினா அவன் காதலா பண்ணிக்கிட்டு இருக்கான்..." கோபத்தில் அவர் படபடத்தார்...

மனைவியின் நடிப்பை சிரித்தபடி பார்த்து கொண்டு இருந்த திருவேங்கடம் அருகில் இருந்த தண்ணீர் நிறைந்த சொம்பை மனைவி கையில் கொடுத்து,

"நா வறண்டு போயிருக்க போகுது குடி..." என்று கவுண்டர் கொடுத்துவிட்டு போனார்...

'இந்த மனுசனுக்கு இருக்கிற லொள்ளை பாரேன்...' மனதுக்குள் முணுமுணுத்து கொண்ட பத்மா மகளிடம் கவனத்தை திருப்பினார்...

"அம்மா... சுஜியும் நல்ல பொண்ணு தான்ம்மா... டாக்டரா இருக்கா... கை நிறைய சம்பாதிக்கிறாள்... அழகான, நல்ல குணமான பொண்ணு... இதை விட உங்களுக்கு வேறு என்ன வேணும்... என் மாமியார் கூட பேசி நல்லதா முடிவு பண்ணுங்க..."

'என்னடா இது... நாம அவங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்க பிளான் பண்ணினா... இவ பிளான்க்குள்ள வராம எஸ்கேப்பாக பார்க்கிறாளே... இதை சும்மா விட கூடாதே... பத்து சீக்கிரமா எதையாவது யோசி...' அவர் தீவிரமாய் யோசிக்க ஆரம்பித்தார்...

அன்னையின் அமைதி கண்டு அவளுக்கு பயம் வந்தது...

"அம்மா... என்னம்மா பேசாம இருக்கீங்க...?"

"ஆனா வேற இனமே..." என்று வேண்டும் என்றே இழுத்தார்...

"அம்மா ரெண்டு மனசு ஒண்ணு சேர்ந்ததுக்கு அப்புறம் இனம் எங்கே இருந்து வருதும்மா...? அப்படியே நீங்க அவன் மனசை வருத்தி வேறு பொண்ணை கட்டி வச்சாலும் அவன்

சந்தோசமா வாழ்வானாங்கிறது கேள்விக்குறி தான்ம்மா... அவனோட சந்தோசத்தை மட்டும் பாருங்க..."

அவள் சொன்னதும் அவர் யோசனை செய்வது போல் பாவனை செய்துவிட்டு, "சரி நீ சொல்றதால மட்டுமில்ல நம்ம மாப்பிள்ளை முகத்துக்காகவும் இதுக்கு நான் சம்மதிக்கிறேன்... ஆனா..."

அதை கேட்டதும் மகளுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

"அப்படின்னா எங்க வீட்டில் வந்து முறைப்படி பொண்ணு கேளுங்கம்மா..."

அதில் அவருக்கு கோபம் வந்துவிட்டது...

"உங்க வீடா... எதுடி உங்க வீடு...? நீ என்ன அங்கே வாழவா செய்ற எங்க வீடுன்னு உரிமையா சொல்லிக்கிட்டு இருக்க...? நீ பண்ணி வச்சியிருக்கிற வேலைக்கு நான் எந்த முகத்தை வச்சிக்கிட்டு அந்த வீட்டு படியேறி பொண்ணு கேட்க சொல்ற...? 'உங்க பொண்ணு என் பையன் கூட ஒழுங்கா வாழ மாட்டேங்கிறா... இந்த லட்சணத்துல உங்க பையனுக்கு என் பொண்ணை கேட்கிறீங்களான்னு' உன் மாமியார் கேட்டா நான் என்ன பதில் சொல்றது...? முதல்ல உன் வாழ்க்கையை சரி பண்ணுற வழியை பாரு... அதுக்கு அப்புறம் உன் தம்பிக்காக நான் பெண் கேட்டு வர்றேன்..." ஒரே போடாக போட்டு மகளின் வாயை அடைத்தார் அவர்...

அதை கேட்டு அவள் திகைத்து நின்றாள்... அவளால் உதவ முடியாத காரணத்தால் தான் அன்னையின் உதவியை நாடினாள்... அவர் இப்படி கூறவும் அவளால் பதில் கூற முடியவில்லை...

"இங்கே பார் வருணி... நீ மாப்பிள்ளை கூட சந்தோசமா சேர்ந்து வாழ்ந்தா தான் நானும் தைரியமா அங்கே வந்து பெண் கேட்க முடியும்... இல்லைன்னா உன் தம்பி கிட்ட அவன் காதலை மறந்திர சொல்லு... தப்பு நம்ம மேல

வச்சிக்கிட்டு அவங்க கிட்ட போய் என்னால தலைக்குனிஞ்சு நிற்க முடியாது..."

வெட்டு ஒன்று துண்டு இரண்டாய் பேசிய அன்னையிடம் மேற்கொண்டு பேச முடியாமல் அவள் அலைப்பேசியை அணைத்தாள்...

அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது... தம்பி தன் காதலை சொல்லும் போதே இது மாதிரி பிரச்சினைகள் வரும் என்று அவளுக்கு நன்கு தெரியும்... அதனால் தான் அமைதி காத்தாள்... ஆனாலும் தனக்காக தம்பியும், நாத்தனாரும் தங்களது காதலை இழந்து ஏன் தவிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்ற அன்னையை அழைத்து பேசினாள்... ஆனால் அவரோ இப்படி ஒரு குண்டை போட்டுவிட்டார்...

அவள் யோசித்து கொண்டு இருக்கும் போதே அவளது அலைப்பேசி அழைத்தது... சுஜானா தான் அழைத்தாள்...

அவள் உயிர்ப்பித்ததும், "ஹலோ..." என்று சொல்லிய சுஜானாவுக்கு மனம் நடுங்கியது...

பக்கத்தில் அமர்ந்து இருந்த கிருஷ்ணாவை பாவமாய் பார்த்தாள்... அவளுக்கு கோர்வையாய் பொய் பேச வராது... உண்மை என்றால் மனதில் இருப்பதை கூறி விடலாம்... பொய் என்றால் அதற்கு என்று திரைக்கதை, வசனம் எல்லாம் எழுதி வைத்துவிட்டு தான் பேச வேண்டும்... கொஞ்சம் பிசகினாலும் கதை கந்தல்... அதனால் செய்வதறியாது அவனை பார்த்தாள்...

அவன் தான் அவளை அக்காவிடம் பேச சொல்லி இருந்தான்... சுஜானா பேசினால் தனது அக்கா மனம் சற்று இரங்கினாலும் இரங்கும் என்று அவன் நினைத்தான்... அதனால் அவளை மருத்துவமனை போகும் வழியில் பிடித்து வருணிதாவிடம் பேச சொன்னான்...

அவளின் நிலை கண்டு அவனுக்கும் பரிதாபமாக இருந்ததோ என்னமோ தனது கை கொண்டு அவளது கையை ஆறுதலாய் அழுத்தியவன் அவளை பார்த்து 'பேசு'

என்பது போல் கண்ணசைக்க... அதில் சற்று தைரியம் வரப் பெற்றவளாய்,

"அண்ணி... உங்க தம்பி இப்ப தான் விசயத்தை சொன்னாரு... நீங்க சப்போர்ட் பண்ணுவீங்கன்னு தான் நான் தைரியமா இருந்தேன்... நீங்களே இப்படி சொன்னா எப்படி அண்ணி... நான் உங்க தம்பியை சின்சியரா லவ் பண்றேன்... நீங்க தான் எப்படியாவது எங்களை சேர்த்து வைக்கணும்..." அதை சொல்லும் போது மனதைரியத்துக்காக அவனின் கையை இறுக்கி பிடித்து கொண்டாள் அவள்...

அவளது கை இறுக்கமும், அவளது வார்த்தைகளும் அவனுள் ஏதோ ஒரு மாயாஜாலத்தை உண்டு பண்ணியது... அவள் கூறுவது அனைத்தும் பொய் தான் என்றாலும் அவளது தொடுகையும், அந்த வார்த்தைகளும் அது உண்மை என்பது போன்ற ஒருவித மாயையை உண்டு பண்ணியது அவனுள்...

'இது உண்மையாக இருக்க கூடாதா...' என்று அவனையும் அறியாது அவனது மனம் ஆசைப்பட்டது...

அவளையே இமைக்காது பார்த்து கொண்டு இருந்தான் அவன்... அவளது உருவம் அவனது மனதில் மெல்லிய படலமாய் பதிய ஆரம்பித்தது...

"அண்ணி சரின்னு சொல்லிட்டாங்க..." அவளது சந்தோச குரலில் உணர்வு பெற்றவன் அவளை கேள்வியாய் பார்த்தான்...

"அண்ணா கிட்ட போய் பேசறேன்னு சொல்லி இருக்காங்க... இனி எல்லாம் நல்லபடியாக நடக்கும்ன்னு நம்பறேன்..." குழந்தையாய் குதூகலித்தவளை கண்டு அவனுக்கும் சந்தோசமாய் இருந்தது...

"நிச்சயம் நல்லதே நடக்கும்..." அவளின் கண்களை பார்த்தவாறு சொன்னவனின் பார்வையை தாங்க முடியாது தனது பார்வையை திருப்பி கொண்டவள்,

"அப்போ நான் கிளம்பறேன்..." என்றவள் அவனது காரில் இருந்து இறங்கும் போது தான் கவனித்தாள் தனது கை இன்னமும் அவனின் கரத்தோடு கோர்த்து இருப்பதை...

அதை கண்டு அவளது முகம் சிவந்துவிட்டது... 'அச்சோ... என்ன நினைத்து இருப்பான்...' என்று மானசீகமாக தலையில் அடித்தவள்,

"சாரி..." என்றபடி அவசரமாய் அவனின் கையை விடுவித்தாள்... அதில் அத்தனை நேரம் இருந்த மாயவலை அவனுள் அறுந்து விழ அவன் நடப்பிற்கு வந்தான்...

"பரவாயில்லை..." என்றவனிடம் கண்ணால் விடைப்பெற்று தனது காரை நோக்கி நடந்தாள் அவள்...

செல்லும் அவளை பார்த்து கொண்டு இருந்தவன் அவள் காரிலேறி காரை கிளப்பியதும் தான் உணர்ந்தான் அவள் கிளம்பி செல்வதை...

உடனே தனது காரை வேகமாய் கிளப்பி கொண்டு அவள் கார் அருகே வந்தவன் கார் கண்ணாடியை இறக்கி விட்டு அவளை பார்த்து,

"பை..." என்று கையசைத்தவன் தனது காரின் வேகத்தை அதிகரித்தபடி அவளை கடந்து சாலையில் பறந்தான்...

அவன் போகும் வேகத்தை கண்டு முதலில் அதிர்ந்தவள் பின், "அச்சு அசல் குரங்கு சேட்டை தான்..." என்று முணுமுணுத்தவளின் முகத்தில் கோபம் இல்லை மாறாக அது புன்னகையில் மலர்ந்து இருந்தது...

நூறாவது முறையாக அலைப்பேசியில் கணவனது எண்ணை அழுத்த எண்ணி கைவிரலை கொண்டு போன வருணி ஏதோ நினைத்தவளாய் அதை எடுத்து விட்டு அலைப்பேசியை வெறித்தாள்...

'பேசியே ஆகவேண்டுமா...' அவளது ஒரு மனம் முரண்டியது...

'அப்படியாவது அவனது குரலை கேட்கலாமே...' என்று இன்னொரு மனம் அவளுக்கு ஆசை காட்டியது...

ஆனாலும் மனதிற்குள் போட்டு வைத்திருந்த தளைகள் அவளை பேச விடாமல் தடை செய்தது... ஏதேதோ எண்ணங்கள் மனதை போட்டு அழுத்த அலைப்பேசியை தூர எறிந்துவிட்டு படுக்கையில் வந்து விழுந்தாள்...

தம்பியின் வாழ்வு ஒரு புறம், தன்னுடைய வாழ்வு மறுபுறம் என்று அவளை பயங்கரமாய் அச்சுறுத்தியது...

என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கி போயிருந்தாள் அவள்...

அங்கே அலுவலகத்தில் தேவனாந்த்தும் என்ன செய்வது என்று தெரியாமல் தலையை போட்டு உடைத்து கொண்டு இருந்தான்... தனது வாழ்க்கையை நேராக்காமல் தங்கையின் காதலுக்கு தன்னால் உதவ முடியாது என்பது அவனுக்கு தெளிவாக தெரிந்து போனது... அதை செய்யாமல் அவனது அன்னையும் அத்தனை எளிதில் சமாதானமாக மாட்டார் என்பதும் அவனுக்கு தெரியும்...

இப்போது மனைவியை எப்படி தன்னிடம் வரவழைப்பது...? என்று தெரியாமல் அமர்ந்து இருந்தான்...

அன்றே அவளது விருப்பம் இல்லாமல் அவளை அவனுடன் கட்டாயப்படுத்தி அழைத்து வந்திருக்க அவனால் முடியும் தான்... ஆனால் அது அவளுக்கு எந்தளவுக்கு மனக்கஷ்டத்தை கொடுக்கும் என்பதை உணர்ந்ததால் தான் இத்தனை நாளாய் அமைதியாக இருந்தான் அவன்... இப்போதும் அவளை கஷ்டப்படுத்தியோ, துன்புறுத்தியோ அழைத்து வர அவனுக்கு பிடித்தம் இல்லை... அப்படி அவளை அழைத்து வர அவன் ஒன்றும் கற்கால மனிதன் இல்லையே...

மனதிற்கு குழப்பமாய் இருந்தது அவனுக்கு... அந்நேரம் அவனது அலைப்பேசி அடித்தது... வீட்டில் இருந்து தான்...

எடுத்ததும் மகளின் உற்சாக குரல் மறுபக்கம் ஒலித்தது...

"அப்பா... வீட்டுக்கு எப்போ வர்றீங்க...?" இன்று அவள் அவனது வீட்டிற்கு வரும் நாள்...

"இதோ இப்ப கிளம்பிட்டேன் அம்மு..." என்றபடி அலைப்பேசியை அணைத்தவன் தனது மனக்குழப்பத்தை தள்ளி வைத்துவிட்டு உற்சாகமாய் வீட்டிற்கு கிளம்பினான்...

அவனை கண்டதும் காவலாளி குடையை எடுத்து கொண்டு ஓடி வந்தான்...

ஒரு வார காலமாக சென்னையில் மழை வலுத்து பெய்து கொண்டு இருந்தது... வரலாறு காணாத அளவிற்கு இந்த வருடம் மழை பெய்தது...

காரிலேறியவன் வீட்டிற்கு செல்லும் முன் மகளுக்கு பிடித்த உணவு வகைகளை வாங்கி கொண்டு சென்றான்...

"அப்பா..." அவனை கண்டதும் ஓடி வந்து அவனது கழுத்தை கட்டி கொண்டாள் வர்ஷினி...

"அம்மு..." அவனும் ஆசையாக அவளை தூக்கி கொண்டான்...

மகளை கொஞ்சியபடி கதை பேசி கொண்டு புன்னகையோடு வீட்டினுள் நுழைந்தவனை கண்டு பார்வதியின் கண்கள் கலங்கியது...

'இப்போது வருணியும் உடன் இருந்தால் எப்படி இருக்கும்...?' என்று நினையாமல் அவரால் இருக்க முடியவில்லை...

அப்பாவும், மகளும் இரவு உணவு உண்டு விட்டு தங்களது அறைக்கு வந்தனர்...

வர்ஷினிக்கு கதை சொல்லி, அவளோடு சிறிது நேரம் விளையாடிவிட்டு, கொஞ்ச நேரம் படம் பார்த்துவிட்டு உறங்க செல்லும் முன் வழக்கம் போல் மகள் அன்னையின் அலைப்பேசிக்கு அழைத்தாள்...

"அம்மா..."

.............

"ம்... நான் சாப்பிட்டாச்சு... நீங்க சாப்பிட்டீங்களா...?"

.............

"உம்... சமத்து..." என்று அன்னையை மெச்சிய மகளை கண்டவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

அவனது மனைவியை மகள் அன்னையாய் மடி தாங்குவது அவனுக்குமே சந்தோசம் அல்லவா...

"பத்திரமா தூங்குங்க... நான் நாளைக்கு ஈவினிங் சீக்கிரம் வந்திர்றேன்..." என்ற மகளை புரியாமல் பார்த்தான் அவன்...

"ஓகேம்மா... குட் நைட்..." என்றபடி அவள் அலைப்பேசியை அணைத்தாள்...

தந்தை அருகே படுத்து காலை அவன் வயிற்றின் மீது போட்டு கொண்டு உறங்க முற்பட்ட வர்ஷனியிடம், "என்ன அம்மு இன்னைக்கு திடீர்னு அம்மாவை பத்திரமா தூங்க சொல்ற...? நாளைக்கு வேற சீக்கிரம் வர்றேன்னு வேற சொல்ற...?"

"அது... அம்மா கூட யாரும் இல்லையா அதான்... மாமா மும்பை போயிருக்காங்க... துளசிம்மாவும், சந்திரன் அங்கிளும் ஊருக்கு போயிருக்காங்க..." என்றவள் கண்கள் தூக்கத்தில் சொருகியது...

அவளை தட்டி கொடுத்து உறங்க வைத்தவனுக்கு உறக்கம் வரவில்லை...

'உடன் யாரும் இல்லாத இந்த நேரத்திலும் தனியாக இருந்து கொண்டு மகளை இங்கு அனுப்பி இருக்கிறாள் என்றால் அது தனக்காக தான்...' என்பதை உணர்ந்தவன் மனமோ மனைவிக்காக தவிக்க ஆரம்பித்தது...

'ஏன் இத்தனை வருடங்களில் ஒரு முறை கூட அவள் தனியாக இருந்தது இல்லையா...?' அவனது மனம் அவனை

இடித்துரைத்தது...

ஆனாலும் ஏதோ ஒன்று இரவு முழுவதும் அவன் மனதை போட்டு அரித்து கொண்டே இருந்தது...

அதற்கான காரணம் காலையில் எழுந்த போது தான் அவனுக்கு தெரிந்தது...

ஆம்... வருணிதா இருந்த பகுதி மழை நீர் சூழ்ந்து வெள்ளக்காடாய் மாறி இருந்தது... அதை கேள்விப்பட்டதும் அவன் அதிர்ந்து தான் போனான்... நல்லவேளையாக அவன் இருந்த பகுதியில் அப்படி ஏதும் பாதிப்பு இல்லை...

மனம் கவலையுற இத்தனை வருட தங்களது மனஸ்தாபத்தை மறந்தவனாய் அவளை அலைப்பேசியில் அழைத்தான்... ம்ஹூம் மறுபுறம் அழைப்பு போகவில்லை...

உடனே பதறி போய் அவளை காண்பதற்காக கிளம்பியவனை தடுத்த பார்வதி, "எனக்கு என்னமோ பயமாயிருக்கு தேவா..."

அவரது வார்த்தைகள் அவனுள்ளும் நடுக்கத்தை ஏற்படுத்தியது... தனது வேதனையை விழுங்கி கொண்டு கண்களை இறுக மூடி திறந்தவன்,

"அவளுக்கு ஒண்ணும் ஆகியிருக்காதும்மா..." என்றான் தன் வருத்தத்தை மறைத்து கொண்டு...

"அப்பா... நானும் உங்க கூட வர்றேன்ப்பா..." என்று அழுத மகளை சமாதானப்படுத்தி அன்னையிடம் விட்டு விட்டு காரை கிளப்பினான்...

அதற்குள் ஊருக்கு விசயம் பரவி வருணிதாவின் பெற்றோர் அவனுக்கு அழைத்தனர்...

"மாப்பிள்ளை... வருணி எப்படி இருக்கான்னு போய் பாருங்க... ஏதோ கோபத்துல அவ அப்படி இருந்துட்டா... இது நீங்க உங்க கோபத்தை காட்ட வேண்டிய நேரம் இல்லை... பாவம் அவள்... தனியா எப்படி கஷ்டப்படுறாளோ...?"

பத்மா அழுத போது அவனுக்கும் நெஞ்சம் குமுறி கொண்டு வந்தது...

'என் மனைவி மீது எனக்கும் அக்கறை இருக்கிறது...' என்று கத்த வேண்டும் போல் இருந்தது அவனுக்கு...

ஆனால் அதை செய்ய முடியாமல் உணர்வுகளை அடக்கியவன், "அங்கே தான் போயிட்டு இருக்கேன் அத்தை..." என்று சொல்லிவிட்டு அலைப்பேசியை அணைத்துவிட்டான்...

அடுத்து கிருஷ்ணா மும்பையில் இருந்து அழைத்தான்...

"மாமா... அக்கா ஃபோன் நாட் ரீச்சபிள்ன்னு வருது... எனக்கு ரொம்ப பயமாயிருக்கு மாமா..." பதட்டத்துடன் பேசியவனை சமாதானப்படுத்திவிட்டு தனது காரை வேகப்படுத்தினான்...

குறிப்பிட்ட இடத்திற்கு மேல் அவனால் காரில் செல்ல முடியவில்லை... எங்கும் நீர் சூழ்ந்து சென்னையே வெள்ளக்காடாய் மாறி கொண்டு இருந்தது... இது ஆரம்பம் தான் இனி தான் இருக்கிறது என்பது போல் மழை விடாமல் பெய்து கொண்டு இருந்தது...

வருணிதா இருந்த பகுதியில் அப்போது தான் நீர் சூழ ஆரம்பித்து இருந்தாலும் அந்த நீரின் அளவே அவனது நெஞ்சு வரை உயர்ந்து இருந்தது...

எப்படியோ அதில் நீந்தி முன்னேறி அவளது வீட்டை வந்தடைந்து விட்டான்... அவளது வீட்டிலும் கீழ் தளத்தில் நீர் சூழ்ந்து காணப்பட்டது... அதை கண்டு மனம் பதறியவனாய்,

"வது... வது..." என்று கதவை தட்டி அவளை அவன் அழைக்க... உள்ளிருந்து ஒரு சத்தம் கூட வரவில்லை...

அவனுக்கு பயம் பிடித்து கொண்டது...

"பேபி... எங்கே இருக்க...? உன் தேவ் வந்து இருக்கேன்..." திறந்து இருந்த ஜன்னலின் வழியே குரல் கொடுத்தான்

அவன்...

ம்ஹூம்... பதில் குரல் அவளிடம் இருந்து வரவில்லை... அச்சம் கொண்டு படபடத்த மனதை அடக்கும் வழியறியாது பக்கவாட்டில் நீந்தி சென்று ஒவ்வொரு ஜன்னலாக பார்த்து கொண்டு வந்தவன் உணவு உண்ணும் அறையில் இருந்த ஜன்னல் வழியே பார்த்த போது அங்கு கண்ட காட்சியில் அவனது இதயம் எகிறி துடிப்பது போல் இருந்தது...

அங்கே உணவு மேசை மீது வருணிதா முழங்காலில் முகம் புதைத்து உடல் நடுங்க அமர்ந்து இருந்தாள்... மழை நீர் உணவு மேசையின் உயரத்தில் முக்கால்வாசி உயர்ந்து இருந்தது...

அதை கண்டதும் அவனது உயிர் போய்விட்டது போல் அவனுக்கு மூச்சடைத்தது... கணவனான தான் இருக்கும் போதே மனைவியின் நிராதரவான நிலை கண்டு அவனது மனம் வேதனை கொண்டது... இத்தகைய நிலையில் அவளை காணத்தானா தான் இத்தனை நாள் உயிரோடு இருந்தோம் என்று அவன் மனம் வெறுத்து போனான்...

அடுத்து ஒரு நொடி கூட தாமதம் செய்யாமல் அவன் அவளை பார்த்து கத்தி அழைத்தான்...

"வது பேபி... இங்கே பார்... பயப்படாதே... நானிருக்கிறேன் உனக்கு..." அவனது குரலில் அவனது மனையாள் முழங்காலில் இருந்து முகத்தை நிமிர்த்தி கண்களை மலர்த்தி அவனை பார்த்தாள்...

வெகு வருடங்கள் கழித்து அவனை கண்டதில் அவளது கண்ணில் ஒரு நம்பிக்கை மின்னல் ஒளிர்ந்தது... பின் அது மறைந்து போய் உணர்ச்சியற்று அவனை பார்த்தது... இதை எல்லாம் கவனிக்கும் நிலையில் அவன் இல்லை...

அவளை காப்பாற்றுவது ஒன்றே நோக்கமாக கொண்டு அவன் செயல்பட்டான்...

"வது... ப்ளீஸ் கதவை திறம்மா..." என்றவனை வெறுமையாக பார்த்தவள்,

"நீங்க போங்க... நான் வரவில்லை..." என்றாள் தீர்க்கமாக...

"பேபி... லூசுத்தனமா பேசாதே... முதல்ல கதவை திற..." உயிரை கொடுத்து கத்தினான் அவன்...

"இல்லை நான் வரலை... எனக்கு வாழ்கிற ஆசையே போயிருச்சு... நான் செத்து போறேன்..." என்று கண்ணீரோடு கத்தியவளின் மனநிலை மிகுந்த அழுத்தத்தில் இருந்தது...

அதை கேட்டு அதிர்ந்து போனான் அவன்...

"இப்போ நீ கதவை திறக்கலை நானும் இங்கேயே இருந்து உன் கூடவே சேர்ந்து செத்து போறேன்..." அவளை போல் அவனும் பிடிவாதமாய் சொன்னான்...

அந்த வார்த்தைகள் அவளிடத்தில் சிறிது வேலை செய்ததோ என்னமோ அமைதியாய் அவனை பார்த்தவள் பின் உணவு மேசையில் இருந்து கீழே இறங்கினாள்...

பயத்தில் நடுங்கியதாலோ என்னமோ அவளது உடல் சிறிது தடுமாறியது... நீரில் கீழே விழ போனவளை கண்டு அவன்,

"பார்த்து வது..." என்று மனம் பதறினான்...

அப்போதும் அவனது அக்கறை அவளுக்கு கண்ணீரை வரவழைத்தது...

ஒருவாறு அருகில் இருந்த பொருட்களை பற்றியபடி நீரில் நீந்தி வந்து கதவை திறந்தாள் அவள்...

கதவு திறந்ததும் தான் தாமதம் உள்ளே புகுந்த நீரை விட வேகமாய் உள்ளே வந்தவன் அவளை பார்த்து, "இனி இங்கு இருக்க வேண்டாம் வது... நம் வீட்டிற்கு போகலாம் வா..." அவளின் கை பிடித்து அவன் அழைக்க...

அப்போதும் அவள் பிடிவாதமாய் அழுத்தமாய் அப்படியே அசையாது நின்று இருந்தாள்...

அந்த நிலையிலும் பதில் சொல்லாது அழுத்தமாய் நின்று இருக்கும் மனைவி கண்டு இத்தனை நாள் கடைபிடித்து வந்த அவனது பொறுமை காற்றில் பறந்தோடியது...

அடுத்த நொடி ஆத்திரம் தலைக்கேற அவன் ஓங்கி ஒரு அறை விட்டான் அவளது கன்னத்தில்...

கன்னத்தில் கையை வைத்தபடி விழிகள் அச்சத்தில் விரிய அவனை பார்த்தவள் பார்வையே சொல்லியது அவனிடம் இருந்து இதை அவள் எதிர்பார்க்கவில்லை என்று...

"இதுக்கு மேல வாயை திறந்தேன்னு வை... நானே உன்னை உயிரோடு கொன்னுருவேன்..." ஆள்காட்டி விரலை நீட்டி அவளை எச்சரித்தவன் அவளின் கையை பிடித்து இழுத்து கொண்டு அந்த மழை வெள்ள நீரில் நீந்தியபடி வீட்டை விட்டு வெளியில் வந்தான்...

இத்தனை வருடங்களாய் யாராலும் இணைத்து வைக்க முடியாத அவர்கள் இருவரையும் இயற்கை அன்னை ஒரு நொடியில் இணைத்து வைத்துவிட்டாள்...

உறையும்...

"ட்ரெஸ் எல்லாம் நனைஞ்சு இருக்கு... கார் வீணா போயிருமே..." குனிந்து தனது ஈர உடையை பார்த்தவாறு கூறிய வருணிதாயை கொலைவெறியுடன் பார்த்தான் தேவானந்த்...

கார் கதவை இறுக பற்றி கொண்டு தனது கோபத்தை குறைக்க முயன்றான் அவன்... அந்தோ பரிதாபம் அது குறைவேனா என்று பிடிவாதமாய் அடம்பிடித்தது அவனது மனையாளை போல்...

கழுத்தளவு உயர்ந்து இருந்த வெள்ளநீரில் கஷ்டப்பட்டு மனைவியை காப்பாற்றி கொண்டு வந்தவனின் சந்தோசம் அவளது வார்த்தையில் அப்படியே வடிந்தது... நொடிக்கு நொடி உயர்ந்து கொண்டு இருந்த வெள்ள நீர் அவன் கார் நிறுத்தி இருந்த இடத்தை எந்த நேரத்திலும் சூழலாம் என்கிற அபாயம் இருக்கும் இந்த நேரத்திலும் அவள் கார் வீணாய் போவதை பற்றி கவலைப்படுவதை கண்டு அவன் பல்லை கடித்தான்...

"இங்கே வாழ்க்கையே வீணாகிட்டு இருக்கு... இதில் கார் வீணா போகிறதை பத்தி நீ கவலைப்படுற... எல்லாம் என் நேரம்டி... என்னை கொலைக்காரன் ஆக்குறதுக்கு முன்னாடி காரிலேறு..." பல்லை கடித்து கொண்டு வார்த்தைகளையும் கடித்து துப்பிய கணவனின் இந்த கோபமுகம் அவள் இதுவரை பார்த்தறியாதது... திகைப்புடன் அவள் அவனை பார்த்தபடி நின்றாள்...

"இப்போ மரியாதையா ஏற போறியா இல்லையா...? இல்ல அப்ப கொடுத்த மாதிரி ஒண்ணு கொடுக்கவா...?" என்றவனின் பார்வை அவளின் கன்னத்தை உறுத்து விழித்தது...

வெள்ளை நிற அவளது கன்னத்தில் அவனது கைத்தடம் சிவப்பாய் பதிந்து இருந்தது... அதை பார்த்தவன் மனம் அவளுக்கு அடிப்பட்டதில் உண்டான வலியை விட

அதிகமாய் வலித்தது... அவனையும் அறியாது அவனது கைகள் அவளது கன்னத்தை வருடியது...

"சாரி..." என்று முணுமுணுத்தவனின் கண்கள் சட்டென்று கலங்கியது... அதை அவளுக்கு காட்டாமல் இருப்பதற்காக அவளது கையை பற்றி காரின் இருக்கையில் அவளை தள்ளி அமர வைத்தவன் கதவை மூடிவிட்டு சுற்றி வந்து காரை எடுத்தான்...

நொடி பொழுது தான் என்றாலும் அவனின் கண்களின் கலங்கலை அவள் கண்டு கொண்டாள்...

அவனது கை வருடலும், மன்னிப்பும் அவளுள் ஏதேதோ எண்ணங்களை தோற்றுவிக்க அவளது கண்களும் கலங்கியது... அவன் அடித்த, வருடிய இடது கன்னத்தில் கையை பதித்து கொண்டவளுக்கு ஏனோ அவனது கை மீது தனது கையை வைத்து இருப்பது போன்று ஒரு ஆறுதல் எழுந்து அவளது அலைப்புற்ற மனதை சற்று குளிர்வித்தது என்றால் மிகையில்லை...

காரை ஓட்டி கொண்டு இருந்தவனை மெதுவே திரும்பி பார்த்தாள் வருணிதா... கைக்கெட்டும் தூரத்தில் கணவன் இருந்தாலும் அவன் அருகில் தன்னை செல்ல விடாமல் தடுக்கும் உணர்வை உணர்ந்தவளாய் அமர்ந்து இருந்தவளின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது...

அவள் பேசிய வார்த்தைகளின் வீரியம் தாங்காமல் அவளை அடித்து விட்டாலும் இப்போது அதை எண்ணி எண்ணி உள்ளம் குமைந்து கொண்டு இருந்த தேவானந்த் மேலே எதுவும் பேச பயந்து அமைதியாய் காரை ஓட்டினான்...

செயலாலும், சொல்லாலும் மனைவியை காயப்படுத்த அவன் விரும்பவில்லை...

அப்போது தான் நியாபகத்திற்கு வந்தது மகளின் நினைவு... இருவரையும் கணாமல் அவள் தவித்து போயிருப்பாளே என்ற தவிப்பில் காரில் வைத்து விட்டு சென்ற அலைப்பேசியை எடுத்து வீட்டிற்கு அழைத்தான்...

மறுபுறம் எடுத்த தந்தையிடம் விசயத்தை சொல்லியவன் மகளை பேச சொன்னான்...

"அப்பா..." மகளின் தேம்பலிலேயே தெரிந்து போனது அவள் இன்னமும் அழுது கொண்டு தான் இருக்கிறாள் என்று...

"அம்மு... அழக்கூடாது... இப்போ அப்பா வீட்டுக்கு வரும் போது அம்மாவை கூட்டிட்டு வர்றேன்..."

"நிஜமா..." குழந்தையின் குரல் குதூகலத்துடன் ஒலித்தது...

"நிஜம்டா அம்மு... நீயே அம்மா கிட்ட பேசு..." அலைப்பேசியை மனைவியிடம் நீட்டினான்...

அவள் அதை வாங்கும் போது தெரியாமல் கை ஸ்பீக்கர் பட்டனில் பட்டுவிட மறுபுறம் பேசிய மகளின் குரல் இருவருக்கும் நன்கு கேட்டது...

"அம்மா..." உற்சாகத்துடன் ஒலித்த மகளின் குரலில் வருணிதாவிற்கு தொண்டை அடைத்தது...

"அம்மு..."

"அம்மா... நீங்க அப்பா கூட வீட்டுக்கு வர்றீங்களா...? உண்மையாவா...?" அவளின் குரலில் இருந்த சந்தோசமே அவள் துள்ளி குதித்து கொண்டு இருப்பதை அவர்களுக்கு உணர்த்தியது...

"ஆமாண்டா செல்லம்..." என்றவளின் பார்வை கணவனை பார்த்தது...

அந்த நொடி அவனும் அவளை தான் பார்த்து கொண்டு இருந்தான்... இருவரின் பார்வையும் ஒரு நொடி சந்தித்து மீண்டது... பின்பு அவன் சாலையில் கண்ணை பதிக்க, அவள் மகளிடம் கவனத்தை பதித்தாள்...

"ஹே... ஜாலி... ஜாலி..." உற்சாக கூச்சலிட்ட வர்ஷினி, "அம்மா... இனிமே நாம ரெண்டு பேரும் அப்பா கூடவே

இருக்கலாம்மா... நான் அப்பாவை ரொம்ப மிஸ் பண்றேன்ம்மா..."

மகளின் வார்த்தையை கேட்டு அவளுக்கு அழுகை பொங்கியது என்றால், அவனோ தனக்குள் இறுகி போனான்...

அன்னையின் அழுகை சத்தம் மகளை எட்டியது போலும்... உடனே மனம் பதறிய அந்த பிஞ்சு,

"அம்மா... அழாதீங்கம்மா... நீங்க கஷ்டப்படுற மாதிரி இனிமே நான் பேச மாட்டேன்... சாரிம்மா... நாம நம்ம வீட்டிலேயே இருக்கலாம்மா... அப்பா வீட்டில் இருக்க வேண்டாம்மா..." அவசரமாய் அன்னைக்கு ஆறுதலாய் சொன்னாலும் மகளின் குரலில் இழையோடிய ஏக்கம் இருவரின் மனதையும் தாக்கத்தான் செய்தது...

தேவானந்த் திரும்பி பார்த்து மனைவியை கண்டு முறைத்தான்... 'இதற்கு எல்லாம் நீ தான் காரணம்' சொல்லாமல் சொல்லி குற்றம் சாட்டியது அவனது விழிகள்...

அதன் அர்த்தத்தை உணர்ந்தவளின் பார்வையோ குற்றவுணர்வு கொடுத்த குறுகுறுப்பில் தாழ்ந்தது...

"அம்மா..." மகளின் அழைப்பில் இருவரும் தங்களின் எண்ணங்களில் இருந்து மீண்டனர்...

"அம்மு கேட்கிறாள் இல்ல பதில் சொல்லு..." கோபத்தை காட்டி அவளை காயப்படுத்த கூடாது என்று அவன் நினைத்தாலும் அவனின் இத்தனை நாள் எதிர்பார்ப்பு, அந்த எதிர்பார்ப்பு பொய்த்து போனதில் ஏற்பட்ட ஏமாற்றம் எல்லாம் சேர்ந்து அவனிடத்தில் மீண்டும் கோபத்தை ஏற்படுத்தி இருந்தது...

அவள் பதில் பேசாமல் அழுது கொண்டு இருப்பதை உணர்ந்து அவளது கையில் இருந்து அலைப்பேசியை வாங்கி,

"அம்மு... அம்மா நம்ம வீட்டில் நம்ம கூடத்தான் இருப்பாள்... இவ்வளவு நாள் நாம எப்படி இருந்தோமோ தெரியாது... ஆனால் இனிமேல் நாம மூணு பேரும் சந்தோசமா ஒரே வீட்டில் தான் இருக்க போறோம்... அம்முக்கு இப்போ சந்தோசமா...?"

தந்தையின் வார்த்தையில் வர்ஷினி மனம் மகிழ்ந்தவளாய், "அப்பா... தேங்க்ஸ்ப்பா... தேங்க்ஸ்..." நன்றி கூறிய மகளை கண்டு அவனுக்கு கண்களில் நீர் நிறைந்தது...

அலைப்பேசியை அணைத்தவன் மனதில் எழுந்த உணர்ச்சி அலைகளின் தாக்கத்தை தாங்க முடியாதவனாய் அதற்கு மேல் காரை ஓட்ட முடியாமல் சாலையோரமாய் அதை நிறுத்தினான்... மழை வேறு ஓங்கி பெய்து கொண்டு இருந்தது...

"ராட்சசியாடி நீ...? நீ எல்லாம் என்ன பெண்... புருசனை தான் உன்னால புரிஞ்சிக்க முடியலை... ஆனா உன் மகளின் மனசை கூட உன்னால புரிஞ்சிக்க முடியலையே... நீ எல்லாம் படிச்சு, பட்டம் வாங்கி, தொழில் பண்ணி என்ன பிரயோஜனம்...? ஒரு சின்ன குழந்தை பொம்மை, சாக்லேட் வாங்கி கொடுத்தா தேங்க்ஸ் சொல்றதுல அர்த்தம் இருக்கு... ஆனா அம்மா, அப்பா எல்லோரும் சேர்ந்து இருப்போம்ன்னு சொன்னதுக்கு தேங்க்ஸ் சொல்றாடி... நன்றி சொல்லி என் மகள் என்னை அந்நியப்படுத்திட்டாடி... அவள் சொல்லி நான் செய்ற நிலைமையில் என்னை வச்சதுக்கு நீ தான்டி காரணம்... அம்மு நன்றி சொன்னது கேட்டு இன்னமும் என் மனசு ஆற மாட்டேங்குது... எந்தளவுக்கு அவள் மனசுக்குள்ள ஏங்கி போயிருக்கா... இந்தளவுக்கு என் மகளை நான் ஏங்க வச்சியிருக்கேன்னு நினைக்கிறப்போ எனக்கு என் மேலேயே வெறுப்பா இருக்கு..."

அவன் சொல்லும் போதே அவனது கண்களில் இருந்து கண்ணீர் சொட்டியது... தனது முகத்தை மனைவிக்கு காட்ட

பிடிக்காமல் முன்னாடி இருந்த ஸ்டீயரிங் வீலில் தலை கவிழ்ந்தான் அவன்...

கணவனது கண்ணீர் அவளது கல் மனதை கரைத்தது... எதற்கும் கலங்காதவன் இப்போது கலங்கி நிற்கிறான் என்றால் மகளின் வார்த்தை அவன் மனதை எந்தளவுக்கு பாதித்து இருக்கிறது என்பதை அவள் உணர்ந்தாள்...

அவனது கண்ணீரை கண்டதும் அத்தனை நாள் அவளிடத்தில் இருந்த தயக்கம் பறந்தோட மனதில் இருந்த காதல் மேலெழ,

"தேவ்..." அவனது தோளில் அவள் கை வைக்க...

வேகமாய் அவளின் கையை தட்டிவிட்டவன் தனது விழிகளை துடைத்து கொண்டு காரை எடுத்தான்... அவனது முகம் கல்லை போல் இறுகி போயிருந்தது...

மகளின் இந்த வார்த்தைக்கே அவனது மனம் இப்படி வருந்தியது என்றால் அவளின் மனம் முழுவதும் தெரிய வரும் போது அவனின் நிலை என்னவாக இருக்குமோ...

அவளும் அவனிடத்தில் பேச பயந்தவளாய் அமைதியாய் வந்தாள்...

சிறிது நேரம் அங்கே கனத்த மௌனம் நிலவியது...

"மாமா, அத்தை கிட்ட பேசு..." அவனே அந்த மௌனத்தை கலைத்தான்...

அந்த வருத்தமான நிலையிலும் அவன் அவளுக்காக யோசிப்பது கண்டு அவளது உள்ளம் மகிழ்ந்தது... ஆனால் அந்த மகிழ்ச்சியை தக்க வைத்து கொள்ள முடியாமல் வேறு ஒரு உணர்வு அவளை தாக்க அதில் அவள் தவித்து போனாள்...

எல்லாவற்றையும் மறந்து கணவனது காலடியில் சரணாகதி அடைய சொல்லி ஒரு மனம் கூவியது... ஆனால் மறுமனமோ அது வேண்டாம் என்று வாதாடியது...

முரண்பட்ட மனநிலையில் இருந்தவள் தனது பெற்றோருக்கு அழைத்தாள்...

மறுபுறம் எடுத்த பத்மா மகளின் குரலை கேட்டதும் நிம்மதி அடைந்தவராய் அவளின் நலனை விசாரித்து விட்டு கணவனிடம் அலைப்பேசியை கொடுத்தார்... திருவேங்கடம் மகளிடம் பேசிவிட்டு பின் மருமகனிடம் பேசியவர் தனது நன்றியை உரைத்தவர் பின்பு தயங்கியபடி,

"மாப்பிள்ள... எங்கண்ணன் உங்க கிட்ட பேசணும்ன்னு சொல்றாரு..."

அதை கேட்டதும் பழைய நியாபகத்தில் அவனது உடல் விறைத்தது...

திருவேங்கடத்திடம் இருந்து அலைப்பேசியை பிடுங்கிய அவரது அண்ணன், "மாப்பிள்ள..." என்றழைக்க...

அதை கேட்டு அவனது கண்கள் ஆச்சிரியத்தில் விரிந்தது... அவரது குரலை கேட்டவன் நம்ப முடியாமல் அமர்ந்து இருந்தான்...

"என்னை மன்னிச்சிடுங்க மாப்பிள்ள..." அவர் மன்னிப்பு யாசித்ததில் தன்னுணர்வு அடைந்தவன்,

"பெரியவங்க நீங்க எதுக்கு மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு..." அவன் பெருந்தன்மையாய் கூற... வருணிதாவோ கணவனை கேள்வியாய் பார்த்தாள்...

அவளின் பார்வை புரிந்தவனாய் அவன் அலைப்பேசியை ஸ்பீக்கர் மோடுக்கு மாற்றி இருவருக்கும் இடையில் வைத்தான்... அவனின் அந்த சிறு புரிதல் உணர்வு அவளது கண்களில் மீண்டும் கண்ணீரை சுரக்கச் செய்தது...

"இது தான் எங்களோட மாப்பிள்ளையோட ஸ்பெசல் குணம்..." என்று சிலாகித்தவரை கண்டு அவனுக்கு அத்தனை நேரம் இருந்த இறுக்கம் மறைந்து சிரிப்பு வந்தது...

அவளுக்கோ பெரியதந்தையின் குரல் கேட்டு ஆச்சிரியமாய் போய்விட்டது... விழி விரிய அலைப்பேசியை பார்த்திருந்தாள்...

"உங்களுக்கு எல்லோரையும் மன்னிக்கிற மனப்பக்குவம் இருக்கு மாப்பிள்ளை... ஆனா இத்தனை வயசாகியும் இன்னமும் எனக்கு எல்லாம் அந்த குணம் வரலை..." என்றவரின் குரல் சற்று தணிந்தது...

"உங்களை எத்தனையோ முறை நான் மரியாதை இல்லாம நடத்தி இருக்கேன்... ஆனா அதை எல்லாம் மனசுல வச்சுக்காம நீங்க பேசியது எனக்கு ரொம்ப சந்தோசம் மாப்பிள்ளை... உங்க குணம் தெரியாம நான் தப்பா நடந்துக்கிட்டேன்... எங்க வீட்டு பொண்ணு மேல தப்பு இருந்தும் இன்னைக்கு அவளை போய் காப்பாத்தி கூட்டிட்டு வந்திருக்கீங்கன்னா உங்க நல்ல மனசை என்ன சொல்றதுன்னு எனக்கு தெரிலை... உங்க பெருந்தன்மையான குணத்துக்கு முன்னாடி என்னோட திமிர், அகம்பாவம் எல்லாம் ஒண்ணும் இல்லாம செத்து போச்சு மாப்பிள்ள... கைநிறைய பணம் இருந்தும், ஏவிய வேலை செய்ய ஆள்பலம் இருந்தும் எங்க பொண்ணை காப்பாத்த எங்களால முடியாம போச்சே... அப்பவே என்னோட பணத்திமிரும் சேர்ந்து செத்து போச்சு... பணத்தை விட மனுசனுக்கு குணம் தான் பெரிசுன்னு நீங்க நிரூபிச்சிட்டீங்க... இதிலேயே தெரியுது நீங்க எவ்வளவு நல்ல மனுசன்னு... இப்போ எனக்கு புரியுது தப்பு எல்லாம் எங்க பொண்ணு மேல தான்னு... எங்கே அந்த கழுதை...? அவக்கிட்ட ஃபோனை கொடுங்க மாப்பிள்ளை... அவக்கிட்ட நான் கொஞ்சம் பேசணும்..."

அவரின் பேச்சு அவனது மனதை நெகிழ்த்தி இருந்தது... அவ்வளவு பெரிய மனிதர் தன்னிடம் மன்னிப்பு கேட்டது அவனை வாயடைக்க செய்து இருந்தது...

"இங்கே தான் இருக்கா மாமா..." என்றவன் மேலே பேசாமல் மனைவியை பார்த்தான்...

வருணிதா பெரியப்பாவிடம் பேச ஆரம்பித்ததும் அவர் அவளை திட்டி அறிவுரை கூற அவள் 'சரி' என்ற வார்த்தையை தவிர வேறு எதுவும் பேசவில்லை...

கணவனை அவமதித்த பெரியப்பா அவனிடத்தில் மன்னிப்பு கேட்டது அவளது மனதை உருக்கி இருந்தது... அதற்கு காரணமான கணவனின் குணம் கண்டு அவளது மனம் பெருமிதம் அடைந்தது... அதனால் தான் என்னவோ பெரியப்பா திட்டியதற்காக அவள் முகம் சுளிக்கவில்லை...

பெரியப்பாவிடம் பேசிய விட்டு வைத்த அடுத்த நொடி கிருஷ்ணா அழைத்தான்... எடுத்து பேசியவளிடம் நலம் விசாரித்தவன் பின் தனது அக்காள் கணவனிடம்,

"மாமா இது தான் சாக்குன்னு அவளை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிருங்க... இனி எந்த காரணத்தை கொண்டும் அவளை விட்டுராதீங்க மாமா..."

"இல்லை கிருஷ்... இனி உங்க அக்கா என் கூடத்தான் இருந்தாகணும்... இருக்கணும்..." என்றான் அழுத்தமான குரலில் மைத்துனனுக்கு மட்டும் அல்லாது மனைவிக்கும் புரியும்படி...

மழையின் காரணமாக அவனது வீட்டிற்கு எப்போதும் போய் சேரும் நேரத்தை விட இன்று அதிக நேரம் பிடித்தது...

வீட்டு வாயிலில் அவன் காரை நிறுத்தியது தான் தாமதம்... சிட்டாக பறந்து வந்தாள் அவர்களது செல்ல மகள்...

மழையை கூட பொருட்படுத்தாது ஓடி வந்த மகளை கண்டு பதறி போனவளாய் வேகமாய் இறங்கி அவளை நோக்கி விரைந்த வருணிதா அவளை அப்படியே அள்ளி எடுத்து கொண்டு வீட்டை நோக்கி சென்றாள்...

அவளின் தாய்மை உணர்வை பார்த்து கொண்டே காரின் மறுபக்கம் இருந்து இறங்கியவன் மனதுக்கு அந்த காட்சி இதமாக இருந்தது... எத்தனை நாள் கற்பனையில் கண்ட காட்சி அது...

ஆனாலும் மகளை கண்டதும் அவள் கூறிய நன்றி நியாபகத்தில் வந்து அவனது அத்தனை நேர இதத்தை மறைய செய்து அவனது மனதை வாள் கொண்டு அறுத்தது...

'எல்லாம் இவளால் தான்...' என்று நினைத்தவனின் கைகள் காரின் கதவின் மீது தனது கோபத்தை காட்டியது...

"எத்தனை நேரம் மழை காத்தில் நிக்கிறது தேவா... சீக்கிரம் வாடா..." பார்வதி மகனை சத்தம் போட அவன் தன் நடையை விரைவுப்படுத்தினான்...

அங்கு வீட்டு வாசப்படி அருகே வருணிதா வர்ஷினியோடு நின்று இருக்க பார்வதி கையில் ஆரத்தி தட்டுடன் நின்று இருந்தார்...

'செத்து போனாலும் போவேனே தவிர உன் கூட வர மாட்டேன்னு இவ அடம்பிடிச்சது மட்டும் அம்மாவுக்கு தெரிஞ்சா இந்த தடப்புடல் வரவேற்பு இருக்குமா... இவளுக்கு இது ஒண்ணு தான் குறைச்சல்...' மனதுக்குள் அவன் நெருப்பாய் கனன்றான்... ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை...

மனைவியின் கையில் இருந்து மகளை வாங்கி கொண்டவன் அமைதியாய் நின்றான்...

பார்வதி ஆரத்தி சுற்றிய பின் இருவரும் உள்ளே சென்றனர்... இருவரும் எதுவும் பேசவில்லை...

அவன் தனது அறைக்கு உடை மாற்ற சென்றான்... மறந்தும் மனைவியை உடன் அழைக்கவில்லை... அவள் ஈர உடையுடன் அப்படியே நின்று இருந்தாள்...

பார்வதி அவளிடம் அவள் முன்பு வைத்து விட்டு சென்ற உடையை கையில் கொடுத்து தனது அறையில் சென்று மாற்றி கொண்டு வர சொன்னார்...

உடை மாற்றி கொண்டு வந்தவளிடத்தில் சுஜானா பேசி கொண்டு இருந்தாள்... அத்தையோடு சேர்ந்து வர்ஷனியும்

தாயிடம் வளவளத்து கொண்டு இருந்தது…

ஏற்கெனவே அங்கு வந்து அமர்ந்து இருந்த தேவானந்த் எல்லோரையும் பார்த்தபடி அமைதியாய் அமர்ந்து இருந்தான்… மனதுக்கு பாரமாய் இருந்த மாதிரியும், அதே சமயம் மனது லேசானது மாதிரியும் இருவகை உணர்வுகளை அவனது மனம் உணர்ந்தது…

மகளை மடியில் வைத்து கொண்டு உரையாடும் மனைவியை கண்டு அத்தனை பாந்தமாய் இருந்தது அவனுக்கு… இத்தனை வருடங்களில் இந்த காட்சியை ஒரு முறை கூட அவன் கண்டது இல்லை…

மனைவியின் கழுத்தை கட்டி கொண்டு அவளது நெஞ்சில் சுகமாய் தலை சாய்ந்து இருந்த மகளின் முகத்தில் இருந்த எல்லையில்லாத சந்தோசத்தை காண காண அவனுக்கும் அத்தனை சந்தோசமாய், நிம்மதியாய் இருந்தது…

அவர்களை பார்த்தபடி அமர்ந்து இருந்தவன் திடுமென எழுந்து, "அம்மா… நான் கிளம்பறேன்ம்மா…" என்க…

பார்வதி அவனை கேள்வி கேட்கும் முன் வர்ஷினி அவனிடம் ஓடி வந்து, "அப்பா… எங்கே போறீங்க…?" கலக்கத்துடன் கேட்டாள்…

அவளின் கலக்கம் அவனை பாதிக்க அவளை தூக்கி கைகளில் வைத்து கொண்டவன் அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டபடி,

"அப்பாவுக்கு கொஞ்சம் வேலை இருக்குடா… முடிச்சிட்டு ஈவினிங் வந்துருவேன்… வரும் போது அம்முக்கு என்ன வாங்கிட்டு வரணும்…?"

"நீங்க வந்துருவீங்க தானே…" சந்தேகமாய் தன்னை பார்த்த மகளை துயரத்துடன் அணைத்து கொண்டவன்,

"ப்ராமிசாடா… அப்பா உன்னை பார்க்க வந்துருவேன்டா…" அவன் சொன்னதில் நிம்மதி அடைந்த அந்த சின்னச்சிட்டு தனக்கு வேண்டியதை பட்டியலிட்டு சொல்ல அதை

கவனமாய் கேட்டு மனதில் குறித்து கொண்டு உணவு உண்ண சொன்ன அன்னையிடம்,

"பசிக்கலைம்மா..." என்று மறுத்துவிட்டு மகளிடமும் அன்னையிடமும் விடைப்பெற்று வெளியில் வந்தவன் காரை கிளப்பி கொண்டு சென்றுவிட்டான்...

வலுக்கட்டாயமாய் தன்னை அழைத்து கொண்டு வந்த கணவன் தன்னை கண்டு கொள்ளாது செல்வதை கண்டு வருணிதாவிற்கு கண்களை கரித்தது...

அதற்குள் மகள் அவளை அழைக்க அவளுக்காக மனதின் சுணக்கத்தை தள்ளி வைத்தவள் அவளுடன் பேச ஆரம்பித்தாள்...

"சுஜி... நீ வர்ஷூவை கூட்டிட்டு போய் அன்னைக்கு புது ஃபிஷ் வாங்கினோமே அதை காட்டு..." பார்வதி மகளிடம் சொல்ல...

"அம்மா... நீங்களும் வாங்களேன்..." என்று அன்னையின் கையை பிடித்து இழுத்தாள் சின்னவள்...

"அம்மா இங்கேயே இருக்கட்டும்... நீ போய் பாருடா..." பாட்டியின் வார்த்தையில் சரி என்று தலையாட்டியவள் அத்தையுடன் சென்றாள்...

மாமியார் தன்னிடம் தனித்து பேச விரும்புவதை உணர்ந்தவளாய் அமைதியாய் அமர்ந்து இருந்தாள் வருணிதா...

"வருணி... எப்படிம்மா இருக்க...? நீ இல்லாம வீடு வீடா இல்லைம்மா... ஏதோ பேருக்கு சாப்பிட்டுட்டு மனசுல பாரத்தோட வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்... தேவா எந்த தப்பு பண்ணி இருந்தாலும் இதுக்கு மேல அவனுக்கு தண்டனை கொடுத்துடாதேம்மா... அவன் தப்பை மன்னிச்சு அவனை ஏத்துக்க வருணி... இந்த எட்டு வருசமா தனது ஆசாபாசங்களை, உணர்வுகளை அடக்கிட்டு சாமியார் மாதிரி அவன் வாழ்றதை பார்க்கும் போது எனக்கு மனசு ரொம்ப வலிக்குதும்மா... அவன் மட்டுமல்ல நீயும் தான்

அவனை பிரிஞ்சு எத்தனை வேதனைப்பட்டு இருக்கேன்னு உன்னை பார்க்கும் போது தெரியுதே..." என்றவரின் பார்வை மருமகளின் தோற்றத்தை அளவிட்டது...

கறுத்து, மெலிந்து, கண்கள் இரண்டிலும் கருவளையம் விழுந்து, கண்களில் உயிர்ப்பு இழந்து எதையோ பறிகொடுத்தார் போன்று இருந்த அவளது தோற்றம் அவருக்கு அத்தனை வருத்தமாய் இருந்தது... மருமகளின் நிலையை பார்க்கும் போது மகனின் நிலை பரவாயில்லை என்றே அவருக்கு தோன்றியது...

ஆணான அவன் மனதிற்குள் மருகினாலும் வெளியில் எதையும் காட்டி கொள்வதில்லை... அவனது தோற்றத்திலும் சரி, முகத்திலும் சரி எந்நேரமும் சோகம் இருந்தது இல்லை... பெண் அவளை போல் அவன் உடலை வருத்தி கொண்டது இல்லை...

வாஞ்சையுடன் அவளின் கன்னத்தை வருடி கொடுத்தவர், "இந்த வேதனை இத்தனை வருசமா எதுக்கும்மா...? நம்மளோட ஆயுள் இன்னும் எத்தனை வருசம் இருக்கும்...? ஒரு முப்பது வருசம் உயிரோட இருப்போமா...? அதை சந்தோசமா வாழாம இப்படி வேதனையுடன் ஏன் வாழணும் வருணி...?" என்றவர்,

"இந்த அத்தைக்காக அவனை மன்னிச்சு ஏத்துக்க வருணிம்மா... நாப்பது வயசுல அவன் தனிமரமா இருக்கிறதை பார்க்கும் போது ரொம்ப வேதனையா இருக்கு..." அவளின் கையை பற்றி கொண்டு,

"இதை உன் காலா நினைச்சு பிடிச்சு கேட்கிறேன் வருணி... எனக்காக அவனை மன்னிச்சிரும்மா..."

அவரின் வார்த்தையில் மனம் பதறி போனவள், "என்ன அத்தை இது...? நீங்க போய் என் கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிட்டு... ஏற்கெனவே குற்றவுணர்ச்சியில் நான் செத்துக்கிட்டு இருக்கேன்... இதில் நீங்க வேறு மன்னிப்பு கேட்டு என்னை கஷ்டப்படுத்தறீங்களே... உங்க எல்லாரையும் விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன்...

நீங்க தான் அத்தை என்னை மன்னிக்கணும்..." என்றவள் எழுந்து அவரது காலில் விழுந்தாள்...

"வருணி... நீயும் தேவாவும் சந்தோசமா இருந்தா போதும்... அது தான் எனக்கு வேணும்..." என்றவர் அவளை அணைத்து கொண்டார்...

"வருணி... சாப்பிட போகலாம் வா..." அவளை அழைத்து கொண்டு உணவு மேசைக்கு வந்தவர் மகள் மற்றும் கணவரை அழைத்தார்...

"பாட்டி என்னை நீங்க கூப்பிடலை..." என்று கோபமாய் முகத்தை தூக்கி வைத்து கொண்டு அத்தையுடன் வந்தாள் வர்ஷினி...

"அடடே... என் செல்லத்தை தனியா கூப்பிடணுமா...? கூப்பிட்டா போச்சு... வர்ஷூ குட்டி வாங்க..." பார்வதி இரு கைகளை நீட்ட வர்ஷினி அவரின் கைகளுக்குள் பாந்தமாய் அடங்கி கொண்டாள்...

பேத்தியை நாற்காலியில் அமர வைத்து அவர் உணவு ஊட்ட அதை பார்த்த வருணிதாவின் கண்கள் கலங்கியது...

"சாப்பிடும்மா வருணி..." சிவநேசன் மருமகளை பார்த்து சொல்ல...

அதில் கண்களை துடைத்து கொண்டு உணவை வாயில் வைத்தாள் அவள்... ஆனால் கணவன் சாப்பிடாமல் சென்ற உணவு அவளுக்கு கொஞ்சமும் தொண்டையில் இறங்காமல் சதி செய்தது...

'இத்தனை நாள் அவன் சாப்பிட்டானா இல்லையான்னு கூட நீ பார்க்கலை... இப்போ மட்டும் என்ன புதுசா அக்கறை...' அவளது மனசாட்சி இடித்துரைத்தது...

பேருக்கு ஒரு இட்லியை கொறித்துவிட்டு எழுந்துவிட்டாள்...

சுஜானாவும் மருத்துவமனை சென்றுவிட மாமியாருக்கு சமையலில் உதவி செய்து கொண்டே மகளிடமும் பேசி

கொண்டு சமையலறையிலேயே பெரும் நேரத்தை செலவிட்டாள் வருணிதா...

ஏனோ தங்களது அறைக்கு செல்ல அவளுக்கு தயக்கமாய் இருந்தது... கணவன் அழைக்காதது கூட ஒரு காரணமாய் இருக்கலாம்...

வர்ஷினிக்கு மதியம் தூங்கும் பழக்கம் இல்லாததால் அறைக்கு செல்ல வேண்டிய நிர்பந்தம் இல்லாமல் அவள் தப்பித்தாள்...

மதிய உணவு உண்ண தேவானந்த் வரவில்லை... ஒரேடியாய் இரவு வருவதாக கூறிவிட்டான்... அதை கேட்டு அவளுக்கு சுருக்கென்று வலித்தது...

இரவு ஏழு மணி வாக்கில் சுஜானா தான் முதலில் வந்தாள்...

"அம்மா... எங்க ஹாஸ்பிட்டல்ல நாளையில் இருந்து வெள்ளம் தேங்கி இருக்கிற பகுதிகளுக்கு கேம்ப் போறோம்மா... அதனால இன்னும் பத்து, பதினைந்து நாளைக்கு நான் கேம்ப்ல தான் தங்கி இருக்க போறேன்... பெய்யிற மழையில வீட்டுக்கு வந்துட்டு போயிட்டு இருக்க முடியாது..." வந்தவுடனே அப்படி சொன்னவளை கண்டு பார்வதி ஒன்றும் பேசாது சம்மதித்தார்...

மழையின் கோரத்தாண்டவத்தை அவரும் தொலைக்காட்சியில் பார்த்து கொண்டு தானே இருக்கிறார்...

சுமார் எட்டு மணி வாக்கில் தேவானந்த் வந்து சேர்ந்தான்...

தனக்கு பிடித்தமானவற்றை வாங்கி வந்த தந்தையின் கழுத்தை கட்டி கொண்ட வர்ஷினி அவனின் கன்னத்தில் முத்தமிட்டு,

"தேங்க்ஸ்..." என்க...

அவனையும் அறியாது அவனது கண்கள் மனைவியிடத்தில் சென்று மீண்டது... அவனது பார்வை உணர்ந்தவளாய் அவள் தலையை குனிந்து கொண்டாள்...

இரவு உணவு உண்ணும் போது தங்கை மருத்துவமுகாம் செல்வது அறிந்த தேவானந்த், "நானும் என் பிரெண்ட்ஸ்ங்க நாலைஞ்சு பேர் சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஹெல்ப் பண்ணலாம்ன்னு இருக்கோம்... நீயும் எங்களோட வந்தின்னா எங்களுக்கும் உதவியா இருக்கும் சுஜி... உன் சேஃப்டி பத்தி நாங்களும் கவலைப்பட வேண்டியது இல்லை..."

"ஓகேண்ணா... உங்க கூடவே வர்றேன்... யார் கூட போன என்ன... எனக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வீஸ் பண்ணணும் அவ்வளவு தான்..." என்றாள் சுஜானா அண்ணனுக்கு சம்மதமாக...

சிவநேசனும், பார்வதியும் தங்கள் மக்களை பெருமிதமாக பார்த்தனர்...

சுயநலம் இல்லாமல் அடுத்தவர்களுக்காக உதவ எண்ணும் அண்ணன், தங்கையை கண்டு வருணிதா சந்தோசம் அடைந்தாலும் மனதுக்குள் குற்றவுணர்ச்சியில் குமைந்தாள்... தனக்கு மட்டும் ஏன் இந்த மாதிரி தன்னலம் இல்லா மனம் இல்லை என்று...

உணவு உண்டு முடித்து அனைவரும் உறங்க செல்லும் போது மின்சாரம் நின்று போனது...

"நினைச்சேன் என்னடா இன்னும் கரெண்ட் போகலையேன்னு..." என்று முணுமுணுத்தார் பார்வதி...

அதற்குள் ஜெனரேட்டர் வேலை செய்ய ஆரம்பிக்க தடைப்பட்ட மின்சாரம் மீண்டும் வந்தது...

அனைவரும் அவரவர் அறைக்குள் சென்றுவிட தேவானந்த், வருணிதா, வர்ஷினி மூவரும் மட்டுமே வரவேற்பறையில் இருந்தனர்...

பெரியவர்கள் இருவருமே அறைக்கு செல்ல எண்ணி தயங்கி கொண்டு அங்கேயே அமர்ந்து இருக்க சின்னவள் உறக்க கலக்கத்தில் கண்களை கசக்க ஆரம்பித்தாள்...

"அம்மா... தூக்கம் வருது..." என்ற மகளை எங்கு அழைத்து செல்வது என்று எண்ணி முழித்து கொண்டு இருந்த வருணிதாவை நோக்கிய தேவானந்த்,

"அதான் தூக்கம் வருதுன்னு சொல்றால்ல... ரூமுக்கு கூட்டிட்டு போய் படுக்க வைக்க வேண்டியது தானே..." என்று மனைவியிடம் சிடுசிடுத்தான்...

"நீங்களும் வாங்கப்பா..." வர்ஷினி அவனின் கையை பிடித்து இழுத்தாள்...

வேறுவழியின்றி மகளுடன் அவனும் சென்றான்...

ஏழு வருடங்களுக்கு முன் அந்த அறை எப்படி இருந்ததோ அதே போல் இன்றும் எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் சாதாரணமாய் இருந்தது... வீட்டின் எல்லா பகுதியையும் மாற்றி அமைத்து இருந்தவன் தங்களது அறையை மட்டும் மாற்றவில்லை... அதே அறையில் அவன் மனதோடு அவளுடன் வாழ்ந்து கொண்டு இருந்ததாலோ என்னமோ அவன் அதை மாற்றியமைக்க வேண்டும் என்று ஒருபோதும் எண்ணியது இல்லை...

அது அவளுக்கும் புரிந்தது... புரிந்த உணர்வுகள் அவளை கொல்லாமல் கொன்றது... இதே அறையில் எத்தனை சந்தோசமாய் அவனுடன் வாழ்ந்து இருப்பாள்... அதே நேரம் இதே அறையில் வாழ்க்கையில் தோற்று போய் அவனிடம் இருந்து விலகி போனதும் அவளுக்கு நியாபகத்தில் வந்தது...

கண்களில் கண்ணீர் கரகரவென வழிந்தது... மகளுக்கு தெரியாமல் துடைத்து கொண்டாள்...

மனைவியின் முகத்தில் தோன்றிய உணர்வுகளை அவன் உணர்ந்தாலும் ஆறுதல் சொல்லும் மனநிலையில் அவன் இல்லை... ஏனெனில் அவனே ஆறுதல் தேடும் மனநிலையில் இருந்தான்... அவனின் ஒரே ஆறுதல் அவனது மனையாள் தான்... ஆனால் அந்த ஆறுதலை

அவளிடத்தில் தேட இன்று ஏனோ அவனுக்கு விருப்பமில்லை...

"அப்பா, அம்மா இங்கே வந்து படுங்க..." கட்டிலின் நடுவில் படுத்து கொண்டு தனது இருபக்கமும் கை காட்டி வர்ஷினி கூற வேறுவழியின்றி இருவரும் அவளுக்கு இருபக்கமும் படுத்தனர்...

தந்தையும், தாயும் இருபக்கமும் படுக்க நடுவில் படுத்து இருந்த வர்ஷினியின் முகத்தில் அந்த வானத்தை வசப்படுத்திய சந்தோசம் ஒளிர்ந்தது...

அவள் தனது பிஞ்சு கைகளால் தாய், தந்தை கழுத்தை கட்டி கொள்ள தேவானந்த், வருணிதா இருவரின் முகமும் மிக அருகில் வந்தது...

இருவரின் பார்வையும் ஒன்றை ஒன்று கவ்வி இருந்தது... வெகுநாட்கள் கழித்து மனைவியின் முகத்தை அருகில் பார்த்தவன் மனதில் ஏதேதோ எண்ணங்கள் வண்ண ஊர்வலமாய் சென்றது... அதுவும் அருகில் இருந்த அவளது துடிக்கும் இதழ்கள் அவனை கவிதை எழுத சொல்லி அழைப்பு விடுத்தது...

நடுவில் இருந்த மகளை உணர்ந்தவனாய் அவன் தனது எண்ணங்களுக்கு கடிவாளமிட்டு கொண்டான்... வருணிதாவோ மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை... அப்படி பார்த்தால் அவள் வசம் அவள் இருக்க போவதில்லை... அந்த நொடி அவனிடத்தில் அவள் உருகி போவது நிஜம்...

"அம்மா... அதோ இருக்கு பாருங்க டெடி பியர்... நீங்க இங்கே இல்லாதப்போ அதை தான் கட்டி பிடிச்சுப்பேன்..." என்ற மகளின் வார்த்தையில் அவன் சுடுநீர் பட்டது போல் துடித்து போய் நிமிர்ந்தான்...

அத்தனை நேர இதம் மறைந்தது அவனுள்... அவளும் திகைப்பாய் மகளை பார்த்தாள்...

"அப்பா... அதே மாதிரி அம்மா வீட்டிலும் ஒரு டெடி பியர் இருக்கு... அதை நீங்கன்னு நினைச்சு கட்டிப் பிடிச்சுக்குவேன்..."

இத்தனை நாள் மகள் தன்னை ஒரு புறமும், டெடி பியரை மறுபுறமும் அணைத்து கொண்டு உறங்கியதன் ரகசியம் அந்த தாய், தகப்பனுக்கு இப்போது தான் புரிந்தது... புரிந்த ரகசியமோ அத்தனை உவகையாக இல்லை என்பது கசப்பான உண்மை...

அந்த பிஞ்சு மனதில் தான் எத்தனை ஏக்கங்கள்... மகளை நினைத்து மனதுக்குள் கண்ணீர் விட்டவனாய் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான் அவன்...

அவளோ மனதுக்குள் இறுகி போயிருந்தாள்... மகளின் மனநிலை அவளை வாயடைக்க செய்து இருந்தது...

தூக்க கலக்கத்தில் ஏதேதோ பேசி கொண்டு இருந்த வர்ஷினி இறுதியில் உற்சாக மிகுதியில், "நீங்க ரெண்டு பேரும் சேரவே மாட்டீங்களோன்னு பயந்து போய் நான் தான் பாட்டி கிட்ட சொல்லி கிருஷ் மாமாவுக்கும், சுஜி அத்தைக்கும் மேரேஜ் பண்ணி வைக்க சொன்னேன்... அப்போ எப்படியும் நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்து தானே ஆகணும்... எப்படி என் ஐடியா...?"

என்ன இருந்தாலும் சின்னக்குழந்தைகள் சின்ன குழந்தைகள் தான்... அவர்களது மனதில் எந்த ஒரு ரகசியமும் தங்காது... நல்லதோ கெட்டதோ எதையும் மறையாது கூறி விடும் வெள்ளை மனம் கொண்டவர்கள் குழந்தைகள்...

மகளின் வார்த்தையில் மனம் உடைந்து போயினர் அந்த பெற்றோர்...

அதிர்ச்சியில் அவள் வாயடைத்து நிற்க, அவனோ சீற்றத்துடன் அவளை பார்த்தான்...

இன்று காலையில் இருந்து அவன் அவளிடத்தில் கோபப்பட்டு கொண்டு இருக்கிறான் தான்... ஆனால் இந்த

சீற்றம் அதை எல்லாம் விட பல மடங்கு அதிகமாய் இருந்தது...

கணவனாய் மனைவியின் தவறுகளை மன்னித்த அவனால், மகளுக்கு தந்தையாய் தனது மனைவியின் தவறை மன்னிக்க முடியவில்லை...

அவனின் ஆத்திரம் கண்டு உள்ளம் குளிரெடுக்க உடலும், மனமும் நடுங்க அவனை அச்சத்துடன் பார்த்தாள் அவனது மனையாள்...

உறையும்...

மகள் கணவனிடத்தில் நன்றி என்ற ஒரு வார்த்தை கூறியதற்கே அவன் தன்னை உண்டு இல்லை என்று ஒருவழி பண்ணிவிட்டான்... இதில் வர்ஷினி வேறு இப்படி கூறவும் வருணிதாவால் அந்த அதிர்ச்சியை தாங்க முடியாதது மட்டுமல்ல கணவனின் கோபத்தை எண்ணி மனதுக்குள் பயத்துடன் அமர்ந்து இருந்தாள்...

அவளின் பயம் சரி என்பது போல் தேவானந்த் அவளை உறுத்து விழித்து கொண்டு இருந்தான்...

பெற்றோரின் மனநிலை அறியாத அந்த இளங்கன்றோ அது பாட்டுக்கு பேசி கொண்டு சென்றது...

"அதுக்கு முன்னாடியே நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்துட்டீங்க... ஐயம் வெரி ஹேப்பி..." என்றவள் இருவரின் கழுத்தையும் தனது கைகளால் வளைத்து பிடித்து தனது தோள்வளைவில் வைத்து கொள்ள அதில் தேவானந்த், வருணிதா இருவரின் தலையும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதியது...

வெகு அருகில் இருந்த மனைவியின் முகம் இப்போது அவனுக்கு எந்தவித மயக்கத்தையும் கொடுக்கவில்லை... மாறாக அது கோபத்தையே விளைவித்தது அவனுக்கு...

அவளோ எந்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாமல் பயத்தில் உறைந்து போயிருந்தாள்...

"அப்பா, அம்மா... இனிமேல் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து தான் என்னை ஸ்கூலில் விட வரணும்... என் பிரெண்ட் சொல்றா நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டு பிரிஞ்சி இருக்கிறதா... ஆனா நான் சொன்னேன் இல்லை எங்கம்மா, அப்பா சண்டையே போட்டது இல்லை... அப்பாவுக்கு அம்மாவை ரொம்ப பிடிக்கும்... அம்மாவுக்கும் அப்பாவை ரொம்ப பிடிக்கும்ன்னு..." என்றவள் இருவரின் முகத்தையும் பார்த்து,

"அப்படித்தானே அப்பா...", "அப்படித்தானேம்மா..."

மகளின் வார்த்தையில் இருவரின் கண்களும் ஒருசேர கலங்கியது...

அவள் கூறியது முற்றிலும் உண்மை அல்லவா... அதை அவர்களால் ஒருபோதும் மறுக்க முடியாதே...

'வதுவை எனக்கு பிடிக்காமல் இருக்குமா...? அவள் என் உயிர் அல்லவா...' அந்த நிலையிலும் அவனது மனம் மனைவியின் மீதான காதலை கைவிடாமல் அப்படி தான் யோசித்தது...

'தேவ்வை தவிர உலகத்தில் வேறு யாரை எனக்கு பிடிக்கும்... என் தேவ் என் சுவாசம் அல்லவா...' மனதுக்குள் மருகியவள் தனது காதலை உரக்க கணவனிடம் சொல்ல முடியாமல் துயரத்துடன் அதை தனக்குள் விழுங்கி கொண்டாள்...

மகள் தங்களை பார்த்து கொண்டு இருப்பதை உணர்ந்து, "ஆமாம் அம்மு..." என்று இருவரும் ஒருசேர கூறினர்...

கணவனின் குரலில் அவளின் முகம் மலர்ந்தது... எங்கே தன் மீதுள்ள கோபத்தில் தன்னை வெறுத்துவிடுவானோ என்று பயந்தவளுக்கு அவனது வார்த்தை சந்தோசத்தை அளித்தது... அவனது கோபத்தை கூட அவள் தாங்கி கொள்வாள்... ஆனால் என்றுமே அவனது வெறுப்பை மட்டும் அவளால் தாங்கி கொள்ள முடியாது...

அதே போல் அவளது வார்த்தையில் அவன் சட்டென்று அவளை நிமிர்ந்து பார்த்தான்... பின் விரக்தியாய் தனக்குள் சிரித்து கொண்டவனது முகம் அத்தனை வேதனையை காட்டியது...

இத்தனை நாள் அவனை பாராமல் இருந்ததால் அவனது வேதனையை அவள் கண்கூடாக கண்டது இல்லை... ஆனால் இப்போது நேரில் பார்த்துவிட்டு யாரோ ஒருத்தி போல் அவளால் இருக்க முடியவில்லை...

அவனது கை மீது தனது கரத்தை வைத்தவள், "சாரி தேவ்..." என்று கெஞ்சுதலாய் சொன்னவளை கண்டு இதுவரை

அடங்கி இருந்த அவனது ஆத்திரம் எல்லாம் மீண்டும் திரும்பலானது...

வெடுக்கென்று அவளது பிடியில் இருந்து தனது கரத்தை உருவி கொண்டவன் ஒன்றும் பேசாது மகளை பார்த்தான்...

"அம்முவுக்கு தூக்கம் வரலையா...?"

"ம்... வருது..." என்று சொன்ன சின்னவள், "என் பிரெண்ட் கிட்ட கட்டாயம் உங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு போய் காண்பிக்கணும்... பாரு எங்கப்பா, அம்மா சண்டை போடலைன்னு... இந்த தடவை பேரண்ட்ஸ் மீட்டிங்குக்கு நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வருவீங்க தானே... அதே மாதிரி ஸ்கூல் டேக்கும்..."

"நிச்சயம் நாங்க வருவோம் அம்மு..." என்று அவன் மகளிடம் கூறினான்... வருணிதா அமைதியாய் தலையாட்டினாள் மகளை பார்த்து...

"சரி அம்மு... இப்பவாவது தூங்கலாமா...?"

"ம்... அப்பா ஒரு கதை சொல்லுங்களேன்..."

"இப்ப போய் கதையா...?" என்றவனின் கண்கள் கடிகாரத்தை பார்த்தது... அது மணி பதினொன்றை காட்டியது...

"இப்பத்தானே தூக்கம் வருது... அப்போ இப்பத்தான் கதை கேட்கணும்..." மகள் பிடிவாதம் பிடிக்க...

"அம்மு... பிடிவாதம் பிடிக்காம கண்ணை மூடிட்டு தூங்கு..." வருணிதா மகளை அதட்ட...

"அப்பா... பாருங்கப்பா அம்மாவை..." தந்தையிடம் செல்லமாய் சிணுங்கினாள் அவள்...

வருணிதா மகளை அதிசயமாய் பார்த்தாள்... எப்போதுமே வர்ஷினி இந்த மாதிரி அடம்பிடிப்பதோ, இல்லை சிணுங்குவதோ கிடையாது... அவளுக்கு ஏற்றார் போன்று சமத்தாய், அறிவுப்பூர்வமாய் நடந்து கொள்ளும் குழந்தை...

முதன்முறையாய் சிறு பிள்ளைகளுக்கே உண்டான பிடிவாதம், செல்லச் சிணுங்கல், கொஞ்சல் எல்லாம் வர்ஷினியிடம் கண்டவளுக்கு அதிசயமாய், அதே சமயம் திகைப்பாய் இருந்தது...

'ரொம்ப மெச்சூர்டாக இருக்கிறாள்', 'என் பெண் சமத்து பெண்' என்று தான் எண்ணியது முற்றிலும் தவறோ என்ற எண்ணம் தோன்றி அவளது மனதை அலைக்கழித்தது...

தனது மனம் கஷ்டப்பட்டு விடக்கூடாது என்பதற்காக மகள் தனது மன ஏக்கங்களை, ஆசைகளை மறைத்து கொண்டு தனக்காக வாழ்ந்து தன்னை அன்னையாய் மடி தாங்கி இருப்பதை உணர்ந்தவள் மனதில் பெரும் போராட்டம் எழுந்தது...

'கடவுளே... ஏன் என் புத்தி இப்படி போனது...? என்னால் எத்தனை பேருக்கு தான் துன்பம்...? கடைசியில் என் மகளையும் துன்பப்படுத்தி இருக்கிறேனே... இதுக்கு தானா இவளை தவம் இருந்து பெத்து எடுத்தேன்... இவளை இப்படி கஷ்டப்படுத்துவதற்காகவா இவளை கண்மணி போல் பாதுகாத்து பெற்றேன்...'

மகள் தனது குழந்தைத்தனத்தை முற்றிலும் தொலைத்து தனக்காக அவளின் ஆசைகளை மனதில் புதைத்து கொண்டு வாழ்ந்து இருப்பதை உணர்ந்தவளுக்கு கண்களில் கண்ணீர் பொங்கியது...

அன்னையின் கண்ணீர் மகளை பாதித்ததோ என்னவோ...

"அம்மா அழாதீங்க... எனக்கு கதை வேண்டாம்... நான் சமத்தா தூங்குறேன்..." என்ற வர்ஷினி அன்னையின் கழுத்தை கட்டி கொண்டு படுத்து கொண்டாள்...

தாய் வேதனை அடைய கூடாது என்பதற்காக தன்னை மாற்றி கொள்ளும் மகளை கண்டு தேவானந்த்திற்கு கண்ணீர் சுரந்தது...

'என் மகள் என்னை போல் இருக்கிறாள்...' என்று மனம் பெருமிதமாக நினைத்தாலும், இன்னொரு பக்கம் சிறு

குழந்தை பெரியவர்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றி கொள்வது ஆரோக்கியமான விசயமல்ல என்பதை உணர்ந்தவனுக்கு மனம் வலித்தது...

"நீ வா அம்மு... நான் உனக்கு கதை சொல்லுறேன்..." அவன் மகளை தன்னிடம் அழைக்க... மகளோ அன்னையை கேள்வியாய் பார்த்தாள்...

"ம்... போடா..." வருணிதா சம்மதமாய் சொன்னதும் சின்னவள் சந்தோசத்துடன் தந்தையின் பக்கம் வந்தாள்...

தேவானந்த் மகளுக்கு கதை சொல்ல ஆரம்பித்தான்...

பெற்றோர் இருவரின் மீதும் காலை போட்டு கொண்டு கதை கேட்ட வர்ஷினி அடுத்த பத்து நிமிடத்தில் தூங்கியும் போனாள்...

அவள் நன்கு உறங்கியதும் தேவானந்த் மனைவியை பார்த்தான்... அவளும் அவனை தான் பார்த்து கொண்டு இருந்தாள்...

"உன் கிட்ட நான் பேசணும்... என் கூட வா..." என்றவனது முகம் அத்தனை நேரம் இருந்த இளக்கத்தை துறந்து இறுகி போயிருந்தது...

அவன் அழைப்பை அவளால் தட்ட முடியவில்லை... நிச்சயம் மகளின் நிலைக்கு தன்னிடத்தில் கோபப்பட போகிறான் என்பதை அவள் நன்கு உணர்ந்து இருந்தாள்...

அவனது வெறுப்பிற்கு அவனது கோபம் எவ்வளவோ பரவாயில்லை என்றே நினைத்தாள்... அவன் அடித்தால் கூட வாங்கி கொள்வதற்கு தயாராக இருந்தாள்...

அறையின் பக்கவாட்டில் இருந்த கதவை அவன் திறந்து கொண்டு செல்ல அவனை பின்தொடர்ந்து சென்றவள் அந்த அறையின் தோற்றத்தை கண்டு திகைத்து போனாள்...

அவள் உள்ளே நுழைந்ததும் கதவை தாளிடாமல் வெறுமனே சாத்தி வைத்தவன் அவளை கூர்மையாக

அளவிட்டான்... அவளின் முகத்தில் இருந்த உணர்வுகளை அவனால் படிக்க முடிந்தது...

குழந்தை பிறப்பதற்கு முன்னரே குழந்தை பிறந்தால் தங்களது அறையில் என்ன என்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று இருவரும் ஒருநாள் பேசும் போது,

"இந்த ரூம் அப்படியே இருக்கட்டும் வது... நாம இதை யூஸ் பண்ணிக்குவோம்... பசங்களுக்கு தனியா ஒரு ரூம் கட்டிக்கலாம்..." அவன் கூறிய போது அதை மறுத்த வருணிதா,

"பிள்ளைங்க நம்ம கூட தான் வளரணும் தேவ்... அவங்களை தனியா எல்லாம் படுக்க வைக்க கூடாது... அது பாரின் கல்ச்சருக்கு சரி... நம்ம கல்சருக்கு அது ஒத்து வராது..."

அவள் சொன்னதை கேட்டு அவன் ஆச்சிரியமாக பார்த்தாலும் சரி என்று சம்மதித்தான்...

"ஆனா... ஆனா..." என்று அவள் அவன் சட்டை பொத்தானை உருட்டியபடி இழுக்க...

அவளது தயக்கம் அவனுக்கு எதையோ உணர்த்த, "ஆனா..." கேலியாய் கேட்டவனை கண்டு,

"ரூம்மை ஒட்டினாப்பல நமக்குன்னு சின்னதா ஒரு ரூம் கட்டணும் தேவ்..." அதை அவள் சொல்லி முடிக்கும் முன் அவளது முகம் அப்படி சிவந்து விட்டது...

அவளின் முகச்சிவப்பு அதன் காரணத்தை அவனுக்கு உணர்த்திவிட, "சின்ன ரூம் எதுக்கு...? சின்ன வீட்டுக்கா...?" குறும்பு குரலில் கேட்டவனை முறைத்தவள்,

"நமக்குன்னு நான் சொன்னது உங்க காதுல விழலையா... ஓ... அய்யாவுக்கு சின்ன வீடு வேற கேட்குதோ...?"

"இருந்தா நல்லா இருக்கும்ல பேபி... நீ இல்லாதப்போ அது யூஸ்சாகும்ல..." கண்சிமிட்டி சிரித்தவனை கண்டு கோபம் கொண்டு தலையணையால் அவள் அவனை மொத்த,

அவனோ தனது கரங்களால் அவளை அள்ளி எடுத்து கொண்டு தனது இதழ்களால் சமாதானப்படுத்த துவங்கினான்... அதில் கோபம் குறைந்து அவனது கரத்தில் பாந்தமாய் அவள் அடங்கினாள்...

இருவருமே அன்றைய நினைவின் தாக்கத்தில் கட்டுண்டு அமைதியாய் நின்று இருந்தனர்...

"க்கும்..." அவன் தான் முதலில் அமைதியை கலைத்தது...

அதில் நினைவு கலைந்தவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"கடைசிவரை உன் முடிவில் நீ உறுதியா இருந்துட்ட இல்ல..." அவனது குற்றம்சாட்டும் பார்வையை தாங்க முடியாது தலை கவிழ்ந்தாள் அவள்...

"நீயா தான் என்னை தேடி வரணும்ன்னு உன் கிட்ட வீம்பா சொல்லிக்கிட்டு வந்தேன்... அந்த வீம்பு எல்லாம் உன் உயிர்க்கு ஒரு ஆபத்துன்னு தெரிஞ்சதும் காணாம போய் உனக்கு ஒண்ணும் ஆகிற கூடாது என்னுயிர் துடிக்க நான் ஓடி வந்தேன் பாரு அதுக்கு நீ நல்ல கைம்மாறு செஞ்சுட்ட..." என்று கோபமாய் இரைந்தவனை தயக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் அவள்...

"அன்னைக்கும் என் கூட வந்தா செத்து போயிருவேன்னு சொன்ன... அப்பவும் நீ உயிரோட இருந்தா போதும்ன்னு தான் நான் உன்னை விட்டு விலகி வந்தேன்... ஆனா இப்பவும் அதே மாதிரி தான் சொல்ற... உயிர் போனாலும் உன் கூட வர மாட்டேன்னு... அப்பவும் இப்பவும் ஏண்டி ஒரே மாதிரி பிடிவாதம் பிடிக்கிற... இப்ப உன் பேச்சை கேட்டு நான் உன்னை விட்டுட்டு வந்து இருந்தா என் பொண்ணு என்னை மன்னிச்சிருக்க மாட்டாள்..."

"உனக்கு உன் பக்க நியாயம், உன் நலம், உன் மனசு இது மட்டும் தான் முக்கியம்... அடுத்தவங்களை பத்தி கொஞ்சமும் யோசிக்கிறது இல்லை... எப்போ இருந்துடி நீ இப்படி ஒரு சுயநலப் பேயா மாறி போன...? உன் கிட்ட இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை... உன்னோட

சுயநலத்தால பாதிக்கப்பட்டது நம்ம குழந்தை தான்... அவ பேசுறது எல்லாத்தையும் கேட்டுட்டு தானே இருந்த... நாம பிரிஞ்சு வாழ்றது அந்த பிஞ்சு மனசில் எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தி இருக்குன்னு பாரு... இப்படியே அவ வளர்ந்தா அவளோட இயல்பான குணம் மாறி போய் மன அழுத்தம் அதிகமாகி கடைசியில் அது அவளோட வாழ்க்கையை தான் பாதிக்கும்..."

"அந்த மாதிரி அவள் பாதிக்கப்படுறதை நான் விரும்பலை... நீ எனக்கு தான் நல்ல மனைவியா இல்லை... அவளுக்காவது நல்ல தாயா இருப்பேன்னு நம்பறேன்..." என்றவன் தனது உணர்வுகளை அடக்கும் பொருட்டு கண்களை மூடி திறந்தான்...

அவனது வார்த்தைகளின் அர்த்தம் அவளுக்கு புரியாமல் இல்லை... ஆனால் என்ன செய்து தனது பாவத்தை கழிப்பது என்று தெரியாமல் அவள் திக்பிரம்மை பிடித்து நின்று இருந்தாள்...

"அதே மாதிரி இனி மேல் அவள் முன்னாடி நீ ஒரு சொட்டு கண்ணீர் விட கூடாது... உன்னோட கண்ணீருக்காக அம்மு தன்னோட இயல்பை மாத்திக்கிட்டு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு போறதை இனியும் என்னால் சகிச்சுக்க முடியாது... அவ சின்னக்குழந்தை... சிரிக்கும் போது சிரிக்கட்டும், அழும் போது அழட்டும், அடம் பிடிக்கும் போது அடம் பிடிக்கட்டும்... இனிமேல் நீ எந்த காரணம் கொண்டும் அவளின் உணர்வுகளை கட்டுப்படுத்த கூடாது... அப்படி அவளை ஹேண்டில் பண்ணினா தான் அவளோட இயல்பு மாறாம குழந்தைத்தனத்தோட இருப்பாள்... உன்னோட கஷ்டத்தை அவள் மேல் திணிக்காதே..." என்றவன்,

"உனக்கு எங்கே கஷ்டம் இருக்க போகுது... நீ அடுத்தவங்களை தானே கஷ்டப்படுத்துவ..." அவனது வார்த்தையில் அவளது உதடுகள் எதையோ சொல்ல வந்தது போல் துடித்தது... ஆனால் அவளால் வாய் திறந்து எதையும் பேச முடியவில்லை...

"இனி அம்முவை பொறுத்தவரை நீயும் நானும் சந்தோசமான, ஒத்துமையான பெற்றோர்... அதை மட்டும் நீ நியாபகத்தில் வச்சுக்கிட்டேன்னா போதும்... என்ன நியாபகத்தில் வச்சிக்குவ தானே...?" மனைவியை பார்த்து அவன் கேட்டான்...

பின்பு அவள் பதிலை எதிர்பாராமல் அவனே மேலே தொடர்ந்தான்...

"திரும்ப என்னை விட்டு ஓடி போகணும்னோ இல்லை உயிரை விட்டுரணும்னோ ஐடியா பண்ணினேன்னு வை... அதுக்கு அப்புறம் இந்த தேவா இப்படி சாப்ட்டா பேசிக்கிட்டு இருக்க மாட்டான்..."

மகளின் நிலையை கண்ட பிறகும் அப்படி ஒரு முடிவு எடுக்க அவள் என்ன அந்தளவுக்கு சுயநலம் உள்ளவளா...

"அம்முவோட சந்தோசம் தான் எனக்கு முக்கியம்..." சட்டென்று வேகமாய் உரைத்தவளை கூர்மையாய் அளவிட்டவன்,

"ரொம்ப லேட்டா புரிஞ்சிக்கிட்டதுக்கு தேங்க்ஸ்..." நக்கலாய் சொன்னவனை கண்டு அவளது முகம் கறுத்தது...

"என்னடா இவன் கோபப்படாம ரொம்ப தன்மையா பேசுறேன்னு நினைச்சு உன் குணத்தை நீ காட்டினா, நானும் என்னோட மறுபக்கத்தை உன்னிடம் காட்ட வேண்டி வரும்... இப்போ கூட ஒரு தகப்பனா என் மகளோட உணர்வுகளை கொன்ன உன்னை கொன்னு போடணும்ங்கிற வெறி எனக்கு வருது... ஆனா அதை செய்ய விடாம என் மகளோட முகம் முன்ன வந்து தடுக்குது... எனக்கு நீ வேண்டாம்... ஆனா அவளுக்கு அம்மாவா நீ வேணுமே... அதுக்காக தான் நான் அமைதியா பேசிக்கிட்டு இருக்கேன்... அம்முவுக்கு உன்னை நான் காயப்படுத்தி, கண்ணீர் விட வச்சா பிடிக்காது... என் மகளுக்கு பிடிக்காததை நானும் செய்ய விரும்பலை... அதனால நீ தப்பிச்ச..."

அவனது வார்த்தையில் அவள் அப்படியே உடைந்து போனாள்...

"தேவ்..." என்ற கூவலுடன் அவன் அருகில் வந்து அவனது நெஞ்சில் சாய்ந்து அழுதவளை ஒரு நொடி இமைக்காது பார்த்தவன், அடுத்த நொடி அவளை தன்னிடம் இருந்து பிரித்து எடுத்து தள்ளி நிறுத்தினான்...

அவனது செய்கையில் மனம் உடைந்து போனாலும் அவள், "சாரி தேவ்..." என்க...

"அடேங்கப்பா ரொம்ப சீக்கிரமா சாரி கேட்டுட்ட... ஆமாம் நீ தான் எந்த தப்பும் பண்ணலையே... அப்புறம் எதுக்கு நீ சாரி கேட்கிற... தப்பு செஞ்சவன் நான் தானேம்மா..." நக்கலாய் சொன்னவனை அவள் தவிப்புடன் பார்க்க...

"என் கூட வர்றதுக்கு பதில் செத்து போகலாம்ன்னு நீ முடிவு பண்ணின பாரு... அப்பவே உன் மேலுள்ள என் காதல் செத்து போச்சு..." வேதனையுடன் கூறியவனை கண்டு,

"தேவ்..." அதிர்ச்சியில் கூவி விட்டாள் அவள்...

"போதும் பொறுமையா இருந்து இருந்து உனக்காக நான் காத்திருந்து காத்திருந்து ஏமாந்தது எல்லாம் போதும்... இந்த பாழாய் போன காதலால் நான் என் சந்தோசத்தை மட்டும் இல்லாமல் என்னை சுத்தி இருக்கிறவங்க சந்தோசத்தையும் கெடுத்ததும் போதும்... காதல் இந்தளவுக்கு துன்பத்தை தரும்ன்னா நான் காதலிச்சிருக்கவே மாட்டேன்... அதுவும் உன்னை போல் ஒருத்தியை காதலிச்சிட்டு நான் படுற பாடு போதும்... இதுக்கு மேலேயும் எனக்கு இந்த காதலும் வேண்டாம்... நீயும் வேண்டாம்... நமக்குள் இந்த சாரியும் வேண்டாம்... நமக்குள் எல்லாம் முடிஞ்சு போச்சு... என் மகளுக்கு அம்மாவா மட்டும் நீ இருந்தா போதும்..." என்றவன் அவளது முகத்தை கூட பார்க்க பிடிக்காது அந்த அறையை விட்டு வெளியேறினான்...

அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளை சம்மட்டியால் அடிப்பது போல் வலித்தது அவளுக்கு... கடைசியில் அவள் நினைத்தது நடந்தே விட்டது... எவனின் வெறுப்பை தாங்க முடியாது என்று எண்ணி இத்தனை நாள் தனிமை தவம் இருந்தாளோ அவனின் வெறுப்பை அளவில்லாமல் அவள் சம்பாதித்து கொண்டாள்... அவனின் காதல் அவளுக்கு என்றுமே எட்டாக் கனியே...

கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்து கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தவள் ஒரு முடிவுடன் கணவனை நெருங்கினாள்...

இத்தனை நாள் எப்படியோ இன்று கணவனின் வேதனையை, வலியை நேரில் பார்த்த பின்பும் தனது காதல் மனதை இரும்புத்திரை கொண்டு மறைக்க அவளால் இயலவில்லை...

"தேவ்..." மகளின் அருகில் கண்களை மூடி அவன் படுத்திருந்த போதும் அவன் தூங்கவில்லை என்பது அவளுக்கு தெரியும்...

"தேவ்... நான் தெரியாம தப்பு பண்ணிட்டேன் தேவ்... என்னை மன்னிக்க மாட்டீங்களா...?" அவளது கண்ணீர் குரல் அவனை அசைக்கவில்லை... அசையாமல் சிலை போல் படுத்து இருந்தான்... அவனது மனமும் கல்லை போல் இறுகி இருந்தது...

அவனிடம் சிறிதும் அசைவு இல்லை என்றதும் அவள் மனம் தாங்காமல் அவன் காலருகே முழங்காலிட்டு அமர்ந்தவள் அவனது கால்களை பற்றி கொண்டு,

"தேவ்... இதுக்கு மேல எனக்கு எப்படி மன்னிப்பு கேட்கிறதுன்னு தெரியலை..." என்றவள் அவன் பாதத்தின் மீது தலை கவிழ்ந்தாள்...

அவனது காலை கண்ணீரில் கழுவி தனது பாவத்தை போக்க முயன்றாள் அவள்...

மனைவியின் இந்த செயலை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... படக்கென்று வேகமாய் எழுந்து அமர்ந்தவன் நொடிப் பொழுதில் தனது கால்களை அவள் பிடியிலிருந்து விலக்கி கொண்டான்...

அவளது செய்கை அவனது காதல் மனதை கொல்லாமல் கொன்றது...

"எந்த ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ இந்த ஜென்மத்தில் இந்த பாடு படுறேன்... இதில் நீ வேறு என் காலை பிடிச்சு என் பாவக்கணக்கை மேலும் மேலும் ஏத்திக்கிட்டு போகாதே..." எங்கோ பார்த்து கொண்டு பேசியவனின் குரல் கரகரத்து ஒலித்தது...

"தேவ்... நீங்க எந்த பாவமும் பண்ணலை... எல்லா பாவமும் பண்ணியது நான் தான்..." என்று தலையில் அடித்து கொண்டு அழுதவளை திரும்பி பார்த்தவன் கண்ணில் அத்தனை வேதனை நிரம்பி இருந்தது...

"இப்போ எதுக்கு தேவையில்லாத மன்னிப்பு எல்லாம்... நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும்... யாரும் எதையும் மாற்ற முடியாது... இப்ப போய் படு..." என்றான் பேச்சு வார்த்தையை தவிர்ப்பதற்காக...

"சாரி தேவ்..." மீண்டும் மன்னிப்பை யாசித்தவளை கண்டு வெறுமையாக பார்த்தவன்,

"இன்னமும் என்னுடைய தவறு நிரூபிக்கப்படாமல் அப்படியே தான் இருக்கு... மகளுக்காக என்னை நீ சகிச்சுக்க வேண்டாம்... நீ என் கிட்ட மன்னிப்பும் கேட்க வேண்டாம்... நீ எதுக்கு மன்னிப்பு கேட்கிறேன்னும் எனக்கு தெரியும்..."

அவனது வார்த்தையில் அவள் திடுக்கிட்டு போய் அவனை பார்த்தாள்...

"நான் படுற வேதனையை தாங்க முடியாம தான் நீ இப்படி மன்னிப்பு கேட்கிறேன்னு புரியாத அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாளில்லை... உனக்கு என் மேல் இருக்கும்

காதல் எனக்கு புரியாமலும் இல்லை... அதுக்காக நீ பொய்யாய் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமும் இல்லை..."

கணவன் சரியாக தன் மனதை கணித்தது கண்டு பெருமையாக இருந்தது அவளுக்கு... ஆனால் என்ன அதில் சில வார்த்தைகளை மாற்றி போட்டு இருந்தால் அவளுக்கு மிகப் பொருத்தமாக இருந்து இருக்கும்...

"இல்லை தேவ்..." அவள் மறுத்து கூறும் முன் அவன்,

"செத்த பொணத்துக்கிட்ட வாழ வழி கேட்டுட்டு இருக்க... இனி அது நடவாத காரியம்..." என்றவன் மகளை அணைத்து கொண்டு படுத்துவிட்டான்...

அவனது வார்த்தையில் அவள் விக்கித்து போய் அப்படியே அமர்ந்துவிட்டாள்...

'என்ன வார்த்தை சொல்லிட்டீங்க தேவ்...' மனதுக்குள் குமைந்தவள் உறக்கத்தை தொலைத்து விழித்திருந்தாள்...

அவனும் தூக்கத்தை மறந்து துக்கத்துடன் படுத்து இருந்தான்...

'எதற்காகடி இந்த பாசாங்கான மன்னிப்பு எல்லாம்...? இந்த மன்னிப்பு உண்மையாய் உன் மனதில் இருந்து வந்திருக்குமேயானால் நான் கூப்பிட்டதும் நீ என்னிடம் ஓடி வந்திருந்தால் இதை முழுதாய் நான் நம்பி இருப்பேன்... ஆனால் நீ என்னை கண்ட பின்பும் சாவை தேர்ந்து எடுத்தவள்... இப்போ மட்டும் ஏன்டி மன்னிப்பு கேட்கிற... வெறும் உதட்டளவில் நீ கேட்கிற மன்னிப்பு எனக்கு எதுக்குடி வேணும்...? யாருக்கு வேணும் உன் மன்னிப்பு...? நான் உன் மன்னிப்பையா எதிர்பார்த்தேன்... உன் காதலை தான்டி எதிர்பார்த்தேன்... 'தேவ் உங்களை, உங்க காதலை புரிஞ்சிக்கிட்டேன்'ங்கிற இந்த வார்த்தைகளை தான்டி உன் கிட்ட எதிர்பார்த்தேன்... கடைசிவரைக்கும் நீ என்னை நம்பலையேடி... நீ நம்பாம போகிற அளவுக்கு என் காதல்ல

நான் என்ன குறை வச்சேன்...' மனதுக்குள் மருகியவன் விடிய விடிய விழித்து இருந்தான்...

மறுநாள் விடியல் தேவானந்த், வருணிதா இருவரை தவிர எல்லோருக்கும் சந்தோசமாய் விடிந்தது...

காலையில் எழுந்ததும் தேவானந்த் முதல் வேலையாய் தன் அன்னையின் முன் போய் நின்றான்...

"யார் யார்க்கு எல்லாமோ ஆஸ்கர் அவார்ட் கொடுக்கிறாங்க... உங்களுக்கு கொடுக்காம போயிட்டாங்களேம்மா... என்னம்மா நடிக்கிறீங்க... சூப்பர்ம்மா... ரொம்ப பிரமாதம்..." வார்த்தைக்கு வார்த்தை நக்கல் தெறித்தாலும் மகனின் முகம் கடினமாய் இருப்பதை கண்டு பார்வதிக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது...

"தேவா... நீ என்னப்பா சொல்ற...?" ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டவரை முறைத்து பார்த்தான் அவன்...

"அம்மு எல்லா விசயத்தையும் என் கிட்ட சொல்லிட்டா..." என்று மகள் சொன்னதை கூறியவன், "ஏன்ம்மா நீங்க போய் இப்படி பண்ணலாமா...?"

"இப்படி பண்ணலாமான்னு என்னை கேட்டா... நீ வருணி கூட சந்தோசமா இருக்கணும்ங்கிறதுக்காக தான் நான் அப்படி பண்ணினேன்... அந்த பிஞ்சு மனசு வேதனைப்பட்டு அழுதப்போ உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்க எங்களுக்கு இதை தவிர வேறு வழி தெரியலை... உன் சந்தோசத்துக்காக நான் எதையும் செய்ய தயாரா இருக்கேன் தேவா..."

"அதுக்காக சுஜியோட வாழ்க்கையில் போய் விளையாடுறீங்களேம்மா..." ஆதங்கத்துடன் கேட்டவனை கண்டு,

"கிருஷ் ஒண்ணும் மோசமான பையன் இல்லை..." என்றார் வெடுக்கென்று...

"இருந்தாலும்..."

"சரி நடந்தது நடந்து போச்சு... அதுக்கு இப்ப என்னடா பண்றது...? நீயே சொல்லு நான் கேட்கிறேன்...?"

அன்னை சொன்னதை கேட்டு பெருமூச்சு விட்டவன், "சரி எங்களுக்காக தான் இந்த காதல் நாடகம்ன்னா இனி அதை தொடர வேண்டாம்... அத்தை கிட்டேயும் இதை சொல்லிருங்க... சுஜிக்கு நம்ம இனத்தில் நல்ல மாப்பிள்ளையா நானே பார்க்கிறேன்..."

"தேவா... இப்ப எப்படிடா சம்பந்தி கிட்ட இதை பத்தி பேசுறது..." பார்வதி தயங்கினார்...

விளையாட்டாய் என்றாலும் கிருஷ்ணாவுக்கும், சுஜானாவுக்கும் முடிச்சு போட்டது போட்டது தானே...

"இது வெறும் நாடகம், நடிப்பு தானேம்மா... இதை நிறுத்த ஏன் இவ்வளவு தயக்கம்...? சரி உங்களுக்கு சொல்ல இஷ்டம் இல்லைன்னா வருணி கிட்ட சொல்லி அத்தை கிட்ட பேச சொல்றேன்..."

மகன் மனைவியை 'வருணி' என்று அழைத்ததை அந்த நேரத்திலும் அவரது மனம் குறித்து கொண்டது... இன்னமும் இருவருக்கும் இடையில் பிரச்சினை சரியாகவில்லை என்றே அவருக்கு தோன்றியது... அது மேலும் அவருக்கு கவலை அளித்தது...

விசயம் கேள்விப்பட்ட சுஜானா ஒரு நொடி திகைத்தவள் பின் அண்ணனின் முடிவுக்கு கட்டுப்பட்டாள்... ஆனாலும் மனதின் ஓரத்தில் வெறுமை எழுவதை தவிர்க்க முடியவில்லை... அந்த வெறுமையை ஏனென்று அவள் ஆராய முயலவில்லை...

அதே போல் வருணிதாவும் அவளின் அன்னைக்கு அழைத்து நன்றாக திட்டி தீர்த்துவிட்டாள்...

"உங்களுக்கு கொஞ்சமாவது அறிவு இருக்காம்மா...? எதில் எதில் விளையாடுறதுன்னு ஒரு விவஸ்தை இல்லை... நான் அப்பவே சந்தேகப்பட்டேன் கிருஷ் எப்படி சுஜியை பார்த்தான்...? எப்படி காதலில் விழுந்தான்னு...? எல்லாம்

உங்க வேலை தானா... ஏம்மா அம்மு தான் சின்னப்பிள்ளை உளறுகிறாள்ன்னா நீங்களும் அவ பேச்சை கேட்டுட்டு இப்படியா பண்ணுவீங்க...?"

"உனக்கு அறிவு இருந்தா நான் ஏன் இந்த மாதிரி வேலை எல்லாம் பண்ண போறேன்... அப்படி அறிவு இருந்து இருந்தா கிடைச்ச நல்ல வாழ்க்கையை தக்க வச்சுக்க தெரியாம இப்படி இழந்துக்கிட்டு உட்கார்ந்து இருப்பியா... அப்புறம் என்ன சொன்ன என் பேத்தி உளர்றாளா... நீ தான் உளறிக்கிட்டு இருக்க... அவ என்னை மாதிரி புத்திசாலியாக்கும்..." பத்மா நொடித்து கொண்டார்...

"அம்மா..." பல்லை கடித்தாள் வருணிதா...

"சரி இப்போ என்ன செய்யணும்ன்னு சொல்ற...?" பத்மா பணிந்து வந்தார்...

"உங்க மாப்பிள்ளை கொலைவெறியில் இருக்காரு... அவர் ஏதாவது பேசுறதுக்கு முன்னாடி இந்த காதல் நாடகத்தை நிறுத்திருங்க... கிருஷ் கிட்டேயும் சொல்லிருங்க... இங்கே தேவ் சுஜிக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிட்டாரு..."

மருமகனுக்கு விசயம் தெரிந்ததில் பத்மா சற்று பின்னடைந்தார்... மருமகன் மனம் கோணும்படி நடக்க அவரால் ஒருபோதும் முடியாது...

"சரி வருணி... மாப்பிள்ளை விருப்பப்படி செய்ய சொல்லு... எங்களுக்கு வேண்டியது நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா சேரணும்ங்கிறதும் தான்... அதான் நீங்க ஒண்ணா சேர்ந்துட்டீங்களே... இனி எங்களுக்கு வேற என்ன வேணும்...?"

அன்னையின் வார்த்தையில் அவளது கண்கள் கலங்கியது... அவர்கள் இருவரின் மகிழ்ச்சிக்காக குடும்பமே நாடகமாடியதை உணர்ந்து உள்ளம் நெகிழ்ந்தது அவர்களது மாசற்ற அன்பை கண்டு...

கிருஷ்ணாவிற்கும் விசயம் தெரிவிக்கப்பட அவனால் சுஜானா போல் இந்த விசயத்தை இயல்பாய் எடுத்து

கொள்ள முடியவில்லை... மனதுக்குள் பெருத்த ஏமாற்றம் சூழ்ந்து அவனை நிலைக்குலையச் செய்தது... எந்தவொரு வேலையும் செய்ய முடியாமல் சிறிது நேரம் அப்படியே அமர்ந்து இருந்தான்...

அடுத்த வந்த நாட்கள் விரைந்து ஓடியது... பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ போகிறேன் என்று தனது பெருமளவு நேரத்தை வெளியிலேயே கழித்தான் தேவானந்த்... மனைவியுடன் வீட்டில் இருக்கும் நேரத்தை முடிந்தளவு குறைத்து கொண்டான்... ஆனால் மகளிடம் அலைப்பேசியில் பேசவும், அவளுடன் நேரம் செலவளிக்கவும் அவன் தவறவில்லை...

சுஜானாவும் தனது வேலையில் உழன்றதால் கிருஷ்ணா விசயத்தை பத்தி அவளால் மேலே சிந்திக்க முடியவில்லை... அந்தளவுக்கு அவளது கடமை அவளை கட்டி போட்டு இருந்தது...

போக்குவரத்து சற்று சீரானதும் முதல் வேலையாய் கிருஷ்ணா சென்னைக்கு விமானத்தில் பறந்து வந்தான்... நேரே தனது அக்காளை தான் சந்திக்க சென்றான்...

அவன் சென்ற நேரம் அப்போது தான் சுஜானா மருத்துவமனைக்கு கிளம்பி கொண்டு இருந்தாள்... வீட்டு வாயிலில் எதிர்பாராத விதமாக அவனை கண்டதும் அவளது முகம் பூவாய் மலர்ந்தது...

"வாங்க கிருஷ்..." சந்தோசமாய் தன்னை வரவேற்றவளை கண்டு அவன் ஒரு கணம் திகைத்து போய் அப்படியே நின்றுவிட்டான்...

இத்தனை நாள் அவனிடம் இருந்து தொலைந்து போன மகிழ்ச்சி சுஜானாவின் புன்னகை முகத்தை கண்டதும் மீண்டும் மீண்டு வந்ததை உணர்ந்தவன் அதன் காரணத்தை ஆராய்ந்த போது கிடைத்த பதில் அவனை திகைக்க வைத்து அவனை இன்ப அதிர்ச்சியில் உறையச் செய்து இருந்தது...

உறையும்...

"ஹலோ... கிருஷ்..." சுஜானா கிருஷ்ணாவின் முகத்துக்கு நேரே சொடக்கு போட்டு அழைக்க, அதில் தன் உறை நிலையில் இருந்து மீண்டான் அவன்...

"என்ன... என்ன சுஜி சொன்ன...?" வார்த்தைகள் அவனின் மனதை போல் தடுமாறியது...

"உள்ளே வாங்கன்னு சொன்னேன்... நீங்க என்னடான்னா ஃப்ரீசான மாதிரி மூச்சு பேச்சு இல்லாம நிற்கிறீங்க..." தலை சாய்த்து அவள் சிரித்தபடி கேட்டதில் அவன் இதயம் ஒரு நொடி நின்று மீண்டும் துடித்தது...

"ம்... போகலாம்..." அவளை பார்த்து கொண்டே கூறியவனை அவள் உள்ளே அழைத்து சென்றாள்...

"உட்காருங்க... எல்லோரையும் கூட்டிட்டு வர்றேன்..." அவள் ஏதோ வேற்று மொழி பேசுவது போல் அவளின் முகத்தை இமைக்காது பார்த்து கொண்டு இருந்தவன் அவள் கூறியதை சற்றும் கவனிக்கவில்லை...

அவனது கண்கள் சுஜானா பேசும் போது சேர்ந்து பேசிய அவளது அழகிய விழிகளை ரசித்து கொண்டு இருந்தது...

அவன் அமராமல் இருப்பதை உணர்ந்து அவள், "கிருஷ்..." என்று அவனை அழைத்து அவனின் கையை பற்றி சோபாவில் அமர வைத்துவிட்டு,

"இன்னைக்கு என்னாச்சு உங்களுக்கு...? வழக்கமான உங்க துறுதுறுப்பு மிஸ்ஸான மாதிரி இருக்கே... உடம்பு ஏதும் சரியில்லையா...?" கவலையாய் கேட்டவளை கண்டு மறுத்து தலையசைக்க மட்டுமே அவனால் முடிந்தது...

"என்னமோ போங்க... இன்னைக்கு நீங்க சரியில்லை..." என்றவள் உள்ளே சென்றாள்...

கிருஷ்ணா அவள் பிடித்த தனது கையை பார்த்து கொண்டு இருந்தான்...

எப்போது சுஜானா அவனது மனதில் புகுந்தாள் என்றால் அதற்கு அவனுக்கு பதில் தெரியாது... ஆனால் இந்த நொடி அவள் இல்லாமல் தனக்கு வாழ்க்கை இல்லை என்பதை மட்டும் அவனால் அடித்து சொல்ல முடியும்...

அவளை காதலிக்கிறானா என்றால் அதற்கும் அவனிடத்தில் விடை இல்லை... ஆனால் இத்தனை நாளாய் அவன் இழந்து இருந்த சந்தோசம் அவளின் முகத்தை மீண்டும் கண்ட போது மீண்டதை எண்ணி பார்த்தவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது அவனது சந்தோசமே அவள் தான் என்று...

'ஒருவேளை இது தான் காதல் என்றால் இது காதலாகவே இருந்துவிட்டு போகட்டும்... எஸ் ஐ லவ் ஹர்... என் வாழ்நாள் முழுமையும் அவள் எனக்கு வேண்டும்...' அவனது மனம் உறுதியாக நினைத்தது...

அதற்குள் தேவானந்த், வருணிதா எல்லோரும் வந்துவிட்டனர்...

"அக்கா... எப்படி இருக்க...?" சகோதரியை கண்டதும் தனது உணர்வுகளை தள்ளி வைத்தவன் அவளை பாசத்தோடு அணைத்து கொண்டான்...

எவ்வளவு பெரிய ஆபத்தில் இருந்து அவள் மீண்டு இருக்கிறாள்... அவனது உடலும், உள்ளமும் ஒருசேர நடுங்கியது...

"இந்த மாதிரி நேரத்தில் உன் கூட இருக்காம போயிட்டேனேக்கா..." அவனது குரல் தழுதழுத்தது...

"கிருஷ்... எனக்கு ஒண்ணுமாகலை... அதான் தேவ் வந்து காப்பாத்திட்டாரே..." என்றவளின் வார்த்தையில் தேவானந்த் அவளை பார்த்து முறைத்தான் அன்றைய நாளின் தாக்கத்தில்... அதில் குற்றவுணர்ச்சியில் அவள் உதட்டை கடித்து கொண்டாள்...

கிருஷ்ணா அக்காள் கணவன் பக்கம் திரும்பி, "ரொம்ப தேங்க்ஸ் மாமா..." என்று நன்றியுரைக்க...

"கிருஷ்... அவள் உன் அக்கா என்பதை விட அவள் என் மனைவி... என் குழந்தைக்கு அம்மா... அவளை காப்பாற்றுவது என் கடமை... இதுக்கு நீ நன்றி சொல்லணுமா...?" தேவானந்த் சிரித்தபடி கிருஷ்ணாவின் தோளில் தட்டினான்...

சிவநேசனும், பார்வதியும் கிருஷ்ணாவை வரவேற்றனர்... வர்ஷினி தாய்மாமனை கண்டதும் அவனின் தோளில் தொற்றி கொண்டது... சிறிது நேரம் பேசி இருந்துவிட்டு சிவநேசன், பார்வதி, சுஜானா மூவரும் சென்றுவிட, அங்கு மற்ற மூவரும் தனித்து இருந்தனர்...

கிருஷ்ணாவிற்கு இப்போது தேவானந்த் முகத்தை பார்க்கவே சங்கடமாக இருந்தது... என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாக அமர்ந்து இருந்தான்...

"பெரிய பெரிய வேலை எல்லாம் பண்ணிருக்க... ரொம்ப பெரிய மனுசன் ஆகிட்டியோடா..." வருணிதா தான் கோபத்துடன் அவனை பார்த்து கேட்டாள்...

மனைவி அவளது சகோதரனுடன் பேசுவதற்கு தனிமை கொடுக்க எண்ணி தேவானந்த் மகளுடன் தங்களது அறைக்கு சென்றுவிட்டான்...

அதிலும் பெரியவர்கள் செய்த தவறுக்கு கிருஷ்ணா பாவம் என்ன செய்வான்... தனது தங்கை மாதிரி அவன் மீது எந்த தவறும் இல்லை என்று தோணியதால் தேவானந்த் கிருஷ்ணாவிடம் எதுவும் கடிந்து பேசவில்லை...

"இல்லக்கா... அது வந்து... அம்மா தான்..." எப்படி சொல்வது என்று தெரியாமல் அவன் தலையை கோதி கொண்டு அமர்ந்து இருந்தான்...

"எது எதுல விளையாடறதுங்கிறது இல்லையாடா... உன் வாழ்க்கை உனக்கு விளையாட்டா போச்சா..." அவளுக்கு இன்னமும் கோபம் குறையவில்லை...

"எல்லாம் உனக்காக தான்க்கா...."

தம்பியின் வார்த்தையில் அவளுக்கு கண்ணீர் வந்தது... ஆனாலும் கணவன் சொன்னது நியாபகத்தில் வந்து வந்த கண்ணீரை உள்ளிழுத்து கொண்டாள்...

"கிருஷ்..." அவளின் குரல் நெகிழ்ந்து இருந்தது...

"உனக்காக தான்க்கா படிப்பை பாதியில் விட்டுட்டு இங்கே சென்னைக்கு வந்தேன்... இப்பவும் நீ சந்தோசமா இருக்கணும்ங்கிறதுக்காக தான் அம்மா சொன்னதுக்கு சம்மதிச்சேன்... எப்படியும் வாழ்க்கையில் நான் கல்யாணம் பண்ணித்தானே ஆகணும்... அது இந்த சுஜியா இருந்தா என்னன்னு தான் எனக்கு தோணுச்சு... மத்தபடி வேற எதைப் பத்தியும் நான் யோசிக்கலை..."

"போதும் கிருஷ்... எனக்காக நீ உன் விருப்பத்தை மாத்திக்கிட்டது..." என்றவளை அவன் கேள்வியாய் பார்க்க...

"எனக்கு தெரியும் கிருஷ் உன் ட்ரீம் கேர்ள்க்கும் சுஜிக்கும் ஏணி வச்சாலும் எட்டாதுன்னு..."

அக்காவின் பதிலில் அவன் மானசீகமாக தலையில் கை வைத்து கொண்டான்...

அந்நேரம் கையில் காபியுடன் அங்கு வந்த சுஜானா அதை கேட்டு விட்டாள்... அதை கேட்டதும் அவளது மனதில் ஒரு வலி எழுந்தது... முகத்தில் எல்லையில்லா வேதனை நிறைந்தது...

இத்தனை நாள் மனதில் இருந்த வெறுமை கிருஷ்ணாவை கண்டதும் ஏன் காணாமல் போனது என்றதன் காரணத்தை அலசி ஆராய்ந்து உணர்ந்தவள் மனதுக்குள் மிகவும் குழம்பி போயிருந்தாள்...

அந்த நேரத்தில் வருணிதாவின் பேச்சு அவள் மனதை பெரிதும் காயப்படுத்தி இருந்தது... அந்த காயம் கொடுத்த வலி அவளின் ஆழ்மனதின் விருப்பத்தை அவளுக்கு எடுத்துரைக்க அதில் அவள் அதிர்ந்து போய்விட்டாள்...

முயன்று தனது மனதை கட்டுப்படுத்தி கொண்டு அங்கு வந்த சுஜானா காபி கோப்பையை கிருஷ்ணாவிடம் கொடுத்துவிட்டு அவனது முகத்தை நிமிர்ந்து கூட பார்க்காமல் திரும்பி சென்றுவிட்டாள்...

செல்லும் அவளை ஒரு பெருமூச்சுடன் பார்த்த கிருஷ்ணா, "அப்படி எல்லாம் எதுவும் இல்லைக்கா..." தயக்கத்துடன் சொன்னான்...

அவனே தன் மனதை இப்போது தான் உணர்ந்து இருந்தான்... இதில் சுஜானாவின் விருப்பம் தெரிந்து அதற்கு பிறகு தான் இரு வீட்டு பெரியவர்களிடமும் பேச வேண்டும்...

அதை எல்லாம் விட இந்த காதல் நிறைவேறுமா என்ற எண்ணமும் அவனது தயக்கத்துக்கு மிகப் பெரிய காரணம்... ஏனெனில் வருணிதாவின் காதலால் தங்களது வீட்டில் எந்தளவிற்கு தங்களது பெற்றோர் வருத்தப்பட்டனர் என்பது அவனுக்கு தெரியும்...

அதனால் தான் ஜாலிப்பேர்வழியான அவன் பெண்களிடத்தில் காதல், கசமுசா என்று மனதை அலைப்பாய விடவில்லை... ஆனால் இந்த சுஜானா மட்டும் அதற்கு விதிவிலக்கு என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

"சரி அதை விடு கிருஷ்... நீ காபி குடி... நான் அம்முவை ஸ்கூலுக்கு கிளப்பி விட்டுட்டு வர்றேன்..." என்ற வருணிதா, "கிருஷ்... அங்கே நம்ம வீட்டு பக்கம் தண்ணி வடிஞ்சாலும் இன்னமும் வீட்டை சுத்தப்படுத்தலை... அதனால அதுவரைக்கும் இங்கே தங்கிக்கோடா..."

"இல்லைக்கா... அது சரி வராது... என் பிரெண்ட் தனியா அப்பார்ட்மெண்ட்ல இருக்கான்... அவன் கூட தங்கிக்கிறேன்..." என்று அவன் மறுத்துவிட்டான்...

இங்கு இருந்தால் சுஜானா கூட பழகுவதற்கு நல்ல வாய்ப்பாக அது அமையும் தான்... ஆனால் தேவானந்த் மீது

அவனுக்கு இருந்த மரியாதை அதை செய்யவிடாமல் தடுத்தது…

தம்பி கூறியது சரி என்றே அவளுக்கும் தோன்ற உடனே சம்மதித்துவிட்டாள்…

“அக்கா… சுகன் ஃபோன் பண்ணினாளா…?” கிருஷ்ணா கேட்கவும் அப்போது தான் வருணிக்கும் தங்கை நியாபகம் வந்தது…

“இல்லையேடா…”

“ஓ… முரளி மாமாவுக்கு இந்த வெள்ளத்தால் ஹெவி லாஸ்ன்னு அப்பா சொன்னாருக்கா… அந்த கவலையில் அவள் இருக்காளோ என்னமோ…? சரி அவளை விடுக்கா… இங்கே மாமாவுக்கு எந்த பிரச்சினையும் இல்லையே…”

“அப்படி எதுவும் இருக்கிற மாதிரி தெரியலை கிருஷ்… அன்னைக்கு மாமா கூட கேட்டதுக்கு தேவ் அப்படி எதுவும் இல்லைன்னு தான் சொன்னாரு… தேவ் எதை செய்தாலும் நிதானிச்சு, யோசனை பண்ணித்தான் செய்வார்…” என்றாள் பெருமையுடன்…

அக்காவை வெறித்து பார்த்த கிருஷ்ணா, “அப்படிப்பட்ட மாமாவை நீ ஏன்க்கா இத்தனை வருசமா பிரிஞ்சி இருந்த…? அப்போ தப்பு உன் மேல் தானாக்கா…?”

வார்த்தைகளில் கூர்மையுடன் கேட்ட தம்பியை வெற்று பார்வை பார்த்தவள் எழுந்து தங்களது அறைக்கு சென்றாள்…

அங்கு தந்தையின் மடியில் அமர்ந்து கொண்டு ஐபேட்டை கையில் வைத்து கொண்டு விளையாடி கொண்டு இருந்த மகளை கண்டதும் அவளது கோபம் மகளிடத்தில் திரும்பியது…

"அம்மு… ஸ்கூலுக்கு கிளம்ப வேண்டாமா…? இந்நேரம் என்ன விளையாட்டு…?" மகள் கையில் இருந்த ஐபேட்டை அவள் பிடுங்க…

"அப்பா பாருங்கப்பா..." தந்தையிடம் மகள் புகார் வாசித்தாள்...

"அம்மு... ஸ்கூல் போய்ட்டு வந்து விளையாடும்மா..." தேவானந்த் மகளுக்கு தன்மையாய் எடுத்து சொல்ல...

"ம்... ம்..." என்று சிணுங்கினாள் சின்னவள்...

"சரி வா... பிரெஷ் பண்ணிட்டு குளிக்கலாம்..." வருணிதா மகளை நோக்கி கையை நீட்ட...

"ம்ஹூம்... நோ பிரெஷ்..." என்று தந்தையை கட்டிப்பிடித்து கொண்டாள் சின்னவள்...

"அம்மு..." அவள் அதட்டியபடி மகளை நோக்கி கையை ஓங்க...

"ஷ்... எதுக்கு இப்போ இப்படி கோபப்படுற..." மனைவியை கடிந்தவன் மகளிடம்,

"அம்மு... நல்ல பிள்ளை இல்லையா... சமத்தா பிரெஷ் பண்ணிட்டு ஸ்கூல் போவாங்களாம்..." அவன் மகளுக்கு புரியும்படி பொறுமையாய் எடுத்து சொல்ல...

"ஓகேப்பா..." என்றபடி எழுந்த வர்ஷினி அன்னையிடம் வந்து அவள் கழுத்தை கட்டிக் கொண்டாள்...

மகள் திடுமென இழுத்ததில் நிலை தடுமாறிய வருணிதா கணவன் மீது சாய போக, உடனே தேவனாந்த் மகளையும், மனைவியையும் தாங்கி நேராக நிறுத்தினான்...

அழுத்தமாய் தனது தோளை பற்றியிருந்த கணவனது கைகளை பார்த்தவள் மனதில் பலவித எண்ணங்கள் ஊர்வலம் செல்ல அதை மறைக்காமல் அவளது முகம் அப்பட்டமாய் வெளிப்படுத்தியது...

மனைவியின் செம்மை படர்ந்த முகத்தை எந்தவித சலனமும் இல்லாமல் பார்த்த தேவானந்த் அடுத்த நொடி அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டான்...

'என்னை தாக்கிய உணர்வுகளில் ஒன்று கூட அவரை தாக்கவில்லையா...' மனதுக்குள் பெருத்த ஏமாற்றம் எழுந்து அவளை வருத்தியது...

"அம்மா..." மகளின் அழைப்பில் நிகழ்காலத்துக்கு வந்தவள் அவளை அழைத்து கொண்டு குளியலறைக்குள் நுழைந்தாள்...

மகளை குளிக்க வைத்து தானும் குளித்துவிட்டு இருவருக்குமான உடையை மாற்றிய போது தேவானந்த் மீண்டும் அறைக்குள் வந்தான்...

"அப்பா..." என்று தன்னிடம் தாவிய மகளை தூக்கி கொண்டவன் அவளை உச்சி முகர்ந்தபடி,

"அம்மு யூனிஃபார்ம்ல அழகா இருக்காளே..." என்று சொல்ல...

அந்நேரம் கண்ணாடி முன் நின்று தலை வாரி கொண்டு இருந்த வருணிதாவின் மனதில் தடதடவென இரயில் ஓடியது...

இந்த செயல், சொல் எல்லாம் அவளை பழைய நிகழ்வுக்கு அழைத்து சென்றது...

அவனும் அதை தான் நினைத்தானோ என்னமோ கண்ணாடி வழியே தெரிந்த அவளது பிம்பத்தை அவனது கண்கள் ஊடுருவியது...

"அப்பா..." மகளின் அழைப்பில் அவன் அவளிடம் திரும்பினான்...

"சீக்கிரம் கிளம்புங்க... நிறைய நாள் லீவு முடிஞ்சு ஸ்கூலுக்கு போறேன்ல்ல... என் பிரெண்ட்ஸ் கூட நான் நிறைய கதை பேசணும்... அதுக்கு நான் ஸ்கூலுக்கு சீக்கிரம் போகணும்..." கைகளை அகல விரித்து, கண்களை உருட்டியபடி பேசிய மகளை கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

அவளது செயல் அனைத்தும் மனைவியின் மறுபிரதிபலிப்பு போல் இருந்தது அவனுக்கு...

"ஓகே..." என்றவன் மகளை கீழே இறக்கிவிட்டு விட்டு குளியலறைக்குள் சென்று கதவை அடைத்தான்...

அதை ஒரு நொடி பெருமூச்சுடன் பார்த்த வருணிதா மகளை அழைத்து கொண்டு வெளியில் வந்தாள்...

"மாமா..." என்றபடி வர்ஷினி கிருஷ்ணாவின் கழுத்தை கட்டி கொண்டு தொங்க...

"வாடி என் அக்கா மகளே..." என்று அவளை தூக்கி தன் மடியில் வைத்து கொண்டான் கிருஷ்ணா...

"மாமா... இனி நான் உங்க கூட இருக்க மாட்டேன்... எங்கப்பா, அம்மா கூட தான் இருக்க போறேன்..." மகிழ்ச்சியோடு சொன்னவளை கண்டு அவனது கண்கள் கலங்கியது...

"ஐய் சூப்பர் குட்டி..." என்று அவளுடன் சேர்ந்து தானும் சந்தோசப்பட்டவன் பின்பு முகத்தை சோகமாக வைத்து கொண்டு,

"ஆனா வர்ஷூ குட்டி இல்லாம இந்த மாமனுக்கு ஃபோர் அடிக்குமேடா..." என்று அவன் கவலை குரலில் கூற...

"அப்படின்னா..." மாமனின் கவலை அவளை தாக்க சிறிது நேரம் யோசித்தவள்,

"நீங்களும் எங்க கூட இங்கே வந்துருங்க..." என்றவளை அள்ளி அணைத்து கொண்டான்...

"என் செல்லம் சொன்னதுக்கு அப்புறம் நோ அப்பீல்..."

அதற்குள் தேவானந்த்தும் கிளம்பி தயாராக வந்துவிட எல்லோரும் காலை உணவு அருந்த உணவு மேசைக்கு வந்தனர்...

சுஜானா இன்னமும் மருத்துவமனை போகாமல் பரிமாறி கொண்டு இருப்பதை கண்டு தேவானந்த், "சுஜி ஹாஸ்பிட்டல் போகலையா...?"

"ம்... போகணும்ண்ணா..." என்றவளின் முகம் தெளிவில்லாமல் இருப்பதை கண்டவன் யோசனையாய் உணவில் கவனத்தை செலுத்தினான்...

சுஜானா சமையலறைக்கு சென்று சூடாக பொரித்து எடுத்த உருளைக்கிழங்கு போண்டாவை கொண்டு வந்து கிருஷ்ணா அருகில் வைத்தாள்...

அதை கண்டு அவன் கண்கள் ஆச்சிரியத்தில் அகல மகிழ்ச்சியாய் அவளை பார்த்தான்... அவளோ அவனை நிமிர்ந்து பார்த்தாள் இல்லை...

"எனக்கு போண்டா பிடிக்கும்ன்னு உனக்கு யார் சொன்னது...?" ஆவலாய் கேட்டவனிடம்,

"வர்ஷூ சொன்னாள்..." என்றாள் சுஜானா மொட்டையாக...

"ஓ..." என்றவன், "டாக்டர் மேடம்... இப்போ இதை நான் சாப்பிடலாம்ங்களா... இல்லை ஆயில் ஃபுட் அது இதுன்னு லெக்சர் கொடுப்பீங்களா... ஏன்னா நான் ரொம்ப பசியில் இருக்கேன்... பசியில் என் ரெண்டு காதும் அடைச்சு போச்சு... அதனால உங்க லெக்சர் கேட்க என்னால் முடியாது... அதான் கேட்டேன்..." என்று கிண்டல் அடித்தவனை எல்லோரும் வித்தியாசமாய் பார்த்தனர் என்றால் சுஜானாவோ குனிந்த தலையை நிமிர்த்தவில்லை...

எல்லோரும் தங்கள் இருவரையும் பார்ப்பதை உணர்ந்த கிருஷ்ணா பேச்சை விடுவித்து அமைதியாக உணவை உண்டான்... அவனுக்கே தான் அதிகப்படியாய் பேசிவிட்டோமோ என்று சற்று உறுத்தலாக இருந்தது...

பார்வதி மகளின் நடவடிக்கையை புதிராக பார்த்து கொண்டு இருந்தார்...

காலையில் வேலைக்கு கிளம்பியவள் கிருஷ்ணாவை பார்த்ததும் வீட்டிலேயே இருந்ததும், அவனுக்கு பிடிக்கும் என்று உருளைக்கிழங்கு போண்டா செய்ததும் அவருக்கு சற்று வித்தியாசமாக இருந்தது... மகள் மனம் ஏதும் தடுமாறுகிறதோ என்று அவர் ஐயப்பட்டார்...

ஆனால் இப்போது கிருஷ்ணாவை ஒரு பொருட்டாய் கூட கண்டு கொள்ளாமல் அவள் இருப்பதை கண்டு தான் நினைத்தது தவறோ என்று அவர் குழம்பி போனார்...

உணவு முடிந்ததும் மருத்துவமனைக்கு கிளம்பிய சுஜானாவிடம் கிருஷ்ணா, "போற வழியில் என்னையும் ட்ராப் பண்ண முடியுமா...?" என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் பெற்றோரையும், அண்ணனையும் தயக்கத்துடன் பார்த்தாள்...

அவர்கள் முன் அவன் இப்படி கேட்பான் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

"கிருஷ்... வேணும்ன்னா ஒண்ணு பண்ணு... சுஜியை அவளோட ஹாஸ்பிட்டல்ல இறக்கிவிட்டுட்டு நீ உன் வேலைக்கு இந்த காரை எடுத்துட்டு போ... வரும் போது சுஜியை நான் பிக்கப் பண்ணிக்கிறேன்..."

தேவானந்த் ஆலோசனை சொல்ல அதை சரி என்று ஏற்று கொண்டனர் அனைவரும்... வெள்ளத்தில் கிருஷ்ணாவின் கார் பெருத்த சேதாரமாகி இருந்தது அவர்கள் எல்லோருக்கும் தெரியும்...

"கீ ப்ளீஸ்..." கையை நீட்டிய கிருஷ்ணாவின் முகம் பார்க்காமல் சுஜானா கார் சாவியை கொடுக்க...

'நான் இங்கே வரும் போது நல்லா தானே இருந்தாள்... இப்போ இவளுக்கு என்னவானது...? ஏன் உம்முன்னு இருக்கா...?' கிருஷ்ணாவிற்கு சுஜானாவின் மாற்றத்திற்கான காரணம் தெரியாமல் தலை வெடித்துவிடும் போல் இருந்தது...

போகும் போது கேட்டு கொள்ளலாம் என்று அமைதியாய் காரை கிளப்பினான்...

வெகுநேரம் நிலவிய அமைதி இயல்பிலேயே துறுதுறுப்பான கிருஷ்ணாவிற்கு சற்று இம்சையாக இருந்தது... ஜன்னல் வெளியே வேடிக்கை பார்க்கிறேன் பேர்வழி என்று முகத்தை சற்றும் அவன் பக்கம் திருப்பாமல் சுஜானா அமர்ந்து இருந்தவிதம் அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது...

"சென்னை வெள்ளம் நம்ம வாழ்க்கையை இப்படி புரட்டி போடும்ன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை..." அவனது வார்த்தையில் அதிர்ந்து போய் திரும்பியவள்,

"ஏன்... ஏன் அப்படி சொல்றீங்க...?"

"இங்கே பாரு... மக்கள் இன்னமும் இயல்பு வாழ்க்கைக்கு வர முடியாம கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கிறதை..." சாலையோரமாய் சுட்டிக் காட்டியவனை கண்டு சற்று நிம்மதி அடைந்தவள் ஆமோதிப்பாய் தலையை ஆட்டினாள்...

அவ்வளவு தான் அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை... அதற்குள் அவள் பணி புரியும் மருத்துவமனை வந்துவிட்டது...

காரில் இருந்து இறங்க போனவளை கண்டு, "ஒரு நிமிசம் சுஜி..." என்றான் அவன்...

"என்ன...?" அவள் கேள்வியாய் அவனை பார்க்க...

"நம்ம ரெண்டு பேர் வீட்டிலும் நம்ம மேரேஜ் ப்ரொபசலை கைவிட்டது உனக்கு தெரியுமா..."

"ம்... தெரியும்..." தன் கைவிரலை ஆராய்ந்தபடி சொன்னவளின் முகத்தில் இருந்து அவனால் எதையும் கண்டுப்பிடிக்க முடியவில்லை...

"உனக்கு..." என்று ஆரம்பித்தவனுக்கு வார்த்தைகள் வராமல் சதிராட்டம் ஆடியது...

'கிருஷ்... உனக்கு என்னடா ஆச்சு...' தனக்கு தானே கேட்டு கொண்டவன் தன் தயக்கத்தை விட்டொழித்து விட்டு,

"உனக்கு ஒண்ணுமே தோணலையா...?"

அவனது கேள்வியில் அவளுக்கு ஏதேதோ தோன்றியது... தோன்றியது எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள அவனது மனதில் அவள் இருக்க வேண்டுமே... அப்படி இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்...

அவனுக்கு பிடிக்காத வகையில் தான் இருப்பதை உணர்ந்தவளுக்கு தன் மீதே வெறுப்பு எழுந்தது...

"இதில் தோணறதுக்கு என்ன இருக்கு...? வீட்டில் விருப்பப்பட்டாங்க... சரின்னு சொன்னேன்... இப்போ வேண்டாம்ன்னு சொல்றாங்க... அதுக்கும் சரின்னு தான் சொல்லணும்..."

அவளின் வார்த்தையில் அவன் உள்ளுக்குள் உடைந்து போனான்...

'என்னை தாக்கிய காதல் நோய் இவளை தாக்கவில்லையா...? நான் தான் எல்லாவற்றையும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறேனோ...' மனதுக்குள் மருகியவன் மேலே பேசாமல் அமைதியாய் அமர்ந்து இருந்தான்...

"வேற ஒண்ணும் இல்லையே..." என்றவளிடம் 'இல்லை' என்பது போல் அவன் தலையசைக்க...

"வர்றேன்..." என்றபடி இறங்கியவள் அவனை திரும்பியும் பார்க்காமல் மருத்துவமனை நோக்கி நடந்தாள்...

அவள் தன்னை திரும்பி பார்ப்பாளோ என்ற நப்பாசையில் அமர்ந்து இருந்தவனுக்கு அவளது செயல் பெருத்த ஏமாற்றமாக இருந்தது...

தனது ஏமாற்றத்தை மறைக்க காரை விருட்டென்று கிளப்பி கொண்டு அவன் செல்ல... அவன் செல்வதை உணர்ந்து திரும்பி பார்த்தவளின் கண்களில் மெல்லிய நீர்ப்படலம்...

"அம்மா நீங்க இங்கே வாங்க... அப்பா நீங்க இங்கே..." தனது இருபக்கத்திலும் பெற்றோரை நிற்க வைத்து அவர்களின் கைகளை பிடித்து கொண்டு ஒருவித பெருமையுடனும், கர்வத்துடனும் துள்ளல் நடையுடன் பள்ளிக்குள் நுழைந்தாள் வர்ஷினி...

அதே போல் அவளது வகுப்பறை வந்ததும் இருவரிடமும் தனது கன்னத்தை காட்டி, "கிஸ் மீ..." என்க...

இருவரும் சிரித்தபடி அவள் புறம் குனிந்து கன்னத்தில் முத்தமிட்டனர்... அதே போல் அவளும் பெற்றோர் கன்னத்தில் முத்தமிட்டு அவர்களிடம் கையை ஆட்டி விடைப்பெற்றவள் வகுப்பிற்கு சென்று தனது பெற்றோரை நண்பர்களிடம் காட்டி சந்தோசமாக ஏதோ பேசி கொண்டு இருந்தாள்...

அவளது அலப்பறையை கண்டு வருணிதாவிற்கு சிரிப்பு வந்தது...

"அம்மு பண்ற லொள்ளு தாங்க முடியலை..." என்றாள் கணவனை பார்த்து...

"நீ இதை லொள்ளா பார்க்கிற... நான் இதை அவளோட எத்தனை நாள் ஏக்கமோன்னு நினைச்சு வேதனையுடன் பார்க்கிறேன்... இதுக்கு எல்லாம் காரணம் நீ தான்..." வெறுப்புடன் கூறிவிட்டு அவன் செல்ல...

அவன் பேச்சில் திகைத்து நின்று இருந்தவள் அவன் செல்வதை உணர்ந்து அவன் பின்னே ஓடினாள்...

வீடு வரும் வரை இருவரும் பேசவில்லை... அவள் மட்டும் அவனை திரும்பி திரும்பி பார்த்து கொண்டு வந்தாள்... அவனோ சாலையில் இருந்து கண்களை சற்றும் திருப்பினான் இல்லை...

வீட்டிற்கு வந்ததும் அவன் அறைக்கு சென்றுவிட அவனை பின் தொடர்ந்து செல்வதா வேண்டாமா என்ற குழப்பத்துடன் அவள் வரவேற்பறையில் நின்றாள்...

"வருணி... தேவா சரியா சாப்பிடாதது மாதிரி இருந்தது... கொஞ்சம் பாலை ஊத்தி கொடும்மா..." பார்வதி மருமகளிடம் சொல்ல...

"சரிங்கத்தை..." என்றவள் சமையலறைக்கு செல்ல...

"உன் பையன் சரியா சாப்பிடலையா...? இது ரொம்ப அநியாயம் பாரு... அவன் நாலு தோசை சாப்பிட்டதை நானே என் கண்ணால் பார்த்தேன்..." சிவநேசன் கிண்டலாக சொல்ல...

"ம்ப்ச்... இப்படியா என் பையன் சாப்பிடுறதை கண் வைக்கிறது... உங்களை..." கணவரை கடிந்தவர்,

"இப்ப கொஞ்ச நாளா தான்ங்க அவன் நிம்மதியா, வயிறார சாப்பிட்டு இருக்கான்... நாணும் அதை பார்க்கத்தான் செய்தேன்... இப்போ நான் அதுக்காக சொல்லலை... தேவா ரூமுக்கு போறதை பார்த்து வருணி கூட போகவா வேண்டாமான்னு யோசனை பண்ணிக்கிட்டு இருந்தா... இப்படியே இருந்தா அவங்களுக்குள்ள எப்பத்தான் இணக்கம் வர்றது...? அதான் பாலை கொடுக்கும் சாக்கில் அவன் கூட இருக்க சொன்னேன்..."

"பாரு... பலே ஐடியா தான் உன்னோடது..." மனைவியை பாராட்டிய சிவநேசன்,

"எல்லாத்துக்கும் ஐடியா கொடுக்கிற நீ எனக்கும் கொஞ்சம் ஐடியா கொடுக்கிறது..."

"உங்களுக்கு என்ன ஐடியா வேணும்...?" சந்தேகமாய் கணவரை பார்த்தார் அவர்...

"அது ஒண்ணுமில்லை பாரு... என் பொண்டாட்டி கிழவி இப்ப எல்லாம் என்னை கண்டுக்கவே மாட்டேங்கிறா... அதுக்கு ஏதாவது ஐடியா இருக்கா..."

"உங்களை..." பார்வதி பல்லை கடிப்பதை உணர்ந்து சிவநேசன் நைசாக அங்கிருந்து நழுவிவிட்டார்...

தன் முன் வந்து நின்ற மனைவியை பார்த்து 'என்ன' என்பது போல் பார்த்தான் தேவானந்த்...

"பால்..." என்று அவள் கோப்பையை நீட்ட...

'எனக்கு வேண்டாம்' என்று சொல்ல வாயெடுத்தவன்,

"அத்தை தான் கொடுக்க சொன்னாங்க..." அவள் சொன்னதில்,

"அங்கே வச்சிட்டு போ..." என்றவன் கையில் இருந்த கோப்பில் கவனத்தை செலுத்தினான்...

அவள் கட்டிலில் அமர்ந்து கணவனை பார்த்து கொண்டு இருந்தாள்...

கம்பீரமாய் முன்பு இருந்ததை விட நிறம் அதிகரித்து அழகாய் இருந்தவனின் தோற்றத்தை கண்களில் உள்வாங்கி மனதில் நிறைத்து கொண்டு இருந்தாள்...

எதற்கோ நிமிர்ந்தவன் மனைவியின் பார்வை கண்டதும் அது அவனுக்கு கடுப்பை கிளப்பியது...

'இந்த பார்வைக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை...' மனதுக்குள் முணுமுணுத்தவனுக்கு அதற்கு மேல் அங்கு இருக்க முடியவில்லை...

கோப்பையில் இருந்த பாலை பருகியவன், கையில் இருந்த கோப்பை எடுத்து கொண்டு வெளியில் செல்ல முனைந்தவன் ஏதோ நியாபகம் வந்தவனாய் மீண்டும் உள்ளே வந்து மேசை மீது எதையோ தேடினான்...

அவன் தேடுவதை உணர்ந்து அவள், "என்னன்னு சொன்னா நானும் தேடுவேன்ல..."

"கார் கீ..." என்றான் மொட்டையாக...

அவன் சொன்னதும் அவள் இயல்பு போல் அவன் அருகில் வந்தவள் பழக்கதோசத்தில் அவனது பேண்ட் பாக்கெட் பக்கம் கையை கொண்டு போனாள்...

முன்பு எத்தனையோ முறை அவன் இது போல் பேண்ட் பாக்கெட்டில் பைக் சாவியை வைத்துவிட்டு தேடி இருக்கிறான்... அப்போது எல்லாம் அவள் தான் அதை எடுத்து கொடுப்பாள்... அந்த நியாபகத்தில் அவளது கை தன்னிச்சையாக அவன் புறம் சென்றது...

அவளது கையின் வரவை உணர்ந்தவன் கார் சாவி வைத்த இடம் நியாபகத்தில் வர பட்டென்று அவளது கையை தட்டிவிட்டு அவனே தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து சாவியை எடுத்து கொண்டான்...

அவனது அந்த உதாசீனத்தில் அவள் விக்கித்து போய் நின்றாள்...

ஒரு நொடி தான் அவள் அப்படி நின்றது மறு நொடி அவன் முன் வழிமறிப்பது போல் வந்து நின்றவள் அடுத்த கணம் அவனை இறுக அணைத்து இருந்தாள்...

"என்னால முடியலை தேவ்... நீங்க என் கூட பேசாம இப்படி விலகி நிற்கிறது எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு தேவ்... இத்தனை வருசமா நான் எவ்வளவு இழந்து இருக்கேன்னு நினைக்கிறேப்போ மனசு ரொம்ப வலிக்குது தேவ்..."

கண்களில் கண்ணீர் வழிய கூறியவள் அவன் உயரத்திற்கு எம்பி அவனது முகத்தை பற்றி முகம் முழுவதும் எண்ணற்ற முத்தங்களை பதித்தாள்...

ஒரு கணம் தான் என்றாலும் அவளின் இதழொற்றல் அவன் மனதை இதமாய் வருடியது என்னவோ உண்மை தான்... ஆனால் அதை அனுபவிக்க முடியாமல் அவள் செய்த செயல்கள் எல்லாம் அவன் கண் முன்னால் அணிவகுத்து நின்றது...

ஆற்றாமையும், இயலாமையும் ஒன்று சேர்ந்து அவனை தாக்க வலுக்கட்டாயமாய் அவளை தன்னிடம் இருந்து பிரித்து எடுத்தவன் அவளை ஆத்திரத்துடன் பார்த்தபடி,

"தப்பே செய்யாமல் இத்தனை வருசம் தண்டனை அனுபவிச்ச எனக்கும் உனக்கு வலிக்கிற மாதிரி தான்டி

வலிக்குது... ஆனா உன்னை விட அதிகமா..." என்றவன் விறுவிறுவென அறையை விட்டு வெளியேறிவிட்டான்...

'இருவருக்கும் வலி கொடுத்த இந்த பிரிவை நான் ஏன் தான் தேர்ந்தெடுத்தேனோ..?' என்று இப்போது அவள் மனதுக்குள் மருகினாள்...

"ஏன் தேவ் என்னை இந்தளவுக்கு காதலிக்கிறீங்க...? உங்க காதல் என்னை குற்றவுணர்ச்சியில் குறுகச் செய்து என்னை உயிரோடு கொல்லுது தேவ்..." வாய்விட்டு புலம்பியவள் புலம்பல் காற்றோடு காற்றாக கலந்தது...

உறையும்...

அன்று காலையில் எழும் போதே வருணிதாவிற்கு மிகவும் உற்சாகமாய் இருந்தது... அதற்கு காரணமும் இருந்தது... இன்று அவர்களின் திருமணநாள் அதாவது அவர்களுக்கு திருமணம் முடிந்து பத்து ஆண்டுகள் ஆகியிருந்தது...

சந்தோசத்துடன் எழுந்தவள் சத்தம் செய்யாமல் குளித்து முடித்துவிட்டு மகள் அருகில் உறங்கி கொண்டு இருந்த கணவன் அருகில் மெதுவே வந்து நின்றாள்... மனதில் இருந்த ஆசை உந்த அவன் அருகில் வந்தவளுக்கு அவனிடத்தில் திருமணநாள் வாழ்த்தை எப்படி சொல்வது என்று தெரியவில்லை...

இடைப்பட்ட இத்தனை வருடங்களில் அவனது வாழ்க்கையை வீணடித்து விட்டு இன்று அவனிடம் எந்த முகத்தை வைத்து கொண்டு வாழ்த்து சொல்வது...? அல்லது எந்த முகத்தை வைத்து கொண்டு அவனிடம் இருந்து வாழ்த்தை பெறுவது...? அவளுக்கு மிகவும் தயக்கமாய் இருந்தது...

அவளையும் அறியாமல் முதல் திருமணநாளை அவளது மனம் நினைத்து பார்த்தது... அவன் எத்தனை சந்தோசமாய் வாழ்த்து சொல்லி தன்னை எழுப்பிவிட்டது, அதன் பின் தன்னிடம் அவன் செய்த குறும்புகள் அனைத்தையும் நினைத்து பார்த்தவளுக்கு இன்று வேதனையாக இருந்தது...

அதே போல் இரண்டாம் ஆண்டு திருமணநாளில் அவனது காதலை நடிப்பு, வேஷம் என்று சொல்லி அவனை காயப்படுத்தி அனுப்பிய தன் மடமையை இப்போது எண்ணியவள் மனதில் தாங்க முடியாத வலி எழுந்து அவளை வலிக்க செய்தது...

முதல் திருமண நாளை தவிர்த்து அடுத்து வந்த திருமணநாட்களில் அவனுக்கு அவள் எந்தவிதத்திலும் சந்தோசத்தை கொடுத்தது இல்லை... அப்படி இருக்கும்

போது இப்போது அவனிடத்தில் போய் எப்படி வாழ்த்து சொல்வது என்று குழம்பி கொண்டு நின்று இருந்தாள்...

அவளின் உணர்வுகளை புரிந்தார் போன்று அப்போது தான் தேவானந்த்தும் கண்விழித்தான்... கண்முன்னே அழகோவியமாய் நின்று இருந்த மனைவியை பார்த்தவன் தன்னை மறந்து அவளை பார்த்து கொண்டு இருந்தான்...

காலை வேளையில் நிர்மலமான மனநிலையில் அவன் தனது மனஸ்தாபத்தை மறந்தவனாய் அவள் தன் காதல் மனைவி என்பதை மட்டும் மனதில் நிறுத்தி அவளை ரசித்து பார்த்தான்...

அவனின் கண்ணில் தோன்றிய ரசனையில் அவளது கன்னத்தில் வெட்கப்பூக்கள் மலர்ந்த போதும், வாழ்த்து சொல்ல இதை விட அழகிய தருணம் அமையாது என்பதை உணர்ந்தவளாய் அவன் அருகில் வந்தவள் அவனது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு,

"இனிய திருமணநாள் வாழ்த்துக்கள்..." என்றாள் புன்னகையோடு...

அவளது வார்த்தைகளில் அத்தனை நேரம் அவனுள் இருந்த இதம் தொலைந்து இறுக்கம் வந்தது... அதையும் மீறி தென்றல் போல் அவனது நெற்றியை வருடி சென்ற அவளது இதழ்கள் அவனோடு பல கதைகள் பேசியது...

கண்களை இறுக மூடி கட்டிலில் சாய்ந்து அமர்ந்தவன் எப்போதும் போல் முயன்று தன்னை கட்டுப்படுத்தி கொண்டு கண்களை திறந்து அவளை பார்த்தான்...

"நாம வாழ்ற வாழ்க்கைக்கு வாழ்த்து ஒண்ணு தான் குறைச்சல்..." அவனது உதடுகள் துயரத்துடன் முணுமுணுத்தது...

"தேவ்..." அவள் அதிர்ந்து போய் அவனை பார்த்தாள்...

அவன் உணர்வற்ற பார்வையுடன் அவளை பார்த்து கொண்டு இருந்தான்... ஆனால் அவன் மனது பலவித

உணர்வலைகளில் சிக்கித் தவித்து கொண்டு இருந்தது அவனுக்கு மட்டுமே தெரியும்...

ஒன்றா, இரண்டா எத்தனை வருடங்கள் மனைவி வருவாள், வருவாள் என்று அவன் காத்திருந்தது... இந்த திருமணநாள் இல்லை என்றால் அடுத்த ஆண்டு திருமணநாளிலாவது அவள் தன்னை புரிந்து கொண்டு தன்னிடம் வந்து சேர்ந்து விடுவாள் என்று முட்டாள்த்தனமாக அவன் காத்திருந்த வலியை இப்போதும் அவனது மனது உணர்ந்தது...

இப்போதும் தானாய் அழைத்து கொண்டு வந்திருக்காவிட்டால் அவள் தன்னோடு தான் வந்திருப்பாளா இல்லை இப்படி வாழ்த்து தான் சொல்லியிருப்பாளா...? இரண்டுமே இந்த ஜென்மத்தில் நடந்து இருக்காது... அப்படி இருக்கும் போது இவளது வாழ்த்து யாருக்கு வேண்டும்...? என்று விரக்தியாய் நினைத்தது அவனது மனம்...

அவனது திருமணமே கேலிக்கூத்தாய் போய்விட்ட பின் அதற்கு வாழ்த்து ஒன்று தான் கேடு...!!!

"தேவ்..." அவள் அழைத்தும் அவன் என்ன என்று கேட்கவில்லை...

அதற்கு மேல் தாங்க முடியாமல் அவன் அருகில் அமர்ந்து அவனது நெஞ்சில் சாய்ந்தவள் கதறி விட்டாள்...

"எதுக்கு தேவ் என்னை உங்களோட கூட்டிட்டு வந்தீங்க... இப்படி உயிரோடு கொல்வதற்காகவா...? இதுக்கு நீங்க என்னை அங்கேயே சாகட்டும்ன்னு அப்படியே வெள்ளத்தில் விட்டுட்டு வந்திருக்கலாமே..." என்றபடி அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது டீசர்ட்டின் காலரை இறுகப்பற்றி கொண்டு,

"ஏன் என்னை காப்பாத்தினீங்க...?" விழிகளில் நீர் வழிய கேட்டவளின் முகத்தை பார்க்கும் போது அத்தனை பரிதாபமாக இருந்தது அவனுக்கு...

அவள் ஒன்றும் அவனது எதிரி அல்லவே... அவள் அவனது மனைவி, அதுவும் காதல் மனைவி அல்லவா... இடையில் ஏற்பட்ட சிறு மனஸ்தாபம் இருவருக்கும் இடையில் இடைவெளி ஏற்படுத்தி இருந்தாலும் அவள் அவனது உயிர் என்பதை மறுக்க இயலுமா...

அதிலும் அவள் சொல்வதில் எந்த தவறும் இல்லையே... அவளை துன்புறுத்துவதற்காகவா அவளை தன்னுடன் அழைத்து வந்தான்...? அவளை சந்தோசமாக வைத்து கொள்ளத்தானே... அதை செய்யாமல் தான் என்ன செய்து கொண்டு இருக்கிறோம் என்று அவனுக்கே அது விளங்கவில்லை...

மகளுக்காக அவளிடத்தில் தான் கோபப்பட்டாலும் அந்த மகளின் நிலைக்கு தானும் பாதி காரணம் அல்லவா...

எப்போதுமே அவன் நியாயவாதி தான்... நல்லவன், எதையும் யோசித்து நிதானித்து செய்பவன்... இன்றும் மனைவியின் வார்த்தையில் அவன் தன்னை பற்றிய சுய அலசலில் ஈடுபட்டான்...

முடிந்து போன எதையும் யாராலும் மாற்ற இயலாது... ஆனால் அதே சமயம் இனி வாழ்கின்ற வாழ்க்கையை மாற்றியமைக்க முயன்றால் தான் என்ன என்று அவனுக்கு தோன்றியது...

'இனி வது பேபியின் மனதை காயப்படுத்த கூடாது...' என்று அவன் மனதுக்குள் முடிவு எடுத்தான்...

"ப்ளீஸ் பேபி... அழாதே..." என்றவனது குரலில் தான் எத்தனை வலி... அவனது முகத்தில் தான் எத்தனை வேதனை...

அதில் அவனது முகத்தை ஆழ்ந்து பார்த்தவள் அதை உணர்ந்தவளாய் தனது அழுத விழிகளை துடைத்து கொண்டாள்...

அவனது கன்னத்தில் கை வைத்து ஆதூரமாய் வருடியவள், "இத்தனை வருடம் செய்த முட்டாள்த்தனமான வேலையை

இப்பவும் நான் செய்ய மாட்டேன் தேவ்... உங்களை வேதனைப்படுத்துற எதையும் நான் செய்ய விரும்ப மாட்டேன் தேவ்... எனக்காக நீங்க வருத்தப்பட வேண்டாம்..."

புரிதலுடன் பேசியவளை இமைக்காது பார்த்தவன் மனதில், 'இந்த புரிதல் ஏன் முன்பே இல்லாமல் போனது வது...?' என்ற கேள்வி எழுந்தது...

அவனது மனதை படித்தவளாய் மனதுக்குள் பதிலளித்தவளின் பதிலை அவளை போல் அவனால் அவளின் விழி வழியே படிக்க முடியாமல் போனது அவனது தூரதிர்ஷ்டம்...

அதற்குள் வர்ஷினி எழுந்துவிட அவர்களுக்கு இடையில் மீண்டும் மௌனம் அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டி கொண்டது...

அன்று சனிக்கிழமை என்பதால் வர்ஷினிக்கு விடுமுறை... அவளை குளிக்க வைத்து உடை மாற்றும் போது தேவானந்த் மகளுக்கான புது உடையை மனைவியிடம் நீட்டினான்...

வருணிதா அதை வாங்கியவள் ஒன்றும் பேசாது மகளுக்கு அணிவித்து விட்டாள்...

"நான் பாட்டி, அத்தை கிட்ட போய் காட்டிட்டு வர்றேன்..." தனது புது உடையை காண்பிக்கும் ஆர்வத்தில் வர்ஷினி வெளியில் ஓடி விட்டாள்...

மகள் சென்றதும் வருணிதா கலைந்து கிடந்த அறையை ஒழுங்குப்படுத்தி கொண்டு இருந்தாள்...

தேவானந்த் அவள் அருகில் வந்து, "க்கும்..." என்று தொண்டையை கனைக்க...

'அப்போ மட்டும் பேபின்னு கூப்பிட தெரிஞ்சுச்சு... இப்போ என்ன க்கும் வேண்டி கிடக்கு...' மனம் சுணங்கியவள் அவனை திரும்பியும் பார்த்தாள் இல்லை...

"வது..." அதற்கும் திரும்பவில்லை...

"வதும்மா..." ம்ஹூம் அவள் திரும்பி பார்க்கவே இல்லை...

"ப்ளீஸ் வது பேபி..." அவனது குரலில் சந்தோசத்தில் கண்கள் மின்ன அவள் திரும்பி பார்த்தாள்...

அவளது முகத்தில் தெரிந்த சந்தோசம், கண்களில் மின்னிய ஆவல் எல்லாம் அவனுக்கும் புரியத்தான் செய்தது... ஆனால் அவளை அணுக முடியாமல் ஏதோ ஒன்று அவனை தடை செய்தது...

"என்ன தேவ்...?" அவளது கேள்வியில் தன்னுணர்வு அடைந்தவன் தயக்கத்துடன் அவளிடம் ஒரு அட்டை பெட்டியை நீட்டினான் அவன்...

மகிழ்ச்சியுடன் அதை வாங்கி பிரித்தவள் கண்கள் ஆச்சிரியத்தில் விரிந்தது... அவளுக்கு பிடித்த நிறத்தில் புடவை வாங்கி வந்து இருந்தான் அந்த காதல் கணவன்...

எத்தனை மன வேறுபாடு இருந்த போதும், எவ்வளவோ கோபம் அவள் மீது இருந்த போதும் அவன் ஒரு போதும் தன்னை மறந்தது இல்லை என்பதை உணர்ந்தவளுக்கு ஆனந்தத்தில் கண்ணீர் வந்தது...

"ரொம்ப பிடிச்சியிருக்கு தேவ்..." புன்னகையுடன் சொன்னவள், "என்னோட தேவ் என்னை மறக்கலைன்னு நினைக்கிறப்போ ரொம்ப சந்தோசமாயிருக்கு தேவ்..."

"நான் எப்பவுமே உன்னை மறந்தது இல்லை... நீ தான் என்னை மறந்திட்ட... இந்த வருசம் மட்டுமல்ல ஒவ்வொரு வருசமும் உனக்காக புடவை எடுத்து வச்சிட்டு காத்திட்டு இருப்பேன் நீ என்னைத் தேடி வருவேன்னு... ஆனா ஒரு முறை கூட நீ என் எதிர்பார்ப்பை, ஆசையை பூர்த்தி செய்யவே இல்லை..." அவளை பார்க்காமல் எங்கோ பார்த்து கொண்டு அவன் பட்டென்று அதை சொன்னான்...

அவன் குரலில் காத்திருந்த வலி அப்பட்டமாய் தெரிந்தது...

நீண்ட நேரம் அவளிடத்தில் இருந்து பதில் வராததில் திரும்பி பார்த்தவன் அவள் மௌனமாய் கண்ணீர்

வடிப்பதை கண்டு வேதனை கொண்டான்...

"வேண்டாம் விட்டு விடு... தப்பு ரெண்டு பேர் மேலேயும் தான் இருக்கு... உன்னை நான் குறை சொல்லியோ இல்லை என்னை நீ குறை சொல்லியோ எந்த பிரயோஜனமும் இல்லை... நீ அழுறதை பார்க்கும் போது நானும் குற்றவுணர்ச்சியில் தவிக்கிறேன்... ப்ளீஸ் பேபி... நல்ல நாள் அதுவுமா அழாதேம்மா..."

அவன் சொன்னதை கேட்டு கண்ணீரை துடைத்தவள், "தப்பு உங்க மேல இல்லை... எல்லா தப்பும் என் மேல் தான்... என்னிடம் மட்டும் தான்... இதுக்காக நீங்க குற்றவுணர்ச்சியில் குறுக தேவையில்லை..."

முதன்முறையாய் தன் மனதை அவனிடத்தில் திறந்தவளின் வார்த்தையின் அர்த்தம் புரியாமல் அவன் அவளை புதிராய் பார்த்து கொண்டு இருந்தான்...

அவன் பார்ப்பதை உணர்ந்தோ என்னமோ அவள் அந்த வார்த்தைகளை உதிர்த்தாள்...

"உங்க மேல வச்ச அதிக காதலால் தான் நான் பிரிஞ்சு போனேன்... நீங்களாவது நல்லா இருக்கணும்ன்னு நினைச்சேன்..." எதையோ நினைத்தவள் ஒரு பெருமூச்சை வெளியிட்டபடி,

"ஆனா நான் தோத்துட்டேன் தேவ்... என் காதல் தோத்துருச்சு... கடைசியில் நீங்க தான் ஜெயிச்சீங்க... உங்க காதல் தான் ஜெயிச்சது..." என்றவள்,

'கடைசியில் எனக்குள் இருந்த சுயநலம் ஜெயிச்சிருச்சு...' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்... அதை வாய்விட்டு சொல்லவில்லை... அதை கூறி அவனை காயப்படுத்த அவள் விரும்பவில்லை...

அவள் கூறியதன் அர்த்தமோ வேறு... அவன் புரிந்து கொண்ட அர்த்தமோ வேறு...

அன்று 'உங்களை சந்தேகப்பட்டே என் காதல் செத்து போய் இறுதியில் நானும் செத்து போயிருவேன்...' என்று அவள் கூறியது இன்று அவனது காதில் அசந்தர்ப்பமாய் ஒலித்தது...

"ஒருவர் தோற்று ஒருவர் வெற்றி பெறுவது நல்ல தாம்பத்திய வாழ்க்கைக்கு அழகல்ல வது... ரெண்டு பேரும் சேர்ந்து வெற்றி பெறுவது தான் நல்ல தாம்பத்திய வாழ்க்கைக்கு அழகு... நீ தோற்று நான் ஜெயிக்க வேண்டாம்... வாழ்க்கையில் தோற்று போன நான் தோற்று போனவனாகவே இருந்துட்டு போறேன்..." என்றவன் மனதில் பாரமேறிய உணர்வுடன் ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியேறினான்...

ஆத்திரத்தில் அறிவிழந்து அவள் செய்த சிறு தவறு இன்று பூதாகரமாய் நின்று அவளை பயமுறுத்தியது... அவனை பார்க்காத வரை மனதை உறுத்தாத ஒன்று இப்போது அவனது வேதனையை அருகில் இருந்து பார்க்கும் போது அவளை மிகவும் உறுத்தியது...

தான் தவறு மேல் தவறு செய்துவிட்டே போகிறோம் என்பதை மட்டும் அவள் உணர்ந்தே இருந்தாள்... இன்று எப்படியாவது அந்த தவறை சரி செய்துவிட வேண்டும் என்று முடிவு செய்தாள்...

கணவன் எடுத்து கொடுத்த புடவையை உடுத்தி கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தவள் கணவனை அழைத்து கொண்டு பூஜையறைக்கு சென்று மாமனார், மாமியார் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள்...

மாமனார், மாமியார் ஆசிர்வாதம் வழங்கிவிட்டு சென்றதும் கணவனும் அவர்களுடன் செல்வதை உணர்ந்து வருணிதா அவனின் கையை பிடித்து தடுத்து நிறுத்தினாள்...

இந்த நொடி வரை தேவானந்த் அவள் சொன்னதை அப்படியே செய்தவன் இப்போது அவளின் செயலில் என்ன என்பது போல் பார்த்தான்...

அப்போது சட்டென்று வருணிதா அந்த காரியத்தை செய்தாள்... அவனின் காலடியில் மண்டியிட்டு அமர்ந்து அவன் பாதம் பணிந்தாள்...

பார்ப்பவர்களுக்கு அவள் ஏதோ அவனிடத்தில் ஆசிர்வாதம் வாங்குகிறாள் என்பது போல் தான் தெரியும்... ஆனால் அவளின் கண்ணீரை தனது பாதத்தின் மீது உணர்ந்தவனுக்கு மட்டுமே தெரியும் அது பாவமன்னிப்பு என்று...

சற்று முன் அப்படி பேசியவள் இப்போது இப்படி செய்வதற்கான காரியத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை...

'என்னைக்கு தான் இவளோட செயல்கள் எனக்கு புரிஞ்சது...' மனதில் ஆயாசம் எழுந்தாலும் அவளின் செயலில் அவனின் மனம் பதறத்தான் செய்தது...

அவசரமாய் குனிந்து அவளை தூக்கி நிறுத்தியவன், "நீ என்னோட சரிபாதி... இந்த மாதிரி என் காலில் விழுந்து என்னை கஷ்டப்படுத்தாதே... மனசு வலிக்குது..." என்றவனை ஆழ்ந்து பார்த்தவள்,

"இத்தனை நாள் கஷ்டப்படுத்தினதுக்கு ஒரு சின்ன பிராயசித்தம்..." என்றவள் மேலே எதுவும் பேசாமல் அவன் முன் குங்குமச்சிமிழை நீட்டினாள்...

சின்னச் செயல் தான் ஆனாலும் அதில் அவனது மனம் முழுவதும் நெகிழ்ந்து போனது... அத்தனை நேர மனவருத்தம் மறைந்து சந்தோசத்துடன் குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் வைத்தான்...

அவனது செயலை கண்மூடி அங்கீகரித்தவள் கண்களில் எதையோ நினைத்து கண்ணீர் வடிந்தது...

கணவன் கட்டிய தாலியும், குங்குமமும் இனி தனக்கு இல்லை என்று மனதுக்குள் மருகியவளுக்கு 'இல்லை இல்லை... அதுக்கு உரிமைக்காரி, சொந்தக்காரி நீ மட்டும்

தான்...' என்று இத்தனை நாள் மௌனத்தில் அவளுக்கு உணர்த்திய கணவன் அவளுக்கு கடவுளாக தெரிந்தான்...

கடவுளை அவள் நேரில் பார்த்தது இல்லை... ஆனால் அந்த கடவுளுக்கு உருவம் என்ற ஒன்று இருந்து இருந்தால் அது நிச்சயம் தேவானந்த்தின் உருவத்தில் தான் இருந்து இருக்கும்... அதில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது அவளுக்கு...

எத்தனை பொறுமை, எத்தனை புரிதல் அவனிடத்தில்... தவறு செய்து அவனது வாழ்க்கையை அழித்த அவளையும் மன்னித்து ஏற்று கொண்டது அவனது பெருந்தன்மையான குணம் அல்லவா...!!!

"வது..." அவனது மென்மையான அழைப்பில் கண்களை திறந்தவள் என்ன என்பது போல் பார்க்க...

"அம்மு கூப்பிடுறா..." அவன் சொன்னதும் அவசரமாய் கண்களை துடைத்து கொண்டவள் பளிச்சென்று அவனை பார்த்து புன்னகைத்து,

"ம்... போகலாம்..." என்றவளை பார்த்தவனுக்கு மிகவும் வருத்தமாய் இருந்தது...

அன்று காலையில் உணவு முடிந்து வெளியில் சென்ற தேவானந்த் அதன் பின் வீட்டிற்கு வரவே இல்லை... கேட்டதற்கு வேலை இருக்கிறது ஒரேடியாய் மாலை வருவதாக கூறிவிட்டான்...

"முதல்ல தான் வேலை வேலைன்னு அலைஞ்சான்... இப்பவும் என்ன வேலை வேண்டி இருக்கு..." பார்வதி கூட மகனை கடிந்து கொண்டார்...

"அப்பாவை திட்டாதீங்க பாட்டி... அப்பா பாவம்..." வர்ஷினி கோபமாய் தந்தைக்கு பரிந்து பேச...

"அச்சோ வர்ஷூ குட்டிக்கு என்னமா கோவம் வருது... இனி உங்கப்பாவை நான் திட்டலைம்மா... சாரி..." பார்வதி மன்னிப்பு கேட்கவும் தான் வர்ஷினி முகம் மலர்ந்தது...

இந்த சிறு வயதில் தாய், தந்தையரை புரிந்து வைத்து இருக்கும் பேத்தியை கண்டு பார்வதிக்கு பெருமையாய் இருந்தது...

மகளின் திருமணநாளிற்கு பத்மா, திருவேங்கடம் அலைப்பேசியில் அழைத்து வாழ்த்து கூறினர்... இடையில் ஒருநாள் அங்கு வந்து பார்ப்பதாக கூறினர்...

அடுத்து பேசிய கிருஷ்ணா வாழ்த்து கூறியவன், "அக்கா... இன்னைக்கு ட்ரீட் என்னோடது... மாமாவுக்கு ஃபோன் பண்ணி நானே சொல்லிர்றேன்..."

"டேய்... நாங்க தான்டா உனக்கு ட்ரீட் கொடுக்கணும்..." என்று சிரித்தவள், "அவருக்கு வேலை இருக்க போகுது தொந்திரவு செய்யாதேடா..."

"நான் கொடுத்தா என்ன... நீ கொடுத்தா என்னக்கா...? நீயும் மாமாவும் சேர்ந்து இருக்கிறதே எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு... அதுக்கு தான் இந்த ட்ரீட்ன்னு வச்சுக்கோயேன்..." என்றவன்,

"என்னது... மாம்ஸ் இன்னைக்கும் வேலைக்கு போயிட்டாரா...? அவரோட கடமை உணர்ச்சிக்கு அளவே இல்லையாக்கா..."

"அவர் வேலை அப்படிடா... நாளைக்கு நீ உன் கல்யாண நாள் அன்னைக்கு என்ன பண்ண போறேன்னு நானும் பார்க்கத்தானே போறேன்..."

"நான் எல்லாம் ஒவ்வொரு கல்யாண நாளைக்கும் ஸ்பெசல் ஹனிமூன் ட்ரிப் போயிட்டு வருவேனாக்கும்..."

தம்பியின் வார்த்தையில் அவளது மனதில் அவர்களது தேனிலவு பற்றிய விசயம் நியாபகத்தில் வந்தது... அன்று கூட கணவனது சின்ன சின்ன சந்தோசத்தை கெடுத்த தன் மீது இப்போது அவளுக்கு கோபம் வந்தது...

வாழ்க்கையில் எத்தனை மகிழ்வான தருணங்களை இழந்து இருக்கிறோம் என்பதை உணர்ந்தவளுக்கு

இழப்பின் வேதனை பெரிதாய் மனதை தாக்கியது...

"அக்கா..." கிருஷ்ணா கத்தியதில் நிகழ்காலத்துக்கு வந்தவள் தம்பியிடம் சில நிமிடம் பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்தாள்...

அதற்கு பிறகு அவளை யோசிக்க அவளது மகள் விடவில்லை... அவளது முழு கவனத்தையும் வர்ஷினி களவாடி கொண்டாள்...

மாலையில் நேரத்தோடு வீட்டிற்கு வந்த தேவானந்த் எல்லோரையும் அழைத்து கொண்டு கோவிலுக்கு சென்றான்... அருகில் இருந்த கடற்கரைக்கு மகளை விளையாட அழைத்து சென்றான்... அவனது செயல் எல்லாமே மிகவும் இயல்பாக தான் இருந்தது... ஆனால் வருணிதாவிற்கு மட்டும் தான் அவனின் செயலில் எதுவோ ஒன்று குறைவது போல் ஒரு தோற்றம் எழுந்து அவளை குழப்பியது...

"வது... என்ன யோசனை...? எல்லோரும் கிளம்பறாங்க பாரு..." அவளது தோளை தொட்டு அழைத்த கணவனது செயலில் தனது யோசனையை தள்ளி வைத்தவள் அவனுடன் இணைந்து நடந்தாள்...

அருகில் நடந்தவன் எதுவும் பேசாமல் நடந்தான்... அவள் தான் அவனை இன்னமும் நெருங்கி அவனது கையோடு தனது கையை கோர்த்து கொண்டாள்... அதற்கும் அவன் ஒன்றும் பேசவில்லை... அமைதியாக வந்தான்...

கிருஷ்ணா குறிப்பிட்ட நட்சத்திர விடுதிக்கு வரும் போது வாயிலில் காத்திருந்த கிருஷ்ணா அவர்களை இன்முகத்துடன் வரவேற்றான்... அவனது பார்வை முழுவதும் சுஜானா மீதே இருந்தது...

அதுவும் புடவையில் இருந்தவளின் அழகு அவனுக்கு காண காண தெவிட்டவில்லை...

கண்களில் மையலோடு அவளை பார்த்தவன் சுற்றுப்புறம் உணர்ந்து தன்னை கட்டுப்படுத்தி கொண்டு

தேவானந்த்துடன் இணைந்து நடந்தான்...

சுஜானாவோ அவனை ஏறிட்டும் பார்க்கவில்லை... பார்த்தால் அவள் மனம் அவள் வசம் கிடையாது என்பதை உணர்ந்தவளாய் இறுக்கத்துடன் இருந்தாள்...

அன்று போல் இன்றும் பலவித உணவு வகைகளை ஆர்டர் செய்த கிருஷ்ணா சுஜானாவை கேள்வியாய் பார்க்க... அவளோ 'நீ எதை உண்டால் எனக்கென்ன...' என்பது போல் அமைதியாய் அமர்ந்து இருந்தாள்...

'என்னடா ஆச்சு இவளுக்கு...? இப்படி மண்டையை காய விடறாளே...' மனதுக்குள் அவனுக்கு சலிப்பாக இருந்தது...

சுஜானா அவனது பொறுமையை நிரம்ப சோதித்து கொண்டு இருந்தாள்...

சீக்கிரமே உணவு உண்டு விட்ட வர்ஷினி அங்கு இருந்த பூங்காவிற்கு விளையாட செல்ல வேண்டும் என்று கூற,

"நான் வர்ஷூ கூட போறேன்..." என்று சுஜானா சின்னவளுடன் எழுந்து சென்றுவிட்டாள்...

கிருஷ்ணா எதிரில் அமர்ந்து இருப்பது அவளுக்கு பெரும் அவஸ்தையாக இருந்தது... அதே சமயம் ஏனோ அவளுக்கு அழுகை வருவது போல் தோன்றியது... அதில் இருந்து தப்பிக்க எண்ணி தான் அவள் வர்ஷினியுடன் வெளியில் வந்தது...

சுஜானா சரியாக உண்ணாமல் எழுந்து சென்றதை கண்ட கிருஷ்ணாவிற்கு உணவு தொண்டைக்குழியில் இருந்து இறங்க மறுத்தது... உடனே சென்று சுஜானாவை பார்க்க வேண்டும் என்று அவனது மனம் துடித்தது...

அப்படி சென்றால் எல்லோரும் தவறாக நினைப்பார்களோ என்று பத்து நிமிடம் உணவை உண்டதாய் பேர் பண்ணியவன் அதற்கு மேல் பொறுக்க முடியாமல் எழுந்துவிட்டான்...

கேள்வியாய் பார்த்த அக்காவிடம், "ரெஸ்ட் ரூம் வரை போயிட்டு வந்திர்றேன்..." என்றவன் அவள் கேள்வி கேட்கும் முன் அங்கிருந்து அகன்று இருந்தான்...

நேரே அந்த விடுதியின் வெளிப்புறம் வந்தவன் அங்கு இருந்த பூங்காவில் விளையாடி கொண்டு இருந்த வர்ஷினியையும், கல்மேடையில் அமர்ந்து இருந்த சுஜானாவையும் கண்டு அவர்களை நோக்கி வந்தான்...

தன்னருகே யாரோ அமர்வதை உணர்ந்து திடுக்கிட்டு போய் எழ போன சுஜானாவின் கையை பிடித்து அமர வைத்த கிருஷ்ணா,

"நான் தான்... ரிலாக்ஸ்..."

'உன்னை பார்த்தால் தான் என் ரிலாக்ஸ் எல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி போயிருதே...' மனதுக்குள் புலம்பியவள் பயத்துடன் அமர்ந்து இருந்தாள்...

சிறிது நேரம் மௌனமாய் இருந்தவன், "இந்த புடவை உனக்கு ரொம்ப அழகாயிருக்கு..."

அவனது பேச்சில் திகைத்து போய் அவனை திரும்பி பார்த்தவள் பின், "அப்படியா..." என்றாள் வெகு சாதாரணமாய்...

அதை கேட்டு அவன் மனம் வெறுத்து போனான்...

'என்னடா இது... ஒண்ணு சந்தோசப்படணும்... இல்லை வெட்கப்படணும்... இது என்ன மாதிரியான ரியாக்சன்...?' மனதுக்குள் குழம்பி போனான் அவன்...

"என்னாச்சு சுஜி... ஏன் ஒரு மாதிரியா பேசுற...?" என்றவனை தீர்க்கமாய் பார்த்தவள்,

"நீங்க ஒரு மாதிரியா பேசுனீங்க... அதான் நானும் அப்படி பேசினேன்..." என்று முகத்தில் அடித்தார் போன்று கூறியவள் வர்ஷினியை அழைத்து கொண்டு சென்றுவிட்டாள்...

'என்ன இது இப்படி பேசிவிட்டு போறா...? ஒருவேளை நான் இப்படி பேசியது அவளுக்கு பிடிக்கலையோ... அவள் மனதில் என் மேல் விருப்பம் இல்லையோ...' என்று நினைத்தவனுக்கு ஒன்று மட்டும் நன்றாக புரிந்தது...

சுஜானா மனதில் தான் இல்லை என்பது மட்டும்... அதற்கு மேல் தன் காதலை எப்படி கொண்டு செல்வது என்று தெரியாமல் திகைத்து போய் அவன் அமர்ந்துவிட்டான்...

பின் உணவுக்கு பணம் கொடுக்க வேண்டுமே என்று நியாபகம் வந்தவனாய் உள்ளே சென்றான்...

"ரெஸ்ட்ரூம் போயிட்டு வர இவ்வளவு நேரமாடா...?" வருணிதா அவனை கடிய...

"அம்மா... மாமா ரெஸ்ட்ரூம் போக..." உண்மையை உளறி கொட்ட முயன்ற வர்ஷினியை கண்டு திகைத்த கிருஷ்ணா வேகமாய் அவள் அருகில் வந்து,

"இந்த ஹோட்டல்ல சாக்லேட் ஐஸ்க்ரீம் புது ஃப்ளேவர்ல நல்லா இருக்கும்... டேஸ்ட் பண்ணி பார்க்கிறியா வர்ஷூ குட்டி..." தேனொழுகும் குரலில் அவன் கூற...

அவனது தேன் குரலில் அவள் மயங்கவில்லை என்றாலும் ஐஸ்க்ரீம் என்ற வார்த்தையில் மயங்கிய சின்னவள் தான் சொல்ல வந்ததை மறந்து போனாள்...

'உஷ்... ஹப்பாடா... இப்பவே கண்ணை கட்டுதே சாமி...' என்றபடி அமர்ந்தவனின் பார்வை வட்டத்தில் அவனை உணர்ச்சியற்ற பார்வையுடன் பார்த்த சுஜானா வந்து விழுந்தாள்...

அவளை கண்டதும் அவனது மனதில் ஒரு ஏமாற்றம், வேதனை, வலி எழத்தான் செய்தது... அதையும் மீறி அவனது 'டோன்ட் கேர்' மனமோ,

'அட போகட்டும் விடு கிருஷ்... ஊரு உலகத்துல இவ மட்டும் தான் பொண்ணா...? எத்தனையோ பொண்ணுங்க உனக்காக ஏங்கிட்டு இருக்க, நீ ஏன் இந்த

கொத்தவரங்காவை பிடிச்சு தொங்கிட்டு இருக்க... ப்ரீயா விடு கிருஷ்...' என்று மனதை தேற்றி கொண்டவன் அதன் பின் கிளம்பும் வரை அவளை திரும்பி பார்க்கவில்லை...

அதற்கும் சுஜானாவின் முகம் சுருங்கி போனது...

'ஓ... சும்மா ஜொள்ளு விடத்தான் சுத்தி சுத்தி வந்தானா...? நான் மசியலைன்னதும் ச்சீ ச்சீ இந்த பழம் புளிக்கும் வேண்டாம்ன்னு போயிட்டானாக்கும்... போயேன் எனக்கென்ன...' அவளும் மனதுக்குள் வீராப்பாய் நினைத்து கொண்டாள்...

எல்லோரும் கிருஷ்ணாவிடம் விடை பெற்று கிளம்ப சுஜானா அவன் புறம் திரும்பாமல் செல்ல, அவனும் மறந்தும் அவள் பக்கம் திரும்பி பார்க்கவில்லை...

இருவரும் ஒருவரை ஒருவர் வேண்டாம் என்று எண்ணி கொண்டே, ஒருவரை ஒருவர் அதிகம் நினைத்து திட்டி கொண்டு இருந்தனர்...

வீடு வந்ததும் காரில் இருந்து இறங்கிய தேவானந்த் வரும் போதே உறங்கி விட்ட மகளை மனைவியிடம் இருந்து தூக்கி கொண்டு வீடு நோக்கி நடந்தான்...

தனது அறைக்கு செல்ல முயன்றவனை பார்வதியின் குரல் தடுத்து நிறுத்தியது...

"வர்ஷூவை என் கிட்ட கொடு தேவா..." கணவன், மனைவிக்கு தனிமை கொடுக்க வேண்டி இங்கிதமாய் அவர் சொல்ல...

அவரின் பேச்சின் அர்த்தம் புரிந்தவனாய் நின்றவன் அன்னையை பார்த்து, "அம்மு தான் எங்களோட முதல் சந்தோசம்..." என்றான்...

"அதை நான் இல்லைன்னு மறுக்கலையேப்பா... அந்த சந்தோசத்தை இன்னைக்கு ஒரு நாள் எங்களுக்கு கொடுன்னு தான்னே நானும் சொல்றேன்..."

"இல்லைம்மா... அம்மு இல்லாத நிலையை என்னால் யோசிச்சு கூட பார்க்க முடியலை... ப்ளீஸ்ம்மா..." அவன் சொல்லவும்...

"நீ போ தேவா..." சிவநேசன் சொல்லவும் அவன் மகளுடன் அறைக்கு செல்ல... நடந்த சம்பாஷணைகளை கேட்ட வருணிதா அமைதியாய் அவனை பின் தொடர்ந்தாள்...

மகன் பேசியதை கேட்டு பார்வதியின் முகம் வேதனையில் ஆழ்ந்தது...

"இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படி கஷ்டப்படற பாரு..."

"இன்னமும் நடக்க வேண்டியது நடக்கலையேன்னு தான் நான் கஷ்டப்படறேன்..." மூக்கை உறிஞ்சினார் பார்வதி...

"பாரு... இங்கே என்னை பார்..." என்றவர், "அந்த காலத்துல கூட்டு குடும்பத்துல ரெண்டு பிள்ளைகளோட நீயும், நானும் சந்தோசமா வாழலையா என்ன... அது மாதிரி தான் இதுவும்..."

கணவரின் பேச்சில் விழி விரித்தவருக்கு கணவர் கூற வந்தது புரிய அவருக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... மகனின் வாழக்கையை பற்றி இனி தான் கவலைப்பட வேண்டியது இல்லை என்று நிம்மதியாய் உணர்ந்தார்...

தூங்கிய மகளை படுக்கையின் நடுவில் கிடத்தி போர்வையை போர்த்தி விட்ட தேவானந்த் தானும் உடையை மாற்றி கொண்டு மகளின் அருகில் படுத்து சோர்வுடன் விழிகளை மூடினான்...

அவனது செயலை பார்த்து கொண்டு இருந்த வருணிதாவிற்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது...

எப்படி அவனை அணுகுவது என்று தெரியாமல் சிலபல நிமிடங்களை வெறுமனே கடத்தியவள் பெரும்

மனப்போராட்டத்திற்கு பின் தயக்கத்துடன் கணவனிடம் வந்தவள் அவன் அருகில் அமர்ந்தாள்...

அவள் அமர்ந்ததை உணர்ந்து விழி திறந்து அவளை கேள்வியாய் பார்த்தான் அவன்...

"அம்மு தான் உங்களோட சந்தோசம்ன்னா அப்போ நான் உங்களோட சந்தோசம் இல்லையா...?" என்று கேட்டவள் அவன் நெஞ்சில் சாய்ந்தாள்...

அப்போதும் அவன் அமைதியாய் படுத்து இருந்தான்...

கணவன் தன்னை முத்தமிடுவான், அணைப்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு அவனது இந்த அமைதி மனதை ஏதோ செய்தது...

அவனை ஏறிட்டு பார்த்தவள், "தேவ்..." என்றழைத்து அவனை அணைத்து கொள்ள...

அதில் அவனது உடல் சட்டென்று இறுகியது... மெல்ல தன்னை அணைத்து இருந்த அவளது கையை விடுவித்தவன்,

"நான் என் உணர்வுகளை கொன்று பல வருடங்களாயிற்று..." வேதனைக் குரலில் கூறியவன் மனைவியை பார்க்காது மகளின் புறமாய் திரும்பி படுத்தான்...

அவன் வேண்டும் என்று அதை கூறவில்லை... இத்தனை வருடமாய் தனது இளமை உணர்வுகளை கொன்று வலிய தனக்கு தானே அவன் போட்டு கொண்ட முள்வேலியானது அவனை இப்படி பேச வைத்தது...

அவள் என்று அவனை விட்டு நீங்கினாளோ அன்றே அவன் தனது உணர்வுகளை துடிக்க துடிக்க, வலிக்க வலிக்க கொன்று இருந்தான்...

இன்று வந்து அவள் கேட்டதும் அதை உயிர்ப்பிக்க அவன் என்ன கடவுளா...!!!

கணவனது வார்த்தையில் திகைத்து போய் எழுந்தவள் ஓரடி பின்னால் நகர்ந்து அதிர்ந்து போய் நின்றாள்...

அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளுக்கு மரணவலி என்றால் என்ன என்பதை அப்பட்டமாய் உணர்த்தியது...

உறையும்...

கணவனது வேதனை சொற்களில் அதிர்ந்து போன வருணிதா திகைத்து போய் படுக்க கூட தோன்றாமல் அந்த அறையின் ஒரு மூலையில் முடங்கி போனாள்...

'நான் என் உணர்வுகளை கொன்று பல வருடங்களாயிற்று...' அவனது வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதில் ஒலித்து அவளை வேதனையில் மருகச் செய்தது...

காலையில் இருந்து அவனை கண்டு அவளது மனதை அரித்து கொண்டு இருந்த விசயம் இப்போது அவளுக்கு புலப்படலானது... புலப்பட்ட உண்மையோ அவளுக்கு வேம்பாய் கசந்தது...

எதற்காக இத்தனை வருடங்கள் அவனை விட்டு விலகி இருந்தாளோ அந்த வலி, வேதனையை அவன் இன்னமும் அனுபவித்து கொண்டு இருப்பதை நேரில் கண்டவளுக்கு அவனின் காதலை நினைத்து மகிழ்வதா இல்லை அவனது இத்தகைய பெரும் துயரத்தை நினைத்து வருந்துவதா என்று அவளுக்கு தெரியவில்லை...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் கணவனை இந்த நிலைக்கு ஆளாக்கிய தன் மீதே அவளுக்கு வெறுப்பாய் இருந்தது...

'உங்களோட காதலுக்கு நான் கொஞ்சம் கூட பொருத்தம் இல்லாதவள் தேவ்... காதலில் நம்பிக்கை முக்கியம்... எந்த நிலையிலும் காதலிச்சவங்களை சந்தேகப்பட கூடாது... ஆனால் நான் உங்களை சந்தேகப்பட்டு ரொம்ப அவமானப்படுத்திட்டேன் தேவ்... அன்னைக்கு நீங்க என் கிட்ட கெஞ்சினப்போ தப்பு செஞ்சிட்டு ஒண்ணும் செய்யாத மாதிரி கெஞ்சுறதை பாருன்னு கோபம் தான் என் மனசில் வந்தது... ஆனால் ஒரு தடவை கூட என் தேவ் அப்படி செஞ்சியிருக்க மாட்டாருன்னு நான் நினைக்கவே இல்லை...'

'அப்போ நான் ஏன் அப்படி நினைச்சேன்...? என் மனசில் எந்த சாத்தான் வந்து புகுந்து உங்களை சந்தேகப்பட வச்சது...? எத்தனை ஆதாரங்கள் இருந்தாலும் என் தேவ் அப்படிப்பட்டவர் இல்லைன்னு எனக்கு ஏன் தோணவே இல்லை... அப்போ நான் உங்களை உண்மையா காதலிக்கலைன்னு தானே அர்த்தம் தேவ்... அது தான் உண்மையும் கூட... நான் உங்களை உண்மையா காதலிக்கலை தேவ்... அதனால் தான் இந்த சந்தேகம்... உங்கக் கிட்ட இருந்த உண்மை, நேர்மை என் கிட்ட இல்லாமல் போயிருச்சு தேவ்...'

மனதுக்குள் நினைத்தவளுக்கு அன்று தேவானந்த் கடைசி முறையாய் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு சென்றது இப்போதும் அழியாமல் நியாபகத்தில் இருந்தது...

'தேவ்... அன்றைய உங்க பார்வைக்கான அர்த்தம் இப்போது எனக்கு புரியுது தேவ்... தவறு செய்யாத ஒரு நேர்மையாளனின் பார்வை அப்படி தான் இருக்கும்ன்னு இப்போ எனக்கு புரியுது... என் தேவ் தப்பு செய்யலை... என் தேவ் எனக்கு நம்பிக்கை துரோகம் செய்யலை... என் தேவ் கனவில் கூட எனக்கு துரோகம் பண்ண நினைக்க மாட்டார்... என் தேவ் ரொம்ப நல்லவர்... என்னை காதலிச்சதை தவிர வேறு எந்த தவறும் செய்யாதவர்...' என்று மருகியவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

சுவற்றில் சாய்ந்து அமர்ந்து இருந்தவளின் கண்கள் முதுகு காட்டி திரும்பி படுத்து இருந்த கணவனை வெறித்தது...

'ஏன் தேவ் என்னை மாதிரி ஒருத்தியை இந்தளவுக்கு காதலிக்கிறீங்க...? உங்களோட காதலே என்னை குற்றவுணர்ச்சியில் கூனிகுறுகச் செய்யுது... நான் உங்களுக்கு, உங்க காதலுக்கு கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவள்ன்னு தானே இத்தனை நாளாய் விலகி இருந்தேன்... நீங்க உயிரை கொடுத்து நேசிக்கும் அளவுக்கு நான் மாசற்றவள் கிடையாது... என் காதலில் நிறைய குறைகள் இருக்கு... உங்களுக்கு உங்க மேல் மாசற்ற அன்பு

காண்பிக்க கூடிய பெண் தான் மனைவியா வரணும்... என்னை மாதிரி பெண் இல்லை...'

'இத்தனை நாளில் என்னை மறந்துட்டு வேறு ஒரு பெண்ணை நீங்க ஏன் தேவ் கல்யாணம் பண்ணிக்கலை...? உங்களை சந்தேகப்பட்டு போனவளை நீங்க வெறுத்து ஒதுக்கி இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டு என் கண் முன்னாடி நீங்க சந்தோசமா வாழ்ந்து காட்டி இருக்க வேண்டாமா தேவ்...? அப்படி நீங்க பண்ணி இருந்தா கூட இப்போது இருக்கும் என் குற்றவுணர்ச்சி கொஞ்சமாவது குறைய வாய்ப்பு இருக்குதே தேவ்... எனக்காக நீங்க ஏன் இத்தனை வருசமா எந்த நம்பிக்கையில் காத்திட்டு இருக்கீங்க...?'

'நான் தவறை உணர்ந்து உங்க கிட்டே வருவேன்னா... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா தேவ்... நான் தவறை உணராமல் இருந்து இருந்தா கூட கொஞ்ச நாளில் உங்க பிரிவு தாங்காம உங்களை தேடி நான் வந்திருப்பேன்... ஆனா இப்போ நான் இத்தனை வருசமா வராம இருக்கிறதுக்கு காரணம் நீங்க எந்த தப்பும் பண்ணலைன்னு எனக்கு தெரிஞ்சதால தான்... என்னோட தப்பை நான் உணர்ந்ததால தான்...' என்று நினைத்தவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்...

'நீங்க எந்த தப்பும் செய்யலை தேவ்... எல்லா தப்பும் என்னோடது தான்... சரியா யோசிக்காம புத்தி பேதலிச்சு முட்டாள்த்தனமா நடந்துக்கிட்டது என்னோட தவறு தான்...' என்று மனதுக்குள் கதறியவள் கண்முன்னே கடந்து சென்ற நீண்ட நெடிய கொடிய ஏழு வருடங்களின் துன்பங்கள் காட்சியாய் விரிந்தது...

அன்று தேவானந்த் அவளிடம் விடைப்பெற்று சென்ற பின் பெரும் கவலையில் ஆழ்ந்தாள் வருணிதா... அதிலும் அவன் மகளிடத்தில் பேசி சென்ற வார்த்தைகள் அவளது மனதை வாள் கொண்டு அறுத்தது...

என்ன தான் அவன் மீது கருத்து வேறுபாடு இருந்தாலும் பெற்ற மகளை அவனிடத்தில் இருந்து பிரித்து வைப்பது

அவளுக்குமே நியாயமாக தோன்றவில்லை...

அதனால் அவள் தந்தையிடம் சென்னைக்கு செல்வது குறித்து பேச ஆரம்பித்தாள்...

"சின்னக் குழந்தையை வச்சிக்கிட்டு சென்னையில் தனியா போய் என்ன பண்ண போற...? உன் மாமியார் வீட்டுக்கு போறேன்னு சொல்லு நாங்களே சந்தோசமா உன்னை கொண்டு போய் விடறோம்... அதை விட்டுட்டு தனியா அங்கே போயிருப்பது எனக்கு சரியா படலை... என்னாலையும் இங்கே உங்கப்பாவை, வீட்டை போட்டுட்டு வர முடியாது..." பத்மா அதை ஆட்சேபித்த போதும் வருணிதா அழுத்தமாய் தனது வார்த்தையில் பிடிவாதமாய் இருந்தாள்...

அப்போதும் திருவேங்கடம் தான் அவளுக்கு உறுதுணையாய் பேசினார்...

"சரி வருணி... சென்னைக்கு உன்னை நாங்க அனுப்பறோம்ன்னே வச்சுக்குவோம்... அங்கே சென்னையில் போய் என்ன பண்ண போற...?"

தந்தை கேட்ட கேள்விக்கு சிறிது நேரம் விழித்தவள் பின் மெதுவே, "தேவ் குழந்தையை பிரிஞ்சு கஷ்டப்பட கூடாதேன்னு..."

"இப்போ உன்னை பிரிஞ்சி கஷ்டப்படுறாரே அதுக்கு என்ன பண்ண போற...?" பத்மா படபடத்தார்...

அதற்கு பதில் பேசாமல் தலை குனிந்தாள் அவள்... ஒன்றும் பேசாது நிற்கும் மகளை பார்த்தார் திருவேங்கடம்...

அவளுக்கு தன் கணவன் மீது இருக்கும் இந்த சிறு கரிசனம் நாளடைவில் அவளை தன் கணவனோடு சேர்ந்து வாழ வைக்காதா என்ற நப்பாசையில் அவர் இதற்கு சம்மதித்தார்...

"ஓகே வருணி உன் இஷ்டம் போல் சென்னைக்கு போகலாம்... ஆனா அங்கே போய் சும்மா இருந்து மனசை

கஷ்டப்படுத்திக்கிட்டு இருக்க கூடாது... ஒண்ணு உன் படிப்பை வீணாக்காம ஒரு கம்பெனியை ஆரம்பி... இல்லை ஏதாவது கம்பெனியில் வேலைக்கு போ..."

"இல்லைப்பா... இனி நான் கன்ஸ்ட்ரக்சன் ஃபீல்டில் வேலை செய்யறதா இல்லை..." மனதில் எழுந்த கசப்பு உணர்வோடு உறுதியாய் மறுத்தாள் அவள்...

இந்த படிப்பும், அதனால் வந்த பதவியும் தானே தனது வாழ்க்கைக்கு எதிராய் போனது என்று நினைத்தவளுக்கு அந்த படிப்பே கசந்தது... அதன் மூலம் வரும் எந்த பலனையும் அனுபவிக்க அவளுக்கு பிடிக்கவில்லை... அதனால் திட்டவட்டமாக அந்த வேலையை செய்ய மறுத்தாள்...

சிறிது நேரம் யோசித்த திருவேங்கடம், "கொஞ்ச நாள் பொறும்மா... எல்லா ஏற்பாடும் பண்ணிட்டு நான் சொல்றேன்..."

மகளிடம் சொன்னவர் சொன்னது போல் ஒரு மாதத்தில் தனது நிறுவனத்தின் பொருட்களை சந்தைப்படுத்தும் பொறுப்பை வருணிதாவிடம் கொடுத்து சென்னையில் அதற்கு என்று ஒரு அலுவலகத்தை திறந்து கொடுத்தார்... கூடவே கிருஷ்ணாவையும் வருணிதாவிற்கு துணையாக இருக்கச் செய்தார்... அப்படியே வருணிதாவிற்கு உதவுவது போல் அவனையும் தொழிலை கற்று கொள்ளச் செய்தார்...

சென்னை வந்ததும் தான் வருணிதாவிற்கு பெருத்த நிம்மதியாய் இருந்தது... கணவனிடம் இருந்து மகளை பிரிக்க கூடாது என்று நினைத்தவளின் நினைவு நனவாகியதில் அவளுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

மகளை கணவனிடம் அனுப்பும் போது தானும் உடன் சென்றுவிடுவோமா என்று அவளது மனம் ஒவ்வொரு தடவையும் துடிக்கும், ஏங்கும்... ஆனால் அதை செய்யவிடாமல் கணவனுக்கு எதிரான ஆதாரங்கள்

எல்லாம் அவள் கண்முன் கை கொட்டி சிரிக்கும்... அதில் அவளது மனம் வெறுத்து போய்விடும்...

சில நேரங்களில் அதையும் மீறி அவனிடம் செல்ல அவளது மனம் ஆசை கொள்ளும்...

'தொழிலில் தானே அவர் அப்படி நடந்து கொண்டார்... என் மேல் வைத்த காதலில் அவர் எந்த குறையும் வைத்தது இல்லையே...' என்று அவளது ஒரு மனம் தவித்த போதும்,

'அந்த காதல் உண்மையாய் இருந்து இருந்தால் அவரால் இது போல் செய்து இருக்க முடியுமா...' என்று அவளது இன்னொரு மனது கேள்வி கேட்கும்...

இரு மனப்போராட்டத்தில் அவளது தான் சிக்கி தவித்து வாடி போனாள்...

சென்னை வந்து மூன்று மாதங்கள் இருக்கும் போது ஒருநாள் அவள் டெண்டருக்கு கொட்டேசன் கொடுத்த அந்த இடத்தின் வழியே அவள் செல்ல நேர்ந்தது... அப்போது அங்கு கட்டுமான வேலை நடப்பதை பார்த்தபடி சென்றவளுக்கு துயரம் மனதை அடைத்தது...

கண்கள் கலங்க அந்த கட்டுமான வேலையை பார்த்தபடி சென்றவள் கண்ணில் அங்கு இருந்த பெயர்ப் பலகை தென்பட்டது... அதில் கணவனது 'சிவா கன்ஸ்ட்ரக்சன்' பெயர் இல்லை... அதில் இருந்தது முரளியின் கட்டுமான நிறுவனத்தின் பெயர்...

அந்த நொடி அவளுக்கு மூச்சு நின்றுவிடும் போல் நெஞ்சு அடைத்தது... அவளுக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சியில் மூளை செயல்பட மறுத்தது... அடுத்த நொடி தான் சென்று கொண்டு இருந்த வேலையை கூட மறந்தவளாய் வீட்டிற்கு திரும்பியவள் அறைக்குள் சென்று கதவை சாத்தி கொண்டாள்...

மனதில் எழுந்த உணர்வுகளை வாய்விட்டு அழ அவளுக்கு தனிமை தேவைப்பட்டது...

'ம்மா...' என்றழைத்த வர்ஷினியை கூட கவனிக்கும் மனநிலையில் அவள் இல்லை... துளசி அவளை ஒரு மாதிரியாய் பார்த்து கொண்டு குழந்தையை எடுத்து கொண்டு சென்றுவிட்டார்...

அறைக்குள் நுழைந்தவளின் தேகம் படபடவென நடுங்கியது... தான் செய்துவிட்ட தவறின் அளவு புரிந்ததும் அவளுக்கு உலகமே தலைகீழாய் சுழன்றது போல் இருந்தது...

தொழிலுக்காக கீழ்த்தரமாய் நம்பிக்கை துரோகம் செய்து தனது முதுகில் குத்திவிட்டதாய் அன்று கணவனை சாடியது அவள் கண்முன்னே விரிந்தது...

எத்தகையை கொடிய வார்த்தைகளை அவள் பேசியிருக்கிறாள்... அதை எல்லாம் அவன் எப்படித்தான் தாங்கி கொண்டானோ...? எல்லாம் தனக்காக தானே என்று இப்போது எண்ணியவளுக்கு கண்களில் கண்ணீர் பெருகியது...

'பெண்புத்தி பின்புத்தி...' என்பதற்கு இணங்க நடந்து கொண்ட தனது மடமையை எண்ணி இப்போது அழுது கரைந்தாள்...

தொழிலில் முன்னேற எதையும் செய்வான் கணவன் என்று அன்று அவள் குற்றம் சுமத்தினாள்... ஆனால் அவனோ அவளுக்காக அந்த தொழிலையே விட்டு கொடுத்து இருக்கிறான் என்றால் அவனது காதலை என்னவென்று சொல்வது...

அவள் சொன்னது போல் அவனது தொழில், அதன் முன்னேற்றம் மட்டுமே அவன் கருதி இருந்தால் இந்நேரம் 'சிவா கன்ஸ்ட்ரக்சன்' அல்லவா அங்கு வேலை செய்து கொண்டு இருக்க வேண்டும்... அதை அவன் முரளி நிறுவனத்திற்கு விட்டு கொடுத்து இருக்கிறான் என்றால் அது தனக்காக தான் என்பதை கூட புரிந்து கொள்ளாத முட்டாள் அவள் இல்லையே...

'உனக்கு எந்த கஷ்டத்தையும் நான் கொடுக்க விரும்ப மாட்டேன்...' என்று அன்று கணவன் சொன்னது இப்போது தாமதமாய் அவளது புத்தியில் உறைத்தது... காலம் கடந்து உறைத்து என்ன பயன்...

இப்போது கணவனது காதல் மனம் புரிந்தது... அதன் தூய்மை, நேர்மை புரிந்தது... ஆனால் என்ன அவனை உயிரோடு கொன்றுவிட்டு ரொம்ப தாமதமாய் புரிந்து இருக்கிறது...

இப்போதும் அவளிடம் கணவனுக்கு எதிரான ஆதாரங்கள் இருக்கிறது... ஆனால் இப்போது அவளது கண்ணுக்கு அது எல்லாம் வெறும் வெற்றுக் காகிதமாக தோன்றியது... அன்று பெரியதாய் தோன்றிய ஒன்று கணவனது காதல் முன் மதிப்பிழந்து சிறியதாய் போனது...

'எத்தனை ஆதாரங்கள் இருந்த போதும் என் தேவ்வை நான் சந்தேகப்பட்டு இருக்க கூடாது...' காலம் கடந்து புலம்பி அழுதாள்...

ஓடி சென்று அவனிடத்தில் மன்னிப்பு கேட்க அவளது மனம் துடித்தது... ஆனால் தவறை உணர்ந்த இன்னொரு மனமோ,

'அவனது காதலுக்கு நீ கொஞ்சமும் பொருத்தம் இல்லை... சந்தேகப்பட்டு அவனது காதலை கொன்றவள் நீ.. இனி நீ போய் கெஞ்சினாலும், மன்னிப்பு கேட்டாலும் அவனது காதலை கொன்றது கொன்றது தானே... அதை திரும்ப உயிர்த்தெழ செய்வது என்பது நடவாத காரியம்... வேண்டாம் உன்னை போல் சந்தேகம் கொண்டவள் அவனுக்கு வேண்டாம்... அவனது தூய்மையான காதலுக்கு நீ தகுதியான பெண்ணில்லை...'

மனசாட்சி அவளை இடித்துரைக்க அவள் அப்படியே இடிந்து போனாள்... உண்மை தானே அவனது காதலை கொன்ற பின் அவனிடத்தில் போய் காதல் யாசகம் கேட்டு நின்றால் அது அவனது காதலை அவமானப்படுத்துவது போல் அல்லவா ஆகும்...

அவளுக்கு தெரியும் எத்தகைய குறை இருந்தாலும் அவன் அவளை ஏற்று கொள்வான் என்று... ஆனால் அவளின் குற்றவுணர்ச்சி அவளது மனசாட்சியை கொல்ல அவனிடம் செல்ல துடித்த மனதை முயன்று அடக்கி தனக்கு தானே முள்வேலி போட்டு கொண்டு அதற்குள் வாழ பழகி கொண்டாள்...

என்றாவது தேவானந்த் அவளை வெறுத்து ஒதுக்கி மறுமணம் செய்து கொள்வான் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தாள்... அவனோ அவளுக்காக ஒவ்வொரு நொடியும் காத்திருந்து, தவித்திருந்து அவளது எண்ணத்தை தவிடு பொடியாக்கிவிட்டான்...

முழுதாய் ஏழு வருடங்கள் சென்ற நிலையில் இனி விவகாரத்து கூட தேவையில்லை எளிதில் பிரிந்துவிடலாம் என்று அவள் எண்ணி கொண்டு இருந்த போது தான் கிருஷ்ணா, சுஜானா காதல் வந்து அவளது புரட்டி போட்டது...

மீண்டும் தனது மனசாட்சியுடன் போராடியவளுக்கு இப்போது எல்லாம் தற்கொலை நியாபகம் அதிகம் வந்து போனது... தான் உயிரோடு இருப்பதால் தானே எல்லோருக்கும் பிரச்சினை... தான் உயிரை விட்டாலாவது கணவன் வேறு ஒரு திருமணம் செய்து கொள்வான் இல்லையா என்று நினைத்தவளுக்கு அந்த உயிரை விடத்தான் அவ்வளவு பயமாய் இருந்தது...

அந்த நேரத்தில் தான் எதிர்பாராவிதமாய் வெள்ளம் வீட்டுக்குள் புகுந்து அவளது தற்கொலை எண்ணத்தை உறுதி செய்தது... நொடிக்கு ஒரு தரம் வெள்ளநீர் உயர்ந்து வருவதை பார்த்தவளுக்கு மனதில் பீதி கிளம்பினாலும் அதையும் மீறி ஒரு சிறு நிம்மதி தோன்றத்தான் செய்தது... அப்படியாவது தன்னுயிர் போகட்டுமே என்று...

உணவு மேசையில் ஏறியமர்ந்தவளுக்கு கணவன் மற்றும் மகளின் நியாபகமே...

மகளின் நியாபகம் வந்ததும் அவளை கணவன் தன்னை விட நன்றாக பார்த்து கொள்வான் என்று நம்பிக்கை தோன்றியது...

ஆனால் அதே சமயம் கணவன் நியாபகம் வந்து அவளை அதிகமாய் வாட்ட துவங்கியது...

'நான் இல்லை என்றால் என் தேவ்வை யார் பார்த்து கொள்வது...' என்று நினைத்தவளுக்கு அவனை யாரோ முகம் அறியா பெண் காதலுடன் கனிவுடன் அவனது மனைவியாய் கவனித்து கொள்வது போல் கற்பனை தோன்றி அவளை வலிக்க செய்தது...

கற்பனை தான் என்றாலும் கூட அந்த காட்சி அவளது உயிர் வரை சென்று வலித்தது... தாங்க முடியாத வலியுடன் முழங்காலில் முகம் புதைத்து அழுது கொண்டு இருந்த போது தான் கணவனது குரல் கேட்க கண்கள் மின்ன நிமிர்ந்து பார்த்தாள்...

எதிர்பாராமல் அவனை கண்டவள் அவனது உருவத்தை காதலோடு கண்ணில் நிரப்பி கொண்டு இருந்த போது மனதில் தான் நினைத்தது நியாபகத்தில் வர அதுவரை இருந்த இதமானது மறைய உணர்ச்சியற்று அவனை பார்த்தாள்...

அதிலும் அவன் அவளை அழைத்த போது அதற்கு மறுத்தவள் தான் எடுத்த முடிவினை செயலாற்ற எண்ணி அவனிடத்தில் தான் இறந்து போக போவதாய் கூறிய போது அவளது மனம் வாழ்வுக்கும், சாவுக்கும் இடையில் போராடியது அவளுக்கு மட்டுமே தெரியும்...

கணவனை கண்ணால் காணாதவரை அவனை வேறு ஒருத்தியுடன் பங்கு போட துணிந்த மனம், அவனை கண்ட பின்போ அந்த எண்ணமே அவளுக்கு உயிர் வேதனையை தந்தது...

அப்போது அவன் தானும் அவளோடு சேர்ந்து இறந்து போவதாய் கூறிய போது அவள் திடுக்கிட்டு போனாள்...

அந்த நேரத்திலும் அவனது காதல் அவளது மனதை தென்றலாய் வருடி சென்றது என்னவோ உண்மை...

வேறுவழியின்றி கதவை திறந்தவள் அவனுடன் செல்ல ஒரு மனம் துடித்த போதும் மறுமனமோ,

'இதுவரை நீ அவனை காயப்படுத்தியது போதும்... இனியும் அவனை படுத்தாதே...' என்று எச்சரிக்கை செய்ய, அவன் அழைத்தும் போக மறுத்து அவள் அப்படியே அசையாது நின்றாள்...

அப்படி இருந்தும் பிடிவாதமாய் அவளை தன்னுடன் அழைத்து சென்றவனின் காதல் அவள் உயிர்வரை சுகமாய் தீண்டி சென்றது என்றால் அது தான் உண்மையும் கூட... அப்போது அவன் அடித்தது கூட அவளுக்கு வலிக்கவில்லை...

காதல் கணவனே விரும்பி வந்து அழைக்கும் போது அவளால் அவனை மறுக்க முடியவில்லை... அவனுடன் வாழ்ந்து பார்த்தால் தான் என்ன என்று அவளது மனம் சற்று சுயநலமாய் யோசித்தது...

அதை தான் அவள் இன்று காலையில் அவனிடத்தில் அப்படி கூறினாள்...

அவளது காதல் தோற்றுவிட்டதாய் கூறியதன் அர்த்தம், அவனை விட்டு விலகி இருக்க வேண்டும் என்று அவளது காதல் மனம் முடிவு செய்து இருந்தது அல்லவா அந்த முடிவு அவனது காதலில் முன் தோல்வியுற்றதை தான் அவள் அப்படி சொன்னது...

அவனது காதல் அவளது காதலை வென்றுவிட்டது என்ற அர்த்தத்தில் தான் அவள் அப்படி சொன்னது...

இறுதியில் தனது சுயநலமான எண்ணத்தால் கணவனை அதிகமாய் வாட்டி வதைக்கிறோமோ என்று மனதுக்குள் மருகியவளாய் அவள் அமர்ந்து இருந்தாள்...

கணவனது உணர்வுகளை உயிர்ப்பிக்கும் வகையறியாமல் அதை கொலை செய்த கொலைக்காரியாய் அவன் முன் குற்றவாளியாய் நின்று இருந்தாள் அவள்...

அந்த நினைவே அவளை உயிரோடு வதைத்து கொன்றது...

அவனை நம்பிக்கைத் துரோகி என்று குற்றம் சுமத்தியவள் கடைசியில் அவள் தான் அவனுக்கு துரோகம் இழைத்தவளாகி போனாள்...

கணவனது துரோகத்திற்கு அவனை தள்ளி வைத்தவள் தான் அவனுக்கு செய்த துரோகத்திற்கு அவனது இந்த புறக்கணிப்பு ஏனோ அவளது மனதிற்கு சற்று இதமாக இருந்தது என்னவோ உண்மை...

'தேவ்... உங்களை, உங்க உணர்வை கொன்ற பாவி நான்... இந்த ஜென்மத்தில் எனக்கு பாபவிமோசனம் கிடையாது... என்னை மன்னிச்சு ஏத்துக்கோங்கன்னு உங்க கிட்ட கேட்க கூட அருகதை இல்லாதவ நான்... ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன் தேவ்... உங்களை புரிஞ்சிக்காம நான் உங்கள் விட்டு விலகி இருக்கலை... உங்கள் புரிஞ்சிக்கிட்டதால தான் நான் உங்களை விட்டு விலகி நிற்கிறேன்... நீங்க எந்த தவறும் செய்யலை தேவ்... நான் தான் எல்லா தவறும் செய்தவள்... நன்றாய் இருக்க வேண்டிய வாழ்க்கையை நொடியில் சின்னாப்பின்னமாக்கி சிதற அடித்தவள் நான் தான்... நான் தான் இதற்கு முழு குற்றவாளி... என்னை மன்னிச்சிருங்க தேவ்...'

மனதுக்குள் உருகி உருகி மன்னிப்பு கேட்டவளுக்கு அவனிடத்தில் வாய்விட்டு கேட்க முடியாமல் போனது அந்தோ பரிதாபம்... அந்தளவுக்கு அவன் பேசிய வார்த்தைகள் அவளது மனதை முள்ளாய் தைத்து கொன்றது...

அதிகாலை இரண்டு மணிக்கு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தேவானந்த் மெல்லிய முனங்கல் ஒலியில் கண்களை சிரமப்பட்டு திறந்தான்... நேற்று அவன் செய்த வேலையின் பளு, அவனை கண்களை திறக்கவிடாமல் 'இன்னமும்

கொஞ்ச நேரம் தூங்கேன்' என்று இமைகளை பார்த்து கெஞ்சியது...

"தேவ்... தேவ்..." மனைவியின் முனங்கலில் அவனது தூக்கம் முற்றிலும் பறந்தோட மனைவி படுத்திருந்த இடத்தை பார்த்தான்...

அது காலியாக இருக்கவும் 'வது எங்கே...?' என்று அறையை சுற்றி பார்த்தவன் அங்கு சுவரோரமாய் உடலை குறுக்கி கொண்டு படுத்திருந்த மனைவியை கண்டதும் திகைத்து போனவனாய் அவள் அருகில் விரைந்து வந்தான்...

"வது..." என்று அவன் அவளை அழைக்க, அவளிடத்தில் பதில் இல்லை...

அவள் புறம் குனிந்தவன் அவளை தொட்டு எழுப்ப அப்போது அவனது கரம் அவளது உடல் சூட்டை உணர பதறி போனவனாய் அவளை இரு கரத்தில் அள்ளியவன் கட்டிலில் படுக்க வைத்து போர்வையை போர்த்தி விட்டான்...

அவளது அனத்தல் அவனுக்கு பயத்தை கொடுக்க அறையை விட்டு வெளியேறியவன் நேரே தங்கையை எழுப்பினான்... தூக்கத்தில் இருந்தாலும் சுஜானா அண்ணனின் ஒரு குரலில் எழுந்துவிட்டாள்... மருத்துவர் என்பதால் எந்நேரமும் விழிப்புடன் இருப்பாள் அவள்...

"சுஜி... வதுவுக்கு பீவர் மாதிரி இருக்கு... என்னன்னு வந்து பாரு..."

அண்ணன் சொல்லவும் மருத்துவ உபகரணங்களை எடுத்து கொண்டு சுஜானா வருணிதாவை காண விரைந்தாள்...

போகும் போது தேவானந்த் தனது பெற்றோரை எழுப்பி விவரம் கூற அவர்களும் அவனுடன் வந்தனர்...

அதற்குள் சுஜானா அவளது சிகிச்சையை தொடங்கி இருந்தாள்...

உள்ளே நுழைந்த அண்ணனிடம், "அண்ணா... அண்ணிக்கு கொஞ்சம் ஹை டெம்பரேச்சர் தான் காட்டுது... இந்த டேப்லேட் கொடுத்து பாருங்க... அப்பவும் பீவர் விடாம இருந்தா ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகலாம்..." என்றபடி அவள் எழுந்தாள்...

"வெறும் வயித்துல கொடுக்க வேண்டாம் அண்ணா... நான் பால் காய்ச்சி கொண்டு வர்றேன்... அதை கொடுத்துட்டு டேப்லேட் கொடுங்க..." என்றவள் பால் எடுக்க சென்றாள்...

"என்ன தேவா திடீர்ன்னு...?" பார்வதி மகனிடம் கேட்டவர் கவலையுடன் மருமகளை பார்த்தார்...

"தெரியலையேம்மா..." மனைவியின் நிலை அவனுக்குமே கவலையாக தான் இருந்தது...

அதற்குள் சுஜானா பால் எடுத்து கொண்டு வர அதை வாங்கியவன், "சரிம்மா... வதுவை நான் பார்த்துக்கிறேன்... நீங்க போங்க..." என்க...

"நீ வருணியை பார்த்துக்கோ தேவா... நான் வர்ஷூவை எங்கூட தூக்கிட்டு போறேன்..." பார்வதி சொல்லவும்...

"அவ எதுக்கும்மா...?" இழுத்த மகனை முறைத்தவர்...

"அம்மாவோட காய்ச்சல் குழந்தைக்கு வந்தா அவள் தாங்க மாட்டாள்..." எனவும் அவனால் மறுப்பு சொல்ல முடியவில்லை...

வர்ஷினியை தூக்கி கொண்டு அவர்கள் சென்றதும் அறைக்கதவை தாளிட்டவன் மனைவி அருகில் வந்து அமர்ந்தான்...

"வதும்மா... கொஞ்சம் பாலை குடிச்சிட்டு டேப்லெட் போட்டுக்கோ..." அவனது சொல் எதுவும் அவளது காதில் விழவில்லை...

"தேவ்... தேவ்..." என்று முனங்கி கொண்டே இருந்தாள்...

அவளை தூக்கி தோளில் சாய்த்து பாலை புகட்டி, மாத்திரையை கொடுப்பதற்குள் அவன் களைத்து போய்விட்டான்...

இப்படி தன்னுணர்வின்றி அவள் இருப்பது கண்டு அவனுக்கு பயம் பிடித்து கொண்டது... மெல்ல அவளை படுக்க வைத்தவன் அவளை கவலையாய் பார்த்தபடி அவளுக்கு போர்வையை போர்த்திவிட்டு மறுபக்கம் வந்து படுத்தவனால் தூங்க முடியவில்லை...

மனைவியின் புறம் திரும்பி படுத்து கொண்டு அவளையே பார்த்து கொண்டு இருந்தான்... நேரம் செல்ல செல்ல குளிர் தாங்காது அவளது உடல் நடுங்க துவங்கியது...

அதை கண்டு எழுந்தவன் தன்னுடைய போர்வை, மகளது போர்வை என்று இருந்த எல்லாவற்றையும் எடுத்து அவளுக்கு போர்த்திவிட, அதிலும் அவளது உடல் நடுக்கம் குறையாததை கண்டு அவனுள் பயம் எழுந்தது...

என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்தவன் பின் ஒரு முடிவு எடுத்தவனாய் தனது டீசர்ட்டை கழற்றிவிட்டு அவள் அருகில் வந்து நெருங்கி படுத்தவன் அவளை சிறு குழந்தை போல் தூக்கி தனது நெஞ்சோடு அணைத்து கொண்டான்...

தன்னவனின் மார்பு சூட்டை அந்த நினைவிழந்த நிலையிலும் வருணிதா உணர்ந்தாளோ என்னமோ, "தேவ்..." என்று முனங்கியபடி அவனது வெற்று நெஞ்சில் ஆழ முகம் புதைத்து அவனின் அணைப்பில் நாய்க்குட்டியாய் சுருண்டாள்...

வெகுநாட்களுக்கு பின் உணர்ந்த மனைவியின் ஸ்பரிசம் அவனை ஸ்தம்பிக்க செய்தது... இத்தனை நாளாய் அவனுள் அடங்கி இருந்த உணர்வுகள் மெல்ல உயிர்ப்பிக்க ஆரம்பித்தது... அதில் அவனது அணைப்பு மேலும் இறுகியது...

அவனது அணைப்பை அவளும் உணர்ந்தாளோ இல்லை அது கனவு என்று எண்ணினாளோ என்னவோ,

"தேவ்... உங்க உணர்வை கொன்ற பாவி நான்... சாரி தேவ்..." என்று முணுமுணுத்தவளின் வார்த்தைகளின் அர்த்தம் அப்போது தான் அவனுக்கு உறைத்தது...

நேற்று மனைவியிடம் தான் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் இப்போது அவனது நியாபகத்தில் வந்து அவனை துடிக்க செய்தது... இப்போது அவனுக்கு புரிந்தது அவளுக்கு காய்ச்சல் வந்தது எதனால் என்று...

அவளின் நிலையை அறிந்து, 'ச்சே' என்று நெற்றியில் அறைந்து கொண்டவன் அடுத்த நொடி,

"பேபி... உன்னால் மட்டும் தான் என் உணர்வுகளை உயிர்ப்பிக்க முடியும்...உன்னால் மட்டும் தான் முடியும்..." என்று அவளை அணைத்து கொண்டு கதறிவிட்டான்...

அவனின் உணர்வுகளை உயிர்ப்பிக்க அவனது மனையாளால் மட்டும் தான் முடியும் என்பதை கண்கூடாக கண்ட பின்பும் அவனது மனதை மறைத்து வைக்க அவனால் தான் முடியுமா என்ன...!!!

"சாரி தேவ்..." இந்த வார்த்தைகளை தவிர அவள் வேறு எதுவும் சொல்லவில்லை...

அதில் அவன் தான் மனம் துடித்து போனான்...

'மனம் நிறைய காதலுடன் அவளுக்காக காத்திருப்பேன்' என்று கூறியவன் இப்போது அவளது மனதை அளவுக்கு அதிகமாய் காயப்படுத்தி விட்டதை எண்ணி மனதுக்குள் வேதனை அடைந்தான்...

'உனக்காக எல்லாவற்றையும் பொறுத்து கொள்வேன்' என்று கூறியவன் இப்போது அவளையே பொறுத்து கொள்ள முடியாதபடி கடுமையாய் பேசியதை எண்ணி எண்ணி மனதுக்குள் நொந்து போனான்...

அதிலும் வார்த்தைக்கு வார்த்தைக்கு மன்னிப்பு கேட்டவளை மன்னிக்காமல் தான் நடந்து கொண்டதை நினைத்து இப்போது உள்ளம் வருந்தினான்...

மகள் ஒரு தவறு செய்தால் அவன் மன்னிக்காமல் இருப்பானா... அது போல் மனைவி செய்த தவறையும் சிறு குழந்தையின் தவறாய் எண்ணி அவளது செயலை மன்னிக்க, மறக்க முடிவு செய்தான்...

அவளின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன், "நீ தான் பேபி என்னை மன்னிக்கணும்... உன்னை பத்தி எனக்கு தெரியாதா... எல்லாம் தெரிந்து இருந்தும் உன்னை காயப்படுத்திய என்னை நீ தான் மன்னிக்கணும் வதும்மா... இனி மேல் இப்படி பேச மாட்டேன்... அது காத்திருந்தவனின் வலின்னு நினைச்சு என்னை மன்னித்துவிடு பேபி... இப்போ நினைச்சு பார்க்கும் போது உனக்கும் அதே உணர்வுகள் இருந்து இருக்கும்... நீயும் உன் இளமை உணர்வுகளை கொன்றுவிட்டு தான் வாழ்ந்து இருக்கேன்னு புரியும் போது நான் பேசியது எவ்வளவு அபத்தம்ன்னு புரியுது... போதும் கண்ணம்மா... இத்தனை நாள் பட்ட வேதனை, வலி எல்லாம் போதும்... இனி மேல் உன்னை சந்தோசமாய் வைத்து கொள்வது மட்டும் தான் என் குறிக்கோள்... நீ என்னுடன், என் கையணைவில் இருந்தால் அதுவே எனக்கு போதும்..."

அவன் பேசியது புரிந்ததா இல்லை மாத்திரையின் வேகத்தினாலோ என்னமோ ஜூரம் சற்று குறைந்து, அனத்தல் நின்று ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்றாள் வருணிதா...

அவள் உறங்கியது தெரிந்தும் அவன் அவளை தன் கையணைவில் இருந்து நீக்கவில்லை... அவளை அணைத்தபடி அவள் முகம் பார்த்தபடி இருந்த தேவானந்தின் மனதில் பழைய காதல் மலர்ந்து அவனது முகத்தை மகிழ்ச்சியில் மலர செய்திருந்தது... கண்களில் வழிந்த நேசத்தோடு மனையாளை புதிதாய் பார்ப்பது

போல் பார்த்து கொண்டு இருந்தவனின் மனம் சந்தோசத்தில் விம்மியது…

தான் அழைத்து வந்ததால் தான் தன்னுடன் வந்தாள் மற்றும் குழந்தையின் மனப்பாதிப்புக்கு அவள் தான் காரணம் என்று குற்றம் சாட்டி அவள் மீது கோபப்பட்டவனுக்கு இப்போது அந்த கோபம் கொஞ்சமும் இல்லை…

அந்நேரம் அவனுக்கு அவள் மீது தான் காதல் கொள்ள காரணமாய் இருந்த அந்த நிகழ்வு, அவளது தாய்மை உணர்வை உணர்ந்த நாள் நினைவில் வந்தது…

'அன்று யாரோ ஒரு குழந்தை அழுததற்கே துடித்து போய் ஓடி சென்று உதவி செய்தவள் என் வது… அப்படி இருக்கும் போது அவள் பெற்ற அம்முவிடத்தில் அவளுக்கு பாசம் இல்லாது போகுமா… இல்லை அம்முவின் மனதின் ஏக்கத்தை புரிந்து கொள்ளாமல் தான் இருந்து இருப்பாளா… பாவம் வது… என்னை போல் தான் அவளும் துயரில் துடித்து இருப்பாள்… அப்படிப்பட்டவளை மகள் மேல் அக்கறை இல்லை என்று கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாமல் பேசிவிட்டேனே…' மனைவியிடம் கோபம் கொண்டதற்கு இப்போது வருந்தினான்…

மனைவி எப்படி இருந்தாலும், அவள் பக்கம் ஆயிரம் தவறுகள் இருந்தாலும் அவளை மன்னித்து ஏற்று கொள்ளவே அவனது காதல் மனம் விழைந்தது…

இது தான் தேவானந்த்… எதிலும் நல்லது மட்டுமே பார்ப்பவன்…

அறைக்கதவு தட்டும் ஒலியில் நிமிர்ந்தவன் கடிகாரத்தை பார்க்க அது காலை ஏழு மணி என்றது…

வருணிதாவை மெதுவே தலையணையில் படுக்க வைத்தவன் டீசர்ட்டை அணிந்து கொண்டு எழுந்து சென்று கதவை திறந்தான்…

"அப்பா... அம்மாவுக்கு என்னாச்சு..." கவலையுடன் கேட்டபடி மகள் வர்ஷினி நின்றிருந்தாள்...

மகளின் கவலை மனதை தாக்க அவளை தூக்கியவன், "பீவர் அம்மு... இப்போ கொஞ்சம் பரவாயில்லை..."

"குடிக்க ஏதாவது கொண்டு வரவா தேவா..." பார்வதி கேட்க...

"வது இன்னும் எழுந்துக்கலைம்மா..."

அவன் சொன்னதும் அவர் சென்றுவிட... மகளை அழைத்து கொண்டு மனைவியிடம் வந்தான்...

அன்னை உறங்குவது கண்டு அமைதியாய் அவள் அருகில் அமர்ந்த சின்னவள் பெரிய மனுசி போல் அன்னையின் நெற்றி, கழுத்தில் கை வைத்து பார்த்தாள்... அதை கண்டு அவனுக்கு சிரிப்பு வந்தது... மகளின் அக்கறை மனதை நெகிழ்த்தியது...

மகளின் ஸ்பரிசத்தில் மெதுவே கண் திறந்த வருணிதா மகளை கண்டு புன்னகைத்தவள் அங்கு கணவனை கண்டதும் முதலில் திகைத்து பின் அவனது புன்னகை முகத்தில் குழம்பி போனவளாய் எழுந்து அமர்ந்தாள்...

"அம்மா... பீவர் எப்படி இருக்கு...?"

"பீவரா..." புரியாமல் அவள் கணவனை பார்க்க...

அவளது பார்வையை கண்டதும் அவளது நெற்றியில் இயல்பு போல் கை வைத்து பார்த்தவன், "இப்போ பீவர் குறைஞ்சு இருக்கு அம்மு..." மகளிடம் சொன்னவன்,

"நீ பால் குடிச்சியா அம்மு..." மகள் இல்லை என்று தலையாட்டவும்,

"சரி நீ அம்மா கூட பேசிட்டு இரு... நான் போய் ரெண்டு பேருக்கும் பால் எடுத்துட்டு வர்றேன்..." என்றபடி சென்றவனை பார்த்து கொண்டு இருந்த வருணிதாவை மகள் தன் பக்கம் திருப்பினாள்...

வர்ஷினி ஏதோ கதை பேசவும் தன் மனதை முயன்று மகளிடம் செலுத்தினாள் அவள்...

சிறிது நேரத்தில் பால் தம்பளருடன் வந்த தேவானந்த்துடன் பார்வதி, சிவநேசன், சுஜானா எல்லோரும் அவளை பார்க்க வந்தனர்...

அவர்கள் நலம் விசாரித்து விட்டு செல்லும் போது உடன் வர்ஷினியை அழைத்து கொண்டு சென்றனர்...

"குடி..." பாலை நீட்டிய கணவனை புதிராக பார்த்தவள் பின்,

"பிரஷ் பண்ணனும்..." என்றாள் மெதுவே...

அவளை பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... எந்த காய்ச்சலாக இருந்தாலும் குளித்து சுத்தம்பத்தமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவள் அவள்...

"ம்... போ..." என்றவன் ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்தவளிடத்தில் மீண்டும் பால் தம்பளரை நீட்ட...

அதை வாங்கவே அவளது கைகள் நடுங்கியது... அதை கண்டு அவள் அருகில் அமர்ந்தவன் அவளை தன் தோளோடு சாய்த்து கொண்டு பாலை அவளது வாயில் சரித்தான்...

அவனது செயலை நம்ப முடியாமல் கண்களை அகல விரித்து பார்த்தாள் அவள்... அவனது முகத்தில் தெரிந்த கனிவில் அவளது கண்களில் கண்ணீர் சொரிந்தது...

"ச்சூ... என்ன பேபி இது...?" என்று செல்லமாய் கடிந்தவன் அவளது கண்ணீரை துடைத்தபடி கடமையில் கண்ணாய் இருந்தான்...

வெகு நாட்களுக்கு பின் கேட்ட அவனது உரிமை பேச்சில் அவளது உள்ளம் சந்தோசம் அடைந்தது...

அவள் பாலை பருகியதும் வெகுஇயல்பாய் அவளது உதடுகளை துடைத்து விட்டவனின் கரத்தை பற்றியவள்,

"தேவ்... சாரி தேவ்..." என்க...

அவள் தெரியாமல் செய்த பிழைக்கு எத்தனை தடவை தான் தெரிந்து மன்னிப்பு கேட்பாள் என்று மனதுக்குள் மனைவிக்காய் வருந்தியவன்,

"நீ என்ன தப்பு பண்ணினேன்னு இப்படி சாரி கேட்டுட்டே இருக்க...? ம்..." அவளை பார்த்து வினவியவனை கண்டு நேற்றைய நியாபகத்தில் மீண்டும் அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"கண்ணுல டேம் கட்டி வச்சிருப்பியோ..." குறும்புடன் கேலியாய் அவன் சொன்னாலும் அவளது கண்களை துடைத்துவிட அவன் தவறவில்லை...

"சாரி தேவ்... உங்க உணர்வுகளை கொன்ற பாவி நான்... தப்பு எல்லாம் என் பேரில் தான்..." என்றவளை அதற்கு மேல் பேச முடியாதபடி இறுக அணைத்து இருந்தான் அவன்...

"என் உணர்வுகள் உன்னை கண்டால் மட்டும் தான் உயிர்ப்பிக்கும் பேபி..." என்றவன் அடுத்த நொடி அவளை முத்தத்தால் அர்ச்சித்து இருந்தான்...

பழைய காதலன் தேவானந்த் அவனிடத்தில் திரும்பி இருந்தான்... அவனது இறுகிய அணைப்பிலும், அழுத்தமான இதழொற்றலிலும், 'பேபி' என்றழைப்பிலும் அவள் அதை முழுமையாக உணர்ந்தாள்... அதை விட காதலுடன் அவளை நோக்கும் அவனது விழிகள் அவன் மனதை அவளுக்கு எடுத்துரைத்தது...

நேற்று அவனிடத்தில் எதுவோ குறைகிறது என்று நினைத்தவள் இப்போது அந்த குறை நிவர்த்தி செய்யப்படுவதை உணர்ந்து அவனின் செயலுக்கு இணங்கினாள்...

மெல்ல மெல்ல அவளுள் மூழ்கி தன்னை தொலைக்க நினைத்தவன் அவளின் உடல்நிலையை முன்னிட்டு தன்னை கட்டுப்படுத்தி கொண்டு விலகி அமர்ந்தான்...

கேள்வியாய் பார்த்தவளை அணைத்து கொண்டு கண்சிமிட்டியவன், "பீவர் சரியாகட்டும்..." என்று அவளது காதில் ரகசியம் பேசினான்...

அவனது பேச்சில் அவள் முகம் சிவந்து போய் தலை குனிந்தாள்... வெகு நாட்களுக்கு பின் மனையாளின் முகச்சிவப்பை ரசித்து பார்த்தான் அவன்...

தான் தவறு செய்யவில்லை என்பதை மனைவி தெரிந்து கொண்டாளா என்பதை பற்றி அவன் அறிந்து இருக்கவில்லை...அதே போல் அவனும் அவனுக்கு எதிரான ஆதாரங்களுக்கு இன்னமும் விளக்கம் கூறவில்லை...

ஆனாலும் இரு காதல் கொண்ட நெஞ்சங்களும் மற்றவர்கள் மீது வைத்திருந்த காதலை பற்றுக்கோளாக கொண்டு தங்கள் இணையை முழுவதுமாய் நம்பினர்...

அதிலும் தவறே செய்யாத தேவானந்த் மனைவியை மனமார ஏற்று கொண்டது அவனது காதலின் ஆழத்தை காட்டுவதாய் இருந்தது... அதை அவளும் உணர்ந்தே இருந்தாள்...

வருணிதாவிற்கு உடல்நலம் சரியில்லை என்றதும் கிருஷ்ணா அவளை பார்க்க வந்து இருந்தான்... அக்காவிடம் உடல்நலம் விசாரிக்கும் போது அங்கு வந்த சுஜானா ஒப்புக்கு அவனை வரவேற்றதை கண்டு அவனது உள்ளம் கொதித்தது... சிறிதுநேரம் அங்கே இருந்தவன் அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் கிளம்பிவிட்டான்...

அவன் கிளம்பி செல்லும் போது சுஜானா மருத்துவமனைக்கு கிளம்பி கொண்டு இருந்தாள்... அவள் காரை கிளப்பி கொண்டு வெளியில் வரும் போது அன்று போல் இன்றும் கிருஷ்ணா அவளது காரை தாண்டி தனது காரை செலுத்தியபடி வேகமாய் அவளை கடந்து சென்றான்...

அவனது மனம் சுஜானாவின் திடீர் மாற்றத்தை கண்டு கடும் கோபம் அடைந்து இருந்தது... தனது கோபத்தை

அவன் தனது காரில் காட்டினான்...

அவன் தன்னை திரும்பியும் பாராமல் செல்வதை கண்ட சுஜானா மனதுக்குள் வேதனை அடைந்தாள்...

அவளும் தான் என்ன செய்வாள்... என்ன தான் அவனிடத்தில் கோபம் இருந்தாலும் அவனை கண்டாலே இளகும் மனதை கட்டுப்படுத்தும் வகை தெரியாமல் அவள் திணறுவது அவளுக்கு மட்டும் தான் தெரியும்...

எங்கே அவனிடம் பேசினால் தன்னையும் அறியாமல் தனது மனதை வெளிச்சம் போட்டு காட்டிவிடுவோமோ என்று பயந்து போய் அவனை விட்டு விலகி போவது அவளுக்கு மட்டும் தான் தெரியும்...

தன்னை பிடிக்காதவனிடத்தில் தன் காதலை சொல்லி அவமானப்பட அவளுக்குமே விருப்பம் இல்லை...

எட்டி உதைத்தாலும் காலை சுற்றி வரும் நாய்க்குட்டியாய் அவளது மனம் அவனிடத்திலேயே வந்து நின்றது...

'கிருஷ்... ஐ லவ் யூ...' மனதுக்குள் சொல்லி கொண்டவளின் கண்களில் மெல்லிய நீர்ப்படலம்...!!!

உறையும்...

"அம்மு... ஒழுங்கா அம்மா கிட்ட வா..." கையில் எண்ணெய் கிண்ணத்தை ஏந்தியபடி மகளை மிரட்டி கொண்டு இருந்தாள் வருணிதா...

"ம்ஹூம்... மாட்டேன்..." மறுத்த வர்ஷினி தந்தையின் பின் சென்று மறைந்து நின்று கொண்டாள்...

"கொஞ்ச நேரம் கழிச்சு எண்ணெய் தேய்ச்சு விடு வது..." தேவனாந்த் மகளுக்கு ஆதரவாக பேச வருணிதா அமைதியாக ஒன்றும் பேசாது அமர்ந்தாள்...

அன்று போல் மகளை அதட்டவில்லை... இப்போது எல்லாம் கணவனின் பேச்சை மறுத்து பேசுவதற்கு அவளது மனம் இடம் கொடுக்கவில்லை... அதே சமயம் மகளை கண்டிக்காமல் இருக்கவும் பிடிக்கவில்லை...

சிறிது நேரம் மகளுடன் விளையாடியவன், "இப்போ எண்ணெய் தேய்ச்சு குளிக்கலாமா அம்மு...?" என்று மகளிடம் கேட்க...

"வேண்டாம்ப்பா..." அப்போதும் மகள் செல்லமாய் சிணுங்கினாள்...

"நோ அம்மு... அம்மா சொன்ன பேச்சு கேட்கணும்..." அவன் சொல்லவும் வருணிதாவின் முகம் மலர்ந்தது...

"ம்... சரி..." என்ற சின்னவள் தானாக அன்னையிடம் வந்தமர்ந்தாள்...

அவளுக்கு எண்ணெய் தேய்த்துவிட்ட மனைவியிடம், "அம்மு அவளோட உணர்வுகளை வெளிப்படுத்த தடையாய் இருக்க வேண்டாம்ன்னு தான் சொன்னேனே தவிர... அவளை கண்டிக்க வேண்டாம்ன்னு நான் சொல்லலையே வது... நீ அவளோட அம்மா... தாராளமாய் நீ அவளை கண்டிக்கலாம்..."

அவளின் காதுக்கருகில் குனிந்து மென்மையான குரலில் சொன்னவனை வியப்பாய் பார்த்தவள் அவனை பார்த்து 'சரி' என்பது போல் சிரித்தாள்...

மகளுக்கு எண்ணெய் தேய்த்து முடித்ததும் அவள் அறையை விட்டு செல்ல முயல, அவளது கையை பிடித்து தடுத்த தேவானந்த்,

"எனக்கு யார் தேய்ச்சு விடுவா...?" என்று குறும்பு குரலில் கேட்க...

அவனது செயலில், குரலில் திகைத்து போய் திரும்பியவள் இதயம் தாளம் தப்பியது...

அன்று அவளுக்கு உடல்நலம் சரியில்லாமல் போனதில் இருந்து அவனது நடவடிக்கை அவளுக்கு சற்று வித்தியாசமாக தெரிந்தது... பழைய காதல் கணவனாக மாறியிருந்தவனின் மாற்றம் கூட அவளுக்கு மிகவும் பிடித்து தான் இருந்தது...

அதனாலேயே அவன் எள் எனும் முன் எண்ணெயாக அவனின் கண்ணை பார்த்து அவனின் தேவைகளை பார்த்து பார்த்து கவனித்தாள்... அவன் ஒன்று கூறினால் என்றால் சிரமம் மேற்கொண்டு செய்து முடிக்க தயாராய் இருந்தாள் அவள்... அந்தளவுக்கு அவனின் மகிழ்ச்சியை தக்க வைக்க அவள் தன்னை மாற்றி கொண்டாள்...

"நா... நான் தான்..." என்றவளின் வார்த்தைகள் அவளின் தவிப்பிற்குள் சிக்கித் தவித்தது...

"ம்... அப்போ தேய்ச்சு விடு..." தனது தலையை குனிந்து அவளின் முன் நீட்டினான்...

வெகு வருடங்களுக்கு முன் கணவனுக்கு இது போல் சேவகம் எல்லாம் செய்து இருக்கிறாள் தான்... ஆனால் இத்தனை வருட நெடிய பிரிவிற்கு பின் அவனை நெருங்கியவள் தேகம் நடுங்கியது...

நடுக்கத்துடன் கிண்ணத்தில் இருந்த எண்ணெயை எடுத்து அவனது தலையில் வைத்தவள் மெதுவாய் பட்டும் படாமல் தேய்த்து விட,

"இப்படியா தேய்க்கிறது..." என்று அவளது கையை அழுத்தமாய் பிடித்தவன் அதை விட அழுத்தமாய் தனது தலையில் வைத்து தேய்த்து காண்பித்தான்...

அதற்கே அவளுக்கு தவிப்பும், அச்சமும் ஒருசேர எழுந்து நெற்றியில் வியர்வை துளிர்க்க ஆரம்பித்தது...

அவளது தவிப்பை ரசித்தபடி அமர்ந்து இருந்தான் அவன்... மனைவியின் அருகாமை அவனை ஏதேதோ செய்ய அவளது வயிற்றில் முகம் பதிக்க மனம் தூண்டினாலும் அருகில் இருந்த மகள் அவனது ஆசைக்கு அணை போட்டாள்...

ஆனாலும் தன்னை கட்டுப்படுத்த முடியாதவனாய் அவள் இடுப்பில் சொருகி இருந்த புடவை முந்தானையை உருவி எடுக்கும் சாக்கில் அவளது வெறும் வயிற்றில் கையை வைத்து விரல்களால் அளைந்தபடி அதை எடுத்தவனை கண்டு அவள் அதிர்ந்து போய் பார்த்தாள்...

"அம்மு..." அவளது பார்வை மகளை பார்த்தது... மகளோ அவர்களை கவனிக்காமல் அலைப்பேசியில் விளையாடி கொண்டு இருந்தாள்...

மனைவி தன்னை கண்டு கொண்டாளோ என்று நினைத்து அசடு வழிந்தவன், "அது அம்முவுக்கு முகத்தில் எண்ணெய் வழிஞ்சதா... அதை துடைக்கத் தான்..." என்றவன் மகளின் முகத்தில் இல்லாத எண்ணெயை துடைத்து விட்டான்...

அவனது பதிலில் நிம்மதி அடைந்தவள் தனது வேலையை பார்க்க துவங்கினாள்... அவளது அருகாமையில் அவன் தான் அதிகம் தவித்து போனான்...

அன்றிரவு தேவானந்த் வர நேரமாகும் என்றதால் மகளை உறங்க வைத்த வருணிதா மகள் உறங்கியதும் அவளின் நினைவுகள் கணவனிடத்தில் வந்து நின்றது...

அவன் என்ன தான் அவளின் செயலை மன்னித்தாலும் அவளது மனதில் இன்னமும் அந்த குற்ற குறுகுறுப்பு இருந்து கொண்டே தான் இருக்கிறது... அவனிடம் மனம் விட்டு பேச ஏனோ மனம் தயங்கியது... இப்போது இருக்கும் மனநிலையை கெடுத்து கொள்ள வேண்டாம் என்றே அவளுக்கு தோன்றியது...

தான் எத்தனை தவறு செய்து இருந்தாலும் மன்னித்து ஏற்று கொள்ளும் கணவனது உயர்ந்த குணம் கண்டு அவளது விழிகள் நெகிழ்வில் கசிந்தது..

அந்நேரம் தேவானந்த் அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்... கணவனை கண்டதும் கலங்கிய விழிகளை சரி செய்து கொண்டு அவனை கண்டு அவள் புன்னகைக்க, அப்படி இருந்தும் அவளது கலக்கம் அவனுக்கு புலப்படத்தான் செய்தது...

யோசனையாய் மனைவியை பார்த்தபடி குளியலறைக்குள் நுழைந்தான் அவன்... தன்னை சுத்தப்படுத்தி கொண்டு வந்தவனுக்கு அவள் உணவு பரிமாற அவன் உண்டு முடித்து அவர்கள் அறைக்குள் வரும் வரை இருவரிடத்திலும் எந்த பேச்சும் இல்லை...

அவள் மகளின் அருகில் வந்து படுக்க அவன் அவள் அருகில் இருந்த சிறு இடைவெளியில் அமர்ந்தான்...

கணவனின் வருகையில் அவளது இதயத்தில் ஆயிரம் இரயில் ஓடுவது போன்று தடதடவென சத்தம் சத்தமாய் கேட்டது...

"என்ன வேணும் தேவ்..." அவளுக்கு குரல் எழும்பவில்லை...

ஒன்றும் இல்லை என்பது போல் தலையசைத்தவன் அவளது தலையை கோதி, "பேபி... நீ சந்தோசமா இருக்கியா...?"

அவன் திடுமென அப்படி கேட்டதும் திடுக்கிட்டவள், "நான் சந்தோசமா தான் இருக்கேன்..." என்றாள் அவசரமாய்...

மனைவியை பற்றி நன்கு அறிந்தவனுக்கு அவள் பொய்யுரைக்கிறாள் என்றே தோன்றியது...

'மனம் விட்டு பேசு' என்று மனைவியிடம் கூற முடியாமல் அவனது மனமும் அவளிடம் மனம் விட்டு பேச முடியாமல் தவித்தது...

இத்தனை வருட பிரச்சினைக்கு பிறகு இப்போது தான் இருவருக்கும் இடையில் இணக்கம் வந்து இருக்கிறது... இந்த நிலையில் பழைய நிகழ்வுகளை பற்றி பேசி இருக்கும் நிம்மதியை கெடுத்து கொள்ள அவனுக்குமே விருப்பம் இல்லை...

"உண்மையா தான் தேவ்..." அவனிடத்தில் பேச்சு இல்லை என்றதும் அவள் வேகமாய் சொல்ல...

அதை கேட்டு அவளை பார்த்து புன்னகைத்தவன், "உன்னோட சந்தோசம் தான் என்னுடைய சந்தோசம் பேபி... அதை மட்டும் நீ உணர்ந்தால் போதும்..."

"ம்..." என்று தலையாட்டி ஆமோதித்தவளை நோக்கி குனிந்தவன் அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்து விலகினான்...

அதற்கு மேல் அவளிடம் ஒன்ற அவனது மனதில் ஏனோ ஒரு தடை இருந்து கொண்டே இருந்தது... அது என்ன என்று தான் அவனுக்கும் தெரியவில்லை...

மறுநாள் மகளை பள்ளிக்கு அழைத்து சென்று விட்டு விட்டு வீட்டிற்கு வந்தவன் வழக்கம் போல் அலுவலகத்திற்கு கிளம்பி கொண்டு இருந்தான்...

"பை பேபி..." வழக்கம் போல் அவளிடம் விடைப்பெற்று கிளம்பியவன் திரும்ப நியாபகம் வந்தவனாய் மேசை மீது எதையோ தேடினான்...

வழக்கம் போல் கார் சாவியை மறந்து வைத்து விட்டு தேடி கொண்டு இருந்தான் அவன்... அவனது தேடலை உணர்ந்து அவன் அருகில் வந்து தன்னியல்பாய் அவன் பேண்ட்

பாக்கெட்டில் கை வைக்க போனவள் அன்று அவன் தன் கையை தட்டி விட்டது நியாபகத்தில் வர தயங்கியபடி அவனை ஏறிட்டாள்...

அவள் அருகில் வந்து கையை நீட்டியதுமே அவனுக்கு புரிந்து போனது அவனது கார் சாவி இருக்கும் இடம்... ஆனால் அதை எடுத்து கொடுக்காமல் தன்னை தயக்கத்துடன் பார்க்கும் மனைவியை கண்டு புரியாது விழிகளை சுருக்கினான்...

அவளோ அவனது பேண்ட் பாக்கெட்டை அவனுக்கு சுட்டி காட்டியவள் மறந்தும் அதை எடுக்க முனையவில்லை...

அப்போது தான் அந்த விசயம் அவனுக்கு நன்றாக தலையில் உறைத்தது...

அவன் மனைவி அவன் முகம் பார்த்து சிரிக்கிறாள், சந்தோசப்படுகிறாள்... அவனுக்காக வாழ்கிறாள்... ஆனால் அவளது சிரிப்போ, மகிழ்ச்சியோ அவளது கண்களை எட்டவில்லை என்ற உண்மை அவனுக்கு இப்போது தான் புலப்பட்டது... மொத்தத்தில் அவனுக்காக அவள் வாழ்ந்தாலும் அவனிடத்தில் இயல்பாய் மனைவி என்கிற உரிமையுடன் நெருங்கி பழக அவளால் முடியவில்லை என்பதை அப்போது தான் அவன் உணர்ந்தான்...

முன்பு இருந்த மனைவியின் செல்ல சீண்டல்கள், சிணுங்கல்கள், சண்டைகளை எதிர்பார்த்து இருந்தவனுக்கு இப்போதைய வருணிதாவின் மாற்றம் தாமதமாய் புரிய வந்தது...

ஒருவேளை இதை தான் அவன் அவளிடத்தில் தேடி ஏமாந்து போனானோ...!!!

ஏதோ காரணத்தால் அவளால் தன்னுடன் ஒன்ற முடியவில்லை என்பதை அறிந்தவன் அவளது அந்த தடையை களைய எண்ணினான்...

முதலில் இருந்த காதல் மனைவியை திரும்ப உயிர்ப்பிக்க எண்ணினான் அந்த காதல் கணவன்...

"என்ன பேபி என்னமோ சொல்ல வர்ற...? ஆனா எனக்கு புரியலையே..." என்றவன், மீண்டும் மேசை மீது தேடியபடி,

"கார் கீயை எங்கேயாவது பார்த்தியா..." வேண்டும் என்றே தெரியாதது போல் அவன் கேட்க...

தேடும் கணவனை கண்டு பரிதாபம் எழ தயக்கத்துடன் அவன் அருகில் வந்து பேண்ட் பாக்கெட்டை மீண்டும் அவள் சுட்டிக் காட்ட...

"என்னம்மா சொல்ற புரியலை...?"

வேறுவழியின்றி அவளே அவனது பேண்ட் பாக்கெட்டில் கை விட்டு சாவியை எடுத்து அவனிடம் கொடுத்தாள்...

கார் சாவியை மட்டும் வாங்காமல் அவளது கை விரல்களை முழுவதும் மொத்தமாய் ஒரு கையால் பற்றியவன் அதில் மென்மையாய் முத்தமிட்டபடி மறுகையால் அவளது இடையில் கை வைத்து அவளை தன் அருகில் இழுத்தான்...

அவனது நெஞ்சோடு மோதி கொண்டு நின்றவளை காதலோடு பார்த்தபடி, "என்னிடம் எதற்கு இத்தனை தயக்கம் பேபி... நான் உன் கணவன் தானே... அதிலும் காதல் கணவன் அல்லவா..."

'என்னால் முடியலை தேவ்... நானும் இயல்பா உங்க கிட்ட இருக்கணும்ன்னு தான் நினைக்கிறேன்... ஆனா என்னோட குற்றவுணர்ச்சி என்னை அப்படி இருக்க விடாமல் என்னை கொல்லுது தேவ்...' மனதுக்குள் புலம்பியவள் கண்களில் நீர் நிரம்பியது...

அதை கண்டவன் அவளது விழிகளின் மீது மென்மையாய் இதழை பதித்து, "என்னிடம் உரிமை கொள்வதற்கு உனக்கு மட்டும் தான் உரிமை இருக்கு... நீ இப்படி இருக்கிறது எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குடா..." என்றவனின் குரல் இறங்கி போய் ஒலித்தது...

அவனின் மனக்கஷ்டத்தை அவளும் உணர்ந்தாளோ என்னமோ... அவனது உயரத்திற்கு எம்பி அவனது

கன்னத்தில் முத்தமிட்டவள்,

"இத்தனை வருசம் இடைவெளி விட்டாச்சு இல்லையா... அதான் பழசு எல்லாம் மறந்து போச்சு... போக போக எல்லாம் சரியாகி போகும்..." அவனை பார்த்து சிரித்தவளை கண்டு அவனும் புன்னகைத்தான்...

"சரி இப்படியே வீட்டிலேயே இருக்கலாம்ன்னு முடிவு பண்ணிட்டியா...? நீ என் கூட கம்பெனிக்கு வரலாமே..."

தன்னுடன் அழைத்து சென்றாலாவது தன்னுடைய கூட்டை விட்டு வெளியில் வருவாள் என்று நினைத்து அவன் அப்படி கேட்டான்...

அவனது வார்த்தையில் தலை கவிழ்ந்தவள், "இல்லை நான் வரலை..."

"ஏன்...?"

"போதும் ஏற்கெனவே இந்த பிசினசால் நீங்களும் நானும் பிரிந்து இருந்தது போதும்..." என்றவளை பார்த்து அவன் வாய் திறக்கும் முன் அவளே பேசினாள்...

"உங்களை வெறுக்க வச்ச இந்த படிப்பு எனக்கு வேண்டாம்... அது சம்பந்தப்பட்ட எந்த வேலையும் நான் செய்யத் தயாரா இல்லை..."

அவளது பேச்சு கேட்டு அவன் தான் அதிர்ந்தான்...

"இது என்ன முட்டாளத்த்தனமான பேச்சு... மனுசங்க செஞ்ச தப்புக்கு படிப்பு என்ன செய்யும்...?"

"இல்லை நான் வரலை..." என்று நிர்தாட்சண்யமாய் மறுத்தவளின் மனதுக்குள் ஏதோ இருந்து கொண்டு வருத்துவது அவனுக்கும் புரிந்தது... அந்த வருத்தத்தை மேலும் மேலும் நீடிக்க செய்தால் ஆரோக்கியமான தாம்பத்திய வாழ்க்கைக்கு அழகு அல்லவே...

ஒரு முறை செய்த தவறை மறுமுறை செய்ய அவன் விரும்பவில்லை...

"நீ வர்ற... வந்து தான் ஆகணும்... அதுவும் இன்னைக்கே..." அழுத்தமாய் சொன்னவன் பிடிவாதமாய் கட்டிலில் அமர்ந்து கொண்டு,

"போய் கிளம்பி வா..." என்க...

"தேவ்..." அவன் அருகில் வந்து விழிகளில் மன்றாடலுடன் அவள் நிற்க...

"உனக்கு என்னை பிடிக்குமா...?"

"இது என்ன அபத்தமான கேள்வி தேவ்... என்னை விட உங்களை தான் அதிகம் பிடிக்கும்... இவ்வளவு ஏன் நம் மகளை விட உங்களை தான் ரொம்ப பிடிக்கும்..."

அவளின் அன்பு என்றும் போல் அவன் மனதை சுகமாய் தாலாட்டியது...

"அப்போ நான் சொல்றதை கேளு..."

"ஆனா தேவ்..."

அதில் அவன் முகம் வாட, "அப்போ நீ என் சொல் பேச்சு கேட்க மாட்ட..." என்றபடி எழ போக...

அவனது வருத்தம் அவளை தான் அதிகமாய் தாக்கியது...

"இல்லை தேவ் அப்படி எல்லாம் இல்லை... இதோ இப்ப கிளம்பறேன்..." என்றவள் மீண்டும் தயக்கமாய் தேங்கி நின்று,

"திரும்ப நமக்குள் எந்த பிரச்சினையும் வந்துவிடாதே..." அவளது கண்களில் அச்சம் அப்பட்டமாய் தெரிந்தது...

"அதெல்லாம் வராது... அதுக்கு இந்த தேவ் கியாரண்ட்டி..." என்று விளம்பரபாணியில் சொன்னவனை கண்டு அவளது இதழ்கள் புன்னகையில் வளைந்தது...

ஐந்து நிமிடத்தில் அழகாக தயாராகி வந்தவளை கண்டு விசிலடிக்க வேண்டும் போல் அவனுக்கு தோன்றியது...

ஆனாலும் அவனின் வயது அதை தடை செய்தது...

'அவள் உன் மனைவி... அவள் அழகை ரசிக்க உனக்கு உரிமை இல்லையா... அதுக்கு வயசு எல்லாம் ஒரு தடையே இல்லை...' மனசாட்சி அவனின் எண்ணத்திற்கு எதிராக போர் கொடி தூக்கியது...

அதில் உற்சாகமானவன் தன்னை மறந்து மெல்லியதாய் சீழ்க்கை ஒலி எழுப்பியபடி, "சூப்பரா இருக்க பேபி..." என்றவனது பார்வை காதல் கணவனாய் அவளை ரசித்து பார்த்தது...

கணவனது உரிமை பார்வை வெகு நாட்கள் கழித்து அவளுள்ளும் மாயஜாலம் செய்ய அவளது கன்னங்கள் இரண்டும் வெட்கத்தில் சிவந்தது...

"இன்னைக்கு முதலாளியம்மாவை பார்த்து எல்லோரும் மயங்கி விழ போறாங்க..." என்றவனை கண்டு அவள் முகம் வாடியது...

"தேவ்... கொஞ்சம் யோசியுங்களேன்..."

"ம்ஹூம்... அது எல்லாம் முடியாது..." என்று அவளின் தோளில் கை வைத்து வலுக்கட்டாயமாய் அறையை விட்டு வெளியில் அழைத்து வந்தான் அவன்...

அங்கு வரவேற்பறையில் அமர்ந்து இருந்த பார்வதி இருவரின் இணக்க நிலையை கண்டு முகம் மலர்ந்தார்... அதிலும் மகனின் செய்கையில் அவரது மனதில் நிம்மதி பிறந்தது...

"பாருங்கம்மா உங்க மருமகளை... கம்பெனிக்கு வான்னா வர மாட்டேங்கிறா..." மகனின் குதூகல குரலில் தானும் மகிழ்ச்சி அடைந்தவராய்,

"போய்ட்டு வாம்மா வருணி..." என்று அவர் சொல்ல... அவளும் சரியென்று தலையசைத்தாள்...

அவளை அழைத்து கொண்டு தங்களது நிறுவனத்திற்கு சென்ற தேவானந்த் மனதில் மனைவியை அவளின்

கூட்டில் இருந்து வெளியில் கொண்டு வந்து விட முடியும் என்ற நம்பிக்கை அந்த வானளவு எழுந்து நின்றது...

அன்று சுஜானா மருத்துவமனைக்கு கிளம்பி கொண்டு இருந்த போது பார்வதி அவளிடம்,

"இன்னைக்கு சாயந்திரம் உன்னை பெண் பார்க்க வர்றாங்க... அதனால கொஞ்சம் நேரத்தோடு வீட்டுக்கு வந்திரு சுஜி..."

அன்னை சொன்ன செய்தியில் அதிர்ந்து போய் மூளை வேலை நிறுத்தம் செய்ய, சிலையாய் அவள் நின்று இருந்தாள்...

தங்கையின் மனநிலை அறியாத தேவானந்த்தும், "பையன் பேரு ஆகாஷ்... அவனும் டாக்டரா தான் இருக்கான்... நியூரோ ஸ்பெசலிஸ்ட்... ரொம்ப நல்ல பையன்..." என்று மணமகனின் ஜாதகத்தை சொல்ல...

அது ஏதும் காதில் வாங்காதவளாய் உணர்வுகள் மரத்து போய் நின்றாள் அவள்...

"சுஜி... அத்தை கேட்கிறதுக்கு பதில் சொல்லும்மா..." வருணிதா நாத்தனாரின் தோளை மென்மையாய் தட்டினாள்...

அதில் சுரணை பெற்ற சுஜானா, "சரிம்மா..." என்று வாய்க்குள் முணுமுணுத்தபடி மருத்துவமனைக்கு கிளம்பியவள் மனதில் கலக்கமே நிறைந்து இருந்தது...

கிருஷ்ணா அல்லாது வேறு ஒருவன் பெண் பார்க்க வருவதே அவளுக்கு பிடித்தமாய் இல்லை... ஏனோ மனதுக்கு அருவருப்பாய் இருந்தது... ஆனால் அதே சமயம் இந்த மாதிரி நிகழ்வுகளை தடுக்கவும் முடியாது... அதே போல் தன் காதலை மறக்கவும் அவளால் முடியாது...

இதற்கு என்ன தான் தீர்வு என்பது போல் யோசித்து கொண்டு இருந்தவளுக்கு அந்த தீர்வு தான் புலப்படவில்லை...

கிருஷ்ணா அவளை காதலித்தால் மட்டுமே இந்த பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடும் என்று அவளுக்கு தெரிந்தாலும், அது அத்தைக்கு மீசை முளைக்கும் கதை என்பதால் அதை பற்றி அவளால் யோசிக்க முடியவில்லை...

ஆனாலும் எப்படியாவது இந்த நிகழ்வை தடுக்க வேண்டும் என்று அவளது மனம் யோசித்து கொண்டே இருந்தது...

அப்படி இடைவிடாது யோசித்ததன் பலன் அன்று மாலை அவள் வீட்டிற்கு செல்லவில்லை...

இரவும் வெகு நேரம் சென்று வந்தவளை பார்வதி கோபத்தோடு எதிர் கொண்டார்...

"உனக்கு ரொம்ப செல்லம் கொடுத்ததால நீ எங்களை கொஞ்சமும் மதிக்கிறது இல்லை... உன்னால மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கிட்ட நாங்க அவமானப்பட்டது தான் மிச்சம்..." என்று அவர் கோபம் கொள்ள...

"அம்மா... இன்னைக்கு ஒரு பேக்டரியில் பெரிய தீ விபத்தும்மா... கவர்மென்ட் ஹாஸ்பிட்டல்ல இடம் இல்லைன்னு எங்க ஹாஸ்பிட்டலுக்கு தான் எல்லோரையும் கொண்டு வந்தாங்க... அவங்களுக்கு ட்ரீட்மென்ட் கொடுத்ததில் நானும் நேரத்தை பார்க்கலை... பொண்ணு பார்க்கிற ஃபங்க்சனையும் மறந்துட்டேன்..."

அவள் சொன்னது அனைத்தும் உண்மையே... எப்படி இதில் இருந்து தப்பிப்பது என்று யோசனையில் உழன்றவளுக்கு இந்த தீ விபத்து பெரிய வரப்பிரசாதமாய் அமைந்தது... அதை சாக்கிட்டு அவளும் நேரத்தை கடத்திவிட்டாள்...

'இன்று இது வொர்க் அவுட் ஆகிவிட்டது... இது போல் எந்நாளும் ஏமாற்ற முடியுமா...?' அவளுக்கு மனதுக்குள் கவலையாக இருந்தது...

"அம்மா... சுஜியை திட்டாதீங்க... நானும் அந்த நியூசை டிவியில் பார்த்தேன்..." தேவனாந்த் அன்னையை சமாதானம் செய்ய...

"எல்லாம் சரி தான்டா... ஆனா அந்த பையனோட அம்மா எப்படி பேசினாங்க பார்த்தே தானே..."

சுஜானா வராததை உணர்ந்து அந்த பையனின் தாயார், 'பெண்ணுக்கு கல்யாணத்தில் இஷ்டமில்லையோ... காதல் விவகாரம் ஏதும்...' என்று சந்தேகமாய் கேட்டுவிட்டார்...

அதை கேட்டு பார்வதிக்கு கோபமாய் வந்தது... அந்த கோபம் எல்லாம் இப்போது மகளிடம் திரும்பியது...

"அம்மா... என்னோட ப்ரொபோசனலை புரிஞ்சிக்காதவங்க வீட்டுக்கு நான் மருமகளா போனா நான் என் டாக்டர் தொழிலை மறந்து விட வேண்டியது தான்... இந்த மாதிரி ஆளுங்க நமக்கு வேண்டாம்..."

அந்த வரனை தவிர்க்க நினைத்து சுஜானா அப்படி கூறும் போதே தேவானந்த் இடையிட்டு, "சுஜி... அவங்கம்மா தான் அப்படி... ஆனா அந்த பையன் ரொம்ப நல்ல மாதிரி... உன்னோட வேலையை புரிஞ்சிக்கிட்டு நாளைக்கு உன்னை மறுபடியும் பார்க்க வர்றதா சொல்லி இருக்கான்..." என்று அவள் தலையில் அணுகுண்டை தூக்கி போட அதில் அவள் உருக்குலைந்து தான் போனாள்...

'கடவுளே... இதையும் சமாளிக்கணுமா...' ஆயாசமாய் நினைத்தவள், 'டேய்... கிருஷ் எல்லாம் உன்னால் தான்டா...' மனதுக்குள் தன்னவனை எண்ணி பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது அவளால்...

மறுநாள் மாலை அந்த ஆகாஷை நட்சத்திர விடுதி ஒன்றில் வைத்து சந்தித்தாள் சுஜானா...

எப்படி தன் மனதில் இருப்பதை அவனிடத்தில் சொல்வது என்று தெரியாமல் அவள் குழம்பி கொண்டு இருந்தாள்...

அதை அறியாத ஆகாஷோ அவளிடம், "உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சியிருக்கு..." என்று கூறி வழிந்து கொண்டு இருந்தான்...

'இது ஏதுடா புது தலைவலி...' தலையில் கையை வைத்து கொண்டு சலிப்பாய் நிமிர்ந்தவள் கண்ணில் சிறிது தள்ளி இருந்த மேசையில் நண்பர்களுடன் அமர்ந்து இருந்த கிருஷ்ணா தென்பட்டான்... அவளையே இமைக்காது பார்த்து கொண்டு இருந்தவனின் பார்வையில் என்ன இருந்தது என்று அவளுக்கு புரியவில்லை...

எதிர்பாராவிதமாய் அங்கு அவனை கண்டதில் அவளது உள்ளமும், உடலும் உதறத் துவங்கியது...

அவன் தன்னை காதலிக்கா விட்டாலும், தான் அவனை காதலிப்பது உண்மை என்பதால் அவனை கண்டதும் அவளையும் அறியாமல் அவளது மனதில் அச்சம் படர்ந்தது...

'ஐயோ... போச்சே... இந்த ஆகாஷோட நான் இருப்பதை பார்த்து கோபப்படுவானோ... சந்தேகப்படுவானோ...' என்று மனதுக்குள் பயந்து கொண்டு அவள் அமர்ந்து இருந்தாள்...

அவளை முறைத்து கொண்டே கிருஷ்ணா தனது நண்பர்களிடம் விடைப்பெற்று வெளியில் சென்றான்...

அதற்கு மேல் அவளாலும் அங்கு அமர்ந்து இருக்க முடியவில்லை...

"நான் ஹாஸ்பிட்டல் போகணும்... பெர்மிசன் போட்டுட்டு தான் வந்தேன்..." வாய்க்கு வந்ததை அவள் உளறி கொட்ட...

ஆகாஷும் அதை ஆராயாமல் அவளுடன் எழுந்தான்...

வெளியில் வந்ததும் அவளை வழியனுப்பும் பொருட்டு அவளுடன் இணைந்து நடந்தவனை திகைப்புடன் பார்த்தவள்,

"இல்லை நானே போய்க்கிறேன்..." என்றவள் அவனின் பதிலை எதிர்பாராமல் நடந்தாள்...

அவளின் நடவடிக்கையை விசித்தரமாய் பார்த்தவன் பின் தோளை குலுக்கியபடி தனது காரை நோக்கி நடந்தான்...

வழியில் எங்கேயாவது கிருஷ்ணா தென்படுகிறானா என்று சுற்றும் முற்றும் பார்த்து கொண்டே தனது காரை நோக்கி நடந்தாள் அவள்...

எங்கும் அவனை காணவில்லை என்றதும் அவள் சோர்வுடன் தனது கார் இருக்கும் பக்கம் செல்ல, அங்கு அவளது காரில் சாய்ந்து நின்று கொண்டு இருந்த கிருஷ்ணாவை கண்டு அவளது முகம் மலர்ந்தது என்றால், அவனோ முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க கோபமாய் அவளை முறைத்து கொண்டு இருந்தான்...

அதில் உண்மையில் அவள் நடுங்கி தான் போனாள்...

"யாரவன்...?" கோபத்தை அடக்கியபடி கிருஷ்ணா கேட்க...

'அதை கேட்க நீ யார்...?' என்று எதிர்கேள்வி கேட்க தெரியாதவளாய் அவனை பார்த்து பயந்தவள்,

"அவர்... அவர்..."

"அந்த குட்டிச்சுவர் தான் எவர்ன்னு கேட்கிறேன்..." எதற்கு இவ்வளவு கோபம் என்று அவனுக்கும் விளங்கவில்லை...

ஆனால் யாரோ ஒருவனுடன் தன்னவளை இணைந்து கண்டது அவன் மனதுக்கு பிடிக்கவில்லை என்பது மட்டும் அவனது புத்தியில் உறைத்தது...

அவளிடம் இருந்து பதில் வராமல் இருக்கவும், "என்ன லவ்வரா...?" என்றான் ஒரு மாதிரி குரலில்...

'லவ்வர்' என்ற வார்த்தையில் அவளிடம் இருந்த பயம் நீங்கி அவனை பார்த்து முறைத்தாள் அவள்...

'என்னோட லவ்வர் நீ தான்டா மடையா...' என்று ஏனோ உரக்க கத்தி சொல்ல வேண்டும் போலிருந்தது அவளுக்கு...

ஆனால் அவன் குரலில் இருந்த தேவையில்லாத அழுத்தத்தில் அந்த எண்ணத்தை கைவிட்டவள் அவனை பார்த்து முறைத்தாள்...

"அவர் எனக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளை..." என்றாள் கெத்தாய்...

இதை அவன் கொஞ்சம் கூட நினைத்து பார்க்கவில்லை... அதிர்ந்து போய் நின்றுவிட்டான்... அவனது மனம் அந்த வார்த்தையில் செயலிழந்து போனது...

அவள் மட்டும் தனது அக்காளின் நாத்தனாராய் இருந்து இருக்காவிட்டால் இதற்கான அவனது பதிலே வேறு மாதிரி இருந்து இருக்கும்... ஆனால் தேவானந்த் மீது இருந்த மரியாதை அவனது நாவை கட்டி போட்டது...

"ஓ... அப்படியா...?" முயன்று சாதாரணக் குரலில் பேசியவன், "என்ன பண்றாரு...?" என்று கேட்டான்...

"டாக்டர்..." வேண்டும் என்றே பெருமையுடன் கூறினாள் அவள்...

அவளது ஏமாற்றம் அவனை குத்தி காயப்படுத்த நினைத்தது...

"ஓ... உன்னை கல்யாணம் பண்ணணும்ன்னா டாக்டர் படிச்சியிருக்கணுமோ..." என்றவனது மனதை வேதனை நிறைத்தது...

ஊர், உலகம் போற்றும் அளவில் தொழில் செய்யும் இளம் தொழிலதிபன் அவன்... நல்ல அழகனும் கூட... அப்படி இருந்தும் காதலினால் ஏற்பட்ட ஏமாற்றத்தில் தன்னையே கீழாக எண்ணி வெறுத்தான்...

அவனது பேச்சில் அவளது மனதிலும் வேதனை எழுந்தது... கண்களை அழுந்த மூடி தன்னை கட்டுப்படுத்தி கொண்டவள்,

"உங்களுக்கு மனைவியாய் வருவதற்குன்னு சில தகுதிகள் வேணும்ன்னு நீங்க நினைக்கிற மாதிரி, எனக்கு கணவனா வருவதற்கும் சில தகுதிகள் வேண்டும்..." என்றவள் அவனின் முகம் பார்க்காமல் கார் கதவை திறந்தவள் அதை கிளப்பிய கொண்டு விருட்டென்று சென்றுவிட்டாள்...

அவள் பேசியதை கண்டு அவன் மிகவும் குழம்பி போனான்...

'எனக்கு மனைவியா வருவதற்கு சில தகுதிகள் வேணும்ன்னு நான் நினைச்சேனா...? இது எப்போ நடந்தது...?' தலையை போட்டு உடைத்து கொண்டான் அவன்...

'ஏன்டா கிருஷ்... உனக்கு எல்லாம் கல்யாணம்ன்னு ஒண்ணு நடக்கிறதே அதிசயம்... இதில் தகுதியுள்ள பொண்ணா தேடி கல்யாணம் பண்ணணும்ன்னா காலம் முழுவதும் நீ அரச மரத்தடி பிள்ளையாராய் தான் உட்கார்ந்து இருக்கணும்...' அவனது மனசாட்சி சமய சந்தர்ப்பம் தெரியாமல் கேலி செய்து அவனது காலை வாரியது...

இப்படி குழம்பி கொண்டே வீடு வந்து சேர்ந்த கிருஷ்ணா அன்றிரவு முழுவதும் தூங்காமல் யோசித்ததில் கடைசியில் அவனுக்கு பல்ப் பிரகாசமாய் எரிந்தது...

உறையும்...

சுஜானா கட்டிலில் இருந்த பட்டுப்புடவை, நகைகளை டென்சனோடு வெறித்து பார்த்து கொண்டு இருந்தாள்... அவளையும் அறியாது அவளது வாய் கை நகங்களை கடித்து துப்பி கொண்டு இருந்தது... தான் ஒரு மருத்துவர் என்பதை கூட உணராமல் மனதில் எழுந்த கவலையில் நகம் கடிக்கும் பணியை செவ்வனே செய்து கொண்டு இருந்தாள் அவள்...

காலையில் எழுந்தவுடன் அவளது அன்னை பார்வதி அவளிடம் வந்து, "இன்னைக்கு நீ ஹாஸ்பிட்டல் போக வேண்டாம்... இன்னைக்கு உனக்கு நிச்சயதார்த்தம்..." என்று செய்தி போல் கூறியவரை நோக்கி அவள் ஏதோ சொல்ல முனையும் போதே,

"தேவா ஹாஸ்பிட்டலுக்கு ஃபோன் பண்ணி லீவு சொல்லிட்டான்... அதனால சாக்கு போக்கு சொல்லாம நிச்சயத்துக்கு தயாராகும் வழியை பார்..." கறார் குரலில் கூறியவரிடம் எதுவும் பேச தோன்றாமல் அமைதியாய் அமர்ந்துவிட்டாள்...

என்ன செய்து இந்த நிச்சயத்தை தடுப்பது என்று அவளுக்கு தெரியவில்லை...

அந்நேரம் அவளது அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே வந்த வருணிதா, "என்ன சுஜி இன்னும் கிளம்பலையா...? மாப்பிள்ளை வீட்டில் இருந்து இன்னும் பத்து நிமிசத்தில் இங்கே வந்துருவாங்களாம்..." என்று அறிவித்தவள்,

"நான் வேணும்ன்னா அலங்காரம் பண்ணிவிடவா...?" என்று அவள் அருகில் வர...

"இல்லை அண்ணி... நானே பார்த்துக்கிறேன்..." என்று சோர்வுடன் சொன்னவள், அண்ணியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடுவோமோ என்று ஒரு கணம் யோசித்தாள்...

ஆனால் அதன் பின்...???

இந்த கேள்வி தான் அவள் மனதை அதிகம் வாட்டியது... காதலிப்பதில் தவறில்லை தான்... நாம் காதலிப்பவர் நம்மை காதலிக்க வேண்டும் அல்லவா... ஒருவேளை கிருஷ்ணா வேறு ஏதும் பெண்ணை காதலித்து இருந்தால்...??? இந்த நினைவுகள் அவளது மனதினை திறக்க வழியில்லாமல் செய்துவிட்டது...

தலையை இரு கைகளால் தாங்கி கொண்டு ஒருவித அலைப்புறுதலுடன் அவள் அமர்ந்து இருந்தாள்...

மீண்டும் அறைக்கதவு திறக்கும் ஒலி காதில் விழுந்தாலும் யாரையும் எதிர்கொள்ளும் மனநிலையில் அவள் இல்லாததால் நிமிர்ந்து பார்க்கவில்லை...

"ஹாய் சுஜி..." திடுமென ஒலித்த கிருஷ்ணாவின் குரலில் அவள் திடுக்கிட்டு போய் நிமிர்ந்தாள்...

அங்கே அவனை கண்டதும் இமைக்க மறந்தவளாய் அவனை பார்த்து கொண்டு இருந்தாள்... ஒருவேளை இது கனவோ என்று அவள் நினைக்கும் போதே அவன்,

"என்னம்மா கல்யாணப் பொண்ணு எப்படி இருக்க...?" அவனது குரலில் நக்கல் கலந்து இருந்ததோ அவளால் அதை கண்டுபிடிக்க முடியவில்லை...

ஆனாலும் அவன் இப்படி வெகுசாதாரணமாய் கேட்டது அவளை மிகவும் காயப்படுத்தியது... முயன்று தன்னை சாதாரணமாய் காட்டி கொண்டவள்,

"நீங்க எங்கே இங்கே...?"

"என்ன சுஜி இப்படி கேட்டுட்ட...? உன் நிச்சயதார்த்தம் நான் இல்லாமலா...?"

விளையாட்டாய் கேட்டவனின் வார்த்தைகளை அவளால் விளையாட்டாய் எடுத்து கொள்ள முடியவில்லை... வேதனையுடன் இமைகளை மூடி திறந்தவள் அவனை அமைதியாய் ஏறிட்டாள்...

அதை அவன் கண்டு கொள்ளாது,

"மாப்பிள்ளை வீட்டில் எல்லோரும் வந்தாச்சு சுஜி... நீ இன்னும் ரெடியாகலையா...?"

இப்போது அவனது வார்த்தைகள் அவளுள் பெரும் கோபத்தை உண்டு பண்ணியது...

"அது எனக்கு தெரியும்... நீங்க உங்க வேலையை பாருங்க..." ஏறக்குறைய கத்தியவளை அசால்ட்டாய் பார்த்தவன்,

"அப்போ என் வேலையை பார்க்கலாம்ன்னு சொல்ற..." ஒரு மாதிரி குரலில் வினவியவனை கண்டு எதையும் காட்டி

கொள்ளாது அவள் அறையின் வாயிலை நோக்கி கையை காண்பித்தாள்...

ஆனால் அவனோ அவள் சொன்னதை செய்யாமல் உதட்டில் உறைந்த விசம புன்னகையுடன் அவளை நோக்கி வந்தான்...

அவன் அழுத்தமான காலடியுடன் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து அவள் அச்சத்துடன் தன்னையும் அறியாது கட்டிலில் இருந்து எழுந்தாள்...

"இங்கே எதுக்கு வர்றீங்க...?" வார்த்தைகள் தந்தி அடித்தது அவளுக்கு...

"நீ தானேம்மா சொன்ன என் வேலையை பார்க்க சொல்லி..."

"அதுக்கு இப்படி கிட்ட வர்றதா...?"

"இப்படி கிட்டே வந்தா தானே உனக்கு புடவை கட்டி, மேக்கப் எல்லாம் போட்டு விட முடியும்..."

"ஆங்..." மேலே பேச முடியாது விழித்தவளை கண்டு மனதுக்குள் சிரித்தவன் இன்னும் இன்னும் அவளை நெருங்கினான்...

"வேண்டாம் கிருஷ்..." என்றவளின் வார்த்தையில் இருந்த அழுத்தம் குரலில் இல்லை... அது நலிந்து ஒலித்தது...

அவனோ அதை பொருட்படுத்தாது மெதுவாய் ஆனால் அழுத்தமாய் தனது ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தான்...

மூச்சு காற்று மேலே படும் தூரத்தில் மிக மிக அருகில் வந்து விட்டவனை கண்டு எகிறி துடித்த இதயத்தை அடக்கும் வகையறியாது மூச்சை அடக்கி கொண்டு நின்று இருந்தவளை கண்களில் சுவாரசியம் பொங்க பார்த்தான் அவன்...

அவனது பார்வையில் அவளது உயிர் உருகியது...

'ச்சே... வெளியில் எனக்காக மணமகன் வீட்டில் காத்திருக்க நானோ இவனை கண்டு உருகி கொண்டு நிற்கிறேனே... நான் என்ன மாதிரியான பெண்...' கழிவிரக்கம் மனதை தாக்க அதில் கோபமாய் நிமிர்ந்தவள்,

"உங்களை இங்கே விட்டுட்டு இந்த அம்மா, அண்ணி எல்லாம் என்ன பண்றாங்க...?" என்றவள், "அம்மா..." என்று கத்த...

அதை அவன் கண்டு கொள்ளாது, "நீ என்ன கத்தினாலும் அவங்க இங்கே வர மாட்டாங்க... ஏன்னா அவங்க நிச்சய வேலையில் பிசி..." என்றவன் அவளை நோக்கி குனிய...

அதில் பயத்துடன் கண்களை இறுக மூடி கொண்டாள் அவள்...

சிறிது நேரம் சென்றும் அவனிடத்தில் இருந்து எந்த சத்தமும் இல்லை என்றதும் அவள் கண்களை திறந்து பார்க்க, அவனோ கட்டில் மேல் இருந்த புடவையை கையில் எடுத்து கொண்டு இருந்தான்...

அதை கண்டு அவள் என்ன மாதிரி உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை...

"இந்தா இதை கட்டிட்டு வா..." என்று புடவையை அவள் புறம் நீட்டினான் அவன்...

அதை கண்டு அவளது மனம் துயரம் கொண்டது...

'கொஞ்சம் கூட நான் இவன் மனதை பாதிக்கவில்லையா...' மனதின் வேதனையின் வலி தாங்காமல் அவளது கண்கள் கண்ணீர் வடித்தது...

தன்னவளின் கண்ணீரை கண்டதும் அவன் ஒரு நொடி தயங்கினான்... அவளது கண்ணீர் அவனது மனதை சற்று அசைத்து பார்க்கத்தான் செய்தது...

'இந்த வேதனை வேண்டாம் பெண்ணே...!!!' என்று அவளது கண்ணீரை துடைக்க அவனது கைகள் பரபரத்தது... ஆனாலும் அதை முயன்று அடக்கி கொண்டான்...

எதுவாக இருந்தாலும் அவளது வாய்மொழியாக வர வேண்டும் என்று அவன் விரும்பினான்... இந்த நிலையிலும் அவள் தன் மனதை மறைப்பது கண்டு அவனுக்கு கோபம் கோபமாய் வந்தது...

"என்ன பார்த்துட்டு இருக்க... நீ விரும்பிய மாதிரி டாக்டர் மாப்பிள்ளை... அப்புறம் என்ன தயக்கம்..." மீண்டும் புடவையை அவளிடத்தில் நீட்டியவனின் கையில் இருந்து புடவையை வாங்கி அதை தூக்கி தூர எறிந்தவள்,

"எனக்கு டாக்டர் மாப்பிள்ளையும் வேண்டாம்... வேற யாரும் வேண்டாம்... நீங்க தான் எனக்கு வேணும்... நீங்க தான் வேணும்..." என்று அவனது சட்டையை பிடித்து கொண்டு ஆக்ரோசமாய் கத்தியவள் பின் தாங்க மாட்டாதவளாய் அவனது நெஞ்சத்தில் சாய்ந்து கண்ணீர் வடித்தாள்...

தனது மனதை திறந்த அவளை கண்டு மகிழ்ந்தவன் ஆதரவாய் அவளை அணைத்து கொண்டான்...

இதை இதை தான் அவளிடத்தில் அவன் எதிர்பார்த்தான்...

"இப்படியே என்னை எங்கேயாவது கூட்டிட்டு போயிருங்க கிருஷ்..." என்றவள் அவனை நிமிர்ந்து பார்த்து,

"நாம ஓடி போயிரலாமா...?" என்று அவள் சிறுகுழந்தையாய் கேட்க...

அவன் சிரித்தபடி அவளது நெற்றியோடு முட்டி விளையாடியபடி, "எதுக்கு ஓடி போகணும்...? முறைப்படி கல்யாணம் பண்ணி என் மனைவியா உன்னை கூட்டிட்டு போறேன்..."

அவனது வார்த்தை அப்போது தான் அவளது அறிவுக்கு எட்டியது... மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்ய ஆச்சிரியமாய் அவனை பார்த்தவள்,

"அப்போ நீங்க... நீங்களும்..."

"நாங்க... நாங்களும் தாங்க உங்களை லவ் பண்றோம்..." அவளது மூக்கை தனது கையால் ஆட்டியபடி அவளை

போல் இழுத்து சொன்னவனை கண்டு மனநிம்மதி அடைந்தவள் அடுத்த நொடி அவனை சராமாரியாய் தாக்க துவங்கினாள்...

"இதை ஏன் நீங்க முன்னாடியே சொல்லலை...? ஏன் இப்படி பண்ணினீங்க...?" என்று கேட்டு கொண்டே அடித்தவள் நேரம் செல்ல செல்ல அவனை அடிப்பதை விட்டு விட்டு அவனது நெஞ்சில் சாய்ந்து விசும்ப ஆரம்பித்தாள்...

இத்தனை நாள் அவள் தவித்த தவிப்பு அவளுக்கு தானே தெரியும்...

தனது தவிப்பிற்கு கொஞ்சமும் குறையாது தவித்து இருந்தவளின் காதல் அவனுக்கு அத்தனை பிடித்து இருந்தது...

அவளின் மனத்தவிப்பை புரிந்தவனாய், "உன்னோட தவிப்பு புரியுது சுஜி..." என்று அவளது நெற்றியில் முத்தமிட்டு அவளது தவிப்பை அவன் குறைத்தான்...

"நீங்க முன்னமே காதலிக்கிறதை சொல்லியிருந்தா இந்த பிரச்சினையே வந்திருக்காது..." என்றவளை கண்டு,

"நீ மட்டும் என் உறவா இல்லாம இருந்து இருந்தா நான் எப்பவோ என் காதலை உன்னிடத்தில் சொல்லியிருப்பேன்... ஆனா முதலில் உறவுக்காக பொய்யாய் நடித்து அப்புறம் நான் உன்னை காதலித்ததாய் சொன்னால் நீ என்னை நம்புவியோன்னு ஒரு பயம் எனக்குள் இருந்துட்டே இருந்தது..."

அவளுக்கும் அந்த பயம் இருந்தது உண்மை தானே... அதனால் அதை ஆமோதித்து ஏற்று கொண்டாள்...

"இருந்தாலும் நீங்க முதலில் சொல்லி இருக்கலாம் கிருஷ்... நான் தான் பெண் தயங்கினேன்... நீங்க ஏன் தயங்கினீங்க... அதுவும் நானாய் சொல்லும் வரை..." மனத்தாங்கலுடன் கேட்டவளின் விழியோடு விழி கலந்தவன்,

"என் நடவடிக்கை சொல்லாத காதலையா என் வார்த்தைகள் உன்னிடம் சொல்ல போகுது..." என்றவனை திகைத்து போய் அவள் பார்க்க...

"என் பார்வை, என் செயல் இதில் என்னோட காதல் உனக்கு தெரியலையா... அப்படியே தெரியலைன்னாலும் நீ உன் மனதை என்னிடம் திறக்கிறதுக்கு ஏன் இவ்வளவு தயங்கின சுஜி...? நான் ஏதும் தப்பா சொல்லிவிடுவேன்ங்கிற பயமா...? ஏன் சுஜி... என்னை பார்த்தா பொறுக்கி மாதிரியா இருக்கு...?"

வேதனையுடன் கேட்டவனை கண்டு அவள் 'இல்லை' என்பது போல் மறுத்து தலையசைத்தாள்...

"உனக்கு தெரியாது சுஜி... இத்தனை வருசமா மாமாவை பிரிஞ்சி அக்கா படுற வேதனையை கூட இருந்து பார்த்தவன் நான்... அவ எதையோ மனசுல போட்டு மருகுகிறாள்ன்னு தெரியும்... ஆனா அது என்னன்னு தான் தெரியாது... எனக்கு என்னமோ அவ மாமா கிட்ட மனசு விட்டு பேசியிருந்தா இந்தளவுக்கு பிரச்சினை வந்திருக்க வாய்ப்பில்லைன்னு தான் தோணும்... ஆனா அவளுக்கு அறிவுரை சொல்லும் அளவுக்கு நான் இல்லைங்கிறதால அமைதியா இருந்தேன்..."

"ஒருத்தர் மேல ஒருத்தர் அதிக காதல் வைக்கிறதுல எந்த தப்பும் இல்லை... ஆனா மனசுல இருக்கிறதை மனம் விட்டு பேசணும்... காதல்ல தயக்கம் இருக்க கூடாது... என் அக்கா கிட்ட இருக்கிற தயக்கம் உன் கிட்ட நான் பார்த்தேன்... அது நம்ம காதலுக்கு ரொம்ப பெரிய எதிரி... மாமா மாதிரி நான் ரொம்ப பொறுமைசாலி எல்லாம் கிடையாது... ரொம்ப சராசரியான ஒரு ஆண்... எந்தளவுக்கு சிரிச்சிக்கிட்டு இருக்கேன்னோ அந்தளவுக்கு எனக்கு கோபம் அதிகம் வரும்... நீ இப்படி தயங்கி தயங்கி உன் மனசில் இருப்பதை என்னிடம் மறைச்சா அதுவே நமக்கு இடையில் பெரிய இடைவெளியை உண்டாக்கி விடும்... தப்போ சரியோ என் சட்டையை பிடிச்சு இப்போ சொன்ன பாரு அது மாதிரி கேட்டிரு... மனசுல போட்டுட்டு குழப்பிக்காதே..."

அவன் பேச பேச அவனது மனம் புரிய அதை ஆமோதித்து ஏற்று கொண்டாள்...

"எங்கக்கா வாழ்க்கையை பார்த்து ரணமான என் மனசோட வலி இது சுஜி... எங்கக்கா மாதிரி நீயும் மௌனமா இருந்து என்னை கொன்றுவிடாதே... அதை என்னால் தாங்க முடியாது..." சொல்லும் போதே அவனது கண்கள் கலங்கியது...

சகோதரியின் வாழ்க்கை அவனது மனதை எந்தளவுக்கு காயப்படுத்தி இருக்கிறது என்பதை அவளும் புரிந்து கொண்டாள்...

அவனை ஏறிட்டு பார்த்தவளை கண்டு அவன் 'என்ன' என்பது போல் பார்க்க...

"இப்போ எனக்கு உங்களை இறுக்கமா அணைச்சு முத்தம் கொடுக்கணும் போலிருக்கு..."

முதலில் அவளது வார்த்தையின் அர்த்தம் புரியாமல் திகைத்து விழித்தவன் அடுத்த நொடி அவளை இறுக அணைத்து இருந்தான்...

அவனது அணைப்பில் சுகமாய் கண்மூடி இருந்தவளுக்கு அப்போது தான் மணமகன் வீட்டார் காத்திருப்பது உறைக்க அவனது அணைப்பில் இருந்து வலுக்கட்டாயமாய் திமிறி விலகியவள்,

"இப்போ வெளியில் போய் என்ன சொல்ல...?" பயத்துடன் அறைக்கதவை பார்த்தாள்...

"ம் என்ன சொல்ல...?" என்று யோசித்தவன் பின்,

"நல்ல அழகா மேக்கப் பண்ணிட்டு ஹாலுக்கு போய் மாப்பிள்ளையை பிடிச்சியிருக்குன்னு சொல்லு..." என்று சிரியாமல் அவன் கூற...

"என்னது..." அதிர்ந்து போய் அவனை பார்த்தவள் பின் அவனது வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து,

"அப்போ அந்த மாப்பிள்ளை நீங்க தானா..." என்று மகிழ்ச்சியில் கூவியவள் தானாய் அவனை அணைத்து கொண்டாள்...

"ஆஹா... இப்பவாவது உனக்கு புரிஞ்சதே..." என்று கேலி செய்து சிரித்தவன்,

"இல்லாட்டி உன் அம்மாவோ, என் அக்காவோ என்னை எப்படி உன் ரூமுக்கு பேச அனுப்புவாங்க... அதுவும் இப்படி நெருக்கமா..." என்றவன் இருவரது நிலையை சுட்டி காண்பிக்க அதில் அவளது முகம் செவ்வானமாய் சிவந்தது...

"மாமா தான் 'நான் நல்ல பையன்னு' கஷ்டப்பட்டு ரெக்கமெண்ட் பண்ணி அரைமணி நேரம் பேச அனுமதி வாங்கி கொடுத்தாரு... இப்போ அந்த அரைமணி நேரமும் முடிஞ்சு போச்சு... நீ ரெடியாகி வா..." என்றவன்,

"நான் வேணும்னா உனக்கு ஹெல்ப் பண்ணவா...?" என்று கேட்டவனின் பார்வையில் விசமம் பொங்கி வழிந்தது...

போலியாய் அவனை முறைத்தவள், "அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... நீங்க கிளம்புங்க..." என்று அவனின் தோளில் கை வைத்து தள்ளினாள்...

அவளது வெட்கம் புரிந்தவனாய், "வெளியில் வெய்ட் பண்றேன் நீ ரெடியாகி வா..." என்று சிரித்தபடி அறையை விட்டு வெளியேறினான்...

ஒரு நொடியில் வாழ்க்கை வண்ணமயமாய் மாறியதை உணர்ந்து மனம் மகிழ்ந்தவளாய் அவள் புடவையை உடுத்த ஆரம்பித்தாள்...

அங்கு அவளது அறைக்கு வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்த கிருஷ்ணாவுக்கும் இந்த நிச்சயம் நடப்பதற்காக தான் எடுத்து கொண்ட முயற்சியை எண்ணி பார்த்து கொண்டு இருந்தான்...

அன்று சுஜானா சொன்னதை யோசித்து பார்த்தவனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை... பின் நிதானமாய் முதலில் இருந்து யோசித்து பார்த்தான்... எப்போது இருந்து அவளிடம் வேறுபாடு தென்பட்டது என்பதை யோசிக்க ஆரம்பித்தவனுக்கு மெல்ல விசயம் புரியலானது...

அன்று அவனது அக்கா, 'எனக்கு தெரியும் கிருஷ்... உன் ட்ரீம் கேர்ள்க்கும் சுஜிக்கும் ஏணி வச்சாலும் எட்டாதுன்னு...' என்று கூறியது இப்போது தான் அவனுக்கு நியாபகம் வந்தது... அதன்பின் தான் சுஜானாவிடம் மாற்றம் வந்தது என்பதை உணர்ந்தான் அவன்...

'அவள் காபி எடுத்து கொண்டு வரும் போது அக்கா பேசியதை கேட்டு இருக்க வேண்டும்... அப்படி என்றால் அப்போதே சுஜிக்கு என்னை பிடிக்குமா... அதனால் தான் அன்று முகம் வாடி இருந்தாளோ... அந்த கோபத்தல் தான் இன்று என்னிடம் இப்படி படபடத்து விட்டு போனாளோ... அப்படி கோபமாய் பேசும் போது அவளது கண்ணில் தோன்றிய தவிப்புக்கு பின்னால் என் மீதான காதல் இருந்து இருக்கிறதா...? அடேய் கிருஷ்...இது தெரியாமல் நீ தேவதாஸ் மாதிரி சுத்திக்கிட்டு இருந்து இவ்வளவு நாளை வேஸ்ட் பண்ணிட்டியே... வருணியோட தம்பின்னு அப்பப்போ ப்ரூவ் பண்ற...' தனக்கு தானே நொந்து கொண்டான் அவன்...

அதன்பின் அவன் சும்மா இருக்கவில்லை... அவளது மனம் புரிந்ததும் சந்தோசம் மட்டும் அடையாமல் அவளையும் அடைவதற்கான திட்டத்தையும் தீட்ட ஆரம்பித்தான்...

முதலில் நேரே சென்று மாமா, அக்காவிடம் தான் தனது மனதை தெரிவித்தான்...

தம்பி சொன்னது கேட்டு வருணிதா கணவனை கவலையுடன் பார்த்தாள்... இப்போது தான் பிரச்சனை எல்லாம் முடிந்து சுமூகமாக அவர்களது வாழ்க்கை போய் கொண்டு இருக்கிறது என்று பார்த்தால் தம்பி இப்படி ஒரு அணுகுண்டை தூக்கி போடுகிறானே என்று அவளால்

நினைக்காமல் இருக்க முடியவில்லை... ஆனாலும் மனதுக்குள் சந்தோசமாக தான் இருந்தது...

கிருஷ்ணா காதலை ஏற்று கொண்ட தேவானந்த்தால் தனது தங்கை அவனை காதலிக்கிறாள் என்பதை தான் நம்ப முடியவில்லை... ஏனெனில் தங்கையை பற்றி அவனுக்கு நன்றாக தெரியும்...

"நீ காதலிக்கிறது ஓகே கிருஷ்... ஆனா சுஜி காதலிப்பாளாங்கிறது தான் எனக்கு சந்தேகமா இருக்கு..."

"ஆமாண்டா கிருஷ்... சுஜி அத்தைக்கு ரொம்ப பயப்படுற பொண்ணு... அவ காதலிக்க எல்லாம் மாட்டாள்... நீயா ஒரு கற்பனை பண்ணிக்காதே... வேணும்ன்னா சொல்லு அத்தை கிட்ட நான் பேசி பார்க்கிறேன்..." என்ற வருணிதாவை கண்டு,

"அக்கா..." கிருஷ்ணா திடீரென அலறினான்...

"என்னடா..." வருணிதா பதற...

"நீ ஒரு ஆணியும் பிடுங்க வேண்டாம்... ஏற்கெனவே பிடுங்கிய ஆணியே போதும்..." என்று இரு கையெடுத்து அவன் கும்பிட...

அதில் அவள் தம்பியை பார்த்து முறைத்தாள்... அப்போது கிருஷ்ணா அன்று அவள் பேசியதை நினைவு கூர்ந்தவன்,

"அம்மா தாயே... இதை நானே டீல் பண்ணிக்கிறேன்..." என்றவன் பேச்சில் தேவானந்த்க்கு சிரிப்பு வர மனைவியை பார்த்து அடக்க மாட்டாமல் சிரித்தான்...

"தேவ் அவன் தான் அப்படி பேசுறான்னா நீங்களும் அவன் கூட சேர்ந்துட்டு..." சிணுங்கிய வருணிதா அவனது சிரிப்பு கண்டு லஜ்ஜை அடைந்தவளாய் அவனது தோளில் முகம் புதைக்க...

அவளது செல்லச் சிணுங்கல் அவனது புன்னகையை மேலும் விரிவடைய செய்ய அவன் ஆசையுடன் அவளை தன்னுடன் அணைத்து கொண்டான்...

அதை கண்டு கிருஷ்ணாவுக்கு நிறைவாக இருந்தது... மெல்ல தொண்டையை செருமியவன் மாமாவிடம்,

"இப்போ என்ன மாமா... சுஜி என்னை லவ் பண்றாளா இல்லையான்னு தெரியணும் அவ்வளவு தானே..."

ஆம்மென்ற தேவானந்த்திடம், "அதை இன்னைக்குள்ள ப்ரூவ் பண்ணி காட்டுறேன்..." என்று சபதம் போல் கூறியவன் அன்று முழுவதும் சுஜானாவின் கடைக்கண் பார்வைக்காக தவம் இருக்க அவளோ அவனை திரும்பியும் பார்க்கவில்லை...

'கிருஷ்க்கு வந்த சத்திய சோதனையா இது...' மனம் நொந்தபடி காதலில் தோல்வியுற்றவனாய் வீட்டிற்கு கிளம்பியவனை கண்டு பாவமாக தான் இருந்தது தேவானந்த்திற்கு...

எப்படியாவது அன்னையிடம் கிருஷ்ணாவை பற்றி பேச வேண்டும் என்று முடிவு செய்தான்...

ஏதோ நினைவில் எழுந்த கிருஷ்ணா தனக்கு முன் இருந்த டீப்பாயை கவனிக்காமல் செல்ல அதன் முனை அவனது காலில் இடிக்க...

"ஆ..." என்று மெல்லமாய் அலறினான்...

அதுவரை அவனை கண்டு கொள்ளாமல் இருந்த சுஜானா அவனுக்கு அடிப்பட்டதும் பதறி போய் அருகில் வந்து குனிந்தவள் அவனது காலை தடவி விட்டபடி,

"பார்த்து போக கூடாதா..." என்று உரிமையாய் அதட்டினாலும் அவளது குரலில் தவிப்பு தெரிந்தது... அந்த தவிப்பு இப்போது கிருஷ்ணாவிற்கு அவளது காதலை அப்பட்டமாய் எடுத்து சொல்லியது...

அவளது செயலை வீடே ஆச்சிரியமாய் பார்த்தது... அப்போது தான் அதை உணர்ந்தவளாய் சட்டென்று நிமிர்ந்து நின்றாள்...

ஒரு மாதிரியாக பார்த்த அன்னையை கண்டு படபடத்த மனதை சமன்படுத்தி கொண்டு, "நான் டாக்டர் தானேம்மா... அதான் பார்த்தேன்..." என்றவள் அங்கு நிற்க பயந்து அறைக்கு ஓடிவிட்டாள்...

அந்த நொடி கிருஷ்ணாவின் பார்வை தேவானந்த்தை கர்வமாய் பார்த்தது...

அந்த இடத்திலேயே அவன் அவளின் பெற்றோரிடத்தில் பேசி தனது காதலை திருமணத்தில் உறுதி செய்தான்...

ஏற்கெனவே கிருஷ்ணாவை சுஜானாவோடு முடிச்சு போட்டவர்கள் என்பதால் பார்வதி, சிவநேசன் அதற்கு பெரிதாய் மறுப்பு தெரிவிக்கவில்லை... மாறாக சந்தோசமே அடைந்தனர்...

"நான் அம்மா கிட்ட பேசிறேன்... மேற்கொண்டு என்ன செய்யணும்னு அம்மா உங்க கிட்ட பேசுவாங்க..." கிருஷ்ணா அவர்களிடம் கூறினான்...

இதை அறியாத சுஜானாவோ இன்னமும் படபடப்பு நீங்காமல் அறையின் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டு இருந்தாள்...

போகும் போது அவளிடம் விசயத்தை சொல்லிவிட்டு செல்லலாம் என்று எண்ணிய கிருஷ்ணா மனதில் எடுத்த முடிவில் உறுதியாய் நின்றவனாய் அவளை பார்க்காமல் சென்றுவிட்டான்...

அன்றே தனது அன்னையிடம் இந்த விசயத்தை பேசிவிட்டான்...

"பத்து... இன்னைக்கே ஜவுளிக்கடைக்கு போய் நல்லதா பட்டுப்புடவை, வைர நகை எல்லாம் வாங்கிக்கோங்க..." விசயத்தை கூறாமல் மொட்டையாக அவன் கூற...

அவன் அன்னையோ புத்திசாலி அல்லவா...

"என்னடா மருமகள் ஏதும் பார்த்து வச்சிருக்கியா...? புடவை, நகைன்னு பினாத்துற...?"

"அம்மா... நான் உங்க மருமகளை பார்த்துட்டேன் தான்... ஆனா இந்த புடவை, நகை எல்லாம் அவளுக்கு இல்லை... உங்களுக்கு தான்... அவளுக்கு உங்களை நான் செலக்ட் பண்ண விடுவேனா... அதெல்லாம் நாங்களே செலக்ட் பண்ணிட்டோம்ல..." கெத்தாய் அவன் சட்டைக் காலரை தூக்கி விட்டு கொண்டான்...

"அடப்பாவி இது எப்போடா நடந்தது...?"

"அது எப்பவோ நடந்தது..." என்றவன், "ஏம்மா உங்களுக்கு கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா... பையன் பொண்ணு பார்த்திட்டேன்னு சொல்றான்னே யார், என்னங்கிற விசயத்தை கேட்டு தெரிஞ்சுக்க வேண்டாமா...?"

"ம்ஹூம்... என்னத்தை பார்த்து இருக்க போற... ஒரு பொம்ரேனியன் நாய்க்குட்டியை பார்த்திருப்ப... நாயோட வாழ்க்கை நடத்தணும்ன்னு உன் தலையில் எழுதியிருக்கு..." எதையோ நினைத்து பெருமூச்சு விட்டார் அவர்...

"என் சுஜிக்குட்டி உங்களுக்கு நாய்க்குட்டியா...? திஸ் இஸ் டூ மச் மா..." என்று மகன் பல்லை கடித்தது கூட அவருக்கு பெரியதாய் தெரியவில்லை...

"சுஜின்னு யாரைடா சொல்ற...?" அவரது குரலில் எதிர்பார்ப்பு நிரம்பி வழிந்தது...

அதை அவன் உணர்ந்தாலும், "ம்... நம்ம பேக்டரியில் வேலை செய்து பாருங்க அந்த பொண்ணை சொன்னேன்..."

"என்னடா சொல்ற...?" உண்மையில் அவர் அதிர்ந்து தான் போனார்...

"அம்மா... நான் அக்காவோட நாத்தனார் சுஜியை தான் சொல்றேன்..." என்றவன் தனது காதல் காவியத்தை அன்னையிடம் கதையளக்க...

"பரவாயில்லையே கிருஷ்... உனக்கு கூட சூப்பரா லவ் வருது..." என்று மகனை சிலாகித்தவர் தனது கணவர் அங்கு வருவதை கண்டு,

"கிருஷ்... அப்பா கிட்டேயும் சொல்லுடா..."

"அட போங்கம்மா... அவர் கிட்ட எல்லாம் என்னால் பேச முடியாது... நீங்க உங்க புருசன் மற்றும் நம் உறவினர் பெருசுங்க கிட்ட பேசி சீக்கிரமா நிச்சயம் பண்றதுக்கான வழியை பாருங்க..." என்றவன் அழைப்பை துண்டித்துவிட்டான்...

பிறகு பத்மாவே எல்லோரிடமும் பேசி கிருஷ்ணாவின் காதலை நிச்சயத்திற்கு கொண்டு வந்தார்...

"கிருஷ்... போகலாமா..." சுஜானா குரலில் நிகழ்காலத்துக்கு வந்த கிருஷ்ணா அப்போது தான் அவளின் அலங்காரத்தை கவனித்தான்...

தேவதையாய் அழகுற ஜொலித்தவளின் அழகு அவனை மயக்கியது... அவள் அருகில் வந்தவன் கிறங்கிய குரலில்,

"போகலாமே..." என்றவனது கை அவளின் அறை பக்கம் காட்டியது...

அவனது மையல் பார்வையில், "ம்ஹூம்... இது சரிப்படாது..." என்றவள் அங்கிருந்து நழுவி ஓட...

"ஏய் எங்கே போற...?" அவளை துரத்தியபடி பின்னால் ஓடினான் அவன்...

வரவேற்பறையில் இருந்த பெரியவர்களை கண்டதும் இருவரும் தங்களது விளையாட்டுத்தனத்தை விட்டு விட்டு அமைதியாய் அங்கு வந்து நின்றனர்...

இருவரின் முகத்திலும் தெரிந்த சந்தோசம் கண்டு இருவீட்டாருக்கும் நிம்மதியாய் இருந்தது... இனிதே கிருஷ்ணா, சுஜானா நிச்சயம் முடிந்து இரு மாதங்களில் திருமணம் என்று உறுதி செய்யப்பட்டது...

தேவானந்த், வருணிதா வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் சென்றாலும் ஓரளவிற்கு மேல் இருவரும் நெருங்கவில்லை...

மனைவி தன் தயக்கத்தை உடைத்துவிட்டு வெளிவரும் நாளிற்காக அவன் காத்திருந்தான்... அவளோ அவனாய் வந்தால் எந்த தடையும் சொல்லும் மனநிலையில் இல்லை... அவனது வரவிற்காக அவள் காத்திருந்தாள்...

அன்று அலுவலகத்துக்கு வந்ததும் தேவானந்த் மனைவியிடம், "அடுத்து ஒரு வாரம் நான் ஜெய்ப்பூர் போறேன்... நீ இந்த டெண்டருக்கான கொட்டேசனை ரெடி பண்ணி அனுப்பிரு..." என்றான் அவளது முகம் பார்க்காமல்...

"தேவ்... நான் எப்படி...?" தயங்கியவளை கண்டு நிமிர்ந்து பார்த்தவன்,

"நீ தான் பண்ணணும்..." என்று அழுத்தமாய் உரைத்தவன், "எதையும் செஞ்சு பார்த்திட்டு முடிவு பண்ணணும்... செய்யாமலே தோத்துட்டதா எண்ணி ஓடி ஒளிய கூடாது..." என்று அவன் விளக்கம் கொடுக்க...

அவள் தலை குனிந்து நின்றாள்...

"உண்மை வது... இப்போ எனக்கு வேலை ரொம்ப அதிகம்... அதனால் தான் இதை உன்னிடம் கொடுக்கிறேன்..." என்றவன் எழுந்து அவள் அருகில் வந்து அவளது தோளில் ஆதரவாய் கை வைத்து,

"உன் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு பேபி..."

அவனது நம்பிக்கை கண்டு அவளது கண்கள் கலங்கியது... அவனை தான் நம்பாமல் போன தனது மடமையை எண்ணி இப்போது மனம் வருந்தினாள்...

சொன்னது போல் அவன் ஜெய்ப்பூருக்கு செல்ல அவள் தான் அந்த கொட்டேசனை தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தாள்...

கணவன் இல்லாத ஒரு வாரமும் அவளுக்கு மிகுந்த டென்சனாய் சென்றது...

அவன் வந்ததும், "தேவ்... அந்த டெண்டர் நமக்கு கிடைச்சிரும் இல்லையா...?" ஆவலுடன் கேட்டவளின் கன்னம் தட்டி,

"கட்டாயம் நமக்கு தான்..." என்று அவன் சொல்ல அதில் அவள் நிம்மதி அடையும் போதே,

"என் பேபி திறமை மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்று அவன் சேர்த்து சொல்லவும்...

அவளது அத்தனை நேர உற்சாகம், நிம்மதி எல்லாம் பொங்கிய பாலில் தண்ணீர் தெளித்தது போல் அப்படியே 'புஸ்' என அடங்கியது...

அவளது மனம் மறுபடியும் கலங்கி தவித்தது...

உறையும்...

"தேவ்..." எப்போதும் இருக்கும் தயக்கத்துடன் அழைத்த மனைவியை கண்டும் காணாதவனாய் மகளுடன் வீடியோ கேம் விளையாடி கொண்டு இருந்தான் தேவானந்த்...

அந்த டெண்டருக்கு கொட்டேசன் தயாராகி அனுப்பியதில் இருந்து வருணிதா இப்படித்தான் எதையோ பறி கொடுத்தார் போன்று ஒருவித கலக்கத்துடன் இருக்கிறாள்...

மனைவியின் மனநிலையை பற்றி அறிந்து இருந்தாலும் அதை பற்றி அவளிடம் பேச அவன் விரும்பவில்லை...

அதனால் அவளின் கவனத்தை அவளுக்கே தெரியாமல் கிருஷ்ணா, சுஜானா திருமண விசயத்தில் திசை திருப்பி விட்டான்... அப்படி இருந்தும் தனிமையில் அவளிடம் மாட்டி கொண்டு முழிக்கத்தான் செய்தான்... அந்த நேரம் மகளின்

துணை கொண்டு அந்த பேச்சை முற்றிலும் தவிர்த்து விடுவான்...

இப்போதும் அதை தான் செய்து கொண்டு இருந்தான் அவன்...

மகள் உறங்கியதும் மீண்டும் ஆரம்பித்தவளை கண்டு, "அதுக்கு இன்னும் ரெண்டு நாள் இருக்கு வது... அப்போ அதை பற்றி பேசலாம்... எனக்கு ரொம்ப டயர்டா இருக்கும்மா... ப்ளீஸ்..." கண்களில் உறக்கத்துடன் கேட்டவனின் வேலைப்பளு அதற்கு மேல் அவனை தொந்திரவு செய்ய விடவில்லை...

ஆனாலும் அவளின் மனம் பதைபதைத்து கொண்டு இருந்தது அவளுக்கு தான் தெரியும்... அவளின் அறியாமையால் கணவனது தொழிலில் பாதிப்பு வந்துவிடுமோ அல்லது டெண்டர் கிடைக்காவிட்டால் பழிக்கு பழி வாங்கியது போல் ஆகிவிடுமோ...? கணவன் தன்னை தவறாக நினைத்து கொள்வானோ என்று மனதுக்குள் பயந்து கொண்டே இருந்தாள்...

தம்பி, நாத்தனார் திருமண டென்சனை விட அவளுக்கு டெண்டர் டென்சன் தான் அதிகமாய் இருந்தது...

இரண்டாவது நாள் பொழுது எல்லோருக்கும் நிம்மதியாக விடிய வருணிதாவிற்கு மட்டும் பயத்துடன் விடிந்தது...

ஏதோ நினைவில் அவள் உணவு கூட சரியாக உட்கொள்ளாமல் தட்டில் கையை அளைந்து கொண்டு இருந்தாள்...

"ச்சூ என்ன பேபி இது சாப்பிடாமல்...?" என்று அவளை கடிந்த தேவானந்த் தானே அவளுக்கு ஊட்டிவிட்டான்...

கண்கள் கலங்க அவன் கொடுத்த உணவை வாங்கி கொண்டவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது...

'நீ இந்தளவுக்கு கவலைப்படுவதற்கு இதில் ஒன்றுமில்லையே...' என்று அவன் நினைத்தான்...

அந்த பக்கம் வந்த பார்வதி இருவரையும் பார்த்து மனம் மகிழ்ந்தவராய் அங்கு இருந்து சென்றுவிட்டார்...

சுமார் பதினொரு மணிக்கு வருணிதாவை தவியாய் தவிக்க வைத்த டெண்டர் விசயம் அவர்களுக்கு சாதகமாய் அமைந்தது... விசயம் கேள்விப்பட்டதும் தான் வருணிதாவிற்கு பெருத்த நிம்மதியாய் இருந்தது...

"தேவ்..." என்று அது அலுவலகம் என்று கூட பாராமல் அவள் சந்தோசத்துடன் அவனை அணைத்து கொண்டாள்...

"இதுக்கு போய் ஒரு மாசமா கவலைப்பட்டுக்கிட்டு இருந்தியே பேபி... உன் திறமை மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா...?"

அவள் காதில் முணுமுணுத்தவன் தானும் அவளை அணைத்து கொண்டான்...

அப்போது தான் அவளுக்கு ஒன்று உறைத்தது... கணவன் தனது திறமையை வெளிக்கொணர்வதற்காக இப்படி நடந்து இருக்கிறான் என்று... அது தெரிந்ததும் அவளுக்கு அத்தனை சந்தோசமாகவும் இருந்தது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... வேறு யார் முரளி தான்...

தேவானந்த்திற்கு வாழ்த்து சொல்லத்தான் அவன் அழைத்து இருந்தான்... இப்போது எல்லாம் முரளி தேவானந்த்துடன் போட்டி போடுவதும் இல்லை... அவனை கண்டு கோபப்படுவதும் இல்லை... அதே போல் தேவானந்த் வழியில் குறுக்கிடுவதும் இல்லை... அவன் வழியில் அவன் சென்று கொண்டு இருந்தான்...

தேவனாந்த் அவனின் வாழ்த்தை புன்னகை முகமாய் ஏற்று கொண்டவன், "முரளி... உனக்கு ஒண்ணு தெரியுமா... இந்த டெண்டர் எனக்கு கிடைக்கிறதுக்கு முழுக்காரணமும் வது தான்... உன்னோட வாழ்த்து, பாராட்டு எல்லாம் அவளுக்கு தான் போய் சேரணும்..."

தன்னை பற்றி முரளியிடம் புகழ்ந்து தள்ளிய கணவனை அத்தனை நேர சந்தோசம் மறைந்து வேதனையுடன் பார்த்தாள் அவள்... எந்த நிலையிலும் தன்னை விட்டு கொடுக்காத அவனை கண்டு அவளின் குற்றவுணர்வு அதிகரித்து கொண்டே சென்றது...

'என் மீது எல்லையில்லா காதலை வைத்து இருக்கும் இவருக்கு நான் எந்த விதத்தில் பொருத்தமாவேன்...' என்று மனதுக்குள் மருகினாள் அவள்...

முரளியுடன் பேசிவிட்டு அழைப்பை துண்டித்த தேவானந்த் மனைவியின் முகமாறுதலை கவனித்து விட்டான்... அவளின் மனதில் எதுவோ இருந்து வாட்டுவதை அவன் உணர்ந்தே இருந்தான்... அதனால் தான் அவளே தனது தயக்கத்தை விட்டு தானாக வெளியில் வரட்டும் என்று இத்தனை நாள் அமைதியாக இருந்தான்...

அவள் என்னவென்றால் எல்லாவற்றையும் மனதில் போட்டு மருகி கொண்டு இருப்பதை கண்டு அவனும் மனம் நொந்தான்...

'இனியும் பொறுக்க கூடாது... நல்லதோ கெட்டதோ இன்று மனம் விட்டு அவளிடம் பேசிவிட வேண்டும்' என்று முடிவு செய்தான்...

அதை அன்றிரவே செயல்படுத்தவும் செய்தான்... மகள் தூங்கியதும் அவள் அருகில் வந்தவன் அவளை அழைத்து கொண்டு அந்த சிறிய அறைக்கு வந்தான்...

அங்கிருந்த கட்டிலில் அவளை அமர வைத்தவன், "பேபி... உனக்கு ஏதாவது என்னிடம் சொல்லணுமா...?"

எப்படி தனது மனதை திறப்பது என்று தெரியாமல் அவள் உள்ளம் நடுங்க அமர்ந்து இருந்தாள்... தவறு செய்துவிட்டவளின் தவிப்பு அது... நீண்ட நெடிய எட்டு வருடங்களாய் போகாத தவிப்பு அது...

அவள் பேசவில்லை என்றால் என்ன அவன் அவளிடத்தில் மனம் விட்டு பேச விரும்பினான்... அவனிடத்திலும் தவறு

இருந்தது அதனால் தனது ஆண் என்கிற ஆகங்காரத்தை விட்டு விட்டு அவளிடம் சரணடைய அவன் விரும்பினான்...

அவளின் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் அவளின் கையை பிடித்து கொண்டு அவளது கண்களை நோக்கி, "நான் ரொம்ப பெரிய தப்பு செய்துட்டேன் பேபி... நம்ம பிரிவுக்கு முழுக்க முழுக்க காரணமா நான் இருந்த போதும் எல்லோரின் பார்வையிலும் உன்னை குற்றவாளியாய் நிற்க வச்சு எல்லோரும் உன் மேல் கோபப்படும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினது என்னோட தப்பு தான் பேபி... என்னை மன்னிச்சிடு பேபி... "

அவளிடத்தில் வேதனையுடன் மன்னிப்பு கேட்டவன் அப்படியே அவளது கரத்தில் முகம் பதித்தான்... அவனின் கண்ணீர் துளிகளை அவளின் கரம் உணர்ந்தது...

தவறு எல்லாம் அவள் செய்திருந்த போதும் அந்த நேரத்திலும் எல்லா தவறையும் தன் மீது போட்டு கொண்ட கணவனை கண்டு அவளின் காதல் எத்தனை மடங்கு பெருகியதோ அதை விட அதிக மடங்கு அவளின் குற்றவுணர்ச்சியும் பெருகியது...

அதிலும் அவனது கண்ணீரை உணர்ந்தவள் அப்படியே உடைந்து போய் அவனருகில் மண்டியிட்டு அமர்ந்தவள் அவனை தன்னோடு அணைத்து கொண்டு,

"தேவ்..." என்று கதறிவிட்டாள்...

எட்டு வருட துன்பத்தையும் தன் கண்ணீரில் கரைக்க முயன்றாள் அவள்...

தேவானந்த் தான் தன்னை சுதாரித்து கொண்டு இப்போது மனைவியை தேற்ற ஆரம்பித்தான்...

"பேபி இங்கே பாரு... அழாதே பேபி... நீ அழுதா எனக்கு கஷ்டமா இருக்கு..." அவனின் வார்த்தைகளும், அணைப்பும் அவளை ஓரளவு சமாதானம் செய்ய அவள் தன் அழுகையை மெல்ல நிறுத்தினாள்...

கண்களை அழுந்த துடைத்து கொண்டு ஒரு முடிவுடன் அவனை பார்த்தவள், "தேவ்... நீங்க எந்த தப்பும் செய்யலைன்னு எனக்கு ஏழு வருசத்துக்கு முன்னாடியே தெரியும்..." என்றவளை கண்டு அதிர்ந்து போய் பார்த்தான் அவன்...

இன்னமும் அவள் தன் மீது கோபம் கொண்டு தான் பிரிந்து இருக்கிறாள் என்று அவன் நினைத்து இருக்க அவளோ அவனை பற்றி தெரிந்தும் பிரிந்து இருக்கிறாள் என்றால்... அந்த நினைவே அவனுக்கு அத்தனை வேதனையாய் இருந்தது...

"தப்பு என் மேல் இல்லைன்னு தெரிஞ்சும் ஏன்ம்மா என்னை தேடி வரலை..." அவனின் குரலில் வலி அப்பட்டமாய் தெரிந்தது...

அது அவளுக்கும் உயிர் வரை சென்று வலிக்க தான் செய்தது...

கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நிற்க, "எப்படி தேவ் வருவேன்...? உங்களை, உங்க காதலை, நம்பிக்கையை கொன்ற பாவி நான்... நான் எப்படி உங்களோட சேர்ந்து வாழ முடியும்... நீங்க எனக்கு துரோகம் பண்ணிட்டதா நினைச்சு உங்களை விட்டு பிரிஞ்சு உங்களுக்கு உயிர் வலியை கொடுத்தவள் நான்... அதே துரோகத்தை நானும் உங்களுக்கு செய்து இருக்கேனே அப்போ அந்த உயிர் வலி வேதனையை நானும் தண்டனையா அனுபவிச்சு தானே ஆகணும்... தப்பு செஞ்சவள் தண்டனை அனுபவிச்சு தான் ஆகணும் தேவ்..." என்று அழுதவளை கண்டு அந்த நிலையிலும் அவன் அவளுக்காக பரிதாபப்பட்டான்...

"நீ தண்டனை அனுபவிக்கிறதா நினைச்சு எனக்கு தான் பேபி தாங்க முடியாத தண்டனையை கொடுத்துட்ட... உன்னை பிரிஞ்சு நான் எந்தளவுக்கு கஷ்டப்பட்டேன் தெரியுமா... எனக்கு தெரியும் நிச்சயம் அதே மாதிரியான துன்பத்தை நீயும் அனுபவிச்சு இருப்பன்னு... எதுக்கு இத்தனை துன்பம் பேபி... அன்னைக்கே நீ என் கிட்ட

வந்திருந்தா எல்லா துன்பமும் விலகி ஓடி இருக்குமே... நம்ம அம்முவும் சந்தோசமா இருந்து இருப்பாளே..."

என்ன முயன்றும் காத்திருந்து ஏமாந்த வலி அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்பட்டது...

"உங்க நம்பிக்கையை கொன்னுட்டு எந்த நம்பிக்கையில் உங்க கிட்ட நான் வருவேன்... அதுக்கான தகுதி தான் எனக்கு இருக்கா... எனக்கு தெரியும் எந்த நிலையும் நீங்க என்னை ஏத்துக்குவீங்கன்னு... ஆனா என் மனாசாட்சி என்னை உயிரோடு கொன்னுடும் தேவ்... உங்க காதலுக்கு நான் ஏத்தவள் இல்லை... நீங்க இந்தளவுக்கு உருகி உருகி காதலிக்கும் அளவுக்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை... அப்படியாவது உங்களை விட்டு விலகி இருந்தா நீங்க என்னை வெறுத்து வேறு பெண்ணை..."

அவள் சொல்லி முடிக்கும் முன் அவள் வாய் மீது கை வைத்து தடுத்தவன், "போதும் பேபி... இதுக்கு மேல என்னை உயிரோடு கொல்லாதே... என்னை பத்தி நல்லா தெரிஞ்சும் நீ இப்படி பேசியது எனக்கு இங்கே வலிக்குது பேபி..." தனது நெஞ்சின் இடது பக்கத்தை சுட்டி காட்டியவன்,

"நான் செத்தாலும் உன்னையும் என்னோடு அழைத்து செல்லும் அளவுக்கு உன் மீது தீவிர காதல் உடையவன் நான்... நான் போய் எப்படி வேறு ஒரு பெண்ணை..." வேதனையுடன் கண்களை மூடி அவள் கூற வந்த வார்த்தைகளை ஜீரணிக்க முடியாமல் அவஸ்தைப்பட்டவன்,

"ஏன் பேபி என் மேல் உனக்கு நம்பிக்கையே வர மாட்டேங்குது..."

"இல்லை தேவ்... அப்படி எல்லாம் இல்லை... நான் உங்களை நம்பாமல் இல்லை..." அதை கண்டு அவன் விரக்தி புன்னகை உதிர்க்க, அதில் அவள் உள்ளம் நொறுங்கி போனாள்...

"அப்பவும் நான் தப்பு பண்ணி இருப்பேன்னு நினைச்சு என் மேல் நம்பிக்கை இல்லாமல் நீயா பிரிஞ்சு போன... இப்பவும் என் மேல் நம்பிக்கை இல்லாமல் நான் வேறு ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைச்சு விலகி இருந்து இருக்க... எந்த நம்பிக்கையில் நீ இப்படி பண்ணின...? நான் உன்னை தவிர வேறு பெண்ணை மனதால் கூட இல்லை இல்லை கண்ணால் கூட தீண்ட மாட்டேன்னு உனக்கு தெரியாதா... அந்த நம்பிக்கை கூட என் மேல் உனக்கு ஏன் இல்லாமல் போச்சு... இல்லை அந்தளவுக்கு நம்பிக்கை வைக்க முடியாதபடி என் காதல் போலித்தனமா, வெளிவேசமா இருந்ததா...?"

மனம் உடைந்தவனாய் புலம்பியவனை கண்டு என்ன செய்து அவனை தேற்றுவது என்று தெரியாமல் அவள் விழித்தாள்... அப்போது அந்த விசயம் நியாபகத்தில் வர,

"தேவ் நான் உங்களை நம்பாமலா நீங்க தப்பு செய்யலைன்னு உணர்ந்தேன்... உங்களுக்கு எதிரா அத்தனை ஆதாரங்கள் இருந்தும் அது எல்லாம் என் தேவ்வின் காதல் முன் வெறும் காகிதம்ன்னு நினைச்சேனே அது உங்கள் மேல் நம்பிக்கை இல்லாமலா... இப்பவும் அந்த ஆதாரங்கள் அப்படியே தான் இருக்கு... ஆனா அதை நான் நம்ப போவதில்லை... எப்போ நீங்க முரளிக்கு அந்த டெண்டரை விட்டு கொடுத்ததை நான் பார்த்தேனோ அப்பவே உங்க மேல எந்த தப்பும் இல்லைன்னு எனக்கு புரிஞ்சு போச்சு..." என்றவள் அவனை இறைஞ்சுதலாய் பார்த்து,

"இப்போ நான் என்னை விட உங்களை தான் அதிகம் நம்பறேன் தேவ்... நான் உங்களை சந்தேகப்பட்டு இதுவரை பிரிஞ்சு தவிச்சது போதும்... இனியும் ஒரு பிரிவை கொடுத்து என்னை தண்டிச்சிறாதீங்க தேவ்... என்னோட உணர்வை உங்களால புரிஞ்சுக்க முடியுதான்னு தெரியலை... நீங்க எந்த தப்பும் பண்ணலை தேவ்... அதனால உங்களால என்னை மன்னிச்சு ஏத்துக்க முடிஞ்சது... ஆனா தப்பு செஞ்ச நான் உங்க முகத்தில் கூட விழிக்க முடியாத அளவுக்கு குற்றவுணர்ச்சியில்

கூனிக்குறுகி போனது எனக்கு மட்டும் தான் தெரியும்... என் நிலையில் இருந்து யோசிச்சு பாருங்க தேவ்... உங்களுக்கு என்னோட மனப்போராட்டம் புரியும்..."

அவள் சொல்ல சொல்ல அவனுக்கும் அவளின் நிலை தெளிவாக புரிந்தது... தானும் அவள் நிலையில் இருந்து இருந்தால் இப்படித்தான் செய்து இருப்போம் என்பதை அவனும் உணர்ந்தான்... மனதார காதலித்தவரின் முன் மதிப்பிழந்து போவதை அவனுமே விரும்ப மாட்டான்... அப்படி ஒரு நிலை வருமானால் அன்று தான் அவனது உயிர் அவனிடத்தில் இருக்கும் கடைசி நாளாக இருக்கும்...

வருணிதா என்ன தான் அவனை தவறாக புரிந்து கொண்டு பிரிந்து இருந்தாலும் அவன் மேல் தவறு இல்லை என்பதால் தான் அவன் நம்பிக்கையுடன் அவளுக்காக காத்திருந்தான்... ஆனால் அவளிடமோ அந்த நம்பிக்கை இல்லாது போயிருந்தது அவளது தவறால்...

அவளை புரிந்து கொண்டவனாய் அவளை நோக்கி இரு கரம் நீட்டி 'வா' என்பது போல் அவளை பார்த்து தலையசைத்தான்...

அடுத்த நொடி தாயை தேடி வரும் கன்று குட்டி போல் அவள் அவனிடத்தில் சரணடைந்து இருந்தாள்...

"தேவ்..." என்று தேம்பியவளை இறுக அணைத்து கொண்டான் அவன்...

அவளுக்கு அவனை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்... அடிப்பதாக இருந்தாலும் சரி... அணைப்பதாக இருந்தாலும் சரி... அதை அவன் உணர்ந்தே இருந்தான்... அவளின் துயரமான இந்த நேரத்தில் அவளுக்கு தோள் கொடுக்கவே அவன் விரும்பினான்... அவளை காயப்படுத்த அவன் நினைக்கவில்லை... அவனின் துயரில் அவள் தோள் கொடுக்கவில்லை என்று அவன் அவளை நிந்தனை செய்ய முற்படவில்லை...

இது தான் தேவானந்த்... எந்த நிலையிலும் மனைவியை அவனால் வெறுக்க முடியாது... தனது மகளை போல் மனைவியையும் நேசிக்கும் கணவன் கிடைப்பது ஒரு பெண்ணுக்கு பெரிய அரிய வரம்... அந்த அரிய வரம் வருணிதாவிற்கு கிடைத்து இருப்பதில் அவள் சிறந்த அதிர்ஷ்டசாலி தான்...

"பேபி... அப்போ உனக்கு முழுசா என்ன நடந்ததுன்னு தெரியாதா..."

"ம்ஹூம்..." என்று உதடு பிதுக்கியவள் அவனது நெஞ்சில் சுகமாய் சாய்ந்து கொண்டு, "எதுவும் எனக்கு தெரிய வேண்டாம்... என் தேவ் குற்றமற்றவர்... அது எனக்கு நல்லா தெரியும்..." என்றவள் நிம்மதியுடன் கண்களை மூடி கொண்டாள்...

"ஆனால் இதை சொல்லைன்னா என்னால் நிம்மதியா இருக்க முடியாதே..." என்றவனை கண்டு கண்களை திறந்து பார்த்தவள் அவனின் நிம்மதிக்காக,

"இது கூட உங்க நிம்மதிக்காக தான்..." என்றவள் அவனது விளக்கத்தை கேட்க ஆரம்பித்தாள்...

"நீ ஆதாரம்ன்னு சொன்னது... அந்த டெண்டருக்கான கொட்டேசனை நானே அங்கு நேரில் போய் கொடுத்தது... அந்த டெண்டர் எனக்கு கிடைக்கணுங்கிறதுக்காக நானே அது சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்தது... இது எல்லாம் தானே..."

அன்றைய நாள் நினைவில் கண்களில் கண்ணீர் மல்க 'ஆம்' என்பது போல் தலையசைத்தாள் அவள்...

"ம்ப்ச்..." என்று அவளை செல்லமாய் கடிந்தபடி அவளது கண்ணீரை துடைத்து விட்டவன்,

"உன் இடத்தில் நான் இருந்து இருந்தாலும் உன்னை போல் தான் நடந்து இருப்பேன்... இவ்வளவு ஏன் யாராக இருந்தாலும் அப்படித்தான் நடந்து இருப்பாங்க...அதுக்காக நீ உன்னை வருத்தி கொள்ள தேவையில்லை..."

எந்த நிலையிலும் தன்னை விட்டு கொடுக்காமல் தேற்றும் கணவனை கண்டு அவளுக்கு பெருமிதமாய் இருந்தது...

"அன்னைக்கு என்ன நடந்ததுன்னா..." என்றவன் அன்று நடந்த சம்பவங்களை அவளிடம் சொல்ல ஆரம்பித்தான்...

அன்று கட்டுமானம் நடக்கும் இடத்தில் அவன் இருந்த போது அவனது அலைப்பேசி அடித்தது... அதில் ஒளிர்ந்த எண்ணை கண்டதும் அவனது முகம் மலர்ந்தது...

அவனுக்கு எப்போதும் உறுதுணையாய் இருக்கும் அந்த தொழிலதிபர் தான் அழைத்து இருந்தார்... அழைப்பை உயிர்ப்பித்து காதில் வைத்தவன்,

"சொல்லுங்க சார்..." என்றான் உற்சாகமாக...

"கங்கிராட்ஸ் யங்மேன்..." ஆர்ப்பாட்டமாய் ஒலித்தது அக்ஷயின் குரல்...

"எதுக்கு சார்..." புரியாமல் விழித்தான் தேவானந்த்...

"உனக்கு அந்த டெண்டர் கிடைச்சுருக்கு தேவா..." என்று டெண்டரின் விவரத்தை அக்ஷய் கூற...

அதில் தேவானந்த்திற்கு மகிழ்ச்சி பொங்குவதற்கு பதில் உலகமே தலை கீழாய் சுழன்றது...

அவனிடத்தில் இருந்து பேச்சு இல்லை என்றதும் ஆர்ப்பாட்டமாய் சிரித்த அக்ஷய், "என்னடா நாம கொட்டேசன் அனுப்பாத டெண்டர் நமக்கு எப்படி கிடைச்சதுன்னு தானே நீ யோசிக்கிற..."

"ம்..." என்றான் தேவானந்த் மனதிற்குள் அழுதவனாய்...

"எல்லாம் இந்த அக்ஷய் கைங்கரியம் தான்... உன் பிசினசில் ஒரு பெரிய லிப்ட் ஏற்படுத்தி கொடுக்கணும்ன்னு ரொம்ப நாளா நினைச்சு இருந்தேன்... அப்போ தான் இந்த டெண்டர் விசயம் தெரிஞ்சது... உன் சார்பா நான் தான் அதை ரெடி பண்ணி கொடுத்தேன்...

அன்னைக்கு உன் கிட்ட சொன்னேனே உனக்கு நியாபகம் இருக்கா..."

அக்ஷய் அன்று கூறியது தேவானந்த்திற்கு நியாபகம் வந்தது...

'தேவா... இதில் ஒரு டெண்டருக்கான கொட்டேசன் இருக்கு...' என்று ஒரு கவரை நீட்டிய அக்ஷய், 'இதில் அது பாஸ் ஆவதற்கு தேவையான பணம் இருக்கு... உரிய இடத்தில் சேர்த்து காரியத்தை நல்லபடியா முடிச்சிரு... இதை ஏன் உன் மூலமா செய்றேன்னா என் மனைவிக்கு நான் இப்படி செய்றது எல்லாம் பிடிக்காது... நீதி, நேர்மைன்னு உன்னை போல் எதையாவது பேசுவாள்... அதனால் தான்..."

தேவானந்த் அவன் தான் நேர்மையாய் இருப்பானே ஒழிய அடுத்தவர்களின் செயலை தடுக்க நினைக்க மாட்டான்... அக்ஷயின் மனம் புரிந்து தனக்கு உதவிய அக்ஷய்க்காக அதை செய்ய முன்வந்தான்...

அதனால் அந்த டெண்டர் சம்பந்தப்பட்ட எந்த விசயமும் அவனுக்கு தெரியாது... அது தெரியாததால் தான் அவன் வருணிதாவிற்கு கொட்டேசன் தயாரிக்க உதவி செய்தான்...

அக்ஷயோ தேவானந்த்திற்கு நல்லது செய்துவிட்டோம் என்று நிம்மதி அடைந்தான்... நேர்மையாளனான தேவானந்த்தை ஏனோ அவனுக்கு மிகவும் பிடித்து போனது... கஷ்டப்பட்டு முன்னேறும் அவனுக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவன் நினைத்தான்...

இல்லை என்றால் இல்லத்தின் ஐயா சொன்னதற்காக அவன் தனது கட்டுமான நிறுவனத்தை விட்டு விட்டு தேவானந்த்திடம் இல்லம் கட்டுவதற்கான வாய்ப்பை அளித்து இருக்க மாட்டான்... ஏனோ தெரியவில்லை முதல் பார்வையில் தேவானந்த்தை அவனுக்கு மிகவும் பிடித்து போனது... ஆதித்யா போல் அவனையும் இன்னொரு மகனாக தான் எண்ணினான்...

ஆனால் தன் எண்ணமே தேவானந்த்தின் வாழ்க்கைக்கு எமனாக போகும் என்று கனவிலும் நினைத்து இருக்க மாட்டான் அவன்...

எல்லாவற்றையும் நினைத்து பார்த்த தேவானந்த்திற்கு தனது நிலையை எண்ணி அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை...

அக்ஷயிடம் நன்றி கூறிவிட்டு வைத்தவன் நேரே மனைவியை காண சென்றான்...

அந்த டெண்டர் விசயத்தால் கணவன், மனைவி இடையே பிரிவு வந்த போது தேவானந்த் மீண்டும் அக்ஷயை தேடி சென்றான்...

அந்த டெண்டர் தனக்கு வேண்டாம் என்றும், அதை முரளி நிறுவனத்திற்கு கிடைக்குமாறு செய்யும்படி கூறியவனை கண்டு அக்ஷய் ஆச்சிரியப்பட்டு போனான்...

"இந்த வொர்க் மட்டும் நீ பண்ணினா உன்னோட ப்யூச்சர் ரொம்ப நல்லா இருக்கும் தேவா..."

"என் ப்யூச்சரே என் மனைவி தான் சார்..." முணுமுணுத்த தேவா தலை குனிந்தான்...

அவனது மனைவி மீதான காதல் அக்ஷயை பிரமிக்க வைத்தது...

'பையன் காதலில் நம்மளை எல்லாம் தூக்கி சாப்பிட்டு விடுவான் போலிருக்கே...' மனதுக்குள் அவனால் அப்படி நினைக்காமல் இருக்க முடியவில்லை...

"சரிப்பா அப்படியே செஞ்சிடறேன்..." தேவானந்த்தின் மனதிற்கு மதிப்பு கொடுத்தவனாய் கூறியவன்,

"நான் வேணா உன் மனைவி கிட்ட பேசவா...?"

"இல்லை சார் இது தற்காலிக பிரிவு தான்... அவள் என்னை புரிஞ்சிக்கிட்டு என்னை தேடி வருவா..." என்றவனை இமைக்காது பார்த்தவன்,

"தேவா... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... எப்பவும் மென்மையா நடக்கணும்ன்னு அவசியம் இல்லை... அவசியம் வந்தா வன்மையாவும் நடக்கணும்... கொஞ்சம் அதிரடியா முடிவு எடுத்து பழகு தேவா... அது உன் ப்யூச்சருக்கு நல்லது..."

அக்ஷய் சொன்னது கேட்டு சின்ன புன்னகையுடன் தலையசைத்து ஆமோதித்தான் தேவானந்த்...

அப்போது மித்ரேஷ் மாமனாரை காண வந்தான்... அவனை தேவானந்த்திற்கு அறிமுகப்படுத்தி விட்டவன்,

"இவர் என் மருமகன் தான்... ஏசியா இருக்காரு... உனக்கு எந்த பிரச்சினைன்னாலும் இவர் கிட்ட கேட்டுக்கலாம்..."

"சட்டத்துக்கு உட்பட்டு எந்த ஹெல்ப் செய்றதா இருந்தாலும் நான் செய்றேன் தேவா..." என்று மித்ரேஷ் கூற...

"என்ன ஈஸ்வர் ஒரேடியா பம்முற மாதிரி இருக்கு..." என்று விளையாட்டாய் அக்ஷய் கேட்க...

"அப்புறம் என் அம்மு எனக்கு எதிரா ரோட்டில் போர்க்கொடி பிடிச்சிக்கிட்டு நிற்பாள்... வீட்டுக்கு வந்தா நிச்சயம் முதுகில் டின் கட்டிருவாள்... அவ பத்திரிக்கை நடத்துவதற்கு நான் பலிகடாவா... இது எனக்கு தேவையா மாமா..." தனது மகளிடம் பயப்படும் காவல்துறை அதிகாரியான மருமகனை கண்டு வாய்விட்டு சிரித்தான் அக்ஷய்...

தேவானந்த்தும் சிரித்தபடி இருவரிடமும் விடைப்பெற்று வெளியில் வந்தான்...

இதை மனைவியிடத்தில் எப்படி சொல்லி புரிய வைப்பது என்று தெரியாமல் அவன் முழித்தான்... ஆனால் கடைசி வரை அவனால் சொல்லவே முடியாமல் போனது தான் அந்தோ பரிதாபம்...

எல்லாவற்றையும் கூறிவிட்டு தேவானந்த் மனைவியின் முகத்தை பார்த்தான்...

"அந்த டெண்டர் பத்தின விபரம் எதுவும் எனக்கு தெரியாது பேபி... தெரிஞ்சு இருந்தா சத்தியமா உன் கிட்ட நான் சொல்லியிருப்பேன்..." என்றான் தவிப்பாய்...

அவனது கன்னம் தடவி அவனின் தவிப்பை குறைத்தவள்,

"நீங்க இதை முன்னமே சொல்லியிருக்கலாமே தேவ்..." அவள் மனதில் பிரிவுத்துயர் பாரமாய் அழுத்தியது...

"அதை சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை..." அப்போது கேட்கும் மனநிலையில் இல்லாமல் இருந்த அவளை குறை சொல்லாமல் அவன் பேசியது கண்டு அவளது கண்கள் பனித்தது...

"எல்லா தவறும் என் மீது தான்..." துக்கம் தொண்டையை அடைக்க மெதுவே சொன்னவளின் முகத்தை கையில் ஏந்தியவன்,

"என் மீதும் தப்பு இருக்குது பேபி..." என்றவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு, "பழசை எல்லாம் மறந்துவிட்டு புதுசா நம்ம வாழ்க்கையை ஆரம்பிப்போமா பேபி..."

அப்படி கேட்டவனின் கண்களில் காத்திருந்ததின் எதிர்பார்ப்பு அப்பட்டமாய் தெரிந்தது... அவன் பார்வையில் இருந்த வேட்கையில் அவள் முகம் சிவந்து போனது... வெட்கி தலை குனிந்தவளை அள்ளி எடுத்தவன் முத்தத்தால் அர்ச்சனை செய்ய அவனுக்கு வாகாய் இசைந்து கொடுத்தாள் அவள்...

அந்த நிலையிலும் அவள், "தேவ்... என்னை மன்னிச்சிட்டீங்களா..." என்ற கேட்க...

"இனிமேல் நமக்கிடையில் மன்னிப்பு, சாரி, தேங்க்ஸ் இந்த வார்த்தைகளுக்கு இடமில்லை..." என்றவன் அந்த காற்றுக்கு கூட இடமில்லாதவாறு அவளை இறுக அணைத்து இருந்தான்...

அவனது அணைப்பில் உருகி கொண்டு இருந்தவளுக்குள் உறங்கி கொண்டு இருந்த தாய்மை மெதுவே விழிக்க...

"தேவ்..." அவனது முதுகை சுரண்டினாள்...

"இன்னும் என்ன பேபி...?" அவன் அவளுள் மூழ்கி முத்தெடுக்கும் தாபத்தில் இருந்தான்...

"அம்மு..." அவள் இழுத்ததில் அவனது தாபம் அப்படியே அடங்க...

"அம்முக்கு என்ன...?" அவளை புரியாமல் பார்த்தான்...

"அம்மு நைட் ரெண்டு தடவை பாத்ரூம் போக எழுந்திருப்பாள்... அப்புறம் ஒரு தடவை தண்ணி குடிக்க..."

அவன் கூட அவனது உணர்வுகளின் வெள்ளத்தில் மகளை கூட மறந்து அவளுடன் ஒன்றிவிட்டான்... ஆனால் அவளோ எந்நேரமும் மகளை பற்றிய சிந்தனையில் இருக்கிறாள்... இதனால் தான் தாய்ப்பாசத்தை உலகில் பெரியதாய் சொல்கிறார்களோ...

"சரி போய் பார்த்துட்டு வா..." என்று அவளை அனுப்பி வைத்துவிட்டு கட்டிலில் ஏறியமர்ந்தான்...

தவிப்புடன் வேகமாய் செல்லும் மனைவியை கண்டு, 'இவளை போய் மகளிடம் அக்கறை இல்லைன்னு கோபம் கொண்டேனே... அவளை விடவா நான் அம்மு மேல் பாசம் வைத்து இருக்கிறேன்...' மனைவியின் மகள் மீதான பாசத்தை எண்ணி அன்று அவன் பேசியதற்கு இன்று வருந்தினான்...

சிறிது நேரம் சென்றும் அவள் வராததால் அவன் அந்த அறையை விட்டு வெளியில் வந்தான்... அங்கே வருணிதா மீது வர்ஷினி காலை போட்டு உறங்கி கொண்டு இருந்தாள்... அதை கண்டதும் அவன் முகம் மென்மையுற்றது...

அவனின் வரவை உணர்ந்தவளாய் அவனை திரும்பி பார்த்தவள், "அம்மு கட்டிப்பிடிச்சிட்டு தூங்குறா... எப்படி வர்றது...?" ஒரு பக்கம் தாய்மையின் தவிப்பும், மறுபக்கம் மனைவியின் கடமையை செய்ய முடியாமல் போனதால்

எழுந்த பரிதவிப்புமாய் பேசியவளை கண்டு அவனது மனம் இரங்கியது...

அவள் அருகில் அமர்ந்தவன், "பேசாம தூங்கு பேபி... குட் நைட்..." என்று அவளது நெற்றியில் அவன் முத்தமிட...

"கோபம் இல்லையே..." தவிப்புடன் கேட்டவளை கண்டு சிரித்தவன்,

"இல்லையே..." அவளை போல் சொல்லியவன், "அம்மு முன் இது ஒரு பெரிய விசயமே இல்லைடா..." என்று தெளிவாய் அவளுக்கு புரிய வைத்தான்...

கணவன் சொன்னதை கேட்ட பின்பே அவளுக்கு நிம்மதியாய் இருந்தது... கணவனது இத்தனை நாள் காத்திருப்பை நிறைவேற்றாமல் போனது அவளுக்கு பெரும் கவலையாக இருந்தது...

அவன் மகளின் அந்த பக்கம் வந்து படுக்கவும் அவள் அவனையே பார்த்து கொண்டு தூங்காமல் இருக்க...

"தூங்குடா..." என்றவன் எட்டி வந்து அவளின் தலையை வருடி கொடுக்க... அவனது வருடல் தந்த சுகத்தில் அவளுக்கு சுகமாய் உறக்கம் வந்தது...

உறங்கும் மனைவியை பார்த்தவனுக்கு அவளின் மனநிலை நன்கு புரிந்தது...

இதுநாள் வரை மகளும் அவளும் மட்டுமாய் தனித்து வாழ்ந்து வந்தவளுக்கு மகள் மட்டுமே எல்லாமுமாய் இருந்து இருக்கிறாள்... மகள் அவளது உணர்வில் கலந்து இருப்பதால் தான் இந்த மாதிரி தவிக்கிறாள் என்பதை புரிந்து கொண்டான்... மெல்ல மெல்ல இந்த வாழ்க்கை முறைக்கு அவளை பழக்கப்படுத்த வேண்டும் என்று மனதில் நினைத்து கொண்டான்...

கிருஷ்ணா, சுஜானா திருமணநாள் இனிதாய் விடிந்தது... திருமண மண்டபத்தில் பட்டுப்புடவை அணிந்து அழகு தேவதையாய் வலம் வந்து கொண்டு இருந்த மனைவியை

கண்டு தேவானந்த்திற்கு கர்வமாக இருந்தது என்றால், பட்டுப்பாவாடையில் பட்டாம்பூச்சியாய் உற்சாகமாய் பறந்து திரிந்த மகளின் அழகு அவனை பெருமிதம் கொள்ளச் செய்தது...

இருவரையும் சந்தோசத்துடன் பார்த்து கொண்டு இருந்தவனின் அருகில் வருணிதாவின் பெரியப்பா நின்று கொண்டு இருந்தார்... அதற்கு அருகில் முரளி நின்று கொண்டு இருந்தான்... மூவரும் பேசி கொண்டு இருந்தனர்...

முரளியின் திருமணத்தில் அவனை கேவலமாய் பேசியவர் இன்று அவனை தங்கத் தட்டில் வைத்து தாங்காத குறை தான்... அன்று போல் இதையும் ஒரு புன்னகையால் கடந்து சென்றவனை காதலாய் பார்த்தபடி நின்றிருந்தாள் வருணிதா...

"என்ன பேபி பார்வை எல்லாம் பலமாயிருக்கு..." மனைவியின் அருகில் வந்தவன் அவளது காதில் முணுமுணுக்க...

"என் புருசன் நான் பார்க்கிறேன்... உங்களுக்கு என்ன வந்தது...?" துடுக்காய் பதில் சொன்ன மனைவியை பார்த்து புருவம் உயர்த்தி மெச்சுதலாய் ஒரு பார்வை பார்த்தவன்...

"புருசன்ங்கிறது நினைப்பு இருக்கா...?" ஒரு மாதிரியான குரலில் அவன் கேட்க...

அவள் புரியாமல் அவனை பார்க்க...

"அந்த நினைப்பை அப்படியே நியாபகத்தில் வச்சுக்கோ..." என்றவன் அங்கிருந்து நகர்ந்தான்...

கணவன் கூறியதை கேட்டு குழம்பி போனவள் அவனை பார்வையால் தொடர அவனும் சளைக்காமல் அவளது பார்வையை தாங்க, அதில் அவள் தான் நாணம் கொண்டு தனது பார்வையை தளர்த்த வேண்டி இருந்தது...

அங்கு மணவறையில் அமர்ந்து இருந்த கிருஷ்ணா சுஜானாவின் வரவிற்காக ஆர்வத்துடன் காத்திருந்தான்... அவனின் ஆர்வத்தை அதிக நேரம் அலைக்கழிக்க விடாமல் அவள் அங்கே வந்தாள்...

உலகின் ஒட்டு மொத்த அழகையும் குத்தகைக்கு எடுத்தது போல் இருந்த தன்னவளை ஆசை தீர இரு விழிகளால் அவன் பருக, அவளோ அவனது பார்வையை உணர்ந்தாலும் வெட்கத்தில் குனிந்த தலை நிமிராமல் அவனருகே வந்தமர்ந்தாள்...

தாலியை எடுத்து கொடுத்த அய்யர் அவனை அதை சுஜானா கழுத்தில் கட்ட சொல்ல, அவனோ அதை கட்டாமல் அவளை பார்த்திருந்தான்...

"சுஜிம்மா ப்ளீஸ்டா... மாமனை நிமிர்ந்து பாருடா..." அவளிடம் அவன் கெஞ்சி கொண்டு இருக்க...

அவனது வார்த்தையில் அவளோ இன்னமும் நாணமுற்று தலையை குனிய, அவனோ மனம் வெறுத்து போய்விட்டான்...

"நீ நிமிர்ந்து என்னை பார்த்தால் தான் நான் தாலி கட்டுவேன்..." என்று அவன் பிடிவாதம் பிடிக்க...

"கிருஷ்... என்னடா இது..." வருணிதாவும், சுகன்யாவும் அவனை சத்தம் போட...

"அப்படியா ரொம்ப சந்தோசம் டா... எப்படியோ உன் கிட்ட இருந்து என் மருமக தப்பிச்சா... சுஜி உனக்கு நல்ல பையனா பார்த்து நானே கல்யாணம் பண்ணி வைக்கிறேன்... நீ கவலைப்படாதேம்மா..." பத்மா மகனை முறைத்து கொண்டு சொல்ல...

"அம்மா... நீங்க எனக்கு அம்மாவா இல்லை வில்லியா..." பல்லை கடித்தான் அவன்...

"அம்மாடி குழந்தே... உன் ஆத்துக்காரனை ஏன் இப்படி தவிக்க விடுற...? எனக்கு அடுத்தது வேற ஒரு முகூர்த்தம்

இருக்கு... நீ இப்போ நிமிர்ந்து பார்க்கலைன்னா நான் அந்த கல்யாணத்துக்கு கிளம்பி போயிருவேன்..." அய்யரும் அவர் பங்கிற்கு சுஜானாவை மிரட்ட...

'இது ஏதுடா புது அவஸ்தை...' என்று வெட்கத்தில் நெளிந்தவளை கண்டு,

"ப்ளீஸ் சுஜி..." என்று கெஞ்சிய கிருஷ்ணாவின் குரலில் மெல்ல தனது விழிகளை உயர்த்தினாள் அவள்...

அவன் கண்ணில் தெரிந்த காதலில் கட்டுண்டவளாய் அவனையே இமைக்காது பார்த்தவளின் பார்வையிலும் அவனுக்கு சற்றும் குறையாத காதல் நிரம்பி வழிந்தது...

அவளது காதல் கசியும் விழிகளை கண்டவாறு தனது கையில் இருந்த தாலியை அவளது சங்கு கழுத்தில் கட்டி மூன்று முடிச்சிட்டான் அவன்... அந்த வேலையையும் தனது சகோதரிகளுக்கு மிச்சம் வைக்காமல்...

"தேங்க்ஸ்டி..." என்று அவள் காதுக்கருகில் அவன் குனிந்து சொல்ல அவனது மீசை முடி அவளது காதில் உராய்ந்ததில் அவளது இதயத்தில் தீ மூண்டது...

மீண்டும் நாணி தலை குனிந்தவளை கண்டு அவனுக்கு ஆச்சிரியமாய் போனது...

அவள் ஒரு மருத்துவர் என்பதை மறந்தவளாய் தனது அருகாமையில் பெண்மை மிளிர நின்று இருந்தவளை கண்டு அவனது மனம் மயங்கத்தான் செய்தது... முதன்முதலாய் ஆணாய் பிறந்ததில் கர்வம் கொண்டான் அவன்...

அன்றிரவு சுஜானாவை அலங்கரித்து அவளது அறைக்கு அனுப்பி வைத்துவிட்டு வந்த வருணிதாவின் கரம் பற்றி தேவானந்த் அழைத்து செல்ல,

"தேவ்... அம்முவை கூட்டிட்டு வந்திடறேன்..."

"அம்மு... இன்னைக்கு ஒரு நாள் அம்மா கூட தூங்கட்டும்..." என்றவன் அவள் பதில் பேசும் முன் அவளை தங்களது

அறைக்கு அழைத்து வந்து ஒரு கையால் கதவை மூடியபடி மறுகையால் மனைவியின் இடையில் கை கொடுத்து அவளை அருகில் இழுத்தவன் அடுத்த நொடி அவளது இதழ்களை சிறை செய்து இருந்தான்...

அவனின் அத்தனை நாள் தாபம் அந்த ஒரு இதழ் முத்தத்தில் தெரிந்தது... மூச்சு விட இருவரும் பிரிந்த போது அவன் அவளை தனது கைகளில் ஏந்தியபடி கட்டிலை அடைந்து இருந்தான்...

மனைவியோடு தானும் சரிந்து அவள் மேலே பேச இடம் கொடுக்காதபடி அவளை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தவனின் வேகம், தாபம் புரிந்தவளாய் வருணிதாவும் கணவனுடன் ஒன்றினாள்...

தவறு செய்த மனைவியை மன்னிப்பு என்ற ஒற்றை வார்த்தை கூறி அவளை காயப்படுத்தாமல் அவளின் தவறுகளை ஒட்டு மொத்தமாய் மன்னித்து இருந்தான் அந்த காதல் கணவன்...

ஒவ்வொருவரின் காதல் ஒவ்வொரு மாதிரி... அதில் தேவானந்த்தின் காதல் அப்பழுக்கற்ற தூய்மையான காதல்...

அறைக்கதவை தாளிட்ட சுஜானாவுக்கு மேலே நடக்க முடியாமல் கால்கள் பின்னியது... இத்தனை நாளாய் அது அவளது அறையாக இருந்தது தான்... அதில் சுதந்திரமாய் வளைய வந்தவள் தான்... ஆனால் ஏனோ இன்று அத்தனை தயக்கமாக இருந்தது அவளுக்கு...

'கணவன் எங்கே...?' என்று தேடியவளுக்கு அங்கு கட்டிலில் சுகமாய் சாய்ந்து கொண்டு பக்கத்து மேசையில் வைத்திருந்த அல்வாவை சுவைத்து கொண்டு இருந்த கிருஷ்ணாவை கண்டு அவளுக்கு சிரிப்பு வந்தது...

களுக்கென்று அவள் சிரிக்க அதில் அவன் தனது பார்வையை மனைவியிடத்தில் திருப்பினான்...

"ஹி... ஹி... அது வந்து சுஜி... நைட் சரியா சாப்பிடலையா அதான்..." என்று வழிந்தவனை கண்டு மேலும் சிரித்தவளுக்கு இவ்வளவு நேரம் இருந்த பயம் போயிருந்தது...

சிறிதும் தயக்கம் இல்லாமல் அவன் அருகில் வந்தவள் மேசை மீது பால் சொம்பை வைத்து விட்டு,

"கிருஷ் காலை காட்டுங்க..." என்று வெகு இயல்பாய் சொல்ல...

அதை கண்டு அவனது முகத்தில் புன்னகை விரிந்தது... அதற்காக தானே அவன் அப்படி நடந்து கொண்டது...

சாய்ந்திருந்தவன் எழுந்து உட்கார்ந்து கொண்டு அவளின் கையை பிடித்து பக்கத்தில் அமர வைத்து,

"இப்போ பயம் போயிருச்சா..." என்றான் மென்மையாக...

அதில் அவள் ஆச்சிரியமாய் அவனை பார்த்தாள்... தனக்காக தான் அவன் இயல்பாய் இருப்பது போல் இருந்து இருக்கிறான் என்பதை உணர்ந்தவளுக்கு புன்னகை தோன்றியது...

அதே புன்னகையோடு ஆம் என்று தலையசைத்தவள் எழுந்து அவன் காலில் விழ போக அதை தடுத்தவன்,

"அம்மா தாயே... இன்னைக்கு ஒரு நாள் என் கால்ல விழுந்துட்டு வருசம் பூரா என்னை உன் காலில் விழ சொல்லாதேம்மா... அதனால நமக்குள்ள இந்த கால்ல விழுற சீன் எல்லாம் வேண்டாம்..."

அவன் சொன்னவிதம் சிரிக்க தூண்டினாலும் அவன் சொன்ன கருத்து அவளை சிந்திக்க தூண்டியது...

அதை அவனிடம் அவள் அப்படியே சொல்ல அதற்கு அவன் பதிலளிக்க அப்படியே பேச்சு இடம் மாறி விருப்பு, வெறுப்பு என்று சென்று ஒருவரை பற்றி ஒருவர் அறிந்து கொள்ள முற்பட்டனர்...

"கிருஷ்... நான் ஒண்ணு கேட்பேன் தப்பா நினைக்க கூடாது..." அவளது தயக்கத்தில் அவன் என்னமோ ஏதோ என்று நினைக்க...

"உங்க ட்ரீம் கேர்ள் எப்படி இருக்கணும்ன்னு நினைச்சீங்க...?" அவள் அப்படி கேட்டதில் அவன் விழி பிதுங்கி போனான்...

'ஐய்யோ எதை கேட்க கூடாதுன்னு நினைச்சேன்னோ அதை மறக்காம கேட்கிறாளே... இதுக்கு பேசாம கவுந்தடிச்சு படுத்து தூங்கி இருந்து இருக்கலாமோ..." காலம் கடந்து அவன் விசனப்பட்டான்...

'கிருஷ்... முதலிரவு அதுவுமா நீ இப்படி அசிங்கப்படணும்ன்னு உன் தலையில் எழுதியிருக்கு... உன் விதியை யாரும் மாத்த முடியாது...' என்று நினைத்தவன் தனது கனவு கன்னி பற்றி சொல்ல ஆரம்பித்தான் ஒருவித பயத்தோடு...

பின்னே அதை கேட்டுவிட்டு சுஜானா 'தூ'வென காறி துப்பிவிட்டால்...!!!

"அது வேறு ஒண்ணுமில்லை சுஜிக்குட்டி..." என்று இழுத்தவனை அவள் சிறிது கலக்கத்துடன் பார்த்தாள் என்ன மாதிரியான அணுகுண்டு வர போகிறதோ என்று...

"உன்னை மாதிரி டாக்டர் படிச்சியிருக்கணும்ன்னு நினைக்கலை... சாதாரண டிகிரி படிச்சியிருந்தா போதும்ன்னு நினைச்சேன்... அப்புறம் உன்னை மாதிரி அழகா இருக்கணும்ன்னு நினைக்கலை... சுமாரா இருந்தா போதும்ன்னு நினைச்சேன்... அப்புறம் முக்கியமா சிட்டி கேர்ள்லா இருக்க கூடாது... எங்க ஊர் பக்கமா இருக்கணும்ன்னு நினைச்சேன்..."

அதிலேயே அவள் முகம் தொங்கி போனது... அவனின் எதிர்பார்ப்புகு ஏற்றவாறு தான் இல்லை என்றா இல்லை அந்த எதிர்பார்ப்பை விட தனது தகுதி அதிகமாக இருந்ததா

எதுவென்று தெரியவில்லை அவளது மனம் கவலை கொண்டது...

அதை உணராத அவனோ மேலே பேசி கொண்டு போனான்...

"அப்புறம் இந்த மாதிரி ஒல்லிக்குச்சியா இருக்க கூடாதுன்னு நினைச்சேன்... கொஞ்சும் புசுபுசுன்னு பூசின மாதிரி உடலோடு இருக்கணும்ன்னு..."

அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய் குறுக்கிட்டவள், "அப்போ என்னை பிடிக்கலையா கிருஷ்..." என்று வேகமாய் கேட்டாள்...

'அட லூசு பெண்ணே...' என்பது போல் பார்த்தான் அவன்...

அவனே ஒருவித பயத்துடன் சொல்லி கொண்டு இருந்தான்... இதில் அவள் வேறு காமெடி பண்ணி கொண்டு இருந்தால்...!!!

"கிருஷ்... சொல்லுங்க..." அவளது குரலில் இருந்த நடுக்கத்தில் அவன் அவளை கூர்ந்து கவனித்தான்...

அப்போது தான் அவளது கலங்கிய விழிகள் அவனது கண்ணில் பட்டது...

"ம்ஹூம் இது கொஞ்சமும் சரியில்லையே..." என்றவன் கைகள் அவளது இடையை பிடித்து தன்னருகில் இழுத்தது...

அதில் அவளுக்கு குப்பென்று மூச்சடைத்தது...

"உனக்கு ஒண்ணு தெரியுமா... இப்போ எல்லாம் எனக்கு இந்த ஒல்லி பெண்ணை தான் ரொம்ப பிடிச்சியிருக்கு..." என்றான் காதலோடு...

"நிஜமா..."

"நிஜமாடி..." என்றவனது கைகள் அவளது இடையை அளவெடுத்தது...

அதில் அவஸ்தையாய் நெளிந்தவள், "கையை எடுங்க கிருஷ்..." என்க...

"ம்ஹூம் எடுக்க மாட்டேன்... உன் மனசில் சந்தேகம் வந்த பிறகு அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்யாமல் இருக்க முடியுமா..." என்றவன்,

"உன் படிப்பு முடியும் வரை பொறுமையா இருக்கலாம்ன்னு நினைச்சேன்... ஆனா நீ இப்படி கேட்ட பின்பும் நான் பொறுமையா இருக்கலாமா...? நீயே சொல்லு..."

அவளிடம் கேள்வி கேட்டவன், "உன்னை எந்தளவுக்கு எனக்கு பிடிக்கும்ன்னு நான் செயலில் காட்டவா..." என்றவன் அவளது இதழ்களை நோக்கி குனிந்தான்...

"கிருஷ்..." முணுமுணுத்தவளை கண்டு,

"உன்னை காதலிச்சு கைப்பிடிச்சு இருக்கேன்... அப்படி இருந்தும் நீ இப்படி கேட்கலாமா..." மனத்தாங்கலுடன் கேட்டபடி அவளுள் புதைந்தவனின் மனவேதனை அப்போது தான் அவளுக்கு புரிந்தது...

"சாரி கிருஷ்..." என்றவள் பதிலுக்கு தனக்கும் அவனை எந்தளவுக்கு பிடிக்கும் என்பதை அவனிடத்தில் காட்ட துவங்கினாள்...

விளையாட்டாய் அங்கே ஆரம்பித்த இல்லறம் மெதுவே நல்லறமாய் மலர்ந்தது...

"தேவ்... நாம கண்டிப்பா போயாகணுமா...?" நூறாவது முறையாக கேட்ட வருணிதாவை தேவானந்த் முறைத்து பார்த்தான்...

"அப்போ ஹனிமூன் ட்ரிப்பை கேன்சல் பண்ணின மாதிரி இதையும் எதையாவது செஞ்சு கேன்சல் பண்ண வச்ச உன்னை தொலைச்சிருவேன்..." செல்லமாய் மிரட்டினான் அவன்...

அவனுக்கு கோவாவில் ஒரு நட்சத்திர விடுதி கட்டும் வேலை வந்திருக்கிறது... ஒரு தமிழர் தான் அதை

கட்டுகிறார்... அந்த சாக்கை முன்னிட்டு மனைவியை தனியே அழைத்து செல்ல அவன் திட்டமிட்டு இருந்தான்... அவளோ மகளை காரணம் காட்டி வர மறுத்தாள்...

"மகளுக்காக பார்க்கிற நீ... மகளோட அப்பாவையும் கொஞ்சம் பாரு பேபி..." கடைசியில் கெஞ்சிய கணவனை கண்டு அவளது மனம் இரங்கியது...

"அம்மு... பார்த்து கவனமா இருக்கணும்..." மகளுக்கு அவள் அறிவுரை கூற...

"ஐஸ்க்ரீம் சாப்பிடக் கூடாது... கூல்ட்ரிங்க்ஸ் குடிக்க கூடாது... தாத்தா, பாட்டியை தொந்தரவு பண்ண கூடாது... முக்கியமா அது வேணும் இது வேணும்ன்னு கேட்டு அடம் பிடிக்க கூடாது... இது தானேம்மா சொல்ல போறீங்க... நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்ம்மா... நீங்க சொன்னபடி சமத்தா நான் இருப்பேன்..." என்றவள் தந்தையை நோக்கி,

"வர்ஷூ குட் கேர்ள் தானேப்பா..." என்க...

மகளின் பேச்சில் மனைவியின் முகம் போன போக்கை கண்டு சிரித்த தேவானந்த் மகளை தன்னோடு அணைத்து கொண்டு,

"என் அம்மு எப்பவும் குட் கேர்ள் தான்..." என்றான்...

அன்றிரவு மகளை வருடியபடி சோகமாய் படுத்து இருந்த மனைவியை கண்டு என்ன நினைத்தானோ அலைப்பேசியை எடுத்து கொண்டு பால்கனிக்கு சென்றான்...

பத்து நிமிடங்கள் கழித்து அறைக்குள் வந்தவன் மனைவி அருகில் வந்து, "நாம கோவா போகலை பேபி..." என்க...

"ஏன் தேவ்... நான் ஏதும் தப்பா..."

"நாம எல்லோரும் சேர்ந்து சிங்கப்பூர் போக போறோம்..." என்றவனை கண்டு கண்களை அகல விரித்தவள்,

"அம்முவுமா..."

"ம்... அம்மா, அப்பா எல்லோரும் தான்..."

தனது மனதை புரிந்து கொண்ட கணவனை கட்டி பிடித்து கொண்டவள், "தேங்க்ஸ் தேவ்..." என்க...

"திரும்ப திரும்ப தப்பு பண்ற பார்த்தியா...?" என்றவனின் குரல் சற்று உரத்து ஒலித்ததை கண்டு அவள் திகைத்து போய் பார்க்க...

"பின்னே என்ன... உன் தேவ்வுக்கு தேங்க்ஸ் எல்லாம் சொல்லுவியா...? உனக்கு நீயே தேங்க்ஸ் சொல்லிக்குவியா...?" என்று அவன் கோபமாய் கேட்க...

அவன் சொல்ல வந்தது புரிந்ததும் பூவாய் மலர்ந்தவள், "அதுக்கு பனிஷ்மென்ட் கொடுத்துடலாமா..." என்றவள் தனது இருகையையும் விரித்தபடி...

"நான் ரெடி..." என்றாள் புன்னகையோடு...

"பனிஷ்மென்ட் தானே... இருக்குடி உனக்கு..." என்றவன் ஆனந்தத்தோடு அவளை தனது கைகளில் அள்ளி கொண்டு அந்த சிறிய அறைக்கு சென்றான்...

அடுத்து அவன் கொடுத்த தண்டனையை அவள் விருப்பமாய் மனமுவந்து ஏற்று கொண்டாள்...

மறுநாள் அந்த விசயத்தை வருணிதா குடும்பத்து உறுப்பினர்களிடம் தெரிவிக்க, அதை சிரிப்புடன் பார்த்து கொண்டு இருந்த தேவானந்த்தை கண்டு கிருஷ்ணா,

"வழக்கம் போல் இந்த தடவையும் அக்கா சொதப்பிட்டாளோ..." என்க...

"ம்... ரொம்ப..." என்ற தேவானந்த், "என்ன பண்ண... அவளை வருத்துற எதையும் செய்ய எனக்கு மனசு வர மாட்டேங்குது..." என்றான் சோகமாக...

"குடும்பத்தோட ஹனிமூன் போற ஒரே ஆள் நீங்க தான் மாமா..." அவன் கேலி பண்ண...

"அதுக்கு தான் நீ இருக்கியே..." என்று மொட்டையாக சொன்ன மாமனை ஒரு மாதிரியாக பார்த்த கிருஷ்ணா...

"வாட் டூ யூ மீன்...?"

"ஐ மீன்...." என்று இழுத்த தேவானந்திற்கு சிரிப்பு பொத்து கொண்டு வந்தது...

"என்னன்னு சொல்லிட்டு சிரிங்க மாமா..."

"நீயும் எங்க கூட தானே வர போற... நீ உங்கக்காவுக்கும், மாமாவுக்கும் ஹெல்ப் பண்ண மாட்டியா என்ன...?"

"மாமா..." என்று அலறினான் அவன்...

"எங்களை ஹனிமூன் அனுப்பாம நீங்களும் ஹனிமூன் போகாம இது என்ன பேமிலிமூனா... நான் வரலை இந்த ஆட்டத்துக்கு..."

"டேய் மூணு மாசத்துல முன்னூறு ஹனிமூன் போயிட்டு வந்த நீ இதை பத்தி பேச கூடாது..."

"மாமா... மூணு மாசத்தில் தொண்ணூறு நாள் தான் வருது... இதில் நான் எங்கே முன்னூறு ஹனிமூன் போறது... அதுலேயும் உங்க தங்கச்சி இருக்காளே..." என்று பெருமூச்சு விட்டவனை கண்டு,

"வொய் பிளட்... சேம் பிளட்..." என்று கூறி தேவானந்த் சிரிக்க...

"ஹா... ஹா..." என்று கிருஷ்ணாவும் வாய்விட்டு சிரித்தான்...

அவன் திருமணமாகி பத்தாவது நாளில் மாமியார் வீட்டோடு வந்துவிட்டான்... கேட்டதற்கு,

"அத்தை... உங்க மகள் இலை, தழை, கழனி தண்ணியா சமைச்சு போடுறா... இந்த பத்து நாள்ல பத்து கிலோ குறைஞ்சிட்டேன்னா பார்த்துக்கோங்க... இனி நான்

வீட்டோட மாப்பிள்ளையா இங்கேயே இருக்கலாம்ன்னு இருக்கேன்..."

அவன் யாரிடமும் அனுமதி கேட்கலை... அறிவிப்பாய் சொன்னான்... மகளும், மருமகனும் தங்களுடன் இருப்பதை விட வேறு என்ன சந்தோசம் இருக்கிறது... சிவநேசன், பார்வதி தம்பதியினர் சந்தோசமாய் அதை ஏற்று கொண்டனர்...

விசயம் கேள்விப்பட்ட பத்மா தான் தலையில் அடித்து கொண்டார்...

"ஏண்டா யாராவது சாப்பாட்டுக்காக மாமியார் வீட்டுல போய் தங்குவாங்களாடா..."

"இந்த மருமகன் தங்குவான்..." கேலியாய் கூறியவன், "அம்மா எதுக்கு இவ்வளவு டென்சன்... நீங்க இங்கே வரும் போது நாம நம்ம வீட்டில் இருக்கலாம்..." என்றவன் அங்கே வந்த மனைவியை தன் கையணைவில் வைத்து கொண்டு,

"அம்மா... ப்ளீஸ் புரிஞ்சிக்கோங்கம்மா... சுஜி ஹாஸ்பிட்டல்ல வொர்க் பண்ணிட்டு, வீட்டையும் பார்த்துக்கிட்டு ரொம்ப களைச்சு போயிடறாம்மா..." என்றவன் மனதிற்குள் 'இதில் நைட் என் தொந்திரவு வேறு...' என்று நினைத்து கொண்டான்...

"உன் தொந்திரவு அதையும் சேர்த்து சொல்லேன்டா..." பத்மா கோபமாய் சொல்ல...

"அம்மா... உங்களுக்கு எப்படி இது தெரியும்..." அலறினான் மகன்... சுஜானா புரியாமல் அவனை பார்த்தாள்...

"நல்ல காலத்திலேயே நீ இருந்த இடத்தை விட்டு அசைய மாட்ட... இப்போ கேட்கவும் வேணுமா...? இதில் அதை சமைச்சு கொடு, இதை சமைச்சு கொடுன்னு அவ உயிரை வாங்கியிருப்ப..."

"ஓ... நீங்க அதை சொல்றீங்களாம்மா..." என்று அவன் நிம்மதி பெருமூச்சு விட...

"நீ எதை நினைச்ச...?" சந்தேகமாய் பத்மா இழுக்க...

"பத்து... ஆளை விடுங்க... இந்தாங்க உங்க அருமை மருமக கிட்ட பேசுங்க..." அலைப்பேசியை சுஜானாவிடம் கொடுத்துவிட்டு அவன் ஓடிவிட்டான்...

என்ன தான் கணவன் கேலியும், கிண்டலுமாய் பேசினாலும் அதன் பின்னே அவள் மீது அக்கறையும், காதலும் கலந்து இருக்கும் என்பதை உணர்ந்த சுஜானா இப்போது எல்லாம் அவனது கேலி, கிண்டலை பெரியதாய் எடுத்து கொள்வது இல்லை...

இவர்களின் காதல் வேறு மாதிரி...

ஒரு வருடம் கழித்து...

தாய்மையின் பூரிப்பில் இருந்த மனைவியின் அழகு காண காண தெவிட்டவில்லை தேவானந்த்திற்கு... அன்று அவன் கண்டு ரசிக்க முடியாத அவளது தாய்மையை இன்று கண்குளிர கண்டு ரசித்தான்...

அடுத்த குழந்தை வேண்டாம் என்று அவன் பிடிவாதமாய் மறுத்தான் அன்று அவள் பட்ட வேதனையை நினைவில் கொண்டு...

"இல்லை தேவ்... நம்ம அம்மு கூடப் பிறந்தவங்க இல்லாம தனி மரமா இருக்கணுமா... பாவம் அவள்..." என்று பேசி பேசி கணவனது மனதை கரைத்த வருணிதா அடுத்த குழந்தைக்கு தாயானாள்...

"கொஞ்சம் வலி வந்தாலும் சொல்லிடு பேபி..." என்றவனை ஒன்றும் பேசாது பார்த்தவள் பின் மெதுவே தலையாட்டினாள்...

அவளது பார்வைக்கு அர்த்தம் அப்போது அவனுக்கு புரியவில்லை...

சரியாய் ஒரு வாரம் கழித்து லேசாக வலி இருக்கும் போது சொல்லாமல் கொஞ்சம் அதிகமான பின் சொன்ன வருணிதாவை முறைக்க முயன்று தோற்ற தேவானந்த்

மனம் துடித்தபடி அவளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றான்...

மருத்துவமனையில் அவளுக்கு அறுவை சிகிச்சைக்கு அறை தயாராகும் வரை வேறு ஒரு அறையில் அவளை தங்க வைத்து இருந்தனர்...

வலியில் முனங்கிய அவளை கண்டு கண்ணில் கண்ணீருடன் அவன் பார்த்தபடி நின்றிருந்தான்... அவள் அருகில் வர அவன் முற்படவில்லை... அன்று அடைந்த காயத்தின் வடு அவன் மனதில் ஆழப்பதிந்து இருந்தது...

"தேவ்..." அவனை நோக்கி கையை நீட்டிய மனைவியிடம் அதற்கு மேல் தள்ளி நிற்க முடியாமல் வேக எட்டுக்கள் வைத்து அவள் அருகில் வந்தான்...

"இதுக்கு தான் சொன்னேன் அடுத்த குழந்தை வேண்டாம்ன்னு..." என்றவனை இமைக்காது பார்த்தவள் அவனது கையை இறுக பற்றியபடி,

"என்னோட பலம் நீங்க தான்னு உங்களுக்கு நான் எப்படி புரிய வைப்பது தேவ்..." வலியில் பல்லை கடித்து கொண்டு பேசிய மனைவியின் வார்த்தைகளில் பேச்சற்று அவன் நின்று இருந்தான்...

எல்லாம் அவனுக்காக தானா...!!! நினைக்கும் போதே அவனுள் ஏதோ சில்லென்ற உணர்வு சுகமாய் இறங்கியது...

இதற்காக தானா அவள் வலியை தாங்கி கொண்டு இருந்தாள்... பிரசவ வலி எத்தகைய வேதனையை கொடுக்க வல்லது என்பது அவனுக்குமே தெரியும்... அத்தகைய வலியை அவனுக்காக தாங்கி கொண்டு இருந்து இருக்கிறாள் என்றால் அவன் மீது எத்தகைய காதல் அவளுக்கு இருந்து இருக்க வேண்டும்...

அதை உணர்ந்தவனாய், அனுபவித்தவனாய், "பேபி..." என்று காதலோடு அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

அவன் அளவுக்கு அவளால் காதலை கொடுக்க முடியவில்லை என்றாலும் அவளது காதலும் அவனது காதலுக்கு சற்றும் குறைந்தது அல்ல...

அடுத்த அரை மணி நேரத்தில் அவர்களது மகன் 'வீலென்று' கத்தி கொண்டே மண்ணுலகில் அவதரித்தான்...

செவிலிப்பெண் குழந்தையை தூக்கி கொண்டு வர அதை கண்டு வர்ஷினி, "ஹேய்... தம்பி பாப்பா பொறந்தாச்சு..." என்று சந்தோசக்குரல் எழுப்ப...

அவளது சந்தோசம் அங்கு இருந்த எல்லோரையும் தொற்றி கொண்டது...

முற்றும்...

---

[WU1]